“ மண்ணும் ” இத்யாதிக்கவதாரிகை (இப்படியித்யாதி) “ எல்லாம் ” என்றதுக்கர்த்தம் (ஒன்றும்பிரிகதிர்ப்படாமேயென்று) “ உடன் ” என்றதுக்கர்த்தம் (ஏககாலத்திலேயென்று) பிரிகதிர்ப்படாமே - தப்பிப்போகாதே. ரக்ஷித்தவன் என்றதே, “ உண்ட ” என்கிறதென்னென்ன (ரக்ஷணமித்யாதி) தாரகமானாலாயிற்று - “ உண்ட ” என்னவடுப்பதென்றுகருத்து. (காக்குமென்னவமையும்) “கண்ணன்கண் ” இத்யாதிக்கு இதுவே ஹேதுவாகப் போருமிறேயென்றுகருத்து. (ஐயபாவழித்தாளுக்கங்காந்திடவையமேழுங்கண்டாள்பிள்ளைவாயுளே) பெரியாழ்வார்திருமொழி. ம்ருதுவான திருநாக்குவழித்த யசோதைக்கதுக்குடலாகவாயைத்திறக்க, லோகங்களேழையும் பிள்ளையுடையவாய்க்குள்ளே கண்டாளென்கை. த்ருஷ்டி-நிர்வாஹகன். “ எம்பெருமான் ” என்றிருக்க, “ நம் ” என்கிறதென்னென்ன; அது ப்ரஸித்திபரமென்கிறார் (க்ருஷ்ண ஏவஹீர்யாதி) மஹாபாரதேராஜஸூயேபீஷ்ம:, “ 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌏𑌵 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌪𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑌯𑌃 । 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌕𑍃𑌤𑍇 𑌭𑍂𑌤𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ” (க்ருஷ்ணஏவஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: க்ருஷ்ணஸ்யஹிக்ருதேபூதமிதம்விச்வம்சராசரம்) இத்தால்-“உண்ட” என்றதுக்கு - அவாந்தர ப்ரளயாபத்ரக்ஷண விவக்ஷயா, மஹாப்ரளயாபத்ரக்ஷண விவக்ஷயாச பாவத்வயம் ஸூசிதம்.

“ ஓர் ” என்றதுக்குபாவம் (இவ்வர்த்தத்தையித்யாதி) (இவ்வர்த்தத்தையொழிய) “ கண் ” என்று - ரக்ஷகமென்னுமிவ்வர்த்தத்தையொழிய. அதாவது-தர்சநஸாதநமான சக்ஷுரிந்த்ரியஸ்த்தாநமான கோளகத்தையிறே-“கண்” என்கிறது, தாத்ருசநிர்வாஹகத்வமில்லாமலிருக்கவும் “ பீலிக்கண் ” என்று ப்ரயோகிக்கிறதிறே கிஞ்சிதாகாரஸாத்ருச்யத்தாலே; அங்ஙனுமிங்குச் சொல்லவொண்ணாது அத்யந்தவைஸாத்ருச்யத்தாலே; கிஞ்சிந்நிர்வாஹகத்வமும் நதநீநமென்றபடி. பீலிக்கண்ணென்கிறது-மயிற்றோகையிலுண்டானவை. அதுக்கும்-சப்தமாத்ரத்துக்கும். கண்-ரக்ஷகன். ப்ரஹ்மாதிகளையும் லோகத்திலே ரக்ஷகராக வ்யவஹரிக்கிறார்களேயென்ன. (மாலேயித்யாதி) மாலைக்கண்ணென்றிருப்பார்க்கு - ஸர்வேச்வரனை “ ரக்ஷகன் ” என்றிருப்பார்க்கு. (மாலைக்கண்ணாய்த்தோற்றுமிறே) ராத்ரியில் பதார்த்ததர்சநாக்ஷமமான சக்ஷுஸ்ஸுபோலே அரக்ஷகமென்றே தோற்றுமென்றபடி.

ஸம்வாதம் (ஸத்யம்ஸத்யமித்யாதி) ஐதிஹாஸிகபௌராணிகவசநம் “𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌭𑍁𑌜𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌵𑍇𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌦𑍈𑌵𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑍍 ” (ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்ய முத்த்ருத்யபுஜமுச்யதே | வேதசாஸ்த்ராத்பரந்நாஸ்திநதைவம்கேசவாத்பரம்) “ அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் பரத்வஞ்சொல்லுகிறரிங்கு ” என்று ப்ரவேசத்திற்சொன்ன வர்த்தத்தைக்காட்டுகிறார் (நங்கண்ணன்கண்ணித்யாதி) (அந்வயத்தாலேயிதி) வாக்யபேதேதாத்பர்யம். அல்லது-தத்வ்யதிரேகேண. ஓர்கண்-ஒருநிர்வாஹகன்.

திண்ணன்வீடித்யாரப்ய, நங்கண்ணன்கண் ; அல்லதோர்கண்ணில்லையே இத்யந்வய:. யத்வா, வீடுமுதலித்யாரப்ய, அல்லதோர் கண்ணில்லையே; திண்ணம் இத்யந்வய:..*

இரண்டாம்பாட்டு.

ஏபாவம்பரமேயேழுலகு
மீபாவஞ்செய்தருளாலளிப்பாரார்
மாபாவம்விடவரற்குப்பிச்சைபெய்
கோபாலகோளரியேறன்றியே.

ஆறாயிரப்படி.

(ஏபாவம்) இஜ்ஜகத்துக்கு வேறுரக்ஷகனில்லையோவென்னில்; “ நஹி பாலந ஸாமர்த்த்யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம் ” (நஹிபாலநஸாமர்த்த்ய ம்ருதேஸர்வேஶ்வரம்ஹரிம்) என்றுகொண்டு, ருத்ரனுடையமஹாபாபத்தைப்போக்கி அவனைரக்ஷித்தருளின பரமகாருணிகனாயிருந்தகோபாலகோளரியேறன்றி, இந்தஸர்வலோகங்களினுடையபாபத்தைப்போக்கி ரக்ஷிப்பாருளரோ ; ரக்ஷிக்கவல்லார்தானுளரோ ; இது உபபாதிக்கவேணுமோ வென்கிறார்... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநிஷ்ட நிவ்ருத்திக்கு மிஷ்டப்ராப்திக்கும் ஹேது, க்ருஷ்ணனென்கிறார்.

மா - அறப்பெரியதான. பாவம் - குருபாதகம். விட - விட்டுப்போம்படி. அரற்கு - ருத்ரனுக்கு. பிச்சைபெய் - பிக்ஷாப்ரதாநம்பண்ணினவனாய். கோபாலகோள் - கோபகுலத்திற்பிறந்தார்க்குள். அரியேறு - ஸிம்ஹஶ்ரேஷ்டமானக்ருஷ்ணன். அன்றியே - அன்றி. ஏழுலகும் - ஸர்வலோகத்தையும். ஈபாவஞ்செய்து - நசித்தபாபத்தையுடைத்தாம்படிபண்ணி. அருளால் - தன்க்ருபையாலே. அளிப்பார் - அபிமதங்களைக்கொடுத்து ரக்ஷிப்பார். ஆர் - ஆர். ஏபாவம் - என்னபாவமிருந்தபடி. பரமே - இவனுடைய ஸர்வாதிகத்வஞ்சொல்லுதல் நமக்குபரமாவதே.

ஏஎன்று - வெறுப்பைக்காட்டுகிறது..*

ஈடு - இரண்டாம்பாட்டு.

“ அல்லதில்லை ” என்று நீர்சொல்லுவானென், ப்ரஹ்மருத்ரர்களுமீஶ்வரர்களாக அவர்களுக்கும் சிலப்ரமாணங்களுண்டாயன்றோபோருகிறதென்னில்; அவர்கள்நிலைகளை யாராய்ந்துபார்த்தால், தலையறுப்பார் சிலரும், அறுப்புண்டுநிற்பார் சிலரு மாகாநின்றார்கள் ; அவர்களாபத்தைப்போக்கி ரக்ஷியாநின்றானிவன் ; அவர்களோ இவனோ ஈஶ்வரனென்கிறார்.

ஏ என்றது - ஓ வென்றபடி. விஷாதாதிஶயஸூசகமிருக்கிறபடி. (ஏபாவம்) ரத்நகரீஷங்களுக்கு வைஷம்யஞ் சொல்லவேண்டுவதே !, சேதநர் மந்தமதிகளாய் பகவத்பரத்வமுபபாதிக்கவேண்டுவதே ! என்று

யின்றாப்பாலே, என்னே! பாவமென்கிறார். (பரமே) பகவத்குணாநுபவம்பண்ணுகையொழிய இது நமக்கு பரமாவதே. இதுநமக்கு ஸாத்யமாய் வந்துவிழுவதே. (ஏழுலகும்) ஏழுலகங்களிலுமுண்டான சேதநர் இருந்ததே குடியாக பாபங்களைக் கூடுபூரிக்க. (ஈபாவஞ்செய்து) பாபமானது ஈயும்படியாகச்செய்து. அழியும்படியாகப் பண்ணி. இதுதான் சேதநரர்த்திக்க, செய்கையன்றிக்கே (அருளால்) நிர்ஹேதுகக்ருபையாலே. (அளிப்பாரார்) இவர்களை யிரக்கையாலே தடவிரக்ஷிப்பாரார்.

இவர்கள்பண்ணின பாபம் அவனருளாலே போக்கில் போமத்தனையல்லது, தாங்கள் ப்ராயஶ்சித்தம்பண்ணிப் போக்குகையாவது- அவற்றை வர்த்திப்பிக்கையிறே. அளிப்பானிவன் என்னாதே, ஆர்என்கிறது- அவர்களுக்கும் ஸத்த்வந்தலையெடுத்தபோது, "நீர்சொல்லுகிறவனே" என்றிசையவேண்டும் ப்ரஸித்தியாலே; "பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ" (பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவ) "நஹி பாலநஸாமர்த்த்யம்ருதே" (நஹிபாலநஸாமர்த்த்யம்ருதே.)

அவன் ஸர்வவிஷயமாகப் பண்ணின ரக்ஷணங்கிடக்கிடீர், தந்தாங்கால் தாந்தாம்நீட்டி நடக்கவல்லரா யிருக்கிறவர்களுமோரோரளவுகளிலே ஆபந்நரானால் அவற்றைப்போக்கி ரக்ஷிக்கும்படியைப் பார்க்கலாகாதோவென்கிறார் (மாபாவம்விட) ஆனைக்குந்தனக்குத் தக்க வாதயிறே. அல்லாதாரில் ஜ்ஞாநஶக்த்யாதிகளாலே ஓராதிக்யமுண்டிறே அவனுக்கு; அவற்றைக்கொண்டு லோககுருவுமாய்த் தனக்குப் பிதாவுமாயிருக்கிறவன்றலையை யறுத்துப் பாதகியாய்நின்றான், "வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய ஶிரோ மயா" (வாமாங்குஷ்டநகாக்ரேணச்சிந்நம்தஸ்யஶிரோமயா) என்கிறபடியே. மஹாபாபமானது விடும்படியாக.

(அறக்குப்பிச்சைபெய்கோபாலகோளரியேறு) அவன்றான் ஸம்ஹர்த்தாவான வேஷத்தோடே அதிகாரங்குலையாதேநின்று பாபத்தை விளைத்துக்கொள்ள, இவனவனுக்கு து:கநிவர்த்தகனாயிற்று அங்கேயிங்கே யாவிர்ப்பவித்துத் திரிகிறவிடத்திலேயாயிற்று. இவர்களெத்தனையேனுமுயரநின்றாலும் மநர்த்தத்தையேசூழ்த்துக்கொள்ளுமித்தனை, அவனெத்தனையேனுந்தன்னைத் தாழவிட்டாலும் ரக்ஷகனாமென்கையுஞ்சொல்லுகிறது. கோபாலருடைய மிடுக்கை யுடைத்தான ஸிம்ஹபுங்கவமென்றபடி. (கோபாலகோளரியேறு) கோளென்று - மிடுக்காதல், ப்ரதிபக்ஷத்தைக்கொள்ளுமென்னுதல். நித்யஸூரிகளுக்கு நியந்தாவானவன்இடையருக்கு நியாம்யமாகப்பெற்றமேனாணிப்பு. கர்மவஶ்யராயாபந்நரானவிவர்களை "ஈஶ்வரர்கள்" என்போமோ, ஆபத்துக்களைப்போக்கிரக்ஷிக்கிறவிவனை "ஈஶ்வரன்" என்போமோ. ஏறன்றி - அருளாலளிப்பாராரென்றந்வயம். ....*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (ஏபாவமித்யாதி) "மாபாவம்விடவரற்குப்பிச்சை பெய்" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகையை ஸங்காபரிஹாரமுகேநாஹ (அல்லதில்லையித்யாதி) (அவர்களுக்கும் சிலப்ரமாணங்களென்றது) "𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌃 𑌸𑌮𑌵𑌰𑍍𑌤𑌤𑌾𑌗𑍍𑌰𑍇" (ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே) "𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃" (ஶிவஏவகேவல꞉) "𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇" (ஏகஏவருத்ரோநத்விதீயாயதஸ்த்தே) இத்யாதியைநினைத்து. (அவர்கள் நிலைகளையிதி) அர்த்தப்ரகரணாதிகளாலே ஹிரண்யகர்ப்பாதிஸப்தங்களெல்லாம் பரமாத்மபரங்களென்றுபாவம்.

ஓ என்பானென்னென்ன (விஷாதேத்யாதி) "ஏபாவம்" என்கைக்கு-உமக்குவந்ததென்னென்ன (ரத்நேத்யாதி) விவரணம் (சேதநரித்யாதி) (பரமே) இந்தவுபதேஸமித்யத்யாஹார்யம். "பரமே" என்று து꞉கிக்கிறீர், உமக்கு பரமேசென்ன (பகவத்குணேத்யாதி) விவரணம் (இதுநமக்கித்யாதி) இது - உபதேஸம்.

ஏழுலகும், ஈபாவஞ்செய்து - ஈஸித்தபாபத்தை யுடைத்தாம்படிபண்ணி. "உலகு" என்றது - லோகஸ்த்தசேதநபரம்; "𑌮𑌞𑍍𑌚𑌾𑌃 𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑌿" (மஞ்சா꞉க்ரோஸந்தி) இதிவத். "உலகும்" என்றஅபிஸப்தம்- ஸாகல்யபரம். இருந்ததேகுடியாக - எல்லாருமொக்க. கூடுபூரிக்க - உறையைநிறைக்க. "பாவமீசெய்த" என்றவிடத்திலே - "𑌉𑌪𑍋𑌷𑌿𑌤𑌃 𑌪𑍂𑌜𑌿𑌤𑍋 𑌵𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌵𑌾 𑌨𑌮𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 । 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌹𑌰𑌤𑍇 𑌪𑌾𑌪𑌂 𑌕𑍋 𑌨 𑌸𑍇𑌵𑍇𑌤 [illegible]" (உபோஷித꞉பூஜிதோவா த்ருஷ்டோவாநமிதோபிவா | ப்ரஸஹ்யஹரதேபாபம்கோநஸேவேத்தரிந்தர꞉) என்றதநுஸந்தேயம். அருளால் - ஈசெய்து என்று மேலேயந்வயித்தர்த்தம் (இதுதானித்யாதி) அருளால் - அளிப்பாரார் என்று மேலேயுங்கூட்டிபாவம் (இவர்களையித்யாதி) "அருளால்" என்றத்தை- "ஈசெய்து" என்றத்தோடேகூட்டிபலிதம் (அவற்றையித்யாதி) தங்கள் ப்ராயஸ்சித்தத்தாலே போக்கவொண்ணாதோவென்ன (இவர்கள்பண்ணினவித்யாதி) "ஈபாவஞ்செய்து" என்றதுக்கு ப்ரமாணம் (பாவநஇத்யாதி) உத்தரஸ்ரீராமாயணே த்வ்யஸீதிதமோத்யாயம்ப்ரத்யகஸ்த்ய꞉, "𑌅𑌤𑍍𑌯𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌿𑌦𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌤𑌵 𑌰𑌾𑌮 𑌶𑍁𑌭𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 । 𑌪𑌾𑌵𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨." (அத்யத்புதமிதம்வாக்யம்தவராமஸுபாக்ஷரம் | பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவரகுநந்தந.) பாவந꞉ - பாபநிவர்த்தக꞉. அளிக்கையிலே ப்ரமாணம் (நஹீத்யாதி) ப்ரதமேம்ஸே, "𑌨𑌹𑌿 𑌪𑌾𑌲𑌨𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍃𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌹𑌰𑌿𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍." (நஹிபாலநஸாமர்த்த்யம்ருதேஸர்வேஸ்வரம்ஹரிம் | ஸ்த்திதௌஸ்த்திதம்மஹாத்மாநம்பவத்யந்யஸ்யகஸ்யசித்.)

தந்தாங்காலித்யாதியாலே - அல்லாதாரைப்பற்ற ருத்ராதிகளுக்கு வ்யாவ்ருத்தி. தங்கள்கால் தாங்கள்நீட்டி முடக்கவல்லராகைஎன்று - அவர்கள்ஸக்தியைதுச்சீகரிக்கிறபடி. "மா" என்றதுக்குபாவம் (ஆனைக்குமித்யாதி) விவரணம் (அல்லாதாரித்யாதி) தலையறுத்ததுக்கு ப்ரமாணம் (வாமாங்குஷ்டேத்யாதி)

மாத்ஸ்யபுராணே, “ ததஃக்ரோதபரீதேநஸம்ரக்தநயநேநச ” (ததஃக்ரோதபரீதேநஸம்ரக்தநயநேநச) இதிபூர்வார்த்தம். ஶப்தார்த்தம் (மஹாபாபமானதித்யாதி.)

“ அரற்கு ” என்று-அவனுடையபெருமையையும், “ கோபாலகோளரி ” என்று - இவனுடைய நிஹீநகுலத்திலவதாரத்தையுஞ் சொன்னதுக்கு ப்ரயோஜநமாஹ (அவன்றனித்யாதி) ஹரிந்தி - ஹர: என்றத்தைப்பற்ற (ஸம்ஹர்த்ராவாணவேஷத்தோடேயென்றது) அங்கேயிங்கேயாவிர்ப்பவித்து என்றது- “ கோபாலகோளரி ” என்றத்தைப்பற்ற. இந்தஅபதாந மவதாராந்தரத்திலேயாகிலும், இந்தஅபதாந ஸமபிவ்யாஹ்ருதமான இந்தவ்யவஹாரம்- அவதாராந்தரத்துக்கு ஸூசகமென்றபடி. பலிதமாஹ (இவர்களித்யாதி) பிச்சைபெய் - பிச்சையிடுகிற. ஶப்தார்த்தம் (கோபாலருடையவித்யாதி) கோள் - மிடுக்கும், கொள்கையும். “ அரியேறு ” என்று - எந்தமேனுணிப்பைச்சொல்லுகிறதென்ன (நித்யஸூரிகளுக்குமித்யாதி) மேனுணிப்பு - கர்வம். பாட்டுக்குத்தாத்பர்யம் (கர்மவஶ்யராயித்யாதி) “ ஏறன்றி ” என்றதுக்கந்வயங்காட்டுகிறார் (அருளாலித்யாதி)

மாபாவம் விட இத்யாரப்ய, ஏறன்றி - அருளால் - ஏழுலகுமீபாவஞ்செய்து, அருளாலளிப்பாரார் ; ஏபாவம், பரமே இத்யந்வய:..........................*

மூன்றாம்பாட்டு.

ஏறனைப்பூவனைப்பூமகடன்னை
வேறின்றிவிண்டொழத்தன்னுள்வைத்து
மேறன்னைமீதிடநிமிர்ந்துமண்கொண்ட
மாறனின்மிக்குமோர்தேவுமுளதே.

ஆறாயிரப்படி.

(ஏறனை) * அயர்வறுமமரர்கள் தன்னுடைய ஸௌஶீல்யகுணத்தைக்கண்டு தொழுகைக்காக, ஸர்வேஶ்வரியான பெரியபிராட்டியாரோடொக்க, அத்யந்தமபக்ருஷ்டரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் தன்னையாஶ்ரயமாகக்கொடுத்துக்கொண்டிருக்கையாலும், ஸர்வலோகங்களும் திருவடிகளினுள்ளே யடங்கும்படி யளந்தருளுகையாலு மிவனே ஸர்வேஶ்வரன் ; மற்றில்லையென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இவனே ஸர்வஸ்மாத்பரனென்கிறார்.

ஏறனை - ருஷபவாஹநனானருத்ரனையும். பூவனை - கமலாஸநனானப்ரஹ்மாவையும். பூமகடன்னை-பத்மவாஸிநியாய்த் தனக்கஸாதாரணையான பிராட்டியையும். வேறின்றி - தன்றிருமார்பில்வைத்ததிற்காட்டில் வேறுதோன்றாதபடி. தன்னுள்-தன்றிருமேனிக்குள்ளே. விண் - இந்தஶீலமறிந்தபரமபதவாஸிகள். தொழ-

னன்னைத்தொழும்படி. வைத்து - வைத்து. மேல்தன்னை-ஊர்த்வலோகத்தை. மீதி டு-கீழ்த்தொழும்படி. நிமிர்ந்து-வளர்ந்து. மண்-பூமியை. கொண்ட-அளந்துகொண்ட. மால்தனில்-பெரியவனை. மிக்கும்-மிகுத்திருப்பது. ஓர்-ஒரு. தேவும் - தேவதாதத்வமும். உளதே - உண்டோ.

ஏகாரம் - வினா ....*

ஈ டு - மூன்றாம் பாட்டு.

ஸௌசீல்யத்தாலும், த்ரைவிக்ரமக்ரமணமாகிற அதிமானுஷசேஷ்டிதத்தாலும் இவனை யீச்வரனென்கிறார்.

(ஏறனை) ஸர்வேச்வரன் " கருடவாஹனன் " என்றிருமாந்திருக்குமாபோலே, ஒரு எருத்தைத்தேடிக் கைக்கொள்ளாண்டிகளைப்போலே யிருமாந்திருக்கும். (பூவனை) " திருநாபிகமலத்திலே அவ்யவதானேநபிறந்தவனன்றோ " என்றிருமாந்திருக்கும் சதுர்முகனை. அதாவது-பத்மயோநித்வத்தாலே " அஜன் " என்றபிமாநித்திருக்கை. (பூமகள்தன்னை) தாமரைப்பூவில் பரிமளமுபாதாநமாகப்பிறந்தவளாய், போக்யதைதவேலையாய் " உனக்கேற்கும் " என்னும்படியான ப்ராதாந்யத்தோற்றவிருக்கிறவளை. தன்னை என்று-அவர்களிலிவளுக்குண்டான ப்ராதாந்யமிருக்கிறபடி. " ஏறனை, பூவனை " என்கிற அநாதரோக்தியாலும்-இவள் ப்ராதாந்யந்தோற்றுகிறது.

(வின்தொழவென்னைத் தன்னுள்வைத்து) அங்யபரரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கும், அநந்யையான பெரியபிராட்டியார்க்கு மொக்க முகங்கொடுத்துவைக்கிற ஶீலத்தை யநுஸந்தித்து விண்ணிலுள்ளார் தொழாநிற்பர்கள். " ப்ரஹ்மாதிகளெப்போதும் திருமேனியைப்பற்றியிருப்பார்களோ " என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க; " ஓரோவாபத்துக்களிலே திருமேனியிலே யிடங்கொடுக்கிறான், அந்நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்களத்தையே வாய்ப்புலற்றுகிறார்களத்தனையிறே " என்றருளிச்செய்தார். (வேறின்றி) " கூறுதந்தனியுடம்பன் " என்கிறபடியே, வ்யவஸ்திதமாக இடங்கொடுக்கை. (வின்தொழ) "மஞ்சாக்ரோசந்தி" இத்யாதி. இங்குள்ளார் " ஐச்வர்யம் " என்றிருப்பார்கள், அங்குள்ளார் " ஶீலம் " என்று தோற்றிருப்பார்கள். (மேல்தன்னைமீதிட்யாதி) மேல்தன்னை-உபரிதநலோகங்களை, " அப்பால் மிக்கு " என்கிறபடியே விஞ்சவளர்ந்து பூமிப்பரப்பெல்லாம் திருவடிகளின்கீழேயிட்டுக்கொண்ட. (மாறனில்) இவ்வதிமாநுஷசேஷ்டிதத்தையுடைய ஸர்வேச்வரனிற்காட்டில் (மிக்குமோர்தேவுமுளதே) ஒக்கப்பரிமாறுகிற,

"கட்டக்குடி." என்று கழிக்கலாந்தெய்வந்தானுண்டோ. எல்லார்தலையிலும் காலைவைத்தவனை "ஈஶ்வரன்" என்னவோ, இவன்காலிலேதுகையுண்டவர்களை "ஈஶ்வரர்கள்" என்னவோ ....*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (ஏறனையித்யாதி) (ஸௌஶீல்யத்தாலுமிதி) ஸௌஶீல்யகுண மீஶ்வரத்வ ஸாதகமென்று கருத்து.

"ஏறனை" என்றதுக்கை நிரூபகமாகச்சொன்னதுக்குபாவம் (ஸர்வேஶ்வரனித்யாதி) அபிமாநிகளுக்கு முகங்கொடுக்கையிறே - ஶீலகுணமென்றபடி. இருமார்திருக்கும் -ஸ்ரீகர்வித்திருக்கும். "பூவனை" என்கிற விடத்திலும்- அபிமாநந்தோன்றுகிறதென்று கண்டுசொல்வது. இருமாப்புக்கடியேதென்ன (அதாவதித்யாதி) அயோகிருத்வ மிறுமாப்புக்கடியென்றுகருத்து. ப்ராதாந்யத்துக்குஹப்தமேதென்ன (தன்னையென்றித்யாதி) ஸ-ஞசகாந்தரம் (ஏறனையித்யாதி) (அநாதரோக்தியாலுமிதி) "வ்ருஷபயாநனை, அப்ஜஸம்பவன்" என்றாற்போலே சொல்லிற்றில்லையேயென்றுகருத்து.

வேறின்றி -ஸ்ரீஸமமாக. தன்னுள்வைத்து - தன்திருமேனியிலேவைத்து. ப்ராஹ்மாதிகளுக்கு முகங்கொடுக்கிற விதுக்கு விண்ணிலுள்ளார் தொழுவாரென்னென்ன (அந்யபரானவித்யாதி) ப்ராஸங்கிகம் (ப்ரஹ்மாதிகளித்யாதி) "வேறின்றி" என்றதுக்குபாவம் (குருவாயித்யாதி) "விண்தொழ" என்றால் விண்ணுள்ளாரைக்காட்டுமோவென்ன (மஞ்சாஇத்யாதி) விண்ணிலுள்ளாரொழிய மண்ணினுள்ளார் தொழார்களோவென்ன (இங்குள்ளாரித்யாதி) ஶீலத்திலே தோற்றிருக்கையாலே - "விண்தொழ" என்றதிலே, எல்லாரும் தொழுவர்களென்று கருத்து.

மேறலேமீதிட்டிருக்கு - உபரிதநலோகங்களைக்கிட்டும்படி மிஞ்சவளர்ந்து. மாறனில்-மால்தன்னில். ஸர்வேஶ்வரனிற்காட்டில். மிக்குமோர்தேவுமுளதே-மிகுத்திருப்பதொரு தேவதையுண்டோ இதிஶப்தார்த்த:. "ஏறு" என்றதுக்குபாவம் (ஒக்கவித்யாதி) கட்டக்குடி-கஷ்டப்படுகிறகுடும்பி. அகிஞ்சநகுடும்பி. அல்லாதாரோடொக்கப் பரிமாறுகிறதுக்கச்செய்தே, "இறையிருக்கமாட்டான்" என்று கழிப்புண்ணும் கட்டக்குடிபோலேயென்றபடி. "உளதே" என்றவிப்ரியயகாரத்துக்கு பாவம் (எல்லார்தலையிலுமித்யாதி)

க்ரமேணாந்வய:...*

நான்காம்பாட்டு.

தேவுமெப்பொருளும்படைக்கப்
பூவினான்முகனைப்படைத்த
தேவனெம்பெருமானுக்கல்லாற்
பூவும்பூசனையுந்தகுமே.

ஆறாயிரப்படி.

(தேவும்) சதுர்முகாதி ஸகலபதார்த்த ஸ்ருஷ்டிபண்ணினவனாய், தன்னுடைய ஸௌந்தர்யகுணத்தாலே யெனக்கு ஸ்வாமியாயிருந்த வெம்பெருமானல்லது ஸர்வேஸ்வரரும் மற்றியாருமுளரோ வென்கிறார்......*

பன்னீராயிரப்படி.

ஜகர்த்ருத்வம், ஆராத்யதைக்கிடான ஆதிக்யம் மற்றொருவர்க்குக் கொள்ளியலில்லையென்கிறார்.

தேவும் - தேவஜாதியையும். எப்பொருளும் - மநுஷ்யாதிஸகலபதார்த்தங்களையும். படைக்க - ஸ்ருஷ்டிக்கைக்காக. பூவில் - திருநாபிகமலத்திலே. நான்முகனை - சதுர்முகனான ப்ரஹ்மாவை. படைத்த - படைத்த. தேவன் - பரதேவதையான. எம்பெருமானுக்கு - என்னையனுக்கு. அல்லால் - அல்லது. பூவும் - புஷ்பார்ச்யபஹாரமும். பூசனையும் - ஆராதநோபசாரமும். தகுமே - வேறு சிலர்க்குத் தகுமோ.

தகாதென்று கருத்து...*

ஈடு - நான்காம்பாட்டு.

ஸௌகுமார்யத்தாலும் முதன்மையாலும் இவனே யிப்பவரனென்கிறார்,

(தேவுமித்யாதி) தேவஜாதியையும் ஸகலபதார்த்தங்களையு முண்டாக்குகைக்காக, ஒருபூவிலே நான்குபூப் பூத்தாற்போலே சதுர்முகனையுண்டாக்கினவன். (தேவன்) சதுர்முகஸ்ரஷ்டாவானமையால் வந்த த்யுதியைச்சொல்லுதல், இதுதன்னை லீலையாக வுடையவனென்னுதல், ஸௌந்தர்யாதிகளாலே வந்தவிளக்கமென்னுதல். (எம்பெருமானுக்கல்லால்) ஸ்ருஷ்ட்யாத்யுபகாரத்தாலும், ஸ்ருஷ்டிக்குறுப்பான குணங்களாலு மென்னை யெழுதிக்கொண்டவனுக்கல்லது.

(பூவும்பூசனையுந்தகுமே) சிக்குத்தலையனுக்குப்பூத்தகாது, பிச்சையுண்ணிக்குப் பூசனைதகாது; பூத்தருவது ஸுகுமாரனுக்கு; பூசனை தருவது முதன்மையுடையவனுக்கு; இவனையொழிந்தார்க்குத் தகாதென்கிறார். | [illegible] | | ஸௌஹ்ருதிர் [illegible] ஸம்பந்தீ ஜநார்த்தந: | என்று ஸ்ரீபீஷ்மர் செடும்போது அவனுடைய பரத்வத்தை யுபபாதித்துக்கொண்டு போந்து, ப்ரஸித்தமான கண்ணழகையுடையவன் காறுங்களுக்கு மைத்துனராய்ப் புகுந்திருக்கிறானென்று பரத்வத்தை யவன்தலையிலேமாட்டெடுத்தார்; "[illegible]" (அர்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ்ஸர்வேஸம்மந்துமர்ஹத) என்ற ஸஹதேவன்தலையிலே புஷ்பவ்ருஷ்டியைப்பண்ணினார்களிறே. இத்தால் - ஜ்ஞாநத்திற் காட்டில் வைராக்யத்துக்குண்டான ப்ராதாந்யஞ்சொல்லுகிறது.......... ....*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (தேவுமித்யாதி) "பூவும்பூசனையும்" என்றத்தைப்பற்றவாதல், "தேவன்" என்ற - காந்தியையும், "எம்பெருமான்" என்றத்தையும் பற்றவாதல் (ஸௌகுமார்யத்தாலும் முதன்மையாலுமென்றது) யத்வா, "பூவில்" என்ற - பத்மநாபத்வத்தாலே, இரண்டும் ஸித்தமாதல். பத்மநாபத்வம் பரத்வாஸாதாரணமிறே.

ப்ராஹ்மாவைஎன்னுமல், "நான்முகன்" என்றதின் பாவம் (ஒருபூவிலே யித்யாதி) "திவு-க்ரீடாவிஜிகீஷா வ்யவஹாரத்யுதிஸ்துதிமோதமதஸ்வப்நகாந்திகதிஷு" (திவுக்ரீடாவிஜிகீஷா வ்யவஹாரத்யுதிஸ்துதிமோதமதஸ்வப்நகாந்திகதிஷு) என்கிறதாதுவை யுட்கொண்டர்த்தம் (சதுர்முகேத்யாதி) இதனை - ஸ்ருஷ்டியை. இப்பக்ஷத்தில், தேவன் - க்ரீடாபரன். விளக்கம் - காந்தி; அத்தாலே - காந்தனென்றாய், அதிமனோஹரனென்றபடி. "படைத்த" என்றத்தைப்பற்ற (ஸ்ருஷ்ட்யாதிதி) ஸ்ருஷ்டிக்குறுப்பானகுணங்களாலுமென்றது- "நான்முகனைப்படைத்த" என்று - ஸ்ருஷ்டிசொன்னாற்போலே தது பயுக்தஜ்ஞாநஶக்த்யாதிகுணங்களு மர்த்தஸித்தங்கள்.

"தருமே" என்ற பிரிநிலை யேகாரத்துக்கு பாவம் (சிக்குத்தலையனித்யாதி) சிக்குத்தலையன் - ப்ரஹ்மா; ஜடாவானாகையாலே. ருத்ரனாதல். ருத்ரபக்ஷ "பூவும்பூசனையுந்தருமே" என்றது - ருத்ரனுக்கேயக்வயிப்பது - ஆகில், தருவதார்க்கென்ன (பூத்தருவதித்யாதி) இத்தால்-தபோநிஷ்டனாகையாலே ஸௌகுமார்யமும், உபாஸகனாகையாலே முதன்மையும் ருத்ரனுக்கில்லையென்று கருத்து. "முதன்மையுடையவனுக்கு" என்றவநந்தரம், ஆகையாலே இத்யத்யாஹார்யம்.

"அல்லதில்லையோர்கண்" "கோளரியேறன்றி யருளாலளிப்பாரார்" இத்யாதியாலே- பலகாலும் வ்யதிரேகநிர்த்தேஶத்தாலே வைராக்யஞ்சொல்லுகிறதுக்குக்கருத்து - ஜ்ஞாநத்திற் காட்டில் வைராக்யத்துக் காதிக்ய ப்ரதர்ஶநார்த்தமென்னுமிடத்தை ஸப்ரமாணமாக வருளிச்செய்கிறார் (ஸநகேத்யாதி) இதம் பாரதே ராஜஸூயே பகவத்பரத்வம் பஹுமுகேநோக்த்வா பீஷ்மஆஹ. தத்ரைவ ஸஹதேவ:, "ததிமம் ஸர்வஸம்பந்நமாசார்யம் பிதரம் குரும் । அர்ச்யமர்ச்சிதமர்ச்சார்ஹம் ஸர்வே ஸம்மந்துமர்ஹத" (ததிமம்ஸர்வஸம்பந்நமாசார்யம்பிதரங்குரும்। அர்ச்யமர்ச்சிதமிச்சாமஸ் ஸர்வேஸம்மந்துமர்ஹத) "மாங்நாம்பலிநாம்ராஜ்ஞாம் மத்யே ஸந்தர்பயே ததா । ததோபதத்புஷ்பவ்ருஷ்டிஸ் ஸஹதேவஸ்ய மூர்த்தநி" (மாங்நாம்பலிநாம்ராஜ்ஞாம்மத்யேஸந்தர்பயிதேபதே। ததோபதத்புஷ்பவ்ருஷ்டிஸ்ஸஹதேவஸ்யமூர்த்தநி.) (ஶ்ருதிஸித்தமான) "தஸ்யயதா" (தஸ்யயதா) இத்யாதி ஶ்ருதிஸித்தமான. இது - "ஏஷ:" (ஏஷ:) என்றிருக்க, "ஸ:" என்றதின்தாத்பர்யம். அயம் என்னுமல், "ஏஷ:" (ஏஷ:) என்றது - ஶப்தமுகேந "ஏஷோऽந்தராதித்யே" (ஏஷோந்தராதித்யே) இத்யாதிஶ்ருதிப்ரத்யபிஜ்ஞாநார்த்தம். மைத்துனனாய் - அத்தைப்பிள்ளையாய். மாட்டெறிகை - ஏறிடுகை. (அர்ச்யமித்யாதி) தமிமமர்ச்யமிச்சாம:; யூயம்ஸர்வே, அர்ச்சிதும் - அர்ச்சயிதும், ஸம்மந்தும் - ஸம்மதிங்கர்த்தும், அர்ஹதேதியோஜ

நா. "ஸாதிநாம்" (மாதிநாம்) இத்யாத்யுத்தரஶ்லோகத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் (என்றஸஹதேவனித்யாதி) இத்தால் - பஹுமுகமாக பரத்வத்தை யுபபாதித்த ஜ்ஞாநியான பீஷ்மர்தலையிலே புஷ்பவ்ருஷ்டிகண்டதில்லை; தேவதாந்தரங்கள்பக்கல் ஸாரக்கறுத்த "ஸாதிநாம்" (மாதிநாம்) இத்யாதிப்படியே-நான்சொன்னத்தை ஸம்மதியாதேயிருக்கிறவன்றலையிலே யென்காலை வைக்கிறேனென்று ஸஹதேவன் காலைக்காட்டினபோ தவன்றலையிலே புஷ்பவ்ருஷ்டி யுண்டாயிற்று; ஆகையால், ஜ்ஞாநத்திற்காட்டில், இதரவிஷயத்தில் ஸாரக்கறுக்கையாகிற - வைராக்யம் ஶ்ரேஷ்டமென்றபடி. இத்தால்-புஷ்பவ்ருஷ்டிப்ரதிபாதநத்தால்.

க்ரமேணூர்வய...*

ஐந்தாம்பாட்டு.

தருஞ்சீர்த்தன்றனிமுதலினுள்ளே
மிகுந்தேவுமெப்பொருளும்படைக்கத்
தருங்கோலத்தாமரைக்கண்ணனெம்மான்
மிகுஞ்சோதிமேலறிவாரியவரே.

ஆறாயிரப்படி.

(தருஞ்சீர்) தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்துக் குசிதமான கல்யாணகுணங்களை யுடையனாய், ஸ்வஸங்கல்பகல்பிதநிகிலஜகத்தையுடையனாய், தன்னுடைய ஸர்வேஶ்வரத்வோசிதமான அழகியதிருக்கண்களையுடையனாயிருந்த வெம்பெருமானுடைய திருமேனியினழகு ஒருவர்க்கு நினைக்கநிலமோவென்கிறார்.......................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்பரத்வஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தை யருளிச்செய்கிறார்.

தரும் - ஸ்ருஷ்ட்யாதிகளுக்குத் தகுதியான. சீர் - ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையனான. தன் - தன்னுடைய. தனி - அத்விதீயமாய். முதலினுள்ளே-ஜகத்துக்கு முதலான ஸங்கல்பத்துக்குள்ளே. மிகும் - "ஈஶ்வரன்" என்று ஶங்கிக்கலாம்படி மிக்க. தேவும் - ப்ரஹ்மருத்ராதிதேவஜாதியையும். எப்பொருளும் - மநுஷ்யாதிஸகலபதார்த்தங்களையும். படைக்க - ஸ்ருஷ்டிக்க. தரும் - "இவன்றனக்குத்தரும்" என்னஸூசகமான. கோலம் - அழகிய. தாமரை - தாமரைபோன்ற. கண்ணன் - கண்களையுடைய. எம்மான் - என்ஸ்வாமியானவனைக்காட்டிலும். மிகுஞ்சோதி-பரஞ்ஜ்யோதிஸ்ஸு. மேல் - இதுக்குமேலொருதத்த்வமுண்டென்று. வைதிகரில் அறிவார் - அறிவார். யவர் - ஆர்.

உண்டென்றறிவார் - அவைதிகரென்றுகருத்து.................................*

௩௫ - ஐந்தாம்பாட்டு.

புண்டரீகாக்ஷனாகையாலே இவனே யீச்வரனென்கிறார்.

(தருமித்யாதி) ஸ்ரஷ்ட்ருத்வத்துக் குபயோகியான ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையனான (தன்தனிமுதலினுள்ளே) கார்யவர்க்கத்துக்கடைய காரணமான மூலப்ரக்ருதியைச்சொல்லுதல், "பஹுஸ்யாம்" (பஹுஸ்யாம்) என்கிற - அதுக்குமடியான ஸங்கல்பஜ்ஞாநத்தைச்சொல்லுதல். (தனிமுதல்) ஏககாரணமென்று - பரமாணுகாரணவாதிகளை வ்யாவர்த்திக்கிறது. (மிகுமித்யாதி) தன்னோடு மசக்குப்பரவிடலாம்படியான தேவஜாதியையும். வில்லவனோத்தபோதாக "அதிகம் மேநிரே விஷ்ணும்" (அதிகம்மேநிரேவிஷ்ணும்) என்னும்படியிறே யிவர்கள்மிகை. (எப்பொருளும்) "மற்றுமுண்டான ஸகலபதார்த்தங்களையுமுண்டாக்குகைக்குத் தருவானொருவன்" என்னுமிடத்தைத் தெரிவிப்பதாய், ரக்ஷகத்வமில்லையாகிலும் தர்சநீயமாய்க்குளிர்ந்திருக்கிற திருக்கண்களையுடையனாய், அக்கண்ணழகாலே யென்னையடிமைகொண்டவனே மிக்க தேஜஸ்ஸையுடையான். திருவடிதோற்றதுறையிலே யிவருந்தோற்றது, [ராம:] [ராம:] ஸர்வாங்கஸுந்தரனாயிருக்கை. [பத்மபத்ராக்ஷ:] [கமலபத்ராக்ஷ:] அதிலேயொருசுழியாயிற்று. அழுந்துவார்க்குவேண்டுவது. அக்கண்ணழகுக்கெல்லையென்னென்னில் [ஸர்வஸத்த்வமநோஹர:] [ஸர்வஸத்த்வமநோஹர:] திர்யக்ஜாதியனாய்ப் பகையோடேயானதத்தித் திரிகிற என்னெஞ்சையும் அபஹரித்ததன்றோ. [ரூபதாக்ஷிண்யஸம்பந்ந: ப்ரஸூத:] [ரூபதாக்ஷிண்யஸம்பந்ந: ப்ரஸூத:] தேஹகுணங்களாலும் ஆத்மகுணங்களாலுங்குறையற்றது தான் ஔத்பத்திகமாயிருக்கும். [ஜநகாத்மஜா] "அறவினஞ்சச்சொன்னாய், இனியிந்தச்சொல்லலாவாருண்டோ வில்லையோ!" என்று பிராட்டிக்குக்கருத்தாக [ஜநகாத்மஜா] [ஜநகாத்மஜே] பின்னையும்மைச்சொல்லலாம், நீருமுண்டு. (மிகுஞ்சோதி) "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய," (பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய) "நாராயணபரோஜ்யோதி:" (நாராயணபரோஜ்யோதி:) என்று, நாராயணாநுவாகாதிகளிலே யிவனே பரஞ்ஜ்யோதிஸ்ஸென்றோதப்படுகிறான் (மேலறிவார்யவரோ) "இவனையொழிய நாராயணாநுவாக ஸித்தமாயிருப்பதொரு வஸ்துவுண்டு" என்றறிவாராரேனுமுண்டோ. (யவரே) [வைதிக:க:] [வைதிக:க:] என்னுமாபோலே. அநந்யபரமான நாராயணாநுவாகாதிகளிலே ப்ரதிபாதிக்கப்பட்ட வைபவத்தையுடைய வுன்பக்கலிலே பொருமைகொண்டாடியிருப்பானொரு வைதிகனுண்டோ. உண்டாகில் அவனைவைதிகனுமித்தனை; "தஸ்யோத்பத்திர்நிரூப்யதாம்" (தஸ்யோத்பத்திர்நிரூப்யதாம்)..................................*

ஜீயர் அரும்பதம்.

இத்தாம்பாட்டு. (தருஞ்சீரித்யாதி) "தாமரைக்கண்ணன்" என்றத்தை க்கடாக்ஷித்தவதாரிகை (புண்டரீகேத்யாதி)

தன் தனிமுதலினுள்ளே மிருந்தேவுமெய்ப்பொருளும்படைக்க - தருஞ்சீரையு முடையனும், தாங்கோலத்தாமரைக்கண்ணையுடையவெம்மான் மிருஞ்சோதிமே னியவார்யவர் என்றந்வயித்தர்த்தம் (ஸ்ரஷ்ட்ருத்வத்துக்கித்யாதி) இயல்வேயாட்டு க்கர்வயம். தன்-தன்னுடைய. (தனிமுதலினுள்ளே) அத்விதீயகாரணமான மூலப ரக்ருதிக்குள்ளே யென்றாதல், ஸங்கல்பரூபஜ்ஞாநத்துக்குள்ளேயென்றாதல் என் று ஸம்ப்ரதாயம். அவ்வக்ருமடி-ப்ரக்ருதி, காரணமானைக்குமடி, "ஐயாய்த்வேக்ஷ ணாத்ருஷ்ட்வுதிஷ்டயதிதலவாஹாவ" (மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஸ்ஸூயதே ஸசராசரம்) என்னக்கடவதிறே. மூலப்ரக்ருதிபரமானபக்ஷத்தி லருளிச்செய்கி றார் (ஏகஸாரணேத்யாதி) பரமாத்மகாரணவாதிகளை - அநேகபரமாணுகாரணவா திகளையென்றபடி. "அநேகபரமாணுக்கள்கூடி யொருகார்யத்தையுண்டாக்குகிற து" என்கிறவர்கள்சொல்லுவது.

அநிமாய... வதிமாறு (தன்னோடித்யாதி) மசக்கப்பாலிட்டாம்படி - ஸம்பவிக்கும்படி. ...க்கு - ஸம்பவம். பால்-கிளை. ஸம்பவத்தைப்பண்ணும் கி ளையென்று ஸம்ப்ரதாயம். அதாவது - பயல்கள்கோல்... ஸங்கேதபூர்வகமாக ஆடுகிற புளிகிளை. அப்படியிருந்திருப்பார்களோவென்ன (விஸ்லேஷித்யாதி) பாலகாண்டே - ராமதக்கயப்ராதுர்ப்பாவாநந்தரோப்ராஸங்கிகதா, "ஜாதி...குது ஜ...ஜா...மெஸவவிஷ...வோ...மெஜ: | அபிகஜ்ஜாதி...விஷ்...மெ வாவ... ...ஜா" (க்ரும்பிதஸ்சத்தநுர்ச்ருஷ்ட்வா ஸௌமயம்விஷ்ணுபராக் ரமை: | ... யம்மேகிசோவிஷ்ணுந்தேவாஸ்ஸர்ஷிகணாஸ்ததா.)

(மற்றுமுண்டானவிதி) "படைக்கத்தரும் தாமரைக்கண்ணன்" என்றவ மிப்பாதொரத்தாலே - தருமைத்துப்ரகாஸகங்களான திருக்கண்களென்கிறவர் த்தந்தோற்றுகிறதென்றபடி. "தாமரை" என்றதின்பாவம் (தர்ஸநீயமித்யாதி) ஸமபிவ்யாஹாரஸித்தார்த்தமாறு (அக்கண்ணழகாலேயித்யாதி) கண்ணழகிலே தோற்றமையை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார். (திருவடியித்யாதி) அப் படி, திருவடி, கண்ணழகிலே ... இருக்குமோவென்ன (ராமஇத்யாதி) இந்த ப்ஸ்லோகம் ஸுந்தரகாண்டத்தில் திருவடிவாக்யம். எடுத்தஸ்லோகத்துக்கர்த்தம் (ஸர்வாங்கேத்யாதி) ராமபதி - ராமனென்று - ஸர்வாங்க ஸௌந்தர்யங்களாலே புஜிப்பித்துமவனென்றுகொண்டு (ஸர்வாங்கஸுந்தரராயிருக்கையென்கிறார்) அதி லே - ஸௌந்தர்யத்திலே. பரபுத்தோப்ராத்யக்ஷத்வாத் ஸர்வஸத்த்வமநோஹரத்வ மெப்படிதோற்றுமென்ன (திர்யகித்யாதி) பணை - சாகை. தத்தி-குதித்து. "ஸம் பந்நஸ்" என்கையாலே (குறையற்றென்றது) ஸம்பந்நஸ்ஸந் - ப்ரஸூத:-ஸம்பந் நராய்க்கொண்டே பிறந்தாரென்கையாலே (ஔத்பத்திகமென்கிறது) தேஹகு ணங்களாலுமென்றது - சிற "ராம:" என்கிறவிடத்திற்சொன்ன ஸௌந்தர்யவ்ய திரிக்த ஸௌகந்த்யஸௌகுமார்யாதி தேஹகுணபரம்; அதோநபௌநருக்த்யம். குணதாக்ஷிண்யாபிதாநம் - குணாந்தரோபலக்ஷணம். ஸம்போதிக்கிறவனுடையபா

வத்தை யாகாங்க்ஷாபூர்வகமாக வருளிச்செய்கிறார் (அறவிஞ்சவித்யாதி) அறவிஞ்ச - மிகவுமதிகமாக. (பின்னையும்மைச்சொல்லலாம்) அடியேதொடங்கி யவனை யபிமுகீகரித்துச்சொல்லாநிற்க, அநபேக்ஷிதமான ஸம்போதநத்துக்கிதுவேசருத்தென்று தாத்பர்யம். உம்மைப்பெற்றவனையிறே ஜநகனென்றபடி.

"மிகுஞ்சோதி" என்றதுக்குபாவம் (பரஞ்ஜ்யோதிரித்யாதி) "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய" (பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய) இதி சாந்தோக்யே. (நாராயணபரோஜ்யோதி:) நாராயண:பரஞ்ஜ்யோதி: என்றபடி. விஸர்க்கலோபஶ்சாந்தஸ:. (ஆரேனுமுண்டோ) இல்லையென்றபடி. அந்தப்புறம் லோகத்தில் பாசுபதாத்யாகமங்களிலே நடையாடாநிற்கிறதேயென்ன "யவரோ" என்று - எந்தவைதிகனென்று விவக்ஷிதமென்கிறார் (யவரோவென்று) இப்படி விவக்ஷித்ததுக்கு ஸம்வாதம் (வைதிக: க: இத்யாதி) ஸ்தோத்ரே, "ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத்வம் நாராயண த்வயி ந ம்ருஷ்யதி வைதிக: க:" (ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத்வம்நாராயணத்வயிநம்ருஷ்யதிவைதிக:க:) இதி. எதத்ஶ்லோகத்துக்கு, "க:" என்று - க்ஷேபத்திலேயாய், தாத்பர்யம் (அநந்யபரமாணவித்யாதி) அநந்யபரமான - தேவதாந்தரபரத்வஸம்பாவநா விதுரமான. "வைதிக:" (வைதிக:) என்று விசேஷிக்கிறவர்க்கு பாவமாறு (உண்டாகிலித்யாதி) வேதாத்யயநம்பண்ணினவர்களை "அவைதிகர்" என்கிறதென்னென்ன (தஸ்யோத்பத்திரித்யாதி) விஷ்ணுபக்தியில்லாமையாலே "அவைதிகர்" என்கிறதென்றபடி. பாத்மபுராணே, "விஷ்ணுபக்திவிஹீநோ ய: ஸர்வஶாஸ்த்ரார்த்தவேத்யபி । ப்ராஹ்மண்யம் தஸ்ய ந பவேத் தஸ்யோத்பத்திர்நிரூப்யதாம்" (விஷ்ணுபக்திவிஹீநோயஸ்ஸர்வஶாஸ்த்ரார்த்தவேத்யபி । ப்ராஹ்மண்யம் தஸ்யநபவேத்தஸ்யோத்பத்திர்நிரூப்யதாம்.) உத்பத்திநிரூபணம் "ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி" (ய:புத்ர:பிதரம்த்வேஷ்டி) இத்யாதி ஶ்லோகத்திலே கண்டுகொள்வது.

அந்வய: பூர்வோக்த: ....*

ஆறாம்பாட்டு.

யவரும்யாவையுமெல்லாப்பொருளுங்
கவர்வின்றித்தன்னுள்ளொடுங்கநின்ற
பவர்கொள்ஞானவெள்ளச்சுடர்மூர்த்தி
யவரெம்மாழியம்பள்ளியாரே.

ஆறாயிரப்படி.

(யவரும்) அஸம்பாதமாகத்தன்னுள்ளே வைக்கப்பட்ட ஸர்வஜகத்தையுமுடையனாய், ஸ்வாபாவிகஸார்வஜ்ஞத்தை யுடையனாய்; *க்ஷீரார்ணவநிகேதநனான வண்டுவரைப்பெருமானே ஸர்வேஶ்வரனென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளி ஞரென்கிருர்.

யவரும் - எல்லாச்சேதநரும். யாவையும் - எல்லாவசேதநங்களு மாகிற. எல்லாப்பொருளும் - ஸமஸ்தபதார்த்தங்களும். கவர்வின்றி - சோர்வின்றி. தன்னுள் - தன்ஸ்வரூபைகதேஸத்திலே. ஒடுங்க - அடங்கும்படியாக. நின்ற - நின்ற. பவர்கொள் - பரப்பையுடைத்தான. ஞானவெள்ளம் - ஞானவெள்ளத்தை. சுடர் - தனக்குப்ரபையாகவுடைய. மூர்த்தி - ஸ்வாமிகளான. அவர் - ஸர்வாதிகரானவர். எம் - நமக்குபோக்யமாய். அம் - தர்ஸநீயமான. ஆழி - க்ஷீரார்ணவத்திலே. பள்ளியார் - கண்வளர்ந்தருளுகிருர்.

கவர்வு - சோர்வு. பவர்வு - பரப்பு. சுடர்மூர்த்தி - விக்ரஹமாகவுமாம். *

---

௩௫ - ஆறும்பாட்டு.

ஆபத்ஸகனுகையாலு மிவனே யீஸ்வரனென்கிருர்.

(யவருமித்யாதி) சேதநவர்க்கத்தையு மசேதநவர்க்கத்தையும், இப்படி யிரண்டுவகையாகச் சொன்னவற்றைக் கூட்டி, இப்படியிருக்கிற ஸகலபதார்த்தங்களும் ப்ரளயாபத்திலே தன் வயிற்றிலே சேரும்படியானபோது. (கவர்வின்றி) கவர்கையாவது - க்ரஹிக்கை. அதாவது-ஹிம்ஸையாய், ஒருவரையொருவர் நெருக்காதபடி.

(தன்னுளொடுங்க நின்ற) " தஸ்ய ஸர்வம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மநः" (ததபஸ்யமஹம்ஸர்வம் தஸ்யகுக்ஷௌமஹாத்மநः) என்னக்கடவதிறே. தன்னுள் - தன் ஸங்கல்பைகதேஸத்திலேயென்னவுமாம் (பவர்கொளித்யாதி) இவர்களை ரக்ஷிக்கைக்குறுப்பான பரம்பின ஞானவெள்ளத்தை யுடையனாய், " இப்படி ரக்ஷிக்கப்பெற்றவிடம் தன் பேறு" என்று தோற்றும்படியிருக்கிற திவ்யவிக்ரஹத்தை யுடையரான அவர். (எம்மாழியம் பள்ளியாரே) நாம் ஸம்ஸாரமத்யஸ்த்தரா யிருக்கையாலே யெல்லாரையுங்கூட்டிக்கொண்டு, எங்களுடைய ரக்ஷணார்த்தமாக வந்து ஏகார்ணவத்தை அழகிய படுக்கையாகவுடையரானர். " பாலும்பள்ளியும்பாழியும்படுக்கை." இப்படி யாபத்ஸகனாய் அணியனாகையாலு மிவனே யீஸ்வரனென்கிருர். ....*

ஜீயர் அரும்பதம்.

ஆறும்பாட்டு. (யவருமித்யாதி) " தன்னுளொடுங்கநின்ற " என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை (ஆபத்ஸகேத்யாதி)

(யவரும்யாவையுமெல்லாப்பொருளும்) சேதநருமசேதநங்களுமானவெல்லாப்பொருளுமென்று ஸப்தார்த்தம். உத்தரார்த்தத்துக்கு ப்ரமாணம் (ததபஸ்

யமித்யாதி) ஆரண்யபர்வணி தர்மபுத்ரம் ப்ரதிமார்க்கண்டேய:, "𑌯𑌚𑍍𑌚 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌯𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌮𑍍 । 𑌤𑌦𑌪𑌶𑍍𑌯𑌂" (யச்சகிஞ்சிந்மயாலோகே த்ருஷ்டம்ஸ்தாவரஜங்கமம் । ததபஶ்யம்) இத்யாதி. "தன்னுள்" என்று - ஸங்கல்பபரமானபோது, "கவர்வின்றி" என்றது - ஒன்றுந் தப்பாதபடி யென்று பொருள்; "ஒடுங்க" என்றது - மஹாஸம்ஹாரபரம்; திருவுதரபரமானபோது, அவாந்தரப்ரளயபரம்.

பவர்கொள் - பரம்புதலையுடைய. "சுடர்" என்றதிலே நோக்காகபாவம் (இப்படியித்யாதி) மூர்த்தியான - அவனென்றந்வயித்தர்த்தம். (திவ்ய விக்ரஹத்தையுடையரானவவனென்று) "எம்" என்றபஹுவசநார்த்தம் (தாம்ஸம்ஸாரோத்யாதி) ஏகார்ணவம் - ப்ரளயஜலதி. "பள்ளி" என்று படுக்கையைச் சொல்லுமோவென்ன (பாயலுமித்யாதி) "ஆழியம்பள்ளியார்" என்றத்தைப்பற்ற (அணியணைகையாலுமென்றது)

க்ரமேணாந்வய:...*

ஏழாம்பாட்டு.

பள்ளியாலிலையேழுலகுங்கொள்ளும்
வள்ளல்வல்வயிற்றுப்பெருமா
னுள்ளுளாரறிவாரவன்றன்
கள்ளமாயமனக்கருத்தே.

ஆறாயிரப்படி.

(பள்ளியாலிலை) ஸர்வலோகாவகாஶ ப்ரதத்வபரமௌதார்யத்தையுடைத்தாய், ஸர்வலோகபரண ஸமர்த்தமாயிருந்த தன் வயிற்றிலே ஸர்வலோகத்தையும்வைத்துக்கொண்டு ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற இவனுடைய ஸர்வேஶ்வரத்வ சிஹ்நபூத திவ்யசேஷ்டிதங்களுக்கொரு முடிவுண்டோவென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், வடதளஶாயித்வரூபமான அகடிதகடநா ஸாமர்த்த்யத்தாலே அவன் பரத்வம் துரவபோதமென்கிறார்.

பள்ளி - படுக்கை. ஆலிலை - ஆலிலையாக. ஏழுலகும் - எல்லாலோகத்தையும். கொள்ளும் - கொள்ளுகைக் கிடங்கொடுக்கும். வள்ளல் - ஔதார்யத்தையும். வல் - ஶக்தியையுமுடைத்தான. வயிறு - வயிற்றையுடைய. பெருமான் - ஸர்வாதிகனானவனுடைய. கள்ளம் - ஒருவர்க்குந்தோன்றாதே. மாயம் - ஆஶ்சர்யமான. மனக்கருத்து - மாநஸவ்யாபாரம் - ஜகதர்த்தமான ரக்ஷணசிந்தாவ்யாபாரம். உள்ளுள் - மாநஸவ்யாபாரத்தாலே. அறிவார் - அறியுமவர்கள். ஆர் - ஆர்.

எவர்க்குமறியவரிதென்றுகருத்து...*

ஈடு - ஏழாம்பாட்டு.

அகடிதகடநாஸாமர்த்த்யத்தாலு மிவனே யீஶ்வரனென்கிறார்.

(பள்ளியாலிலை) படுக்கை, பவனாயிருப்பதொரு ஆலந்தளிர். (ஏழுலகுங்கொள்ளும்) இப்படுக்கையிலே ஸப்தலோகங்களையும் வயிற்றிலேவைத்துக்கண்வளரும். (வள்ளல்) புக்கலோகங்களுக் கவ்வருகே "இன்னங்கொடுவா" என்னும்படி யிடமுடைத்தாயிருக்கை. (வல்வயிற்றுப்பெருமான்) உட்புக்கபதார்த்தங்களுக்கு பயப்ரஸங்கமின்றியே யொழியும்படி யிடுக்கையுடைத்தாயிருக்கை. (பெருமான்) இப்படி ரக்ஷிக்கவேண்டிற்றுடையவனாகை. அவனுடைய, உள்ளுளாயகள்ளமாய மனக்கருத்தையாரறிவார் - கண்டதொன்றைச்சொன்ன வித்தனைபோக்கி, உள்ளுள் - இன்னமுள்ளேயுள்ளேயுண்டாய், கள்ளமாய் - ஒருவர்க்குந்தெரியாதபடியாய், மாயமாய் - ஜ்ஞாதாம்ஶமாஶ்சர்யமா யிருக்கிற அவனுடைய, மனக்கருத்து - மநோவ்யாபாரத்தை, ஒருவராலறியலா யிருக்கிறதோ...*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (பள்ளியித்யாதி) "பள்ளியாலிலை" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை (அகடிதேத்யாதி) "மண்ணும்விண்ணுமெல்லாமுடனுண்ட" என்றது - இத்திருவாய்மொழியி னர்த்தஸங்க்ரஹ ரூபமாகையாலும், "யவரும்யாவையும்" இத்யாதி - ஆபத்ஸகத்வபரமாகையாலும், "பள்ளியாலிலை" இத்யாதி - அகடிதகடநாஸாமர்த்த்யபரம்; அதோநபௌநருக்த்யம்.

பவனாயிருப்பது - பவனாயிருப்பது; அப்போதுண்டாயிருப்ப தென்றபடி.

"அவாந்தரப்ரளயத்தில் வயிற்றிலேவைத்தது க்ருதகமான த்ரைலோக்யமாயிருக்க, 'ஏழுலகும்' என்றது - ரக்ஷகத்வப்பாரிப்பாலே; மஹாபலி யபஹரித்தது த்ரைலோக்யமாயிருக்க, ஸத்யலோகபர்யந்த மளந்தாற்போலே" என்றருளிச்செய்வர். "வள்ளல்" என்றது - வயிற்றுக்குவிசேஷணம். இவ்விடத்திலே - "இவ்வேழுலகமுண்டுமிடமுடைத்தால்" என்றதநுஸந்தேயம். "வல்" என்ற - வன்மைக்குபாவம் (உட்புக்கவித்யாதி)

அவனுடைய உள்ளுளாயவென்றது - கருத்துக்கு விசேஷணம். நீரறிந்து சொன்னீரோவென்ன (கண்டதொன்றையித்யாதி)

ஆலிலையைப்பள்ளியாகவுடையனாய், ஏழுலகுங்கொள்ளும் வள்ளல் வல்வயிறையுடைய பெருமானான அவன்றன்னுடைய வுள்ளுளாய - கள்ளமாய மனக்கருத்தை - ஆரறிவார் இத்யந்வயः...*

எட்டாம்பாட்டு.

கருத்திற்றேவுமெல்லாப்பொருளும்
வருத்தித்தமாயப்பிரானையன்றியாரே
திருத்தித்திண்ணிலைமூவுலகுந்தம்மு
ளிருத்திக்காக்குமியல்வினரே.

ஆறுயிரப்படி.

(கருத்தில்) ஸ்ருஷ்ட்டிரக்ஷணங்கள்பிந்நகர்த்ருகமல்லவோ, இவற்றைப்பரமபுருஷைக கர்த்ருகமாகச் சொல்லுவாருண்டோவென்னில்; பெற்றமாதாவேபுத்ரரக்ஷணம்பண்ணுகிறப்போலேஸ்ருஷ்ட்டித்தவனேரக்ஷிக்கப்ராப்தம், ஆதலால்ரக்ஷிக்கிறான் பரமபுருஷனே. ஸ்ருஷ்ட்டிரக்ஷணங்களிரண்டும் பரமபுருஷைககர்த்ருகமென்கிறார்..................*

பன்னீராயிரப்படி,

அநந்தரம், ஸர்வப்ரகாரரக்ஷக னவனேயென்கிறார்.

கருத்தில் - தன்னினைவாலே. தேவும் - தேவவர்க்கமும். எல்லாப்பொருளும் - மநுஷ்யாதிஸகலபதார்த்தங்களும். வருத்தித்த - ஸத்தைபெற்றுஅபிவ்ருத்தமாம்படியுண்டாக்கின. மாயம் - ஆஶ்சர்யஶக்த்யாதிகளையுடைய. பிரானை - ஈஶ்வரனை. அன்றி - ஒழிய. ஆரே - ஆர்தான். மூவுலகும் - ஸமஸ்தலோகத்தையும். திண் - திண்ணிதான. நிலை - நிலையையுடைத்தாம்படி. திருத்தி-அநிஷ்டநிவ்ருத்யாதிகளாலேதிருந்தச்செய்து. தம்முள் - தன்னினைவுக்குள்ளே. இருத்தி - அவற்றைப்ரதிஷ்ட்டிதமாக்கி. காக்கும்-ரக்ஷிக்கும். இயல்வினர் - ஸ்வபாவத்தையுடையார். ரக்ஷணைகஸ்வபாவ னவனென்றுகருத்து..................................*

ஈடு-எட்டாம்பாட்டு.

ஸ்ருஷ்ட்டியும் பாலநமும் ஸ்வாதீநமாகவுடையவனுகையாலே யிவனேயீஶ்வரனென்கிறார்.

(கருத்திலித்யாதி) தன்னுடையஸங்கல்பத்திலே தேவஜாதியையும் மற்றுமுண்டானஸகலபதார்த்தங்களையும், வர்த்திப்பித்த-உண்டாக்கின. ஸ்ருஷ்ட்டித்த. ஆஶ்சர்யபூதனானஸர்வேஶ்வரனையன்றி, மூன்றுலோகங்களையும் திண்ணிதானஸ்த்திதியை யுடைத்தாம்படியாகத்திருத்தி, தம்முளிருத்தி, அவ்வோபதார்த்தங்களுக் கநுரூபமான ரக்ஷணங்களையும் திருவுள்ளத்தேவைத்து, காக்கும் - "நஹிபாலநஸாமர்த்யம்" (நஹிபாலநஸாமர்த்யம்) என்கிறபடியே ரக்ஷணத்தைப்பண்ணும். (இயல்வினரே) இத்தைஇயல்வாக வுடையவர். ஸ்வபாவமாக வுடையவரார். மாயப்பிரானையன்றி - காக்குமியல்வினர் - ஆரென்றந்வயம்.....................*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (கருத்திலித்யாதி) "வருத்தித்த, காக்கும்" என்கிறபதங்களிலேநோக்காக (ஸ்ருஷ்ட்டியுமித்யாதி)

கருத்தில் - ஸங்கல்பத்தில். வருத்தித்த - வர்த்திப்பித்த.

திண்ணிதானஸ்த்திதி - ஸத்தாநுவ்ருத்தி. திருத்தி - மர்யாதைகளையுண்டாக்கி. தம்முள் - தம்முடையதிருவுள்ளத்திலே. காக்கை - அநிஷ்டநிவர்த்தநேஷ்டப்ராபணங்கள். "இயல்வினரார்" என்றத்தால் பலித்தவர்த்தத்துக்கு ப்ரமாணம் (நஹீத்யாதி)

தேவுமெல்லாப்பொருளும் - கருத்தில் - வருத்தித்தமாயப்பிரானையன்றி - மூவுலகும் திண்ணிலையாகத்திருத்தி - தம்முளிருத்திக்காக்கு மியல்வினர் - ஆர் இத்யர்வய:...*

ஒன்பதாம்பாட்டு.

காக்குமியல்வினன்கண்ணபெருமான்
சேர்க்கைசெய்துதன்னுந்தியுள்ளே
வாய்த்ததிசைமுகனிந்திரன்வானவ
ராக்கினுன்றெய்வவுலகுகளே.

ஆறாயிரப்படி.

(காக்கும்) கேவலம்ஸ்ருஷ்டிமாத்ரமேயென்று பரமபுருஷகார்த்ருகம், ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்த ஸர்வஜகத்ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்கள்மூன்றும் பரமபுருஷகர்த்ருகம்; ஆதலா லவனே ஸர்வேஶ்வரனென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இந்தரக்ஷணதசோபாதி ஜகதுத்பத்தி ஸம்ஹாரங்களும் ததீநமென்கிறார்.

காக்குமியல்வினன் - ரக்ஷணத்தைஸ்வபாவமாகவுடைய. கண்ணன் - க்ருஷ்ணனான. பெருமான் - ஸர்வேஶ்வரன். சேர்க்கைசெய்து - ஸம்ஹ்ருதிஸமயத்திலே நாமரூபவிபாகரஹிதமாய், “ தஜ்ஜலாநிதி ” (தமஜபவதி) என்கிறபடியேசேரும்படிபண்ணி. தன்னுந்தியுள்ளே - தன்றிருநாபிக்குள்ளே. வாய்த்த - ஸ்ருஷ்டிக்குவாய்த்த. திசைமுகன்-சதுர்முகன். இந்திரன் - இந்த்ரன். வானவர் - தேவர்கள். தெய்வவுலகுகள் - அவர்களுக்கு வாஸஸ்தாநமான திவ்யலோகங்கள். ஆக்கினுன் - இவற்றையுண்டாக்கினுன்.

உந்தியுள்ளேபிறந்ததிசை முகனென்றுமாம்.....................................*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்கள்மூன்றும் ஸ்வாதீநமாம்படியிருக்கையாலு மிவனேயீஶ்வரனென்கிறார்.

(காக்குமியல்வினன்) “ நஸம்பதாம்ஸமாஹாரே ” (நஸம்பதாம்ஸமாஹாரே) என்கிறபடியே பாலநகர்மத்தை ஸ்வபாவமாகவுடையவன். (கண்ணபெருமான்) ரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனுய்வந்தவதரித்த ஸர்வேஶ்வரன். (சேர்க்கைசெய்து) ஸம்ஹாரகாலம் வந்தவாறே, கார்யரூப ப்ரபஞ்சமடையத் தன்பக்கலிலேசேர்க்கையாகிற செயலைச்செய்து. (தன்னுந்தியுள்ளே) தன்னுடைய திருநாபிகமலத்திலே, தானொருகா

ல் "ஸ்ருஷ்டி" (ஸ்ருஷ்ட்டி) என்றுவிட்டால் பின்புதன்னையுங்கேட்கவேண்டாதபடி ஸ்ருஷ்ட்டிக்ஷமனான சதுர்முகன், இந்த்ரன், மற்றுமுண்டான தேவர்களோடேகூட, இவர்களுக்கிருப்பிடமான லோகங்களையும் கட்டளைப்படவுண்டாக்கினான். தன்னுந்தியுள்ளே - ஆக்கினான்.............*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (காக்குமித்யாதி) "சேர்க்கைசெய்து" என்ற - ஸம்ஹாரமொன்று மேகீழ்ப்பாட்டைப்பற்ற இப்பாட்டுக்குவிசேஷம்.

"பாலநமவனது" என்னுமதுக்குப்ரமாணம் (நஸம்பதாமித்யாதி) ஸமாஹாரோ - ஸம்பாதநே.

சேர்க்கை - ஸமாஹாரம். அத்தால் - ஸம்ஹாரஞ்சொல்லுகிறது.

"வாய்த்த" என்றதுக்குபாவம் (தானொருகாலித்யாதி) வாய்த்த - ஸமர்த்தனான. திசைமுகன் - திங்முகன். வானவர் - தேவர்களோடேகூட. தெய்வவுலகுகள் - தேவதைகளுக் கிருப்பிடமான லோகங்களை. கட்டளைப்பட - மர்யாதைபடும்படி.

காக்குமியல்வினன் இத்யாரப்ய, வானவர்களோடேகூட - தெய்வவுலகுகளை - தன்னுந்தியுள்ளே - ஆக்கினானித்யந்வயஃ...*

பத்தாம்பாட்டு.

கள்வாவெம்மையுமேழுலகுநின்
னுள்ளேதோற்றியவிறைவவென்று
வெள்ளேறன்முகனிந்திரன்வானவர்
புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே.

ஆறுயிரப்படி.

(கள்வா) இப்படி சதுர்முக பசுபதி ஶதமகப்ரப்ருதிதேவர்களுக்கு மெம்பெருமானே காரணபூதனுமா யீஶ்வரனுமாயிருக்குமென்னுமிடத்தில் ப்ரமாணமென்னென்னில்; அவர்கள் தங்களுடைய வாக்யமே ப்ரமாணமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸர்வஸ்மாத்பரனுகையாலே ஸர்வதேவதாஸமாஶ்ரயணீயனவனேயென்கிறார்.

கள்வா - அவதாரமுகத்தாலே யாதிக்யத்தை மறைக்கும் க்ருத்ரிமனே. எம்மையும் - எம்மையும். ஏழுலகும் - ஸமஸ்தலோகங்களையும். நின்னுள்ளே - உன்னுடைய ஸங்கல்பத்துக்குள்ளே. தோற்றிய - தோன்றுவித்த. இறைவ - ஸ்வாமியே. என்று - என்றுகொண்டு. வெள் - வெளுத்த. ஏறன் - ஏற்றையுடைய ருத்ர

னும். நான்முகன் - சதுர்முகனும். இந்திரன் - இந்த்ரனும். வானவர் - ஸ்வர்க்கவாசிகளும். புள்ளூர்தி - கருடவாஹநனுடைய. கழல் - திருவடிகளை. பணிந்து - ப்ரணாமம்பண்ணி. ஏத்துவர் - ஸ்துதியாநிற்பார்கள்.

இத்தால் - தர்மபர்யாய வ்ருஷபவாஹநத்வத்தாலே ருத்ரனுடைய கர்மவஶ்யதையும், வேதமயனானகருடன் வாஹநமாகையாலே யீஶ்வரனுடைய வேதாந்தவேத்யத்வமுந் தோற்றுகிறது.......................................*

௰ - பத்தாம்பாட்டு.

இவ்வளவும்வர, நான் ப்ரதிபாதித்த பரத்வத்தை நீங்களாஶ்ரயணீயராக நினைத்திருக்கிறவர்கள் மேலெழுத்தைக்கொண்டு விஶ்வஸியுங்கோளென்கிறார்.

(கள்வா) ஸர்வேஶ்வரன்பக்கலிலே வந்து வரங்கொள்ளுகிறவிடத்திலே, “ தேவரின்னமெனக்கொருவரம் தரவேணும், நீர் தந்தவரம் நிலைநிற்கும்படி யென்பக்கலிலேவந்தொருவரம்பெற்றுப்போகவேணும்” என்றர்த்திக்க, “ அப்படியேசெய்கிறோம் ” என்றுவிட்டு, “ ருக்மணிப்பிராட்டிக்கொரு பிள்ளைவேணும் ” என்றுசென்றுநின்று, “ நமோகண்டாயகர்ணாய ” (நமோகண்டாயகர்ணாய) என்றாற்போலேயேத்த, அவனும் “ உமயாஸார்த்தமீஶாநः ” (உமயாஸார்த்தமீஶாநः) என்கிறபடியேபுறப்பட்டு, “ நீகறுப்புடுத்துத்தாழ நின்றநிலையிலே யிச்செயலைச்செய்தால் இத்தைநாட்டார் ‘ மெய் ’ என்றிருப்பர்களோகள்வா ” என்பர்கள். தன்ஸ்வாதந்த்ர்யத்தைமறைத்து பாதந்த்ரனாய் நிற்கையிறே - களவாகிறது. கைலாஸயாத்ரையிலே “ நமோகண்டாயகர்ணாய நமःகடகடாயச” (நமோகண்டாயகர்ணாயநமःகடகடாயச) என்றுஸ்தோத்ரம்பண்ணினபடியைக்கேட்ட ப்ராஹ்மணன், “ இதுக்குமுன்பொருவரை ஸ்தோத்ரம்பண்ணியறியாத வாயானவாறே மீன்துடிக்கிறபடிபாராய் ” என்றான். “ நாத்தழும்பநான்முகனு மீசனுமாய் முறையாலேத்த ” என்கிறபடியே ஸ்தோத்ரம்பண்ணிநாத்தழும்புபட்டுக் கிடக்கிறதன்றே. “ இவன்தாழநின்றநிலையும் ஸ்தோத்ரம்பண்ணினநிலையும்களவு ” என்னுமிடத்தை யுபபாதிக்கிறதுமேல் (எம்மையுமித்யாதி) நீயிவற்றைமனைகிறபோது, எங்களையும்மனைந்து பின்னையன்றோதிர்யக்ஜாதிகளை யுண்டாக்கிற்று. (இறைவ) இறைவ என்னாநிற்பர்கள். இங்ஙனேசொல்லுகிறவர்கள் தாமாரென்னில் (வெள்ளேறனித்யாதி) ராஜஸேவைபண்ணுவார் தந்தாமடையாளங்களோடே சட்டையும்பிரம்புமாய் ஸேவிக்குமாபோலே, இவர்களுந்தந்தாமடையாளங்களோடே யாயிற்றுவந்துஸேவிப்பது. “ இரவியர் மணிநெடுந்தேரொடும் ” இத்யாதி.

(புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே) ஸர்வேஶ்வரன், பெரியபிராட்டியாருந் தானுமாயிருக்கிறவிருப்பில் புகப்பெருமையாலே, திருப்பாற்கடலுக் கிவ்வருகேகூப்பிட்டால், இவர்களுக்குக் காட்சிகொடுக்கைக்காகத் திருவடிதிருத்தோளிலே யேறிப்புறப்படும். ஆட்டத்துவெளியிலே யானைக்காலிலே துகையுண்ணுநிற்பர்கள்...... ....*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (கள்வாவித்யாதி) கீழெல்லாம் ப்ரதிபாதித்த வர்த்தத்தை யிதிலே த்ருடீகரிக்கிறாரென்கிறார் (இவ்வளவுமித்யாதி) மேலெழுந்தென்ற அபூர்வார்த்தத்திற் சொன்னவவர்கள் பாசுரம்.

பராவஸ்தையில் வரங்கொள்ளாதே தானதாழநின்று வரங்கொள்ளுகைகளவென்று விவக்ஷித்து இதுக்குஹேதுவேதென்ன (ஸர்வேஶ்வரனித்யாதி) "தேவரீரின்னமெனக்கொரு வரந்தரவேணும்" என்கிறவிடத்திலே - மஹாமேருத்திலேருத்ரன், தன்றலையையறுத்து ஹோமம்பண்ண வுத்யோகித்தபோது, ஸர்வேஶ்வரன்வந்து தோற்றிச் சிலவரங்கள்கொடுத்து, "இன்னமெது வேணும்" என்றவளவிலே, "[illegible]" (அந்யந்தேஹிவரந்தேவப்ரஸித்தம்ஸர்வஜந்துஷு।மர்த்யோபூத்வாபவாநேவமாமாராதயசேஶவ। மாம்வஹஸ்வசதேவேஶவரம்மத்தோக்ருஹாணச। யேநாஹம்ஸர்வபூதாநாம்பூஜ்யாத்பூஜ்யதரோபவம்) என்றநுஸந்தேயம் [[illegible]] ([illegible]) வஹித்தனுமேகமாய்; வராஹபுராணே ருத்ரகீதாயாம்பகவாந், "[illegible]" (தேவகார்யாவதாரேஷுமநுஷ்யத்வமுபேயிவாந்। த்வாமேவாராதயிஷ்யாமிஹாத்வம்வரதோபவ। ஸோஹம்வஹாமித்வாம்தேவமேகோபூத்வாஶதம்ஸமாः।ஏவமேவஹரிர்தேவஸ்ஸர்வேஶஸ்ஸர்வபாவநः। வரதோபூத்பரோமஹ்யம்தேநாஹம்தைவதைர்க்கதः.) "மேகமாய்த்தாங்கினன் திருமால்காண்சாழலே" என்றிறேயவர்கள் சொல்லுவது. கறுப்புடுக்கை - பரத்வத்தைமறைக்கை. இச்செயலைச்செய்தால் - ஸ்தோத்ரம்பண்ணுகை வரங்கொள்ளுகை முதலானசெயலைச்செய்தால். மெய்யென்றிருப்பர்களோவென்றது - "வரங்கொடுத்தனுக் காகச்செய்தான்" என்றிறே யிருப்பர்களென்றபடி. (கள்வாவென்பர்கள்) ருத்ராதிகளென்று கூட்டுவது. தாழநிற்கைகளவோவென்ன (தன்ஸ்வாதந்த்ர்யத்தையித்யாதி) ப்ராஸங்கிகம் (கைலாஸேத்யாதி) கேட்டப்ராஹ்மணன் - புராணஶ்ரவணவேளையாம் கேட்டப்ராஹ்மணன். (மீன்துடிக்கிறபடி) மீன்துடிக்கிறப்போலே நாக்குத்துடிக்கிறபடி. (நமோகண்டாயேதி) ஸ்ரீஹரிவம்ஶே கைலாஸயாத்ராயாம்.தத்ரைவ, "[illegible]

ஷ்ணுமுத்திஶ்ய ஶங்கர: । உமயா ஸார்த்தமீஶானோ மாஹாத்ம்யம் வக்துமைஹத" (அஞ்ஜலிம்ஸம்புடம்க்ருத்வாவிஷ்ணுமுத்திஶ்யஶங்கர: | உமயாஸார்த்தமீஶாநோ மாஹாத்ம்யம்வக்துமைஹத.) அப்படிஸ்தோத்ரம்பண்ணினபடியாலேயென்ன (நாத்தழும்பவித்யாதி) திருமொழி. நாக்கானது தழும்பேறும்படியாக சதுர்முகனும், ருத்ரனும், முறையாலே - ஶேஷித்வப்ராப்தியாலே ஸ்தோத்ரம்பண்ணுகையென்கை. தழும்புபட்டு - தகனேறி.

"எம்மையும் ஏழுலகும்" என்றக்ரமத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (நீயிவற்றையித்யாதி) மனைகை - ஸ்ருஷ்டிக்கை. நின்னுள்ளே - உன்ஸங்கல்பத்திலே. இறைவ - ஸ்வாமீ.

ஸ்வாமிஸந்நிதியிலே வாஹநங்கொண்டு வரலாமோவென்ன (ராஜஸேவையித்யாதி) அவன்கொடுத்த வரிசையோடேவந்தால் விரோதமில்லையென்றபடி. உக்தத்துக்கு ப்ரமாணம் (இரவியரித்யாதி) திருப்பள்ளியெழுச்சி. த்வாதஶாதித்யர்கள், விலக்ஷணமான பெரியதேரோடேவந்தார்களென்கை.

"புள்ளூர் திகழல் பணிந்தேத்துவர்" என்றுவிஶேஷிப்பானென்னென்ன (ஸர்வேஶ்வரனித்யாதி) ஆட்டத்துவெளி - வையாளிவெளி. ராஜாக்களுடைய வையாளி வெளியிலே யானைக்காலிலே ஸாமந்தராஜாக்கள் நிரயமாநராய்த் துகையுண்பர்களிறே; அப்படியேயிங்கும் நிரயமாநராய் ஸ்தோத்ரம்பண்ணுநிற்பர்களென்றபடி.

வெள்ளேறனித்யாதய, கழல்பணிந்து - கள்வாவெம்மையு மித்யாதய தோற்றியவிறைவவென்று - ஏத்துவரித்யந்வய:......................................*

பதினொன்றாம்பாட்டு.

ஏத்தவேழுலகுங்கொண்டகோலக்
கூத்தனைக்குருகூர்ச்சடகோபன்சொல்
வாய்த்தவாயிரத்துள்ளிவைபத்துட
னேத்தவல்லவர்க்கில்லையோரூனமே.

ஆருயிரப்படி.

(ஏத்தவேழுலகும்) ஸர்வலோகங்களுந் தன்னுடைய விஜயத்தைச் சொல்லிக்கொண்டு நின்றேத்த ஏழுலகுங் கொண்டருளின இது தொடக்கமாகவுள்ளதிவ்யசேஷ்டிதங்களாலே யெம்பெருமானுடையஸர்வேஶ்வரத்வத்தை ப்ரதிபாதிக்கிற இந்தத்திருவாய்மொழியை யிந்தபாவனையோடேகூட ஏத்தவல்லார்க் கினி யொருநாளு மெம்பெருமானோடு விஶ்லேஷ மில்லையென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக ஸர்வப்ரகார வைகல்யராஹித்யத்தை யருளிச்செய்கிறார்.

ஏத்த - லௌகிகரேத்துகிற விதுவேலினோராக. ஏழுலகும் - ஸமஸ்த லோகத்தையும். கொண்ட - அளந்துகொண்ட. கோலம் - வடிவழகையும். கூத்தனை - வல்லாராடினாற்போலே அளந்தநாயாஸத்தையு முடையவனை. குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார். சொல் - அருளிச்செய்த. வாய்த்த - லோகத்துக்கலப்யலாபமான. ஆயிரத்துள் - ஆயிரத்துள். இவைபத்து - இவைபத்தையும். உடன் - அர்த்தத்தோடே யுடன்பட்டு. ஏத்த - ஸ்துதிருபமாகச்சொல்ல. வல்லவர்க்கு - வல்லவர்க்கு. ஒரூனம் - தேவதாந்தரங்களினுடைய வுத்கர்ஷபுத்தியும், அவர்களோடுண்டான ஸாம்யபுத்தியும், அவர்களில் நிகர்ஷபுத்தியுமாகிற குறைவுகளொன்றும். இல்லை - இல்லை.

ஊனம் - குறைவு. சொல்வாய்த்தவென்று - அர்த்தப்ரதிபாதநஸாமர்த்யமாகவுமாம். ஏழுலகென்று - கீழும்மேலுங்கூட்டுகிறது. இது கலிவிருத்தம்......*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்களுக்கு, தேவதாந்தரங்கள்பக்க லீஸ்வரத்வபுத்தி பண்ணுகையாகிற ஊனமில்லையென்கிறார்.

(ஏத்தவேழுலகுங்கொண்ட) "ஹஸே ஜய ஸுவ—ராணாம்" (ஸங்கைஸ்ஸஹராணாம்) என்கிறபடியே ஏத்த, அந்த ஹர்ஷத்தாலே ஸகல லோகங்களையும் திருவடிகளின் கீழே யிட்டுக்கொண்ட. (கோலக்கூத்தனை) திருவுலகளந்தருளினபோது வல்லாராடினாற்போலேயாயிற்றிருப்பது. அப்போதைவடிவழகையநுபவிக்குமநொழிய, இந்த்ரனைப்போலே ராஜ்யஸ்ரத்தை யில்லையேயிவர்க்கு. (குருகூர்ச்சடகோபன்சொல்) ஆப்திக்கு "இன்னார்சொல்லிற்று" என்னக்கடவதிறே. (சடகோபன்) வேதாந்தத்திற்காட்டில் ஆழ்வார்பக்கலிலே பிறந்த ஆபிஜாத்யம் (வாய்த்தவாயிரம்) இத்தனைபோதிவர் ப்ரதிபாதித்த பரவஸ்து நேர் பட்டாற்போலேயாயிற்று இப்ப்ரபந்தமும் நேர்பட்டபடி. வாச்யத்திற்காட்டில் வாசகம் நேர்பட்டபடியென்றுமாம். அதாவது - விஷயத்தை யுள்ளபடி பேசவற்றாயிருக்கை.

(இவை பத்துடனேத்த வல்லவர்க்கு) இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாக ஏத்தவல்லவர்களுக்கு. (இல்லையோரூனமே) இவ்வாத்மாவுக்கூனமாவது - அபரதேவதைகள்பக்கலிலே பரத்வப்ரதிபத்திபண்ணுகையும், பரதேவதைபக்கல் பரத்வப்ரதிபத்தி பண்ணாமையும். இப்படி வரக்கடவதானவூனம் இதுகற்றார்க்கில்லை.

முதற்பாட்டில் - மேல்பரக்கவருளிச்செய்கிற இத்திருவாய்மொழியிலர்த்தத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்தார். இரண்டாம்பாட்டுமுதல் - துஃகநிவர்த்தகனாகையாலும், ஶீலவானாகையாலும், ஸுகுமாரனாகையாலும், புண்டரீகாக்ஷனாகையாலும், ஆபத்ஸகனாகையாலும், அகடி

தகடநாஸமர்த்தனுகையாலும், ஸ்ருஷ்டிஸ்த்திதிகளைப்பண்ணுகையாலும், ஸம்ஹாரமாகிற செயலைச்செய்கையாலும், ஈஸ்வராபிமாநிகளாயிருக்கி றவர்களுடைய ஸ்தோத்ராதிகளாலும், இப்படி பஹுப்ரகாரங்களாலே அவனுடையபரத்வத்தை யருளிச்செய்து, இதுகற்றார்க்குப்பலஞ்சொல் லித் தலைக்கட்டினார். ....*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (ஏத்தவித்யாதி) "ஏத்தவல்லவர்க்கோருனயில்லை" என்றத்தை ப்பற்றவவதாரிகை.

ஏத்த - தேவாதிகள்ஸ்துதிக்க. (ஸங்கைரிதி) ஸ்ரீவிஷ்ணுதர்மே மங்கள்ய ஸ்தவே, "[illegible] | [illegible] [illegible]." (ஸங்கைஸ்ஸுராஸுர் ... ஸ்துதாமனுஷ்ய ... ஸமஸ்தமங்கள்யவி வ்ருத்தயேஹரி:.) "கூத்தன்" என்கிறதென்னென்ன (திருவுலகித்யாதி) "கோ லம்" என்றதுக்ருபாவம் (அப்போதைபித்யாதி)

ஸ்வப்ரஸம்ஸைபண்ணலாமோவென்ன (ஆப்திக்கித்யாதி) தாத்பர்யாந் தரம் (வேதாந்தத்திலித்யாதி) அபிப்ராயம் - திருவாய்மொழிக்கென்றபடி.

வாச்யஸாம்யபரத்வேந, வாச்யநாதிக்யபரத்வேநச பாவத்வயமாஹ (இ த்தனைபோதித்யாதிவாக்யத்வயேந) (அதாவதித்யாதி) விஷயமானவவன் தன் னையுள்ளபடி ப்ரகாஸிப்பியாமல் மறைத்துக்கொண்டிருப்பது; அவனுடைய ஸ்வபாவத்தையெல்லாம் ஸ்பஷ்டமாக ப்ரகாஸிப்பிக்கிறதிப்ப்ரபந்தமிறே.

உடன் - மநஸ்ஸோடே. "ஓர்" என்கையாலே - ஊனத்திறுடையவைவி த்யத்தை யருளிச்செய்கிறார் (இவ்வாத்மாவுக்கித்யாதி) ஊனம் - குறை.

(இரண்டாம்பாட்டுமுதல்) இரண்டாம்பாட்டுத்தொடங்கி.

க்ரமேணுந்வய: ....*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(திண்ணன்வீடு)

ஸம்பூர்ணைஸ்வர்யாவதாரம் பவதுரிதஹரம் [illegible]
[illegible]
[illegible]
[illegible] || (௧௬)

(பூர்ணைஸ்வர்யாவதாரம்) திண்ணன்வீடித்யாதி, நங்கண்ணன்கண்ண லதில்லையோர்கண்ணே - பூர்ணமானைஸ்வர்யத்தோடே க்ருஷ்ணனாய்வந் தவ தரித்தும்; (பவதுரிதஹரம்) மாபாவம்விடவரற்குப் பிச்சைபெய் - ஹரனுடை

யதுரிதத்தைத்தீர்த்தும் ; (வாமநத்வேமஹாந்தம்) மேறன்னைமீதிட நிமிர்ந்து மண்கொண்ட - வாமநனான தான் த்ரிவிக்ரமனாய்வளர்ந்து பூமிப்பரப்பையெல்லாம் திருவடிகளின்கீழேயிட்டுக்கொண்டும் ; (நாபீபத்மோத்தவிஶ்வம்) தேவுமெப்பொருளும்படைக்கப் பூவில்நான்முகனைப்படைத்த - தேவாதிபதார்த்தங்களையுண்டாக்குகைக்காகத் திருநாபிகமலத்திலே திசைமுகனை ஸ்ருஷ்டித்தும் ; (ததநுகுணாக்ஷம்) தருங்கோலத்தாமரைக்கண்ணன் - அதுக்குத்தகுதியாய்த் தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்மலரையுடையனாயும் ; (கல்பதல்பீக்ருதாப்திம்) எம்மாழியம்பள்ளியாரோ- ப்ரளயகாலத்திலே பயோநிதியைப்படுக்கையாகக்கொண்டும் ; (ஸாப்தம்க்யக்ரோதபத்ரே) பள்ளியாலிலையேழுலகுங்கொள்ளும் வள்ளல் - அப்போது அகடிதகடநாஸாமர்த்த்யத்தாலே ஸப்தலோகங்களையும்திருவயிற்றிலேவைத்துக்கொண்டு ஆலிலைமேலேகண்வளர்ந்தும் ; (ஜகதவநதியம்) மூவுலகுந்தம்முளிருத்திக்காக்கும் - த்ரிலோகிரக்ஷணத்தை யெப்போதும் சிந்தித்தும்; (ரக்ஷணாயாவதீர்ணம்) காக்குமியல்வினன் கண்ணபெருமான் - ததர்த்தமாகக்ருஷ்ணனாய்வந்தவதரித்தும் ; (ருத்ராதிஸ்துத்யலிலம்) வெள்ளேறன் நான்முகனியாதி - ப்ரஹ்மருத்ராதிகளாலே ஸ்துதிக்கப்படுமவையான சேஷ்டிதங்களையுடையனுமாயிருக்கிறவெம்பெருமானை, "மநுஷ்யஸஜாதீயனா யவதரித்திருக்கச்செய்தேயும் பரத்வந்தோற்றவிருக்கும்" என்று "திண்ணன்வீடு" என்கிற தஶகத்திலே ஆழ்வார் தெளிவித்தருளினாரென்கிறார்..

திருவாய்மொழிநூற்றந்தாதி.

திண்ணிதாமாறன்திருமால்பரத்துவத்தை
நண்ணியவதாரத்தேநன்குரைத்த - வண்ணமறிந்
தற்றார்கள்யாவரவரடிக்கேயாங்கவர்பா
லுற்றாமேலிடாதூன். (கஉ)

(திண்ணிதாமாறன்) ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான் பரத்வத்தை யவதாரத்திலே யநுஸந்தித்துப் பரோபதேசம் பண்ணுகிறபாசுரத்தை யநுவதித் தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில் ; பிரிந்தாரைக் கண்ணாய்க்குழலை யிடப்பண்ணுமளவன்றிக்கே, கூடினாலும் பிரிவைமறக்கும்படி பண்ணவற்றான விஷயவைலக்ஷண்யம், அதுக்கீடான குணவைலக்ஷண்யம், அதுக்கடியான ஸர்வேஶ்வரத்வம், இவற்றை யநுஸந்தித்து, இப்படிப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தை இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே பிறரைக்குறித்துபதேசித்துச்செல்லுகிற * திண்ணன்வீட்டி லர்த்தத்தை "திண்ணிதாமாறன்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(திண்ணிதாமாறன்) கீழே " மூயாமுதல்வா வினியெம்மைச்சோரேலே" என்றவநந்தரம், " சோராதவெப்பொருட்கு மாதியாஞ்சோதி " என்கிறகாரணத்வத்தால் வந்தபரத்வத்தைக்காட்டி ஸமாதாநம்பண்ண, அத்தாலேதார்ட்யத்தையுடைய ஆழ்வாரென்னுதல் ; எல்லார்க்கும் ஸாத்ருடமாம்படி பரத்வத்தையருளிச்செய்த ஆழ்வாரென்னுதல். (திருமால்பரத்துவத்தை) ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்

வரனுடையபரத்வத்தை. "நீயுந்திருமாலால்" என்றிறேயருளிச்செய்தது. (நண்ணியவதாரத்தேநன்குரைத்த) திருமால்பரத்துவத்தை அவதாரத்தே நண்ணி நன்குரைத்த. முதற்றிருவாய்மொழியிலே ஶ்ருதிச்சாயையாலே பரத்வேபரத்வத்தை யருளிச்செய்தாற்போலன்றிக்கே, இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே அதிஸுலபமான அவதாரத்திலே பரத்வத்தையாஶ்ரயணீயமாம்படி நன்றாகவருளிச்செய்த. அன்றிக்கே திருமால்பரத்துவத்தைத்தாம் நண்ணிஅவதாரத்திலே நன்குரைத்தவென்றாகவுமாம். நன்குரைத்த வண்ணமறிகையாவது - இப்படி அவதாரே பரத்வத்தை ஸுஸ்பஷ்டமாம்படி "கண்ணனன்கண்ணல்லதில்லையோர்கண்" என்றும், "கோபாலகோளரியேறன்றி - ஏழுலகும்பாவஞ்செய்தருளாலளிப்பாரார்" என்றுமருளிச்செய்த ப்ரகாரத்தையறிகை. மற்றும்தச்சேஷமாக "தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும்பூசனையுந்தகுமே" என்றும், "தருங்கோலத்தாமரைக்கண்ணனெம்மான் மிருஞ்சோதிமேலறிவார்யவரே" என்றும், "கள்வா" என்றுதொடங்கி, "புள்ளூர்திகழல்பணிந்தேத்துவர்" என்றுமருளிச்செய்தவையுமுண்டிறே. இப்படியருளிச்செய்யுமிடத்து, "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:" (க்ருஷ்ணஏவஹிலோகாநாமுத்பத்திரபிசாப்யய:) என்றும், "ஸஷுஷப்ருஜுதீர்க்காக்ஷஸ் ஸம்பந்நோ ஜநார்த்தந:" (ஸஷுஷப்ருஜுதீர்க்காக்ஷஸ் ஸம்பந்நேஜநார்த்தந:) என்றும், "அர்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ் ஸர்வே ஸம்மந்ய மஹர்ஷய:" (அர்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ்ஸர்வேஸம்மந்யமஹர்ஷய:) என்றும், "பாதேந கமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேந ச" (பாதேநகமலாபேநப்ரஹ்மருத்ரார்ச்சிதேந ச) என்றுஞ்சொல்லுகிற ப்ரமாணங்களைப்பின்சென்றிறே யருளிச்செய்தது; "ராம: கமலபத்ராக்ஷஸ் ஸர்வஸத்வமநோஹர:" (ராம:கமலபத்ராக்ஷஸ்ஸர்வஸத்த்வமநோஹர:) "பவாந் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந" (பவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவரகுநந்தந) இத்யாதிப்ரமாணங்களைப்பற்ற "தருங்கோலத்தாமரைக்கண்ணனெம்மான்" என்றும், "பாவஞ்செய்தருளாலளிப்பாரார்" என்றுமருளிச்செய்தாரிறே. இப்படிபரோபதேச ப்ரகாரத்தையறிந்து பரத்வஸ்த்தாபகரான் ஆழ்வாரிடத்திலே (அற்றார்கள்யாவர்) அற்றுத்தீர்ந்து அநந்யார்ஹராயிருப்பார் யாவர்சிலர். (அவரடிக்கேயாங்கவர் பாலுற்றுரைமேலிடாதூன்) அவர்கள்திருவடிகளுக்கே அநந்யார்ஹராய், அவ்விடத்திலே அப்படியே அவர்கள்விஷயத்திலே அந்தரங்கராய்க் கிட்டினவர்களை மாம்ஸாஸ்ருகாதிமலரூபமான தேஹமபிபவியாது. இத்தால் - தேஹஸம்பந்தம் மேலிடாதென்றபடி...*

இரண்டாம்பத்தில் இரண்டாம்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - கஉ — பாட்டு - கஙஉ.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

மூன்றாந் திருவாய்மொழி.

ஊனில்வாழ் - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(ஊனில்வாழுயிரே) இப்படி ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக வந்து தோற்றியருளினவன் தம்மோடே கலந்தருளினபடியைச் சொல்லுகிறார்.

பன்னீராயிரப்படி.

மூன்றாந்திருவாய்மொழியில், இப்படி யுத்துங்கலலிதனான இவனுடைய ஸர்வவித ஸாரஸ்யாதிசய ப்ரயுக்தமான திவ்யபோக்யதையை யருளிச்செய்வதாக; அவனுடைய ஸர்வரஸாத்மகத்வத்தையும், ஸாரஸ்யயுக்தனான அவன் விஷயத்தில் தம்முடைய வுபகாரஸ்ம்ருதியையும், ஸ்வவிஷயத்தில் தம்மை யவனபிநிவேசிப்பித்தபடியையும், அவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகார மில்லாதபடியையும், தன்னுடைய அப்ராக்ருதபோக்யதையையும் ப்ரகாசிப்பித்துச் சேர்த்துக்கொண்டபடியையும், இந்த ஸம்ஶ்லேஷம ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே அநாதிஸித்தமானபடியையும், போக்யதாதிசயத்தாலே வ்யதிரேகத்தில் தரிக்கவருமையையும், அவ்வநுபவம் தமக்குக் கைப்புகுந்தமையையும், ஸர்வப்ரகாராநுபவத்தால் பிறந்த ஆநந்தவிசேஷத்தையும், இப்படியநுபவித்து ஆநந்திகளான ஸூரிகளோடு தாங்கூடியநுபவிக்கையிலுண்டான ஆசையையுமருளிச்செய்து, கீழ்ச்சொன்ன ஸர்வப்ரகாரஸாரஸ்யம் ஸூரிபோக்யமென்னுமிடத்தையு முபபாதித் தருளுகிறார்.........*

ஈடு.

வாயுந்திரையுகளி லார்த்திநீரவந்து ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லேஷத்தைச்சொல்லுகிற இத்திருவாய்மொழியில்; நடுவு ப்ராஸங்கிகமாகப்ரஸ்துதமானவித்தனை யீஶ்வரத்வம். தாம்பெற்றபேற்றின் கனத்தைப்பார்த்தார்; அதுதாமடியாக வந்ததாகிலிறே யளவுபட்டிருப்பது, ஸர்வேஶ்வரனடியாகவந்ததாகையாலே கனத்திருக்குமிறே. தாமநுபவித்தவநுபவத்துக்குள்ளே யெல்லாரஸங்களுமுண்டாய், அதுதான் ஸமாப்யதிக வர்ஜிதமுமாயிருந்தது; " இப்படிப்பட்டபேற்றுக்கு உசாத்துணையாவாரா

த்விதீயாவதாரிகைக்குச்சேர வருளிச்செய்கிறார் (ஸேஷபூதஞானவித்யாதி) ப்ரதமாவதாரிகைக்குச்சேர ; அறியாதன வறிவித்தபின்பு என்று விஸேஷிக்கவேணுமோ, * பொய்ந்நின்றஞானத்திலே விஸேஷகடாக்ஷம்பண்ணினபோதே கிட்டிற்றில்லேனோவென்று த்விதீயார்த்தங்கண்டுகொள்வது. கீழ்ப்பாட்டில் "இனி" என்றதின் மூன்றுமர்த்தத்துக்குச்சேர மூன்றுமர்த்தம் (அநாதிகாலமித்யாதி) இத்தைத்ருஷ்டாந்தபூர்வகமாக விவரிக்கிறார் (வாயுந்திரையித்யாதி) முழுச்சொல்லென்று காட்டுகிறார் (பழையதாகவென்றபடியென்று) ஆக "இனி" என்றதுக்கு - அறியாதனவறிவித்தபோதே பெற்றேனேயன்றோவென்றும், * பொய்ந்நின்றஞானத்தில் விஸேஷகடாக்ஷம்பண்ணினபோதே பெற்றேனன்றோவென்றும், * வாயுந்திரையுகளிலார்த்திதிர ஸம்ஸ்லேஷித்தபோதே யுனபாதஞ்சேர்ந்தேனேயன்றோவென்று மிப்படி மூன்றர்த்தமானபோது, "முதன்முன்னமே" என்றதுக்கும் மூன்றர்த்தம். அதாவது - "இனி" என்று - * பொய்ந்நின்றஞானத்திலே விஸேஷகடாக்ஷம்பண்ணினபோதே பெற்றேனென்று விஸேஷிக்கவேணுமோ, அநாதிகாலமே பிடித்துப்பெற்றேனே யன்றோவென்னுதல் ; இனியென்று - அறியாதனவறிவித்தபோதே பெற்றேனேயன்றோவென்று விஸேஷிக்கவேணுமோ, * பொய்ந்நின்றஞானத்தில் விஸேஷகடாக்ஷம்பண்ணினபோதே பெற்றேனென்னுதல் ; இனியென்று - * வாயுந்திரையுகளிலார்த்திதிரக்கலந்தபோதே பெற்றேனென்று வி

கும் சுத்தியோகத்தையுடையவனே யென்றுமாம். (கன்னலே) எனக்கு நிரதிசயபோக்யனானவனே. (அமுதே) என்னைச்சாவாமல் ஜீவிப்பித்துக்கொண்டு போருகிறவனே. (கார்முகிலே) ஔதார்யத்தைப்பற்ற. (என்கண்ணா) தன்னைக்கொடுத்தபடி. இவ்வளவு மிவருடையஸங்காரேறது. (நின்னலாலிலேன்காண்) உன்னையொழிய அனைக்ஷணம் ஜீவிக்கமாட்டேன். உன்னையொழிய ரக்ஷகனையுடையேனல்லேனென்றுமாம். (என்னைநீகுறிக்கொள்ளே) என்னைப்பார்த்தருளவேணுமென்னுதல், என்னைத்திருவுள்ளம்பற்றவேணுமென்னுதல். (என்னை) உன்னையொழிந்தவன்று அபிப்ராயனானவென்னை. (நீ) இதுக்குதாரகனானநீயென்றுமாம். ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (முன்னலித்யாதி) பேற்றின்கனத்தையுமென்றது-கீழிற்பாட்டுக்களெல்லாவற்றையுங்கடாக்ஷித்து. போக்யதையுமென்றது-இப்பாட்டில் பதங்களைக்கடாக்ஷித்தாதல், “ கிட்டின்பமே-கடற்படாவமுதே ” என்றத்தைப்பற்றவாதல். கண்டோமுக்கு-கண்டநமக்கு. நொங்காதுபோலே - நில்லாதுபோலே. உளோனுகேன்-ஸத்தாவானுகேன்.

(ஒற்றைப்போக்கு) ஒற்று - ஸம்யுக்தாக்ஷரம். முனலாக்கி முரலாக்கியென்றது - “ சுராலாம் ” என்கிறலக்ஷணத்திருலே ரேபணகாரங்களுக்கு பேதமில்லாமையைப்பற்ற. முனலுகை - முரலுகை. அசாவது-ஸப்திக்கை. முந்தினவர்த்தத்துக்கு, ஸப்தியாநின்றுள்ள யாழ்விஷயமாக வ்யவஸிக்கப்படாநின்றுள்ள ஸாஸ்த்ரோக்த க்ரமத்திலே நரம்பிலேதடவப்பட்ட-அதிலேபிறந்த பண்பட்டரஸம்போலேயிருக்கிறவனேயென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு “ முன்னல் ” என்றது நூலுக்குவிசேஷணம். ஸாஸ்த்ரத்தினுடைய - காந்தர்வஸாஸ்த்ரத்தினுடைய. “ நரம்பிலேதடவப்பட்ட ” என்றதுக்குவிவரணம் (அதிலேபிறந்தவென்று) நரம்பிலே தடவுகையாலே பிறந்தவென்றபடி. பட்ட-பிறந்த. பண்பட்டவென்றது - “முதிர்” என்றதினர்த்தம். யாழ்-வீணை. மிடற்றிலுண்டானகானத்தைச்சொல்லாதொழிவானென்னென்ன (மிடற்றையித்யாதி) போதுசெய்யுமது - ஶ்லேஷ்மாதிகளாலே விகாரிக்குமது.

(பன்னலாரித்யாதி) பலராய் தேஶிகரான நித்யஸூரிகளுக்கு மனவிறந்தவனென்று விவக்ஷித்து அதுக்குப்ரமாணம் (தெள்ளியாரித்யாதி) நாய்ச்சியார் திருமொழி. தெளிவுடையார் பலர்கைதொழும்படியிருக்கிற தேவரானவனென்கை. நன்மைக்கர்த்தம் (தேஶிகராயிருந்துள்ளவென்றது) “ பயிலும் ” என்றவர்த்தமானார்த்தம் (ஸதாநுபவமித்யாதி) பவித்ரம்-ஸ்வஸம்ஸர்க்தமாய், சுத்த்யாபாதகமுமாயிருக்குமது. அதில், சுத்த்யாபாதகத்வத்தை யருளிச்செய்கிறார் (நித்யஸம்ஸாரிகளுக்குமித்யாதி) தொலையாத-பரிச்சிந்நமாகாத. சுத்தியோகத்தை யருளிச்செய்கிறார் (அவர்களுக்கித்யாதி)

கன்னல் - வெல்லம். என்னைச்சாவாமலித்யாதியாவது - *வாயுந்திரையுகளிலே விஶ்லேஷித்து முடியாதபடி ஜீவிப்பித்தவனேயென்றபடி. நிறத்தைப்பற்றவுஞ்சொல்லலாமாகையாலே யத்தை நிவர்த்திப்பிக்கிறார்.

(ஔதார்யத்தைப்பற்றவென்று) ஔதார்யசரமாவதி (தன்னைக்கொடுத்தபடியென்று)

குறிக்கொள்ளுகையாவது-மெய்க்காட்டுக்கொள்ளுகையாய், பார்க்கையைச்சொல்லுகிறது. "குறிக்கொள்" என்றதினார்த்தத்வயத்துக்கும் சேரவர்த்தத்வயம் (உன்னையித்யாதி) இதுக்கு - இவ்வாத்மவஸ்துவுக்கு. "இதுக்குதாரகனுனதென்றுமாம்" என்றிருக்கையாலே - "நின்னலாலிலேன்" என்றதினார்த்தத்வயாநுகுணமாக "என்னை, நீ" என்றவிடத்திலு மர்த்தத்வயபரமானவாக்யங்கள் சிலஸ்ரீகோஶங்களிலேயில்லாதபோது, "ரக்ஷகனுனரக்ஷ்யமானவென்னை", என்று மோரர்த்தமத்யாஹரித்துக்கொள்வது.

"முன்னல்யாழ்" இத்யாதிக்கு (அன்றிக்கே, முன்னலென்றது-உன்னலாய், உன்னல்-நினைக்கலாய், இனிமையாலே "அதுவது" என்றுவாய்புலற்றும்படியிருக்கை) என்றுமோரர்த்தம் சிலஸ்ரீகோஶங்களிலே யிருக்கிறது ; இத்தவாக்யத்திலே, நினைக்கலாயென்றது - தத்கார்யமானவாய்புலற்றலைக்குறிக்கிறது. இனிமையாலே வாய்புலற்றும்படியிருக்குமென்று யாழுக்கு விஶேஷணமாதல், நாவுக்குவிஶேஷணமாதல்.

க்ரமேணுத்வயா...*

எட்டாம்பாட்டு.

குறிக்கொள்ஞானங்களா லெனையூழிசெய் தவமும்
கிறிக்கொண்டிப் பிறப்பே சிலநாளிலெய்தினன் யான்
உறிக்கொண்ட வெண்ணெய் பாலொளித்துண்ணு மம்மான் பின்
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித்துயர் கடிந்தே.

ஆறாயிரப்படி.

(குறிக்கொள்) தாமிப்படி யெம்பெருமானை யபேக்ஷிக்க, அவனும், "நாம்விஶ்லேஷிக்க ப்ரஸங்கமென்" என்றருளிச்செய்ய, தாமும் நிவ்ருத்தாஶங்கராய்க்கொண்டு ; அதிதுஷ்கரமாய் அநேககாலஸாத்யமான கர்மயோகஜ்ஞாநயோகஸஹக்ருதபக்தியோகஸாத்யமான ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகபகவதநுபவத்தை யிஜ்ஜந்மத்திலே யல்பகாலத்திலே அயத்நேந நான்பெற்றேனென்று தாம்பெற்ற ஸம்ருத்தியைச்சொல்லி யநுபவிக்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம் இவ்வநுபவம் தமக்குக்கைவந்தபடியை யருளிச்செய்கிறார்.

உறி - உறியிலே. கொண்ட - சேமித்துவைத்துக்கொண்ட. வெண்ணெய் - வெண்ணெயையும். பால் - பாலையும். ஒளித்து - உடையவர்களறியாமல்க்ருத்ரிமத்தாலேபுக்கு. உண்ணும் - அமுதுசெய்தசெயலாலே. அம்மான் - அடிமைகொண்டஸ்வாமியான க்ருஷ்ணனுடைய. பின் - பின்னே. அவ்வபதாநத்துக்குத்தோற்று

நெறி - அவன்போனவழியே. கொண்ட - போய்த்திரிகிற. நெஞ்சனாய் - நெஞ்சை யுடையேனாய். பிறவித்துயர் - ஜந்மப்ரயுக்ததுரிதங்களை. கடிந்து-காற்கடைக்கொண்டநாதரித்து. குறிக்கொள் - கர்த்ருத்வாதித்யாகத்தாலும்யமநியமாதிகளாலும் குறிக்கொள்ளப்படுவதான. ஞானங்களால் - வேதாந்த்யாநோபாஸநரூபபர்வபேதங்களாலும், ஸத்வித்யாதஹரவித்யாதி வ்யக்திபேதங்களாலும் பலவகைப்பட்ட ஜ்ஞாநயோகங்களாலே “ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு” (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு) “பஹூநாம்ஜந்மநாமந்தே” (பஹூநாம்ஜந்மநாமந்தே) என்கிறபடியே. எனையூழி - அநேககாலங்களிலே. செய் - செய்யப்பட்ட. தவமும் - பக்தியோகமாகிறதபஸ்ஸினுடைய பலத்தை. கிறிக்கொண்டு - பகவத்க்ருபையாகிற நல்விரகைக்கொண்டு. இப்பிறப்பே - இஜ்ஜந்மத்திலே. சிலநாளில் - அல்பகாலத்திலே. யான் - அநுபவத்துக்கடைவில்லாதநான். எய்தினன் - கிட்டப்பெற்றேன்.

கிறி - விரகு..*

ஈடு - எட்டாம்பாட்டு.

“என்னைநீகுறிக்கொள்ளே” என்றவாறே அவன்குளிரக்கடாக்ஷித்தான், அத்தாலே ஸகலவ்யஸநங்களும்போய் அவனையநுபவிக்கிறார்.

(குறிக்கொள்ஞானங்களால்) யமநியமாத்யவஹிதராய்க்கொண்டு ஸம்பாதிக்கவேண்டும் ஜ்ஞாநவிசேஷங்களாலே. அவையாவன - வேதாந்த்யாநோபாஸநாத்யவஸ்தாவிசேஷங்கள். (எனையூழிசெய்தவமும்) அநேககல்பங்கள்கூடி ஶ்ரவணமாய் மநநமாய்த்ருவாநுஸ்ம்ருதியாய், இங்ஙனே வரக்கடவதான தபஃபலத்தை. (கிறிக்கொண்டு) ஒருயத்நமின்றிக்கேயிருப்பதொரு விரகைப்பெற்று. அதாவது - அவன்றன்னையேகொண்டென்றபடி. கிறிஎன்ன - அவனைக்காட்டுமோவென்னில்; “பெருங்கிறியார்” என்னக்கடவதிறே. இதுதானெத்தனை ஜந்மங்கூடியென்னில் (இப்பிறப்பே) இஜ்ஜந்மத்திலே. இஜ்ஜந்மமெல்லாங்கூடியோவென்னில் (சிலநாளில்) அல்பகாலத்திலே. அழகிது, ப்ராபிக்கக்கடவீராய் நின்றீரோவென்ன (எய்தினன்) ப்ராபித்தேன். (யான்) இப்பேற்றுக்கொருயத்நம்பண்ணாதநான். (உறிக்கொண்டவித்யாதி) “தவமெய்தினன்” என்கிற - பலத்தைச்சொல்லுகிறதாதல், “கிறிக்கொண்டு” என்கிற - உபாயத்தைச்சொல்லுகிறதாதல். (உறியித்யாதி) உறிகளிலே சேமித்துக்கள்ளக்கயிறுருவிவைத்த வெண்ணெயையும் பாலையும் “தெய்வங்கொண்டதோ” என்னும்படி மறைத்தமுதுசெய்தவச்செயலாலே ஜகத்தை யெழுதிக்கொண்டவனுடைய. (பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்) அவன்பின்னேநெறிப்பட்ட நெஞ்சையுடையனாய்; “யேநயேநதாதா கச்சதி தேநதேந ஸஹ கச்சதி” (யேநயேநதாதாகச்சதிதேநதேநஸஹகச்சதி) என்கிறபடியே - அன்றியே, பின்னெறிக்கொண்டவென்கிறது - ப்ரபத்தியை. பின்னெறிஎன்கிறது - பின்னே சொன்னநெறியென்

றபடி. நெறி - வழி. (பிறவித்துயர்கடிந்தே) பலத்தைச்சொன்னவிடத்திலே விரோதிநிவ்ருத்தியையுஞ் சொல்லிக்கிடக்கிறதிறே, அத்தைச்சொல்லுகிறது. அன்றியே, (பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்) பாரதஸமரத்திலே அர்ஜுநனுக்கோரவஸ்த்தையைப் பிறப்பித்திறே யுபாயத்தையுபதேசித்தது ; இவர்வெண்ணெய் களவுகாணப்போனவிடத்திலே அடியொற்றிக்கொண்டுசென்று அவன்புக்க க்ருஹத்திலே படலைத்திருகிவைத்தாயிற்று கேட்டுக்கொண்டது. (பிறவித்துயர்கடிந்தே) “𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿” (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றேவைத்தானிறே ....*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (குறிக்கொள்ளித்யாதி) “பிறவித்துயர்கடிந்து தவமெய்தினன்” என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (என்னைநீயித்யாதி)

குறி - குறிப்பு, ஸாவதாநதை. ஐந்தால் - யமநியமாத்யவஹிதத்வத்தைச் சொல்லுகிறது. எனையூழி - குறிக்கொள்ஞானங்களால் - செய்தவமும், என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, கீழ்ச்சொன்ன “மெய்தந” இத்யாதியை விவரிக்கிறார் (அநேககல்பங்களித்யாதி) வேதநத்தால் - ச்ரவணமநநங்களையும், த்யாநோபாஸநங்களாலே - நிதித்யாஸநத்தையும் அதினுடைய வுத்தரோத்தராவஸ்த்தையையும், ஆதிசப்தத்தால் - தர்சநரூபதையையுஞ்சொல்லுகிறது. (இங்ஙனேவரக்கடவதான தபஃபலத்தை) இங்ஙனே வரக்கடவதாயிருக்கிற யாதொருதபஸ்ஸுண்டு அதினுடைய பலத்தையென்றபடி. “𑌤𑌪 𑌆𑌲𑍋𑌚𑌨𑍇” (தபஆலோசநே) என்கிற தாதுவாலும், “𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌂 𑌤𑌪𑌃” (யஸ்யஜ்ஞாநமயந்தப:) என்கிறந்யாயத்தாலும், தபஶ்சப்தம்-ஜ்ஞாநாவஸ்தாவிசேஷமான பரபக்த்யாதிபரம். “தவம்” என்றது - தபஃபலமென்றபடி. பகவத்ப்ராப்தி ரூபபலலக்ஷணை-“குறிக்கொள்” இத்யாதி - அநேககாலங்களிலே யமநியமாத்யவஹிதங்களான ச்ரவணமநநாதிரூபஜ்ஞாநங்களாலே வரக்கடவ பரபக்த்யாதிகளாகிற தபஸ்ஸினுடைய பலத்தை யென்று சப்தார்த்தம்.

கிறி - உபாயம். (அவன்றன்னையேகொண்டு) அவன்றன்னையே யுபாயமாகக்கொண்டு. தடஸ்தசங்கையையநுவதித்து பரிஹரிக்கிறார் (கிறியென்னவித்யாதி) பெருங்கிறியார் - பெருவிரகர், மஹோபாயசாலிகளென்றபடி.

• “பின்னெறிக்கொண்டநெஞ்சனாய்” என்றதுக்கர்த்தத்வயம். பலபரமாகவும் உபாயபரமாகவுங்காட்டுகிறார் (தவமெய்தினனித்யாதிவாக்யத்வயத்தாலே) பலபரயோஜநை (உறிகளிலேயித்யாதி) “கொண்ட” என்றதினர்த்தம் (சேமித்ததித்யாதி) * ஒளித்ததினர்த்தம் (மறைத்தென்றது) அவன்பின்னெறிப்பட்டநெஞ்சையுடையனாய்) அவன்பின்னேவழிப்படும்படியான நெஞ்சையுடையனாய். அதாவது - கைங்கர்யத்திலேயந்வயித்த நெஞ்சையுடையனென்றபடி. உபாயபரயோஜநாமாஹ (அன்றியேயித்யாதி) பின்னெறிக்கொண்டநெஞ்சனாய் - பின்பு சொன்ன சரமச்லோகோக்தமான வுபாயத்திலே யந்வயித்தநெஞ்சையுடையனா

யென்றிரண்டாமர்த்தம். பலஞ்சொல்லுகிறவிடத்திலே விரோதிநிவ்ருத்தியைச் சொல்லுவானென்னென்ன (பலத்தையித்யாதி) அதாவது - பலபரமான சரமஶ்லோகத்திலுத்தரார்த்தத்திலேயென்றபடி. "பரமம் ஸாம்யமுபைதி" (பரமஸாம்யமுபைதி) என்றவிடத்திலே, "புண்யபாபே விதூய" (புண்யபாபேவிதூய) என்றுஞ்சொல்லிக்கிடந்ததிறே; அப்படியே யிங்கும் "பிறவித் துயர்கடிந்து" என்றுவிரோதிநிவ்ருத்தியைச்சொல்லுகிறதென்றபடி. இந்தவாக்யம்-பலபரபூர்வயோஜநாசேஷம். "உறிக்கொண்ட" இத்யாதிக்கு ரஸமாகத்ருதீயதாத்பர்யம் (பாரதஸமரேத்யாதி) உறிக்கொண்டவெண்ணெயும் பாலையுமொளித்துண்ணுகிற்கிறவம்மான்பின்சென்று, நெறியான ப்ரபத்த்யுபாய ப்ரதிபாதக சரமஶ்லோகத்தை க்ரஹித்தநெஞ்சையுடையனுயென்று ஸப்தார்த்தம். ஓரவஸ்தையைப்பிறப்பித்து-சோகயுக்தாவஸ்த்தையைப்பிறப்பித்து. இவர்-ஆழ்வார். அடியொற்றிக்கொண்டுசென்று - அடிபிடித்துக்கொண்டுபோய். பின்னேசென்றென்றபடி. "பலத்தைச்சொன்னவிடத்திலே" இத்யாதிவாக்யவிவரணம் (ஸர்வபாபேப்ய இத்யாதி) இவ்விடத்தில் ததிபாண்டன் கதையைநினைப்பது.

யான், உறிக்கொண்ட இத்யாரப்ய, நெஞ்சனுய்ப் பிறவித்துயர்கடிந்து - என்னூழி-குறிக்கொள்ஞானங்களால் - செய்தவமும் உறிக்கொண்டிப்பிறப்பே சில நாளிலெய்தினனென்றந்வயம்..*

ஒன்பதாம்பாட்டு.

கடிவார்தண்ணந்துழாய்க்கண்ணன்விண்ணவர்பெருமான்
படிவானமிறந்தபரமன்பவித்திரன்சீர்ச்
செடியார்நோய்கள்கெடப்படிந்துகுடைந்தாடி
யடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே.

ஆறாயிரப்படி.

(கடிவார்) நிரவதிகபோக்யபூதனாய், * அயர்வறுமமரர்க ளதிபதியாய், திருநாட்டிலுங்கூடத் தன்னோடொத்தாரையும்மிக்காரையுமுடையவனல்லாமையாலே பரமனாய், ஸ்வாஶ்ரிதருடைய ஸ்வஸம்ஶ்லேஷ விரோதிஸர்வதோஷங்களையும்போக்கும் ஸ்வபாவனாயிருந்த வெம்பெருமானுடைய கல்யாணகுணங்களாகிற வம்ருதவெள்ளத்திலே யென்னுடைய விடாயெல்லாங்கெடும்படிபோய்ப் புக்குப்படிந்துகுடைந்தாடி வாய்மடுத்துப்பருகிக் களித்தேனடியேனென்கிறார்..............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்படியவன் குணங்களையநுபவித்து ஆநந்தியானேனென்கிறார்.

கடி - பரிமளம். வார் - ப்ரவஹியாநிற்கிற. தண்ணந்துழாய் - செவ்வித்திருத்துழாயையுடையனாய்க்கொண்டு, கண்ணன் - ஆஶ்ரிதபவ்யனனக்ருஷ்ணனாய்.

விண்ணவர்பெருமான் - இவ்வடிவழகையநுபவிக்கிறபரமபதவாசிகளுக்கவ்வருகானமேன்மையையுடையதனக்கு. வானம் - பரமபதத்திலும். படி - ஒப்பு. இறந்த- இல்லையாகையாலே. பரமன் - தனக்குமேலில்லையானபெரியவனாய். பவித்திரன்- இப்பெருமையறியாதாரறிவுகேட்டையும் போக்கியநுபவிப்பிக்கும் பாவநபூதனுடைய. சீர் - பரத்வஸௌலப்யபோக்யத்வபாவநத்வ ப்ரகாசகமானகுணங்களிலே. செடியார் - ஒன்றோடொன்றுமிடைந்து தூறுமண்டினாற்போலேயிருக்கிற. நோய்கள் - விஷயருசிதொடக்கமான மஹாவ்யாதிகள். கெட - நசிக்கும்படி. படிந்து- கிட்டி. குடைந்து - எங்குமுட்புக்கு. ஆடி - முழுகி. அடியேன் - அவனையொழியச்செல்லாதபடி அநந்யார்ஹனானநான். வாய்மடுத்து - புஜிக்கைக்குபகாரணமான அபிநிவேசமாகிறவாயைமடுத்து. பருகி - பெருவிடாயன் தண்ணீர்குடித்தாற்போலே நிரம்பபுஜித்து. களித்தேன் - நிரதிசயமான வாநந்தத்தைப்பெற்றேன்.

படிவானமிறந்தவென்று - வடிவழகுக்கு மேகமொப்பல்லவென்றுமாம்...*

---

௯ - ஒன்பதாம்பாட்டு.

" ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா "
(ஸோஸ்நுதேஸர்வாந்காமாந் ஸஹப்ரஹ்மணாவிபஸ்சிதா) என்கிறபடியே, என்னுடைய ஸகலதுரிதங்களும்போம்படி ஸர்வேஸ்வரனையநுபவிக்கப்பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

(கடிவார்தண்ணந்துழாய்க்கண்ணன்) பரிமளப்ரசுரமான திருத்துழாய் மாலையையுடைய க்ருஷ்ணனென்னுதல்; மது, ஸ்யந்தியாநின்றுள்ள திருத்துழாயையுடையவனென்னுதல். (விண்ணவர்பெருமான்) இவ்வொப்பனையழகாலே யெழுதிக்கொள்வது, அநந்யவைநதேயாதிகளையாயிற்று.

(படிவானமிறந்தபரமன்) தன்படிக்கு வானிலுள்ளாரொப்பாகாதபடி யிருக்கிறபரமன். பரமஸாம்யாபந்நரான நித்யஸூரிகளும் தன்படிக்கொப்பாகாதபடியான மேன்மையையுடையவனென்னுதல் ; தன்திருமேனிக்கு, வானமுண்டு - மேகம், அதொப்பாகாதபடியிருக்கிறவனென்னுதல். (பவித்திரன்) இவ்வடிவழகை ஸம்ஸாரிகளு மநுபவிக்கைக்கு யோக்யராம்படிபண்ணும் சுத்தியையுடையவனுடைய. சீருண்டு-கல்யாணகுணங்கள். அவற்றை, அடிகாணவொண்ணாதபடி தூறுமண்டிக்கிடக்கிற ஸாம்ஸாரிக ஸகலதுரிதங்களும்போம்படிவந்துகிட்டி, நாலுமூலையும்புக்கு, அவகாஹித்து, அநந்யார்ஹனானநான் மூழுமிடறுசெய்தநுபவித்து, யமாதிகள்தலையிலேயும் அடியிட்டுக்களிக்கப்பெற்றேன். படிந்து- கிட்டி. குடைந்து - எங்கும்புக்கு. ஆடி - அவகாஹித்து. அடியேன், வாய்மடுத்துப்பருகி - பெருவிடாயோடே யநுபவித்து. (களித்தேனே) இதரவிஷயஸ்பர்சம் துஃகமேயானாற்போலே, பகவத்குணாநுபவம் களிப்பேயாகக்கடவது ....*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (கடிவாரித்யாதி) " செடியார்நோய்கள்கெட - சீர் - வாய்மடுத்துப்பருகிக்களித்தேன் " என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (ஸோஸ்நுதேஇத்யாதி) துரிதங்களும் - து:கங்களும்.

கடி - பரிமளமும், மதுவும். வார்தல் - மிகுதியும், ஒழுகுதலும். கீழோடே கூட்டியர்த்தம் (இவ்வொப்பனையித்யாதி)

படி - ஸ்வபாவமும், விக்ரஹமும். வானமென்றது - "மஞ்சா:க்ரோஶந்தி" (மஞ்சா:க்ரோஶந்தி) இதிவத், வானிலுள்ளாரைச்சொல்லுதல்; மேகத்தைச்சொல்லுதல். இறந்த - ஒப்பாகாத. " ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத: " (ப்ரஸக்தஸ்யஹிப்ரதிஷேத:) இத்யத்ர ப்ரஸங்கம் ஸம்பாதயதி (பரமஸாம்யேத்யாதி)

" செடியார் " என்றதினர்த்தம் (தூறுமண்டிக்கிடக்கிறவென்று) தூறுவது - அவித்யாதிகள். ஆர்தல் - பூர்த்தி. " படிந்து, குடைந்து, ஆடி, " என்கிறபதத்ரயத்துக்கும் க்ரமேணார்த்தம் (கிட்டிஇத்யாதி) வாய்மடுத்துப்பருகி - (முழுமிடறுசெய்தநுபவித்து) மிடறுநிறையக்குடித்தென்றபடி. வாய்மடுத்துக்குடித்தென்று ஶப்தார்த்தம். மடுத்து - மடக்கிட்டு. பாநபாத்ரமாக்கியென்றபடி. ஆநந்தஸ்யசரமாவதிமாஹ (யமாதிகளித்யாதி) " வாய்மடுத்து " என்றதுக்குபாவம் (பெருவிடாயோடேயென்று) " களித்தேனே " என்றஏவகாரார்த்தம் (இதரவிஷயேத்யாதி) ஏவகாரம் - அந்யயோக வ்யவச்சேதபரமென்றபடி.

க்ரமேணாந்வய:……………………………………………*

பத்தாம்பாட்டு.

களிப்புங்கவர்வுமற்றுப்பிறப்புப்பிணிமூப்பிறப்பற்
றொளிக்கொண்டசோதியுமாயுடன்கூடுவதென்றுகொலோ
துளிக்கின்றவானிந்நிலஞ்சுடராழிசங்கேந்தி
யளிக்கின்றமாயப்பிரானடியார்கள்குழாங்களையே.

ஆறாயிரப்படி·

(களிப்பும்) இப்படியெம்பெருமானுடைய குணங்களாகிற அம்ருதத்தை புஜிக்கிறவாழ்வார் ; இந்தவம்ருதத்தை, நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகனாய்க்கொண்டு பகவத்குணைகபோகரான நித்யஸித்தபுருஷர்களுடைய திவ்யபரிஷத்திலேசென்று அவர்களோடேகூட நான்புஜிப்பதென்றோவென்கிறார்……………………………………*

பன்னீராயிரப்படி·

அநந்தரம், ஏவம்விதபோகாநந்தத்துக்கு முக்யபோக்தாக்கள் ஸூரிகளாகையாலே, அவர்களோடுகூடுகையை யர்த்திக்கிறார்.

களிப்பும் - விஷயலாபத்தில்களிப்பும். கவர்வும் - ததலாபத்திலபிநிவேஶமும். அற்று - அற்று. பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று - அதுக்கடியானஜந்மவ்யாதி

ஜராமரணங்களுமற்று. ஒளிக்கொண்ட - ஆவிர்ப்பூதமானஜ்ஞாநாதிகளாகிறஒளிகளுக்குப்ரகாசகமான. சோதியுமாய் - ஜ்யோதிர்மயவிக்ரஹத்தையுடையோமாய்க்கொண்டு. துளிக்கின்ற - வர்ஷிக்கிற. வான் - ஆகாசத்தையும். இ - அத்தாலேதரிக்கிற. நிலம் - பூமியையும். பாதகரஹிதமாம்படி - சுடர் - பேரொளியையுடைய. ஆழி - திருவாழியையும். சங்கு - திருச்சங்கையும். ஏந்தி - ஏந்தி. அளிக்கின்ற - ரக்ஷித்தருளுகிற. மாயப்பிரான் - மஹோபகாரகனுடைய. அடியார்கள் - நித்யதாஸ்யைகநிரூபணீயரானஸூரிகளுடைய. குழாங்களை - ஸங்கங்களை. உடன் - ஒருசீராம்படியுடன்பட்டு. கூடுவது - கூடுவது. என்றுகொலோ - என்றோ.

ஸமஸ்தவிரோதி நிவ்ருத்திபிறந்து ஆவிர்ப்பூதஸ்வரூப ஸ்வபாவரானவர்க்கு ப்ராப்யம் அடியாரான ஸூரிகளென்றுகருத்து................................*

ஈடு - பத்தாம்பாட்டு.

“ களித்தேனே ” என்று, திரியட்டும் ஸம்ஸாரிகளோடே யிருக்கையன்றியே, இவ்வநுபவத்துக்கு தேசிகரான நித்யஸூரிகள் திரளிலே போய்ப் புகுவதெப்போதோவென்கிறார்.

(களிப்பும்) இதரவிஷயாநுபவத்தாலே வரும்களிப்பும் (கவர்வும்) அவைபெறுதபோது ஆசைப்பட்டுவரும் க்லேசமும். (அற்று) போய். இவையிரண்டுக்கு மடியானஜந்மம், அதுபுக்கவிடத்தே புகக்கடவதானவ்யாதி, அநந்தரம் வரும்ஜரை, “ இத்தோடேயாகிலு மிருந்தாலாகாதோ ” என்று நினைத்திருக்கச்செய்தேவரும் நிரந்வயவிநாசம், இவையடையவற்று. (ஒளிக்கொண்டசோதியுமாய்) ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசினவிந்த சரீரம்போலன்றியே, சுத்தஸத்வமயமாய் நிரவதிகதேஜோரூபமான சரீரத்தையுடையோமாய். (உடன்கூடுவதென்றுகொலோ) “ நான், எனக்கு ” என்றகலவேண்டாத இவ்வுடம்புடையார் திரளிலே போய்ப்புக்கு நெருக்கப்பெறுவதென்றோ. (துளிக்கின்றவித்யாதி) வர்ஷிக்கையே ஸ்வபாவமாகவுடைத்தான வாகாசம், அத்தாலேவிளையக்கடவதானஇந்தப்பூமி, இவற்றைக்கடற்கரைவெளியிலேநோக்கினாற்போலே, திவ்யாயுதங்களைத்தரித்துநோக்குகிற ஆஸ்சர்யபூதன். (சுடராழிசங்கேந்தியளிக்கின்றமாயப்பிரான்) பரமபதத்திலாபரணமாய்க் காட்சிதரும், இங்காயுதமாயிறேயிருப்பது. இப்படிரக்ஷிக்கிறவனுடைய அந்தரக்ஷணத்திலே தோற்றிருப்பாராய், அவன்றன்னோடொக்க ப்ராப்யருமாய், பகவத்குணங்களுக்கு தேசிகராயிருப்பாருமாய், * போதயந்த: பரஸ்பரத்துக்குத் துணையாயிருக்கிறவர்களுடைய குழாங்களை. கலியர் “ கலவரிசிச்சோறுண்ண ” என்னுமாபோலே, அத்திரள்களிலேபோய்ப்புகப்பெறுவதெப்போதோவென்கிறார்..*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (களிப்புமித்யாதி) "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ" என்றபதங்களைக்கடாக்ஷித் தவதாரிகை '(களித்தேனே யித்யாதி) திரியட்டும் - மீளவும்.

கவர்வு - க்லேசம். பிணி - வ்யாதி. நிரங்வயவிநாசம் - சரீராங்வயாபாவரூபவிநாசம். சரீரஸம்பந்தா பாவரூபவிநாசம். மரணமென்றபடி. ஸாங்வயவிநாசமாவது - சைசவயௌவநாத்யவஸ்த்தைகள். சப்தார்த்தம் (ரஜஸ்தமஸ்ஸங்களித்யாதி) "ஒளிக்கொண்டசோதி" என்றத்தால்பலிதம் (சுத்தஸத்வமயமாயென்றது)

"அடியார்கள்" என்றத்தைப்பற்ற (நானெனக்கென்றித்யாதி) "பாகவதஸமுதாயம்ப்ராப்யம்" என்றறியாநிற்கச்செய்தேயும், அஹங்கார மமகாரங்களாலே யகலவேண்டாநின்றதிறே; அப்படியகலவேண்டாத ஸம்பந்தஜ்ஞாநமுடையவர்களென்றபடி. இவ்வுடம்புடையார் - சுத்தஸத்வமயமான வுடம்புடையார். கூடுவதென்றுகொலோஎன்னாதே, "உடன்" என்கையாலே (நெருக்கப்பெறுவதென்றோவென்றது)

"துளிக்கின்ற" என்றவர்த்தமாநார்த்தம் (வர்ஷிக்கையே ஸ்வபாவமாகவென்றது) "கடற்கரை" என்றவிடத்திலே - "ராமலக்ஷ்மணகுப்தாஸா" (ராமலக்ஷ்மணகுப்தாஸா) இத்யாத்யநுஸந்தேயம். அளிக்கின்ற - ரக்ஷிக்கிற. போக்யமானதிருவாழி திருச்சங்குகளை ரக்ஷணத்துக்குப் பரிகரமாகச்சொல்லுவானென்னென்ன (பரமபதத்திலித்யாதி) போக்யமென்றது - "சுடர்" என்றும், "ஏந்தி" என்றுமிருக்கையாலே. ஸமூஹபாஹுள்ய கதநத்துக்குத்தாத்பர்யம் (கலியரித்யாதி) கலியர் - பசித்தவர். ஆற்றாமையின்மிகுதி யிப்படிசொல்லப்பண்ணுமென்று கருத்து.

உத்தரார்த்தபூர்வகம பூர்வார்த்தாநு ஸந்தாநமங்வய8 ………… ………*

பதினொன்றாம்பாட்டு.

குழாங்கொள்பேரரக்கன்குலம்வீயமுனிந்தவனைக்
குழாங்கொடென்குருகூர்ச்சடகோபன்றெரிந்துரைத்த
குழாங்கொளாயிரத்துளிவைபத்துமுடன்பாடிக்
குழாங்களாயடியீருடன்கூடிநின்றாடுமினே.

ஆறாயிரப்படி.

(குழாங்கொள்) ஸபுத்ரஜநபாந்தவமாக ராவணன் மடியும்படி சீறினவனையுள்ளபடிகண்டுசொன்ன இத்திருவாய்மொழியை பகவத்தேசபோகராயிருப்பாரெல்லாருங்கூடி புஜியுங்களென்கிறார்.……………

பன்னீராயிரப்படி,

அநந்தரம், இத்திருவாய்மொழியைப்பாடி பரஸ்பரஸங்கதராய் ஸங்கீவித்து ப்ரீதிப்ரேரிதராய் வர்த்தியுங்கோளென்று பலத்தையருளிச்செய்கிறார்.

குழாங்கொள்-ப்ரதகரானராக்ஷஸரைத் திரள்திரளாகவுடையனாயிருக்கி; பேர் - பெருமையையுடையனானராவணனுடைய. அரக்கன்-ராக்ஷஸனுடைய. குல

குலமகப்பட. வீய-நசிக்கும்படி. முனிந்தவனை-முனிந்தருளினவனை. குழாங்கொள்-ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளையுடைத்தான. தென்குருகூர்-திருநகரிக்குநிர்வாஹகரான. சடகோபன்-ஆழ்வார். தெரிந்து-ஆராய்ந்து. உரைத்த - அருளிச்செய்த. குழாங்கொள்-பத்தானதிரள்களைவடிவாகவுடைத்தான. ஆயிரத்துள்-ஆயிரம் திருவாய்மொழியிலும். இவைபத்தும்-இவைபத்தையும். உடன் - அர்த்தத்தோடேயுடன்பட்டு. பாடி-ப்ரீதிக்குப்போக்குவீடாகப்பாடி. குழாங்களாய்- பரஸ்பரஸம்ஶ்லிஷ்டராய்க்கொண்டுபலதிரளாய். அடியீருடன் - அடியாரானவுங்கள் ஸ்வரூபத்துக்கநுரூபமாம்படி ஏககண்டராய். கூடி-ஸம்ஶ்லேஷித்து. நின்று-இடைவிடாதேநின்று. ஆடுமின்-ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணப்பாருங்கோள்.

இது-கலிவிருத்தம்..*

ஈடு _ பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை, பகவத்போகராயிருப்பாரொன்னைப்போலே தனிப்படாதேதிரளாகவநுபவியுங்கோளென்கிறார்.

(குழாங்கொளித்யாதி) புத்ரபௌத்ராதிகளும் பந்துக்களுமான விவர்களாலே குழாங்கொண்டு, வரபலபுஜபலத்தாலே தழைத்து வேரூன்றின ரக்ஷஸ்ஸினுடைய ஜாதியாகக்கிழங்கெடுத்த சக்ரவர்த்திதிருமகனை ; " கரிஷ்யே மைதிலீஹேதோ ரபிஸாசமராக்ஷஸம் " (கரிஷ்யே மைதிலீஹேதோரபிஸாசமராக்ஷஸம்) என்கிறபடியே. (குழாங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்) ஜநஸ்த்தாநமடியறுப்புண்டபின்பு தண்டகாரண்யங்குடியேறினாற்போலே, " * வாயுந்திரையுகளுக்குத்தப்பின ஆழ்வாரைக்காணவேணும் " என்று ஸ்ரீவைஷ்ணவர்களுடையத்திரண்டதாயிற்று ; * நல்லார்நவில்குருகூரிறே. ஸத்துக்களிருந்தவிருந்தவிடங்களிலே வாய்புலற்றும்படியானதேசமானால், அத்தேசத்திலுள்ளார் திரளச்சொல்லவேண்டாவிறே. (தெரிந்துரைத்த) உள்ளபடியநுஸந்தித்துச் சொன்ன-இவைபத்தும். திரண்டவர்களுக்கு ஜீவநம்வேணுமே (குழாங்கொளாயிரம்) " தொண்டர்க்கமுதுண்ண " என்கிறபடியே. பத்துப்பாட்டொரு திருவாய்மொழியாய், பத்துத்திருவாய்மொழியொருபத்தாய், இப்படிபத்துப்பத்தானவாயிரம். திரண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜீவநம் வேணுமே. (இவைபத்துமுடன்பாடி) ஸாபிப்ராயமாகவப்யஸித்து. (குழாங்களாய்) என்னைப்போலே, " பருகிக்களித்தேனே " என்று, குழாங்தேடவிராதே, முற்படவேதிரளாக இழியப்பாருங்கோள். (அடியீருடன்கூடிநின்றாடுமினே) அவன்பக்கலிலே நிக்ஷிப்தபாரராயிருக்கிற நீங்கள் நாலவரிருவரிங்கிருக்கும் நாலுநாளும், த்யாஜ்யமான அர்த்தகாமங்களைப்பற்றி " சீறு, பாறு " என்னாதே, நம்பெரியகுழாத்திலேபோய்ப்புகுமளவு மொருமிடறாயநுபவிக்கப்பாருங்கோள்.

முதற்பாட்டில்-திருவுள்ளத்தைக்கொண்டாடினார்; இரண்டாம்பாட்டில்-அத்தையுமிசைவித்த ஸர்வேஶ்வரனைக்கொண்டாடினார்; மூன்றாம்

பாட்டில்-தம்னெஞ்சிற்பட்டதொரு உபகாரத்தைச்சொன்னார்; நாலாம்பாட்டில்-அதுக்குப்ரத்யுபகாரமாக ஆத்மஸமர்ப்பணம்பண்ணி அதுதனக்கநுஶயித்தார்; அஞ்சாம்பாட்டில்-எனக்குப்ரதமஸுக்ருதமும் நீயேயானபின்பு உன்திருவடிகளைக்கிட்டினேனேயன்றோவென்றார்; ஆறாம்பாட்டில்-இன்றோகிட்டிற்று, தேவரெனக்கு விசேஷகடாக்ஷம்பண்ணினவன்றேபெற்றேனேயல்லேனோவென்றார்; ஏழாம்பாட்டில்-அவனுடையபோக்யதையையநுஸந்தித்து, உன்னைப்பிரியில் தரியேனென்றார்; எட்டாம்பாட்டில்-இப்படி நிரதிஶயபோக்யனானவனை எளியதொருவிரகாலே லபிக்கப்பெற்றேனென்றாராதல்; அன்றியே, அநேககாலங்கூடிப்பண்ணி லபிக்கக்கடவ தபஃபலத்தை அவனைப்பின்சென்று எளிதாகலபித்தேனென்னுதல்; ஒன்பதாம்பாட்டில்-என்னுடைய ஸகலக்லேஶங்களும் போம்படியநுபவித்துக்களித்தேனென்றார்; பத்தாம்பாட்டில்-இப்படியிவனையநுபவித்துக்களிப்பார் திரளிலேபோய்ப்புகப்பெறுவதெப்போதோவென்றார்; நிகமத்தில்-இத்திருவாய்மொழியை ஸாபிப்ராயமாக வப்யஸித்து, நாலுநாளும் நால்வரிருவருள்ளார் கூடியிருந்தநுபவிக்கப்பாருங்கோளென்கிறார்..*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (குழாங்கொளித்யாதி) "இவைபத்தும் - குழாங்களாய் - உடன்கூடிநின்றாடுமினே" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியையித்யாதி) கூட்டமாக விந்தத்திருவாய்மொழியை யநுபவிக்கையே பலமென்றுகருத்து.

இவர்களாலேகுழாங்கொண்டு - இவர்களாலேதிரண்டுகொண்டு. பெருமையேதென்ன (வரபலபுஜபலத்தாலே தழைத்துவேரூன்றினவிதி) தழைத்து - ஸம்ருத்தமாய். முன்னிந்தமைக்குப்ரமாணம் (ஈரிஷ்யேஇத்யாதி) ஆரண்யகாண்டே சதுஷ்ஷஷ்டிதமே, "ஆகர்ணபூர்ணைரிஷுபிர்ஜீவலோகந்த்ராஸயை:" (ஆகர்ணபூர்ணைரிஷுபிர்ஜீவலோகந்த்ராஸயை:) இதிபூர்வார்த்தம்.

(ஜநஸ்த்தாநமிதி) ரகுவம்ஶேத்ரயோதஶே, "அமீ ஜநஸ்த்தாநமபோடவிக்நம் மத்வா ஸமாரப்தநவோடஜாநி। அத்த்யாஸதே சீரப்ருதோ யதாஸ்வம் சிரோஜ்ஜிதாந்யாஶ்ரமமண்டலாநி" (அமீஜநஸ்த்தாநமபோடவிக்நம்மத்வாஸமாரப்தநவோடஜாநி। அத்த்யாஸதேசீரப்ருதோயதாஸ்வஞ்சிரோஜ்ஜிதாந்யாஶ்ரமமண்டலாநி) இதிப்ரதிப்ரயாணஸர்க்கோக்தம் காளிதாஸவாக்யமத்ரத்ரஷ்டவ்யம். அடியறுப்புண்டபின்பு - ஸம்ஹ்ருதமானபின்பு. ஸ்ரீவைஷ்ணவர்களங்கேதிரண்டிருப்பர்களோவென்ன (நல்லாரித்யாதி) திருவிருத்தம். நவிலுகையாவது - வாய்புலற்றுகையன்றோ, இது திரளுகைக்கு ப்ரமாணமோவென்ன (ஸத்துக்களித்யாதி) வாய்புலற்றும் - பலகாற்சொல்லுமென்றபடி.

"குழாங்கொளாயிரம்என்று" விஶேஷிக்கவேணுமோவென்ன (திரண்டவர்களுக்கித்யாதி) அதாவது - கீழே "குழாங்கொள்தென்குருகூர்" என்கை

யாலே, "அந்தத்திரண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜீவநம்வேணும்" என்றருளிச்செய்தாரென்றபடி. இதுஜீவநமோவென்ன (தொண்டர்க்கமுதித்யாதி) ஆயிரமும் குழாங்கொண்டிருக்கும்படியென்னென்ன (பத்துப்பாட்டித்யாதி) (திரண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கிதி) ஆயிரம்பாட்டும் ஜீவநமென்றபடி. கீழேதிரண்டவர்களுக்கு ஜீவநம்வேணுமேயென்றது-பத்துப்பாட்டும் ஜீவநமென்றபடி. யத்வா, "திரண்டவர்களுக்கு" இத்யாதிவாக்ய விவரணமாதல். குழாங்கொள் தென்குருகூர்ச்சடகோபன் தெரிந்துரைத்த - பத்தென்றுதல், குழாங்கொளாயிரமென்றுதலந்வயமென்றபடி. இதுமூந்தினபக்ஷத்திலே.

"குழாங்களாய்" என்றுவைத்து, பின்னையும் "உடன்கூடி" என்றதுக்குக் கருத்தென்னென்ன (அவன்பக்கலிலேயித்யாதி) நீங்களென்றது- "அடியீர்" என்றஸம்போதநஸித்தம். நால்வரிருவரென்றது - அநுகூலர் கிடையாமையாலே. நம்பெரியகுழாத்திலே - * அந்தமில்பேரின்பத் தடியவர்குழாத்திலே. உடன்-ஸஹ்ருதயமாக. ஆடுகை - அவகாஹிக்கையாய், அத்தாலே - (அநுபவிக்கப்பாருங்கோளென்கிறார்)

பத்துப்பாட்டினர்த்தநிகமநம் (முதற்பாட்டில் திருவுள்ளத்தையித்யாதி) இப்படிநிரதிசயபோக்யனை யித்யாதிவாக்யத்வயமும் - "உறிக்கொண்ட" இத்யாதிக்கு உபாயோபேயபர யோஜநாத்வயத்தைப்பற்றவென்று கண்டுகொள்வது. "எளிதாகலபித்தேன்" என்றவநந்தரம் - என்கிறுவென்றுமேஷம்.

க்ரமேணுர்வட 8...*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(ஊனில்வாழுயிரே.)

விச்சேதாஸஹஸந்நிதிம் ப்ரியகுணைஸ்ஸ்வாநுபூதிப்ரதம்
தம் ஸ்வாத்வந்நரஸாஹ்லஸம்ஸஜநத்வாதஸம்ஸக்தவிபோத்தகஸோபாஷ்ய
ஸர்வாக்ஷீணநாஹம் ஸஜதிபைஹமை ஸேஹோஸ்வாஜீஸம்வ
ஸேஷ்ஸ்வாஸெய்ஸ்வேதந்ரவிஸநவாஸ்ரோஷிஸ்வஸீஸம்॥ (கரு

(சித்ராஸ்வாதாநுபூதிம்) தேனும்பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொா; தே-மதுரங்களான மதுக்ஷீராதிபதார்த்தங்களுடைய ரஸத்தையுடைத்தான வஸ்து வத்தையுடையனுமாய்; (ப்ரியமுபக்ருதிபி:) பெற்றவத்தாயாய்த் தந்தையாய், யாதனவறிவித்தவத்தா-மாதாவும் பிதாவு மாசார்யனும்பண்ணு முபகாரங்களைெல்லாந்தானேபண்ணி, அத்தாலே யாஸ்ரிதருக்கு ப்ரியனுமாய்; (தாஸ்யஸாரஸ்ஹேதும்) அறியாக்காலத்துள்ளே யடிமைக்கணன்புசெய்வித்து - அறிவுநடையடாதகாலத்திலே தாஸ்யரஸத்தையுண்டாக்கினவனுமாய்; (ஸ்வாத்மந்யாஸார்த

க்ருத்யம்) எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறெனதாவிதந்தொழிந்தேன் - ஆத்மாவை ஸமர்ப்பிக்கும்படிக்கீடாக வாத்மாவினுள்ளே கலந்திருந்த மஹோபகாரத்தையுடையனுமாய்; (பஜதம்ருதரஸம்) என்கடற்படாவமுதே-ஆஶ்ரிதர்க்கம்ருதம்போலே போக்யனுமாய்; (பக்ஷசித்தைகபோக்யம்) தீர்ந்தார்தம்மனத்துப்பிரியாது - " ப்ராப்யப்ராபகங்களிரண்டுந்தானே " என்றிருக்குமவர்கள் மநஸ்ஸைவிட்டுப்பிரியமாட்டாதிருக்குமவனாய்; (ஸர்வாக்ஷப்ரீணநார்ஹம்) யாழ்பயினூலித்யாதி-சக்ஷுஶ்ஶ்ரோத்ராதிஸர்வேந்த்ரிய ப்ரீணநயோக்யமானபோக்யதையையுடையனுமாய்; (ஸபதிடஹநபலஸ்நேஹம்) குறிக்கொள் ஞானங்களாலித்யாதி - " ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு " இத்யாதிகளிற்படியே சிரகாலஸாத்யதபோத்யாநஸமாதிபலமான பக்தியோகத்தைத் தனக்கபிமதரீடத்திலே ஜடிதியுண்டாக்குமவனாய் ; (ஆஸ்வாத்யஶீலம்) பவித்திரன்சீர்-படிந்துகுடைந்தாடி அடியேன் வாய்மடுத்துப்பருகி-அத்யந்தம்போக்யத்வேநாநுபாவ்யங்களான கல்யாணகுணங்களையுடையனுமாய்; (ஸப்யைஸ்ஸாத்யைஸ்ஸமேதம்) மாயப்பிரானடியார்கள் குழாங்களையே-ஸவயஸ்ஸுக்களான நித்யஸூரிகளோடே ஸஹிதனுமாயிருக்கிறவெம்பெருமானை, மதுரங்களான ஸர்வபதார்த்தங்களினுடைய ரஸத்தையுமுடைத்தான போக்யதையையுடையனாக " ஊனில்வாழுயிரே " என்கிறதஶகத்திலே யாழ்வாரநுபவித்தாரென்கிறார்...*

திருவாய்மொழிநூற்றந்தாதி.

ஊனமறவேவந்துள்கலந்தமாலினிமை
யானதனுபவித்தற்காந்துணையா - வானி
லடியார்குழாங்கூடவாசையுற்றமாற
னடியாருடனெஞ்சேயாடு. (கரு)

(ஊனமறவேவந்து) இதில் எம்பெருமான் " ஏகதத்வம் " (ஏகதத்த்வம்) என்னும்படி ஸம்ஶ்லேஷிக்க, ததநுபவஸஹகாரிஸாபேக்ஷராயருளிச்செய்தபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இப்படிப்ராஸங்கிகமான பரோபதேஶத்தைத்தலைக்கட்டினவநந்தரம், கீழ், தம்முடையவார்த்திதீரவந்து கலந்த எம்பெருமானுடைய ஸம்ஶ்லேஷரஸத்தைப்பேசவொருப்பட்டு, எப்பேர்ப்பட்ட இனிமையும் விளையும்படி தம்முடனே அவன்வந்து " ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் " (ராமஸ்தஸீதயாஸார்த்தம்) இத்யாதிப்படியே " ஏகதத்வம் " (ஏகதத்த்வம்) என்னலாம்படிகலந்தபடியையும், அந்தக்கலவியால்வந்தரஸம் தம்மொருவராலுமுண்டறுக்கவொண்ணாதபடி யளவிறந்திருக்கிறபடியையு மநுஸந்தித்து, தனித்தேட்டமான இதரவிஷயங்கள்போலன்றிக்கே துணைத்தேட்டமாய், அதுக்கிவ்விபூதியிலாளில்லாமையாலே, " இவ்வநுபவத்தில் நிலைநின்ற நித்யஸூரி

கள் திரளிலேபோய்ப்புக்கநுபவிக்கப்பெறுவதெப்போதோ" என்று ப்ரார்த்திக்கிற * ஊனில்வாழிலர்த்தத்தை, "ஊனமறவேவந்து" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(ஊனமறவேவந்துள்கலந்தமாலினிமையானது) அதாவது - "நித்யஸம்ஸாரி" (நித்யஸம்ஸாரி) என்று ஸங்கோசியாமல், ஸங்கோசமற ஸர்வேஶ்வரன் வந்து "தானும்யானுமெல்லாந் தன்னுள்ளேகலந்தொழிந்தோம் தேனும்பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொத்தே" என்றும், "எனதாவியுள்கலந்த பெருநல்லுதவி" என்றும், "கனிவார்வீட்டின்பமே" என்றும், "அடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே" என்றுமிப்படி ஸர்வரஸங்களுமுண்டாம்படி அந்தரங்கமாகக் கலந்த கலவியினினிமையானது-ஸஹ்ருதயமாக ஸம்ஶ்லேஷித்தஸாரஸ்யமானது. (அநுபவித்தற்காந்துணையா) ஏவம்விதரஸ்யதையை யநுபவிக்கைக்கு "அடியார்கள்குழாங்களையுடன்கூடுவதென்றுகொலோ" என்று - அநுகூலஸஹவாஸமபேக்ஷிதமாய். (வானிலடியார்குழாங்கூட வாசையுற்றமாறனடியாருடன்நெஞ்சேயாடு) * வையத்தடியவர்களன்றிக்கே, அநுபவத்துக்கு தேஶிகரான வானிலடியார் குழாங்களுடனே கூடவேணுமென்றபிநிவேஶத்திலே யூன்றின ஆழ்வாரடியாரானவிங்குத்தை ஸ்ரீவைஷ்ணவர்களோடே நெஞ்சேகூடியாடு. அன்றிக்கே, அக்குழாத்திலேமுழுகி யநுபவிக்கப்பாரென்றுமாம். "அடியீருடன்கூடிநின்றாடுமினே" என்றாரிறே...............................*

இரண்டாம்பத்தில் மூன்றாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௰௩ — பாட்டு - ௧௪௩.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

நான்காந்திருவாய்மொழி.

ஆடியாடி - ப்ரவேஸங்கள்.

ஆறாயிரப்படி.

(ஆடியாடி) இப்படிநித்யபுருஷர்களோடேகூட வெம்பெருமானை யநுபவிக்க ஆசைப்பட்டவாழ்வார், அப்போதே யப்படியநுபவிக்கப் பெறாமையாலே வந்தநிரதிசயாவஸாதத்தாலே யொருக்ஷணமாத்ரமு மாத்மதாரணம்பண்ண வொண்ணாத தயநீயதசாபந்நராய், அந்தத்தசாநுகுணமாக வெம்பெருமானைக்குறித்துத் தாம்சொல்லுகிறவார்த்தைகளையுஞ் செய்கிறசேஷ்டிதங்களையுங்கண்டு தம்மோடுஸமாநஶோகரான தம்முடையபந்துக்க ளெம்பெருமானைநோக்கித் தம்முடையதசையை விண்ணப்பஞ்செய்து சொல்லுகிறபடியை யநுஸந்தித்து; இப்பொருளை, எம்பெருமானை யாசைப்பட்டு அத்யந்தமவஸந்நையா யிருந்தாளொரு பிராட்டியுடைய திருத்தாயாரவளுடைய தசையைவிண்ணப்பஞ்செய்துகொண்டு, " இவள்முடிவதற்குமுன்பேயீண்டென வந்துவிஷயீகரித்தருளவேணும் " என்றுகொண்டெம்பெருமானை யபேக்ஷிக்கிற வாக்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்..*

பன்னீராயிரப்படி.

நாலாந்திருவாய்மொழியில், இப்படிதாமாசைப்பட்டபடியை யநுபவிக்கப்பெறாமையா லவஸந்நராய்," தமக்குப்பிறந்த ஆர்த்த்யதிசயத்தை சமிப்பிக்கைக்கு, ஸர்வரக்ஷகனாய் போக்யபூதனானவனையொழிய இல்லை " என்றறுதியிட்டு; அவன்ஆஸ்ரிதனான ப்ரஹ்லாதனுக்குதவினபடியையும், அநிருத்தனுக் குதவினபடியையும் அபிமதையானபிராட்டிக் குதவினபடியையும், நாட்டுக்குதவினபடியையும், சுத்தபாவதையையும், நிரதிசயபோக்யதையையும், ரக்ஷணார்த்தமான ஆஸத்தியையும், ஆஸந்நஜநங்களுக்கு மநுபவவிரோதிகளைப்போக்கின படியையும், ரக்ஷணோபகரணவத்தையையும், விரோதிமிகுத்தாலும் வெந்துவிழப்பண்ணும் வீரப்பாட்டையுமநுஸந்தித்து, தம்முடைய ஆர்த்தியைப்பரிவர்முகத்தாலே யவனுக்கறிவித்தபடியை, பிரிந்ததலைமகளாற்றாமைக்கு நற்றாயிரங்கின பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்..*

ஈடு.

கீழ்த்திருவாய்மொழியிலே- ''பருகிக்களித்தேனே'' என்று ஹ்ருஷ்டராய், '' அதுதன்னைப்பாகவதர்களோடே உசாவித்தரிக்கவேணும் ' என்றுபாரித்து, அதுக்கிவ்விபூதியிலாளில்லாமையாலே, நித்யவிபூதியிலே நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு * போதயந்த: பரஸ்பரம்பண்ணி யநுபவிக்கக்கோலி ; நினைத்தபோதே யத்திரளிலேபோய்ப்புக் கநுபவிக்கப்பெறாமையாலே மிகவுமவஸந்நராய், தம்முடையதசையை ஸ்வகீயரான ஸ்ரீவைஷ்ணவர்களெம்பெருமானுக் கறிவிக்கிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். * அஞ்சிறையமடநாரையில் - தூதுவிடக்ஷமரானார் ; * வாயுந்திரையுகளில் - கண்ணாற்கண்ட பதார்த்தங்களுடைய பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்குமாகநோவுபடக்ஷமரானார் ; அவ்வளவன்றிக்கே யாற்றாமைகரைபுரண்டு, தாமானதன்மையழிந்து ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய், அதுதன்னிலுந்தன் தசைதான் வாய்விட்டுப்பேசமாட்டாதே பார்ஶ்வஸ்தரறிவிக்க வேண்டும்படியாய், ஸ்த்ரீத்வகமநசயநாதிகளி லொருநியதியின்றியிலே அரதியாய்நோவுபட, இப்பெண்பிள்ளைதசையை யநுஸந்தித்த திருத்தாயார், '' ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ஆர்த்தராநாரார்த்தியெல்லாம் பரிஹரிக்கக்கடவ ஸ்வபாவரானநீர் உம்மையாசைப்பட்டவிவள் நோவுபடப்பார்த்திருப்பதே'' என்று, எல்லாவளவிலுமவனை யிட்டுப்பரிஹரித்துக்கொள்ளுங் குடியாகையாலே அவன்திருவடிகளிலேபொகட்டு, '' இவளிடையாட்டத்தில் நீர்செய்யநினைத்திருக்கிறதென் ''என்று கேட்கிறபாசுரத்தாலே தம்முடையதசையை யருளிச்செய்கிறார். காசையிழந்தவனுக்கும், பொன்னையிழந்தவனுக்கும், ரத்நத்தையிழந்தவனுக்கு மொத்திராதிறேக்லேஶம் ; அவதாரத்திலே * பெருநிலங்கடந்த நல்லடிப்போதை யநுபவிக்கவாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்தவாற்றாமை - * அஞ்சிறையமடநாரையில், '' நம்பியைத்தென்குறுங்குடிநின்ற '' என்றர்ச்சாவதாரத்திலே யநுபவிக்கவாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்தவாற்றாமை - * வாயுந்திரையுகளில், இதில் - அவன்றனக்கும் ப்ராணபூதரான நித்யஸூரிகளை யநுபவிக்கவாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்தவாற்றாமையாகையாலே அவற்றிலுமிதுக்காற்றாமை விஞ்சியிருக்கும், நித்யஸூரிகள் திரளிலேபோய்ப் புக்கநுபவிக்கப் பெறாமையாலே நோவுபடுகிறதாகில், பின்னையவர்களைச் சொல்லிக்கூப்பிடாதே அவனைச்சொல்லிக் கூப்பிடுவானென்னென்னில்; ஏங்கேனுமொருகாட்டிலே ரத்நங்கள் பறியுண்டாலும்,நாட்டிலே ராஜாவின்வாசலிலே யவன்பேர்சொல்லியிறே கூப்பிடுவது ; அவர்களோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கும் கடவனவனாகையாலே அவனைச்சொல்லிக்கூப்பிடுகிறது. பகவத்விஶ்லேஷத்திலே யுட்புகரி

ன்றுவிறே பாகவதவிஶ்லேஷந்தான்தெரிவது ; [கதாந்வஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா । ஶத்ருக்நேந ச வீரேண த்வயா ச ரகுநந்தந ” (கதாந்வஹம்ஸமேஷ்யாமிபரதேநமஹாத்மநா । ஶத்ருக்நேநசவீரேண த்வயாசரகுநந்தந) ஸ்ரீபரதாழ்வானோடும் ஸ்ரீஶத்ருக்நாழ்வானோடும் கூடப்பெறுத கிழிக்குறையாலே, கூடநிற்கிற விளையபெருமாளோடும் கூடிற்றுய்த்தோற்றிற்றில்லையிறே பெருமாளுக்கு ; [குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா] (குஹேநஸஹிதோராமோலக்ஷ்மணேந சஸீதயா) கூடப்போன இளையபெருமாளோடும் பிராட்டியோடும் கூடிற்றுய்த்தோற்றிற்று ஸ்ரீகுஹப்பெருமாளோடு கூடினபின்பிறே ; இப்படியிறே யவன்றனக்கு மங்வயவ்யதிரேகங்க ளிருக்கும்படி ; ததீயஸம்ஶ்லேஷத்தையாசைப்பட்டுப்பெறுமையாலே வந்தஇழவு, பெற்றபகவத்ஸம்ஶ்லேஷமிழந்து அடியேபிடித்துப்ப்ரார்த்திக்கவேண்டும்படியாய் வந்துவிழுந்தது. * வாயுந்திரையுகளி லார்த்திநீரவந்து ஸம்ஶ்லேஷித்தஸம்ஶ்லேஷம் முற்றுவதற்குமுன்னேவந்த பிரிவாகையாலும் ஆற்றவொண்ணுதிறே..*

ஜீயர் அரும்பதம்.

ஆடியாடிப்ரவேஶே, வ்ருத்தாநுவாதபூர்வகமாக இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி (கீழிற்றிருவாய்மொழியிலேயித்யாதி) பருகிக்களித்தேன் - பாநம்பண்ணி யாநந்தித்தேன். அதுதன்னை - ஹ்ருஷ்டரானமையை. உசாவி-பரஸ்பரஞ்சொல்லிக்கொண்டு. அதுக்கு - அப்படிதரிக்கைக்கு. “ மாதாவஞ்சிமுறைப்பட்டுமுறையிடுகிற வெழிலத்யவஸாயம் ” என்றுசார்யஹ்ருதயத்திலும், * கடல்ஞாலாதிகளிலும், “ தாயாராவது-உபாயாத்யவஸாயதசை ” என்றுசொல்லியிருக்க, இங்கே-ஸ்ரீவைஷ்ணவர்களாக ஸ்வாபதேசமருளிச்செய்தது - யோஜநாந்தராபிப்ராயமென்று கண்டுகொள்வது.

அந்யாபதேசத்தில், கீழிற்றிருவாய்மொழிகளில் வ்யாவ்ருத்திகதநமுகேந விஸ்தாரஸங்கதி (அஞ்சிறையவித்யாதி) தாமானதன்மை - புருஷஸ்வபாவம். (தன் தசைதான் வாய்விட்டுப்பேசமாட்டாதே பார்ஶ்வஸ்த்தரறிவிக்கவேண்டும்படியாயிதி) பார்ஶ்வஸ்த்தர்வார்த்தையும் தம்முடையபாசுரமேயாயிருக்க, இதுதான் கூடினபடியெங்ஙனேயென்னில் ; ஈஶ்வரனுழ்வார்க்கு, தந்தசையைத்தாமறிவிக்கமாட்டாதபடி பிறந்த வவஸாதாதிசயத்தைக்கண்டு, இவர்தரிக்கைக்காக, பரிஸரத்திலவர்த்திக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களிவர்தசையைத்தனக்கறிவித்ததாகஇவர்க்கொருபுத்திவிசேஷத்தைப் பிறப்பிக்க, அத்தாலே தரிப்புண்டாய் அவர்கள் பாசுரத்தாலே தாம்பேசுகிறுரென்று கருத்து. “ ஆடியாடி ” என்றத்தைப்பற்ற (ஸ்த்திதிகமநஶயநாதிகளி லொருநியதி யின்றியிலேயென்றது) அரதி - விஶ்லேஷவ்யஸநம். “ இலங்கைசெற்றீர் ” “ வாணனுயிரந்தோள்துணித்தீர் ” என்றத்தைப்பற்ற (ராமக்ருஷ்ணுத்யவதாரங்களென்றது) ஆதிஶப்தத்தால் - நரஸிம்ஹாவதாராதிகள், “ பார்த்திருப்பதே ” என்றுஅவனைச்சொல்லுகிறதென், தான்பர்

ஹரிக்கவொண்ணுதோவென்ன (எல்லாவளவிலுமித்யாதி) (கேட்கிறபாசுரத்தாலேயென்றது) " நமதிட்டமென்சொல் " இத்யாதியைப்பற்ற. " அருசிறையமடநாரை " " வாயுந்திரையுகள் " இவற்றைப்பற்றஇதில் வ்யஸநமதிசயிக்கைக்கடியேதென்ன (காசையித்யாதி) காசுஎன்கிறது - அவதாரங்களை. பொன்என்கிறது- அர்ச்சாவதாரத்தை. ரத்நம்என்கிறது-நித்யஸூரிகளை. " காசினைமணியை " " செம்பொனேதிகழும் " " செழுமாமணிகள்சேரும் " என்னக்கடவதிறே. " காசு, பொன், " இரண்டுமொன்ருனல், (காசையிழந்தவனுக்கும் பொன்னையிழந்தவனுக்குமென்று) க்லேசதாரதம்ய ஹேதுவாகச்சொல்லுகைக்கடி - அவற்றினுத்கர்ஷாபகர்ஷஹேதுவான் மாற்றில்தாரதம்யம். அப்படியேயவதாரங்களுக்கும், அர்ச்சாவதாரத்துக்கும் ஸௌலப்யாதிதாரதம்யங்கண்டுகொள்வது. யத்வா, காசு-காசாதல். அத்யல்பகாலீநத்வத்தையும் காலாந்தராநுபயோகித்வத்தையும்பற்ற - த்ரிவிக்ரமாவதாராதிகளைக் காசுஸ்த்தாநத்திலேவைத்தார் ; ஸர்வகாலமநுபாவ்யத்வத்தையும், " செம்பொனேதிகழுந்திருமூர்த்தியை " என்றத்தையும்பற்ற - அர்ச்சாவதாரமான நம்பியைஸ்வர்ணஸ்த்தாநத்திலேயாக்கினர், சரமபர்வத்வத்தையும், "செழுமாமணிகள்" என்றப்ரயோகத்தையுமுட்கொண்டு-ஸூரிகளை ரத்நஸ்த்தாநத்திலேயாக்கினர் ; " செழுமாமணிகளாவார் - திருமழிசைப்பிரான்போல்வார் " என்றிறேவ்யாக்யாநம்பண்ணிற்றென்று - " காசையிழந்தவனுக்கும் " இத்யாதிவாக்யத்துக்குத் தாத்பர்யம். உபபாதநம் (அவதாரத்திலேயித்யாதி) ப்ராணபூதரானவென்றது - " ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் " (ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்) என்றத்தைப்பற்ற.

தடஸ்த்தஸங்கையை யநுவதித்துப்பரிஹரிக்கிருர் (நித்யஸூரிகளித்யாதி) " நரசிங்கா " " இலங்கைசெற்றவனே " என்று - அவனைச்சொல்லிக் கூப்பிடுவானேனென்றபடி. " கூப்பிடுவது " என்றவநந்தரம் - அப்படியேயென்று கூட்டுவது. பரிஹாராந்தரம் (பகவத்விஸ்லேஷத்திலேயித்யாதி) அதாவது - பாகவதவிஸ்லேஷ வ்யஸநாதிசயந்தெரிவது,பெற்றபகவத்ஸம்ஸ்லேஷமும்போய், அதுவும் ப்ரார்த்த்யமாம்படி யுட்புகநின்ருலிறே; இல்லையாகில், பாகவதவிஸ்லேஷமாகாது; ஆகையாலே, இவர் பாகவதவிஸ்லேஷத்திலே யுட்புகநின்றவராகையாலே, அதிவர்க்கு பகவத்விஸ்லேஷபர்யந்தமாய், அவன்றன்னையடியேபிடித்து ப்ரார்த்தித்துக் கூப்பிடுகிருரென்றபடி.

அப்படி, பெற்றது அஸத்கல்பமாகத் தோற்றுமோவென்ன (கதாங்வஹமித்யாதி) ஆரண்யகாண்டே ஷோடஸலக்ஷ்மணம் ப்ரதிராம:. ஸங்க்ஷேபே, " குஹேந ஸஹித: " (குஹேநஸஹித:) இத்யாதி. கிழிக்குறை - சாளிகைக்குறை. கிழி - சாளிகை. (கூடியதாய்த்தோற்றிற்றில்லையிறே) கூடியிருக்கச்செய்தேயும் கூடிற்ருய்த்தோற்றிற்றில்லையிறேயென்றபடி. எப்படியென்னில், த்ருஷ்டாந்தம் (கிழிக்குறையாலேயென்றது) அதாவது - தநுப்த்தனுக்கொருமுடிச்சிலேயிலே சிலகுறைந்தால், ஸேஷமிருந்தது இருக்கிறதாய்த்தோன்ருதிறே ; அப்படியென்றுகருத்து. அந்வயத்திற்கூடினதா யிருக்குமென்னுமதுக் குதாஹரணம் (குஹேநேத்யாதி) (அவன்றனக்கும்) " ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: " (நமேத்வேஷ்யோஸ்திநப்ரிய:) என்னுமவனுக்கும். அவனுக்குமிப்படியானல் இவர்க்குச்சொல்லவேண்டாவிறே யென்றுகருத்து. "பகவத்விஸ்லேஷத்திலே" இத்

யாதி வாக்யவிவரணம் (ததீயஸம்ஶ்லேஷத்தையித்யாதி) ஏதத்வாக்யாத்பூர்வம்-அப்படியேயித்யத்யாஹார்யம்.

" இதிலவன்றனக்கும்ப்ராணபூதரான " இத்யாதிவாக்யத்திலே - விஷய வைலக்ஷண்யத்தாலே யாற்றாமைவிஞ்சியிருக்குமென்றார் ; அவ்வளவன்றிக்கே, ஸ்வஸ்வபாவத்தாலு மாற்றாமைவிஞ்சியிருக்குமென்கிறார் (வாயுந்திரையுகளிலித்யாதி) முடிவிலேயிருக்கிற இந்தவாக்யம் - " இதிலவன்றனக்கும் ப்ராணபூதரான " இத்யாதிவாக்யாநந்தர மநுஸந்தேயம்..*

நான்காந் திருவாய்மொழி.

முதற்பாட்டு.

ஆடியாடியகங்கரைந்திசை, பாடிப்பாடிக்கண்ணீர்மல்கியெங்கு
நாடிநாடிநரசிங்காவென்று, வாடிவாடுமிவ்வாணுதலே.

ஆறாயிரப்படி.

எம்பெருமானைப்பிரிந்த வ்யஸநத்திலே தன்னைக்கொண்டு தரிக்கமாட்டாமையாலே தன்னுடைய ஆஶ்வாஸார்த்தமாக அவனுடையகுணசேஷ்டிதங்களைப்பாடியாடினவிடத்திலும் அதுதனக் காஶ்வாஸகரமாகாதே யவஸாதகரமேயாக, " இனியவனைக்கண்டாலல்லது தரிக்கமுடியாது " என்றுபார்த்து அவனையெங்குந்தேடி, ஆஶ்ரிதருடைய துர்த்தஶைகளில் ஸஹஸைவதோன்றிக்கொண்டுநிற்கும் ஸ்வபாவனானவனேயென்றழைத்துப் பின்னையுங்கண்டாலுந் தேறாதபடியொருபடியறவாடிப்போயறவாடினாளிவ்வாணுதலென்று திருத்தாயார்ப்ரலாபிக்கிறாள்.

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், " ப்ரஹ்லாதனுக்குதவினாற்போலே வந்துதவுகிறிலன் " என்று இவள் தளராநின்றாளென்கிறாள்.

இவ்வாணுதல் - ஒளிவிடுகிறநெற்றியையுடையளானவிவள். ஆடியாடி - வல்லாராடினாற்போலே தர்ஶநீயமாம்படி, தன்னாற்றாமையாலேநின்றவிடத்தில் நில்லாதேபலகாலுமுலாவி. அகங்கரைந்து - மநஸ்ஸைதில்யம்பிறந்து. இசைபாடிப்பாடி. அந்தக்லேஶமடியாக, இசையிலேபலகாலும்பாடுவாரைப்போலேப்ரலாபித்து. கண்ணீர்மல்கி-கரைந்தநெஞ்சு ப்ரவஹிக்குமாபோலே கண்கள்நீர்மல்கி. எங்கும்-ஸர்வதேஶத்திலும். நாடிநாடி - அவன்வரவையாராய்ந்து பலகாலும்பார்த்து. நரசிங்காவென்று-எங்குந்தோற்றவல்ல நரஸிம்ஹரூபத்தையுடையவனேயென்று. வாடிவாடும்-அவ்வளவிலும் வரக்காணாமையாலே வாட்டத்தின்மேல் வாட்டமாம்படி தளராநிற்கும்..*

எ டு - முதற்பாட்டு.

முதற்பாட்டில், ஆபத்தே செப்பேடாக ஆஸ்ரிதன் ப்ரதிஜ்ஞாஸம காலத்திலே வந்துதவும் ஸ்வபாவனானவனைச்சொல்லிக் கூப்பிடாநின்றாளென்கிறாள்.

(ஆடியாடி.) ஸ்த்ரீத்வமநஸ்பநாதிகளிலொரு நியதியின்றிக்கே அரதியாலேபடுகிறபாடுதான், திருத்தாயார்க்கு ஆகர்ஷகமாயிராநின்றதாயிற்று; ஸ்ரீகௌஸல்யையார் பெருமாளைப்பிரிந்து துடிக்கிறதுடிப்பை "ந்ருத்யந்தீமிவமாதரம்" (ந்ருத்யந்தீமிவமாதரம்) என்றானிறே; வடிவழகியார் வ்யாபாரங்களெல்லா மினிதாயிருக்குமிறே, பிரிந்தழகழிந்திருக்கிற ஸமயத்திலேயிறே "ஸம்ஹாரம்" (ஸம்பாரம்) என்றது. (ஆடி) முதல் "ஆடி" என்றதுக்கவ்வருகே பொருநிலையிறே-இரண்டாமாடி. முதலிலே ஸஞ்சாரமரிதாம்படியிருக்கச்செய்தே, ஆற்றாமைப்ரேரிக்க ஸஞ்சரியாநிற்கும், குணுதிகவிஷயமாகையாலே முடிந்துபிழைக்கவுமொட்டாதே. [ராமாகமநகாங்க்ஷயா] [ராமாகமநகாங்க்ஷயா] "இன்னமொருகாலவர்முகத்திலே விழிக்கலாமாகில் அருமந்தப்ராணனைப் பாழேபோக்குகிறதென்" என்று ராஜ்யத்தையும் தொட்டுக்கொண்டுகிடந்தானிறே. முதல் "ஆடி" என்கிறதிற்காட்டில், இருகால்மட்டு "ஆடி" என்றதில்-அவஸாதத்தின்மிகுதி, தாளங்கொண்டறியுமித்தனை. (அகங்கரைந்து) ஸஞ்சாரம்செல்லாநிற்கச்செய்தே ஸஞ்சாரமடியற்றிருக்கும். இவள் வ்யாபாரம் கண்ணுக்கிலக்கானாற்போலே, அகவாயுமிவள நெஞ்சுக்கிலக்காயிருக்கிறபடி. மநஸ்தத்வம் நீராயுருகிப்போயிற்றென்கிறாள் (இசைபாடிப்பாடி) "மந:பூர்வோவாகுத்தர:" (மந:பூர்வோவாகுத்தர:) என்கிற க்ரமநியமமில்லை. ஆற்றாமையாலே கூப்பிடுகிற கூப்பீடுதான்பாட்டாய்த் தலைக்கட்டுகிறவித்தனை; * பண்ணைவென்றவின்சொன்மங்கையிறேயிவள்தான், "மதுராமதுராலாபா" (மதுராமதுராலாபா) ஆற்றாமையாலே துடித்ததுடிப்பு ஆடலானாற்போலே, ஆற்றாமையாலே கூப்பிட்ட கூப்பீடும்பாட்டாய்விழாநின்றது. முதல்கூப்பீடுபோலன்றிக்கே, இரண்டாங்கூப்பீடுதளர்ந்திருக்குமிறே. (கண்ணீர்மல்கி) உருகினமநஸ்தத்வம், இசையாய்ப்ரவஹித்து மிக்கதுகண்ணீராய்ப்ரவஹிக்கிறபடி; நெஞ்சொழியப்பாய்கிறகண்ணீரிறே. (மல்கி) மிக்கு. [கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி ஸோகஜம்] [கிமர்த்தம்தவநேத்ராப்யாம் வாரிஸ்ரவதிஸோகஜம்] "ஆநந்தாஸ்ருவுக்குயோக்யமானகண்களாலேஸோகாஸ்ருப்ரவஹிக்கிறது ஆர்குடிவேர" என்றுபட்டரருளிச்செய்யும்படி; அன்றிக்கே, பிள்ளான், "ஆனைச்சேதநராக்கக்கொண்டு" என்றுபணிக்கும். [புண்டரீகபலாஸாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம்] [புண்டரீகபலாஸாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம்] பாவியேன், இவ்வரவுடையபெருமாள் வரவாய்க்காணப்பெ

ற்றதில்லை. (எங்கும்நாடிநாடி) தன்னைத்தேசெப்பேடாக, வர்ஸம்பாவ னையில்லாததிக்கையும்பார்க்கும். [ஸாதிர்ய ....] [ஸாதிர்யகூர்த்வஞ்சததாப்யதஸ்தாத்] நினைவின்றிக்கே யிருக்கச்செய் தே வாராத்திருநாமம்செவிப்பட்டவாறே, விலங்கப்பார்ப்பதுமேலேபார் ப்பது கீழேபார்ப்பதானுள். கீழ்ப்பார்த்ததுக்குக் கருத்தென்னென்னில்; “ பூமியைப்பிளந்துகொண்டு புறப்பட்டு ஒருவன் திருநாமஞ்சொல்ல ஸம்பாவனையுண்டாகில், அல்லாததிக்குகளிலுமுள்ளது ” என்றுபார்த் தாள்; அன்றிக்கே, மாஸோபவாஸிகள், “ சோறு ” என்றவாறே அல மாக்குமாபோலே பார்த்தாளென்னுதல் ; அங்ஙனன்றிக்கே, ஶிம்ஶபா வ்ருக்ஷத்தை யெங்குமொக்கப்பார்த்தாளென்னுதல். [....] [தமசிந்த்யபுத்திம்ததர்ஶ] அவன்வடிவுகாண்பதற்குமுன்னே அகவாயையாயிற்றுபரிச்சேதித்தது, “இந்நிலத்திலேபுகுந்திடங்கொண்டு நாமிருந்தவிடந்துருவிநிலைகுத்தவல்ல நெஞ்சையுடையவனன்றே ” என் று. [....] [பிங்காதிபதேரமாத்யம்] “ இவன்ஸ் வதந்த்ரனல்லன், ராஜகார்ய மிவன்கையிலேயுண்டு ” என்றறிந்தாள். [....] [வாதாத்மஜம்] பெருமாளுக்கு ப்ராணஹேதுவானபிரா ட்டிக்கு ப்ராணங்களைக்கொடுக்கையாலே “ இவன்ஸர்வர்க்கும் ப்ராண ஹேதுவான வாயுபுத்ரன் ” என்றுதோற்றவிருந்தான். [....] [ஸூர்யமிவோதயஸ்தம்] லங்கையிலும் கிழக்குவெளுக்கவ டியிட்டது. “ பெருமாளாகிற ஆதித்யோதயத்துக்கருணோதயம் ” என்ன லாம்படியிருந்தான்; ஆகையிறே லங்கைநாலுமதிலுக்குநடுவு“ஹரிஹரி” என்றபடியேயிருக்கிறது. இப்படிவருகைக்கு ஸம்பாவனையில்லாததிக்கி லும் தேடுவாளென்னென்னில்; ஸம்பாவனையில்லாதவிடத்தேயும்வந்து தோற்றுமவனாகையாலே. * பத்துடையடியவர்க்குப்பின்பவதாரத்துக்க வ்வருகு இவர்போகமாட்டார். “ (எங்கும்நாடிநாடி) தன்கொய்சகமுட் படப்பாராநின்றுள் ” என்று பட்டரருளிச்செய்யும்படி. அதுக்குக்கருத் து - “ கண்ணனென்னெனுக்கலையானே ” என்று அவனிருந்தப்ரதேஶமா கையாலே. (நரசிங்காவென்று) ப்ரஹ்லாதனைப்போலே யொருதம்பமி ல்லாதபடியிருக்கையாலேவாடும். “ ‘ .... ’ (மத்தஸ்ஸர்வ மஹம்ஸர்வம்) என்னும்தெளிவுடையவனுக்குத் தோற்றினவன் கலங்கின அபலைக்குத்தோற்றுன், ஓ! ” என்னுமத்தாலே. தமப்பன்பகையாலோ உதவலாவது, நீர்பகையாலுதவலாகாதோ; ஜ்ஞாநநிஷ்டர்க்கோ உத வலாவது, பக்திநிஷ்டர்க்குதவலாகாதோ; ஆண்களுக்கோ உதவலாவ து, பெண்களுக்குதவலாகாதோ; சேராதவடிவுசேர்த்துதவிலோ உதவ லாவது, இருந்தபடியே உதவலாவார்க்குதவலாகாதோ; ஒரு அதிகாரிநி யதி, ஒருகாலநியதி, ஒரு அங்கநியதி, என்கிற நிர்ப்பந்தம்வேணுமோ இ

வளுக்கு; இவளுடையரக்ஷணத்துக்கு மேதேனும் ரூகம்பண்ணவேணு மோ. (வாடிவாடும்) கொம்பையிழந்ததளிர்போலேவாடும். " முதல் வாட்டம் - தளிர் " என்னும்படியிறே அநந்தரத்திலவாட்டம். (வாடும்) தர்மிலோபம்பிறந்ததில்லை, "வரும்" என்னுமாசையாலே முடியப்பெறு கிறிலள். (இவ்வாணுதலே) ஒளியுடன்கூடினநுதலையுடையவிவள். இ வ்வழகுக்கிலக்கானுர் படுமத்தை யிவள்படுவதே. இவள்முடிந்தால், உம் முடையமேன்மையாலே " இன்னமிப்படியிருப்பதொரு வ்யக்தியையுண் டாக்கலாம் " என்றிருக்கிறீரோ. " [illegible] " (தாதாயதாபூர்வமகல்பயத்) என்கிறபடியே ஸ்ருஷ்டிக்கலாமென்றிருக்கிறீ ரோ. * ஊனில்வாழுயிரில் கலவியாலுண்டானபுகரின்ன மழிந்ததில்லைகா ணும். அம்புபட்டுமுடிந்தாரையும் நீரிலேபுக்குமுடிந்தாரையும் முகத்தி லேதெரியுமிறே; குணாதிகவிஷயவிரஹத்தாலேவந்த இழவென்னுமிடம் முகத்தினொளியிலே தெரியாநின்றதுகாணும்........................*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (ஆடியாடியித்யாதி) "நரசிங்கா" என்றத்தைப்பற்ற (ஆபத் தேயிதயாத்) செப்பேடு-தாம்ரஶாஸநம். ப்ராபகமென்றபடி. (ஆபத்தேசெப்பே டாக ஆஶ்ரிதன்) பண்ணின (ப்ரதிஜ்ஞை) இத்யந்வய:. " இந்தவாபத்தி லவனு தவாதிரான் " என்று விஶ்வஸித்துப்பண்ணின ப்ரதிஜ்ஞையென்றபடி.

அாதியாலே அடியாகிற்க, "ஆடி" என்கிறதென்னென்ன (ஸ்த்ரீதிகமரே த்யாதி) இப்படிசொன்னபேருண்டோவென்ன (ஸ்ரீகௌஸல்யையாரித்யாதி) (என்றுணிறே) வால்மீகியென்றுசேஷம். (ந்ருத்யந்தீமிதி) அயோத்யாகாண்டே வநகமநார்த்தமபிவாதயப்ரஸ்த்திதே ஸதிராமே கௌஸல்யா, " ராமலக்ஷ்மணஸீதார்த்தம் ஸ்ரவந்தீம் வாரி நேத்ரஜம் । அஸக்ருத் ப்ரைக்ஷத ததா ந்ருத்யந்தீமிவ மாதரம்." (ராமலக்ஷ்மணஸீதார்த்தம் ஸ்ரவந்தீம்வாரிநேத்ரஜம் । அஸக்ருத்ப்ரை க்ஷததாந்ருத்யந்தீமிவமாதரம்.) ஆகர்ஷகத்வஹேதுவேதென்ன (வடிவழகியாரி த்யாதி) " [illegible] " (ஸாஸிஜமநுவித்த ம் ஶைவலேநாபிரம்யம்) இத்யாதி, " ரம்யாணாம் விக்ருதிரபி ஶ்ரியந்தநோதி " (ரம்யாணும்விக்ருதிரபிஶ்ரியந்தநோதி) என்னக்கடவதிறே. பிரிந்தழகழிந் திருக்கிறஸமயத்தில் வ்யாபாரம் தர்ஶநீயமாமோவென்ன (பிரிந்தித்யாதி)(ஶோபா மிதி) ஸுந்தரகாண்டே ஏகோநத்ரிம்ஶே, " [illegible] " (ததாகதாந்தாம்வ்யதிதாம நிந்திதாம்வ்யபேதஹர்ஷாம்பரிதீநமாநஸாம் । ஶுபாந்நிமித்தாநிஶுபாநிபேஜி ரேநரம் ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிந:.) புநஶ்ச " ஆடி " என்கிறதெதுக்காகவெ ன்ன; அவஸாதாதிசயத்தாலேயென்கிறுர் (முதலாடியித்யாதி) " ஆடி " என்று-

அதிலுகர்ஷகத்வஞ்சொல்லும்போது ஸஞ்சாரம் ஸித்தமாகவேணுமே, மோஹித்திருக்கிறவிவளுக்கு ஸஞ்சாரமுண்டோவென்ன (முதலிலேயித்யாதி) ஆனால் க்லேசிப்பானென், முடியவொண்ணாதோவென்ன (குணதிகேத்யாதி) ஏதத்த்ருஷ்டாந்தம் (ராமாகமநேத்யாதி) "நந்திக்ராமே கரோத்ராஜ்யம் ராமாகமநகாங்க்ஷயா" (நந்திக்ராமேகரோத்ராஜ்யம்ராமாகமநகாங்க்ஷயா) இதி ஸங்க்ஷேபே. இதுக்கர்த்தம் (இன்னமித்யாதி) அருமந்த-ச்லாக்யமான. பாழே-வ்யர்த்தமே. "முதலாடியென்றதுக்கவ்வருகே" என்றவாக்யவிவரணம் (முதலாடியென்கிறதிலித்யாதி) (தாளங்கொண்டு) வெண்கலத்வநிபோலே யொருகாலுக்கொருகாலோய்ந்து வருகிறதென்றபடி.

* யத்திமநஸாத்யாயதி தத்வாசாவததி தத்கர்மணாகரோதியன்றோ, அகங்கரைந்தா லாடுகிறபடியெங்ஙனேயென்ன (ஸஞ்சாரமித்யாதி) ஸஞ்சாரம் செல்லாநிற்கச்செய்தே - யாதாயாதங்கள் நடவாநிற்கச்செய்தே. அவஸாதாதிசயமே ஸஞ்சரிப்பிக்குமென்றபடி. மநஸ்ஸிறேப்ரவ்ருத்திக்கடி, அது கரைகையாலே யடியற்றிருக்குமென்றபடி. பரபுத்தேரப்ரத்யக்ஷத்வாத் அகங்கரைந்ததறிந்தபடியென்னென்ன (இவள்வ்யாபாரமித்யாதி) காயிகவ்யாபாரத்தைக் கொண்டனுமிக்கிருளென்றபடி. பதார்த்தம் (மநஸ்தத்வமித்யாதி)

அகங்கரைந்தால் பாடக்கூடுமோ, மந:பூர்வகமன்றோ வாக்ப்ரவ்ருத்தியென்ன (மந:பூர்வஇத்யாதி) "மாநிஷாத" (மாநிஷாத) இத்யாதிஶ்லோகவதிதிபாவ:. கூப்பீட்டை - "பாடி" என்னலாமோவென்ன (ஆற்றாமையாலேயித்யாதி) "நசைவதேவீ விரராம கூஜிதாத்" (நசைவதேவீவிரராமகூஜிதாத்) என்னக்கடவதிறே. கூப்பீடுபாட்டாகைக்கு ஹேதுவேதென்ன (பண்ணையித்யாதி) காநத்தைஜயித்த இனியபேச்சையுடைய மங்கையென்றபடி (மதுரோக்தி) ஸுந்தரகாண்டே ஷட்ஷஷ்டிதமே மாருதிம் ப்ரதிராம:, "மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ । மத்விஹீநா வராரோஹா ஹநுமந் கதயஸ்வ மே" (மதுராமதுராலாபாகிமாஹமமபாமிநீ। மத்விஹீநாவராரோஹாஹநுமந்கதயஸ்வமே) இதி. பலிதம் (ஆற்றாமையாலேயித்யாதி) வீப்ஸைக்குபாவம் (முதற்கூப்பீடித்யாதி)

"அகங்கரைந்து" என்றுதொடங்கி பதச்சேர்த்திக்குபாவம் (உருகினவித்யாதி) அகங்கரைந்தால்கண்ணீர்மல்கக்கூடுமோவென்ன (நெஞ்சொழியவித்யாதி) அதாவது - * முடியானேயிற்கரணங்களாகையாலே கூடுமென்றபடி. ஆகையால் "மல்கி" என்கிறுளென்றபடி. புத்திபூர்வகமாகில்லிறே ததநுகுணமான தாரதம்யமுண்டாவது, அதில்லாமையாலே யபரிச்சிந்நமென்றுகருத்து. "ஆடியாடி" இத்யாதியாலே ஸஞ்சாராதிகளுக்காகர்ஷகத்வஞ்சொல்லிக்கொண்டு வருகிறப்ரகரணபலத்தாலே கண்ணீருக்கு மாகர்ஷகத்வத்தை ஸித்தவத்கரித்து இதுக்குத்ருஷ்டாந்தம் (கிமர்த்தமித்யாதி) ஸுந்தரகாண்டே த்ரயஸ்த்ரிம்ஶே ஸீதாம்ப்ரதிஹநுமாந், "கிமர்த்தம்" (கிமர்த்தம்) இத்யாதி. "ஶோகஜம்" (ஶோகஜம்) என்றதிலே சோக்காக பட்டர்நிர்வாஹம் (ஆநந்தாஶ்ருவுக்கித்யாதி) "கிமர்த்தம் நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி" (கிமர்த்தம்நேத்ராப்யாம்வாரிஸ்ரவதி) என்று ப்ரஶ்நம் பூர்ணமாகையாலே, "தவ நேத்ராப்யாம் ஶோகஜம்" (தவநேத்ராப்யாம்,

ஶோகஜம்) என்றதுக்குபாவம் - உன்னுடையகண்ணுக்கிது யோக்யமோ, ஆநந்தாஶ்ருவன்றோ யோக்யமென்றிறே தோற்றுகிறதென்றுகருத்து. (ஆர்குடி) ராவணன்குடிவேர்பறியவோ, "அபிஶாசமராக்ஷஸம்" (அபிஸாசமராக்ஷஸம்) என்றவர்களெல்லார் குடியும்வேர் பறியவோவென்றபடி. "புண்டரீகபலாஶாப்யாம்" (புண்டரீகபலாஸாப்யாம்) என்றதிலே நோக்காகப்பிள்ளான் நிர்வாஹம். (அன்றிக்கேபிள்ளானித்யாதி) (ஆளைச்சேதநராக்கக்கொண்டு) சேதநன்- போக்தா. ஆருடையபோகார்த்தமென்றபடி. இந்தயோஜனையில், கிம் - க்ஷேபே. தாமரையிதழிலே முத்துப்பட்டாற்போலே யிருக்கிறவிந்த ஸௌந்தர்யத்தை யநுபவிக்கைக்கர்ஹரான பெருமாளருகேயின்றிக்கே யிருக்க, இதுக்கு ப்ரயோஜநமென்னென்றபடி. "பட்டர்நிர்வாஹத்தைப்பற்ற, பிள்ளான்நிர்வாஹமே யுத்தரார்த்தத்துக்குச் சேர்ந்திருப்பது" என்னுமிடந்தோன்ற வுத்தரார்த்தோபாதாநம் பண்ணுகிறார் (புண்டரீசேத்யாதி) பிள்ளான்நிர்வாஹவிவரணம் (பாவியேனித்யாதி) இவ்வரவு - நான்வந்தவரவு. உடைய - ப்ராப்தரான - ஆக, "கண்ணீர்மல்கி" என்றதுக்குபாவத்வயம் - ஆநந்தாஶ்ருவுக்கு யோக்யமான கண்களினின்றும் சோகாஶ்ரு ப்ரவஹிக்கிறதென்று முந்தினது, கண்ணீரோடே யிருக்கிற விருப்பத்யாகர்ஷகமா யிருக்கையாலே யிந்தவழகை ப்ராப்தஶேஷியன்றோ வநுபவிக்க யோக்யனென்றிரண்டாவது.

"எங்கும்நாடிநாடி" என்கிறதுக்கு - "நரசிங்கா" என்கிறபர்யந்தத்துக்கு பாதாநம். "எங்கும்" என்றபதத்துக்கு - ஸம்பாவனை யில்லாததிக்கையும் தேடுமென்றர்த்தம் விவக்ஷித்து, அத்தைஹேதுபூர்வகமாக வருளிச்செய்கிறார் (தன்னுபத்தேயித்யாதி) செப்பேடு - தாம்ரஶாஸநம். (ஆபத்தேசெப்பேடாக)ஆபத்தேப்ராபகமாக நினைத்தென்றபடி. இப்படிபார்த்தபெருண்டோவென்ன (ஸாதிர்யகூர்த்வமித்யாதி) தத்ரைவைகத்ரிம்ஶே ஹநுமத்வாக்ய ஶ்ரவணாநந்தரம்ஸீதா, "ஸாதிர்யகூர்த்வம் ஸததாப்யதஸ்தாந் நிரீக்ஷமாணா தமசிந்த்யபுத்திம் । ௨௨ ததர்ஶ பிங்காதிபதேரமாத்யம் வாதாத்மஜம் ஸூர்யமிவோதயஸ்தம்" (ஸாதிர்யகூர்த்வஞ்சததாப்யதஸ்தாந்நிரீக்ஷமாணாதமசிந்த்யபுத்திம் । ததர்ஸபிங்காதிபதேரமாத்யம் வாதாத்மஜம்ஸூர்யமிவோதயஸ்த்தம்) இதில் "அதஸ்தாத்" (அதஸ்தாத்) என்கிறதுபயுக்தம். (விலங்கப்பார்ப்பது) இலங்கையைச்சுற்றும்பார்ப்பது. (பூமியையித்யாதி) அயோக்யதாபுத்தி, ஸர்வத்ராவிஶிஷ்டமாகையாலும், ஶப்தம் ஶ்ரவிக்கையாலு மெங்கும்பார்த்தாளென்றபடி. த்விதீயபரிஹாரம் (அன்றிக்கேமோஸோபவாஸிகளித்யாதி) முன்னேசொன்ன வபிஸந்தியின்றிக்கே, அலமாப்புத்தானே இப்படிபார்க்கைக்குஹேதுவென்றுகருத்து. அலமாப்பு-அதிக்லேஶம். மூன்றும்பரிஹாரம் (அங்ஙனன்றிக்கே ஶிம்ஶபேத்யாதி) அலமாக்குமாப்போலே- தடுமாறுமாப்போலே. "அசிந்த்யபுத்திம், வாதாத்மஜம்" (அசிந்த்யபுத்திம்,வாதாத்மஜம்) என்கிற பௌர்வாபர்யத்துக்குபாவம் (அவன்வடிவித்யாதி) தத்தேவ் விஶதயதி (இங்கிலத்திலேயித்யாதி) துருவினிலேகுத்துகை-தேடிநிக்ஷேபமுள்ளவிடத்திலே குத்துகை. களவுபோனவஸ்துவை யடையாளமறிந்து பிடிக்கையாதல். (இவன் ஸ்வதந்த்ரனல்லனிதி) ஸ்வதந்த்ரனாகிலிந்த வதிஸங்கடஸ்த்தலத்திலேவருவனோ, பரதந்த்ரனாகையாலே "நிவ்ருத்தியில் ஸ்வாமிதண்டம்வரும்" என்கிற புத்தியுடையவனே யிங்குவரயோக்யனென்று தாத்பர்யம். (ராஜகார்யமித்யாதி)

"அமாத்யன்" என்று அறிகைக்கு ஹேதுவில்லாமையாலே யிதுவேகருத்தென்றபடி. (தோற்ற) தடஸ்த்தர்க்கென்றபடி. ஸூர்யஶப்தம்-அருணவாசி. "ஸூர்யோ கர்த்தே அருணே பாநௌ" (ஸூர்யோகர்த்தேருணேபாநௌ) என்னக்கடவதிறே. ரஸோக்தி (லங்கையிலுமித்யாதி) (பெருமாளாகிறவாதித்யோதயத்துக்கிதி) "ஶரஜாலாம்ஶுமாஞ்ஶூர: கபே ராமதிவாகர:" (ஶரஜாலாம்ஶுமாஞ்ஶூர:கபேராமதிவாகர:) என்றதநுஸந்தேயம். உதயஸ்த்தம் ஸூர்யமிவ வாதாத்மஜந்ததர்ஶ" இத்யந்வய:. உதயஸ்த்தனான அருணனை ஆதித்யோதயஸூசகனாகக்காணுமாப்போலே, இவனையும் ராமோதயஸூசகமாகக் கண்டாளென்றபடி. ரஸோக்தி (ஆகையிறேயித்யாதி) ஹரி-குரங்கு. அருணோதயவேளையிலேஹரிஶப்தஶ்ரவணமுமுண்டேயென்றபடி. ப்ரஶ்நோத்தரரூபேண "நரசிங்கா" என்றதுக்குபாவம் (இப்படிவருகைக்கித்யாதி) பரத்வாதிகளைவிட்டவதாரத்தைச்சொல்லுவானென்னென்ன (பத்துடையித்யாதி) ரஸோக்தி (தன்கொய்சகமித்யாதி) அதுக்கடியேதென்ன (அதுக்குக்கருத்தித்யாதி)

நரசிங்காவென்று என்றது-"வாடும்" என்கிறபர்யந்தத்துக்குபாதாநம். "வாடும்" என்றதுக்கவதாரிகை (ப்ரஹ்லாதனையித்யாதி) தம்பம்-ஸ்தம்பம். சாடுவுக்கு, ஆதாரமென்றபடி. ஸ்தம்பத்தில்தோற்றினாற்போலே யிங்குந்தோற்றாமை யாலேயென்றபடி. ஸ்வாபாவிகம்ஹேதுமாஹ (மத்தஸ்ஸர்வமித்யாதி) ப்ரதமேம்ஶே ஏகோநவிம்ஶே, "மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே । அஹமேவாவ்யயோநந்த: பரமாத்மாத்மஸம்ஶ்ரய:" (மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்மயிஸர்வம்ஸநாதநே । அஹமேவாவ்யயோநந்த:பரமாத்மாத்மஸம்ஶ்ரய:) தோற்றான்-தோற்றுகிறிலன். ஓ என்று-விஷாதாதிஶயஸூசகம். "நரசிங்காவென்றுவாடும்" என்றதுக்கு வெறுப்பாகபாவம் பஹுமுகமாக வருளிச்செய்கிறார் (தமப்பனித்யாதி) (ஒருஅதிகாரிநியதித்யாதி) ப்ரஹ்லாதன், ஸந்த்யாகாலம், நரத்வஸிம்ஹத்வங்கள், என்கிறநிர்ப்பந்தம் வேணுமோவென்றபடி. முகம்பண்ணுகை - ஸிம்ஹமுகத்வேநாவிர்ப்பவிக்கை. கோபிக்கையென்றுத்வநி. அதாவது-அவனுடையரக்ஷணத்திற்போலே யிங்கு ஸிம்ஹமுகம்பண்ணவேணுமோ; இப்படி சீறியருளவேணுமோ, இருந்தபடியே முகங்காட்டவமையாதோவென்றபடி. பதஸ்வாரஸ்யஸித்தார்த்தம் (கொம்பையித்யாதி) புநருக்திக்குபாவம் (முதல்வாட்டமித்யாதி) வர்த்தமாநத்துக்கு பாவம் (தர்மிலோபமித்யாதி) ஆனாலது ப்ரணயத்துக்குக்கொத்தையன்றோவென்ன (வருமென்னுமித்யாதி)

"வாணுதல்" என்றதுக்கு ஶப்தார்த்தம் (ஒளியுடனித்யாதி) "வாணுதல்" என்றதுக்குபாவம் (இவ்வழகுக்கித்யாதி) "இவ்வாணுதல்" என்றதுக்குபாவம் (இவள்முடிந்தாலித்யாதி) ஏதத்விவரணம் (தாதாயதாபூர்வமித்யாதி) இவ்வவஸ்த்தையில் "வாணுதல்" என்னக்கூடுமோவென்ன (ஊனிலித்யாதி) பரிஹாராந்தரம் (அம்புபட்டித்யாதிவாக்யத்வயத்தாலே) "குணதிகவிஷயப்ரயுக்தமிந்தக்லேஶம்" என்னுமிடத்தை முககாந்தியே தெரிவிக்கிறதென்றபடி. (முகத்திலேதெரியுமிறே) அப்படியேயித்யத்யாஹார்யம்.

இவ்வாணுதல்-ஆடியாடிதொடங்கி, வாடிவாடு மித்யந்வய:..................*

இரண்டாம்பாட்டு.

வாணுதலிம்மடவரலும்மைக்
காணுமாசையுளைகின்றாள்விறல்
வாணனாயிரந்தோடுணித்தீரும்மைக்
காணநீரிரக்கமிலீரே.

ஆறாயிரப்படி.

(வாணுதல்) "உம்மைக்காணவேணும்" என்னுமாசையாலே யிவள்நையாநின்றாள்; உம்மைக்காணும்படி யிவள்பக்கல க்ருபைபண்ணு கிறிலீர்; ப்ரதிகூலர் திறத்திலன்றோ இப்படி நைர்க்ருண்யம்பண்ணுவது, உம்மையாசைப்பட்டார் திறத்திலுமிப்படி நைர்க்ருண்யம்பண்ணலாமோ வென்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநிருத்தனை நிரோதித்தபாணனைத் தோண்முடிக்கறுத்த நீரிவ ளுக்கிரங்குகிறிலீரென்கிறாள்.

வாள் - ஒளிவிடுகிற. நுதல் - நுதலையுடையளாய். இம்மடவரல் - மடப்ப த்தால்விஞ்சினவிவள். உம்மை - தர்சநீயரானவும்மை. காணுமாசையுள் - "கா ணவேணும்" என்கிறவாசையிலே. நைகின்றாள் - சிதிலையாகாநின்றாள். விறல் - பெருமிடுக்கனை. வாணன் - பாணனுடைய. ஆயிரந்தோள்துணித்தீர் - ஆயிரந் தோள்துணித்தவரே. உம்மை - உம்மை. காண - காண்கைக்கு. நீர் - நீர். இரக்க மிலீர் - இரக்கமில்லாமையாயிராநின்றீர்.

இவளாசைப்பட்டாலும் பசையில்லை, உம்முடைய இரக்கமிறே காட்டுவ தென்று கருத்து...*

ஈடு - இரண்டாம்பாட்டு.

நடுவேவாடுமித்தனையேயோ! வேண்டுவது விரோதிகிடக்கச்செ ய்தேயென்ன, பாணனுடைய பாஹுவநத்திலும் ப்ரபலமோ! இவள் வி ரோதியென்கிறாள்.

• (வாணுதல்) இவ்வவயவசோபை போகஹேதுவாகை யன்றிக் கே, நைகைக்குறுப்பாவதே. பெற்றவெனக்காகர்ஷக ஹேதுவானவிது, கைப்பிடித்தவுமக்கநாதரஹேதுவாவதே; "ஐயம்ஸீதாஸேஸாநாஸ ஹயூவஸீதவ।வுூதீஸூெஙநாஂஹஜூெநுவாணிஂஸூஹீஷவாணிநா" (இயம்ஸீதாமமஸுநாஸஹதர்மசரீதவ। ப்ரதீச்சசைநாம்பத்ரந்தேபாணி ம்க்ருஹ்ணீஷ்வபாணிநா) (இம்மடவரல்) மடப்பம்வந்திருக்கையாவது- மென்மையையுடையவளாகை. பிரிந்துகலக்கப்பொறாத ஸௌகுமார்யத்

ளை யுடையவள். பிராட்டிதசையைக்கண்ட திருவடியைப்போலே யிருக்கிறதுகாணும் இப்பெண்பிள்ளை தசையைக்கண்ட திருத்தாயார்க்கு, [𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌰𑌾𑌮𑌃] (துஷ்கரம்க்ருதவாந்ராம:) இவளைப்பிரிந்து ஸமாதாநம்பண்ணியிருந்த பெருமாள் சாலவரிதாகச்செய்தார். [𑌹𑍍𑌰𑍀𑌨𑍋𑌯𑌤𑌨𑌯𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃] (ஹ்ரீநோயதநயாப்ரபு:) இவளைப்பிரிந்து தேஹத்தைத் தரித்திருந்தாரென்பதுயாதொன்று, அதுசாலவரிதாகச்செய்தார். [𑌪𑍍𑌰𑌭𑍁𑌃] (ப்ரபு:) ஆனைகுதிரையேறவும், நாட்டாளவும் கற்றாரித்தனை ; ப்ரணயதாரையில் புதியதுண்டிலர். மால்யவானில் பெருமாளிருந்தபோது மேகதர்ஸநத்திலேபட்டபாட்டைக்கண்டு, "வஸிஷ்டஸிஷ்யனொருவ ஸ்த்ரீநிமித்தமாக இப்படிபடுவதே!" என்று கர்ஹித்துச்சிரித்திருந்தான் விரக்தனுகையாலே ; இப்போது "இவளைப்பிரிந்து தேஹத்தைத் தரித்துக்கொண்டிருப்பதே ;" என்கிறுனயிற்று விசேஷஜ்ஞனுகையாலே. [𑌧𑌾𑌰𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌂] (தாரயத்யாத்மநோதேஹம்) இதேதேனுமிரவலுடம்போ சுமந்துகொண்டிருக்கைக்கு. போகாயதநமன்ரே, துக்காயதநமோவிது. பிரிந்தால் "க்ரமத்திலேகூடுகிறேம்" என்று தரித்திருக்கவல்லளல்லளே. (உம்மை) இவள்படியன்ரே உமக்குபதேசிக்கவேண்டுவது, உம்மை நீரறியாமையில்லையே, நம்மைப்பிரிந்தார் பிழையார்கள் " என்றிருக்கவேண்டாவோ. (வாணுதலிம்மடவரலும்மை) " 𑌤𑍁𑌲𑍍𑌯𑌶𑍀𑌲𑌵𑌯𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌂 " (துல்யஸீலவயோவ்ருத்தாம்) என்னும்படிகாணுமிருக்கிறது. (உம்மைக்காணுமாசையுள்ளைநின்ருள்) விஷயாநுரூபமாயிறே ஆசையுமிருப்பது. (காணுமாசையுள்) உம்மோடே யணையவாசைப்பட்டாளோ, காட்சியிலேயு மருமைப்படுத்துவீரோ. (ளைநின்ருள்) இவளைத்தரிப்பிக்கவேண்டா, அடியில் நிலையிலே நிறுத்தவமையும். (உம்மைக்காணுமாசையுள்ளைநின்ருள்) கடலிலேயழுந்தாநின்ருள். * ஆசையென்னுங்கடலிறே. வாடுகைதான் தேட்டமாம்படியாயிற்று.

(விறல்வாணனயிரந்தோள்துணித்தீர்) " நையுமிதுவேயோ வேண்டுவதுப்ரதிபந்தகங்கிடக்க " என்றேநீர்சொல்லுவது பாணனுடையபாஹுவநத்தில் பரப்புண்டோ இவளுடையவிரோதிவர்க்கம். உஷாநிருத்தகடகரன்ருேநீர். பேரனுமாயானுமாகிலோ உதவலாவது, உம்மோடேகலந்த அபலைக்குதவலாகாதோ. (உம்மைககாண) கருமுகைமாலை தேடுவார் சூடவிறேதேடுவது, சும்மாட்டைக்கொள்ள வல்லவிறே ; இவ்வஸ்துவையாசைப்படுவார் படுவது காட்சிக்காகவாயிற்று. " அழைப்பன்திருவேங்கடத்தானைக்காண " " காரார்திருமேனி காணுமளவும் " ; இவர்தாமும், " கண்களாற்காணவருங்கொலென்று " . உம்மையிவள்

காண்கைக்கிடாக நீரிரக்கத்தையுடையீராகிறீர். (நீரிரக்கமிலீரோ) "[illegible]" (நைவதம்பாந்) என்கிறபடியே நீர்நோவுபடுகை தவிர்ந்தால், ஸாமாந்யமான விரக்கமும்போகவேணுமோ. "இவள்நைவு பேற்றுக்குபாயமல்ல, அவனிரக்கம் பேற்றுக்குஸாதநம்" என்றுகாணும் திருத்தாயாரிருக்கிறது. "இவள்நைவு அவனிரக்கத்துக்குப்பரிகரம், அவனிரக்கம்பேற்றுக்குஸாதநம்" என்றிருக்கிறான். [தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்ஸ்வாம் என்று] தானே காட்டக்காணுமித்தனையிறே.*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு (வாணுதலித்யாதி) "வாணனாயிரந்தோள்துணித்தீர்" என்றத்தைக்கடாக்ஷித்து சங்காபரிஹாரமுகேநாவதாரிகை (நடுவேயித்யாதி)

"வாணுதல்-நைகின்றாள்" என்றுகூட்டிபாவம் (இவ்வவயவசோபையித்யாதி) "இம்மடவரல்" என்றவிடத்தில் "இ" என்றத்தை, "இரக்கமிலீர்" என்றத்தோடேகூட்டிபாவம் (பெற்றவெனக்கித்யாதி) பெற்றவர்களுக்காகர்ஷகஹேதுத்வேஸம்வாதம் (இயம்ஸீதேத்யாதி) பாலகாண்டே ராமம்ப்ரதிஜநக:. "[illegible]" (இயம், பத்ரந்தே) என்கிறபதங்களாலே யாகர்ஷகத்வம்ஸூசிதம். ஜநகராஜன் பிராட்டியுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து "[illegible]" (இயம்ஸீதா) என்றாற்போலே, திருத்தாயாரும் பெண்ணினுடைய வைலக்ஷண்யத்தையநுஸந்தித்து "இம்மடவரல்" என்கிறாளென்றபடி. மென்மை-மார்த்தவம். விவரணம் (பிரிந்தித்யாதி)

பாட்டையெல்லாம் பராமர்ஶித்தருளிச்செய்கிறார் (பிராட்டிதசையையித்யாதி) அதாவது - பிராட்டிவைலக்ஷண்யத்தைக் கண்டதிருவடிக்கு, "இவளை விஶ்லேஷித்திருக்கிற பெருமாளதி ஸாஹஸம்பண்ணினார்" என்றுதோற்றினாற்போலே, இவளுடைய வவயவசோபையையும் ஸௌகுமார்யத்தையு மநுஸந்தித்ததிருத்தாயார்க்கு "ஈஶ்வரன் ஸாஹஸப்ரவ்ருத்திகன்" என்றுதோற்றியிருக்கிறதென்றபடி. அப்படிதிருவடி, பெருமாளைவெறுத்தானென்ன (துஷ்கரமித்யாதி) ஸுந்தரகாண்டேபஞ்சதஶே ஸீதாம்த்ருஷ்ட்வாஹநுமத்விசார:, "[illegible]" (துஷ்கரம்க்ருதவாந்ராமோஹீநோயதயாப்ரபு: । தாரயத்யாத்மநோதேஹந்நஶோகேநாவஸீததி) விஶ்லேஷமே தார்க்கடமென்கிறவபிப்ராயேணாஹ (இவளைப்பிரிந்தித்யாதி) இருந்த - தரித்திருந்த. "[illegible]" (ப்ரபு:-ராம:-அநயாஹீநஸ்ஸந்-ஆத்மநோதேஹம் தாரயதீதியத், தத்துஷ்கரம்க்ருதவாந்) இத்யந்வயமுகேநபாவம் (இவளைப்பிரிந்து தேஹத்தையித்யாதி) "[illegible]" (தாரயதி) என்றதிலேநோக்கு. "தைவக்ருதமான விஶ்லேஷத்துக் கவனென்செய்வர்" என்றிருக்கையாலே, "[illegible]" (ஹீந:) என்று - குற்றஞ்சொல்லுகிறானல்லன் "[illegible]" (தாரயதி) என்று குற்றஞ்சொல்லுகிறானென்றபடி. (ப்ரணயேத்யாதி) இத்தனைநாளும் "[illegible]" (ப்ரணயி) என்று ப்ரமித்திருந்தோம்; ப்ரணயிகள்படியன்றிக்கே, பிரிந்துதரித்திருக்கையா

லே ப்ரணயியல்லர் ; கேவலம்ப்ரபுவென்றபடி. புதியதுண்டிலர் - ஏகதேசமு மநுபவித்திலர். புதியதுண்கை - ஏகதேசாநுபவம். “ ஸாவம்ஸீதாநுஜா த்ருஷ்டா ஹ்ருஷ்டேவ ந ஸமுவ: ” ஏவம்ஸீதாந்ததாத்ருஷ்ட்வா ஹ்ருஷ்டபவநஸம்பவ:) என்கிறமேலில்ஶ்லோகத்தில், “ ததா ” (ததா) என்றதிலே நோக்காக பாவம் (மால்யவானிலித்யாதி) இப்போதிவனைக் கண்டிப்படி சொல்லுகையாலே, இவனைக்காணுமையாலே மால்யவானிலே கர்ஹித்ததர்த்தஸித்தம் ; “ மாமயம் ஸ்நுதேநுஷ: ” (மமாயிவ்யதிதம்மநஃ) என்றதேயிதுக்கு நியாமகம். “ ஆத்மந: ” (ஆத்மநஃ) என்றுவிஶேஷித்ததுக்குபாவம் (இதேதேனுமித்யாதி) இரவலுடம்போ - பிராட்டிக்குப்போலே - பரதந்த்ரமானவுடம்போ. இரவல்-பரதந்த்ரம். பாரதந்த்ர்யத்தாலே யிப்பிராட்டிக்கு தேஹதாரணங்கூடும், அப்படியிவர் பரதந்த்ரரன்றே தேஹத்தைதரித்திருக்கைக்கென்றபடி. “ நவாஸ்யமாதா ” நசாஸ்யமாதா) இத்யாதி, “ நவஸ்வெவ ” (நசல்வத்யைவ) இத்யாதி. “ தேஹம் ” (தேஹம்) என்றதுக்குபாவம் (போகாயதநமித்யாதி) “ போகாயதநம்-ஶரீரம் ” (போகாயதநம்-ஶரீரம்) என்றுசரீரலக்ஷணம். துஃக்காயதநமோ துஃக்கைகாயதநமோ. ஆனுலிவர் ப்ருகுபதநாதிகளைப் பண்ணவோவடுப்பதென்ன ; அங்ஙனல்லவென்கிறுர் (நஶோகேநாவஸீததிஎன்று) இதுவேயிறே ப்ரணயித்வத்துக்குச்சேர்ந்தது, அதுப்ரணயித்வத்துக்குச் சேராதென்றபடி. நிருச்ச்வாஸதைபோலே யாகவேணுமென்றுதாத்பர்யம். “ அநயா ” (அநயா) என்றதுக்குபாவம் (பிரிந்தாலித்யாதி) “ மடவரல் ” என்றதுக்கு ஶப்தார்த்தமாதல்.

விஶேஷணமிடாமல் கேவலம் “ உம்மை ” என்றதுக்குபாவம் (இவள்படியித்யாதி) அதாவது - “ வாணுதலிம்மடவரல் - மைகின்றுள் ” என்று இவள்ப்ரகாரமேயன்றே வுமக்குச்சொல்ல வேண்டுவதென்கை. அறிந்தாலோவென்ன (நம்மையித்யாதி) இவ்வாக்யத்துக்கடியிலே - ஆகையாலே யித்யத்யாஹார்யம். கீழே, இருவர்வைலக்ஷண்யத்தையும்பார்த்தாலும் வரவேணுமென்றெரு தாத்பர்யமருளிச்செய்து, இருவர் வைலக்ஷண்யத்துக் கீடாகவும் இவளுக்காசை கனக்கப்பிறந்ததென்று பாவாந்தரம் (துல்யஶீலேத்யாதி) ஸுந்தரகாண்டே ஸீதாம்த்ருஷ்ட்வாஹநுமாந் “ துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் । ராகவோர்ஹதிவைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா. ” (துல்யஶீலவயோவ்ருத்தாம்துல்யாபிஜநலக்ஷணாம் । ராகவோர்ஹதிவைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா.) விஷயாநுரூப மென்றதுக்கு - “ உம்மை ” என்றதிலேநோக்கு. “ காணும் ” என்றதிலேநோக்காகபாவம் (உம்மோடேயித்யாதி) அடியில்நிலையிலே - “ வாடிவாடும் ” என்கிறநிலையிலே. “ உள் ” என்கைக்கு - ஆசையகாதமாயிருக்குமோவென்ன (கடலிலேயித்யாதி) ஆசையைக்கடலென்னலாமோவென்ன (ஆசையென்னுமித்யாதி) பெரியதிருமொழி. (ஆசையென்னுங்கடலில் வீழ்ந்திங்கயர்த்தோம்) “ உம்மைக்காணவேணும் ” என்கிறவாசையாகிற கடலிலே புக்ககப்பட்டறிவுகெட்டோமென்கை. “ அடியில்நிலையிலே ” இத்யாதிக்குவிவரணம் (வாடுகைதானித்யாதி)

“ விறல்வாணன் ” இத்யாதிக்கவதாரிகா பூர்வகமாகபாவம் (நையுமிதுவேபோலித்யாதி) விறல் - மிடுக்கனை. வாணனுடைய பாஹுவநத்திலித்யாதிவாக்யம் - ஸ்வாபதேசாங்யப தேசஸாதாரணம். இப்படிநைகிறவர்களுக் காருக்குத

விறேனமென்ன (உஷாகிருத்தேத்யாதி) இது - தாத்பர்யார்த்தம். இத்தைச்சொல்லுகிறவளுடைய ஹார்தபாவம் (பேரனுமாயித்யாதி)

ஸ்வாபதேசத்திலேபாவம் (சருமுகைமாலையித்யாதி) (சும்மாட்டைக்கொள்ளவல்லவிறேளென்று) இத்தால்பலிதம் - ப்ரயோஜநாந்தர ஸாதநத்வேநவன்றிறே யென்றபடி. இவ்வஸ்துவையித்யாதி வாக்யத்தினடியிலே-அப்படிபோலே யித்யத்யாஹார:. இதுக்குதாஹரணம் (அழைப்பனித்யாதி) நாலாந்திருவந்தாதி. ஸ்பஷ்டோர்த்த:. ஸப்தார்த்தம் (உம்மையித்யாதி) “𑌨𑍈𑌵𑌦𑌂𑌶𑌾𑌨𑍍” (நைவதம்ஸாந்) இத்யாதிக்குபாவம் - ஸ்நேஹமில்லாவிட்டாலிரக்கமாகிலும் வேண்டாவோவென்றபடி. ஸாமாந்யமான விரக்கமுமென்றது - “𑌵𑍍𑌯𑌸𑌨𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂” (வ்யஸநேஷு மநுஷ்யாணாம்) இத்யாதியைப்பற்ற. ஸுந்தரகாண்டே ஷட்த்ரிம்ஸே ஸீதாம்ப்ரதிமாருதி:, “𑌨 𑌮𑌾𑌂𑌸𑌂” (நமாம்ஸம்) இத்யாரப்ய, “𑌨𑍈𑌵 𑌦𑌂𑌶𑌾𑌨𑍍 𑌨 𑌮𑌶𑌕𑌾𑌨𑍍 𑌨 𑌕𑍀𑌟𑌾𑌨𑍍 𑌨 𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌨𑍍। 𑌰𑌾𑌘𑌵𑍋𑌽𑌪𑌨𑌯𑍇𑌦𑍍𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾.” (நைவதம்ஸாந்நமஸகாந்நகீடாந்நஸரீஸ்ருபாந்। ராகவோபநயேத்காத்ராத்த்வத்கதேநாந்தராத்மநா.)

“இரக்கமிலீர்” என்கிறதென், “நைகின்றாள்” என்கிற - ப்ராவண்யம் ஸாதநமாகாதோவென்ன (இவள்நைவுபேற்றுக்கித்யாதி) ஆனால் நைவுக்குவிநியோகமேதென்ன (இவள்நைவவனிரக்கத்துக்கித்யாதி) அவனிரக்கம் ஸாதநமென்கைக்குப்ரமாணம் (தஸ்யைஷஇத்யாதி) கடவல்ல்யாம், “𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 । 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷:” (நாயமாத்மாப்ரவசநேநலப்யோநமேதயாநபஹுநாஸ்ருதேந। யமேவைஷவ்ருணுதேதேநலப்யஸ்தஸ்யைஷ:) இத்யாதி. ப்ரவசநமென்று - மநநத்தைச்சொல்லுகிறது. மேதயாவென்று - த்யாநத்தையும், ஸ்ருதேநஎன்று - ஸ்ரவணத்தையுஞ்சொல்லுகிறது.

க்ரமேணாந்வய:..*

மூன்றாம்பாட்டு.

இரக்கமனத்தோடெரியணை
யரக்குமெழுகுமொக்குமிவ
ளிரக்கமெழீரிதற்கென்செய்கே
னரக்கனிலங்கைசெற்றீருக்கே.

ஆறாயிரப்படி.

(இரக்கமனத்தோடு) அவஸந்நமான மநஸ்ஸையுடையளாய் வெரியணையரக்கு மெழுகும்போலே விரஹாக்நியாலே தஹ்யமானையானவிவள்பக்கல் க்ருபையுங்கூடப் பண்ணுகிறிலீர்; இதற்கென்செய்கேன், கெட்டேன், ஓ! கொடுமையேயிதுவென்கிறாள்,......................................*

பன்னீராயிரப்படி.

அனந்தரம், பிராட்டிக்காக ராவணனையும் லங்கையையுமழித்த நீரிரங்குகிறிலீர்; இதற்குச்செய்வதென்னென்கிறாள்.

இரக்கம் - க்லேசோத்தரமான. மனத்தோடு - நெஞ்சோடே. இவள் - இவள். அரக்கும் - சிக்கென்றவரக்கும். மெழுகும் - மெத்தென்றமெழுகும். எரியினையொக்கும் - அக்நிஸகாசத்திலொக்கவுருகுமாப்போலே, கற்பும்மடமும் சுட்டுக்குலையாநின்றாள். இரக்கமிலீர் - நீரிரக்கந்தோற்றவிருக்கிறிலீர். இதற்கு - இதுநிமித்தமாக. அரக்கன் - ராக்ஷஸனான ராவணனுடைய. இலங்கை - லங்கையை. செற்றீருக்கு-அழித்தவுமக்கு. என்-எத்தை. செய்கேன் - செய்வேன்.

இல்லாதவிரக்கத்தையுண்டாக்கவோ, இவள்மார்தில்யத்தை "𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍" (தத்தஸ்யஸத்ருசம்பவேத்) என்றவள் நெஞ்சுபோலிசிக்கெனப் பண்ணவோவென்றுகருத்து...*

ஈடு-மூன்றாம்பாட்டு.

இன்றிச்செயல் செய்யக்கடவதாக நினைத்தநீர், அன்று * உண்ணுதுறங்காதொலிகடலை யூடறுத்து அச்செயலை என்றியசெய்தீரொன்கிறாள்.

(இரக்கமித்யாதி) இரக்கம் - நெஞ்சில் நெகிழ்ச்சியாதல், ஈடுபாடாதல், ஈரிப்பாதல். இரங்கின நெஞ்சையுடையவிவள், எரியையணைந்த அரக்கும் மெழுகும்போலே யுருகாநின்றாள். அரக்குமெழுகும் என்கிற விரண்டையும் - நெஞ்சுக்கொன்றும், இவள்தனக்கொன்றுமாக்கி நிர்வஹிப்பர் பிள்ளைதிருநறையூரரையர். நெஞ்சுமிவடனக்குக் கையடைப்பாகையாலே யிவடனக்கே யிரண்டையுமாக்கி யருளிச்செய்வர்பட்டர்; "𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇" (விஷ்ணுநாஸத்ருசோவீர்யே) என்கிறபடியே, எல்லாமிவள் தன்படிக்கு த்ருஷ்டாந்தமாக வேண்டும்படியிறே யிவள்தன்னிலை; அக்நிக்குள்ளே புகில்கரிந்துபோம், கடக்கவிருக்கில் வலிக்கும், அக்நிஸகாசத்திலே யுருகாநிற்குமிறே; முடிந்து பிழைக்கவும்பெறாதே, தரித்திருக்கவும்பெறாதே நோவுபடும்படி பண்ணுவீரே!.

இவள்தசையிது (இரக்கமெழீர்) "நீருமிவளைப்போலே யுருகவேணும்" என்றுவளைக்கிறோமோ, நொந்தார்பக்கல் பண்ணும்க்ருபையும் பண்ணுகிறிலீர். இரக்கமனத்தையுடையளாகாநின்றாளிவள், நீரிரக்கமெழுகிறிலீர்; நீரிரங்காவிட்டால், உம்மைப்போலே யிருப்பதொரு நெஞ்சையிவளுக்குக் கொடுத்தாலாகாதோ.

(இதற்கென்செய்கேன்) உம்முடைய விரக்கமொழியவேதேனுமுபாயாந்தர ஸாத்யமோவிப்பேறு. (என்செய்கேன்) உம்மையிரங்கப் பண்ணவோ, இவளை யிரங்காமற்பண்ணவோ. (அரக்கனிலங்கைசெற்றீருக்கே) உமக்கிரக்கமின்றியே யொழிந்தால், இவளிரங்குவதொருசெயலைச் செய்துவைக்கவேணுமோ. "ஒருப்ராணியிக்குதவினவன் நமக்கு

தவாளோ” என்றீடுபடாநின்றாள் புழுக்குறித்த தெழுத்தாணாற்போலே ஒன்று வாய்த்ததைக்கொண்டு “அதங்யார்த்தம்” என்றிராதே நோவு படாநின்றாள். அரக்கனிலங்கைசெற்றீருக்கு - இரக்கமனத்தோடு - இவ்ள் - எரியணையரக்கு மெழுகுமொக்கும்; இரக்கமெழீர்; இதற்கென்செய்கேன் என்றந்வயம்...

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு. (இரக்கமனத்தோடித்யாதி) “அரக்கனிலங்கை” இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை (இன்றிச்செயலித்யாதி) இச்செயலென்று - இரக்கமெழாமை. (உண்ணுதித்யாதி) நாய்ச்சியார்திருமொழி. “ந8ாஂஸஂஶாஙவொஹ-ெஜ”, (நமாம்ஸம்ராகவோபுங்க்தே) “அநிஜூஸ-தஂஶா8ீ” (அநித்ரஸ்ஸததம்ராம8) இத்யாதிப்படியே ஊணுமுறக்கமுமற்று, கோஷிக்கிறக டலேநடுவே யடைத்தென்றபடி. (என்றியசெய்தீர்) எதுக்காகச்செய்தீர்.

நெஞ்சில்நெகிழ்ச்சி - க்ருபை. ஈடுபாடு - து8கம், விதுரதையாதல். ஈரிப்பு-ஸ்நேஹம். இங்கு - ஈடுபாடுவேண்டுவது. பட்டர்நிர்வாஹத்துக்குச் சேரஶப்தார்த்தம் (இரங்கினவித்யாதி) அரையர் நிர்வாஹத்திலே, எரியணையரக்கொக்கு மிரக்கமநத்தோ டிவளெரியணைமெழுகொக்கு மித்யந்வய8. நெஞ்சுமிவள் தனக்குக் கையடைப்பாகையாலேயென்றது - மநஸ்ஸுமிவளுக் குபகரணமாய்க்கொண் டிவளிடத்திலே யந்தர்ப்பூதமாகையாலே யென்றபடி. ஒன்றுக்கநேகத்ருஷ்டாந்தங் கூடுமோவென்ன (விஷ்ணுநேத்யாதி) ஸங்க்ஷேபே, “விஷ-ுநாஸஜூமெஶா வீரெஶ)வொஉவதீயதஶநீ” (விஷ்ணுநாஸத்ருஶோவீர்யேஸோமவத்ப்ரியதர்ஶந8) “அணை” என்றதுக்குபாவம் (அக்நிக்குள்ளேயித்யாதி) கரிந்துபோம் வெந்துபோம். தார்ஷ்டாந்திகம் (முடிந்தித்யாதி) இவ்வாக்யாதியிலே-அப்படியே யித்யத்யாஹார்யம்.

பூர்வார்த்தம் பராம்ருஶந்நாஹ (இவள்தரையிதுவென்று) “இரக்கமெழீர்” என்கிறவிடத்தில், “இரக்கம்” என்றதுக்கர்த்தத்வயம் - க்ருபையுாதல், ஈடுபாடாதல். க்ருபாபக்ஷமாஹ (நீருமித்யாதி) த்விதீயமாஹ (இரக்கமனத்தை யித்யாதி) பலிதம் (ஸ்ரீரங்காவிட்டாலித்யாதி)

“இதற்கு” என்றதுக்கர்த்தத்வயம் - உம்முடைய லாபத்துக்கென்னுதல், இவளிரங்க ஸ்ரீரங்காமலிருக்கிறதுக் கென்னுதல். “இரக்கமெழீர்” என்றதின் - க்ருபாபக்ஷத்திலேபாவம் (உம்முடையவிரக்கமித்யாதி) உபாயாந்தர ஸாத்யமோ வென்றது - நாயஉாத்மா” (நாயமாத்மா) இத்யாதியைப்பற்ற. “ஈடுபாடு” என்றத்விதீயபக்ஷத்துக்குச்சேரபாவம் (உம்மையிரங்கவித்யாதி) (இவளையிரங்காமற்பண்ணவோவிதி) “ஶெஶஸ-ஸஂக-ஶாஂகூஜூதா” (ஶரணாஸ்துஸங்குலாம்க்ருத்வா) இத்யாதிவதிதிபாவ8.

தாத்பர்யார்த்தம் (உமக்கிரக்கமித்யாதி) அரக்கனிலங்கை செற்றதிவ்ளிரக்கத்துக்கெப்படி ஹேதுவென்ன (ஒருப்ரணயிநிக்கித்யாதி) உதவினவன் - உபகரித்தவன். ப்ரணயிநிக்குதவின செயலுக்கீடுபட ப்ராப்தமன்றோவென்ன (புழுக்குறித்ததித்யாதி) அதாவது - “குணக்ஷாரந்யாயத்தாலே செய்தசெயல்” எ

ன்றும், " அது ஸஹ்ருதயமாகிலு மந்யார்த்தம் " என்றுமறியாதே நோவுபடாநின்றளித்தலையொழிய ப்ரணயிநிக்காகச்செய்தசெயலன்றென்றபடி. அது-ஒருத்திக்குதவினது. அந்யார்த்தம்-அபலைகளை நோவுபடுத்துகைக்காகச் செய்தசெயல்.

பட்டர்நிர்வாஹத்திலே யந்வயம் (அரக்கனிலங்கையித்யாதி) ....*

நான்காம்பாட்டு.

இலங்கைசெற்றவனேயென்னும்பின்னும்
வலங்கொள்புள்ளுயர்த்தாயென்னுமுள்ளம்
மலங்கவெவ்வுயிர்க்குங்கண்ணீர்மிகக்
கலங்கிக்கைதொழுநின்றிவளே.

ஆறாயிரப்படி.

(இலங்கை) இப்படி நானவனுடையகொடுமையைநினைத்து "இலங்கைசெற்றீர்" என்று சொல்லுமளவில், தானதைக்கேட்டு அவனுடைய ப்ரணயித்வத்தையேநினைத்து, இலங்கைசெற்றவனேயென்னும்; பின்னையும், பெரியதிருவடிமேலேயேறி யருளிவந்து தோன்றாயென்னும்; என்றால் அப்போதேவரக்காணாமையாலே உள்ளம்மலங்கவெவ்வுயிர்க்கும்; கண்ணீர்மிகக்கலங்கி யிவள்நின்று கைதொழாநிற்குமென்கிறாள்.*

பன்னீராயிரப்படி,

அநந்தரம், நாட்டுக்குதவினபடியைச்சொல்லிக்லேசியாநின்றாளென்கிறாள். இவள்-இவள். பின்னும்-முன்புத்தைக்லேசத்தளவன்றியே, பின்னையும். இலங்கை-மாலிப்ரப்ருதிகளிருந்தலங்கையை. செற்றவனே-செறுத்தவனே. என்னும்-என்னும். அதுக்குறுப்பாக வலங்கொள்-பலவானான. புள்-பெரியதிருவடியை. உயர்த்தாய்-வாஹநமும் த்வஜமுமாகவுடையவனே. என்னும்-என்னும். அப்படிதனக்குவந்துதோற்றாமையாலே உள்ளம்-நெஞ்சு. மலங்க-அலமாக்கும்படி. வெம்-வெவ்விதாக. உயிர்க்கும்-மூச்சுவிடும். கண்ணீர்-கண்ணீரானது. மிக-மேலிட. கலங்கி-அறிவுகலங்கி. நின்று-வருகிறானாகநினைத்து. கைதொழும்-அஞ்சலிபண்ணாநிற்கும்.*

ஈடு-நான்காம்பாட்டு.

" 'அரக்கனிலங்கைசெற்றீர்' என்கிறவிது நியதஸ்வபாவமன்றுகாண், காதாசித்கங்காண் " என்றாள் திருத்தாயார்; அதுபொறுக்கமாட்டாமை, அதுதன்னையே சொல்லுகிறாள்.

(இலங்கைசெற்றவனேயென்னும்) எனக்குப்பண்டேயுதவி உபகரித்தவனே என்னாநின்றாள். முன்பு தனக்குதவினவனிப்போது தனக்குதவாதொழிந்தாற்போலே கூப்பிடாநின்றாள். கடலடைத்தல், மலையெடுக்கல். அம்பேற்றல், செய்யவேணுமோ; என்பக்கல்வரும்போது என்ல

ப்ரதிபந்தகமுண்டு. திருத்தாயார் இவள்விடுகைக்குச் சொன்னதுதானே அவளுக்குப்பற்றுகைக்குடலாய்விட்டது.

(பின்னுமித்யாதி) அதுக்குமேலே, விடாயரிருந்தவிடத்தே சாய் கரகம்போலே உயரவைத்துக்கொண்டுவந்துகாட்டும் பரிகரமுடையவனேயென்றுநின்றாள். மிடுக்கையுடையபுள்ளை த்வஜமாகவுடையவனென்னுதல்; அன்றியே, புள்ளாலே வஹிக்கப்பட்டவனென்னுதல்.

கொண்டுவருகைக்குப் பரிகரமுண்டாயிருக்கச்செய்தே வாராமையாலே, மநஸ்தத்த்வம் வேர்பறியும்படி நெடுமூச்செறியாநிற்கும்; "ஜஹந்தீமிவநிஸ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:" (தஹந்தீமிவநிஸ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:) என்னுமாபோலே.

(கண்ணீர்மிக) நெடுமூச்சாய்ப்புறப்பட்டு, புறப்படாதது கண்ணீராய்ப்புறப்படாநின்றது. (கலங்கிக்கைதொழும்) தெளிந்திருந்துதொழுமதில்லையிறே ப்ரணயிநி. (இவளே) அவன் தொழும்படியான வேண்டற்பாடுடைய தான் தொழாநின்றாள் ....*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (இலங்கையித்யாதி) "இலங்கைசெற்றவனேயென்னும்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (அரக்கனித்யாதி) கீழ்ப்பாட்டிலே "புழுக்குறித்த தெழுத்தானாற்போலே" என்கிறவாக்யத்துக் குத்தரமாயிருக்கிறது - "இலங்கைசெற்றவனே" என்கிறபதமென்றுஸங்கதி. "அந்தவாக்யத்திலே நியதஸ்வபாவமன்று" என்று திருத்தாயார்சொன்னது பொறுமல், அது நியதஸ்வபாவமென்கிறாளென்றபடி, "இலங்கைசெற்றவனே" என்றஏவகாரத்தாலேயாதல், "இலங்கைசெற்றவனே" என்றித்தையே நிரூபகமாகச்சொல்லி ஸம்போதிக்கையாலேயாதல் - நியதஸ்வபாவமென்கிறதென்றபடி.

பிராட்டிதானுகவிவக்ஷித்தபாவம் (எனக்குப்பண்டேயித்யாதி) விவரணம் (முன்பித்யாதி) "அன்றிக்கே பிராட்டிக்குதவினவன் எனக்குதவானோ" என்றுவிவக்ஷித்து தாத்பர்யாந்தரம் (கடலடைத்தலித்யாதி) மலையெடுத்தல் - கடலடைத்தலென்றங்வயிப்பது, மலையாலேகடலடைத்தலென்றபடி. இத்தாத்பர்யத்தால் பலிதம் (திருத்தாயாரித்யாதி) இப்படிபாவத்வயமாதல்; "எனக்குப்பண்டே" இத்யாரப்ய, நாலுவாக்யமும்-நாலுதாத்பர்யமாதல். (திருத்தாயார்விடுகைக்குச் சொன்னதுதானேயிதி) "அதந்யார்த்தம்" என்று - "அபலைகளை நோவுபடுத்துகைக்காகச்செய்தது" என்றுசொன்னதுதானே, அபலைகளுடைய ரக்ஷணார்த்தமாகச்செய்தசெயலென்ற உக்திபோலேயாதரஹேதுவாய்விட்டதென்றபடி.

புள்ளுயர்த்தாய் - புள்ளையுயர்த்தவன், புள்ளாலேவஹிக்கப்பட்டவனென்றும். த்விதீயார்த்தத்திலேபாவம் (அதுக்குமேலேயித்யாதி) சாய்கரகம்-தண்ணீர்ப்பந்தலிலே யுயரவைத்துச் சாய்கிறகரகம்.

கீழ்வாக்யத்தோடேகூட்டி மேல்வாக்யத்துக்கர்த்தம் (கொண்டுவருகைக்கித்யாதி) உள்ளம்-மநஸ்தத்த்வம், மலங்கி-வேர்பறியும்படி. வெவ்வுயிர்க்கும் - வெவ்

விதாம்படி யுயிர்க்குமென்று ஶப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித்ருஷ்டாந்தம் (தஹந்தீமித்யாதி) ஸுந்தரகாண்டே ஸீதாம்த்ருஷ்ட்வாஹநுமாந், "ஸஞ்ஜாதமிவ ஶோகாநாந் து:கஸ்யோர்மிமிவஸ்த்திதாம்" (ஸங்காதமிவஶோகாநாம் து:கஸ்யோர்மிமிவஸ்த்திதாம்) இத்யுத்தரார்த்தம். உயிர்க்கை-மூச்சுவிடுகை. ஶோஷகமானத்தையிறே யக்நிதஹிப்பது, அங்ஙனல்லகிடீரிதினுடைய கொடுமையென்கிறுன் (பல்லவதாரிணீஎன்று)

(கண்ணீராய்ப்புறப்படாநின்றது) மநஸ்தத்த்வமென்றபடி. "உள்ளம்மலங்க" என்றதுக்கு - மலங்கியென்றர்த்தாந்தரம் விவக்ஷித்தருளிச்செய்கிறுர் (நெடுமூச்சாயித்யாதி) "மலங்க" என்கிறநிர்த்தேஶஸ்வாரஸ்யத்தைப்பற்ற நெஞ்சை தாஹகர்மமாகவிவக்ஷித்து, "தஹந்தீம்வ்ருக்ஷாந்" (தஹந்தீம்வ்ருக்ஷாந்) என்று-கர்மகர்த்ருநிர்த்தேஶவந்தானவாக்யத்தை யுதாஹரித்தார் கீழ்; கண்ணீருக்குள்ளம் மலங்குகையே ஹேதுவாகவிவக்ஷிக்கவேண்டுகையாலே, அதிரண்டுக்குமொக்குமென்று திருவுள்ளம்பற்றியோஜநாந்தரமருளிச்செய்தாரிங்கு. "கலங்கி" என்றவிசேஷணத்துக்குபாவம் (தெளிந்தித்யாதி) "இவளே" என்றஸ்வரத்துக்குபாவம் (அவன் தொழும்படியானவித்யாதி) வேண்டற்பாடு-பெருமை. நின்று-கைதொழுகைமாறுதேநின்று.

இவள்-பின்னும் - இலங்கைசெற்றவனேயென்னுமித்யாரப்ய, நின்று - கைதொழுமித்யந்வய:..*

ஐந்தாம்பாட்டு.

இவளிராப்பகல்வாய்வெரீஇத்தன
குவளையொண்கண்ணநீர்கொண்டாள்வண்டு
திவளுந்தண்ணந்துழாய்கொடீரென
தவளவண்ணர்தகவுகளே

ஆறாயிரப்படி.

(இவள்) "இலங்கைசெற்றவனே" என்றும், "வலங்கொள் புள்ளுயர்த்தாய்" என்றுமிப்படி யிராப்பகல் வாய்வெருவி, தனகுவளையொண்கண்ணநீர்கொண்டாள்; இப்படிதயநீய தசைவரச்செய்தேயும் வண்டுதிவளும் தண்ணந்துழாய் கொடுக்கிறிலீர்; பரமகாருணிகரான வும்முடைய காருண்யமிருக்கும்படி யிதுவோவென்கிறுள்..................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், சுத்தபாவரான வும்முடைய ஸ்வபாவமிருந்தபடி யென்னென்கிறுள்.

இவள் - விலக்ஷணையானவிவள். இராப்பகல் - இரவோடுபகலோடுவாசியற. வாய்வெரீஇ - திருத்துழாயைவாய்வெருவி. அதுகிடையாமையாலே - தன - தன்னுடைய. குவளை - நெய்தல்போலே. ஒண் - அழகியவான. கண் - கண்களி

லே. நீர் - சோகாச்ருவை. கொண்டாள் - உடையளானுள். வண்டு - வண்டுகள். திவளும் - மதுபானம்பண்ணி, ரஸாயந ஸேவைபண்ணினுரைப்போலேபடிந்து ஒளிவிடும்படியான. தண்ணந்துழாய் - திருத்துழாயை. கொடீர் - கொடுக்கிறீர். தவளவண்ணர் - ஆச்ரிதவிஷயத்தில் சுத்தஸ்வபாவரானஉம்முடைய. தகவுகள் - க்ருபாதிஸ்வபாவங்கள். என - என்னென்னவாயிருக்கின்றன.

வாய்வெருவினதற் கிரக்கமற்று, கண்ணநீர்க்கிரக்கமற்று, “இவளுக்குக் கொடுக்கவேணும்” என்றிரக்கமற்று, வண்டுகளுக்குக் கொள்ளைகொடுத்ததென்ன ஸ்வபாவமென்றுகருத்து..*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

இவளிப்படி க்லேசிக்கிறவிடத்திலும் வரக்காணுமையாலே, நிர்த்தயரென்கிருள்.

(இவளிராப்பகல்வாய்வெரீஇ) “ஸீதெதிஷ்யாமிவாணீம் வ்யாஹாராநுவ்ருதிவ்யஹ்ருதே” (ஸீதேதிமதுராம்வாணீம்வ்யாஹரந் ப்ரதிபுத்யதே) என்று - வாய்வெருவுவானவன்கிடீர். [அநித்ரஸ்ஸததம] (அநித்ரஸ்ஸததம்ராமஃ) நித்ரையோடே காலக்ஷேபம்பண்ண வேண்டும் செல்வுடையவர், ஸததமநித்ரராயிருப்பர். [ஸுப்தோபிச] (ஸுப்தோபிச) “ஸததஊநித்ரஃ” (ஸததமநித்ரஃ) என்றுவைத்து, “ஸுப்தோபிச” (ஸுப்தோபிச) என்கிறது - பராகர்த்தாநுஸந்தாந பாவத்தைப்பற்ற. [நரோத்தமஃ] (நரோத்தமஃ) அபிமதவிச்லேஷத்தி லிங்ஙனேயிருக்கைபோலே - புருஷோத்தமத்வமாவது. (இராப்பகல்) * பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும் வாய்வெருவின வித்தனைகாணும். (வாய்வெரீஇ) வாய்வெருவி. அவதாநம்பண்ணிச்சொல்லுகிற தொன்றுமில்லை, வாஸனையே யுபாத்யாயராகச் சொல்லுகிறவித்தனை. (தனகுவளையொண்கண்ணநீர்கொண்டாள்) (தன) ஆநந்தாச்ரு ப்ரவஹிக்கக்கடவகண், சோகாச்ரு ப்ரவஹியாநின்றது. இக்கண்ணுக்கிலக்கானுர் கண்ணிலேகாணக்கடவ கண்ணீரைத்தன்கண்ணிலேகொண்டாள். தன்னுடையவாய், குவளைப்பூப்போலே யிருக்கிறவழகியகண்களிலே நீரைக்கொண்டாள்.

நம்மைச்செய்யச்சொல்லுகிறதென்னென்ன (வண்டுதிவளுந்தண்ணந்துழாய்கொடீர்) விரஹஜ்வரத்தாலேவாடின இவள்மார்வில் மாலையைவாங்கி, உம்முடையமார்வில் செவ்விமாருத மாலையைக்கொடுக்கிறீர். அவ்வண்டுகளுக்கென்ன கண்ணீரைக்கண்டு கொடுக்கிறீர். திவளுகை - படிகை, அசைகை, ஒளிவிடுகை, இவையித்தனையுஞ் சொல்லக்கடவது.

(என) இவையென்னென்பின. (தவளவண்ணர்தகவுகளே “சுத்தஸ்வபாவரான வும்முடைய தகவுகளெங்கேபோயிற்றின” என்

றெம்பாரருளிச்செய்யும்படி. அன்றிக்கே, பட்டர், "உம்மைப்போலே காலுஶிஷ்டர்களமையுமிறே அபலைகள்குடிகெட" என்றார்............*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (இவளித்யாதி) பாட்டடையெல்லாமடைவே கடாக்ஷித்தவதாரிகை (இப்படியிவளித்யாதி)

"இவள் - வாய்வெரீஇ" என்றதுக்குபாவம் (ஸீதேத்யாதி) ஸுந்தரகாண்டேஷட்த்ரிம்ஶே, "அநித்ரஸ் ஸததம் ராம ஸ்ஸுப்தோபி ச நரோத்தம: | ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே" (அநித்ரஸ்ஸததம் ராம ஸ்ஸுப்தோபிசநரோத்தம: | ஸீதேதிமதுராம்வாணீம் வ்யாஹரந்ப்ரதிபுத்யதே.) பூர்வார்த்தத்தையும் வ்யாக்யாநம்பண்ணுவதாசவத்தை யுபாதாநம்பண்ணுகிறார் (அநித்ரஸ்ஸததமித்யாதி) செல்வு - ஸம்பத்து. அதாவது - ரமயதீதிராம: என்கிற வ்யுத்பத்தியாலே-ஸ்வவ்யதிரிக்தரை ரமிப்பிக்குமவர்க்கு ஸ்வயம்ரமிக்கும்படியான ஸம்பத்தஸித்தமிறே, அத்தைச்சொல்லுகிறதென்கை. "அநித்ர:" (அநித்ர:) என்றுவைத்து, "ஸுப்தோபி" (ஸுப்தோபி) என்றால் - வ்யாஹதமுமாய், ஸ்நேஹத்துக்குக் கொத்தையுமாமிராதோவென்ன (ஸததமநித்ர: என்றுவைத்தித்யாதி) பராகர்த்தேத்யாதிக்குபாவம்-வ்யதிரிக்தபதார்த்தங்களிற் கண்வையாதே, பிராட்டியையேயெப்போதும் த்யாநம்பண்ணிக் கொண்டிருப்பரென்றபடி. ஸ்வாபதேசம் (பொய்ந்நின்றவித்யாதி) "இராப்பகல், வாய்வெரீஇ" இதிஸமுச்சித்யபாவம் (அவதாநம்பண்ணியித்யாதி) ஆனாற்றனெப்படியென்ன (வாஸனையேயித்யாதி)

"குவளையொண்" என்றவிஶேஷணத்துக்குபாவம் (ஆநந்தாஶ்ருவித்யாதி) "தன" என்றதுக்குபாவம் (இக்கண்ணுக்கித்யாதி) சப்தார்த்தம் (தன்னுடையவாயித்யாதி) குவளை - கருநெய்தல்.

"வண்டுதிவளும்" என்று - அவன்மாலையை விஶேஷிக்கையாலே, இவள் மாலையிற் செவ்வியில்லாமைஸித்தமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (விரஹஜ்வரத்தாலேயித்யாதி) "வண்டுதிவளும்" என்றவிஶேஷணத்துக்கு பாவம் (வண்டுகளுக்கித்யாதி)

இவையென்னென்பினவென்றது - எம்பார்நிர்வாஹத்திலே. "தகவில்லை" என்கிறவள், "தவளவண்ணர்" என்றுவிஶேஷிக்கிறதுக்குக் கருத்தைவாஸ்தவமாகவும், உபாலம்பமாகவு மிரண்டுவகையாக வருளிச்செய்கிறார் (சுத்தஸ்வபாவரான வித்யாதிவாக்யத்வயத்தாலே) முன்பு சுத்தஸ்வபாவருமாய் தயாவானுமாயிருக்கிறநீர், இப்போது சுத்தஸ்வபாவருமன்றிக்கே தயாஹீநருமாய் விட்டீரென்று எம்பாருக்குக்கருத்து; என - எங்குற்றன வென்றபடி; என்னென்பினவென்றது - முன்புத்தையில்க்ருபை யிப்போதெங்கே போயிற்றென்றபடி. சுத்தஸ்வபாவருமல்ல, தயாவானுமல்லவென்றுபட்டர்; என - என்னபடியா யிருக்கிறதென்று க்ஷேபோக்தி. "என - தவளவண்ணர், என - தகவுகள்" என்றாய் - என்னசுத்தஸ்வபாவர், என்னதகவுகள் என்றுவிவக்ஷித்து ரஸோக்தியாகபாவம் (உம்மைப்போலேயித்யாதி) "தகவுகள்" என்கிறபன்மை - "காருண்ய நாத்ருஶம் ஸ்வ

ந " (காருண்யேநாநுஶம்ஸ்யேந) இத்யாதிப்படியே ஸாமாந்யவிஷயமாயு மாஶ்ரிதவிஷயமாயுமுள்ள க்ருபைகளைச் சொல்லுகிறது.

க்ரமேணார்வ்வட: ....*

ஆறும்பாட்டு.

தகவுடையவனேயென்னும்பின்னு
மிகவிரும்பும்பிரானென்னுமென
தகவுயிர்க்கமுதேயென்னுமுள்ள
முகவுருகிநின்றுள்ளுளே.

ஆறாயிரப்படி.

(தகவு) இப்படியிவளுடைய ப்ரஸங்கத்தாலே யவனுடைய க்ருபையைநினைத்துப் பரமகாருணிகனேயென்று கூப்பிடும்; இப்படிக்ருபையையுடையவன் நம்மைக்கைவிடானென்று பார்த்துப்பின்னையும் மிகவுமாசைப்படும்; ஆசைப்பட்ட வப்போதே பெருமையாலேவந்த வவஸாதத்தாலே நெஞ்சுருகும்படியுருகிநின்று, கேட்கச்சொல்லக்கூடாமையல்லாமையாலேபோய்த் தன்னுள்ளுளேபிரானேயென்று மென்னுடையபோக்யமென்றுஞ் சொல்லாநிற்குமென்கிறாள்................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தன்னிலேசிதிலையா யும்முடைய போக்யதாதிசயத்தைப்பேசி, வாய்புலற்றா நின்றாளென்கிறார்.

இவள் - உள்ளம் - தன்னெஞ்சு. உக - அழியும்படி. உருகி - ஸ்வரூபம்சீரா யுருகி. உள்ளுளே - தன்னிலேதன்னிலே. நின்று - நின்று. தகவு - என்னைப்புஜிப்பிக்கைக்கடியான க்ருபாதிஸ்வபாவங்களை. உடையவனே - உடையவனே. என்னும் - என்னும். பின்னும் - அவ்வளவிலேநில்லாதே. மிக - மேன்மேலும். விரும்பும் - விரும்பும்படியான. பிரான் - உபகாரகனே. என்னும் - என்னும். எனது - என்னுடைய. அகவுயிர்க்கு - அந்தராத்மாவுக்கு. அமுதே - நித்யமானநிரதிசயபோக்யமே. என்னும் - என்னாநிற்கும்.

மிகவிரும்புமென்று - தன்னையவன் விரும்பினபடியாகவுமாம்..............*

ஈடு - ஆறும்பாட்டு.

இவளவஸாதத்தைக்கண்ட திருத்தாயார் "நிர்த்தயர்" என்றாள் இவளதுபொறாதே, "தகவுடையவனே" என்று அத்தைநிரூபகமாகச் சொல்லாநின்றாளென்கிறாள் (தகவுடையவனேயென்னும்) கெடுவாய் ஆகரத்தில் தகவுமறுக்குமோ. நங்குற்றங் காணென்னாநின்றாள். "'த வில்லை, யென்றவள்வாயைப் புதைத்தாற்போலேவந்து தோற்றுவதே

என்று, அவன்வந்தால் பண்ணும்விருப்பத்தைப் பண்ணுகிற்கும். (பின்னும்மிகவிரும்பும்) பாவநாப்ரகர்ஷ மிருக்கிறபடி.

(பிரானென்னும்) பெற்றதாய்க்கவகாசம்வையாதே வந்துதோற்றுவதே, இதென்ன வுபகாரந்தானென்னும்.

(எனதகவுயிர்க்கமுதேயென்னும்) என்னுடையப்ரத்ய காத்மாவுக்கு போக்யனானவனேயென்னும். நித்யவஸ்து அழியாமல் நோக்குமம்ருதமாயிற்றித். போகதசையிற் சொல்லுமவையெல்லாம் சொல்லாநின்றாள். (உள்ளமுகவுருகிநின்று) உள்ளென்பது - மேல். அமூர்த்தமானது மூர்த்தீபவித்துருகித்ரவீபூதமாய் மங்கிப்போகாநின்றது. உள்ளமுகவுருகிநின்று - தகவுடையவனேயென்னும், பின்னும் மிகவிரும்பும், பிரானென்னும், எனதகவுயிர்க்கமுதேயென்னும்; இது, நாம்பேச்சுக்கொண்டறிந்தஅம்ஸம், உள்ளோடுகிறது (உள்ளூளே) வாசாமகோசரம். " உள்ளூளே - உருகிநின்று " என்பாருமுண்டு............................*

ஜீயர் அரும்பதம்.

ஆரும்பாட்டு. (தகவித்யாதி) நானவன்குணஹாநி, சொல்ல, பொருதேயவன்குணங்களைப் பேசப்புக்கு அதிலேயழுந்தா நின்றாளென்றிப்பாட்டுக்கவதாரிகை.

பதாவதாரிகாமாஹ (இவளவஸாதத்தையித்யாதிவாக்யத்வயேந) நிர்த்தயரென்றாளென்றது - " எனதவளவண்ணர்தகவுகளே " என்றத்தைப்பற்ற. நிருபமாகச்சொல்லும் ப்ரகாரத்தை யருளிச்செய்யாநின்றுகொண்டு, வாராமைக்கடிஸ்வாபராதமென்கிறாளென்றருளிச்செய்கிறார் (கெடுவாயித்யாதி) கெடுவாயென்றது - வார்த்தைப்பாடு. ஆகரத்தில் - கநியில். உத்பத்திஸ்த்தாநத்திலென்றபடி. மறுக்குமோ - வற்றுமோ. " ஸ்யாத꞉ ப்ராஜ்ஞ꞉ க்ருதஜ்ஞ꞉ " (ச்யாத꞉ப்ராஜ்ஞ꞉ க்ருதஜ்ஞஶ்ச) " மமைவ து³ஷ்க்ருதம் கிஞ்சித் " (மமைவதுஷ்க்ருதம்கிஞ்சித்) இத்யாத்யநுஸந்தேயம். " தகவுடையவனே " என்கிறவிது - " க்ருபாவானேஎன்கிறப்போலே ஸம்போதநமுமாம், ஸாவதாரணநிர்த்தேசமுமாம்.

அவன் வாராதிருக்கச்செய்தே விரும்புகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (தகவில்லையித்யாதி) விருப்பமாவது - பரிசரிக்கையிறே ; அதுதான் - ஸந்நிதாநத்திலே செய்யுமதொன்று ; அதுசெய்கையாவது - * பூசும்சாந்தும் புனையும் கண்ணியும் முதலானவற்றைச்சேர்க்கை. புதைத்தாற்போலே - மூடினாற்போலே. ஆனாலவன் வந்தானோவென்ன (பாவகேத்யாதி) உருவெளிப் பாட்டாலேயென்றபடி.

விஶ்லேஷவேளையிற்பண்ணின வுபகாரமேதென்ன (பெற்றதாயித்யாதி.)

" எனது, அகவுயிர்க்கு " என்றுபதச்சேதம். " அகவுயிர் " என்று-ப்ராணவாயுவை வ்யாவர்த்திக்கிறது. அம்ருதம் போக்யமுமாய் தாரகமுமாயிறே யிருப்பது, இங்கேயிரண்டும் விவக்ஷிதமென்கிறார் (என்னுடையவித்யாதியாலும், நித்யவஸ்துவித்யாதியாலும்) " உயிர்க்கமுதே " என்கையாலே-தேஹத்தைப் பூண்கட்டு இதவம்ருதத்தை வ்யாவர்த்திக்கிறதென்னு மிடந்தோற்ற வருளிச்செய்கிறார் (இதுவென்று) கீழெல்லாவற்றுக்கும்பலிதம் (போகதசையிலித்யாதி)

(உள்ளென்பதுமேலென்று) இதுக்கநுகுணமாக "உள்ளமுகவுருகின்று" என்றதுக்கு - மேன்மேலன வுருகிநின்று என்றோரர்த்தங்கண்டுகொள்வது. "உள்ளம்" என்பதுக்கு - ஹ்ருதயபரமாக வர்த்தாந்தரம் (அமூர்த்தமானவித்யாதி) அமூர்த்தம்-அஸ்பர்ஶத்ரவ்யம். இதுக்குச்சேர "உள்ளும்" என்றதுக்குமர்த்தாந்தரம் (உள்ளுளேயுருகிநின்று என்பாருமுண்டென்று) அதாவது - மேன்மேலனென்றபடி. இந்தப்பக்ஷத்திலே, உள்ளுளேயுள்ள முகவுருகிநின்று-தகவுடையவனே யென்னுமித்யாரப்ய, அமுதேயென்னு மித்யந்வய:. "உள்ளென்பதுமேல்" என்றபக்ஷத்தி லந்வயங்காட்டுகிறார் (உள்ளமுகவுருகிநின்றித்யாதி) (உள்ளோடுகிறதுள்ளுளேயிதி) உள் - உள்ளோடுகிறது. உளே - உள்ளேதானே. ஆகையால் வாசாமகோசரமென்றபடி. ஆக, இப்பாட்டுக்கிரண்டு விதமந்வயங்கண்டுகொள்வது. "உள்ளம" என்றதுக்கு - மேன்மேலனென்றும், மநஸ்ஸென்று மர்த்தத்வயம். "உள்ளுளே" என்றதுக்கும் - உள்ளோடுகிற துள்ளேதானேயென்றும், மேன்மேலனென்று மர்த்தத்வயம். உக - உக்குப்போம்படி. சிதிலமாம்படி. உருகி- த்ரவீபூதமாய். நின்று - தரித்துநின்றென்றுஶப்தார்த்தம். "உள்ளென்பதுமேல்" என்றவாக்யம் - "உள்ளுளேயுருகி நின்றென்பாருமுண்டு" என்றவாக்யாநந்தரம் படிதமானாலும், கீழ்ச்சொன்னபடியே யர்த்தமநுஸந்தேயம்.....................*

ஏழாம்பாட்டு.

உள்ளுளாவியுலர்ந்துலர்ந்தென
வள்ளலேகண்ணனேயென்னும்பின்னும்
வெள்ளநீர்க்கிடந்தாயென்னுமென
கள்விதான்பட்டவஞ்சனையே.

ஆறாயிரப்படி.

(உள்ளுளாவி) எம்பெருமானைப்பிரிகையாலே பரிதபையாயந்தப் பரிதாபத்தைப்பொறுக்கமாட்டாமையாலே, விடாய்பட்டார் "தண்ணீர் தண்ணீர்" என்னுமாபோலே யென்வள்ளலே, என்கண்ணனேயென்னும்; பின்னும் வெள்ளநீர்க்கிடந்தாயென்னும்; எம்பெருமானையுங்கூட வசீகரிக்குமழகுடையளானவிவள் அவனுடையகுணங்களிலே யிங்ஙனே யீடுபட்டாளென்கிறாள்..................... ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், "அபேக்ஷித்தார்க்குபகரிக்க அணித்தாகவர்த்திக்கிறவனே" என்றுநின்றாளென்கிறாள்.

எனகள்வி-எனக்குத்தன்னெஞ்சில் விகாரந்தோன்றாதபடி மறைக்குங்களவையுடையவிவள். தான்பட்ட - தானகப்படும்படியவன்செய்த வஞ்சனை - வஞ்சனைகளிருந்தபடி. உள்ளுள்-ஹ்ருதயஸ்தாநத்துக்குள்ளேநிற்கிற. ஆவி - அஸாதாரணமான அந்தராத்மாவானது. உலர்ந்துலர்ந்து-உலர்த்திமேலுலர்த்தியாம்படியாய்

என-எனக்குன்னைமுற்றூட்டாகத்தந்த. வள்ளலே-மஹோதாரனே. கண்ணனே-அதாருன்பேருய்ப்படியான தாழ்ச்சியையுடையக்ருஷ்ணனே. என்னும் - என்னும். பின்னும்-அதுக்குமேலே. அவதாரகந்தமாம்படியணித்தாக வெள்ளநீர் - பரிபூர்ண ஜலமானகடலிலே. கிடந்தாய்-கண்வளர்ந்தருளினவனே. என்னும்-என்னும்.

அப்படுக்கை தனக்குறுப்பென்றிருக்கிருள் ....*

௭-ஏழாம்பாட்டு.

தன்னெஞ்சிலோடுகிறது பிறரறியாதபடி அடக்கமுடையவிவள், வாய்விட்டுக்கூப்பிடும்படி யிவளைவஞ்சித்தானென்கிருள்.

(உள்ளுளாவி) ஆந்தரமான மநஸ்ஸுக்கு தாரகமானஆத்மா சருகாய்வருகிறபடி. “அச்சேத்யோயமதாஹ்யோயமக்லேத்யோஶோஷ்ய ஏவச” (அச்சேத்யோயமதாஹ்யோயமக்லேத்யோஶோஷ்யஏவச) என்ற - அஶோஷ்யமென்று சொல்லுகிறவிதுவும் போயிற்றென்கிருள். பாவபந்தமடியாக வருகிறநோயாகையாலே அகவாயேபிடித்து வெந்துகொண்டு வருமாயிற்று. விடாயர் கர்ப்பூரகிரம் வாயிலிடுமாபோலே (என வள்ளலேகண்ணனேயென்னும்) இவ்வளவான ஆர்த்திகளிலேவந்து உன்னையெனக்குக் கையாளாகத்தருமவனே யென்னுகின்ருள்.

அதுக்குமேலே, “நாவாஶ்ரோதஜலஶாயிநம்” (தாபார்த்தோ ஜலஶாயிநம்) என்று, என்விடாய்க்குதவத் திருப்பாற்கடலிலேவந்துசாய்ந்தருளிற்றேயென்னும். இக்கிடை, இவளுக்கொரு படுக்கையிலே சாய்ந்தாற்போலே யிருக்கிறதுகாணும்.

(எனகள்வி) தன்ஹ்ருதயத்திலோடுகிறது பிறரறியாதபடிமறைத்துப் பரிமாறக்கடவஇவள் படும்பாடேயிது. (தான்பட்ட) “ந ஜீவேயக்ஷணமபி” (நஜீவேயம்க்ஷணமபி) என்கிறதான் அவிக்ருதனுய், இவள் விக்ருதையாவதே. (வஞ்சனே) அளவுபடைக்குப் பெரும்படை தோற்பது வஞ்சநத்தாலேயிறே. பகலையிரவாக்கியும், “ஆயுதமெடேன்” என்றெடுத்தும் செய்தசெயல்போலே யிவளைவஞ்சித்திரித்தனை ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (உள்ளுளாவியித்யாதி) “எனகள்விதான்பட்டவஞ்சனையே” என்றதத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (தன்னெஞ்சிலித்யாதி)

உள்-ஆந்தரமான, உள்-மநஸ்ஸுக்கு, ஆவி-தாரகமானவாத்மாவென்றுஶப்தார்த்தம். இரண்டாமுள்-மநோவாசி. “அஶோஷ்யம்” (அஶோஷ்யம்) என்னுகிற்க, “உலர்ந்து” என்னலாமோவென்ன (அச்சேத்யோயமித்யாதி) கீதாஶாஸ்த்ரவிதியே. “நித்யஸ்ஸர்வகதஸ்ஸ்தாணுரசலோயம் ஸநாதந:” (நித்யஸ்

ஸர்வகதஸ்ஸ்த்தாணுரசலோயம்ஸநாதந:) இத்யுத்தரார்த்தம். ஸரீரம் முற்படவுலர்ந்து, அநந்தரமாவியுலரவேண்டாவோவென்ன (ப்ராவபந்தமித்யாதி) "உலர்ந்தலர்ந்து" என்றவநந்தரம், "எனவள்ளலேகண்ணனே" என்றதுக்குபாவம் (விடாயரித்யாதி) தன்னுடையதாஹத்துக்காப்யாயநமாகக் குணங்களைச்சொல்லுகிறாளென்றபடி. கற்பூரநிகரம்-கற்பூரவுண்டை. பாவாந்தரம் (இவ்வளவானவித்யாதி)

"வெள்ளநீர்க்கிடந்தாய்" என்றதுக்கு ப்ரயோஜநம் (அதுக்குமேலேயித்யாதி) (தாபார்த்த இத்யாதி) ஸ்ரீவிஷ்ணுதர்மேசத்வாரிம்ஸத்யாயே, "ஸ நகாரோதிதீவ்ரவ்ரணமஹிதநுர்லோலநேத்ர: காந்த்யா வீதோத்தாநிதாவாந்தோராஜமூஸாயிநா । ஸாந்த்வஸ்யமாநோதௌம்நாதிஜாதீர் வ்ருத்ரஸமாநோதீ."

(அந்தகாரேதிதீவ்ரேசகரவிநமநுஸ்மரேத் । காந்த்யவிலீநநகாதிதாபார்த்தோஜலஸாயிநம் । கருடத்வஜாநுஸ்மரணாத்விஷயீர்ஷம்ப்ரஸாம்யதி.) ஆரஸ்த்தனைத்திருப்பாற்கடலிலேகிடந்தால் தனக்குதவின தாமோவென்ன (இக்கிடையித்யாதி) ஒருபடுக்கையிலே சாய்ந்தாற்போலே யென்கிறவிடத்திலே - "ஸமேதா தாயாநஸம்ருத்திதேநஜீவிதம் । யத்ஸஹஸம்வாஸாவாப்ரோபஸ்ரேகாம்யாரணிநாஸ்ரிதன" (யஸ்யைவத்சாமயாநஸ்ய ஸக்யமேநோதஜீவிதம்। யத்ஸஹம்ஸாசவாமோருமேகாம்தரஸரிதந) என்கிறப்லோகமநுஸந்தேயம். ஒருபடுக்கையிலே சாய்ந்தாற்போலே யென்றது-பாவநாப்ரகர்ஷத்தாலேயென்றபடி.

"கள்வி" என்றதுக்குபாவம் (நன்றநுயத்திரித்யாதி) கள்விதான்பட்ட வஞ்சனை, என-என்னவாயிருந்ததென்றன்னயில்த்த தாத்பர்யமென்று கண்டுகொள்வது. "பட்டவஞ்சனை" யென்னவமைந்திருக்க, "தான்" என்றதுக்குபாவம் (நஜீவேயமித்யாதி) ஸாந்த்ராகாண்டே ஸுடீக்ஷவ்யதமே, "சிரம்ஜீவதிவைதேஹீயதிமாஸம்தரிஷ்யதி । நஜீவேயங்க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணாம்." (சிரம்ஜீவதிவைதேஹியதிமாஸந்தரிஷ்யதி । நஜீவேயம்க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணாம்.) இவள் விக்ருதையானால் வஞ்சகமாகவேனுமோவென்ன (அளவுபடைக்கித்யாதி) அளவுபடை-அல்பஸேநை. நாயகன்-அளவுபடை. பிராட்டி - பெரும்படை. "அஸிதேக்ஷணா" (கரியகண்ணு) என்கிற-சக்ஷுஸ்ஸௌந்தர்யாதிக்யத்தைப்பற்ற (பெரும்படையென்றது) "தாவதுஸ்மேவயோவ்ருத்தாம்" (அல்பஸ்லயமோவ்ருத்தாம்) இத்யாதி. அப்படிவஞ்சகனேவென்ன (பகலையித்யாதி) "வஞ்சனையே" என்ற ஏகாரம்-இதிருந்தபடியென் என்றிப்பாட்டிலே..........*

எட்டாம்பாட்டு.

வஞ்சனேயென்னுங்கைதொழுந்தன
நெஞ்சம்வேவநெடிதுயிர்க்கும்விறற்
கஞ்சனைவஞ்சனைசெய்தீருமைத்
தஞ்சமென்றிவள்பட்டனவே.

ஆறாயிரப்படி.

(வஞ்சனே) உன்னுடையகுணங்களிலே யென்னை யகப்படுத்தினவனேயென்னும்; பின்னைத்தன் திருவாயாலொன்றுஞ் சொல்லமாட்டா

மையாலே தன்கைகளாலே தொழுதிருக்கும்; அப்போதே யவனைக்காணாமையாலே தன்னெஞ்சம்வேவ நெடிதுயிர்க்கும்; உம்மை "தன்னுடையவாபத்துக்குத்துணை" என்று விஸ்வஸித்திருந்த விவளும் உமக்குப்ரதிகூலனான கம்ஸன்பட்டது படுவதேயென்கிறாள்;.........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸந்நஜநங்களுக்கநுபவவிரோதிநிவர்த்தகரான வும்மைவிஸ்வஸித்திவள்பட்டபாடுகளென்னென்கிறாள்.

வஞ்சனே - உட்புகுந்தாரைப்போலே பவ்யதையைக்காட்டி வஞ்சித்தவனே. என்னும்-என்னும். கைதொழும் - "அவ்வஞ்சநத்துக்குத்தொழவேண்டாவோ" என்று ப்ரணயரோஷத்தாலே கையெடுத்துத்தொழாநிற்கும். பூர்வஸம்ஸ்லேஷப்ரகாரத்தைநினைத்து தனநெஞ்சம்-தன்னெஞ்சானது. வேவ-தக்தமாம்படி. நெடிதுயிர்க்கும் - நெடுமூச்செறியும். விறல் - பெருமிடுக்கனான. கஞ்சனை - கம்ஸனை. வஞ்சனைசெய்தீர் - அவன்வஞ்சனையவனோடேபோம்படிபண்ணினவரே. உம்மை-மதுரையில்பெண்களுக்குதவினவும்மை. தஞ்சமென்று - தனக்குத்தஞ்சமென்று. இவள் - இவள். பட்டன-பட்டவெள்ளம். ஏ-என்.

இப்படிகரணத்ரயமும் ஶிதிலமாம்படி பண்ணவேணுமோவென்று கருத்து.*

ஈடு-எட்டாம்பாட்டு.

உம்மையநுபவித்து ஸுகிக்கவைத்தீரல்லீர், கம்ஸனைப்போலே முடித்துவிட்டீரல்லீர், உம்மை "ரக்ஷகர்" என்றிருந்த விவள் படும்பாடே யிதுவென்கிறாள்.

(வஞ்சனேயென்னும்) தாயார், "வஞ்சித்தான்" என்னப்பொறுத்திலள், "நானல்லேன்" என்றாலும் தவிரவொண்ணாதபடி. வஞ்சித்துன்திருவடிகளிலே சேர்த்துக்கொண்ட உபகாரகனேயென்னாநின்றாள்; * தானொட்டிவந்தென் தனிநெஞ்சைவஞ்சித்தூ டொட்டிநின்றென்னுயிரிற்கலந்தியலுமவனன்றே. இப்படி யென்னையுமறியாதே வஞ்சித்து உன்திருவடிகளிலேசேர்த்த உபகாரகனேயென்னாநின்றாள். (கைதொழும்) வஞ்சித்த வுபகாரத்துக்குத் தோற்றுத்தொழும்.

தாயார்சொன்னகுணஹாநிக்கொரு பரிஹாரம்பண்ணினவாறே ஆற்றாமைபோகாதே; தனநெஞ்சம்வேவ நெடுமூச்செறியாநிற்கும்; "தோஷிநஸம்வீதாம்ராக்ஷஸீபிஸ்ஸமாவ்ருதாம் । உபவாஸக்ருஶாம்தீநாம் நிஶ்வஸந்தீம்புந:புந:." (ததோமலிநஸம்வீதாம் ராக்ஷஸீபிஸ்ஸமாவ்ருதாம் । உபவாஸக்ருஶாம்தீநாம் நிஶ்வஸந்தீம்புந:புந:.) "உள்ளம்மலங்க" என்று - வெட்டிவிழுந்தபடிசொல்லிற்று; "உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து" என்கிறவிடத்திலே - உலர்ந்தபடிசொல்லிற்று; இங்கே, தனநெஞ்சம் வேவவென்கையாலே-நெருப்புக்கொளுந்தினாற்போலேசொல்லுகிறது.

(விறற்கஞ்சனை வஞ்சனைசெய்தீர்) மிடுக்கனான கம்ஸனை யழியச்செய்தீர். உம்மைத்தோற்பிக்க நினைத்தாரை நீர்தோற்பிக்குமவராயிருக்தீர். ஆஶ்ரிதாநாஶ்ரிதவிபாகமற உமக்கிரண்டிடத்திலும்கார்யமொன்றேயோ' (உம்மைத்தஞ்சமென்று) தஞ்சமல்லாதாரை "தஞ்சம்" என்றிருந்தால் சொல்லுமாபோலே சொல்லுவதே. "தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமாய்" என்னும் ஸர்வரக்ஷகனை, காதுகரைச்சொல்லுமாபோலே சொல்லுகிறுளிறே மகள்தசையைப்பார்த்து. (இவள்பட்டனவே) ஒரு மஹாபாரதத்துக்குப்போரும்போலே. ஸம்ஸாரிகளைப்போலே யுண்டுடுத்துத்திரியவைத்திரல்லீர், உம்மை நித்யஸூரிகளைப்போலே அநுபவிக்கக்கொடுத்திரல்லீர், எங்களைப்போலே "தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்" (தத்தஸ்யஸத்ருஶம்பவேத்) என்னும்ளவிலிருக்கப்பெற்றிலள், கம்ஸனைப்போலேமுடித்திரல்லீர். என்வழிவாராதே உம்மைத்தஞ்சமாகப்பற்றின இவளை யெத்தனைபடுத்தவேணும் ....*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (வஞ்சனேயித்யாதி) "தனநெஞ்சம்வேவ" இத்யாரப்ய, மேலெல்லாம் கடாக்ஷித்தவதாரிகை (உம்மையித்யாதி)

அதெப்படியென்ன (நானல்லேனித்யாதி) வஞ்சநத்தை யுபகாரமாகச்சொல்லுகையாலே யென்றபடி. அப்படி வஞ்சித்துச்சேர்த்துக்கொண்டானோவென்ன (தானொட்டியித்யாதி) "நானல்லேன்" இத்யாதிவாக்யவிவரணம் (இப்படியென்னையுமித்யாதி)

புநஶ்ச நெடுமூச்செறிவானேனென்ன (தாயார்சொன்னவித்யாதி) உயிர்க்கை-மூச்சுவிடுகை. பலகாலும் நெடுமூச்செறிகிறதுக்கு ஸம்வாதம் (தநோமவிநேத்யாதி) ஸுந்தரகாண்டேபஞ்சதஶே. நெஞ்சின் நோவைப்பலகாலுஞ்சொன்னதை-காஷ்டஸமாதியாகவிருக்கிறுர் (உள்ளம்மலங்கவென்றித்யாதி) இத்தால்-அச்சேத்யத்வாதி ப்ரதிகோடியைச்சொன்னபடி. (கொளுந்திளுற்போலேசொல்லுகிறது) கொளுந்திருற்போலிருக்கிறமையைச்சொல்லுகிறது.

ஶப்தார்த்தம் (மிடுக்கனையித்யாதி) ஹார்த்தபாவம் (உம்மைத்தோற்பிக்கவித்யாதி) "உம்மைத்தஞ்சம்" என்றபதத்தையுங்கூட்டிக்கொண்டுபாவம் (ஆஶ்ரிதாநாஶ்ரிதேத்யாதி) கார்யம்-வஞ்சனை. ஆஶ்ரிதரான யஶோதாதிகளுக்குத்தோற்கையும், அநாஶ்ரிதரான கம்ஸாதிகளை ஜயிக்கையுமன்றோ வுமக்குஸ்வபாவம், இப்போதிரண்டிடத்திலும் தோற்பிக்கையேயாய் விட்டதேயென்றபடி.

வ்யாக்யாதாவினிடுபாடு (தஞ்சமல்லாதாரையித்யாதி) அப்படிசொல்லலாமோவென்ன (தஞ்சமாகியவித்யாதி) "தஞ்சமல்லாதாரை" இத்யாதிவாக்யம்-"உம்மை" என்றதின் தாத்பர்யம். பஹுவசநார்த்தம் (ஒருமஹாபாரதமித்யாதி) விவரணம் (ஸம்ஸாரிகளையித்யாதி) வஞ்சநத்தை யுபகாரமாகச் சொல்லுகையாலே - ஸம்ஸாரிகளில்வ்யாவ்ருத்தி ; "தனநெஞ்சம்வேவ" என்கையாலே நித்யஸூரிகளிலும், திருத்தாயாரான தன்னிலும்வ்யாவ்ருத்தி, "கைதொழும்" என்ற

த்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (எங்களைப்போலேயித்யாதி) "கஞ்சனை" இத்யாதியைக்கடாக்ஷித்தருளிச் செய்கிறார் (கம்ஸனையித்யாதி) "உம்மைத்தஞ்சம்" என்றதுக்குத்தாத்பர்யாந்தரம் (என்வழிவாராதேயித்யாதி) அதாவது - இத்தனைநாளுமென்னை "தஞ்சம்" என்றிருந்தாள், இப்போதென் சொற்கேளாமல் என்னைவிட்டும்மைத் தஞ்சமாகப்பற்றின விவள்படும்பாடேயிது, இவளையித்தனைபாடுபடுத்தவேணுமோவென்றபடி. என்வழிவாராதே என்சொல்வழிவாராதே. அதாவது - "இலங்கைசெற்றீருக்கே" என்றும், "எனதுவளவண்ணர் தகவுகளே" என்றும், "எனகள்விதான்பட்ட வஞ்சனையே" என்றும், நான்சொன்னவார்த்தைகளையநாதரித்தென்றபடி. யத்வா, என்வழி - "𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍" (தத்தஸ்யஸத்ருஶம்பவேத்) என்கிறநிலையாதல். ஸுந்தரகாண்டே ஏகோநசத்வாரிம்ஶே, "𑌶𑌰𑍈𑌸𑍍𑌤𑍁 𑌸𑌙𑍍𑌕𑍁𑌲𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾𑌂 𑌪𑌰𑌬𑌲𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 । 𑌮𑌾𑌂 𑌨𑌯𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍" (ஶராஸ்த்துஸங்குலாங்க்ருத்வா லங்காம்பரபலார்தந꞉ । மாங்நயேத்யதிகாகுத்ஸ்த ஸ்தத்தஸ்யஸத்ருஶம்பவேத்.)

க்ரமேணாந்வய꞉...*

ஒன்பதாம்பாட்டு.

பட்டபோதெழுபோதறியாள்விரை
மட்டலர்தண்டுழாயென்னுஞ்சுடர்
வட்டவாய்நுதிநேமியீர்நுமது
இட்டமென்கொலிவ்வேழைக்கே.

ஆறாயிரப்படி.

(பட்டபோது) ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாகத் திருவாழியை யேந்திக்கொண்டிருக்கிறீர், உம்மோடுஸம்ஶ்லேஷிக்கையிலுள்ள வபிநிவேசத்தாலே மற்றொன்று மநுஸந்திக்க க்ஷமையன்றிக்கேயிருக்கிற விவள்திறத்திற் செய்யநினைத்தருளிற்றென்னென்கிறாள்........................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இவ்வளவில், ரக்ஷணோபகரண வத்தையையுடைய வும்முடைய நினைவேதாயிருக்கிற தென்கிறாள்.

உறங்காமையாலும், உணர்ந்துதெளிவுடையளாயிராமையாலும் பட்டபோது - அஸ்தமித்தபோதும். எழுபோது - உதித்தபோதும். அறியாள் - அறிகிறிலள். அறிகிறதுநெஞ்சத்திலேயாகையாலே. விரை - பரிமளமும். மட்டு - மதுவும். அலர் - பரம்பின. தண்டுழாய் - செவ்வித்திருத்துழாய். என்னும் - என்னாநிற்கும். சுடர் - ஜ்வாலைகளையுடைய. வட்டம் - வட்டமான. வாய் - வாயையும். நுதி - கூர்மையையுமுடைய. நேமியீர் - திருவாழியையுடையவரே. நுமது - ப்ரதிபந்தகத்

தைக்கழித்துக்கிட்ட பரிகரமுடையீரானவும்முடைய.. இட்டம் - நினைவானது. இவ்வேழைக்கு - பற்றிற்றுவிடமாட்டாத விச்சபலைக்கு. என்கொல் - ஏதாயிருக்கிறது.

ஸத்தைக் குறுப்பாயிருக்கிறதோ, முடிவுக்குறுப்பா யிருக்கிறதோவென்று கருத்து..*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

"இவள்பட்டன" என்கைக்கு என்பட்டாளென்ன ; படுவதெல்லாம் பட்டாளாகில் இவளினி என்படுவா ளென்கிருள்.

(பட்டபோதெழுபோதறியாள்) உதித்தது மஸ்தமித்தது மறிகிறிலள்.

இவளறிவது மேதேனுமுண்டோவென்னில் (விரையித்யாதி) விரை - ஒரு பரிமளமே, மட்டு - ஒருதேனே, அலர் - ஒரு பூவே, தண் - ஒரு குளிர்த்தியோ, என்றுதிருத்துழாய் விஷயமாக ஒருகோடியைச்சொல்லும். * உம்முடைய பெருந்தாருமொழிய வறியாளென்கிருள்.

என்றவாறே, "நம்மையாசைப்பட்டு இப்படிபடப்பெற்றோமே" என்றலப்யலாபத்தாலே கையிற்றிருவாழியை விதிர்த்தான் (சுடர்வட்டவாய்நுதிநேமியீர்) சுடரையும், வட்டமானவாரையயும், கூர்மையையுமுடைய திருவாழியைக் கையிலேயுடையீர். இப்போது "சுடர்பட்டவாய்நுதி" என்கிறவிசேஷண மென்னென்னில் ; பெண்பிள்ளையைக்காட்டில் திருத்தாயார், கையுந்திருவாழியுமான வழகுக்கீடுபட்டு, விசேஷணங்க ளிட்டநுபவிக்கிருள். அப்ரிதாகாஸ்ரிதவிபாகமற உமக்கழிக்கைக்குப் பரிகரமொன்றேயோ. "ஆழிப்படையந்தணனை மறவியையின்றிமனத்துவைப்பாரே" என்றிறே இவர் தம்முடையவார்த்தையும், கையுந்திருவாழியுமான வழகைக்கண்டால் நெஞ்சழியுமவர்களிறே. (நுமதிட்டமென்கொல) ராவணஹிரண்யாதிகளைப்போலே முடிக்கநினைக்கிறீரோ, நித்யஸூரிகளைப்போலே கையுந்திருவாழியுமானவழகை யநுபவிப்பிக்கிறீரோ, தன்னையும்மறந் தும்மையும்மறந்து ஸம்ஸாரிகளைப்போலே யுண்டுடுத்துத் திரியவைக்கிறீரோ ; இவள் பேற்றில் நீர்நினைத்திருக்கிறதென். (இவ்வேழைக்கே) அத்யந்தசபலையான இவள்விஷயத்தில் நீர்நினைத்திருக்கிறதென்.... ....*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (பட்டபோதித்யாதி) பூர்வார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை (இவள்பட்டனவித்யாதி) (இனியென்படுவோளிதி) இதுக்குமுன்பறபவியாதது யினிமேலே யநுபாவ்யமான துகமுண்டோவென்றபடி.

"பட்டபோது" என்றது - "முத்தப்பட்டது" என்னுமாபோலே, உதித்தபோதென்றபடி. "எழுபோது" என்றது - "எழுகளம்" என்னுமாபோலே, அஸ்தமித்தபோதென்றபடி. எழுகளம் - முடிகிறயுத்தபூமி.

விவரணம் (உம்முடையவித்யாதி)

விதிர்த்தான்-சலிப்பித்தான். தடஸ்த்தசங்கையை யநுவதித்து பரிஹரிக்கிருர் (இப்போதித்யாதி) இப்போது - தாயார் தன்வார்த்தையாய்ச் சொல்லுகிறபோது. "சுடர்வட்டவாய்நுதிநேமியீர் - பட்டபோது" இத்யாதி பூர்வார்த்தத்தோடேகூட்டி, மகளுடைய வ்யஸநத்துக்குத் திருவாழியாழ்வானோட்டைச்சேர்த்தியழகே ஹேதுவென்று தாத்பர்ய மருளிச்செய்கிருர் (ஆஶ்ரிதாநாஶ்ரிதேத்யாதி) அதாவது - அநாஶ்ரிதரான ஹிரண்யாதிகளை யழிக்கைக்கும், ஆஶ்ரிதையான விவளைச்சேர்த்தி யழகைக்காட்டியழிக்கைக்கும்பரிகரமொன்றேயோ வென்றபடி. இவரப்படிகையுந் திருவாழியுமானவழகிலே யீடுபட்டிருப்பரோவென்ன (ஆழிப்படையித்யாதி) அந்தணனை - பரிசுத்தனை. "சக்கரத்தண்ணலேயென்றுதாழ்ந்து," "ஆழியொடும்பொன்னூர் சார்ங்கமுடையவடிகளை யின்றொன்றறியேன்" இத்யாதியைத்திருவுள்ளம்பற்றி, திருமங்கையாழ்வார் முதலானோரையுங்கூட்டி யருளிச்செய்கிருர் (கையுமித்யாதி)

"சுடர்வட்டவாய்நுதிநேமியீர்" என்றத்தையுங்கூட்டியாவம் (ராவணேத்யாதிவாக்யத்வயேந) "நுதி" என்ற - தைக்ஷ்ண்யத்தைப்பற்ற (ராவணஹிரண்யாதிகளைப்போலேயென்றது) "சுடர்" என்றத்தாற்சொன்ன - ஸௌந்தர்யத்தைப்பற்ற (நித்யஸூரிகளைப்போலேயித்யாதி) இந்தவர்த்தத்வயத்தையே யுத்தரத்ரவிவரிக்கிருர் (கூர்மைக்கிலக்காக வித்யாதிவாக்யத்வயேந) "பட்டபோதெழுபோதறியாள்" என்றத்தைப்பற்ற, தன்னையுமறந்தித்யாதி. அதாவது "பட்டபோதெழுபோதறியாள்" என்கிறவிடத்திலே - "𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌦𑌿𑌤 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌰𑌵𑍌 । 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌨𑌾𑌵𑌬𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌜𑍀𑌵𑌿𑌤𑌕𑍍𑌷𑌯𑌮𑍍" (நந்தந்த்யுதிதஆதித்யேநந்தந்த்யஸ்தமிதேரவௌ। ஆத்மநோநாவபுத்யந்தேமநுஷ்யாஜீவிதக்ஷயம்) இத்யாதிப்படியே யெல்லாரும் ஸுகமாகவிருக்க இவளுதித்தது மஸ்தமித்தது மறியாதேயிருக்கிருளென்றிறே தாத்பர்யம்; அந்தபாவத்தைத் திருவுள்ளம்பற்றி, இப்படியிருக்கிறவிவளை யவர்களைப்போலே யுண்டுடுத்துத் திரியவைக்கிறீரோவென்றபடி. "இவ்வேழைக்கு - நுமதிட்டமென்கொல்" என்கிற பதஸங்கதியைத் திருவுள்ளம்பற்றி, "விரைமட்டலர்" இத்யாதியையுங் கடாக்ஷித்து, சாபலஸ்யவிஷயந்தர்ஶயந் பாவமாஹ (பற்றிற்றுவிடாதவித்யாதி) ஏழை-சபலை. "சுடர்" இத்யாதியையும், "விரை" இத்யாதியையுமுட்கொண்டு சாபலத்தை விவரிக்கிருர் (கையுமித்யாதி.) ....*

பத்தாம்பாட்டு.

ஏழைபேதையிராப்பகற்றன
கேழிலொண்கண்ணநீர்கொண்டாள்கிளர்
வாழ்வைவேவவிலங்கைசெற்றீரிவள்
மாழைநோக்கொன்றும்வாட்டேன்மினே.

ஆறாயிரப்படி.

(ஏழைபேதை) உம்மையாசைப்படும் ஸ்வபாவையாய், உம்முடைய துர்லபத்வத்தை யறியமாட்டாத பால்யதசாபந்நையா யிருந்தவிவள், உம்மையாசைப்பட்டுப் பெறுதவ்யஸநத்தாலே அத்யந்தமவஸந்நையானாள்; இவள்முடிவதற்குமுன்னே ப்ரதிபந்தகங்களையும் நீரேபோக்கிக்கொண்டு சடக்கெனவந்து ரக்ஷித்தருளவேணுமென்றெம்பெருமானை யபேக்ஷிக்கிறாள்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், விரோதிமிக்கால் வெற்றிப்பண்ணும் வீரப்பாட்டையுடைய நீர்; இவள்நோக்கொன்று மொழியச்சென்றற்றது, இத்தைமுடியாதொழிய வேணுமென்கிறாள்.

ஏழை - கிட்டாதொழியிலும் விடாதசபலையுமாய். பேதை - என்சொற்கேளாதபேதையுமானவிவள். இராப்பகல் - இரவோடுபகலோடுவாசியற. தன - தன். கேழ் - ஒப்பு. இல் - இல்லாத. ஒண் - அழகிய. கண் - கண்கள். நீர் - நீர். கொண்டாள் - கொள்ளும்படியானாள். கிளர் - மிக்கவுயர்த்தியையுடைத்தாய், பரமோதாரமான. வாழ்வு - ராவணைஸ்வர்யம். வேவ - அக்நிஸாத்தாம்படி. இலங்கை - லங்கையை. செற்றீர் - அழியச்செற்றவனே. அவளுக்குதவினாற்போலே இவள் - இவளுடைய. மாழை - முக்தமான - மானின்நோக்குப்போலேயிருக்கிற நோக்கொன்றும் - நோக்கையொன்றையுமாகிலும். வாட்டேன்மின் - க்ஷயிப்பியாதொழியவேணும்.

இவள்நோக்குக்கிடர் எல்லார்க்குமுஜ்ஜீவந ஹேதுவென்றுகருத்து......

---

௩ - பத்தாம்பாட்டு.

இவள், நோக்கொன்றுமொழிய அல்லாதவெல்லாமொழிந்தாள்; இந்நோக்கொன்றையும் நோக்கிக்கொள்ளீரென்கிறாள்.

(ஏழை) "கிடையாது" என்றுப்ரமாண ப்ரஸித்தமானத்திலே, கிடைக்குமதில்பண்ணும் சாபலத்தைப்பண்ணுகை. (பேதை) "கிடையாது" என்றறிக்குமீளும் பருவமல்ல, நான்ஹிதஞ்சொன்னாலுங் கேளாதபருவம். (இராப்பகல்தனகேழிலொண் கண்ணநீர்கொண்டாள்) ஆநந்தாஸ்ருவுக்குத் ததுகியாய்; (கேழில்) கேழ்என்று - ஒப்பாய், இல்என்று - இல்லாமையாய், ஒப்பின்றிக்கே யிருப்பதாய்; ஒண்கண் - கண்ணநீரில்லாவிடிலும், கண்டார்க்கு ஆலத்திவழிக்கவேண்டும்படியானகண், ஸர்வகாலமும்அஸ்ருபூர்ணமாயிற்று. தாமரையிலே முத்துப்பட்டாற்போலே யிக்கண்ணும் கண்ணநீருமாயிருக்கிறவிருப்பை, காட்டிலெறித்தநிலாவாக்குவதே. இவ்விருப்புக்கு க்ருஷிபண்ணி, பலவேளையிலேயிழப்பதே; பொன்னும் முத்தும் விளையும்படியிறே க்ருஷிபண்ணிற்று. இப்போதிவளிழவுக்கன்றியே, அவனிழவுக்காயிற்றிவள்கரைகிறது.

(இளரித்யாதி) நடுவேகண்ணீர்விழவிடுமித்தனையோவிரோதிகனத்திருக்கவென்ன; ராவணனிலும் வலிதோ இவளுடையவிரோதிவர்க்கம். "உதீர்ணஸ்யராவணஸ்ய" (உதீர்ணஸ்யராவணஸ்ய) என்கிறபடியே-தாயும் தமப்பனும் சேரவிருக்கப்பெறாத வைஶ்வர்யமிறே. இளர்ந்தவைஶ்வர்யமானது வேம்படிலங்கையை நிரஸித்தீர். ஒன்றையழிக்கநினைத்தால், முதல்கிடவாமேயழிக்குமவராயிராநின்றீர்.

(இவள்மாழைநோக்கொன்றும்வாட்டேன்மினே) இவளுடையமுக்தமானநோக்கொன்றும் கிடக்கும்படி கார்யம்பார்க்கவேணும். மாழையென்று - இளமை. (நோக்கொன்றும்வாட்டேன்மினே) இவள்தானே முடிந்துபோகிறாள், நாங்கள் தானேயிழக்கிறோம், ஜீவிக்கவிருக்கிற நீர் வேணுமாகில், உம்முடையஜீவரத்னத்தைநோக்கிக்கொள்ளப்பாரும்.*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (ஏழையித்யாதி) "மாழைநோக்கொன்றும் வாட்டேன்மின்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (இவளித்யாதி)

கிடையாதென்று ப்ரமாணப்ரஸித்தமானத்திலேயென்றது - "ஸௌம்ய மநோரதம் ஸ்வர்க்கம் ஸ்வர்க்கிவந்த்யஞ்ச | ப்ராப்நோத்யாராதிதேவிஷ்ணௌ முக்திம் அப்யதிதுர்லபாம்" (ஸௌம்யமநோரதம்ஸ்வர்க்கம்ஸ்வர்க்கிவந்த்யஞ்சயத்பதம்।ப்ராப்நோத்யாராதிதேவிஷ்ணௌமுக்திமப்யதிதுர்லபாம்) "நசக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்" (நசக்ஷுஷாபஶ்யதிகஶ்சநைநம்) "நக்ராஹ்யஸ்ஸகேநசித் க்வசித்" (நக்ராஹ்யஸ்ஸகேநசித்க்வசித்) "கட்கிலி" இத்யாதியைப்பற்ற. (நான்ஹிதஞ்சொன்னதுமிதி) "தகவுகளே" "வஞ்சனையே" இத்யாதிஸ்த்தலங்களிலேசொன்னேனென்றபடி.

(ஆலத்தியழிக்கை) ஆலத்தியாலே த்ருஷ்டிதோஷத்தை வழிக்கை. போக்குகையென்றபடி. "தனகேழிலொண்கண்ணிலே - இராப்பகல்நீர்கொண்டாள்" என்றந்வயித்தர்த்தம் (ஸர்வகாலமுமித்யாதி) கண்ணைவர்ணிக்கிறவளுடையஹார்த்தபாவம். (தாமரையிலேயித்யாதி) 'அதாவது-ஸம்ஶ்லேஷாநந்தஸம்ஸாத்மிக்கைக்காகவும், மேன்மேலனத்ருஷ்ணைபிறப்பிக்கைக்காகவுமன்றோ நீர்விஶ்லேஷித்தது; அவையப்படியே பலித்தபின்பும், கண்ணநீரையும் மாற்றிக்கலக்கப்பெறாதேயிழப்பதேயென்றபடி.]"தாமரையிலே - தாமரைப்பூவிலே. அதிலநிச்சுவாயிழக்கிறீரல்லீர், "இதுவேணும்" என்று ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலே பாடுபட்டிழந்துவிட்டீரோவென்கிறாள் (இவ்விருப்புக்கித்யாதி) "ஒண்முத்தும் பைம்பொன்னுமேந்தி" என்றத்தையுட்கொண்டு ரஸோக்தி (பொன்னும்முத்துமித்யாதி) பொன்-வைவர்ண்யம். முத்து-அஶ்ருபிந்துக்கள். (இப்போதிவளிழவுக்கன்றியேயிதி) இல்லையாகில், "தனகேழிலொண்" என்கிற விசேஷணத்துக்குப்ரயோஜநமில்லையிறே.

மேழுக்குசேஷமாக்கியவதாரிகை (நடுவேயித்யாதி) "ராவணனிலும்வலிதோ" என்கைக்கு அவளப்படியதிகனோவென்ன; இளர்த்தியின் சரமாவதிமாஹ (உதீர்ணஸ்யேத்யாதி) அயோத்யாகாண்டேப்ரதமே, "ஸஹிதேவைருதீர்ண

ஸஹ்ஸ்ராவணஸஹ்வயாயிநஹி:। கயிநதாரோநஷ்டௌ கேஜே விஷ்ணு ஸுநாதநஃ" (ஸஹிதேவைருதீர்ணஸ்யராவணஸ்யவதார்த்திபி:। அர்த்தோமஹாஷேலோகேஜஜ்ஞேவிஷ்ணுஸ்ஸநாதந:) "வாழ்வை" இத்யத்ர - ஐகாரம்-அவ்யயம். "கிளர்வாழ்வைவேவவிலங்கைசெற்றீர்-இவள் மாழைநோக்கொன்றும்வாட்டேன்மினே" என்றுமேலுக்கு சேஷமாக்கி பாவாந்தரம் (ஒன்றையழிக்கவித்யாதி) அதாவது-லங்கையை நிஶ்ஶேஷமாக அழித்தாற்போலே யிவளையுமழியாதே கொள்ளுமென்றபடி.

"வாட்டேன்மின்" என்று-பலமவனதாகச்சொன்னதுக்குபாவம் (இவள்தானேயித்யாதி) உம்முடைய ஜீவநத்தையென்றது - "மணநோக்கமுண்டானே" என்றத்தைப்பற்ற.

க்ரமேணார்வய: ....*

பதினொன்றும்பாட்டு.

வாட்டமில்புகழ்வாமநனையிசை
கூட்டிவண்சடகோபன்சொல்லமை
பாட்டோராயிரத்திப்பத்தாலடி
சூட்டலாகுமந்தாமமே.

ஆறாயிரப்படி.

(வாட்டமில்) ஆழ்வாரிப்படி யவஸந்நரானவிடத்தில், அவருடையவஸாதமெல்லாம்போம்படிவந்துதோன்றி யருளுகையாலே வாட்டமில்லாத ப்ரணயித்வ வாத்ஸல்ய காருண்ய ஸௌசீல்யாதி கல்யாணகுணங்களை யுடையனாயிருந்த எம்பெருமானைச்சொன்னவித்திருவாய்மொழி, அவன்திருவடிகளிலே யழகியதொரு திருமாலையாகச் சூட்டலாமென்கிறார் ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவதாராதநரூபகைங்கர்யத்தை யருளிச்செய்கிறார்.

நோக்குவாடாதபடி தன்குறைவுதோன்ற அர்த்தியாய்வந்து முகங்காட்டினபடியாலே வாட்டம் - வாட்டம். இல்-இல்லாத. புகழ்-குணப்ரதையையுடைய. வாமநனை-வாமநனைக்குறித்து. வண்-உதாரரான. சடகோபன் - ஆழ்வார். இசை-இசையோடே. கூட்டி-கூட்டி. சொல் - சொன்ன. அமை - லக்ஷணபூர்த்தியாலேயமைதியையுடைய. ஓர்-அத்விதீயமான. பாட்டு-பாட்டுக்கள். ஆயிரத்து - ஆயிரத்திலும். இப்பத்தால்-இப்பத்தால். அடி-அந்தவாமநனடியிலே. அம் - அழகிய. தாமம்-மாலையை. சூட்டலாகும்-சூட்டலாம்.

இது வஞ்சிவிருத்தம் ....*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில்-இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார், இவர் ப்ரார்த்தித்தபடியே நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே * சூட்டுநன்மாலைப்படியே திருமாலைசாத்தி யடிமைசெய்யப்பெறுவர்களென்கிறார்.

(வாட்டமில்புகழ்வாமனனை) இவ்வளவிலேவந்து முகங்காட்டிற்றிலனாகில், அவன்புகழுக்கு வாட்டம்வந்ததிறே. (வாமனனை) தன்னுடைமைபெறுகைக்கிரப்பாளனுமவனிறே. (இசைகூட்டி) பரிமளத்தோடே பூவலருமாபோலே, இசையோடேபுணர்ப்புண்டதாயிற்று. (வண்சடகோபன்சொல்) “ உதாரதீர்முநி: ” (உதாரதீர்முநி:) என்னுமாபோலே, மாநஸாநுபவமன்றிக்கே வாசிகமாக்கி நாட்டைவாழ்வித்த ஔதார்யம். (அமைபாட்டோராயிரத்து) அமைவு-சமைவாய், சப்தார்த்தங்கள் நிறைந்திருக்கை. (இப்பத்தாலித்யாதி) இப்பத்தையுமப்யஸிக்கவல்லவர்களுக்குச் செவ்விமாலையைக்கொண்டு அவன்திருவடிகளிலே நித்யகைங்கர்யம்பண்ணப்பெறலாம். “ கைங்கர்யம்பண்ணவேணும்” என்றாசைப்பட்டு, அதுபெறாமையாலே போலே காணுமிவ்வாற்றாமையெல்லாம் பிறந்தது; பித்ருதநம் புத்ரனுக்கு ப்ராப்தமாமாபோலே, இவ்வாற்றாமையால்வந்த க்லேஶம் இதுகற்றவர்களுக் கநுபவிக்கவேண்டாதே, “ அடியார்கள் குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ ” என்று ஆசைப்பட்டபடியே அத்திரளிலேபோய்ப்புக்கு அநுபவிக்கப்பெறுவரென்கிறார்.

முதற்பாட்டில்-ஆஶ்ரிதராபத்தேசெப்பேடாக வுதவும் ஸ்வபாவனானவன், இவளுடைய ஆபத்துக்குவந்துதவுகிறிலனென்றாள்; இரண்டாம்பாட்டில் - “ விரோதியுண்டே ” என்றுநினைவாக, பாணனுடையபாஹுவநத்திலும் வலியதோ இவள் விரோதியென்றாள்; மூன்றாம்பாட்டில்-இப்படிசெய்யநினைத்த நீர் முன்பச்செயலை என்றியசெய்தீரென்றாள்; நாலாம்பாட்டில்-அதுபொறுக்கமாட்டாமல் அதுதன்னையே யுபகாரமாகச் சொல்லாநின்றீரென்றாள்; ஐந்தாம்பாட்டில் - அவ்வளவிலும்வாராமையாலே, நிர்த்தயனென்றாள் திருத்தாயார்; ஆறாம்பாட்டில்-அதுபொறுக்கமாட்டாமல், கெடுவாய் ஆகரத்தில் தகவுமறுக்குமோ, அதுநங்குறைகாணென்கிறாளென்றாள்; ஏழாம்பாட்டில் - அவன்குணஹாநிதன்னையே குணமாகக்கொள்ளும்படி யிவளைவஞ்சித்தானென்றாள்; எட்டாம்பாட்டில்-உம்மை யபாஶ்ரயமாகப்பற்றினவிவள் படும்பாடேயிதுவென்றாள்; ஒன்பதாம்பாட்டில்-இவள்பேற்றில் நீர்செய்தருள நினைத்திருக்கிறதென்னென்றாள்; பத்தாம்பாட்டில் - சேஷித்தது நோக்கொன்றுமேயாயிற்று, இதொன்றையும் நோக்கிக்கொள்ளீரென்றாள்; நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்........*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (வாட்டமித்யாதி) "அடிசூட்டலாகுமந்தாமமே" என்றதைக்க டாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியையித்யாதி) திருவிருத்தம் (சூட்டுநன் மாலைகள்) சூட்டுகைக்குத்தகுதியான நல்லமாலைகள்.

நித்யநிர்த்தோஷகுணங்களுக்கு வாட்டத்துக்கு ப்ரஸக்தியுண்டோவென் ன (இவ்வளவிலேயித்யாதி) "வாமநன்" என்கிறபதத்துக்கு - "இவளாற்றாமை தனக்குண்டு" என்றுமிடந்தோன்ற வர்த்தியாநின்றானென்றர்த்தமாக விவக்ஷித் து, இப்பதமிவ்வர்த்தத்தைக்காட்டுமோ வித்யாஶங்காயாமாஹ (தன்னுடைமை யித்யாதி)

இசை-காநம். புணர்ப்புண்டதாயிற்று - ஸந்தர்ப்பிதமாயிற்று. இவர்க்குவ ண்மையேதென்ன (உதாரதீரித்யாதி) பாலகாண்டே த்விதீயே, "𑌉𑌦𑌾𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑌦𑍈𑌰𑍍𑌮𑌨𑍋𑌰𑌮𑍈𑌸𑍍𑌤𑌦𑌾𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌕𑌾𑌰 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍। 𑌸𑌮𑌾𑌕𑍍𑌷𑌰𑍈𑌶𑍍𑌶𑍍𑌲𑍋𑌕𑌶𑌤𑍈𑌰𑍍𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍋 𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑌂 𑌕𑌾𑌵𑍍𑌯𑌮𑍁𑌦𑌾𑌰𑌧𑍀𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌃." (உதாரவ்ருத்தார்த்தபதைர்மநோரமைஸ்ததாஸ்யராமஸ்யசகாரகீர்த்திமாந் | ஸமாக்ஷரை ஶ்ஶ்லோகஶதைர்யஶஸ்விநோ யஶஸ்கரம்காவ்யமுதாரதீர்முநி:.)

"அமைபாட்டு" என்றவிடத்திலே - "𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑌃" (ஸக்ருத் ஸமாஶ்ரயது) இத்யாத்யநுஸந்தேயம்.

"அந்தாமம்" என்றதுக்கர்த்தம் (செவ்விமாலையென்றது) இங்கே யிதுகற் றவர்களுக்குக்கைங்கர்யத்தைப்பலமாகச்சொல்லுகையாலே-நீழே, "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றவிடத்திலும்-கைங்கர்யபர்யந் தம் விவக்ஷிதமென்கிறார் (கைங்கர்யம்பண்ணவித்யாதி) இவர்களுக்குமிவரைப் போலே யாற்றாமைபிறக்கவேண்டாவோவென்ன (பித்ருதநமித்யாதி) இவருடைய பாசுரங்கற்றவழியாலே யிவரைக்குறித்து ஶிஷ்யபுத்ரத்வமுண்டிறே கற்றவர்க ளுக்குமென்றபடி. (அநுபவிக்கப்பெறுவரென்கிறார்நி) இதுகற்றவர்களுக்கிவரு டைய ப்ரார்த்தனையே ப்ரார்த்தனை, தனித்து ப்ரார்த்தனைவேண்டாவென்றபடி.

என்றிய-எதுக்காக. மறக்குமோ—வற்றுமோ. அபாஶ்ரயம்-ஆஶ்ரயம்.

"ஈயாடுவதோகருடற்கெதிரேயிரவிக்கெதிர்மின்மினியாடுவதோ, நாயோ டுவதோவுறுமிப்புலிமுன் நரிகேசரிமுன் னடையாடுவதோ, பேயாடுவதோ வழகூ ர்வசிமுன் பெருமானடிசேர்வகுளாபரணன், ஓராயிரமாமறையின்றமிழி லொரு சொற்பொருமோவுலகிற்கவியே." என்கிறசங்கத்தார்கவியும், "அமைபாட்டோர்" என்றவிடத்திலே யநுஸந்தேயம். வாமநனை - வாமநனைக்குறித்து. இசைகூட்டி- இசையோடுகூட்டி. சொல்-சொன்ன.

க்ரமேணாந்வய:..

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(ஆடியாடி.)

ப்ரஹ்லாதார்த்தே ந்ருஸிம்ஹம் க்ஷபிதவிபக்ஷாவல்லபம் க்ஷிப்தலங்கம்
க்ஷேவளப்ரத்யர்த்திகேதும் ச்ரமஹரதுலஸீமாலிநம் தைர்யஹேதும் ।
த்ராணே தத்தாவதாநம் ஸ்வரிபுஹதிக்ருதாச்வாஸநம் தீப்தஹேதிம் ஸத்ப்ரே
க்ஷாரக்ஷிதாரம் வ்யஸநநிரஸநம் வக்தி ஸ்த்ரீஞ்ஜகாத ॥ (கரு)

(ப்ரஹ்லாதார்த்தே ந்ருஸிம்ஹம்) நாடிநாடி நரசிங்காவென்று - பக்தரான ப்ரஹ்லாதர்நிமித்தமாக ந்ருஸிம்ஹனுயாவிர்ப்பவித்தும்; (க்ஷபிதவிபக்ஷாவல்லபம்) விறல்வாணனுயிரந்தோள் துணித்தீர் - அநிருத்தருக்கு விரோதியான பாணஸுரனுடைய கரங்களைக்கழித்தும்; (க்ஷிப்தலங்கம்) அரக்கனிலங்கை செற்றீருக்கே - எதிரியான ராவணனுடைய விலங்கையையழித்தும்; (க்ஷேவளப்ரத்யர்த்திகேதும்) வலங்கொள் புள்ளுயர்த்தாயென்னும் - விஷவிரோதியான வைநதேயனை த்வஜமாகப்படைத்தும்; (ச்ரமஹரதுலஸீமாலிநம்) வண்டுதிவளுந்தண்ணந்துழாய் - மதுஸ்யந்தியாகையாலே ச்ரமஹரமாயிருக்கிற திருத்துழாய் மாலையைத்தரித்தும்; (தைர்யஹேதும்) எனதகவுயிர்க்கமுதே - விரஹவ்யஸநத்தாலே ஆத்மவஸ்து அழியாதே யம்ருதமாயிருந்து தரிப்பித்தும்; (த்ராணேதத்தாவதாநம்) வெள்ளநீர்க்கிடந்தாயென்னும் - ரக்ஷணத்திலே அவஹிதனாய்த் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தும்; ஸ்வரிபுஹதிக்ருதாச்வாஸநம) விறற்கஞ்சனை வஞ்சனைசெய்தீர் - மிடுக்கனானகஞ்சனை யழியச்செய்து, தந்நிமித்தமான பயத்தைத்தீர்த்தாச்வாஸநம்பண்ணியும்; (தீப்தஹேதிம்) சுடர்வட்டவாய் நுதிநேமியீர் - தேஜிஷ்டமான திருவாழியைத்திருக்கையிலேதரித்தும்; (ஸத்ப்ரேக்ஷாரக்ஷிதாரம்) மாழைநோக்கொன்றும் வாட்டேன்மினே - ஆச்ரிதருடைய ப்ரேக்ஷையைப் போக்காதேரக்ஷித்தும்; இப்படி ப்ரஸித்தவைபவனான வெம்பெருமானை, ஆச்ரிதருடைய வ்யஸநத்தையெல்லாம் நிரஸித்தருளுமவனாக "ஆடியாடி" என்கிறதசகத்திலே யாழ்வாரநுஸந்தித்தாரென்கிறார்..............................*

திருவாய்மொழிநூற்றந்தாதி.

ஆடிமகிழ்வானிலடியார்குழாங்களுடன்
கூடியின்பமெய்தாக்குறையதனுல் - வாடிமிக
அன்புற்றார்தன்னிலைமையாய்த்துரைக்கமோகித்துத்
துன்புற்றான்மாறனங்தோ. (கச)

(ஆடிமகிழ்வானில்) இதில் - ததீயரையுமவனையும் பிரிகையாலே மிகவும் தளர்ந்து, தாய்பேச்சாலே பேசுகிறபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; எம்பெருமானைப் பிரிந்தவளவன்றிக்கே, அவனுக்கு ப்ராணபூதரான நித்யஸூரிகளையுங் கூடப்பிரிகையாலே, தம்தசையைத் தாமறியாதபடி மோஹிதராய்க் கிடக்கிறதம்படியை பார்ஶ்வஸ்த்தரானபரிவர் அவனுக்கு விண்ண

ப்பஞ்செய்கிறப்ரகாரத்தை, கலந்து பிரிந்து மோஹங்களையான பிராட்டியுடைய விரஹபரவச வ்யாபாரோக்திகளை யநுகரித்து அவனுக்கறிவிக்கிற திருத்தாயார் பேச்சாலே யருளிச்செய்கிற * ஆடியாடி யிலர்த்தத்தை "ஆடிமகிழ்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(ஆடிமகிழ்வானிலடியார் குழாங்களுடன்கூடி யின்பமெய்தாக் குறையதனல்வாடிமிக) (ஆடிமகிழ்வானில்) பகவதநுபவத்திலே யவகாஹித்து ஹ்ருஷ்டராகிறவென்னுதல்; அன்றிக்கே, பகவதநுபவ ப்ரகர்ஷத்தாலே "ந்ருத்யந்தி கேசித்" (ந்ருத்யந்திகேசித்) என்னும்படியாடி அத்தாலே ஹ்ருஷ்டராகிறவென்னுதல். இப்படியானவானிலடியாரும் ஸ்ரீவைகுண்டவாஸிகளான நித்யஸூரிகள். அவர்கள் ஸங்கத்திலே ஸங்கதராயாநந்தத்தையடையாத அபூர்த்தியாலே "வாடிவாடி" என்றுமிகவாடி. (அன்புற்றார்தன்னிலைமையாய்ந்துரைக்க) "முயல்கின்றேனுன்றன்மொய்கழற்கன்பை" என்றதிகவதிக ஸ்நேஹயுக்தரான மதுரகவிப்ரப்ருதி ப்ரபுத்தஸுஹ்ருத்துக்கள், இவர்வ்யாமோஹத்தை யெம்பெருமானுக்கு நிரூபித்து, தங்முகேந "இதுதேவர்க்ருபாஸாத்யம்" என்றுவிஜ்ஞாபிக்கிறபடியை, தன்றிறத்திலே பரிவுடையதிருத்தாயார் தன்ஸ்வபாவத்தை யாராய்ந்து பேசும்படியாக. (மோகித்துத்துன்புற்றான்மாறனந்தோ) தாம்தம்தசையைப் பேசமாட்டாமல் பிறர்பேசும்படிமோஹித்த தசையை ப்ராப்தரானாராழ்வார், ஐயோ. "மமாபி வ்யதிதம் மந:" (மமாபிவ்யதிதம்மந:) என்று, * அற்றபற்றார்க்கு மிரங்கவேண்டும்படியாயிற்றேயிவர்தசையிருப்பது. அன்புற்றார்தன்னிலைமை யாய்ந்துரைக்கையாவது "ஸாதிர்யகூர்த்வஞ்ச" (ஸாதிர்யகூர்த்வஞ்ச) இத்யாதிப்படியே, "எங்கும் நாடிநாடி நரசிங்காவென்று வாடிவாடும்" என்றும், "உம்மைக்காணுமாசையுணைகின்றாள், உம்மைக்காண நீரிரக்கமிலீரே" என்றும், "வண்டுதிவளுந்தண்ணந்துழாய்கொடீரென தவளவண்ணர் தகவுகளே" என்றும், "உம்மைத்தஞ்சமென்றிவள் பட்டனவே" என்றும், "நமதிட்டமென்கொலிவ்வேழைக்கே" என்றும், "இவள்மாழைநோக்கொன்றும்வாட்டேன்மினே" என்றுமிப்புடைகளிலே யருளிச்செய்தவையென்கை. இப்படிதம்தசைதமக்கு வாசாமகோசரமாய், கண்டாரெல்லாமிரங்கவேண்டும்படி யாயிருக்குமாயிற்று..........................*

இரண்டாம்பத்தில்-நான்காந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக-திருவாய்மொழி-கச—பாட்டு-கருச.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

ஐந்தாந்திருவாய்மொழி.

அந்தாமத்தன்பு-ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(அந்தாமத்தன்பு) இப்படிதோற்றியருளின வெம்பெருமான் தம்மோடுகலந்த கலவியையும், அக்கலவியால் தமக்குப்பிறந்த ஸம்ருத்தியையுஞ் சொல்லுகிறார் ....*

பன்னீராயிரப்படி.

அஞ்சாந்திருவாய்மொழியில், இப்படி யிவருடைய ஆர்த்தியைக்கண்டு த்வரிதனாய் ஸம்ஶ்லேஷித்த ஸர்வேஶ்வரனுக்கு ப்ரீதியாலேவந்த ஸௌந்தர்யாதிசயத்தை யருளிச்செய்கிறதாக; ப்ரதமத்திலே ஸங்க்ரஹேண பூஷணாவயவாயுதசோபாவிஶிஷ்டமான வடிவழகையும், அத்தோடேகூடின விபூத்யுந்மேஷத்தையும்; ஸம்ஶ்லேஷகாரிதமான ரக்ஷகத்வோந்மேஷத்தையும், ஸ்த்ரௌஜ்ஜ்வல்யத்தையும், உபமாநராஹித்யத்தையும், அபர்யந்தபூஷணாதி யோகத்தையும், தர்ஶநீயசேஷ்டிதத்வத்தையும், ஸம்ஶ்லேஷவைலக்ஷண்யத்தினுடைய வாசாமகோசரதையையும், சொல்லுகைக்கதிகாரிகளில்லையென்னுமிடத்தையும், சொல்லுகை யரிதென்னுமிடத்தையு மருளிச்செய்து, தம்முடைய ஸம்ஶ்லேஷப்ரீதிகாரித ஸௌந்தர்யபாரம்யத்தை யருளிச்செய்கிறார் ....*

ஈடு.

" கஜாக்ருஷ்டே தடே க்ராஹாக்ருஷ்டே ஜலே " (கஜஆகர்ஷதே தீரேக்ராஹஆகர்ஷதேஜலே) என்னுமாபோலேயிறே கீழ் * ஆடியாடியில் ஆழ்வார்க்குப்பிறந்த வ்யஸநம்; அதெல்லாமாறும்படியாக, " அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம் " (அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம்) என்கிறபடியே பெரிய வரையோட்டே ஆயுதாபரணங்களை அக்ரமமாகத் தரித்துக்கொண்டு மடுவின்கரையிலே அரைகுலையத் 'தலைகுலையவந்துள்ளேபோய்ப்புக்கு, ஆனையையொருகையாலும் முதலையையொருகையா

னுமாக வணைத்தெடுத்துக்கொண்டு கரையிலேயேறி, “ க்ராஹம் சக்ரேண மாதவ: ” (க்ராஹம்சக்ரேணமாதவ:) என்கிறபடியே - ப்ரஜையின்வாயிலே முலையைக்கொடுத்து க்ரந்தியைசிகித்ஸிப்பிக்குமாபோலே, பெரியபிராட்டியாரும் தானுமாக இரண்டுக்கும் நலிவுவாராமே திருவாழியாலேவிடுவித்து, சாத்தியருளின திருப்பரிவட்டத்தலையைச்சுருட்டித் திருப்பவளத்திலேவைத்து அதினுடைய புண்வாயை வேதுகொண்டு திருக்கையாலே குளிரஸ்பர்ஶித்துநின்றாற்போலே, இவரும் “ வலங்கொள்புள்ளுயர்த்தாய் ” என்றுகூப்பிட்ட ஆர்த்தநாதம்செவிப்பட்டு, “அழிதாக நாம் ஜகந்நிர்வஹணம்பண்ணினோம், நாமாராமோம்” என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜாபயங்களாலே விஹ்வலனாய், தன்னுடைய ஸ்வரூபரூபகுணங்கள், ஒப்பனை, திவ்யாயுதங்கள் சேர்ந்தசேர்த்தி, இவையெல்லாவற்றோடும்வந்து ஸம்ஶ்லேஷித்து அத்தாலே த்ருஷ்டரூய் க்ருதக்ருத்யனாயிருக்கிற விருப்பை யநுபவித்து, அவ்வநுபவஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே தாம்பெற்றபேற்றைப்பேசி யநுபவிக்கிறார் ....*

ஜீயர் அரும்பதம்.

அந்தாமத்தன்புப்ரவேஶ. வ்ருத்தாநுவாத பூர்வகம்வர்த்திஷ்யமாணஸங்கதிமாஹ (கஜேத்யாதி) அதாவது-விஶ்லேஷய்யஸநம்முடிக்கத்தேட, நசையானது முடியவொட்டாமல்ஜீவிப்பிக்க, இப்படியேயிறேசென்றதென்றபடி. விஷ்ணுதர்மே அஷ்டஷஷ்டிதமேத்யாயே, “ [illegible] ” (கஜாகர்ஷேதிரோக்ராஹ ஆகர்ஷதேஜலே । தயோர்த்வந்த்வஸமம்யுத்தம் திவ்யம்வர்ஷஸஹஸ்ரகம்.)

ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வ்யஸநமாறும்படி தோன்றினப்ரகாரத்தைவிஸ்தரேண வருளிச்செய்யாநின்றுகொண்டு, அப்படியே யிவர்க்குப்பிறந்த வ்யஸநமாறும்படிதோன்றின ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (அதெல்லாமாறும்படியித்யாதி) ஸ்ரீகஜேந்த்ராஜஸ்தவே, “ [illegible] ” (அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தமஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம் । அவாஹநபரிஷ்க்ரியம்பதகராஜமாரோஹத:கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயைநம:.) “ [illegible] ” (ஸ்ரக்பூஷாம்பரமயதாயதந்ததார:) என்றதைப்பற்ற (ஆயுதாபரணங்களையித்யாதி) “ வக்ராயுதோபய...ஜேந்த்ர: ” (சக்ராயுதோப்யகமதாஶயதோகஜேந்த்ர:) என்றதைப்பற்ற (மடுவின்கரையிலேயென்கிறார்) மஹா

பாரதேவிஷ்ணுதர்மே, "க்ராஹக்ரஸ்தம் கஜேந்த்ரம் தம் க்ராஹஞ்ச ஜலாஶயாத் । உஜ்ஜஹாராப்ரமேயாத்மா தரஸா மதுஸூதந: । ஸ்கந்தமாரோப்ய தாரயாமாஸ க்ராஹஞ்சக்ரேண மாதவ:" (க்ராஹக்ரஸ்தம் கஜேந்த்ரஞ்சதம் க்ராஹஞ்சஜலாஶயாத் । உஜ்ஜஹாராப்ரமேயாத்மா தரஸாமதுஸூதந: । ஸ்கந்தலஸ்ந்தம்தாரயாமாஸக்ராஹஞ்சக்ரேணமாதவ:) இத்யாதியைப்பற்ற (ஆனையையொருகையாலுமித்யாதி) "மாதவ:" (மாதவ:)என்றதுக்கர்த்தம் (பெரியபிராட்டியாருமித்யாதி) (இரண்டுக்கும்-வாராமே) முதலைக்கே நலிவுவரும்படியென்று கூட்டுவது. அவன் நிரவதிகவ்யாமோஹயுக்தனுகையாலே ஸம்பாவிதஸ்வபாவங்களை யருளிச்செய்கிறூர் (சாத்தியருளினவித்யாதி) இதுக்கு ஸூசகம்- "விஶ்வந்தியெவவிரசய்ய ... ஆஜக்முஷஸ்தவ கஜோத்தம ப்ரும்ஹிதேந பாதம் பராமம்ருஜ ஜோஷமபிசகாமமீஷா" (விஶ்வந்தியைவவிரசய்யரிசாய்யபூயஸ்ஸஞ்ஜுஹ்ருஷஸ்ஸதிஸமாஶ்ரிதவத்ஸலத்வே । ஆஜக்முஷஸ்தவகஜோத்தமப்ரும்ஹிதேநபாதம்பராமம்ருஜஜோஷாபிசகாமமீஷா) என்றாழ்வானருளிச்செய்தவசநம். வேதுகொண்டு-உஷ்ணமாக்கி. காய்ச்சியொற்றியென்றபடி. "திங்மாம்" (திங்மாம்) என்றத்தைக்கடாக்ஷித்து (நாமாராஞேமென்றது) "ஹ்ரீரோஷாஹிமமாதுலா" (ஹ்ரீரோஷாஹிமமாதுலா) என்றத்தைப்பற்ற (லஜ்ஜாபயங்களிறுலேயென்றது) "முடித்துவிடுமோ" என்கிறசங்கை-பயநிமித்தம். "தன்னுள்கலவாதது" "செம்பொன்திருவுடம்பு" "அரனேயோ" "பலபலவேயாபரணம்" "ஆழிநூலாரம்" இத்யாதிகளைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறூர் (ஸ்வரூபரூபேத்யாதி) "என்னுள்கலந்தவன்" என்றதைப்பற்ற (வந்துஸம்ஶ்லேஷித்தென்கிறூர்) "மாதகக்குன்றமொக்கும்" "ஆராவமுதமாய்" இத்யாதியைப்பற்ற (ஹ்ருஷ்டனுயித்யாதி) "க்ருதக்ருத்யஸ்ததாராம:" (க்ருதக்ருத்யஸ்ததாராம:) என்றத்தைப்பற்ற (க்ருதக்ருத்யனுயென்றது)...........*

ஐந்தாந் திருவாய்மொழி.

முதற்பாட்டு.

அந்தாமத்தன்புசெய்தென்னாவிசேரம்மானுக்
கந்தாமவாழ்முடிசங்காழிநூலாரமுள
செந்தாமரைத்தடங்கண்செங்கனிவாய்செங்கமலஞ்
செந்தாமரையடிக்கள்செம்பொன்திருவுடம்பே.

ஆறாயிரப்படி.

நித்யநிர்த்தோஷ நிரதிசயகல்யாண திவ்யதாமத்திற்பண்ணும்ப்ரேமத்தை யென்பக்கலிலே பண்ணிக்கொண்டு, ஸர்வதிவ்யபூஷணுயுத பூஷிதமாய் நிரதிசயஸௌந்தர்யாதி கல்யாணகுணவிசிஷ்டமாய், சுத்தஜாம்பூ

ந்த ப்ரபமான திவ்யரூபத்தோடேவந்து என்னோடேகலந் தருளினனென்கிறார்..*

பன்னீராயிரப்படி,

முதற்பாட்டில், பூஷணாதி விசிஷ்டமான விக்ரஹசோபையை யநுபவிக்கிறார்.

அந்தாமத்து - பரமபதத்தில். அன்பு - விருப்பத்தை. செய்து - பண்ணி. என்னாவி - ஹேயனான வென்னெஞ்சுக்குள்ளே. சேர் - பொருந்தின. அம்மானுக்கு - நிருபாதிகஸ்வாமியானவனுக்கு. ஸௌஷீல்ய ஸூசகமான அம் - அழகிய. தாமம் - மாலையையுடைத்தான. வாள் - உஜ்ஜ்வலமான. முடி - திருவபிஷேகம். சங்காழி - திவ்யாயுதங்கள். நூல் - திருயஜ்ஞோபவீதம். ஆரம் - திருவாரம். உள - இவைஸ்புரித்துத்தோன்றாநின்றன கண் - திருக்கண்கள். செந்தாமரைத்தடம் - சிவந்ததாமரைத்தடாகமாயிராநின்றன. செம் - சிவந்த. கனி - பக்வபலம்போன்ற. வாய் - அதரம். செம் - சிவந்த. கமலம் - தாமரையாயிராநின்றது. அடிக்கள் - திருவடிகள். செம் - சிவந்த. தாமரை - தாமரையாயிராநின்றன. திருவுடம்பு - திருவுடம்பு. செம்பொன் - செம்பொன்னாயிராநின்றது.

இப்பாட்டு - அந்தராதித்ய வித்யையிற்சொன்ன ஹிரண்மய விக்ரஹயோகத்தையும், புண்டரீகாக்ஷத்வாத்யவயவசோபையையும், த்ருதசங்கசக்ரத்வத்தையுஞ்சொல்லி, இப்படியாதித்ய மண்டலாந்தர்வர்த்தியானவன், "யஶ்சாயம்புருஷே யஶ்சாஸாவாதித்யே ஸஏக:" (யஸ்சாயம்புருஷேயஸ்சாஸாவாதித்யேஸஏக:) என்கிறபடியே - அழகிய ஆதித்யமண்டலத்திற் பண்ணும்விருப்பத்தை யென்னெஞ்சிலே பண்ணிப்புகுந்து, அந்த வ்யக்தியைக்கயிங்கே ஸ்புரிக்கும்படி அத்யுஜ்ஜ்வலனாயிராநின்றானென்றுஞ்சொல்லும்..................................*

ஈடு - முதற்பாட்டு.

"அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றிவராசைப்பட்டபடியேவந்து கலந்தானென்கிறார்.

(அந்தாமத்தன்புசெய்து) அழகியதாமத்திலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தை யென்பக்கலிலேபண்ணி. தாமமென்று - ஸ்த்தாநமாய், * மஞ்சா:க்ரோஸந்திபோலே, பரமபதத்திலுள்ளார்பக்கலிலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தை யென்பக்கலிலேபண்ணி. ஒருவிபூதியிலுள்ளார் பக்கலிலே பண்ணக்கடவ ஸ்நேஹத்தைக்கிடீர் என்னொருவன்பக்கலிலும் பண்ணிற்று. தாமே யருளிச்செய்தாரிறே "முற்றவுநின்றனன்" என்று. (என்னாவி) அவன்மேல்விழத்தா மிருக்குந்தன்மைதோன்றுகிறது. இவர் பூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்து இருக்கின்றார்; அதுவேஹேதுவாக அவன்மேல்விழாநின்றான். கமர்பிளந்தவிடத்திலே நீர்பாய்ச்சுவாரைப்போலே, "உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து" என்கிறவாவியிலேகாணும் வந்துசேருகிறது. (சேர்) விடாயர்மடுவிலே சேருமாபோலேவந்து

சேராநின்றான். இப்படி மேல்விழுகைக்கு ஹேதுவென்னென்னில் (அம்மானுக்கு) வகுத்தஸ்வாமியாகையாலே. நித்யவிபூதியிலுள்ளாரோபாதி லீலாவிபூதியிலுள்ளார்க்கும்வந்து முகங்காட்டவேண்டும்ப்ராப்தியையுடையவனுக்கு. இவரைப்பெற்றபின்பாயிற்றவன் ஸர்வேஸ்வரனாயிற்று. (அந்தாமத்தன்பாதி) "'அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ' என்றிவராசைப்பட்டபடியே, நித்யஸூரிகளோடேவந்துகலந்தான்" என்று ஆளவந்தாரருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான்பணிக்கும்படி. ஆனால், அவர்களை "ஆழிநூலாரம்" என்றேசொல்லுவதென்னில்; * சின்மயராயிருக்கச்செய்தே, பாரதந்த்ர்யஸித்திக்காகத் தங்களையமைத்துவைக்கிற வித்தனையிறே. அங்ஙனன்றிக்கே, எம்பெருமானாரருளிச்செய்யும்படி - "இவரோடுஸம்ஸ்லேஷிப்பதற்குமுன்பு அவனோடொக்கஇவையும் அநுஜ்ஜ்வலமாய் அஸத்ஸமமாய், இவரோடு கலந்தபின்பு உஜ்ஜ்வலமாய் ஸத்தைபெற்றபடி சொல்லுகிறது" என்று; கல்பகதருவாடினாலதில் பூவும்தளிரும் வாடுமிறே. (அந்தாமவாழ்முடி) அழகியமாலையானது முடிசூடிவாழத்தொடங்கிற்று, அன்றியே, "வாண்முடி" என்றாய், வாளென்று - ஒளியாய், நிரவதிகதேஜோரூபமான முடியென்றுமாம். தாமம் - தேஜஸ்ஸாகவுமாம். தேஜோரூபமான ஸ்ரீபாஞ்சஜந்யம், தேஜோரூபமானதிருவாழி, நூல் - திருயஜ்ஞோபவீதம், ஆரம்- திருவாரம். இவை - நித்யஸூரிகளுக்குபலக்ஷணம். (உள) நித்யரானவிவர்களுளராகையாவதென்னென்னில்; "ஸதேகாகீநரமேத" (ஸ ஏகாகீநரமேத) என்கிறபடியே, இவரோடு கலப்பதற்குமுன்பு அந்தவிபூதியுமில்லையாய்த் தோற்றுகையாலே.

(செந்தாமரைத்தடங்கண்) ஆர்த்தியெல்லாந்தீர இவரைப்பார்த்துக்கொண்டு நிற்கிறநிலை. இவரோடேகலந்த பின்பாயிற்று திருக்கண்கள் செவ்விபெற்றதும், விகஸிதமாயிற்றதும். ஏகரூபமானவற்றுக்கெல்லா மிதொருவிகாரம் பிறக்கிறதிறே. "ஸதைகரூபரூபாய" (ஸதைகரூபரூபாய) என்கிறவிடத்தில் - கர்மமடியாகவரும் விகாரமில்லையென்கிற வித்தனையிறே.

(செங்கனிவாய்செங்கமலம்) சாடுசதங்கள் சொல்லுகிற திருவதரமிருக்கிறபடி. சிவந்துகனிந்தவதரமானது, சிவந்தகமலம்போலே யிராநின்றது.

(செந்தாமரையடிக்கள்) நோக்குக்கும் ஸ்மிதத்துக்கும் தோற்று விழுந்திருவடிகள். திருவடிகளிலேவிழுந் தநுபவிக்கும் திருமேனி (செம்பொன்திருவுடம்பே) "ருக்மாபம்" (ருக்மாபம்) என்னும்படியாயிற்று இவரோடுகலந்தபின்பு திருமேனியிற் பிறந்தபுகர்தான்........*

ஜீயர் அரும்பதம்

முதற்பாட்டு. (அந்தாமத்தன்பித்யாதி) "ஆழிநூலாரமுள" என்றத்தை க்கடாக்ஷித்து, ஆளவந்தார் நிர்வாஹத்திலே யவதாரிகை (அடியார்களித்யாதி)

"அம்" என்றத்தாலே - விலக்ஷணபோக்ய போகோபகரண போகஸ்தாநங்களாலே வந்தவழகைச்சொல்லுகிறது. "தாமமென்றுஸ்த்தாநமாய்" இத்யாதிவாக்யம் - பூர்வவாக்யவிவரணமாதல், அர்த்தாந்தரமாதல். விபூதியையிட்டு லக்ஷித்தவிதுக்கு ப்ரயோஜநம் (ஒருவிபூதியிலேத்யாதி) அப்படிபண்ணினுனென்ன (தாமேயித்யாதி)

"என்" என்றதுக்குபாவம் (அவன்மேல்விழவித்யாதி) இறையத்தனை - பின்வாங்கினமை. விவரணம் (இவரித்யாதி) "ஆவி" என்றுவிசேஷிப்பானென்னென்ன (கமர்பிளந்தவிடத்தேயித்யாதி) ஆக, "என்னுவிசேர், ஆவிசேர், சேர்," என்றுமூன்றுவிதமாக்கி யருளிச்செய்தாராயிற்று.

(வகுத்தஸ்வாமியாகையாலேயிதி) அதாவது - அம்மானுகையாலே அந்தாமத்தன்பு செய்தான், என்னுவிசேர்ந்தானென்றபடி. விவரணம் (நித்யவிபூதியிலித்யாதி) அந்தாமத்தன்புசெய் தென்னுவிசேர்ந்தவனந்தாம் - அம்மானுனென்று அபரயாயாக தாத்பர்யாந்தரம் (இவனைப்பெற்றவித்யாதி) இந்தப்பக்ஷத்தில், "அம்மான்" என்கிறவிது - ஸார்த்யபரம்.

ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு, அந்தாமவாழ்முடி சங்காழிநூலாரம், உள - உண்டென்றபடி; அதாவது - இவற்றோடே வந்தானென்றுகருத்து. (ஆனுலித்யாதி) "ஆழிநூலாரம்" என்று - அசேதநமாகச் சொல்லுவா னென்னென்னிலே ன்றபடி. லோகந்யாயத்தாலே அசேதநங்களென்றுகையாலே யிப்படியேயாகவே ண்டாவோவென்று கருத்து. (சிந்மயாநீத்யாதி) பௌஷ்கரே, "ஸ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை: । சிந்மயை: ஸ்வப்ரகாஶைஶ்ச அந்யோந்யருசிரஞ்ஜகை:" (ஸ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம்ஸ்வாநுரூபைரநூபமை: । சிந்மயைஸ்ஸ்வப்ரகாஶைஶ்ச அந்யோந்யருசிரஞ்ஜகை:.) (இவரோடித்யாதி) எம்பெருமானார் நிர்வாஹத்தில், அம்மானுக்கு - அம்மானுடையதான, அந்தாமவாழ்முடி சங்காழிநூலாரம், உள - ஸத்தைபெற்றன வென்றபடி. இவன்வாடினுலவற்றுக்கும் வாட்டம்வேணுமோவென்ன (கல்பகதருவித்யாதி) "திவ்யாஸ்த்ரபுஷ்பிதசதுர்ப்புஜமத்யுதாரம்" (திவ்யாஸ்த்ரபுஷ்பிதசதுர்ப்புஜமத்யுதாரம்) என்னக்கடவதிறே.

முடிசூடிவாழத் தொடங்கிற்றென்று - ரஸோக்தி. முடிசூடி-முடியிலே சூட்டப்பட்டு. தாமம் - மாலை. அழகியமாலை யானதுவாழ்கிற முடியென்றுசப்தார்த்தம். "வாள்" என்ற பாடமானபோது, "தாமம்" என்றும் - தேஜஸ்ஸாய், "தாமவாள்" என்கிறவிப்பையாலே - நிரவதிகதேஜோரூபமான முடியென்றபடி. இத்தைக்காட்டுகிறுர் (தாமம்தேஜஸ்ஸாகவுமாமென்று) "அந்தாமவாள்" என்றத்தை சங்குமுதலானவற்றுக்கும் விசேஷணமாக்கி யருளிச்செய்கிறுர் (தேஜோரூபமானவித்யாதி) ஆரம் - ஹாரம்.

எம்பெருமானார் நிர்வாஹத்திலே சங்கிக்கிறார் (நித்யானவித்யாதி)(உளராகையாவது) இப்போதுளராகையாவது. (ஸஏகாகித்யாதி) இந்தவாக்யம் - எம்பெருமானார் நிர்வாஹவிவரணமாதல், அந்தநிர்வாஹத்திலே தாத்பர்யாந்தரமாதல். தாத்பர்யாந்தரமானபோது - முந்தினதுவஸ்துதை வாதினார்களென்றபடி. இரண்டாவது - பகவதபிப்ராயத்தாலே யந்தவிபூதியு மில்லையாய்த் தோற்றிற்றென்றபடி.

ஆளவந்தார் நிர்வாஹத்தில் (ஆர்த்தியெல்லாமித்யாதி) எம்பெருமானார் நிர்வாஹத்தில் (இவரோடேயித்யாதி) வ்யாக்யாதாவினிடுபாடு (ஏகரூபமானவித்யாதி) ஏகரூபமானவற்றுக்கெல்லாமென்றது - முடிமுதலான நித்யஸூரிகளை யபேக்ஷித்து. ஆனால், " सदैकरूपरूपाय " (ஸதைகரூபரூபாய) என்கிறப்ரமாணத்தோடே சேரும்படி யெங்ஙனேயென்ன (ஸதைகேத்யாதி) ப்ரதமேம்ஸேத்விதீயே, " अविकाराय शुद्धाय नित्याय परमात्मने। सदैकरूपरूपाय विष्णवे सर्वजिष्णवे "(அவிகாராயஶுத்தாய நித்யாயபரமாத்மநே। ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே.)

பதச்சேர்த்திக்குபாவம் (நோக்குக்குமித்யாதி)

செம்பொன்போலே திருமேனி யிருக்குமோவென்ன (ருக்மாபமித்யாதி) மாநவேத்வாதமேத்யாயே, " प्रशासितारं सर्वेषामणीयांसमणीयसाम्। रुक्माभं स्वप्नधीगम्यं विद्यात्तं पुरुषं परम्. " (ப்ரஶாஸிதாரம்ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம்। ருக்மாபம்ஸ்வப்நதீகம்யம்வித்யாத்துபுருஷம்பரம்.) ஸ்ப்ருஹணீயமென்றபடி.

ஆளவந்தார்நிர்வாஹத்துக்கு, அந்தாமவாழ்முடி சங்காழி நூலார முளவாய்க்கொண்டு, அந்தாமத்தன்பு செய்தென்னாவி சேரம்மானுக்கு செந்தாமரை யித்யாரப்யாந்வயம்; க்ரமாந்வயோவா. எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு, அந்தாமத்தன்பு செய்தென்னாவி சேர்ந்தவநந்தரம் - அந்தாமவாழ்முடிசங்காழி நூலாரமுளவாய் - அம்மானுமானவனுக்கு - செந்தாமரையித்யாரப்யாந்வயம்................*

இரண்டாம்பாட்டு.

திருவுடம்புவான்சுடர்செந்தாமரைகண்கைகமலம்
திருவிடமேமார்வமயனிடமேகொப்பூ
ழொருவிடமுமெந்தைபெருமாற்கரனேயோ
வொருவிடமொன்றின்றியென்னுள்கலந்தானுக்கே.

ஆறாயிரப்படி.

(திருவுடம்பு) என்னோடேகலந்தருளுகிறான், ஸர்வேஶ்வரியான பெரியபிராட்டியாரோடும் ஆஶ்ரிதரான ப்ரஹ்மருத்ராதிகளோடும் கலந்தருளினாற்போலன்றியே, தன்னுடைய நிரதிசயதேஜோமயமானதிரு

வுடம்பி லொருப்ரதேஶமொழியாமே ஸமஸ்தப்ரதேசத்தாலுங் கலந்தருளினான்; ஒருவனுடைய அபிநிவேஶமே யிதென்கிறார்......................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இவ்வவயவசோபையையுடையவன், ப்ரஹ்மருத்ராதிகளான விபூதிபூதர்க்கும் பிராட்டியோபாதித்திருமேனியிலே யிடங்கொடுத்த ஔஜ்ஜ்வல்யத்தை யருளிச்செய்கிறார்.

ஒருவிடமொன்றின்றி - ஸ்வரூபரூபகுணவிபூதிகளொன்றுஞ்சோராதபடி. என்னுள்-என்னுள். கலந்தானுக்கு-கலந்த. எந்தைபெருமாற்கு-என்குலநாதனுக்கு. திரு - ஶ்லாக்யமான. உடம்பு-வடிவு. வான்சுடர் - ஆதித்யவர்ணமாயிராநின்றது. கண்கைகமலம்-திருக்கண்ணும் திருக்கையும். செம்-சிவந்த. தாமரை-தாமரைபோலேசெவ்விபெற்றது. மார்வம்-திருமார்வு. திருவிடமே - லக்ஷ்மீஸ்தாநமேயாயிற்று. கொப்பூழ்-கொப்பூழ். அயன்-ப்ரஹ்மாவுக்கு. இடமே - ஸ்தாநமேயாயிற்று. ஒருவிடமும்-நீக்கியுள்ளவிடம். அரனே-ருத்ரனேயாயிராநின்றது. ஓ - இதென்ன ஆஶ்சர்யம்.

ஒருவுதல்-நீங்குதல். தன்திருவுள்ளத்திலே யவன்கலந்தபின்பு ரூபௌஜ்ஜ்வல்யமும் அவயவௌஜ்ஜ்வல்யமுமுண்டானவோபாதி, விபூத்யௌஜ்ஜ்வல்யமுமுண்டாயிற்றென்று கருத்து ... ...*

ஈடு - இரண்டாம்பாட்டு.

தம்மோடேகலந்தபின்பு அவனுக்குப்பிறந்த புகரைச்சொல்லி, தன்னுடம்பைப்பற்றி ப்ரஹ்மேசாநாதிகள் ஸத்தையாம்படி யிருக்கிறவன் தானென்னுடம்பைப்பற்றித் தன்ஸத்தையாம்படி யிராநின்றானென்கிறார்.

(திருவுடம்புவான்சுடர்) அணைத்தபோதை ஸ்பர்ஶஸுகங் கொண்டருளிச்செய்கிறாரிறே. "'ஈஶ்வரனுக்கு விக்ரஹமில்லை, விபூதியில்லை' என்கிறவர்கள்முன்பே, ஆப்ததமரானவிவர் 'திருவுடம்புவான்சுடர்' என்னப்பெறுவதே !, 'ஈஶ்வரனுக்கு விக்ரஹமில்லை, குணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்கமாட்டாத பாபமில்லை ; அவர்களை யநுவர்த்தித்து அதுகேட்கவிராதபடி பெருமாள் நமக்குப்பண்ணின உபகாரமென்" என்றருளிச்செய்வர் ஜீயர். * மயர்வறமதிநல மருளப்பெற்றவர் அவக்குண்கிறதிருமேனியிறே. "இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" (இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:) என்றுதனக்கு மபிமதமாயிருப்பதொன்றிறே. தான்மதித்தார்க்கு "ஏஷஸர்வபூதஸ்து" (ஏஷஸர்வபூதஸ்து) என்றுகொடுப்பதும் திருமேனியையே. (வான்சுடர்) மூதவிலே தேஜோரூபமான திருமேனிமிகவு மொளிபெற்ற திவரோட்டைக்கலவியாலே. புறம்பொளியாய் உள்ளுமண்பற்றியிருக்கை யன்றிக்கே, நெய்திணுங்கினாற்போலே தேஜஸ்தத்வமே யாயிருக்கை. "தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்" (தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்) என்கிறபடியே. * ப

ஞ்சசக்திமயமாயிருக்கச்செய்தே, "ஷாட்குண்யவிக்ரஹம்" (ஷாட்குண்யவிக்ரஹர்) என்கிறதுகுணங்களுக்கு ப்ரகாசகமாகை சுட்டியிறே

(செந்தாமரைகண்) கடாக்ஷத்தாலே வவ்வலிட்டுச்சொல்லுகிற வார்த்தை.

(கைகமலம்) "கரேணம்ருதுநா" (கரேணம்ருதுநா) என்கிறபடியே யழகுத்தகை. இவரொருகாற்சொன்னத்தைப் பலகாற்சொல்லுவானென்னென்னில்; முத்துக்கோக்கவல்லவன் முகம்மாறிக்கோத்தவாறே விலைபெறுமாபோலே, இவருமொரோமுகபேதத்தாலே மாறிமாறி அநுபவிக்கிறார்.

(திருவிடமேமார்வம்) அக்கையாலேயணைப்பிக்கும் பெரியபிராட்டியார்க்கிருப்பிடம் திருமார்வு.

(அயனிடமேகொப்பூழ்) சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவானப்ரஹ்மா, திருநாபீகமலத்தை யிருப்பிடமாகக்கொண்டிருக்கும்.

(ஒருவிடமுமெந்தைபெருமாற்கரனே) ஓரிடமென்னாதே, ஒருவிடமென்கிறது-ஒருவுதல்-நீங்குதலாய், நீங்கினவிடமென்றபடி. என்னுடைய ஸர்வேஸ்வரனுக்கு நீங்கினவிடமும் ருத்ரனுக்கிருப்பிடமாயிருக்கும். தாமஸதேவதையிருப்பிடமாகையாலே, "நீங்கினவிடம்" என்றநாதரோக்தியிருக்கிறபடி. (ஒருவிடமொன்றின்றி யென்னுள்கலந்தானுக்கே) என்னோடேவந்து கலக்கிறவிடத்தில், நீங்குமிடமொன்றுமின்றிக்கேவந்துகலந்தான்.

(ஓ) "அநந்யபரையான பெரியபிராட்டியோடொக்க, அந்யபரரான ப்ரஹ்மருத்ரர்களுக்கும் திருமேனியிலே யிடங்கொடுத்துவைப்பதே" என்று இந்தசீலகுணத்தை யநுஸந்தித்துவித்தராயிருந்தார் முன்பு; இப்போது தமக்குடம்புகொடுத்தபடிகண்டவாறே "அநுபரத்வம்" என்றுதோற்றி, இதென்னசீலாதிசயம், ஓ! என்கிறார். ஒருவிடமொன்றின்றி யென்னுள்கலந்தானுக்கு-திருவுடம்பென்றுதொடங்கி, அரனே; ஓ என்றர்வயம்... ... ...

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (திருவுடம்பித்யாதி) "என்னுவிசேரம்மானுக்கு-செம்பொன்திருவுடம்பே" என்றதிலேநோக்காக (தம்மோடேயித்யாதி) "அயனிடமே" இத்யாதியைக்கடாக்ஷித்த (தன்னுடம்பையித்யாதி) "ஒருவிடமொன்றின்றி" என்றத்தைக்கடாக்ஷித்த (தானென்னுடம்பையித்யாதி)

வான்சுடர்-மிக்கதேஜஸ்ஸு. "என்னுள்கலந்தானுக்குத் திருவுடம்புவான்சுடர்" இத்யந்வய முகேநாஹ (அனைத்தபோதையித்யாதி).

பலகாலும் விக்ரஹத்தை வர்ணிக்கிறபடியை யநுஸந்தித்து நம்பிள்ளை யீடு பாடு (ஈஶ்வரனுக்கித்யாதி) ப்ராஸங்கிகமாக நஞ்சீயருடைய ஸ்வபாவாநுஸந்தாநமாஹ (ஈஶ்வரனுக்கித்யாதி) இத்தால் - விக்ரஹாதிகளில்லையென்கைக்கு நிமித்தமவர்களுடைய பாபப்ராசுர்யமென்றபடி.

இவரருளிச்செய்தால் ப்ரமாணமாமோவென்ன (மயர்வறவித்யாதி) ஆகையாலே, இவரநுபவபரீவாஹரூபமான ஸ்ரீஸூக்தியும் பரமப்ரமாணமென்றபடி. அவக்குண்கிற-ஈடுபட்டநுபவிக்கிற. "திரு" என்று-அழகாய், அத்தைக்காட்டுகிறார் (இச்சாக்ருஹீதேத்யாதி) ஷஷ்டேம்ஶேபஞ்சமே, பூர்வமேவலிகிதம். கார்யத்தானு மபிமதத்வத்தை யுபபாதிக்கிறார் (நான்மதித்தார்க்கித்யாதி) யுத்தகாண்டே ப்ரதமே, "ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து" (ஏஷஸர்வஸ்வபூதஸ்து) பூர்வமேவலிகிதம்.

(முதலிலேயித்யாதி) "திரு" என்றபோதே-ஸ்வாபாவிகஸர்வாதிஶயங்களும் ஸித்திக்கையாலே, பின்னையும் பின்னையும் "சுடர்" என்னும்போது - இப்படியேயாகவேணுமென்றபடி. * வானின்தாத்பர்யம் (புறம்பொளியாயித்யாதி) திவ்யங்கைகளுக்கு நிபவிக்கை. உக்தார்த்தஸ்யப்ரமாணம் (தேஜஸாமித்யாதி) இந்நிரவதிகதேஜோரூபத்துக்கடி பஞ்சஶக்திமயமாகையாலே யென்று விவக்ஷித்து, ஆனால் "ஷாட்குண்யவிக்ரஹம்" என்கிறது சேரும்படியென்னென்ன (பஞ்சசக்திமயேத்யாதி) ப்ரதமேம்ஶேஷவமே, " தத்ருஷ்டவாந் ததா தேவஶ்ஶங்கசக்ரகதாதரம் । அபூர்வரூபஸம்ஸ்தாநம் தேஜஸாம் ராஶிமூர்ஜிதம். " (தத்ருஷ்டவாந்தே ததாதேவாஶ்ஶங்கசக்ரகதாதரம்। அபூர்வரூபஸம்ஸ்தாநம் தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்.) " பஞ்சஶக்திமயோ தேவ: பரமாத்மா ஜகத்ப்ரபு: । பராபிஶ்ஶக்திபிஸ்தத்ர விக்ரஹை: பரமாத்மந:. " (பஞ்சஶக்திமயோதேவ: பாமாத்மாஜகத்ப்ரபு:। பராபிஶ்ஶக்திபிஸ்தத்ரவிக்ரஹைபரமாத்மந:.) " ஷாட்குண்யவிக்ரஹம் தேவம் பாஸ்வஜ்ஜ்வலநவர்சஸம்." (ஷாட்குண்யவிக்ரஹம்தேவம்பாஸ்வஜ்ஜ்வலநவர்ச்சஸம்) பஞ்சஶக்திகளாவன- " பரமேஷ்டீ புமாந் விஶ்வோ நிவ்ருத்தஸ்ஸர்வ ஏவ ச " (பரமேஷ்டிபுமாந்விஶ்வோநிவ்ருத்தஸ்ஸர்வஏவச) என்றுசொல்லப்படுகிற நித்யவிபூதிஸ்த்தித பஞ்சபூதங்கள்.

(கரேணம்ருதநா என்கிறபடியே) தடவியணைத்தகையென்றபடி. ஹரிவம்ஶே கண்டாகர்ணமோக்ஷப்ரதாநே, " பஸ்பர்ஶாங்கம் ததா விஷ்ணு: ப்ரஸாதஸ்யாபி ஸர்வத:। கரேணாம்ருதநா தேவ: பாபாந்நிர்மோசயந் ஹரி:. " (பஸ்பர்ஶாங்கம்ததாவிஷ்ணு:ப்ரஸாதஸ்யாபிஸர்வத: । கரேணம்ருதநாதேவ:பாபாந்நிர்மோசயந்ஹரி:.) (முகபேதத்தாலே) க்ரமபேதத்தாலே.

மார்வமே-திருவிடம். கொப்பூழே-அயனிடம். எந்தைபெருமாற்கு-ஒருவிடமே-அரன். அரனதென்றபடி. கொப்பூழ்-திருநாபி.

(ஓரிடமென்னாதே) இன்னவிடமென்று விசேஷியாதே. விவரணம் (என்னுமனவித்யாதி) நிரவதிகதேஜோரூபவிக்ரஹத்தில்நீங்கின விடமுண்டோவென்னுமாமஸேத்யாதி)

(வித்தாரமிருந்தார்முன்பு) "ஏறனைப்பூவனை" என்கிறபாட்டிலேயென்றபடி.

ஒருவிடமொன்றின்றி யென்னுள்கலந்தானுக்கு- திருவுடம்புவான்சுடரொன்றுதொடங்கி, கொப்பூழ், எந்தைபெருமாற்கு-ஒருவிடமே-அரன், ஓ இத்யந்வய:. *

மூன்றாம்பாட்டு.

என்னுள்கலந்தவன்செங்கனிவாய்செங்கமல
மின்னுஞ்சுடர்மலைக்குக்கண்பாதங்கைகமல
மன்னுமுழுவேழுலகும்வயிற்றினுள
தன்னுள்கலவாததெப்பொருளுந்தானில்லையே.

ஆறாயிரப்படி.

(என்னுள்) நிரதிசயகல்யாணகுண திவ்யரூபத்தையுடையனாய், ஸ்வஸங்கல்பாதீந ஸமஸ்தவஸ்துஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகனாயிருந்தவனென்னுள்ளேகலந்தருளினானென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தன்னுள்ளிராத வஸ்துவுக்கு ஸத்தையில்லையாமோபாதி, என்னுள்தான் கலவாதபோது தனக்கு ஸத்தையில்லையாகநினைத்து என்னுள்ளேகலந்துஜ்ஜ்வலனானானென்கிறார்.

என்னுள்-என்னுள்ளே. கலந்தவன்-கலந்தவனாய். மின்னும்-அத்தாலேவிளங்கின. சுடர்-சுடரையுடைய. மலைக்கு-மலைபோன்றவனுக்கு. செங்கனிவாய்செங்கமலம் கண்பாதங்கைகமலம்-முன்புசொன்னஅவயவசோபையும் யதாபூர்வமத்யுஜ்ஜ்வலமாயிராநின்றது. மன்னும்-ஸ்திரமாய். முழு-பூர்ணமான. ஏழுலகும்-சகலலோகங்களும். வயிற்றின்-அவன்வயிற்றிலேயாய். உள-ஸத்தைபெறாநின்றன. தன்னுள்-தனக்குள்ளே. கலவாதது-ஸம்பந்தியாதிருப்பது. எப்பொருளுந்தான் - ஏதேனுமொருபொருளும். இல்லை-இல்லை.

ஸர்வவஸ்துவுக்கும் தத்வ்யதிரேகத்தில் ஸத்தாஹாநிஸ்வரூபப்ரயுக்தை, ஈஶ்வரனுக்கு "இவருடையவ்யதிரேகத்தில் ஸத்தையில்லை" என்றுநினைக்கிறவிடம் சீலக்ருதமென்றுகருத்து ....*

ஈடு-மூன்றாம்பாட்டு.

ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களும் தன்னைப்பற்றி யுளவாம்படியிருக்கிற ஸர்வேஶ்வரன், தானென்னைப்பற்றியுளனா யென்னோடேவந்து கலந்தானென்கிறார்.

(என்னுள்கலந்தவன்) "ஸமுத்ரஹாதா" (அகஸ்த்யப்ராதா) என்னுமாபோலே நிரூபகமிருக்கிறபடி. "நாராயணன்" "வாஸுதேவன்" என்னுமாபோலே, "என்னுள்கலந்தவன்" என்றுகாணுமவனுக்

குத் திருநாமம். (செங்கனிவாய்செங்கமலம்). சிவந்துகனிந்தவாய் செங்கமலம்போலேயிராநின்றது.

(மின்னும் சுடர்மலைக்கு) *வாட்டமில்புகழ்வாமநன், கலந்தபின்பு வளர்ந்தபடியும், புகர்பெற்றபடியும், தரையிலேகால்பாவித்தரித்தபடியும், திண்மையையுடையனானபடியும்பற்ற (மலையென்கிறார்) (கண்பாதம் கைகமலம்) முகமறிந்துகோத்தவாறே முத்துவிலைபெறுமாபோலே, இவரும் திவ்யாயுதங்களைச்சேர்த்தநுபவிக்கிறார்.

(மன்னுமுழுவேழுலகும்வயிற்றினுள) ப்ரவாஹரூபத்தாலே நித்யமான ஸகலலோகங்களும் தன் ஸங்கல்பத்தைப்பற்றிக்கிடக்கிறன.

(தன்னுளேத்யாதி) தன்திருவுள்ளத்தை யபாஶ்ரயமாக வுடைத்தன்றிக்கேயிருக்கிறவஸ்துயாதொன்று, அது நாஸ்திசப்தத்துக்கர்த்தமாகிறது. அப்ரஹ்மாத்மகமாயிருப்பதொரு பதார்த்தந்தானில்லை, "நததஸ்திவிநாயத்ஸ்யாத்" (நததஸ்திவிநாயத்ஸ்யாத்) என்றானிறே. தன்னுள் கலவாததெப்பொருளுந்தானில்லையே) அவையிவனைப்பற்றாதபோது ஸத்தையின்றிக்கே யிருக்கிறது - ஸ்வரூபத்தாலே; இவனிவரைக்கலவாதபோது ஸத்தையின்றிக்கேயிருக்கிறது-ப்ரணயித்வகுணத்தாலே.........*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (என்றுளேத்யாதி) "மன்னுமுழுவேழுலகும்" என்றுதொடங்கி, "என்னுள்கலந்தவன்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை (ஸ்வஸ்யதிரிக்தேத்யாதி)

"நாராயணன்" என்கிறவாக்யாநந்தரம், "அகஸ்த்யப்ராதா" (அகஸ்த்யப்ராதா) என்கிறவாக்யமநுஸந்தேயம். அஸங்க்யாதமான நாமங்களிருக்க, "என்னுள்கலந்தவன்" என்றுவிசேஷிக்கிறதுக்குபாவம் (நாராயணனித்யாதி) இவ்வர்த்தத்தை த்ருஷ்டாந்தபூர்வகமாக விஶதீகரிக்கிறார் (அகஸ்த்யப்ராதாவித்யாதி) நாராயணவாஸுதேவநாமங்கள் பரத்வத்துக்கு ப்ரதாநங்களானாற்போலே, "என்னுள்கலந்தவன்" என்கிறது-ஸௌலப்யத்துக்கு ப்ரதாநமென்றபடி.

பதத்வயத்துக்கும் வ்யுத்க்ரமேணபாவம் (வாட்டமிலித்யாதி) "'வாட்டமில்புகழ்வாமநனை' என்றதுக்கு - 'தன்றுடைமைபெறுகைக்குத்தானர்த்தியானவன்' என்றவைத்து, இங்கேகலந்தபின்பு வளர்ந்தபடியுமெனகையாலே-அவ்விடத்திலே, சிறும்பினவனென்று மோரர்த்தம்விவக்ஷிதம்" என்றருளிச்செய்வர். (மலையென்கிறார்) மின்னும்சுடர்மலையென்கிறார். திவ்யாவயவங்களைப் பாட்டுக்கள்தோறுஞ்சொன்னால் புநருக்திவாராதோவென்ன; பரிஹரிக்கிறார் (முகமறிந்தித்யாதி)

ப்ரவாஹரூபத்தாலே நித்யமானவென்றவிடத்திலே - "யதாத்ருதுஷ்வ்ருதுலிங்காநிநாநாரூபாணிபர்யயே। த்ருஶ்யந்தே தாநிதாந்யேவததாபாவாயுகாதிஷு" (யதர்துஷ்வ்ருதுலிங்காநிநாநாரூபாணிபர்யயே। த்ருஶ்யந்தே தாநிதாந்யேவததாபாவாயுகாதிஷு) இத்யாத்யநுஸந்தேயம். ருதுலிங்காநி-ருது

சிந்ஹங்கள். பர்யயே-ருதுவின்முடிவிலே. பாவாः-ப்ரபஞ்சபதார்த்தாः. "ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்" (ஸூர்யாசந்த்ரமஸௌதாதா யதாபூர்வமகல்பயத்) இத்யாதி. வயிறு-உள். தேநஸங்கல்பஉச்யதே என்றுகருத்து.

"மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள" என்றந்வயமுகேந சொன்னவர்த்தத்தை வ்யதிரேகமுகேந த்ருடீகரிக்கிறார் (தன்னுள்கலவாததெப்பொருளுந்தானில்லையேயென்று) (தந்திருவுள்ளத்தையிதி) உள்-உள்ளம். கீழே - ஸங்கல்பாதீநமென்றார்; இப்போது-ஸ்வரூபாஶ்ரிதமென்றர்த்தாந்தரம் (அப்ரஹ்மாத்மகமித்யாதி) தன்-தான். ஸ்வரூபாஶ்ரிதமென்னுமதுக்கு ப்ரமாணம் (நததஸ்தீத்யாதி) கீதாஸ்லோகமே, "யச்சாபி ஸர்வபூதானாம் பீஜம் ததஹமர்ஜுந। ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம்." (யச்சாபிஸர்வபூதாநாம்பீஜம்ததஹமர்ஜுந। நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயாபூதஞ்சராசரம்.)

அவதாரிகைக்குச்சேரதாத்பர்யம் (அவையிவனேயித்யாதி)

என்னுள்கலந்தவனை-மின்னும்சுடர்மலைக்கு - செங்கனிவாய்செங்கமலம், கண்பாதம் கைகமலமித்யாரப்யாந்வயः.......................................*

நான்காம்பாட்டு.

எப்பொருளுந்தானாய்மரதகக்குன்றமொக்கு
மப்பொழுதைத்தாமரைப்பூக்கண்பாதங்கைகமல
மெப்பொழுதுநாடிங்களாண்டூழியூழிதொறு
மப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே.

ஆறாயிரப்படி.

(எப்பொருளும்) ஸர்வாந்தராத்மபூதனாய், அளவிறந்தவழகையுடையனாயிருந்தவிவன், அழகாலே ஸர்வகாலமும் ப்ரதிக்ஷணமெனக்கபூர்வவத்போக்யமாயிராநின்றான்; ஒருவனுடைய வழகிருக்கும்படியேயிதென்கிறார்.......................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நிரதிசயபோக்யபூதனானவனென்னுள்ளே புகுந்தபின்பு ஸ்திரஸ்வபாவனானானென்கிறார்.

எப்பொழுதும் - எல்லாக்ஷணம். எந்நாள் - எல்லாநாள். எத்திங்கள் - எல்லாமாஸம். எவ்வாண்டு - எல்லாவாண்டு. எவ்வூழியூழிதொறும் - எல்லாவகைப்பட்டவூழிதோறும். அப்பொழுதைக்கப்பொழுது - அவ்வோகாலங்களிலே. என் - என்னுள்ளேகலந்து. ஆரா - அத்ருப்திகரமான. அமுதம் - அம்ருதமானவன். அத்தால்வந்ததன்னுடைய ப்ரீத்யதிசயத்தாலே எப்பொருளும் - எல்லாப்பொருளும். தானாய் - தானேஸர்வாத்மபாவமும்நிறம்பெற்று. மரதகக்குன்றமொக்கும் - மரதகமலைபோலேயுயர்த்தியும் நிறமுமாமுமுடையனானான். அப்பொழுதை

போதலர்ந்த. தாமரைப்பூ - தாமரைபோலே. கண் - கண்ணும். அப்பொழுதை க்கமலம் - அப்போதைக்கமலம்போலே. பாதம் - பாதமும். கை - கையும்புதுமை பெற்றன...*

ஈடு - நான்காம்பாட்டு.

நீரோருகாற்சொன்னத்தை யொன்பதின்கால்சொல்லி யிங்ஙனே கிடந்து படுகிறதென்னென்ன ; நானதுதவிர்கிறேன், நீங்களவ்விஷய மொருகாலிருந்தபடியே யெப்போதுமிருக்கும்படி பண்ணவல்லீர்களோ வென்கிறாள்.

(எப்பொருளுந்தானாய்) ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களும் "தான்" என்கிறசொல்லுக்குள்ளே ப்ரகாரமாம்படி, தான்ப்ரகாரியாய் ஸ்வாதீநமல்லாததொரு பதார்த்தத்தைப்பெற்றுத் தானிப்பாடுபடுகிறானே. (மாதகக்குன்றமொக்கும்) கீழ் - ஜகதாகாரனாய் நிற்குநிலைசொல்லிற்று ; இங்கு - அஸாதாரணவிக்ரஹந் தன்னையேசொல்லுகிறது. கீழ், மின்னும்சுடரொன்று - தம்மோட்டைக்கலவியால் வந்தபுகரைச்சொல்லிற்று ; அதுக்காஸ்ரயமான அஸாதாரணவிக்ரஹத்தைச் சொல்லுகிறதிங்கு. (அப்பொழுதை) "கீழ் - தாமரையையொப்பாகச்சொன்னவிடம் தப்பச்சொன்னோம்" என்றழித்து ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். கேவலம்தாமரையை யொப்பாகச்சொல்லில், செவ்வியழிந்த ஸமயத்திலு மொப்பாகத்தொடங்குமே; அப்போதலர்ந்த - செவ்வியையுடைத்தான தாமரை. (கண்பாதம்) கண்-பந்தத்தைவிளைக்குங்கண். பாதம் - பந்தமறிந்தா லநுபவிக்க விழியுந்துறை (கைகமலம்) தம்மோட்டை ஸ்பர்ஶத்தாலே செவ்விபெற்றபடி. இவையெல்லா மப்போதலர்ந்த கமலம்போலே யிருக்கும் (எப்பொழுதுமித்யாதி) கலாகாஷ்டாதிகளாலும் பேதிக்கவொண்ணாத அத்யல்பகால மநுபவிப்பது, ஒருநாளநுபவிப்பது, ஒருமாஸமநுபவிப்பது, ஓராண்டநுபவிப்பது, கல்பந்தோறும் கல்பந்தோறுமநுபவிப்பது, இப்படிகாலமெல்லா மநுபவியாநின்றாலும், கீழ்ச்சொன்ன அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே-பூர்வக்ஷணத்தி லநுபவம்போலல்ல வாயிற்று உத்தரக்ஷணத்தி லநுபவமிருப்பது. தாராவாஹிக விஜ்ஞாநத்தில் காலோபஷ்டம்பாதிகளாலே வருவதொருபேதமுண்டிறே ஜ்ஞாநத்துக்கு, இங்குவிஷயந்தானே பேதியாநின்றதாயிற்று.

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (எப்பொருளுமித்யாதி) திவ்யாவயவங்களைப் பலகாலுஞ் சொன்னதுக்குக் கீழ்ப்பாட்டுக்களி லருளிச்செய்த பரிஹாரமொழிய பரிஹாரா

ந்தரம் (நீரொருகாலித்யாதி) ஒன்பதின்கால் - ஒன்பதுதரம். “ அப்பொழுதைக்கு ” இத்யாதியைப்பற்ற (ஒருகாலிருந்தபடியேயித்யாதி)

ஜகதாகாரதையைச் சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநம் (ஸ்வாதிநேத்யாதி) இப்பாடென்றது - தம்மைப்பெற்றபின்பு திருமேனியிற் பிறந்தபுகரைப்பற்ற.

(கீழ்ஜகதாகாரனித்யாதி) இரண்டும் விக்ரஹயோகமாகையாலே, “ எப்பொருளும்தானாய் ” என்றவநந்தரம், “ மரதகக்குன்றம் ” என்றுசேர்ந்தநுபவிக்கிறுரென்றுகருத்து. புநருக்திக்கு பரிஹாரம் (கீழ்மின்னுமித்யாதி)

அவதாரிகை (கீழ்தாமரையையித்யாதி) -‘ அப்பொழுதை ” என்றுவிசேஷித்ததுக்குபாயம் (கேவலமித்யாதி) பந்தத்தைவிளைக்குங்கண்) நவவிதஸம்பந்தத்தையும் ஸ்வவீக்ஷணாதிகளாலேவிஶதமாக ஸ்ப்புரிப்பிக்கிறகண்ணென்றபடி. (இவையெல்லாமப்போதலர்ந்தவிதி) கண்பாதம்-அப்பொழுதைத்தாமரைப்பூ; கை - அப்பொழுதைக்கமலம் இத்யந்வயஃ.

“எப்பொழுதும்” என்று-அத்யல்பகாலத்தைச்சொல்லுகிறது. “ ‘அப்பொழுதைக்கப்பொழுது’ என்று-எப்பொழுது நாள் திங்கள் முதலானவற்றையெல்லாம் பராமர்ஶிக்கிறது ” என்று வானமாமலைஜீயர் நிர்வாஹம். “ நாள் திங்கள்முதலானவெல்லாவற்றிலுமுண்டான, எப்பொழுதுமென்றுசொன்ன-அத்யல்பகாலங்கள்தோறும் என்னுராவமுதம் ” என்று ராமாநுஜப்பிள்ளை நிர்வாஹம். இதுவேஸ்வாஸம், “ பூர்வக்ஷணத்திலநுபவம்போலல்லவாயிற்று உத்தரக்ஷணத்திலநுபவமிருப்பது ” என்று வ்யாக்யாநவாக்யமிருக்கையாலே. “ அப்பொழுதைக்கப்பொழுது ” என்கிறவிடத்தில், “அ” என்கிறது - எல்லாக்காலத்தையும் பராமர்ஶிக்கிறதன்று, அவ்வவகாலங்களிலுண்டான க்ஷணமாத்ரபராமர்ஶியென்று தோற்றவருளிச்செய்கிறுர் (பூர்வக்ஷணத்திலித்யாதி) (தாராவாஹிகேதி) தாராரூபோவாஹஃ-தாராவாஹஃ; தாராவாஹோஸ்யாஸ்தீதி - தாராவாஹிகம்; தாராவாஹிகஞ்சதத்விஜ்ஞாநஞ்ச-தாராவாஹிகவிஜ்ஞாநம். (இங்குவிஷயந்தானேயிதி) “ 𑌘𑌟𑍋𑌽𑌯𑌂𑌘𑌟𑍋𑌽𑌯𑌂 ” (கடோயம்கடோயம்) என்கிற தாராவாஹிகவிஜ்ஞாநத்தில் பூர்வோத்தரகாலாவச்சிந்நவேஷேண கடரூபவஸ்துவுக்குபேதமுண்டு, இங்கு, காலஸம்யோகரூபகாலோபஷ்டம்பத்தாலும் தேஶஸம்யோகாதிகளாலும் பேதிக்கையன்றிக்கே, ஸ்வதஏவவிஷயந்தானே பேதிக்கிறதென்றபடி; “ 𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌨𑌧𑌿𑌗𑌤𑌾𑌰𑍍𑌥𑌗𑌨𑍍𑌤𑍃𑌤𑌾 ” (அந்யாந்யக்ஷணவிஶேஷணவிஶிஷ்டவஸ்துவிஷயத்வேநாநதிகதார்த்தகந்த்ருதா) என்றிறே ப்ராபாகரமதம்; ததநுஸாரேண நிர்வஹிக்கவுமாம். அன்றிக்கே. “ ‘𑌘𑌟𑍋𑌽𑌯𑌂𑌘𑌟𑍋𑌽𑌯𑌂’ (கடோயம்கடோயம்) என்கிற தாராவாஹிகவிஜ்ஞாநத்தில் காலோபஷ்டம்பாதிகளாலே ஜ்ஞாநத்துக்கு பேதமொழிய விஷயத்துக்குபேதமில்லை ” என்றநையாயிகமதாநுஸாரேண நிர்வஹிக்கவுமாம். உபஷ்டம்பம்-ஸம்யோகம். ஆதிஶப்தத்தாலே-தேஶஸம்யோகமும், உத்பத்திவிநாஶங்களும்சொல்லப்படுகிறது. ப்ரதமநிர்வாஹத்தில் (ஜ்ஞாநத்துக்கு) விஷயத்துக்கு. விஷயம் பேதிக்கையாவது-போக்யதாப்ரகர்ஷத்தாலே புதியதாய்த்தோற்றுகை.

க்ரமேணாந்வயஃ..*

ஐந்தாம்பாட்டு.

ஆராவமுதமாயல்லாவியுள்கலந்த
காரார்கருமுகில்போலென்னம்மான்கண்ணனுக்கு
நேராவாய்செம்பவளங்கண்பாதங்கைகமலம்
பேராரநீண்முடிநாண்பின்னுமிழைபலவே.

ஆறாயிரப்படி.

(ஆராவமுதமாய்) நிருபமமான ஸௌந்தர்யத்தையுடையனாய், அபரிமித திவ்யபூஷணோபேதனாய், ஸர்வகாலமுமநுபவித்தாலு மாராத போக்யமாயிருந்தவன், அத்யந்தமவஸ்துபூதனாயிருந்த வென்னுள்ளே கலந்தருளினானென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தம்முடையதிருவுள்ளத்திலே கலந்தவனுடைய அவயவசோபைக்குபமையில்லையென்கிறார்.

ஆராவமுதமாய்-நிரதிசயபோக்யபூதனாய். அல்-ஒன்றல்லாத. ஆவியுள் - என்னெஞ்சுக்குள்ளே. கலந்த-கலந்து. அத்தாலே கார்-கார்காலத்திலே. ஆர்-பூர்ணமான. கருமுகில்போல்-காளமேகம்போலேயிருக்கிற. என்னம்மான் - என்னாதனான. கண்ணனுக்கு-க்ருஷ்ணனுக்கு. செம்-சிவந்த. பவளம்-பவளம். வாய் - அதரத்தை. நேராது-ஒவ்வாது. கமலம்-கமலங்கள். கண்பாதம்கை - கண்பாதங்கைகளை. நேரா-ஒவ்வா. அதுக்குமேலே பேர்-பெரிய. ஆரம்-ஆரமும். நீள்-உயர்ந்த. முடி-முடியும். நாண்-நாணுமுதல். பின்னும்-மற்றுமுண்டான. இழை - ஆபரணங்களும். பல-அஸங்க்யாதங்கள்..*

ஈடு-ஐந்தாம்பாட்டு.

இத்தனைபோதும் தாமரையைசிக்ஷித் துபமாநமாகச் சொல்லிப்போந்தார்; விஷயத்திலே யவகாஹித்தவாறே நேர்கொடுநேரே யுபமாநமாய் நின்றதில்லை, அவற்றைக்கழித் துபமேயந்தன்னையே சொல்லுகிறார்.

(ஆராவமுதமாய்) எப்போதும் புஜியாநின்றாலும் மேன்மேலனத்ருஷ்ணையைவிளைக்கு மம்ருதம்போலே நிரதிசயபோக்யனாய். (அல்லாவியுள்கலந்த) இப்படிபோக்யம் குறைவற்றால் போக்தாக்களுமதுக்கநுரூபமாகப்பெற்றதோ. (அல்லாவி) ஒருவஸ்துவாக எண்ணவொண்ணாத என்னுடைய ஆவியோடேகிடீர் வந்துகலந்தது. தன்னையுமறிந்திலன், என்னையுமறிந்திலன். (அல்லாவி) அசித்திற்காட்டில் தம்மைக்குறையநினைத்தபடி. அசித்துக்கிழவில்லையே, தன்ஸ்வரூபத்திலேகிடந்ததே; சேதனனாயிருந்துவைத்து ஜ்ஞாநபலமில்லாமையாலே அசித்திற்காட்டில்

தம்மைக்குறையநினைத்திருக்கிறார். (உள்கலந்த) * பெருமக்களுள்ளவரான நித்யஸூரிகளளவில் கலக்குமாபோலே தான்கலந்தானோ; என்னையாராவமுதாகநினைத்து, என்னளவாகத்தன்னை நினைத்துக்கிடீர்கலந்தது. (உள்கலந்த) "ஏகதத்தூ°"(ஏகதத்த்வம்) என்னலாம்படிகலந்தானாயிற்று. அவனிப்படிகலந்தமை நீரொன்கொண்டறிந்ததென்னில்; வடிவிலேதொடைகொண்டேனென்கிறார் (காரார்கருமுகில்போல்) என்னோட்டைக்கலவி "பெருப்பேறு" என்னுமிடம் தன்வடிவிலேதோற்றவிராநின்றான். கார்காலத்திலார்ந்த கருமுகில்போலென்னுதல்; காரொன்று-கறுப்பாய், கருமைமிக்க முகிலென்னுதல். இவ்வடிவையுடையவன்கிடீர் என்னோடேவந்துகலந்தானென்கிறார். (என்னம்மான்கண்ணனுக்கு) அவ்வடிவழகாலேயென்னையெழுதிக்கொண்ட க்ருஷ்ணனுக்கு. (நேராவாய்செம்பவளம்) பவளமாகிற்சிவந்தன்றோ இருப்பதென்னில்; ப்ரவாளத்தை ஸ்படிகஸ்தாநத்திலேயாக்கி அவ்வருகேசிவந்த பவளத்தைக்கற்பித்தால், அப்படிசிவந்த பவளமாயிற்று ஜாதியாகத் திருப்பவளத்துக்கொப்பாகாதது.

(கண்பாதம்கைகமலம்நேரா) குளிரநோக்கினகண், நோக்குக்குத்தோற்று விழுந்திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை யெடுத்தணைக்குங்கை; இவற்றுக்குத் தாமரைஜாதியாகவொப்பாகா.

(பேராரம்) "பெரியவரைமார்பிற்பேராரம்) என்கிறபடியே, திருக்கழுத்துக் கிருமடியிட்டுச் சாத்தவேண்டும்படியானஆரம்.

(நீள்முடி) ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகம்.

(நாண்) விடுநாண்.

(பின்னுமிழைபலவே) அநுபவித்துப்போமித்தனைபோக்கி, என்றாற்சொல்லித் தலைக்கட்டப்போமோ..............................*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (ஆராவமுதமித்யாதி) கீழ், உபமாநமான தாமரையை சிக்ஷித்தொப்பாகச் சொல்லிப்போந்தவர், இங்கு "ஒப்பில்லை" என்றுசொன்னதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார் (இத்தனைபோதித்யாதி) சிக்ஷித்து - சிறிது விசேஷணமிட்டு. நேர்கொடுநேர் - ஸாக்ஷாத்.

(மேன்மேலன) இது - அபூதோபமை அவனுடைய போக்யதையைச் சொன்னவநந்தரம், தம்முடைய ஹேயதையைச் சொல்லுகிறவருடைய ஹார்த்தபாவம் (இப்படியித்யாதி) அல்லாவி - அல்லாதஆவி. ஒருவஸ்துவல்லாத வாத்மாவுக்குள்ளே யென்றபடி. இதநுரூபமன்றோவென்ன (ஒருவஸ்துவாகவித்யாதி) விவரணம் (தன்னையுமித்யாதி) "நல்லதுகெட்டால் நாய்க்குமாகாது" என்றதை நினைத்தருளிச்செய்கிறார் (அசித்திற்காட்டிலித்யாதி) அத்தையுபபாதிக்கிறார் (அசித்துக்கித்யாதி) அசித்துக்கிழவில்லையே - அசித்துக்கு "இழந்தோம்" என்னு

மறிவில்லையே. (தன்ஸ்வரூபத்திலேகிடந்ததே) வஸ்த்வந்தரமன்றிக்கேகிடந்ததே. (ஜ்ஞாநபலமில்லாமையாலே) "பகவத்ஸம்ஶ்லேஷத்துக்கயோக்யம்" என்னும் ஜ்ஞாநபலமில்லாமையாலே. "உள்கலந்த" என்றதுக்கர்த்தத்வயம் - விடாயர் மடுவிலேயவகாஹிக்குமாபோலே யத்யபிநிவிஷ்டனாய்க் கலந்தானென்னுதல், "ஏகதத்வம்" (ஏகதத்வம்) என்னலாம்படி கலந்தானென்னுதல். இரண்டர்த்தத்தையு மருளிச்செய்கிறார் (பெருமக்களித்யாதியாலும், ஏகதத்வமென்னலாமித்யாதியாலும்) (நித்யஸூரிகளளவில்) யோக்யவிஷயத்திற் கலக்கும் போதும் பெருமாறுமிப்படி கலந்ததென்றபடி. என்னளவாகத் தன்னோடொத்து - தன்னையல்லாவியாக நினைத்து.

தொடைகொண்டேன் - க்ரஹித்தேன். என்னுள்ளேகலந்த வநந்தரம் - காரார்கருமுகிலானான் என்றுபரபாவியாகபாவம் (என்னோட்டைக்கலவியித்யாதி) காரார்கருமுகில்போல் - வர்ஷாகாலீந பரிபூர்ணமேகம்போலே யிதிப்ரதமார்த்தம்; காரென்று - கறுப்பாய், ஆர்தல் - மிகுதியாய், கருமையிக்க கருமுகில் - கெய்த்தமுகிலென்று த்விதீயார்த்தம். காரார்கருமுகில்போலே யிருக்கிறவனிடர் - அல்லாவியுள் கலந்ததென்று பூர்வபாவியாக வர்த்தாந்தரம் (இவ்வடிவையித்யாதி)

வாய்க்கு செம்பவளம், நேரா - ஸத்ருஶமாகாதென்றபடி. (பவளமாகிற் சிவந்தன்றோவிருப்பதென்று) அநந்தரம், "செம்" என்று விசேஷிக்கவேணுமோ (என்னில்) என்றுகூட்டுவது. "பவளம்" என்கிற ஸாமாந்ய நிர்த்தேசத்தைப்பற்ற (ஜாதியாகவென்றது) ஜாதிக்குள்ளே யொருவ்யக்தியும் ஸத்ருஶமன்றென்றபடி.

கண்பாதம்கைகமலம்நேரா - கண்பாதம் கைகளுக்குக் கமலமொப்பாகாது.

ஆரம் - ஹாரம். முத்துமாலை. (பெரியவரையித்யாதி) மூன்றாந்திருவந்தாதி. பெரியமலைபோலே பொருந்தியிருக்கிற திருமார்விலே பெருத்திருக்கிற திருவாரத்தைச் சார்ந்தியென்றபடி. இருமடியிட்டு - இரட்டையாகமடித்து.

விடுநாண் - கடிஸூத்ரம்.

"பலவே" என்றதுக்கு பாவம் (அநுபவித்தித்யாதி)

க்ரமேணாந்வயஃ..

ஆறம்பாட்டு.

பலபலவேயாபரணம்பேரும்பலபலவே
பலபலவேசோதிவடிவுபண்பெண்ணிற்
பலபலகண்டுண்டுகேட்டுற்றுமோந்தவின்பம்
பலபலவேஞானமும்பாம்பணைமேலாற்கேயோ.

ஆறாயிரப்படி.

(பலபலவே) அஸங்க்யேயதிவ்யபூஷணங்களையும், அஸங்க்யேய கல்யாணகுணங்களையும், அஸங்க்யேய தேஜோமயகல்யாண திவ்யரூபங்களையும், அஸங்க்யேய திவ்யபோகங்களையும், அஸங்க்யேயதிவ்யஜ்ஞாநங்

களையுமுடையனாய், நாகபர்யங்கஸாயியாய், இப்படி பரிபூர்ணனாயிருந்து வைத்தென்னோடே கலந்தருளினானென்கிறார்...................... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பூஷணாத்யபரிச்சேதத்தை யநுபவிக்கிறார்.

பாம்பணைமேலாற்கு - திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டாற்போலே யென்னோடுகலந்தவனுக்கு. பண்பெண்ணில் - ஸ்வபாவநிரூபணம்பண்ணில். ஆபரணம்-ஆபரணம். பலபல-கிரீடாதிரூபபேதத்தாலும் ஒரொன்றில் ஸம்ஸ்தாநபாஹுள்யத்தாலும் பலபலவாயிருக்கும். பேரும்-நாமமும். பலபல - வ்யக்திபேதத்தாலும் நிர்வசநமுகத்தாலுமோரொன்றநேகநாமாத்மகமாகையாலே பலபலவாயிருக்கும். சோதி-ஜ்யோதிரூபமான. வடிவு-அப்ராக்ருதவிக்ரஹமும். பலபல-பரவ்யூஹாதிபேதத்தாலு மவாந்தரபேதத்தாலும் பலபலவாயிருக்கும். கண்டுண்டுகேட்டுற்றுமோந்தின்பம்-இந்த்ரியத்வாரா தத்தத்விஷயஸம்யோகத்தால் வருகிறஸுகமும். பலபல-வ்யக்திபேதத்தாலு மவாந்தரபேதத்தாலும் பலபலவாயிருக்கும். ஞானமும்-தத்த்வாராபதார்த்தங்களிற்பிறக்கிறஜ்ஞாநமும். பலபல - அப்படியேபலபலவாயிருக்கும்.

இந்த்ரியத்வாராவருகிற ஸுகஜ்ஞாநங்களி லீஶ்வரனுக்கு யதாக்ரமத்தாலும் வ்யுத்க்ரமத்தாலும் வருமநியமததாலே பன்மைசொல்லவுமாம்................ *

ஈடு - ஆறும்படி.

தம்முடனேகலந்தாற்போலாய் அநேகசரீர பரிக்ரஹம்பண்ணி யென்னை யநுபவியாநின்றான் கிடீரென்கிறார்.

(பலபலவேயாபரணம்) ஜாதிபேதமும் வ்யக்திபேதமு மிருக்கிறபடி. திருக்கைக்குச்சாத்துமவையென்றாலநேகம்; அவைதன்னிலே "இடைச்சரி, கடைசசரி" என்றநேகமாயிருக்குமிறே.

(பேரும்பலபலவே) அநுபவஸமயத்தில் நாமக்ரஹணத்துக்கிழிந்தவிடமெல்லாந்துறை; சிலப்பேர், வீரப்பேர், அநேகமாயிருக்குமிறே

(பலபலவேசோதிவடிவு) திருநாமத்வாராகாணும் வடிவுகளும்பல. அப்ராக்ருததிவ்யஸம்ஸ்தாநத்தை யிதரஸஜாதீயமாக்குகையாலே எல்லாம் சோதிவடிவாயேயிருக்குமிறே. ஸௌபரியைப்போலே அநேகம்வடிவுகொண்டாயிற்று இவரையநுபவிக்கிறது. முக்தன் தன்னையநுபவிக்கும்போது படிமாபோலே. தானென்னையநுபவிக்கப் பலவடிவுகொள்ளாநின்றான். (பண்பெண்ணில்) ப்ரகாரங்களையநுஸந்திக்கில்.

(பலபலவித்யாதி) கண்டு, உண்டு, கேட்டு, உற்று, மோந்து, உண்டாகக்கடவதான இந்த்ரியஸுகங்களும் பலபல. த்ருஷ்டிப்ரியமாயிருக்குமவையும், புஜிக்குமவையும்,ஶ்ரவணேந்த்ரிய விஷயமாயிருக்குமவையும், ஸ்பர்ஶவிஷயமாயிருக்குமவையும், க்ராணேந்த்ரியவிஷயமாயிருக்குமவையுமாயநேகமிறே.

(பலபலவேஞானமும்) விஷயங்களைச்சொல்லுதல், அவற்றைய நிகைக்கு ஸாமக்ரியான ஜ்ஞாநங்களைச்சொல்லுதல். ஜ்ஞாநமும் பலவுண்டோவென்னில் ; விஷயந்தோறும் பேதிக்குமிறே ஜ்ஞாநமும். ஸ்வவ்யதிரிக்தங்களையெல்லாம் விஷயமாகவுடையனாய், அவற்றையெல்லாமறியவும் வல்லனாய், அவற்றையெல்லா மநுபவித்தால் வருமேற்றத்தையுடையனாயிருக்குமிறே. (பாம்பணைமேலாற்கேயோ) இவையெல்லாமொருவிஷயத்திலேயுண்டாயநுபவிக்குமென்னுமிடத்துக்கு தாஹரணங்காட்டுகிறார். ஸ்பர்சேந்த்ரியத்துக்குமுண்டு, க்ராணேந்த்ரியத்துக்குண்டு, கண்ணுக்கினிதாயிருக்கும், இவைதொடக்கமானவையெல்லா முண்டிறே.

பாம்பணைமேலாற்கு-பன்பென்னில்-பலபலவேயாபரணம் இத்யாதிதொடங்கி, ஓ! என்றங்வயம்.......... .. ..

ஜீயர் அரும்பதம்.

...பாட்டு. (பலபலவேயித்யாதி) "பலபலவேசோதிவடிவு" என்றதிலே சோதிகாலையாரிகை (ஏம்றுடனேயித்யாதி) நம்முடனே-என்னுடனே. ஆற்றுறும்-ஒருசரீரத்தாலே யநுபவிக்க வந்தருப்பானாய். ஆற்றுறாய்-அத்ருப்தனாய்.

...சந்தாந்தம் (ஜாக்ஷ்யபுமுகித்யாதி) உபயாதம் (இருக்கைக்கித்யாதி) இவ-ஷாதிவேதம். ... "இடைச்சரி, கடைச்சரி" என்று வ்யக்திபேதமுண்டிறே. இப்படி யெல்லாவற்றிலுங்கண்டுகொள்வது. சரி-வலயம். இடைச்சரி-பாஹுவில் தோள்வளைமுதலானவை. கடைச்சரி-முன்கைவளையாதல். யத்வா. இடைச்சரிகடைச்சரியாவது-விரலிலேமோதிரமிட்டால் முன்னும் பின்னுமிடுகிற மோதிரமாதல்.

"பெரும்பலபல" என்கிறவிடத்தில் ... யாலே - "ஒராயிரம்" இத்யாதிப்படியே, ஏகைகநாமத்துக்கும் ... விவக்ஷிதம் ... பேதத்தாலே. "சோவிந்தன்" இத்யாதி-விலப்பேர். "மதுசூதன்" இத்யாதி-வீரப்பேர்.

"பலபலவேசோதிவடிவு" என்றதுக்கு ... முந்தினது. அவதாரவிக்ரஹம். இரண்டாவது-இவனையநுபவிக்கைக்காக வேககாலத்திலே யநேகவிக்ரஹபரிக்ரஹமாதல். ப்ரதமார்த்தம் (ஜ்ஞானமிவரேத்யாதி) த்விதீயார்த்தம் (ஸௌபரீத்யாதி) இதரஜாதியமான வஹநவிக்ரஹத்துக்குச் சோதியுண்டோவென்ன (அப்ராக்ருதேத்யாத) த்ருஷ்டாந்தாந்தரம் (முக்தஸ்ரீத்யாதி) விவரணம் (த்ருஷ்டிப்ரியேத்யாதி)

(பலபலவேஞானமும்) ஜ்ஞாயத இதிஜ்ஞாநமென்கிற வ்யுத்பத்தியாலே-கீழ்ச்சொன்ன வைசித்ரியஸாபேக்ஷஹவான ஶப்தாதிவிஷயங்களைச்சொல்லுதலென்றபடி. (ஜ்ஞாநமும் பலவுண்டோகிறி) தர்மபூதஜ்ஞாநமொன்றன்றோ, பலவுண்டோவென்னிலென்றபடி. (விஷயங்கடோறுமிறு) விஷயோபாதிகபேதமுண்டென்றபடி. "பலபலகண்டுண்டு" இத்யாதியையும், "ஞானம்" என்றதினர்த்தத்வயத்தையுங்கூட்டி நிகமிக்கிறார் (ஸ்வவ்யதிரிக்தங்களையித்யாதி) விஷயமாக-ஸ்வஜ்ஞாநத்துக்கு விஷயமாக. அநுபவத்தாலே-கரணங்களாலேயநுபவித்தால். ஏற்றம்-இன்பம். ஏற்றமென்றது-அர்த்தாத்ஸித்தம். ஆக, இத்தால்-இவரோடேகலந்தபின்பு ஶப்தாதிவிஷயாநுபவத்தாலுண்டான வேற்றமெல்லாமுண்டாயிற்றென்றபடி.

(ஸ்பர்ஶேந்த்ரியத்துக்குண்டு) ஸ்பர்ஶேந்த்ரியத்துக்கு விஷயமுண்டென்றபடி. இம்மூன்றும் மற்றவிரண்டுக்கு முபலக்ஷணமென்கிறார் (இவைதொடக்கமானவையித்யாதி) "ஓ" என்றது-ஹர்ஷஸூசகம்.

பாம்பணைமேலாற்கு - பண்பெண்ணில்-ஆபரணம் பலபல, பேரும்பலபல, சோதிவடிவுபலபல, கண்டுண்டுகேட்டுற்றுமோந்தின்பம்பலபல, ஞானமும் பலபல, ஓ என்றந்வயம். உற்று-ஸ்ப்ருஶித்து ....*

ஏழாம்பாட்டு.

பாம்பணைமேற்பாற்கடலுட்பள்ளியமர்ந்ததுவும்
காம்பணைதோட்பின்னைக்காயேறுடனேழ்செற்றதுவும்
தேம்பணையசோலைமராமரமேழெய்ததுவும்
பூம்பிணையதண்டுழாய்ப்பொன்முடியம்போரேறே.

ஆறாயிரப்படி.

(பாம்பணை) தன்னுடையஸர்வசேஷ்டிதங்களையு மெனக்கே போக்யமாகச்செய் தருளினனென்கிறார்.................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தம்மோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே யவனுடைய திவ்யசேஷ்டிதங்கள்தமக்கு ப்ரகாசித்து நிறம்பெற்றபடியை யநுபவிக்கிறார்.

பாற்கடலுள் - பாற்கடலிலே. பாம்பணைமேல் - பாம்பணையின்மேலே. பள்ளி - கண்வளர்ந்தருளுகையை. அமர்ந்ததுவும் - பொருந்தினதும். காம்பணை - மூங்கில்போன்ற. தோள் - தோளையுடைய. பின்னைக்காய் - நப்பின்னைப்பிராட்டிக்காக. ஏறேழு - ஏறேழையும். உடன் - ஏகோத்யோகத்திலே. செற்றதுவும்-கொன்றதுவும். தேம் - தேனையும். பணைய - பணையையுமுடையசோலை - அத்தால். சோலையாகத்தழைத்த. மராமரம் - மராமரம். ஏழு - ஏழு. எய்ததுவும் - எய்ததுவும். பூ - அழகிய. பிணைய - தொடையையுடைத்தாய். தண் - குளிர்ந்த. துழாய் - திருத்துழாயாலேயலங்க்ருதமாய். பொன் - அத்யுஜ்ஜ்வலமான. முடி - முடியையுடைத்தாய். அம் - தர்ஶநீயமாய். போர் - விரோதிநிரஸநோத்யோகஶீலமாய் - செருக்கையுடைத்தான. ஏறு - ருஷபம்போன்றவஸ்து.

"ஏறு" என்றசொற்கிடாக - அமர்ந்ததுவும், செற்றதுவும், எய்ததுவுமென்றஃறிணை.................................*

ஈடு-ஏழாம்பாட்டு.

அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து, க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளி, ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிற்றெல்லாமெனக்காகக் கிடீரென்கிறார்.

(பாம்பணை) ஆர்த்தரக்ஷணத்துக்காக, திருப்பாற்கடலிலே நீருறுத்தாமைக்கு, ஸௌகுமார்யங்களையுடையனான திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளிற்றும். (காம்பித்யாதி) சுற்றுடைமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேயிருந்துள்ள தோளழகையுடைய நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகங்களான ருஷபங்களேழையு மொருகாலேயூட்டியாகநெரித்துப் பொகட்டதும். (தேம்பணைய) மஹாராஜர், "நிர்வாலியைக்கொல்லமாட்டீர்" என்ன, அவரைவிச்வஸிப்பிக்கைக்காக; தேனையுடைத்தாய்ப் பணைத்து அடிகண்டிலக்குக் குறிக்கவொண்ணுதபடியாயிருக்கிறமராமரங்களேழையுமெய்ததும். (பூவித்யாதி) பூவையுடைத்தாய்த் தொடையுண்டவென்னுதல்; நல்லதொடையையுடைத்தான திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதனாய், ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தையுடையனாய், இவ்வழகுதன்னை நித்யஸூரிகளை யநுபவிப்பித்து அத்தால்வந்த மேன்மைதோற்ற, அழகியதாய் யுத்தோங்முகமான ருஷபம்போலே மேனாணித்திருக்கிறவிருப்பு.

பொன்முடியம்போரேறு- பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்-பாம்பணைமேலென்று தனித்தனியே க்ரியையாகக்கடவது. இவையெல்லாமெனக்காகக் கிடைனொன்றுமாம்........................ ....

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (பாம்பணைமேலித்யாதி) "பூம்பிணைய" இத்யாரப்ய. "போரேறு - பாற்கடலுள் - பாம்பணைமேற் பள்ளியமர்ந்ததுவும், காம்பணையென்றுதொடங்கி, "எய்ததுவும்" என்றநுவித தவதாரிகை (அயர்வறுமித்யாதி)

"பாற்கடலுள்-பாம்பணைமேல்" என்றநுவதித்தர்த்தம் (ஆர்த்தரக்ஷணேத்யாதி) ஸர்ப்பஜாதி ஸ்வபாவத்தைப்பற்ற (ஸௌத்யேத்யாதி)

காம்பு - மூங்கில். சுற்றுடைமை - வர்த்துலதை. ஏறு - ஏழுமுடன் செற்றதுவும் இத்யந்வய:. ஊட்டியாக - கண்டப்ரதேசாவச்சேதேந. ஊட்டி - கழுத்து நெரித்து - ஸம்ஹரித்து.

பணை - சாகை. தேம் - தேன்.

பூவென்று - பூவாதல், ஸ்ப்ருஹணீயதையாதல். பிணைய - தொடுக்கப்பட்ட, நித்யஸூரிகளை யநுபவிப்பித்தென்றது-அர்த்தாத்ஸித்தம். மேனாணித்து-கர்வித்து.

முந்தினவந்வயத்துக்கு, ஏழுமுடன் செற்றதுவும் - காம்பணைதோட்பின்னைக்காய், எய்ததுவும் - தேம்பணையசோலை மராமரமேழு என்றபேக்ஷமுமந்வயிப்பது. "இன்னது மின்னதுமின்னதும்" என்றால் - ஸாகாங்க்ஷமாயிருக்கையாலே யத்யாஹரித்து யோஜிக்கிறார் (இவையெல்லாமித்யாதி) இந்தயோஜனையில் பூம்பிணையதண்டுழாய்ப்பொன்முடியம்போரேறு-பாம்பணைமேலென்றுதொடங்கி, எய்ததுவுமெனக்காகக் கிடைரித்யந்வய:..

எட்டாம்பாட்டு.

பொன்முடியம்போரேற்றையெம்மானைநாற்றடந்தோ
டன்முடிவொன்றில்லாததண்டுழாய்மாலையனை
யென்முடிவுகாணாதேயென்னுள்கலந்தானைச்
சொன்முடிவுகாணேனான்சொல்லுவதென்சொல்லீரே.

ஆறாயிரப்படி.

'(பொன்முடி) வாங்மநஸாபரிச்சேத்யநிரதிசய கல்யாணஸ்வரூப குண விபூதிகளையுடையனாயிருந்துவைத்து, என்னுடைய ஸ்வரூபஸ்வபாவகுண வ்ருத்தாதிகளினுடைய நிஹீநதையைப்பாராதே யென்னுள்கலந்த இஸ்ஸௌசீல்யத்துக்கொரு முடிவுகாண்கிறிலேன்; ஆனபின் பெதைச்சொல்லுவது சொல்லீரென்கிறார் ....*

பன்னீராயிரப்படி,

அநந்தரம், ஸம்ஶ்லேஷவைலக்ஷண்யத்தினுடைய வாசாமகோசரதையை யருளிச்செய்கிறார்.

பொன்-உஜ்ஜ்வலமான. முடி-அபிஷேகத்தையுடைய. அம்போரேற்றை-பெருஞ்செருக்கனாய். எம்மானை-அநந்யஸ்வாதந்த்ர்யச்செருக்கைக்காட்டி யென்னையடிமைகொண்டநாதனாய். நால்-நாலுவகைப்பட்ட. தடம்-பெரிய. தோள்-திருத்தோளையுடையனாய். தன்-தன்பெருமைக்கு. முடிவொன்றில்லாத-முடிவில்லாதவனாய். இந்தமேன்மைக்கும் போக்யதைக்கும் ஸூசகமான தண்-குளிர்ந்த. துழாய்மாலையனை-திருத்துழாய்மாலையையுடையனாய். என்முடிவுகாணாதே-தன்னுத்கர்ஷத்துக்கெல்லைகாணாதவோபாதியென்னிகர்ஷத்தின்முடிவு காணாதே. என்னுள்-என்னெஞ்சுக்குள்ளே. கலந்தானை-கலந்தவனை. நான்-நான். ஸ்வஸம்வேத்யமாக வறியுமதொழிய சொல்-பாசுரமிட்டுச்சொல்லும். முடிவு-ப்ரகாரம். காணேன்-காண்கிறிலேன். சொல்லுவது-நீங்களநுபவித்தவிஷயம் வ்ருத்தகீர்த்தநம்பண்ணுமோபாதி யிங்குச்சொல்லுவது. சொல்லீர்-உண்டாகிற்சொல்லுங்கோளென்று லௌகிகரைக்குறித்துரைக்கிறார்.

லோகவ்யாவ்ருத்தனுடைய ஸம்ஶ்லேஷஸாரஸ்யம் வாசாமகோசரமென்றுகருத்து. விஶ்லேஷதசையிலென்முடிவுகாணாதேயென்றுமாம். ....*

ஈடு-எட்டாம்பாட்டு.

* அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து என் தண்மையைப்பாராதே யென்னோடேவந்துகலந்த விம்மஹாகுணத்தையென்னாற்பேசிமுடியாதென்கிறார்.

(பொன்முடியம்போரேற்றை) உபயவிபூதிக்கும் கவித்தமுடியையுடையனாய் அத்தால்வந்த சேஷித்வுறைப்புத் தோற்றவிருக்கிறவனை.

(எம்மானை) தன்சேஷித்வத்தினெல்லையைக்காட்டி, என்னை சேஷத்வத்தினெல்லையிலேயிருத்தினவனை. (நாற்றடந்தோளித்யாதி) நாலாய்ப்பணைத்திருந்துள்ள தோள்களையுடையனாய், தன்னைப்பேசப்புக்கால் வேதங்களுமெல்லைகாணமாட்டாதே "யதோவாசோநிவர்த்தந்தே" (யதோவாசோநிவர்த்தந்தே) என்றுமீளும்படியிருப்பானாயிருக்கிற தண்டுழாய்மாலையனை. எல்லைகாணவொண்ணாத வஸ்துவுக்கு லக்ஷணம்போலே திருத்துழாய்மாலை. (என்முடிவித்யாதி) அவன்பக்கல் நன்மைக்கெல்லைகாணவொண்ணாதாப்போலேயாயிற்று இவர்பக்கல் தீமைக்கெல்லைகாணவொண்ணாதாயிருக்கிறபடி. (என்முடிவுகாணாதே) என்னளவுபாராதே "அவிஜ்ஞாதா" (அவிஜ்ஞாதா) என்கிறபடியே, என்தண்மையாராதே கண்ணைச்செம்புளித்துவந்து கலந்தானென்னுதல்; அன்றிக்கே, ஆடியாடியில் விச்லேஷித்த வ்யஸநத்தாலே நான்முடியப்புக, அதுகாணமாட்டாதே யென்னோடேகலந்தானென்னுதல். (தொலைமுடிவுகாணேனான்) என்னோடேவந்துகலந்த ஒருகுணத்தையுஞ்சொல்லில், அநந்தகுணமொன்றையும் சொல்லப்புக்க வேதம்பட்டதுபடுமித்தனை. அவனென்னையநுபவிப்பிக்க, அத்தாலேயெனக்குப்பிறந்தரஸமநுபவித்துவிடுமத்தனையல்லது, பாசுரமிட்டுச்சொல்லிமுடியாதென்றுமாம்.

(சொல்லுவதென்சொல்லீரோ) இதரவிஷயங்களையநுபவித்து அவற்றுக்குப்பாசுரமிட்டுச்சொன்னீர்களாயிருக்கிற நீங்கள்தான் சொல்லவல்லீர்களோ. ....*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (பொன்முடியித்யாதி) "பொன்முடியம்போரேற்றை" என்றத்தைப்பற்ற (அயர்வறுமமரர்களென்றது) தண்மை - நீசதை. இம்மஹாகுணம் - ஸௌசீல்யம்.

கவித்து - தரித்து. உறைப்பு - தார்ட்யம். (தன்சேஷித்வத்தினித்யாதி) "பொன்முடி" என்று - சேஷித்வத்தினெல்லைதோன்றிற்று. தத்ஸமயவ்யாபாரத்தாலே - சேஷத்வத்தினெல்லைதோன்றுகிறதென்றபடி. எம்மானை - எங்களுக்கு ஸ்வாமியானவனை.

பணைத்திருந்துள்ள - பெருத்திருந்துள்ள. தன்முடிவொன்றில்லாத - தனக்கோரெல்லையில்லாத. "தண்டுழாய்மாலையனை" என்கிறபத ஸாஹித்யத்துக்கு பாவம் (எல்லைகாணவித்யாதி) இவ்விடத்திலே - "வக்ஷஸ்த்தல்யாம்துளஸிகமலா" (வக்ஷஸ்த்தல்யாம்துளஸிகமலா) இத்யாத்யநுஸந்தேயம்.

"என்முடிவு" என்றதற்கு, முடிவென்று - எல்லையாய், கீழே "அல்லாவி" என்றிருக்கையாலே ஸாமாந்யசப்தத்தை விசேஷத்திலே பர்யவஸிப்பித்து, என்தோஷத்தின் சரமாவதியைப் பாராதேயென்று முந்தினவர்த்தம். அளவு - தண்மை. விவரணம் (அவிஜ்ஞாதேத்யாதி) "அவிஜ்ஞாதாஸஹஸ்ராம்சு:"

(அவிஜ்ஞாதாஸஹஸ்ராம்ஸு:) இதி ஸ்ரீஸஹஸ்ரநாமசி. சம்புளித்து - மூடிக்கொண்டு. (அன்றிக்கேயித்யாதி) த்விதீயார்த்தம் - ஸ்பஷ்டம்.

"என்முடிவுகாணாதே" என்றபதத்தி னர்த்தத்வாநுகுணமாக வடைவேயர்த்தத்வயம் (என்றேவந்தித்யாதி வாக்யத்வயேந) சொன்முடிவுகாணேன் - சொல்லும்ப்ரகாரம் காண்கிறிலேன்.

சொல்லுவதென் - நீங்களநுபவித்தவிஷயம் வ்ருத்தகீர்த்தநம்பண்ணுமோபாதி, இங்குச்சொல்லுவதேது. சொல்லீரோ - உண்டாகிற்சொல்லுங்கோ ளிதிசப்தார்த்த:.

இத்தால்பலிதம் (இதரவிஷயங்களையித்யாதி)

க்ரமேணாந்வய:..*

ஒன்பதாம்பாட்டு.

சொல்லீரென்னம்மானையென்னாவியாவிதனை
யெல்லையில்சீரென்கருமாணிக்கச்சுடரை
நல்லவமுதம்பெறற்கரியவீடுமா
யல்லிமலர்விரையொத்தாணல்லன்பெண்ணல்லனே.

ஆறாயிரப்படி.

(சொல்லீர்) இப்படியவனுடையகுணங்கள் சொல்லநிலமன்றியேயிருக்கச்செய்தேயும், தம்முடைய ஆராமையாலே; அவன்குணங்களைக் காலதத்வமெல்லாஞ்சொன்னாலுமவற்றுக்கொருமுடிவு காண்கிறிலேனென்று பின்னையுமவனுடையகுணங்களைச்சொல்லி, பரமபோக்யனாய் ஸ்த்ரீபுந்நபும்ஸகாதி ஸர்வபதார்த்த விஸஜாதீயனாயிருந்துவைத்து, தன்னழகாலேயெனக்கு தாரகனாயென்னுள்ளேபுகுந்துகலந்தருளின வெம்பெருமானுடைய இந்தஸௌசீல்யாதிகுணங்களை நீங்களும்சொல்லீர்களென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித் தருளிச்செய்கிறார்..................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நிரதிசய போக்யபூதனானவனைச் சொல்லவல்லீர்களாகிற்சொல்லுங்கோளென்கிறார்.

என் - எனக்கு. அம்மானை - ஸ்வாமியாய். என்னாவி - என்னாத்மாவுக்கு. ஆவிதனை - ஆத்மாவாய். எல்லையில் - எல்லையில்லாத. சீர் - ஸௌகுமார்யாதிகுணங்களையுடைத்தான. என்கருமாணிக்கச்சுடரை - நீலரத்நஜ்யோதிஸ்ஸுபோலேயிருக்கிறவடிவை யென்னையநுபவிப்பித்தவனை. சொல்லீர் - எல்லாரும்சேர்ந்து சொல்லலாமாகிற்சொல்லுங்கோள். சொல்லவொண்ணாமைக்கடியென்னென்னில் நல்ல - லௌகிகாம்ருதத்தில்விலக்ஷணமான. அமுதம் - நித்யபோக்யாம்ருதமுமாய். பரமயோகிகளுக்கும் பெறற்கு - பெறுதற்கு. அரிய - அரிதான. வீடுமாய் - மோ

ஸாஸ்த்ரநிர்வாஹகனுமாய். அல்லிமலர் - தாமரைப்பூவில். விரையொத்து - பரிமளம்போலே நிஷ்க்ருஷ்டபோக்யரூபனாய். பெண்ணல்லன் - பும்ஸ்த்வத்தாலே ஸ்த்ரீகளில் வ்யாவ்ருத்தனானவோபாதி. ஆணல்லன் - புருஷோத்தமத்வத்தாலே ஸமஸ்தபுருஷவ்யாவ்ருத்தனுமிருக்கும்.

ஆதலாற்சொல்ல வரிதென்றகருத்து......................................

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

“பாசுரமில்லை” என்று, கைவாங்கமாட்டாரே; ஸம்ஸாரிகளைப்பார்த்து, என்னையுடைய ஸர்வேஸ்வரனை யெல்லாருங்கூடியாகிலும்சொல்லவல்லீர்களோவென்கிறார்.

(சொல்லீரென்னம்மானை) க்ஷுத்ரவிஷயங்களை யநுபவித்து அவற்றுக்குப் பாசுரமிட்டுச் சொல்லியிருக்கிற நீங்களாகிலும் சொல்லவல்லீர்களோ. (என்னம்மானை) தன்குணசேஷ்டிதங்களாலே யென்னை முறையிலேயிறுத்தினவனை. (என்றுயிர்யானிதனை) என்றாத்மாவுக்கந்தராத்மாவாயுள்ளவனை. (எல்லையில்சீர்) இவ்வாத்மஸ்வரூபகுணங்களுக் கெல்லைகாணிலும் விக்ரஹகுணங்களுக் கெல்லையின்றிக்கே யிருக்கிறபடி. அளவிறந்த கல்யாணகுணங்களையும், நீலமணிபோலே குளிர்ந்தவடிவழகையு மென்னையநுபவிப்பித்தவனை. (நல்லவமுதம்) நித்யமுமாய் போக்யமுமானவம்ருதம். ப்ராக்ருதபோக்யங்களில் தலையானவம்ருதம். (பெறற்கரியவீடுமாய்) ஒருவராலும் ஸ்வயத்நத்தால் ப்ராபிக்கவொண்ணாத மோக்ஷபுருஷார்த்தமுமாய். (அல்லிமலர்விரையொத்து) போக்யதைக்குத் தாமரைப்பூவில பரிமளத்தோடொத்து. (ஆணல்லன்பெண்ணல்லனே) இதரபுருஷ ஸஜாதீயனல்லன். பெண்ணல்லனென்றவோபாதி, ஆணல்லனென்று - அநுதன்னையும் கழிக்கிறது. இத்தால் - உபமாநரஹிதனென்றபடி....................................

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (சொல்லீரித்யாதி) கீழ் “சொல்லுவதென்சொல்லீர்” என்றுவைத்து, பின்னையும் “சொல்லீர்” என்கிறதென்னென்ன (பாசுரமில்லையித்யாதி) சாபலத்தாலேயென்றபடி.

முறை - ப்ராப்தி.

“எல்லையில்சீர்” என்றதுக்கு - ஸ்வரூபகுணபரமாக வர்த்தாந்தரம் (அளவிறந்தவித்யாதி) ஏகார்த்தமாதல். இப்பொழுது, அளவிறந்த கல்யாணகுணங்களென்றது - விக்ரஹகுணங்களை.

நன்மைக்கர்த்தத்வயம் - நித்யபோக்யத்வமாதல், ப்ராக்ருதபோக்யவைலக்ஷண்யமாதல். நித்யபோக்யதையாவது - ஸர்வாதிகாரமுமாய் ஸதாஸேவ்யமுமாகை.

ஸ்வயத்நத்தால் ப்ராபிக்கவொண்ணுதென்றது - “ [illegible] ” ([முக்திமப்யதிர்லபாம்) என்றத்தைப்பற்ற. வீடு - மோக்ஷம். அல்லி - தாமரை.

(இதரபுருஷஸஜாதீயனல்லனிதி) பும்ஸ்த்வத்தாலே பெண்களைக்கழித்ததோபாதி, புருஷோத்தமத்வத்தாலே நாட்டில்புருஷர்களோடுண்டான ஸாஜாத்யத்தையும் கழிக்கிறதென்கை. “ஆணல்லன்” என்னவமையாதோ, “பெண்ணல்லன்” என்கிறதென்னென்ன ; த்ருஷ்டாந்தார்த்தமென்கிறார் (பெண்ணல்லனென்றவித்யாதி) நாட்டில் காண்கிற ஆணின்படியுமல்லன், பெண்ணின்படியுமல்லனிதிசப்தார்த்த:. அதுதன்னையும் - புருஷஜாதியையும். ஆனால், பும்ஸ்த்வமில்லையோவென்ன (இத்தாலித்யாதி)

என்றுவியாவிதனை யித்யாரப்ய, பெண்ணல்லனை - என்னம்மானைச் சொல்லீர் இத்யந்வய:. வீடுமாய் - வீட்டுக்கு நிர்வாஹகனுமாய். விளையொத்த - பரிமளத்தோடொததிருக்குமவனுமாயிதி சப்தார்த்த:.................................*

பத்தாம்பாட்டு.

ஆணல்லன்பெண்ணல்லனல்லாவலியுமல்லன்
காணலுமாகானுளனல்லனில்லையல்லன்
பேணுங்காற்பேணுமுருவாகுமல்லனுமாங்
கோணைபெரிதுடைத்தெம்பெம்மானைக்கூறுதலே.

ஆறாயிரப்படி.

(ஆணல்லன்) ஸ்த்ரீபுந்நபும்ஸகாதி ஸர்வபதார்த்தவிஸஜாதீயனாதலால் தத்கோசரப்ரமாணங்களுக்ககோசரனாயிருந்துவைத்து, ஆஸ்ரிதஸுலபனு யாஸ்ரிதருடைய விவக்ஷாநுகுணமான திவ்யரூபசேஷ்டிதங்களை யுடையனாய், அநாஸ்ரிதருக்கு துர்லபனாயிருந்த வெம்பெருமானொன்றோடு கலந்தவிக்குணம்சொல்ல நிலமன்றாகிலும் சொல்லாதொழியமுடிகிறதில்லையென்கிறார்.................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவன் ஸ்வபாவத்தைச்சொல்லுகை மிகவுமரிதென்கிறார்.

ஆண்-ஆணும். அல்லன்-அன்றியே. பெண்-பெண்ணும். அல்லன்-அன்றியே. அல்லா-ப்ரயோஜநவத்தல்லாத. அலியும்-அலியும். அல்லன்-அன்றியே. காணலும்-அவற்றைக்காணும் ப்ரமாணத்தாற்காணவும். ஆகான் - ஒண்ணாதே. உளனல்லன்-ப்ரதிகூலர்க்குளனன்றியே. இல்லையல்லன் - அநுகூலர்க்கிலனன்றியே. பேணும்-ஆஸ்ரிதராயாதரித்த. கால்-காலத்தில். பேணும்-அவர்களாதரித்த. உருவாகும்-வடிவையுடையனாய். அல்லனுமாய்-ஆதரமில்லாதவளவில் அப்படியல்லனாயிருக்கும். எம்பெம்மானை-என்ஸ்வாமியை. கூறுதல் - இப்ப்ரகாரமவன் காட்டக்கண்டோன் கூறமிட்டது. பெரிது-மிகவும். கோணை-மிறுக்கு. உடைத்து-உடைத்து.

கோணை-பிறக்கு. ஸர்வவிதஜாதீயனுகையாலே "எவம்விதன்" என்றுசொல்லவரிதென்று கருத்து...*

ஈடு - பத்தாம்பாட்டு.

என்றேநிகலந்த வெம்பெருமான்படிபேசப்பெரிது மிறுக்குடைத்தென்கிறார்.

(ஆணல்லனித்யாதி) நாட்டில்காண்கிற ஆண்களின்படியல்லன், அப்படியே ஸ்த்ரீகளின்படியுமல்லன், உபயோகயோக்யமல்லாத நபும்ஸகபதார்த்தத்தின்படியுமல்லன். "नैनं वाचा स्त्रियं ब्रुवन्नैनमस्त्री पुमान् ब्रुवन्। पुमांसं न ब्रुवन्नेनं वदन्वदति कश्चन। अस्ति ब्रह्म" (நைநம்வாசாஸ்த்ரியம்ப்ருவந்நைநமஸ்த்ரீபுமாந்ப்ருவந்।புமாம்ஸம்நப்ருவந்நைநம்வதந்வததிகச்சந।அஸ்திப்ரஹ்ம,) ஆரணத்திலிரண்டாமோத்து (; "स वै न देवासुरमर्त्यतिर्यङ् न स्त्री न षण्ढो न पुमान्न जन्तुः। नायं गुणः कर्म न सन्न चासन्निषेधशेषो जयतादशेषः" (ஸவைநதேவாஸுரமர்த்யதிர்யங்நஸ்த்ரீநஷண்டோநபுமாந்நஜந்து:। நாயங்குண:கர்மநஸந்நசாஸந்நிஷேதசேஷோஜயதாதசேஷ:) என்று இப்படிபட்டரருளிச்செய்தவாறே, ஒருதமிழன், "ஜீயா, நாட்டில் காண்கிற மூன்றின்படியுமல்லனாகில் சொல்லிற்றாகிறவஸ்து, சூந்யமோபின்னை" என்றுகேட்க, பட்டரும், "பின்னோஇயலறிவுக்குப்போந்திருந்ததில்லையீ!, ஆணல்லன் பெண்ணல்லனல்லாவலியுமல்லது என்றதில்லையே, 'அல்லன், அல்லன்' என்கையாலே - 'புருஷோத்தமன்' என்று சப்தந்தானே தோற்றுவிக்கிறதில்லையோ" என்றருளிச்செய்தார். "ஆணல்லன், பெண்ணல்லன்" என்கிறவித்தால்-ஸஜாதீயவிஜாதீய விலக்ஷணம்பண்ணினபடி.

(காணலுமாகான்) ஆண், பெண், அலி, என்கிற இவற்றைக்காணும் ப்ரமாணங்களால் காணப்படாதான். இத்தால் - ஏகப்ரமாணகம்யத்வஸாம்யமுமில்லையென்கை.

(உளனல்லன்) அநாச்ரிதர்க்கு. (இல்லையல்லன்) ஆச்ரிதர்க்கு.

அத்தையுபபாதிக்கிறதுமேல் (பேணுங்கால் பேணுமுருவாகும்) "நீயெங்களுக்குப் புத்ரனாய்வந்துபிறக்கவேணும்" என்று சிலரிரக்தால் அப்படியேவந்துபிறந்து, "सफलं देवि संजातं जातोऽहं यत्तवोदरात्" (ஸபலந்தேவிஸஞ்ஜாதம்ஜாதோஹம்யத்தவோதராத்) என்னிற்கும். அன்றியே, பேணுங்கால்-தன்னையர்த்திக்குங்காட்டில், பேணுமுருவாகும்- தன்னைப்பேணிமறைக்கவேண்டும்படிவந் தவதரிக்குமென்றுமாம. (அல்லனுமாய்) இப்படிதாழநிற்கச்செய்தே சிசுபாலாதிகளுக்குக் கிட்டவரிதாம்படியிருக்கும்.

(கோணைபெரிதித்யாதி) இவ்வோவிலைகளை யெனக்கறிவித்த ஸர்வேச்வரன்படிகளைப்பேசவென்றால், சாலமிறுக்குடைத்து ....*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (ஆணல்லனித்யாதி) “ எம்பெம்மானைக்கூறுதல் - கோணை பெரிதுடைத்து ” என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (என்றோடுகலந்தவித்யாதி) பெரிதுமிறுக்குடைத்து-மிகவும்வருத்தமுடையது.

அல்லாவலி-உபயோகயோக்யமல்லாத நபும்ஸகபதார்த்தம். இவ்விடத்தில், “ [illegible] ” (குடாஷ்டண்டபிதவைரிப்ய: காசணிமபி ! தத்யாம்ப்ர திக்ருண்ஹீயாதாபத்யபிகதாசந) என்றதநுஸந்தேயம். “ ஆணல்லன் ” இத்யாதிக்குப்ரமாணம் (நைநமித்யாதி) ப்ருவந்கம்சநநா - பரமாத்மாநம்வதந்கச்சநபுருஷ:; ஏநம்-பரமாத்மாநம், வாசாஸ்த்ரியம்நவததி - ஸ்த்ரீத்வேநநவததி; ப்ருவந்கம்சநபுருஷ:ஏநம், அஸ்த்ரீபுமாந்-அஸ்த்ரீபுமாம்ஸம்; த்விதீயாவிபக்த்யாபாவச்சாந்தஸ:. ஸ்த்ரீபும்வ்யதிரிக்தநபும்ஸகத்வேநாபிநவததி; ப்ருவந்கம்சநபுருஷஏநம்-புமாம்ஸந்நவததி; எவம்பூத: [illegible] அதிகபதப்ரயோகச்சாந்தஸ:. இந்தச்ருதி, ருக்கினுடைய வாரணத்தி லிரண்டாம்ப்ரச்நத்திலே. “ [illegible] ” (நைவதேவாஸுரமர்த்யதிர்யங்நஸ்த்ரீநஷண்டோநபுமாந்நஜந்து:) இதிஸ்ரீபாகவதே.

(சூந்யமோவிதி) யாவத்விசேஷாதிரிக்தந்ஸாமாந்யமிதிபாவ:. இயலறிவுக்கு-சப்தஜ்ஞாநத்துக்கு. அதாவது-அர்த்தஜ்ஞாநபாவமேயன்றிக்கே, இயலறிவுக்கும் போந்திருந்த தில்லையீயென்றபடி. (சப்தந்தானேசொற்றுவிக்கிறதில்லையோவிதி) ச்ருதியில் “ ஏநம் ” என்றநிர்த்தேசத்தைக்கடாக்ஷித்தே “ அல்லன், அல்லன் ” என்றதென்றபடி. “ அல்லாவலியுமல்லன் ” என்றதுவும் த்ருஷ்டாந்தார்த்தமாகவே கண்டுகொள்வது.

பலிதம் (இத்தாலித்யாதி) ஐந்த்ரியகப்ரத்யக்ஷகம்யனன்றென்றபடி.

வேணுங்கால்-ஆசைப்பட்டால்; பேணுமுருவாகும் - ஆச்ரிதராசைப்பட்டவடிவோடே யவதரிக்குமென்று ப்ரதமார்த்தம். பேணுதல்-பரிவாய், மங்களாசாஸநம்பண்ணவேண்டும்படியான விக்ரஹத்தையுடையவனு யவதரிக்குமென்று த்விதீயார்த்தம். (ஸபலந்தேவீதி) இகம்பஞ்சமேம்சே த்ருதீயே தேவகீம் ப்ரதிக்ருஷ்ண:. “ [illegible] ” (ஸ்துதோஹம்யத்த்வயாபூர்வம்புத்ரார்த்திநயாததத்யதே) இதிபூர்வார்த்தம். பேணி-பரிந்து.

கோணை-(மிறுக்கு) ப்ரயாஸமென்றபடி. பெரிது-(சால) மிகவுமென்றபடி.

ஆணல்லனித்யாரப்ய, எம்பெம்மானைக்கூறுதல்”- பெரிது- கோணையுடைத்தென்றந்வயம்..*

பதினொன்றாம்பாட்டு.

கூறுதலொன்றாராக்குடக்கூத்தவம்மானைக்
கூறுதலேமேவிக்குருகூர்ச்சடகோபன்
கூறினவந்தாதியோராயிரத்துளிப்பத்தும்
கூறுதல்வல்லாருளரேற்கூடுவர்வைகுந்தமே.

ஆறாயிரப்படி.

(கூறுதல்) காலதத்த்வமெல்லாஞ்சொன்னாலுமாராத குணசேஷ்டிதங்களையுடையனான வெம்பெருமானைச்சொன்ன வித்திருவாய்மொழியைச் சொல்லவல்லரார், திருநாட்டிலேபோயெம்பெருமானை யநுபவிக்கப்பெறுவரென்கிறார்... ... ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பரமபதப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

ஒன்று-ஒருநுணைத்தை. கூறுதல்-சொல்லிலும். ஆரா - சொல்லமுடியவொண்ணாத. குடக்கூத்த - குடக்கூத்துமுதலான சேஷ்டிதங்களையுடைய. அம்மானை-ஸ்வாமியை. கூறுதல்-உள்ளபடியைச்சொல்லுவதாக. மேவி - உத்யோகித்து. குருகூர்ச்சடகோபன்-அவனாலேலப்தஜ்ஞாநப்ரேமரான ஆழ்வார். கூறின-அருளிச்செய்த. அந்தாதி - அந்தாதியாகையாலே யடைவு குலைக்கவொண்ணாத. ஓர்-அத்விதீயமான. ஆயிரத்துள்-ஆயிரத்தில். இப்பத்தும்-இப்பத்தையும். கூறுதல்-சொல்ல. வல்லார் - வல்லார். உளரேல்-உண்டாகில். வைகுந்தம் - பரமபதத்தை. கூடுவர்-கூடுவர் ... ... *

ஈடு-பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லாருண்டாகில், அவர்கள் பரமபதத்திலேபோய் நித்யாநுபவம்பண்ணப்பெறுவரென்கிறார்.

(கூறுதலித்யாதி) தன்படிகளைப்பேசப்புக்கால், ஆநந்தவல்லியிற் சொல்லுகிறபடியேபேசித் தலைக்கட்டவொண்ணாதிருக்கிறவனை. பேசவொண்ணாதொழிகிறது பாக்யமல்ல, குடக்கூத்தாடின செயலொன்றுமாயிற்று. (அம்மானை) குடக்கூத்தாலேயென்னை யநந்யார்ஹமாக்கினவனை. “விஷ்ணோர்ஜிஷ்ணோர்வஸுதேவாத்மஜஸ்ய” (விஷ்ணோர்ஜிஷ்ணோர் வஸுதேவாத்மஜஸ்ய) (கூறுதலேமேவி) “பேசிலமன்று” என்று

வேதங்கள்மீண்டவிஷயமென்று, தாமும் "பேசவொண்ணாது" என்று கைவாங்காதே, அழகிதாகப்பேசக்கடவோமென்றத்யவஸித்தார். "நான் சொல்லுவதென்சொல்லீரோ" என்று, திரியவும் "சொல்லீரென்னம் மானை" என்று தொடங்குமவரிறே. அத்யவஸித்தவித்தனையோ, கூறிற்றுமுண்டோவென்னில்; குருகூர்ச்சடகோபனன்றோ, கூறச்சொல்லவே ணுமோ; * மயர்வறமதிநல மருளப்பெற்றவர்க்குப் பேசத்தட்டுண்டோ. (கூறின்வந்தாதி) விஷயத்துக்கநுரூபமாகப்பேசித் தலைக்கட்டினவந்தாதியாயிரத்திலு மிப்பத்தையு மப்யஸிக்கவல்லாருண்டாகில் (கூடுவர்வைகுந்தமே) "அடியார்கள் குழாங்களை யுடன்கூடுவதென்றுகொலோ" என்று ஆசைப்பட்டுப்பெறாதே * ஆடியாடியாய் வ்யஸநப்படாதே, இப்பாசுரமாத்ரத்தைச்சொல்லவே, நான் ப்ரார்த்தித்துப்பெற்றபேறு பெறுவர்கள். பித்ருதநங்கிடந்தால் புத்ரனழித்து ஜீவிக்குமத்தனையிறே, ஆழ்வார்பட்டவ்யஸநம்படவேண்டா, இது கற்றார்க்கு இவர்பேற்றிலேயந்வயம்.

முதற்பாட்டில்- இவராசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடேவந்துகலந்தபடிசொன்னார்; இரண்டாம்பாட்டில்- தம்மோடேகலந்தபின்பு அவன்திருமேனியும் திவ்யாவயவங்களும் திவ்யாயுதங்களும் நிறம்பெற்றதென்றார்; மூன்றாம்பாட்டில்-தம்மோடேகலந்து தன்ஸத்தைபெறுதல், இல்லையாகில்லையாம்படியாய்வந்து கலந்தானென்றார்; நாலாம்பாட்டில் - இவனுக்கு த்ருஷ்டாந்தமாகச்சொன்னவை நேரில்லாமையாலே, அவற்றைநிக்ஷித்துச்சேர்த்தநுபவித்தார்; அஞ்சாம்பாட்டில்-அதுதானுமுபமாநமாக நேரில்லாமையாலே, அவற்றைக்கழித்து உபமேயந்தன்னையே யநுபவித்தார்; ஆறாம்பாட்டில் - இப்படிவிலக்ஷணனவன், முக்தன்தன்னையநுபவிக்குமாபோலே தானென்னையநுபவித்தானென்றார்; ஏழாம்பாட்டில்- தமக்காக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணினானென்றார்; எட்டாம்பாட்டில் - அவனையென்றாற்பேசமுடியாதென்றார்; ஒன்பதாம்பாட்டில் - துணைதேடிக்கொண்டு, திரியவும் பேசுகையிலே யுபக்ரமித்தார்; பத்தாம்பாட்டில் - "இப்படிகளாலென்னோடேகலந்தவிம்மஹாகுணமொன்றையும்பேச" என்றால் சாலமிறுக்குடைத்தென்றார்; நிகமத்தில - இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்... ... ...*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (கூறுதலித்யாதி) "கூறுதல்வல்லாருளரேற்கூடுவர்வைகுந்தம்" என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (இத்திருவாய்மொழியையித்யாதி)

ஒன்றுகூறுதலாக-ஒருகுணத்தையுஞ்சொல்லி முடியவொண்ணாதவனை யிறுப்தார்த்தம்விவக்ஷித்து, அத்தால்பலிதமாகு (தன்படிகளையித்யாதி) ஆநந்தவ

ல்லியிற்சொல்லுகிறபடியே யென்றது - "யதாவாவ:" (யதோவாச:) இத்யாதியைப்பற்ற. (குடக்கூத்தாடினசெயலொன்றும்) குடக்கூத்தாடினது முதலானவேறவதாரத்திற்செயல்கள். அப்படிகுணங்களாலே ஜயித்திருக்குமோவென்ன (விஷ்ணோரித்யாதி) கர்ணபர்வணிகர்ணவாக்யமிதம், பூர்வமேவலிகிதம் "ஒன்றுடையவன்" இத்யத்ர.

"கூறுதலே" என்ற ஏவகாரார்த்தம் (பேசநிலமித்யாதி) அப்படி யத்யவஸித்தாரோவென்ன (நான்சொல்லுவதித்யாதி) கூறுகைக்குஹேதுவேதென்ன (மயர்வறவித்யாதி)

"அம்மானை-கூறினவந்தாதி" இதிபதஸங்கதிம் ஸூசயிதாயாஹ (விஷயத்துக்கித்யாதி)

(உண்டாகிலிதி) "ஸஹஹாதாஸாஸ்ஹ:" (ஸஹஹாத்மாஸாதர்லப:) இதிபாவ:. "வைகுந்தமே-கூடுவர்" இத்யவதாரணார்த்தம் (அடியாடியாயித்யாதி) இவனைப்போலே யாற்றுமையின்றிக்கேயிருக்கப்பெறக்கூடுமோவென்ன (பித்ருதநமித்யாதி) அழித்து-செலவுசெய்து. (ஸ்ரீவிக்ரமத்தனையிறே) அப்படியேயென்றுகூட்டுவது.

நிறம்-ஔஜ்ஜ்வல்யம். நேர்நில்லாமை-ஸாக்ஷாதுபமாநமாயிராமை. சிக்கித்துச்சேர்த்து-விஶேஷணயுக்தமாக ஸங்கதமாக்கி. இம்மஹாகுணம்-ஸௌஶீல்யம். சாலமிறக்குடைத்து-அதிவ்யாஸவத். கூறுதல்-சொல்லுதல். கூறுதலேமேவி-சொல்லுவதாகவே யத்யவஸித்து. கூறுதல்வல்லார்-சொல்லவல்லார்.

க்ரமேணாந்வய:...*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(அந்தாமத்தன்புசெய்து.)

ஸ்வப்ராப்த்யாஸக்திகாங்க்ஷம் லஸகடிததயிதம் விஸ்ப்புரத்துங்கமூர்த்திம்
ப்ரீத்யுந்மேஷாதிபோக்யம் நவநவஸுபகம் நைகஸம்ஶ்லேஷத்ருஶ்யம்
ஸ்வஸ்வாத்மஸ்ப்ருஶ்யம் திவ்யஸம்ஸ்கார ஸம்ஸ்ம்ருதிநாமாங்க்ருத்யம்
விஶ்வாவாப்த்யாதிவ்ருத்த்யம் ஜயாவதிமணவ்யாதஸீதம்த்ருஷ்டம் ॥ (௧௭)

(ஸ்வப்ராப்த்யாஸக்திகாங்க்ஷம்) அந்தாமத்தன்புசெய்தென் னாவிசேரம்மானுக்கித்யாதி-ஆஶ்ரிதரோடே ஸம்ஶ்லேஷிக்கையாலே நிரதிசயதிப்தியுக்தனுமாய்; (லாகடிததயிதம்) திருவிடமேமார்வம்-பெரியபிராட்டியாருக்கு வாஸஸ்தாநமான திருமார்வையுடையனுமாய்; (விஸ்ப்புரத்துங்கமூர்த்திம்) மின்னுஞ்சுடர்மலைக்கு-தேஜிஷ்ட்டமாய் மலைபோலேவளர்ந்த திருமேனியையுடையனுமாய்; (ப்ரீத்யுந்மேஷாதிபோக்யம்) அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே-ப்ரீத்யதிசயத்தாலே ப்ரதிக்ஷணமபூர்வபோக்யனுமாய்; (நவகரலக்ஷணம்) காரார்கருமுகில்

போலென்னம்மான்-வர்ஷுகவலாஹகம்போலே காருண்யரஸத்தைவர்ஷிக்கும்ஸ்வபாவனுமாய்; (நைகபூஷாதிச்ரும்யம்) பலபலவேயாபரணம் பேரும்பலபலவே-பஹுவிதபூஷணநாமதேயாதிகளாலே பூஷிதனுமாய்; (ப்ரக்யாதப்ரீதிலீலம்) பாம்பணைமேலித்யாதி-ப்ரஸித்தமாய் ப்ரீதிரூபமான வ்ருஷகணதமநஸப்தஸாலபஞ்சநாதி லீலாவ்யாபாரங்களையுடையனுமாய்; (தாபிலபரஸம்) என்னுள்கலந்தானைச் சொன்முடிவுகாணேன்-ஆச்ரிதவிஷயத்தில் நிர்வசநீயமான ப்ரேமத்தையுடையனுமாய்; (ஸத்குணோதஹ்ருத்யம்) எல்லையில்சீரென்கருமாணிக்கச்சுடரை-அஸங்க்யேய கல்யாணகுணங்களையுடைத்தாகையாலே நிகரில்லாத நீலரத்நம்போலே ஹ்ருத்யனுமாய்; (விச்வவ்யாவ்ருத்தசித்ரம்) ஆணல்லன்பெண்ணல்லனல்லாவலியுமல்லன்-லோகத்திற்காணப்படுகிற ஸ்த்ரீபுருஷாதி விலக்ஷணாத்யாச்சர்யரூபனுமாயிருக்கிற வெம்பெருமானை, "அந்தாமத்தன்புசெய்து" என்கிறதசகத்திலே யாழ்வார், "தம்மோடேவந்துகலக்கையாலே புதுக்கணித்ததிவ்யாயுததிவ்யாபரணங்களையுடையனானான்" என்று அதிப்ரீதியோடே, கோபாலகுலத்திலேவந்து பிறந்து தங்களோடேவந்து கலக்கையாலே மிகவும் நிறம்பெற்றகுண விக்ரஹாதிகளையுடைய க்ருஷ்ணனை ஸ்ரீகோபிமாரதிப்ரீதியோடே யநுபவித்தாற்போலேயநுபவித்தருளினாரென்கிறார்..*

திருவாய்மொழிநூற்றந்தாதி.

அந்தாமத்தன்பாலடியார்களோடிறைவன்
வந்தாரத்தான்கலந்தவண்மையினால் - சந்தாபம்
தீர்ந்தசடகோபன்றிருவடிக்கேநெஞ்சமே
வாய்ந்தவன்பைநாடோறும்வை (கரு)

(அந்தாமத்தன்பால்) இதில் - * அடியாடியில்விடாய்தீர * அடியார்கள்குழாங்களோடேவந்து கலந்தபடியைப்பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; இவருடையவார்த்திதீரவந்துகலந்து * வாட்டமில்புகழ்வாமநனானவன், ஆயிரமாண்டு முதலையின்கையிலே யகப்பட்டு இடர்பட்டயானையினிடரைச் சடக்கெனவந்துபோக்கினாற்போலே, * ஆடியாடியில் தாம்பட்ட இடரெல்லாம்போம்படி, ஆசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடே வந்து ஸம்ச்லேஷித்தருளக்கண்டு, தம்மோட்டைக்கலவியாலே அவன்வடிவிலே பிறந்த புதுக்கணிப்பைமண்டியநுபவித்து ப்ரீதராய்ச்செல்லுகிற * அந்தாமத்தன் பிலர்த்தத்தை * அந்தாமத்தன்பாலே யருளிச்செய்கிறாரென்கை.

(அந்தாமத்தன்பால்) அழகிய ஸ்ரீவைகுண்டதாமத்திற்பண்ணும் விருப்பத்தாலே. அத்தேசத்திலு மத்தேசிகரிடத்திலுமுண்டான அதிஸ்நேஹத்தாலே. (அடியார்களோடிறைவன்) அடியார்களுண்டு-அஸ்த்ரபூஷணப்ரமுகராயுள்ள நித்யஸூரிகள், அவர்களோடேகூட ஸர்வேச்வரன் ஸபரிகரனாயுளனாம்படி ஸம்ச்லிஷ்டனாய். "அந்தாமத்தன்புசெய்தென்னாவிசேரம்மானுக் கந்தாமவாழ்முடி சங்காழி நூலாரமுள" என்றத்தைநினைக்கிறது. (வந்தாரத்தான்கலந்த வண்மையினால்) ஸர்வஸ்மாத்பரனான தான் பரமபதத்தினின்றும், * பரமாபதமாபந்நான் இவரிருந்

நவிடத்தளவும்வந்து பரிபூர்ணமாக ஸம்ஶ்லேஷித்த ஔதார்யத்தாலே. (சந்தாப ந்தீர்ந்த) "விஶோபிதஜடாஜூட: -ஶுத்த ஸ்படிகஸந்நிபௌ" (விஶோபிதஜடாஸ்ஸ்காந்த: -ஶுத்த ஸ்படிக சந்திரநிபௌ) "ஶ்ரீவத்ஸவக்ஷஸம்" (அதி வராமஶ்யாமரூபே) என்னும்படி "செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய்செ ங்கமலம் செந்தாமரையடிக்கள் செம்பொன் திருவுடம்பே" என்றும், "திருவுட ம்புவான்சுடர்-என்னுள்கலந்தானுக்கே" என்றும், "என்னுள்கலந்தவன் செங்க னிவாய் செங்கமலம் மின்னுஞ்சுடர்மலைக்குக்கண்பாதங்கைகமலம்" என்றும், "எ ப்பொருளுந்தானாய் மரதகக்குன்றமொக்கும்" என்றும் - வாட்டமில்புகழ்வாமன ன் மலைபோலேபெருத்து அவயவஸௌந்தர்யாதிகளையு முடையனாயிருக்கிறபடி யை யநுபவித்து, ஸந்தாபமானது ஸவாஸநமாக நிவ்ருத்தமான சந்தாபமாவது- * ஆடியாடியில், வாடுதல், இரக்கம், வெவ்வுயிர்த்தல், வாய்வெருவுதல், உள்ளமுக வுருகுதல், உள்ளுளாவியுலருதல், தனெஞ்சம்வேதல் தொடக்கமானவை. * உள் ளுளாவி யுலர்ந்ததிற "அல்லாவியுள்கலந்த" என்றும், "என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தான்" என்றும், "என்னுள்கலந்தவன்" என்றுமிறேயருளிச்செ ய்தது. (சந்தாபந்தீர்ந்தசடகோபன் திருவடிக்கே நெஞ்சமே வாய்ந்தவன்பைநா டோறும்வை) * வாரேனோர்தனிக்கலைவன் * அந்தாமத்தன்புசெய்யும்படியான ஆழ் வார்திருவடிகளிலே "உன்றன்மொய்கழற்கன்பை-முயல்கின்றேன்" என்கிறபடி யே மநஸ்ஸே ஸாஸங்கதமான ஸங்கத்தை நித்யமாக நிக்ஷிப்தமாக்கு. நிதியைஅ டியிலேயிட்டு வைப்பாரைப்போலே, அன்பை யடியிலேயிட்டுவை..................*

இரண்டாம்பத்தில் - ஐந்தாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக-திருவாய்மொழி-௰௫—பாட்டு-௱௬௰௫.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

ஆறாந்திருவாய்மொழி.

வைகுந்த - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(வைகுந்தா) ஆழ்வார், தம்மோடு கலந்தகலவியா லெம்பெருமானுக்குவந்த ப்ரீதியைப்பேசுகிறார் ....*

பன்னீராயிரப்படி.

ஆறாந்திருவாய்மொழியில், தம்மோடு ஸம்ஶ்லேஷித்த ப்ரீத்யதிசயத்தாலே அத்யந்தம் ஹ்ருஷ்டனான ஸர்வேஶ்வரன், "இவர் நிகர்ஷாநுஸந்தாநத்தாலே யகலத்தேடி யித்தைக்குலைக்கிற்செய்வதென்" என்கிற அதிசங்கைபண்ணி, தன்விஶ்லேஷபீருத்வத்தை யிவருடையதிருவுள்ளத்திலே ப்ரகாசிப்பிக்க, "நம்முடையவளவில் இவனபிநிவேசமிருந்தபடியென்" என்று அத்யந்தஹ்ருஷ்டராய், இவனுடைய அதிசங்காநிவ்ருத்யர்த்தமாக; தாமவனைச் சிக்கெனப்பற்றினமையையும், அவன்றான் அநந்யபராய்த் தம்மோடேகலந்தபடியையும், ஸ்வாநுபவத்தைக்கொடுத்த ஔதார்யாதிசயத்தையும், அவ்வௌதார்யமடியாகத்தாம் விடமாட்டாமையையும், லப்தபோகரான தமக்குவிட யோக்யதையில்லையென்னுமிடத்தையும், இவ்வநுபவஸித்தியால் தமக்குவந்த பூர்த்தியையும், அந்தலாபம் தம்மளவில்நில்லாமல் ஸம்பந்தி ஸம்பந்தி பர்யந்தமானபடியையும், இதுக்கு விஶ்லேஷம்பிறவாமையில் தமக்குண்டான அபேக்ஷையையும், க்ருஷிபண்ணினவன்றானித்தைக்குலையானென்னுமிடத்தையும், அவன்குலைக்கிலும் தாம் விடக்ஷமரல்லரென்னுமிடத்தையுமருளிச்செய்து, அவனுடைய விஶ்லேஷாதிசங்கையை நிஶ்ஶேஷமாக நிவர்த்திப்பித்தருளுகிறார்..*

ஈடு.

* ஆடியாடியிலார்த்திதீரவந்து ஸம்ஶ்லேஷித்தபடிசொல்லிற்று-* அந்தாமத்தன்பு; அந்தஸம்ஶ்லேஷத்தால்பிறந்தப்ரீதி அவனதென்னுமிடஞ்சொல்லுகிறது-இத்திருவாய்மொழி. "ப்ரணயப்ரீத்யநுஸந்தாநங்கணிது" என்று ஆளவந்தாரருளிச்செய்யும்படி-ஆழ்வார்விஷயமாக ஈஶ்வரனுக்குண்டான ப்ரீதிசொல்லுகிறதிதில். * ஊனில்வாழுயிரிலே - ஆழ்

வார்தாம் பகவதநுபவம்பண்ணித் தமக்கவன்பக்கலிலேயுண்டான ப்ரே
மமவனளவில் பர்யவஸியாதே, " அடியார்கள் குழாங்களை யுடன்கூடு
வதென்றுகொலோ " என்று-ததீயரளவும்சென்றபடிசொல்லிற்று; இத்
திருவாய்மொழியில்-ஸர்வேஶ்வர னாழ்வார்பக்கல் பண்ணின ப்ரேமமிவ
ரொருவரளவன்றிக்கே, ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் வெள்ளமிடுகிறப
டிசொல்லுகிறது. இரண்டுதலைக்கும் ரஸமதிசயித்தால் ஸம்பந்திஸம்பந்தி
களளவும் செல்லுமிறே; " எமர்கீழ்மேலெழுபிறப்பும் விடியாவெந்நர
கத்தென்றும் சேர்தல் மாறினர் " என்கிறாரிறே. உபயவிபூதியுக்தனாய்
ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஸர்வப்ரகாரபரிபூர்ணனான தான்தன்படி
களொன்றும் குறையாதபடிவந்திவரோடே ஸம்ஶ்லேஷித்து, அந்தஸம்
ஶ்லேஷந்தான் "தன்பேறு" என்னுமிடந்தோற்ற ஹ்ருஷ்டனாய், "அநா
திகாலம் * எதிர்சூழல்புக்குத்திரிந்தவஸ்துவை ஒருபடி ப்ராபிக்கப்பெறு
வோமே, இவர்தாமினி நம்மை விடிற்செய்வதென் " என்றதிசங்கைபண்
ணி யவனலமாக்கிறபடியைக்கண்டு, " நீயிங்ஙன்படவேண்டா " என்று
அவனதிசங்கையைப்பரிஹரித்து அவனையுளனாக்குகிறார்; [வைதேஹி
ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ] [வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே
மயாஸஹ] என்றாற்போலேயாயிற்று இதில் ரஸமும்; மைதிலி, உன்னைய
றிந்தாயே, நம்மையறிந்தாயே, கலங்கிறதேசமறிந்தாயே யென்றாரிறே
பெருமாள்..*

ஜீயர் அரும்பதம்.

வைகுந்தமணிவண்ணன் ப்ரவேசே, வ்ருத்தாநுவாதபூர்வகமாக விதக்
குஸங்கதி (ஆடியாடியிலித்யாதிவாக்யத்வயே) இதுக்காப்தஸம்வாதம் (ப்ரணயி
ப்ரீதித்யாதி) விவரணம் (ஆழ்வார்விஷயமாகவித்யாதி) ப்ரணயிநப்ரீதிரென்றபடி,
நதுப்ரணயிநிப்ரீதி. ப்ரணயியான வீஶ்வரனுக்காழ்வார்விஷயத்திலுண்டான ப்ரீ
தியைச்சொல்லுகிறதென்றபடி. ஆக. (ஆடியாடியிலென்றுதொடங்கி யிவ்வளவு
ம்) " உன்னை நான்பிடித்தேன் கொள்சிக்கெனவே " என்றத்தைப்பற்ற ஆளவந்
தார் நிர்வாஹம்.

" எமர்கீழ்மேலெழுபிறப்பும் " என்றத்தைப்பற்ற நிர்வாஹாந்தரம் (ஸைனி
ல்வார்மூயிரிலேயித்யாதி) இதுக்கடியேதென்ன (இரண்டுதலைக்குமித்யாதி) உக்தத்து
க்கு நியாமகஸப்தம் (எமர்கீழ்மேலித்யாதி) விடியா-விடியாதேயிருக்கிற.

ஆளவந்தார் நிர்வாஹவிவரணம் (உபயவிபூதியுக்தனாயித்யாதி) ஆக, இப்ப
டி யிரண்டு நிர்வாஹமாதல். அன்றிக்கே, நிர்வாஹாந்தரம்; * கேசவன்தமரோடே
புநருக்தமாகையாலே.

ஏகநிர்வாஹமாதல். இப்போது வாக்யங்களுக்கின்னேஸங்கதி- (ஆடியாடி
யிலித்யாதி) வாக்யசதுஷ்டயத்துக்கும் முன்னேசொன்னதேயவதாரிகை. பகவத்

ப்ரீத்யதிசயசரமாவதிம்ஸதிர்ஸநமாஹ (ஊனில்வாழுயிரிலேயித்யாதி) ஸம்பந் திஸம்பந்திகளளவும் வெள்ளமிடுகைக்கடியேதென்ன (இரண்டுதலைக்குமித்யாதி) உக்தத்துக்கு நியாமகசப்தமேதென்ன (எமரித்யாதி) ஆனாலதிசங்காபரிஹாரங்க ளுக்கு ப்ரஸங்கமேதென்ன (உபயவிபூதீத்யாத்) இத்யேக நிர்வாஹபக்ஷே வாக்யா வதாரிகாத்ரஷ்டவ்யா. (உபயவிபூதியுக்தனுயித்யாரப்ய, த்ருஷ்டனுயித்யந்தம்) * அந்தாமத்தன்பில் ப்ரமேயானுவாதம். (அநாதிகாலமித்யாரப்ய, அலமாக்கிறப டியைக்கண்டித்யந்தம்) பூர்வோத்தர ப்ரகரணுநுகுண்யேநார்த்தஸித்தப்ரமேயம். எதிர்சூழல்புக்கு - அவதரித்து. நாமெதிர்சூழல்புக்கென்றபடி. (ப்ராபிக்கப்பெறு வோமேயென்று) அநந்தரம், “ அல்லாவியுள்கலந்த ” என்றும், “ என்முடிவுகா ணுதே” என்றும்,இவர்சொன்னர், *வளவேழுலகுதலையெடுத்துஇத்யத்யாஹார்யம்

இந்தஸம்ஸ்லேஷரஸாதிசயத்துக்கும், அத்தாலே யதிசங்கைபண்ணினதுக் கும் த்ருஷ்டாந்தம் (வைதேஹீத்யாதி) அயோத்யாகாண்டே சதுர்ணவதிதமே, “ வைதேஹீவியாணாவாநாநாவாக்காயஸம்யதா ” (பஸ்யந்திவிதாங்பா வாங்மநோவாக்காயஸம்யதா) இத்யுத்தரார்த்தம். ரமியாநிற்கச்செய்தே, “ ரமஸேகச்சித் ” (ரமஸேகச்சித்) என்கையாலே - நீர்வாய்ப்பும் நிழல்வாய்ப்புமான சித்ரகூட பரிஸரத்திலழகையும் தங்கள்சேர்த்தியழகையுங்கண்டு, “ இதுதொங்க ப்புகுகிறதோ ” என்று அதிசங்கைபண்ணினமை தோற்றுகிறது. அப்படிபெருமா ளதிசங்கைபண்ணினாற்போலே, இங்குமப்படியதிசங்கைவிளைந்ததென்றபடி. ஆழ் வார்விஷயத்தி லீஸ்வரனுக்கதிசங்காஹேதுவிரண்டு - (த்ருஷ்டனுய்-அதிசங்கைப ண்ணி) என்கையாலே - ஸம்ஸ்லேஷஜநிதப்ரீதியும்; “ அல்லாவியுள்கலந்த ” என் றும், “ என்முடிவுகாணுதேயென்னுள்கலந்தானை ” என்றுஞ்சொன்ன ஸ்வகைச் யாநுஸந்தாநமும். அதிசங்கையைப்பரிஹரித்ததுக்கு சப்தம் - “உன்னைநான்பிடித் தேன்கொள்சிக்கெனவே ” “ உன்னையெங்ஙனம் விடுகேன் ” இத்யாதிகள். எடுத் தஸ்லோகத்துக்குத் தாத்பர்யம் (மைதிலியித்யாதி) “ யத்விஸ்மயஸ்திமிதமஸ்தமிதா ந்யபாவம் ” (யத்விஸ்மயஸ்திமிதமஸ்தமிதாங்யபாவம்) என்னும்படியான கலவி யிலுண்டான ரஸத்தாலே தன்னையுமெதிர்த்தலையையும் கலக்கிறதேசத்தையும்மற க்கும்படியான தசைபிறக்குமிறே; அப்போது அத்ருஷ்டவசத்தாலே யொருதலைக் குக்கிஞ்சித் அறிவுபிறந்தால் மற்றைத்தலைக்குச்சொல்லும் வார்த்தையிறேயிது. நா னிதெல்லாம்மறந்தே னித்தனைபோதும், உனக்குத்தானுணர்த்தி யுண்டோவென்ற படி. இங்ஙனல்லவாகில், அந்யபரனை ஸம்போதிக்குமாபோலே ஸம்போதிக்கவும், வேறே சிலரவமுடையாரைச் சொல்லுமாபோலே “ மயா ” என்னவும், தேசப்ர ஸ்நம்பண்ணினபேருக்குச் சொல்லுமாபோலே “ சித்ரகூடே ” என்னவுங்கூடாதி றே யென்று தாத்பர்யம். உத்தரார்த்தத்தில் (பாவாநிதி) பாவங்களாவன - பேர கோபகரணங்கள். இங்கும்-முன்போலேபாவம். மநோவாக்காயங்கள் ரஸமாத்ர நியதமாயிறே யுனக்கிருக்கிறது. காயத்துக்கு நியதியாவது-ரஸோத்பேதமானபுள காதிகள்...*

ஆறாந் திருவாய்மொழி.

முதற்பாட்டு.

வைகுந்தாமணிவண்ணனே யென்பொல்லாத்திருக்குறளாவென்னு
வைகும்வைகறோறுமமுதாயவானேறே [ண்மன்னி
செய்குந்தாவருந்தீமையுன்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத்தீமைகள்
செய்குந்தாவுன்னைநான்பிடித்தேன்கொள்சிக்கெனவே.

ஆறாயிரப்படி.

ஸ்ரீவைகுண்டநிலயனாய், ஆச்ரிதஸுலபனாய், நிரவதிகஸௌந்தர்யத்தையுடையனாய், என்னுள்ளேபுகுந்திருந்தெனக்கபூர்வவத்பரமபோக்யபூதனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், ஆச்ரிதருடைய வநுபவைகவிநாச்யமான ஸமஸ்தபாபங்களையும்போக்கி ப்ரதிகூலர்க்கு துக்கங்களையும் விளைவிக்கும் ஸ்வபாவனாய், நிர்மலனாயிருந்த வுன்னை பரமப்ராப்யமாகப்பற்றினேனென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், நிரதிசயபோக்யனாய் அநிஷ்டநிவர்த்தகனான வுன்னை நான் சிக்கெனப்பற்றியிருக்கிறேனென்று திருவுள்ளம் பற்றென்கிறார்.

வைகுந்தா-பரமபதநிலயத்வத்தாலே அஸாதாரணசேஷியாய். மணிவண்ணனே-நீலரத்நம்போன்ற வடிவையுடையனாகையாலே ஸுலபனாய், என்பொல்லாத்திருக்குறளா - தர்சநீயமான வாமநவிக்ரஹத்தையுடையனாகையாலே போக்யனாய். இவ்வாகாரத்ரயத்தையும் ப்ரகாசிப்பித்துக்கொண்டு என்னுள்-என்னெஞ்சுக்குள்ளே. மன்னி-ஸ்த்திரஸம்ச்லேஷம்பண்ணி. வைகும்-இருக்கிற. வைகல்தோறும்-காலந்தோறும். அமுதாய-நித்யபோக்யமாய்க்கொண்டு. வானேறே-நித்யஸூரிஸமாநமாம்படி யநுபவிப்பிக்கிறமேன்மையையுடையனாய். செய்-தானேசெய்துகொள்ளப்பட்டு. குந்தா-பலப்ரதாநத்தில்குந்தாதே. அரும்-பரிஹரிக்கவரிதான. தீமை-கொடியபாபங்களை. உன்னடியார்க்கு-உன்னோடு சேஷத்வஸம்பந்தமுடையார்க்கு. தீர்த்து-தீர்த்து. அவைப்ரதிகூலரான அசுரப்ரக்ருதிகள்பக்கலிலேயாம்படி அசுரர்க்கு-அவர்களுக்கு. தீமைகள்-அநர்த்தத்தை. செய்-விளைக்கும். குந்தா-குந்தமாகிற ஆயுதத்தையுடையவனே. உன்னை-இப்படிபோக்யபூதனாய் அநிஷ்டநிவர்த்தகனாயாச்ரிதபக்ஷபாதியானவுன்னை. நான் - உன்னினிமையறிந்து உன்னையொழியச்செல்லாதநான். இனி, சிக்கென-விடாதபடி ஸ்த்திரமாக. பிடித்தேன்-பற்றினேனாக. கொள்-திருவுள்ளம்பற்று.

“செய்கும், தாவரும்” என்றுசொல்லாய்-செய்யப்பட்டுக்கடக்கவரியதென்றுமாம். “குந்தமென்று-மரமாய், அதின்வெளுப்பையிட்டு சுத்தியைக்காட்டுகிறது” என்றுஞ்சொல்லுவர். பொல்லாவென்று-விபரீதலக்ஷணையாலே அழகைச்சொல்லுகிறது. என்பொல்லாவென்று - தம்மையநந்யார்ஹராக்கிற்று அவ்வழகாலேயென்றுகருத்து..*

ஈடு-முதற்பாட்டு.

முதற்பாட்டில், * அந்தாமத்தன்பிலே-ஆழ்வாருடனேவந்துகலந்து தான்பெரும்பேறுபெற்றானாயிருக்கச்செய்தே, இவர், “அல்லாவியுள்கலந்த” என்றும், “என்முடிவுகாணாதே யென்னுள்கலந்தான்” என்றும்-தம்முடைய நைச்யத்தை யநுஸந்தித்தவாறே, “* வளவேழுலகு தலையெடுத்தின்னமிவர் நம்மைவிடிற்செய்வதென்” என்றெம்பெருமானுக்குப்பிறந்த அதிசங்கையை நிவர்த்திப்பிக்கிறார்.

(வைகுந்தா) “நித்யவிபூதியுக்தன் தம்முடனேவந்துகலந்தான்” என்று ஹ்ருஷ்டராகிறாரொன்னுமிடந்தோற்றுகிறது.

அவனுடைய முதற்பேரைச்சொல்லுகிறார். ஸ்ரீஜநகராஜன்திருமகள் “ஆர்யபுத்ர” என்னுமாபோலேயும், திருவாய்ப்பாடியில் பெண்கள் “க்ருஷ்ண” என்னுமாபோலேயும் (வைகுந்தாவென்கிறார்) போகமுத்கூலமானால் பரஸ்பரநாமக்ரஹணத்தாலே தரிப்பதொன்றுண்டிறே. (மணிவண்ணனே) அணைத்தபோதை ஸ்பர்ஸத்தாலே திமிர்த்துச்சொல்லுகிறார். நீலரத்நம்போலே குளிர்ந்தவடிவையுடையவனே. (என்பொல்லாத்திருக்குறளா) மஹாபலிபக்கலிலே யிரப்பாளனாய் நின்றாற்போலே காணுமிவரைப்பெறுகைக்குச் சிறும்பியிரப்பாளனாய்நின்றதிலே. “அழகிது” என்னில்-நாட்டொப்பாமென்று, அழகில் விஜாதீயதையைச்சொல்லுதல்; கண்ணெச்சில்வாராமைக்குக் கரிபூசுகிறானொன்னுதல். வைகுந்தாவென்று-மேன்மைசொல்லிற்று; மணிவண்ணனேயென்று-வடிவழகு சொல்லிற்று; என்பொல்லாத்திருக்குறளாவென்று-ஸௌலப்யஞ்சொல்லிற்று; இம்மூன்றுங்கூடினதாயிற்று-பரத்வமாவது. (என்னுள்மன்னி) இந்த்ரன் ராஜ்யலாபம்பெற்றுப்போனான், மஹாபலி ஔதார்யலாபம்பெற்றுப்போனான், அவ்வடிவழகுக்கூற்றிருந்தது இவர்நெஞ்சிலேயாயிற்று. என்னுடையஹ்ருதயத்தேவந்து நித்யவாஸம்பண்ணி. (வைகும்வைகல்தோறு மமுதாய) கழிகிறகாலந்தோறு மெனக்கபூர்வாம்ருதவத் போக்யனானான். (வானேறே) நித்யஸூரிகளோடேகலந்து அவர்களைத்தோற்பித்துமே ஞணித்திருக்குமாபோலேயாயிற்று இவரோடேகலந்து இவரைத்தோற்பித்திருந்தவிருப்பு. ஏறென்கிறது-பின்பு மவனேற்றமே விஞ்சியிருக்கை. தம்முடைய வநுபவவிரோதிகளைப்போக்கினபடி சொல்லுகிறார் (செய்குந்தாவருந்தீமை) செய்யப்பட்டு, குந்தாவாய்-தப்பாவாயிருக்குந்தீமையென்னுதல்; அன்றிக்கே, செய்கும்-செய்யப்பட்டு, தாவரும் தீமை-கடக்கவரிதானதீமையென்னுதல். (உன்னடியார்த்யாதி) உன்பக்கலிலே நிக்ஷிப்தபரராயிருப்பார்க்கு வாராதபடிபரிஹரித்து, ஆஸுரப்ரக்ருதிகளின்மேலே போகடும்படியான சுத்தியையுடையவனே. முன்ப்ராதிகூல்யம்பண்ணினவர்கள் அநுகூலித்து நாலடிவர நின்றவாறே, பின்னை

யவர்கள் சத்ருக்கள்மேலேபோகடுமாயிற்று, "த்விஷ..." (த்விஷத்த:பாபக்ருத்யாம்) என்கிறபடியே; கடலு... பை, அவன்முகங்காட்டினவாறே மருகாந்தாரத்தி லசுரர்க... விட்டாற்போலே. அங்ஙனொருபோக்கடி கண்டிலனாகில் [உரஸாதாரயாமாஸ ...] [உரஸாதாரயாமாஸபார்த்தம்ஸஞ்சாத்யமாதவ:என்று] பகதத்தன்விட்டசக்தியை, அர்ஜுநனைத்தள்ளித் தன்னந்த:புரத்திலேயேற்றாற்போலே, தானேயிட்டுக்கொண்டநுபவித்தல் செய்யுமித்தனை. பாபங்களாவனதான்-அசேதநமாயிருப்பன சிலக்ரியா விசேஷங்களாய், அவை, செய்தபோதேநசிக்கும்; கர்த்தா அஜ்ஞனாகையாலே மறக்கும்; ஸர்வஜ்ஞனாய்நின்று பலாநுபவம்பண்ணுவிக்க வநுபவிக்குமித்தனையிறே. அவன்மார்விலே யேற்றுக்கொள்ளுகையாவது- "பொறுத்தேன்" என்னத்திருமித்தனையிறே. "அபூர்வங்காண், சக்திகாண், பலாநுபவம்பண்ணுவிக்கிறது" என்பதில், ஒருவர்வஜ்ஞன் செய்விக்கிறானென்கை அழகிதிறே. குந்தமென்று-குருந்தமென்றபடியாய், அதின்பூவெளுத்தாயிற்றிருப்பது, அவ்வழியாலே சுத்தியைநினைக்கிறது. அன்றிக்கே, குந்தாவென்று-திருநாமம்; "........" (குமுத:குந்த:குந்த:) என்கிறபடியே. (உன்னை) ஆஸ்ரிதபக்ஷபாதியானவுன்னை. (நான்) * அடியாடியில் விடாய்த்தநான். நீ உஜ்ஜீவிப்பிக்க, உன்னாலே உளேனானநான். (பிடித்தேன்கொள்) பிடித்தேனாகவே திருவுள்ளம்பற்று. முன்புஞ்சொல்லிப்போரும்வார்த்தையன்றோ விதென்ன; அங்ஙனல்ல (சிக்கெனவேபிடித்தேன்கொள்) என்னைப்பெறுகைக்கு பூர்வஜனை நீவிடிலும் விடாதபடி நான்பிடித்தேனாகவே திருவுள்ளம்பற்றவேணும். அவனை * மாசுச: என்கிறார் ....*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (வைகுந்தா) "உன்னைநான்பிடித்தேன்கொள்சிக்கெனவே" என்றத்தைப்பற்ற, அதிசங்காப்ரசக்திகதநமுகேந அவதாரிகை (அந்தாமத்தன்பிலேயித்யாதி)

• "என்னுள்மன்னி" என்றத்தையுமுட்கொண்டு, பதப்ரயோகத்துக்குபாவம் (நித்யவிபூதித்யாதி) ஸம்போதநத்துக்குபாவம் (அவனுடையவித்யாதி) யத்வா, நாமாந்தரங்களிருக்க, முந்துறவித்தைச்சொன்னதுக்கு பாவமாதல். இப்படிநாமக்ரஹணம்பண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம் (ஸ்ரீஜநகராஜனித்யாதி) (க்ருஷ்ண என்னுமாபோலேயென்ற) இவ்விடத்திலே - "க்ருஷ்ணஸம்பவுநந்தேஸம்ஸௌ... ஜனௌமௌவீஜநஸ்லக்ஷ்ணங்க்ருஷ்ணநாமேவாநமேவாந:" (க்ருஷ்ணஸம்ப்ரசந்த்ரமஸம்கௌமுதீகுமுதாகரம் । ஜநௌகோபீஜநஸ்த்வேகம் க்ருஷ்ணநாமபுந:புந:) என்றத்தையருளிச்செய்வர். க்ருஷ்ண:கௌமுதீகுமுதாகரம் சந்த்ரமஸம்ஜநௌ, கோபீஜநஸ்த்வேகம் க்ருஷ்ணநாமபுந:புநர்ஜகாவித்யந்வய:, [கௌமுதீகு

முதாகரம்] நிலவுக்குமாம்பலுக்கும் நிர்வாஹகனை. நாமக்ரஹணம்பண்ணுகிறதெ ஆக்காகவென்ன (போகமித்யாதி)

* ஸம்ஶ்லேஷஸமயத்திலே “ மணிவண்ணனே ” என்கிறதுக்குபாவம் (அணைத்தபோதித்யாதி) சப்தார்த்தம் (நீலரத்நமித்யாதி)

இப்போது “ குறளா ” என்கிறதுக்குபாவம் (மஹாபலீத்யாதி) சிறும்பி- ஸங்கோசித்து. “ பொல்லா ” என்றதுக்குபாவம் (அழகிதென்னிலித்யாதி) கண்ணெச்சில் - த்ருஷ்டிதோஷம். (வைகுந்தாவென்று மேன்மைசொல்லிற்றித்யாதி வாக்யத்ரயேண) ஏவம்பூதவஸ்துவை விடப்போமோவென்று சொல்லிற்றாயிற்று.

“ திருக்குறளாவென்னுள்மன்னி ” என்றதுக்குவாஸனை (இந்த்ரனித்யாதி) சப்தார்த்தம் (என்னுடையவித்யாதி)

இப்போது “ வானேறே ” என்றதுக்குபாவம் (நித்யஸூரிகளோடேயித்யாதி) தாத்பர்யாந்தரம் (ஏறென்கிறவித்யாதி)

மேலுக்கவதாரிகை (தம்முடையவித்யாதி) குந்தா - தப்பாவாய், வருந்தீமை-வருகிறதீமை யிதிப்ராதமிகார்த்த:. அர்த்தத்வயத்தாலும்பலிதம்-அநுபவித்து மீளுதல், ஸ்வயத்நத்தால் கடக்கலாதல் செய்யவரிதாயிருக்குமென்றபடி. “ அடியார் ” என்று தாதாத்விகமான வாநுகூல்யத்தையுடையவர்களைக் காட்டுகிறதென்கிறார் (முன்னித்யாதி) யத்வா, இத்தால் பலிதம் (முன்னித்யாதி) ஆதல். “சத்ருக்கள்மேலே பொகடும்” என்னுமதுக்கு ப்ரமாணம் (த்விஷந்தஇத்யாதி) அப்படிசத்ருக்கள்மேலே பொகட்டவிடமுண்டோவென்ன (கடலுக்கித்யாதி) அவன்-ஸமுத்ரன். “ [illegible] ” (முமோசதம்ஸாந்தி ப்தம்மௌஸாகரதர்ஸநாத்) என்றத்தைப்பற்ற (மருகாந்தாரத்திலேயென்றது) சத்ருக்களில்லாதவுத்தமாதிகாரிகளுக்குச்செய்வதென்னென்ன (அங்ஙனொருவித்யாதி) தன்னந்த:புரத்திலேயென்றது- “ [illegible] ” (உரஸாதாரயாமாஸபார்த்தம்ஸஞ்சாத்யமாதவ) என்கிறஶ்லோகத்தில், “ [illegible] ” (மாதவ:) என்றத்தைப்பற்ற. அந்த:புரம்-திருமார்வு. அவனேயிட்டுக்கொள்ளுகையாவதேதென்ன (பாபங்களித்யாதி) இத்தால்பலிதம் (அவன் மார்விலேயித்யாதி)

அவன் பலப்ரதனாகவேணுமோ, க்ரியாதிகள் பலப்ரதமாளுலோவென்ன (அபூர்வங்காணித்யாதி) ஸர்வஜ்ஞன் செய்விக்கிறனென்றது- “ [illegible] ” (பலமதஉபபத்தே:) இத்யாதியைப்பற்ற. “ [illegible] ” (க்ரியாதச்சக்திர்வா) இத்யாதிகமநுஸந்தேயம். “ குந்தா ” என்கிறபதம்-கீழ், சக்தியோகத்தைச் சொல்லும்படி யெங்ஙனேயென்ன (குந்தமென்றித்யாதி)

தாத்பர்யாந்தரம் (சீவுஜ்ஜீவிப்பிக்கவித்யாதி) உஜ்ஜீவிப்பிக்கை- * மயர்வறமதிநலமருளுகை. கொள்-கொண்டருளவேணும். திருவுள்ளம்பற்றவேணுமென்றபடி. முன்பும்- * வளவேழுலகுக்குமுன்பும். “ வைகுந்தா-திருக்குறளா ” என்றத்தைப்பற்ற (பூர்வஜனை நீயென்றது) பூர்வஜனை-முற்பாடனை. பலிதம் (அவனையித்யாதி)

க்ரமேணாந்வய:..*

இரண்டாம்பாட்டு.

சிக்கெனச்சிறிதோரிடமும்புறப்படாத்தன்னுள்ளேயுலகுக
ளொக்கவேவிழுங்கிப்புகுந்தான்புகுந்ததற்பின்
மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்த் துளக்கற்றமுதமாயெங்கும்
பக்கநோக்கறியானென்பைந்தாமரைக்கண்ணனே.

ஆறாயிரப்படி.

(சிக்கென) இப்படித்தம்முள்ளேபுகுந்தபின்பு எம்பெருமானுக்குப்பிறந்தஸம்ருத்தியைப் பேசுகிறார்.

ஜகத்ஸ்ருஷ்ட்யாத்யங்யபரதையைப்போக்கிக்கொண் டென்னுள்ளேபுகுந்தான்; புகுந்ததற்பின் அளவிறந்த ஜ்ஞாநாதி சகலகல்யாணகுணவிசிஷ்டனாய், விஜ்வரனாய், ப்ரமுதிதனாய், ஹர்ஷாதிசயத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையுடையனாய், என்னையல்லதெங்கும் பக்கநோக்கறியானென்கிறார் ....

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தம்முடையபக்கல் கலந்து அவனுஜ்ஜ்வலஸ்வரூபனாய்க்கொண்டு ஓரிடத்தி லங்யபரதையற்றிராநின்றானென்கிறார்.

சிறிதோர்-அல்பமான. இடமும்-தேசமும். புறப்படா-புறம்புபோகாதபடி. உலகுகள்-உலகுகளை. தன்னுள்ளே-தன்ஸங்கல்பத்துக்குள்ளே. ஒக்கவே-ஏகப்ரகாரமாக. விழுங்கி-அடக்கி. சிக்கென-இனியொருகாலும் புறப்படாதபடி. புகுந்தான்-என்னுள்ளேபுகுந்தான். புகுந்ததற்பின்-புகுந்தபின். மிக்க-மிகுந்துவருகிற. ஞானவெள்ளம்-ஜ்ஞாநபூர்த்தியாகிற. சுடர்-ப்ரபைக்காஸ்ரயமான. விளக்காய்-ஸ்வரூபமாகிற தேஜோத்ரவ்யமாய். துளக்கு-நான் சிக்கெனப்பிடித்தபின்பு விஸ்லேஷாதிசங்கையால்வந்தநடுக்கமும். அற்று-தீர்ந்து. அமுதமாய்-நிரதிசயபோக்யபூதனுமாய். என்-என்னையேபார்த்திருக்கிற. பை - அழகிய. தாமரை-தாமரைபோன்ற. கண்ணன்-கண்ணையுடையவன். எங்கும்-ஓரிடத்திலும். பக்கம் - பக்கத்தில். நோக்க-நோக்க. அறியான்-அறிகிறிலன்.

என்பக்க லபிநிவேஶம் பத்நீபரிஜநாதிகள் பக்கலிலுங் காண்கிறிலனென்றுகருத்து. ஸ்வரூபாதிகளிலவனுக்குண்டான ஸ்ப்புரிதப்ரகாசமும் ஸ்வவிஸ்லேஷபீருவாகவென்று நினைக்கிறார் ....

ஈடு - இரண்டாம்பாட்டு.

அவன், “ இவர் நம்மைவிடிற்செய்வதென் ” என்றதிசங்கைபண்ணபடியைச்சொல்லிற்று - கீழிற்பாட்டில்; இவர், “ விடேன் ” என்றபின்பு அவனுக்குவடிவிற் பிறந்தபௌஷ்கல்யம் சொல்லுகிறதிப்பாட்டில்.

(சிறிதோரிடமும் புறப்படாத்தன்னுள்ளே யுலகுகளொக்கவே விழுங்கிச் சிக்கெனப்புகுந்தான்) “நாமாழ்வாரை யநுபவிக்கும்போது,

செருப்புவைத்துத் திருவடிதொழப்புக்காற்போலே யாகவொண்ணுது” என்றுபார்த்து, ஜகத்ரக்ஷணத்துக்குவேண்டும் ஸம்விதானமெல்லாம்பண்ணி, அநந்யபரனு யநுபவித்து, போகமாட்டாதேயிருந்தான்; ராஜாக்கள் அந்தःபுரத்திற்புகுவது, நாட்டுக்கணக்கற்றபின்பிறே, அத்யல்பமாயிருப்பதொரு பதார்த்தமும் தன்பக்கலின்றும் பிரிகதிர்ப்பட்டு நோவுபடாதபடியாகத்தன்ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்திலே லோகங்களை யொருகாலே வைத்து, இனிப்பேராதபடிபுகுந்தான். (சிக்கெனப்புகுந்தான்) அநந்ய ப்ரயோஜநமாகப் புகுந்தானென்றுமாம்.

(புகுந்தவித்யாதி) இவரோடேவந்துகலந்து, அக்கலவியிலதிசங்கையும் தீர்ந்தபின்பாயிற்று விகஸிதஸஹஜ ஸார்வஜ்ஞ்யனுமாய் விஜ்வரனுமாயிற்றது.

தனக்குநித்யதர்மமான ஜ்ஞானத்தையுடைத்தான ஆத்மவஸ்து, கர்மநிபந்தநமாக வொருதேஹத்தைப் பரிக்ரஹித்து, இந்த்ரியத்வாரத்தை யபேக்ஷித்துக்கொண்டு ப்ரஸரிக்கவேண்டும்படி போந்தது, ஒருநாள்வரையிலே பகவத்ப்ரஸாதமும்பிறந்து ஜ்ஞானஸங்கோசமும் கழியக்கடவதாயிருக்குமிறே; அங்ஙனொரு ஹேதுவுமின்றிக்கே யிருக்கிறவனு மிவரோடேவந்து கலப்பதற்குமுன்பு ஸங்குசித ஜ்ஞானனாய், இவரோடே கலந்தபின்புவிகஸிதமான ஜ்ஞானவெள்ளத்தையு முடையனானான், திவ்யமங்கள விக்ரஹமும் புகர்பெற்றதிப்போது. (துளக்கற்று) * ஆடியாடியிலாற்றாமையால்வந்த உள்நடுக்கமுந்தீர்ந்தா னுயிராநின்றான்; “விஜ்வரः” (விஜ்வரः) என்னக்கடவதிறே. “இவர்நம்மைவிடிற்செய்வதென்” என்கிற உள்நடுக்கமுமற்றதிப்போது. (அமுதமாய்) “ப்ரமோதஹ” (ப்ரமோதஹ) என்கிறபடியே. அவன்தம்மைவிரும்பி போக்யமாக நினைத்திருக்கிறவிருப்புத் தமக்குபோக்யமாயிருக்கிறபடி. (எங்கும்பக்கநோக்கறியான்) “ஆழ்வார்பக்க லிவனுக்குண்டான அதிமாத்ரப் ராவண்யத்தைத் தவிர்க்கவேணும்” என்றுநாய்ச்சிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கிலுமவர்கள்பக்கல் கண்வைக்கமாட்டுகிறிலன். இங்கே, ஆளவந்தாருக்குக் குருகைக்காவலப்ப னருளிச்செய்ததாக *வருளிச்செய்யும்வார்த்தை-“அப்பன்ஸ்ரீபாதத்திலே யொருரஹஸ்யவிசேஷமுண்டு” என்றுமணக்கால் நம்பியருளிச்செய்ய, “அதுகேட்கவேணும்” என்று ஆளவந்தாருமெழுந்தருள கங்கைகொண்ட சோழபுரத்தேற, அப்பனுமங்கே யொருகுட்டிச்சுவரிலே யோகத்திலே யெழுந்தருளியிருக்க, “இவரைஸமாதி பங்கம்பண்ணவொண்ணுது” என்று சுவருக்குப்புறம்பே பின்னேநிற்க, அப்பனும்யோகத்திலே யெழுந்தருளியிருக்கிறவர் திரும்பிப்பார்த்து, “இக்குசொட்டைக் குலத்திலாரேனும் வந்தாருண்டோ” என்றுகேட்டருள, “அடியேன்” என்றுஆளவந்தாரு மெழுந்தருளிவ

ந்துகண்டு, "நாங்கள் பின்னை தெரியாதபடியிற்க இங்ஙனருளிச்செய்கைக்குஹேதுவென்" என்ன, "நானும்தானுமாகவநுபவியாநின்றால், பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலு மவள்முகங்கூடப்பாராத ஸர்வேஶ்வரன், என்கழுத்தையமுக்கி ஒருமூன்றுதரமங்கே யெட்டிப்பார்த்தான்; 'இப்படியவன் பார்க்கும்போது சொட்டைக்குடியிலே சிலர் வந்தாருண்டாகவேணும்' என்றிருந்தேன்காணும்" என்றருளிச்செய்தார். (என்பைந்தாமரைக்கண்ணனே) * ஆடியாடி யிலாற்றாமையால்வந்த தாபமுந்தீர்ந்து திருக்கண்களும் குளிர்ந்தது.... ..*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (சிக்கெனவித்யாதி) மேழிற்பாட்டில் ப்ரமேயத்தையநுவதியாநின்றுகொண்டு, "மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை (அவனித்யாதி) இவர் "பிடித்தேன்கொள்சிக்கென" என்றவநந்தரம், அவனுடையஜ்ஞாநாதிகளிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைச் சொல்லுகிறு றென்றிப்பாட்டுக்குஸங்கதியென்றபடி. (அதிசங்கைபண்ண) அதுநிவ்ருத்தமான (படி) என்று கூட்டுவது. "சுடர்விளக்காய்" என்றதைப்பற்ற (வடிவிற்பிறந்த பௌஷ்கல்யமென்றது)

அந்வய ப்ரதர்ஶநபூர்வகம் பாவமாஹ (சிறிதோரிடமுமித்யாதி) ஓரிடமும்- ஒருபதார்த்தமும். செருப்புவைத்துத்திருவடிதொழுகையாவது-ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பெருமானைத்திருவடிதொழவெழுந்தருள, அவர் ஸ்ரீபாதம் பித்தப்பிளப்பாயிருக்கையாலே ஸ்ரீபாதரக்ஷைகொண்டெழுந்தருளினாரா யத்தைத்திருவாசலிலே வைத்தெழுந்தருளினவளவிலே, ஸ்ரீபாதரக்ஷையிலேதானே திருவுள்ளம்சென்று, "தீர்த்தம்ப்ரஸாதிக்க" என்றருளிச்செய்கிறத்தை, "செருப்புப்ரஸாதித்தருள" என்றாராம். ஸம்விதாநம்-வ்யாபாரம். "சிக்கென" என்றதுக்கர்த்தத்வயம்-அந்யபரதையில்லாதபடியென்னுதல், ப்ரயோஜநாந்தர பரதையில்லாதபடி யென்னுதல். லௌகிகத்ருஷ்டாந்தம் (ராஜாக்களித்யாதி) ஶப்தார்த்தம் (அத்யல்பமாயித்யாதி) பிதிகதிர்ப்பட்டு-தப்பிப்போய். அநந்யப்ரயோஜநமாகவென்றது- ஜகத்ரக்ஷணரூப ப்ரயோஜநம் ஸித்திக்கையாலேயென்றபடி.

"புகுந்ததற்பின் மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்த்துளக்கற்று" என்னுமளவுக்கர்த்தம் (இவரோடேயித்யாதி) மிகுந்துவருகிற ஜ்ஞாநபூர்த்தியாகிறப்ரபைக்காஶ்ரயமான ஸ்வரூபமாகிற தேஜோத்ரவ்யமாயிதிஶப்தார்த்தஃ. "புகுந்ததற்பின்" என்கிறவிது-உபலக்ஷணமித்யபிப்ராயேணாஹ (அதிசங்கையுந்தீர்ந்தபின்பாயிற்றென்று) ஞானவெள்ளத்தால்வந்த மிக்கதேஜஸ்ஸையுடையனாயென்றர்த்தாந்தரத்தையும் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (விகஸிதஸஹஜஸார்வஜ்ஞ்யனுமாயென்று) விஜ்வரனுமாயென்றது- "துளக்கற்று" என்றதுக்குபாவம். கர்மவஶ்யனு னசேதநனுக்கு ஸம்ஸாரியானநாளில் பகவந்நிக்ரஹமடியாக ஜ்ஞாநஸங்கோசம்பிறக்கக்கடவதாய்,பகவத்ப்ரஸாதமடியாக முக்தனானவஸ்த்தையில் ஜ்ஞாநவிகாஸம்பிறக்கக்கடவதாயிருக்கும்; அப்படியொருஹேதுவின்றியிலேயிருக்கிறவனு மாழ்வாரோட்டை விஶ்லேஷத்தாலே ஸங்குசிதஜ்ஞாநனாய், அவரோட்டை ஸம்ஶ்லே

ஷத்தாலே விகஸிதஜ்ஞாநனுயிராநின்றுன்; இதென்னப்ரணயித்வமென்கிருர் (தன க்கித்யாதி) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚 𑌮𑌨𑍁𑌜𑍇𑌶𑍍𑌵𑌰 । 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍" (ஜ்ஞாநம்வைராக்யமைஶ்வர்யம்தர்மஶ்சமநுஜேஶ்வர । ஆத்மநோப்ரஹ்மபூதஸ்யநித்யமேதச்சதுஷ்டயம்) என்றத்தைப்பற்ற (நித்யதர்மமானவென்றது) தர்மம்-சேஷத்வம். ஐஶ்வர்யம்-நியந்த்ருத்வம். "𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌨𑌰𑍋 𑌨 𑌪𑌶𑍁𑌰𑍍𑌨 𑌚 𑌪𑌾𑌦𑌪𑌃 । 𑌶𑌰𑍀𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌪𑍈𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌨𑌯𑌃" ("ஆத்மாநதேவோநந ரோநபஶுர்நசபாதப꞉ । ஶரீராக்ருதிபேதாஸ்துபூபைதேகர்மயோநய꞉) என்றத்தைப்பற்ற (கர்மநிபந்தநமாக வித்யாதி) இவ்விடத்திலே- "𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌖𑍍𑌯𑌾 𑌤𑌥𑌾 𑌪𑌰𑌾 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑍍𑌯𑌾 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌾 𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 𑌨𑍃𑌪 𑌸𑌰𑍍𑌵𑌗𑌾" (விஷ்ணுஶக்தி꞉பராப்ரோக்தாக்ஷேத்ரஜ்ஞாக்யாததாபரா । அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதியாஶக்திரிஷ்யதே । யயாக்ஷேத்ரஜ்ஞஶக்திஸ்ஸாவேஷ்டிதாந்ருபஸர்வகா) இத்யாத்யநுஸந்தேயம். இந்த்ரியத்வாரத்தை யபேக்ஷித்துக்கொண்டு என்றவிடத்திலே "𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌂 𑌕𑍍𑌷𑌰𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 । 𑌤𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌦𑍃𑌤𑍇𑌃 𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌵𑍋𑌦𑌕𑌮𑍍" (இந்த்ரியாணும்ஹிஸர்வேஷா ம்யத்யேகம்க்ஷரதீந்த்ரியம் । தேநாஸ்யக்ஷரதிப்ரஜ்ஞாத்ருதே꞉பாதாதிவோதகம்) என்றதநுஸந்தேயம். "𑌪𑌰𑌾𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍌" பராபித்யாநாத்துதிரோஹிதந்ததோஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ) "𑌪𑌰𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇" (பரஞ்ஜ்யோதிருபஸம்பத்யஸ்வேநரூபேணபிநிஷ்பத்யதே) இத்யாதியைப்பற்ற (ஒருநாள்வரையிலேயித்யாதி) மிக்கஞானவெள்ளத்தையும், "சுடர்விளக்கு" என்று-நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்தையுமுடையவனென்றர்த்தாந்தரம் (விகஸிதமானவித்யாதி) "விஜ்வரனுமாய்" என்றத்தைவிவரிக்கிருர் (ஆடியாடியித்யாதி) "𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌸𑍍𑌸𑌦𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌮𑍋𑌦 𑌹" (க்ருதக்ருத்யஸ்ததாராமோவிஜ்வர꞉ப்ரமுமோதஹ) இதிஶ்ரீஸங்க்ஷேபே. ஆற்றுமையாலே - ஆழ்வாருடைய வாற்றுமையாலே. உள்நடுக்கம் - அந்த꞉கம்பம். இதுக்குஸம்வாதம் (விஜ்வரஇத்யாதி) இதுக்கு-பூர்வார்த்தத்திலேநோக்கு. "துளக்கற்று" என்றதுக் கர்த்தாந்தரம் (இவர்நம்மைவிடிலித்யாதி)

எவ்வாகாரத்தாலே போக்யத்வமென்ன (ப்ரமுமோதஹேத்யாதி) "ஹ" என்றது-பெருமாளுடைய ப்ரமோததசையில் போக்யதையைக்கண்ட ருஷியினுடைய ஈடுபாடு.

"எங்கும்" இத்யஸ்யசரமாவதிமாஹ (ஆழ்வார்பக்கலித்யாதி) (அதிமாத்ரப்ராவண்யத்தையிதி) அதிமாத்ரப்ராவண்யம் ஸத்தாநாசகமாகையாலே தவிர்க்கவேணுமென்றபடி. "அவர்கள் பக்கல்கண்வையான்" என்னுமதுக்குஸம்வாதம் (இங்கேயாளவந்தாரித்யாதி)

என்பைந்தாமரைக்கண்ண னித்யாரப்யாந்வய꞉.........................*

மூன்றாம்பாட்டு

தாமரைக்கண்ணனைவிண்ணோர்பரவுந்தலைமகனைத்துழாய்விரைப்
பூமருவுகண்ணியெம்பிரானைப்பொன்மலையை
நாமருவிநன்கேத்தியுள்ளிவணங்கிநாமகிழ்ந்தாடநாவலர்
பாமருவிநிற்கத்தந்தபான்மையேவள்ளலே.

ஆறாயிரப்படி.

(தாமரை) நிரதிசயஸௌந்தர்யலாவண்யாதி கல்யாணகுணவிசிஷ்டனாய், நிரதிசயஸுகந்ததிவ்யமால்யாலங்க்ருதனாய், சேஷசேஷாசநவைநதேயாதிதிவ்யபுருஷர்களாலே ஸம்ஸ்துயமானனாயிருந்தவனை, நாம்மருவிநன்கேத்தியுள்ளிவணங்கி நாமகிழ்ந்தாடும்படிநம்முடைய நாவிலேயலருகிற சொற்களுக்குத் தன்னைவிஷயமாகத்தருகையே ஸ்வபாவமாயிருப்பதே!, என்னவதான்யனோவென்கிறார்.............. ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், தன்னைக்கரணத்ரயத்தாலும் நிரந்தராநுபவம்பண்ணுவித்த மஹோதாரனானவன் என்னையொழியவறிகிறிலனென்கிறார்.

தாமரை-தாமரைபோன்ற. கண்ணனை-கண்களையுடையனாய். - அவ்வழகாலே. விண்ணோர்-நித்யஸூரிகள். பரவும் - நிரந்தரமாகப்புகழும்படியான. தலைமகனை-மேன்மையையுடையவனாய். விரை-விரையும். பூ-பூவும். மருவு-மருவின. துழாய்க்கண்ணி-துழாய்மாலையையுடையனாய்க்கொண்டு. எம்-எங்களுக்கு. பிரானை-ஸ்வாமியாய். பொன்மலையை - எங்களோட்டைச்சேர்த்தியாலே பொன்மலைபோலேயோங்கி யுஜ்வலனானதன்னை. நாம் - நாங்கள் நிகர்ஷம்பார்த்தகலாதே. மருவி-மருவி. நன்கு . ஸூரிகளோபாதியனுஸந்தைக்குத்தகுதியாம்படிநன்றாக. ஏத்தி-ஏத்தி. உள்ளி - அவர்கள்சிந்தையுள் வைக்குமாபோலே நினைத்து. வணங்கி - “ வணங்கிவழிபடும் ” என்றபடியேதிருவடிகளிலேவிழுந்து. இப்படிகரணத்ரயத்தாலுமுண்டானவநுபவத்தாலே நாம் - நாங்கள். மகிழ்ந்து - ஆநந்திகளாய். ஆட - ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணும்படியாக. நா - நாவிலே. அலர் - அலருகிற. பா-பாவிலே. மருவி - மருவி. நிற்க - திருவாய்மொழிபாடிநிற்கும்படி. தந்த - உபகரித்த. பான்மை - ஸ்வபாவத்துக்கு. ஏய் - பொருந்தின. வள்ளல் - ஔதார்யகுணவிசிஷ்டனானவன்.

எங்கும் பக்கநோக்கறியானென்றந்வயம். பான்மை - ஸ்வபாவம்........*

ஈடு - மூன்றாம்பாட்டு.

நித்யஸூரிகளுக்கு மவ்வருகானவன்தன்னை நான்தேசிகனுபவிக்கும்படி பண்ணினவிதுவு மோரௌதார்ய மேதானென்கிறார்,

(தாமரைக்கண்ணனையித்யாதி) ஒருகால் திருக்கண்களாலே குளிரநோக்கினால், அதிலேதோற்று ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகெட வேத்தாநிற்பர்களாயிற்று நித்யஸூரிகள். "𑌶𑍍𑌰𑍁𑌤𑍋𑌽𑌯𑌮𑌰𑍍𑌥𑍋 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌜𑌲𑍍𑌪𑌤𑌃" (ஶ்ருதோயமர்த்தோ ராமஸ்யஜாமதக்ந்யஸ்யஜல்பத:) என்கிறபடியே. (தலைமகனை) இவர்களைத்தாநின்றாலும், "𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌃 𑌪𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌃" (நிரவத்ய: பர: ப்ராப்தே:) என்று அவன் பரனாயிருக்கும். (துழாயித்யாதி) நித்யஸூரிகளைக் கண்ணழகாலே தோற்பித்தான், இவரைக்கண்ணியிலே யகப்படுத்தினான். மார்வில் மாலையைக்காட்டி மாலாக்கினான். விரை - பரிமளம். விரையும் பூவும்மருவி யிருந்துள்ளதுழாய்க் கண்ணியெம்பிரானை. (பொன்மலையை) என்னோட்டைக்கலவியாலே அபரிச்சிந்நமான வழகையுடையனாய், கால்வாங்கமாட்டாதே யிருக்கிறவனை. நானேத்தப்பெற்றபடியாலே வளர்ந்தபடியென்னவுமாம். ஆக, இத்தால் - இவரைப்பெற்றபின்பு வளர்ந்து புகர்பெற்றபடி. (நாமருவி) "அருவினையேன்" என்றகலக்கடவநாம்கிட்டி. (நன்கேத்தி) நித்யஸூரிகளைத்தக்கடவ விஷயத்தைநன்றாகவேத்தி; * வானவர்சிந்தையுள் வைத்துச்சொல்லும்செல்வனை, எந்தையேயென்பன் என்றகன்றவரிறே. "𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇" (யதோவாசோ நிவர்தந்தே) என்று வேதங்களுங்கூட மீண்டவிஷயத்தை மறுபாடுருவவேத்தியென்றுமாம். (உள்ளி) "நினைந்து" என்று - அநுஸந்தாநத்துக்கு ப்ராயஶ்சித்தம்பண்ணத்தேடாதே யநுஸந்தித்து. (வணங்கி) குணபலாத்க்ருதராய் நிர்மமராய்வணங்கி. "வணங்கினால், உன்பெருமை மாசூணாதோ" என்னும்நாம்வணங்கி. (நாமகிழ்ந்தாட) பகவதநுபவத்தால்வந்த ப்ரீதிதத்வம் கனக்கண்டறியாதநாம் ஹ்ருஷ்டராயதுக்குப் போக்குவிட்டாட. (நாவலரித்யாதி) நாட்பூவலருமாபோலே ஜிஹ்வாக்ரத்திலே விகஸியாநின்றுள்ள சந்தஸ்ஸானது என்பக்கலிலே நிற்கும்படியாகத் தந்தவிதுதன்னைஸ்வபாவமாகவுடையையா யிருக்கிறபரமோதாரனை. (நாவலர்பா) மநஸ்ஸஹகாரமும் வேண்டாதபடியாயிருக்கை.

தாமரைக்கண்ணனாய், விண்ணோர் பரவுந்தலைமகனாய், துழாய்விரைப்பூ மருவுகண்ணி யெம்பிரானாய், பொன்மலையாயிருக்கிறதன்னை, நாம்மருவிநன்கேத்தியுள்ளி வணங்கிநாம் மகிழ்ந்தாடும்படி, நாவலர் பாமருவிநிற்கத்தந்த பான்மையேய்ந்த வள்ளலேயென்று சொல்லுகிறாராகவுமாம். அன்றியே, "தாமரைக்கண்ணனை" என்கிறஐகாரத்தை - அவ்யயமாக்கி, தாமரைக்கண்ணனாய் - பொன்மலையாயிருக்கிறநீ, நாமருவி - நா

வலர் பாமருவிநிற்கத்தந்தபான்மையே - இதுவுமொருஸ்வபாவமே! ; வ ள்ளலே - பரமோதாரனே என்கிறாராகவுமாம்..........................

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (தாமரையித்யாதி) " விண்ணோர் பரவும்தலைமகனை, நாவலர் பாமருவிநிற்கத்தந்த பான்மையேவள்ளலே " என்றபதங்களைக் கடாக்ஷித்த வதாரிகை (நித்யஸூரிகளுக்குமித்யாதி)

" தாமரைக்கண்ணனை, விண்ணோர் பரவும்தலைமகனை " என்கிறபதச்சேர்த்திக்குபாவம் (ஒருகாலித்யாதி) பரவுகை - அடைவுகெடக்கூப்பிடுகை. இது - பக்திபாரவஶ்யக்ருதம். " பரவும் " என்றதுக்கு ஸம்வாதம் (ஶ்ருதோயமித்யாதி) " நாரதஸ்ய ச தேவர்ஷே: க்ருஷ்ணத்வைபாயநஸ்ய ச " (நாரதஸ்யசதேவர்ஷே:க்ருஷ்ணத்வைபாயநஸ்யச) இத்யுத்தரார்த்தம். இதம்ப்ரமாணம் மோக்ஷதர்மே. ஜல்பத:என்று - தஸில்ப்ரத்யயாந்தமான அவ்யயமாய், நாமனுடைய ஜல்பத்திலே கேட்கப்பட்டதென்றபடி. ஜல்பநம் - அக்ரமமாகச்சொல்லுகை. தலைமகனை - முதன்மையையுடையவனை. (நிரவத்யஇத்யாதி) பஞ்சமேம்ஶேப்ரதமே, " நிரவத்ய: பர: ப்ராப்தேர் நிரதிஷ்டோக்ஷரக்ரம: । ஸர்வேஶ்வர பராதாரோ தாம்நாம் தாமாத்மகாக்ஷய " (நிரவத்ய:பர:ப்ராப்தேர்நிரதிஷ்டோக்ஷரக்ரம:। ஸர்வேஶ்வரபராதாரதாம்நாந்தாமாத்மகாக்ஷய.) (பர:ப்ராப்தே:) ப்ராப்தே: பர: - ப்ராப்துமசக்யஇத்யர்த்த:. நிரதிஷ்ட: - நிராதார:. க்ரம: - அப்ரதிபந்தமஹோத்ஸாஹ:. ஸர்வேஶ்வரபராதார - ஸர்வேஷாமீஶ்வராணாம்பராதார. தாம்நாந்தாமாத்மக - ஜ்யோதிஷாஞ்ஜ்யோதிரித்யர்த்த:.

" கண்ணியெம்பிரானை " என்றபதத்தைக் கடாக்ஷித்தாரஸோக்தி (நித்யஸூரீத்யாதி வாக்யத்வயமும்) அந்வயம் (விரையுமித்யாதி) " எம்பிரானை ", பொன்மலையை " இதிபதஸங்கதிஸித்தம்பாவமாஹ (என்னோட்டையித்யாதி) " நன்கேத்தி " என்றத்தைக்கடாக்ஷித்தர்த்தாந்தரம் (நானேத்தவித்யாதி) பலிதம் (ஆநவித்தாலித்யாதி) உக்தார்த்தத்வயத்தாலு மென்றபடி.

" நாம் " என்றபதத்தை - " மருவி, நன்கேத்தி, உள்ளி, வணங்கி, " என்றபதங்களோடே ப்ரத்யேகமந்வயித்து, அத்தால் - ஔதார்யாதிசயந் தோன்றுகிறதென்று திருவுள்ளம்பற்றி, ப்ரதிபதம் ப்ரதிகோடிஞ்சதர்ஶயதி (அருவினையேனித்யாதியாலும், வானவர் சிந்தையுள் வைத்தித்யாதியாலும், நினைந்தென்றித்யாதியாலும், வணங்கினுன்பெருமை யித்யாதியாலும், பகவதநுபவத்தா லித்யாதியாலும்) அருவினையேனென்றதுக்கு - " வளவேழுலகின்முதலாய வானோரிறையை " இத்யாதௌஹ்ருதயம். " விண்ணோர்பரவும்தலைமகனை " இத்யேதத்ருதித்தாயாஹ (நித்யஸூரிகளேத்தவித்யாதி) நன்மைக்குபாவம் (வானவரித்யாதி) ஆகையாலே நித்யஸூரிகளைப்போலே நன்றாகவேத்தியென்று (அகன்றவரிறே) என்றவநந்தரம் வாக்யத்தைப்பூரிப்பது. நன்மைக்கர்த்தாந்தரம் (யதோவாசயித்யாதி) விஷயத்தை - அபரிச்சிந்நவிஷயத்தை. மறுபாடுருவவென்றது - நன்மையினர்த்தம். மறுபாடுருவுகை - பின்னேபுறப்படுகை. யாவதவகாஹத்தைச் சொல்

லுகிறது. ஆக, "நன்கேத்தி" என்றதுக்கர்த்தத்வயம் - அயோக்யதாநுஸந்தாநத்தாலே யகன்றானைத் தவிர்ந்து நித்யஸூரிகளைப்போலே நன்றாகவேத்தியென்னுதல், அபரிச்சிந்நவிஷயத்தை மறுபாடுருவவேத்தி யென்னுதலென்று. (நினைந்தென்றுஇதி) அஸ்ய "என்பன் நினைந்துநைந்து" இத்யத்ரஹ்ருதயம். ப்ராயஸ்சித்தம்பண்ணத்தேடாதே - அயோக்யதாநுஸந்தாநத்தாலகலநினையாதே. குணம் - ஸௌஸீல்யாதி. ப்ரதியோகியோடே கூட்டிவிவரணம் (வணங்கினுலித்யாதி) அதுக்கு - ப்ரீதிதத்வத்துக்கு. போக்குவிட்டு - வழிவிட்டு.

நாட்பூ - ஸத்யோவிகஸிதபுஷ்பம். சப்தார்த்தம் (ஜிஹ்வாக்ரத்திலேயித்யாதி) சந்தஸ்ஸாகில் நாவினாலேயன்றோவலருவது, "நாவலர்" என்றுவிசேஷிப்பானென்னென்ன (மநஸ்ஸஹகாரமித்யாதி)

முந்தினவந்வயம்-பரோக்ஷநிர்த்தேசமாய், பான்மையோடேகூடின வௌதார்யமிருந்தபடி யென்னென்றீடுபாடு. த்விதீயாந்வயம்-அபரோக்ஷநிர்த்தேசமாய் ப்ரதமார்த்தமாகக் கண்டுகொள்வது. பான்மை- ஸ்வபாவம். பான்மையேய்ந்த-ஸ்வபாவமாக வுடையையாயிருக்கிற. வள்ளலேயென்கிறது - ஸம்போதநை........*

நான்காம்பாட்டு.

வள்ளலேமதுசூதனாவென்மரதகமலையேயுனைநினைந்
தெள்கறந்தவெந்தாயுன்னையெங்ஙனம்விடுகேன்
வெள்ளமேவுமாநின்புகழ்குடைந்தாடிப்பாடிக்களித்துகந்துகந்
துள்ளநோய்களெல்லாந்துரந்துய்ந்துபோந்திருந்தே.

ஆறாயிரப்படி.

(வள்ளலே) ஆஸ்ரிதர்க்காத்மதாநம் பண்ணும்ஸ்வபாவனே, தத்விரோதிநிரஸந ஸ்வபாவனே, என்னுடைய பரமபோக்யமே, உன்னை நினைந்தால் நீராயுருகும்ப்ரக்ருதியாக வென்னைப்பண்ணினவனே, உன்னுடைய ஏவம்விதமான கல்யாணகுணங்களாகிற அம்ருதவெள்ளத்தைக்குடைந்தாடிப்பாடிக்களித் துகந்துகந்துள்ள நோய்களெல்லாந் துரந்துய்ந்துபோந்திருந்துன்னை யெங்ஙனேவிடும்படி யென்கிறார்...................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸர்வப்ரகாரோபகாரகனானவுன்னை விடப்போமோவென்கிறார்.

வள்ளலே - அர்த்தித்வநிரபேக்ஷமாக வுபகரிக்கும்மஹோதாரனாய். மதுசூதனா - உபகாரங்கொள்ளுகிற வென்விரோதியை மதுவையழித்தாற்போலேயழிக்குமவனாய். என் - நிவ்ருத்தவிரோதிகனானவெனக்கு. மரதகமலையே - உத்துங்கமா யுஜ்வலமானமரதகமலைபோலே யிருக்கிறவடிவை யநுபவிப்பிக்குமவனாய். "மாற்பான்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு" என்கிறபடியே உனை - உன்னை. நினைந்து - அநுஸந்தித்து. எள்கல் - இதரவிஷயங்களையிகழும்ஸ்வபாவத்

னை. தந்த - தந்த. எந்தாய் - ஸ்வாமியே. வெள்ளமேபுரை - பெருங்கடல்போலேயபரிச்சின்நமான. நின் - உன்னுடைய. புகழ் - குணங்களை. குடைந்து - அவகாஹித்தநுபவித்து. ஆடிப்பாடி - அந்தப்ரீதியாலே ஆடிவதுபாடிவதாய். களித்து - களித்து. உகந்துகந்து - அதோரளவில் நில்லாதேமேன்மேலனவுகந்து. உள்ளநோய்களெல்லாம் - அஹங்காரார்த்தகாமங்கள், அநுபவவிஸ்லேஷம், விகர்ஷாறுஸந்தாநம்முதலாக வுள்ளநோய்களையெல்லாம். துரந்து - தூரப்போம்படியகற்றி. உய்ந்து - லப்தஸத்தாகனாய். போந்து - ஸம்ஸாரஸ்தந்திருந்து உன்னளவும்போந்து. இருந்து - "மாயநூறே" (காயந்நாஸ்தே) என்றநுபவித்துக்கொண்டிருக்கப்பெற்றுவைத்து. உன்னை - இப்படியபகாரகனானவுன்னை. எங்ஙனம் - எங்ஙனே. விடுகேன் - விடுவேன...•

ஈடு - நான்காம்பாட்டு.

"நாமருவிநன்கேத்தியுள்ளி வணங்கிநாமமிழ்ந்தாட" என்று - தம்முடையனைச்யத்தை யநுஸந்தித்தவாறே, "இவர்நம்மையிழ்ச்செய்வதென்" என்று, அவனதிசங்கைபண்ண, நிர்ஹேதுகமாக வுன்வடிவழகை நீயென்னையநுபவிப்பிக்க அநுபவித்து அத்தாலேசிதிலனானநானுன்னைவிட ஸம்பாவனையுண்டோ வென்கிறார்.

(வள்ளலே) நிர்ஹேதுகமாகவுன்னை யெனக்குத்தந்த பரமோதாரனே. (மருதிறுத்த) நீயுன்னைத்தருமிடத்தில் நான் ஸ்வீகரியாதபடி பண்ணும்விரோதிகளை, மருதவாகிற அஸுரனை நிரஸித்தாய்போலே நிரஸித்தவனே. (என்மரதகமலையே) உன்னைநோக்கும்படி புன்னிலும்சீரியதாய், ஸ்ரமஹரமாய், அபரிச்சேத்யமான வடிவழகையன்றோ வெனக்கெளதார்யம்பண்ணிற்று. (உனைநினைந்தெனக்கல்தந்தவெந்தாய்) உன்னையநுஸந்தித்தால், இதரவிஷயங்களை நான்விரும்படி பண்ணினவனேயென்னுதல், அன்றிக்கே, எங்கலாவது. ஸ்டோடாய் உன்னை யநுஸந்தித்தால் "காலாழும்நெஞ்சழியும்கண்சுழலும்" என்கிறபடியே அள்ளியெடுக்கவேண்டும்படிபண்ணித் தந்தவென்றுமனே யென்னுதல். (உன்னையெங்ஙனம்விடுகேன்) "உதாரனல்லை" என்றுவிடவோ, "விரோதிநிரஸனனல்லை" என்றுவிடவோ, "உனக்குவடிவழகில்லை" என்றுவிடவோ, உன்விஷயத்திலேயிப்படி ஈடுபட்ட நான் உன்னைவிட ஸம்பாவனையுண்டோவென்னுதல்; உன்னையநுஸந்தித்தால், இதரவிஷயங்களில் விரக்தனான நான்விடஸம்பாவனை யுண்டோவென்னுதல். இனிமேலெல்லாமவனதிசங்கையைத்தீர்க்கிறார் (வெள்ளமேபுரை) கடலோடொத்திருந்துள்ள வுன்னுடைய கல்யாணகுணங்களை நாலுமூலையும்புக்கு வ்யாபித்து, நான்மறுநினைந்து ப்ரீதிப்ரேரிதனாய்க் கொண்டுபோடி, அத்தாலேசெருக்கி மிகவும்ப்ரீதனாய். (உள்ளநோய்களெல்லாந்துரந்து) கர்மநிபந்தநமாகவருமவை, உன்னைப்பிரிந்துபடுமவை, "அயோக்யன்" எ

ன்றகன்றுவ்ருமவை, இத்யாதிக ளெல்லாவற்றையுமோட்டி. (உய்ந்து) "ஸந்தமேநம் ததோ விது:" (ஸந்தமேநந்ததோவிது:) என்கிறபடியேயுஜ்ஜீவித்து. (போந்து) ஸ்ம்ஸாரிகளைவிட்டு வ்யாவ்ருத்தனாய். (இருந்து) நிர்ப்பரனாயிருந்து - வள்ளலேமதுசூதனா - உன்னையெங்ஙனம் விடுகேன்... ....*

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு. (வள்ளலேயித்யாதி) (தம்முடையநைச்யத்தையிதி) "நாம்" - ப்ரீதிதத்வம் கனுக்கண்டறியாத நாமென்கையாலே - நைச்யம்த்யோதிதமென்றபடி. (அதிசங்கைபண்ண) நைச்யானுஸந்தாந மதிசங்காஹேதுவென்றபடி. வடிவழகையென்றது - "மரதகமலை" என்றத்தைப்பற்ற. "எள்கல்" என்றபதத்தின் த்விதீயார்த்தந்திலேநோக்காக (சிதிலனானானென்றது) விடஸம்பாவனை யுண்டோவென்றது - "எங்ஙனம் விடுகேன்" என்றத்தைப்பற்ற.

ஹேதுபூர்வகமாகத்தரில், அது ஔதார்யமல்லாமையாலே (நிர்ஹேதுகமாகவென்கிறார்) "மதுசூதனா" என்றது - த்ருஷ்டாந்தார்த்தம்.

உன்னைநீயாக்கும்படி - உன்னை "பரன்" என்றுப்ரகாசிப்பிக்கிறபடி யென்றபடி. இங்கே - "ரூபஶ்ரியா பரமயா" (ருபஸ்ரீயாபரமயா) இத்யாத்யநுஸந்தேயம். * மரதகமலையின் தாத்பர்யம் (உன்னிலும்சீரியதாயித்யாதி) சீரியதாய் - போக்யமாய்.

"எள்கல்" என்றதுக்கர்த்தத்வயம் - த்யாகமும், ஈடுபாடும். முந்தினது (உன்னையித்யாதி) (காலாழுமித்யாதி) கால் தடுமாறுகிற்கும், நெஞ்சு சிதிலமாகாநிற்கும், கண்சுழலாநிற்குமென்றபடி. அள்ளியெடுக்க - வாரியெடுக்க.

எங்ஙனம் - எந்தப்ரகாரத்தாலே. "எங்ஙனம்" என்றத்தை விவரிக்கிறார் (உதாரனித்யாதி) "வள்ளலே" இத்யாதிபதங்கள் - ஹேதுகர்ப்பங்கள். "எள்கல்" என்கிறபதத்தி னர்த்தத்வயத்தையும் வ்யுத்க்ரமமாக வருளிச்செய்கிறார் (உன்விஷயத்திலித்யாதி)

வெள்ளமேபுரை - (கடலோடொத்திருந்துள்ள) அபரிச்சிந்நமான வென்றபடி. "குடைந்து" என்றதினர்த்தம் (நாலுமூலையும்புக்குவ்யாபித்தென்றது) அதாவது - அவகாஹித்தநுபவித்தென்றபடி. மறுநனைந்து - மறுபாடுருவநனைந்து. பூர்ணாநுபவம் பண்ணியென்றபடி. இது "குடைந்து" என்றதில் ஸித்தமானவர்த்தம். "ஆடி" என்றதின் தாத்பர்யமாதல். ஆடி - அவகாஹித்து. களித்து - (செருக்கி) உகந்துகந்து (மிகவும்ப்ரீதனாய்) துரந்து - துரத்தி. போந்து - ஸாம்ஸாரிக ஸ்த்திதிகுலைந்துன் னளவும்போந்து.

வெள்ளமேபுரைதொடங்கி, போந்திருந்து - வள்ளலேதொடங்கி, எள்கல் தந்தவெந்தா யுன்னையெங்ஙனம்விடுகேனித்யந்வய:. ....*

ஐந்தாம்பாட்டு.

உய்ந்துபோந்தென்னுலப்பிலாதவெந்தீவினைகளைநாசஞ்செய்துன
தந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப்பாற்கடல்யோகநித்திரைச்
சிந்தைசெய்தவெந்தாயுன்னைச்சிந்தைசெய்துசெய்தே.

ஆறாயிரப்படி.

(உய்ந்து) த்வதநுபவ ஜநிதமான ப்ரீதியாலே களித்தாடுகிற திருவநந்தாழ்வான்மேலே யுன்னுடைய திவ்யரூபகுணங்களை யநுபவித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற வுன்னையநுபவித் துய்ந்துபோந்திருந்து, என்னுடைய முடிவில்லாத மஹாதுக்கங்களைப்போக்கி உன்னந்தமிலடிமையடைந்தேன்; இனிவிடுவேனோ வென்கிறார்.................. .....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், த்வதநுபவஜநித கைங்கர்யபோக்யத்தைப்பெற்றநான் விடும்படியென்னென்கிறார்.

பாற்கடல் - திருப்பாற்கடலிலே. ஐந்து - ஐந்துவகையாய். பை - விரிந்த. தலை - பணங்களையுடையவனாய். ஆடு - அசைந்துவருகிற. அரவணை - திருவரவணையின்மேலே. மேவி - பொருந்திக்கண்வளர்ந்து. யோகம் - ஜகத்ரக்ஷணயோகத்தில்நிப்ருததையாலே. நித்திரை - உறங்குவானைப்போலே. சிந்தைசெய்த - ரக்ஷணப்ரகாரசிந்தைபண்ணின. எந்தாய் - என்ஸ்வாமியே. உன்னை - இப்படிரக்ஷகத்வத்தை ப்ரகாசிப்பித்தவுன்னை. சிந்தைசெய்துசெய்து - நிரந்தராநுஸந்தாநம்பண்ணி. உய்ந்து - லப்தஸ்வரூபனாய். போந்து - அநாபராநாஸம்ஸாரிகளில்வ்யாவ்ருத்தனாய். என் - நானேயெனக்குத்தேடிக்கொண்டு. உலப்பிலாத - அஸங்க்யாதமாய். வெம் - க்ரூரமாய். தீ - அந்நிசஸ்பமான. வினைகளை - பாபங்களை. நாசஞ்செய்து - நசிக்கும்படிபண்ணி. உனது - ப்ராப்தனானவுன்னுடைய. அந்தமில் - அபரிச்சிந்நமான. அடிமை - கைங்கர்யபோகத்தை. அடைந்தேன் - கிட்டப்பெற்றநான். விடுவேனோ - விடக்ஷமனல்லன்.

ஆஸ்ரிதவிஷயத்திலுனக்குப் பொருத்தமில்லாமல் விடுகிறேனோ, அவர்கள் ரக்ஷணத்தில் உனக்குச்சிந்தையில்லாமல் விடுகிறேனோ, உன்னநுபவத்திலெனக்கு சீலநமில்லாமல் விடுகிறேனோ, என்ஸ்வரூபம் ப்ரகாசியாமல் விடுகிறேனோ, விஷயாஸக்தரான ஸம்ஸாரிகளோடு பொருந்தமுண்டாய் விடுகிறேனோ, ப்ரதிபந்தகமான பாபமுண்டாய் விடுகிறேனோ, ப்ராப்யமான கைங்கர்யத்தில் சுவடறியாமல் விடுகிறேனோ, இப்படி லப்தாபீஷ்டனான நான்விடுவேனோ வென்றுகருத்து...*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்தநான் உன்னைவிட் ப்ரஸங்கமுண்டோவென்கிறார்.

(உய்ந்துபோந்து) நாலுளேனாய், ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாய்ப்போந்து. (என்னுலப்பிலாதவித்யாதி) என்னுடைய, முடிவின்றிக்கேயிருந்துள்ள கொடியபாபங்களை வாஸனையோடேபோக்கி, உன்றிருவடிகளிலே ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்தநான், இனிவிட ப்ரஸங்கமுண்டோ. (விடுவேனோ) விஷயாந்தரங்களை விரும்பினேனோ விடுகைக்கு, ஸ்வரூபஸித்தியின்றிக்கே யொழிந்துவிடுகிறேனோ, தாஸ்யபரிமளத்தில்சுவடறியாமல்விடுகிறேனோ, எனக்குத்தெவிட்டிவிடுகிறேனோ, (ஐந்தித்யாதி) அடிமையிற்சுவடறிந்த திருவநந்தாழ்வானுன்னைவிடிலன்றோ நானுன்னைவிடுவது. பெருவெள்ளத்துக்குப் பலவூாய்த்தலைகள்போலே பகவதநுபவத்தால் வந்தஹர்ஷத்துக்குப் போக்குவீடாகப் பலதலைகளையுடையனாய், மதுபாநமத்தனைப்போலே ஆடாநிற்பானாய், சைத்யஸௌகுமார்ய ஸௌகந்த்யங்களையுடையனான திருவநந்தாழ்வான்மேலே, திருப்பாற்கடலிலே, “ஸகலப்ராணிகளும் கனைமரஞ்சேர்ந்தநாம்விரகென்” என்றுயோகநித்ரையிலே திருவுள்ளஞ்செய்த என்னையனானவனே. (யோகநித்திரை) “ஆத்மாநம்வாஸுதேவாக்யம்சிந்தயந்” (ஆத்மாநம்வாஸுதேவாக்யம்சிந்தயந்) என்கிறபடியேதன்னை யநுஸந்தித்தல்.

(எந்தாய்) நீர்மையைக்காட்டி யென்னை யநந்யார்ஹனாக்கினவனே. (உன்னைச்சிந்தைசெய்துசெய்து) நான்நினைக்கைக்கு க்ருஷிபண்ணினவுன்னை நினைத்துவைத்துவிட ப்ரஸங்கமுண்டோ.........................*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (உபாதித்யாதி) “உனதந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ” என்றத்தைப்பற்ற வவதாரிகை (ஆத்மாந்தேத்யாதி) ஆத்மாந்ததாஸ்யம்- யாவதாத்மபாவியான கைங்கர்யம்.

(நாலுளேனாய்) “உன்னைச்சிந்தைசெய்துசெய்து - உய்ந்துபோந்து” என்றந்வயத்திலே தாத்பர்யம். உன்னைநிரந்தராநு ஸந்தாநம்பண்ணி லப்தஸ்வரூபனாயென்றபடி. ஸம்ஸாரிகளில் - அந்யபரரான ஸம்ஸாரிகளில்.

முடிவின்றிக்கே - அஸங்க்யாதமாய். வெந்தீ - க்ரூரமாய், அக்நிகல்பமான.

அந்தமிலடிமை - அபரிச்சிந்நமாய் நித்யமானவடிமை. தாஸ்யம்செய்வது திருவடிகளிலேயாகையாலே (உன்றிருவடிகளிலேயென்கிறார்)

“உனது” என்றத்தைக்கடாக்ஷித்து (விஷயாந்தரங்களையித்யாதி) “உய்ந்து” என்றத்தைப்பற்ற (ஸ்வரூபஸித்தீத்யாதி) “அடிமை” என்றத்தைப்பற்ற (தாஸ்யபரிமளமித்யாதி) சுவடு - ரஸம். “அந்தமில்” என்றத்தைப்பற்ற (தெவிட்டிவிடுகிறேனோவென்றது) தெவிட்டல் - அதித்ருப்தியாலே வேண்டியிராமை.

“விடுவேனோ” என்றவநந்தரம் திருவநந்தாழ்வானைச் சொல்லுகிறதுக்கு பாவம் (அடிமையிலித்யாதி) “ஐந்து” என்றதுக்குபாவம் (பெருவெள்ளத்துக்

இத்யாதி) வாய்த்தலைகள் - வாய்க்கால்கள். பைந்தலை - பரந்ததலைகள், பலவாய்த்தலைகளென்றது - தாத்பர்யார்த்தம். " அரவு " என்றதுக்குபாவம் (ஶைத்யேத்யாதி) (திருவநந்தாழ்வான்மேலே) பொருந்தினன்று - " மேவி " என்றதுக்கர்த்தமாகக் கூட்டுவது.

" யோகஸ்ஸந்நஹநோபாயத்யாநஸங்கதியுக்திஷு " (யோகஸ்ஸந்நஹநோபாயத்யாநஸங்கதியுக்திஷு) என்றதினுபாய விலக்ஷணபாவம் (ஸகலப்ராணிகளுமித்யாதி) த்யாநவிலக்ஷணார்த்தாந்தரம் (ஆத்மாநமித்யாதி) ஷஷ்டேம்ஸேசதுர்த்தே, " ஆத்மமாயாமயீம் திவ்யாம் யோகநித்ராம் ஸமாகத: । ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதந: " (ஆத்மமாயாமயீந்திவ்யாம்யோகநித்ராம்ஸமாகத: । ஆத்மாநம்வாஸுதேவாக்யஞ்சிந்தயந்மதுஸூதந:) யோகரூபநித்ரையிலே சிந்தைசெய்கையாவது - யோகரூபநித்ரையைப்பண்ணுகை. நீர்மையைக்காட்டியென்றது - " பாற்கடல் " இத்யாதியைப்பற்ற. " யோகநித்திரை " என்றதின் முந்தினவர்த்தத்துக்கடாக்ஷித்து (நான்கிளைக்கைக்கித்யாதி) உன்னைச் சிந்தைசெய்துசெய்து - உன்னைநிரந்தரமாக வநுஸந்தாநம்பண்ணி.

ஐந்துவைந்தலைதொடங்கி. எந்தாயுன்னைச் சிந்தைசெய்துசெய்து - உய்ந்து போந்துதொடங்கி, அடிமையடைந்தேன் விலக்ஷணோவிந்யஸ்தவ்ய:..................*

———— ◦◦◦ ————

ஆறம்பாட்டு.

உன்னைச்சிந்தைசெய்துசெய்துன்னெடுமாமொழியிசைபாடியாடியென்
முன்னைத்தீவினைகண்முழுவேரரிந்தனன்யா
னுன்னைச்சிந்தையினிகழ்ந்தவிரணியனகன்மார்வங்கீண்டவென்
முன்னைக்கோளரியேமுடியாததென்னெனக்கே.

ஆறாயிரப்படி.

(உன்னை) இப்படியுன்னை ஸர்வகரணங்களாலு மநுபவித்து என்னுடையஸமஸ்த ப்ரதிபந்தகங்களையும்போக்கினேன், ஆஶ்ரிதனுன்னைக்கோலுவதற்குமுன்பவனுடைய இஷ்டத்தை முடித்துக்கொண்டிருக்கும் ஸ்வபாவனானவனே, எனக்குமுடியாததென்; இந்தஸம்ருத்தியெல்லாமுன்னுடையப்ரஸாதத்தாலேவிளைந்ததென்கிறார்....................... .... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இந்தக்கைங்கர்யலாபத்தாலே தம்முடைய ஸர்வாபீஷ்டமும் தலைக்கட்டிற்றென்கிறார்.

உன்னை - வகுத்தஸ்வாமியுமாய் உபகாரகனுமானவுன்னை. சிந்தையினால் - நெஞ்சாலே. இகழ்ந்த - அநாதரித்த. இரணியன் - ஹிரண்யனுடைய. அகல் - பேரிடமுடைத்தான. மார்வம் - மார்வை. கீண்ட - அநாயாஸேந பிளந்தவனும். என்-

விரோதிநிவ்ருத்திக்குநிதர்சநபூதனாய். முன்னை - ஆஸ்ரிதனான ப்ரஹ்லாதன் நினைவுக்குமுற்கோலின. கோளரியே - நரஸிம்ஹமானவனே. உன்னை - இப்படி ஆபத்ஸகனாய்ப்ராப்தனாய்போக்யனானவுன்னை. சிந்தைசெய்துசெய்து - நிரந்தராநுஸந்தானம்பண்ணி. நெடு - அந்தப்ரீதியாலேயுத்துங்கமான. உன் - உன்னுடையகுணவாசகமான. மொழி - திருவாய்மொழியை. மா - அவ்விஷயத்துக்கீடானபெருமையுடைய. இசை - இசையோடே. பாடி - பாடி. ஆடி - அப்பாட்டுக்கீடானவபிநயந்தோற்றும்படியாடி. இப்படிகரணத்ரயத்தாலுமுண்டான போகத்தாலே என்-என்னுடைய. முன்னைத்தீவினைகள்-அநாதிகாலார்ஜிதபாபங்களை. ‘‘ 𑌨𑍋𑌪𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ’’ (நோபஜநம்ஸ்மரந்) என்னும்கணக்கிலே, யான்-நான், முழுவேரரிந்தனன் - ஒன்றொழியாமல் வேரோடேயரிந்தேன். போக்த்ருத்வமித்தலையிலே யானவோபாதி, விரோதிநிவர்த்தகத்வமும் இங்கேயாகக்குறையில்லையிறே. ஸ்வரூபம் தத்ப்ரகாரமானபின்பு, எனக்கு - எனக்கு. முடியாதது - தலைக்கட்டாதது. என்னதான்.

ஸர்வாபீஷ்டமும் ஸித்தமன்றோவென்று கருத்து......................*

௭-ஆம்பாட்டு.

ஆஸ்ரிதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தோற்றுவானொருவனானபின்பு எனக்கொரு கர்த்தவ்யாம்ஸமுண்டோவென்கிறார்.

(உன்னைச்சிந்தைசெய்துசெய்து) இனிமையாலே விடவொண்ணாதிருக்கிறவுன்னை மாறாதேயநுஸந்தித்து. (உன்னை) போக்யனுமாய் ப்ராப்தனுமானவுன்னை. (சிந்தைசெய்துசெய்து) ‘‘ 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 ’’ (நிதித்யாஸிதவ்யঃ) என்கிற விதிப்ரேரிதனாயன்றிக்கே, போக்யதையாலே விடமாட்டாதே அநவரதபாவனைபண்ணி. (உன்னித்யாதி) நெடுமையும், மஹத்தையும் - மொழிக்கும், இசைக்கும் விசேஷணம். இயலிற்பெருமையும், இசையிற்பெருமையுஞ் சொல்லுகிறது. இயலுமிசையும் கனாகனவொண்ணாதபடி யிருக்கிற மொழியைப்பாடி, அதிருந்தவிடத்தி லிருக்கவொட்டாமைஆடி. (என்னித்யாதி) என்னுடைய ப்ராக்தனமான கர்மங்களை வாஸனையோடேபோக்கினேன். முழுவேர் - வேர்முழுக்கவென்றபடி. பக்கவேரோடேயென்றபடி, அவன்விரோதியைப் போக்கச்செய்தேயும், பலாந்வயம் தம்மதாகையாலே (அரிந்தனன்யானென்கிறார்)

(உன்னையித்யாதி) எனக்குப்பண்டேயுபகரித்தவனே. (உன்னைச்சிந்தையினாலிகழ்ந்த) உக்திமாத்ரமன்றிக்கே, நெஞ்சால் இகழ்ந்தானாயிற்று. இத்தால்-அவன்விடுவது, புத்திபூர்வகம்ப்ராதிகூல்யம்பண்ணினானை; கைக்கொள்ளுகைக்கு மித்ரபாவமமையும். (இரணியனகன்மார்வங்கீண்ட) வரபலபுஜபலமூட்டியாகவளர்ந்த சரீரமானது திருவுகிர்க்கிரை

போராமையாலே, அநாயாஸேநகிழித்துப்பொகட்டானாயிற்று. (என்மு ன்னைக்கோளரியே) நாஸிம்ஹமாயுதயிற்றும் தமக்கென்றிருக்கிறார். கோ ளென்று-மிடுக்காதல், தேஜஸ்ஸாதல். "மஹாவிஷ்ணும்" என்கிறமிடு க்காதல், "ஜ்வலந்தம்" (ஜ்வலந்தம்) என்கிறதேஜஸ்ஸாதல். ஆஸ்ரிதரிலே யொருவனுக்குச்செய்ததும் தனக்குச்செய்ததாக நினைத்திராதவன்றுப் கலத்ஸம்பந்தமில்லையாமித்தனை. (முடியாததென்னெனக்கே) நீப்ரதிஜ் ஞாஸமகாலத்திலேவந்து தோற்றுவாயாயிற்ற பின்பு எனக்கு முடியாத துண்டோ...

ஜீயர் அரும்பதம்.

ஆரும்பாட்டு. (உன்னையித்யாதி) "என்முன்னைக்கோளரியே முடியாத தென்னெனக்கே" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை (ஆஸ்ரிதனுடையவித் யாதி) இனியுமக்குச் செய்யவேண்டுவதென்னென்ன வென்றவதாரிகையினடியி லே கூட்டிக்கொள்வது.

இனிமையாலேயென்றது - "போகநீந்திளைமிக்கைசெய்த" என்றதின் த்விதியார்த்தத்தைப்பற்ற. மிப்பைக்காந்தம் (மாருதேயநுஸந்தித்தென்றது) வி வரணம் (போக்யனுமாயித்யாதி) "போகநீந்துளைமிக்கைசெய்த, எந்தாய்" என்றபதத்வயத்தையும்பற்ற (போக்யனுமாய்ப்ராப்தனுமானவுன்னையென்றது) ஸாதநத்வேந பலகாலும் சிந்திக்கிறேரோவென்ன (நிதித்யாஸிதவ்யஇத்யாதி)

நெடுமையும், மஹத்தையும் - பர்யாயமன்றோவென்ன (நெடுமையுமித்யா தி) நெடு-மொழி, மா-இசை, என்றபடி. உபபாதநம் (இயலிற்பெருமையுமித்யா தி) இயலிற்பெருமையும், இசையிற்பெருமையுமாயது - அர்த்தகாம்பீர்யத்தாலு ம், ரஸ்யதாதிசயத்தாலு மெல்லைகாணவொண்ணாதிருக்கை யென்கிறார் (இயலு மிசையுமித்யாதி) மொழியைப்பாடி - திருவாய்மொழியைப்பாடி.

ப்ராக்தநமான-அநாதிகாலார்ஜிதமான. விவரணம் (பக்கவேரித்யாதி) ப் ரதாநவேரும், பக்கவேருமாவன-ருசிவாஸனைகள். தீவினைகள் முழுதும் வேரோ டேயரிந்தனன் என்ற மோரர்த்தமுண்டு. "அரிந்தனன்யான்" என்று ஸ்வகர்த் ருகமாகச்சொல்லுவானென்னென்ன (அவன்விரோதியையித்யாதி) பலாந்வயம்- ப்ரதிபந்தகநிவ்ருத்திரூபபலாந்வயம். அரிந்தனன் - அரியப்பெற்றேனிதியாவத்.

தாத்பர்யம் (எனக்கித்யாதி) இந்த தாத்பர்யம் - "என்முன்னைக்கோளரி யே" என்னுமளவுங்கடாக்ஷித்தது. "சிந்தையினும்" என்றுவிசேஷித்ததக்குபாவம் (உக்திமாத்ரமன்றிக்கேயித்யாதி) இகழ்ந்த - அநாதரித்த. "சிந்தையினுமிகழ் ந்த" என்கையாலே-அவனே புத்திபூர்வகமாக ப்ரதிகூலனாய்விட்டாலவன் விடுவ னென்றும், இவன்பக்கலல்பாநுகூல்யமுண்டானாலவனங்கீகரிப்பனென்ற மீஸ்வ ரனுக்குண்டான குணநிக்யம் பலித்ததென்கிறார் (இந்தாலித்யாதிவாக்யத்வயோ) (அமையுமென்ற) அநந்தரம், என்றதாயிற்றென்று கூட்டுவது.

அகல்மார்வம்-பேரிடமுடையமார்வம். தாத்பர்யார்த்தம் (வரபலேத்யாதி) ஊட்டியாக - ஆஹாரமாக. உகிர்-நகம். இரை-லக்ஷ்யம். அநாயாஸேநவென்றது- "கீண்ட" என்றத்தைப்பற்ற.

என்முன்னைக்கோளரியே-என்னுடையவிரோதி நிவ்ருத்திக்கு நிதர்சனபூதனாய், ஆஸ்ரிதனான ப்ரஹ்லாதன்நினைவுக்கு முற்கோலினவனாய், நிரதிசயதேஜோபலங்களையுடைய நரஸிம்ஹமானவனே இதிஸம்பத்தார்த்தம். "என்" என்றதுக்குபாவம் (நரஸிம்ஹமாயித்யாதி) கோள்-மிடுக்கும், தேஜஸ்ஸும். "மஹாவிஷ்ணும்" என்கிறவிடத்தில், மிடுக்காவது-ஸர்வலோக வ்யாபநஸக்தி. மிடுக்கையும் தேஜஸ்ஸையும் மந்த்ரலிங்கத்திலேகாட்டுகிறார் (மஹாவிஷ்ணுமித்யாதி) இவ்வவதாரம் தமக்காகவென்றிருக்கைக்கடியேதென்ன (ஆஸ்ரிதரிலேயித்யாதி)

"கோளரியே, முடியாததென்னெனக்கு" என்கிற ஸமபிவ்யாஹாரதாத்பர்யம் (நீப்ரதிஜ்ஞேத்யாதி) முடியாததென் - தலைக்கட்டாததெதுதான். இதாநீம ஸித்தமிதஃபரம்ஸாம்யம் கிஞ்சிதஸ்திகிம், ஸர்வஜ்ஞஸித்தமிதிபாவஃ.

உன்னைச்சிந்தைசெய்துசெய்து இத்யாரப்ய, என்முன்னைக்கோளரியே-எனக்கு-முடியாததென் இத்யந்வயஃ..*

ஏழாம்பாட்டு.

முடியாததென்னெனக்கேலினிமுழுவேழுலகுமுண்டானுகந்துவந்
தடியேனுட்புகுந்தானகல்வானுமல்லனினிச்
செடியார்நோய்களெல்லாந்துரந்தெமர்கீழ்மேலெழுபிறப்பும்
விடியாவெந்நரகத்தென்றுஞ்சேர்தன்மாறினரே.

ஆறாயிரப்படி.

(முடியாததென்) ஸர்வேஸ்வரனாயிருந்த வெம்பெருமானுக்கென்பக்கலபிநிவேசமென்னளவில் பர்யவஸியாதே, என்னோடு ஸம்பந்தித்தார்பக்கலிலுங்கூட வெள்ளங்கோத்தது, ஆதலாலவனென்னை யகலநினைக்கிறிலன்; இனிமுடியாததொன்றுண்டோவென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், என்பக்கல்பண்ணினவுபகாரம் என்குலத்தில் ஸம்பந்தித்தாரெல்லாருமுஜ்ஜீவிக்கும்படியாயிற்றென்கிறார்.

முழுவேழுலகும்-ஸமஸ்தலோகமும். உண்டான்-தன்செல்லாமையாலே தனக்குள்ளேயாம்படி அவற்றையமுதுசெய்தவன். உகந்து - அச்செல்லாமைதனக்கென்பக்கலிலேயுண்டாயதுக்குமேலே. ஆதராதிசயத்தையுடையனாய்க்கொண்டு அடியேன்-என்னுடையசேஷத்வஸம்பந்தமேபற்றாசாக. உள்-உள்ளே. வந்து-வந்து. புகுந்தான்-புகுந்தான். இனி-இனி. அந்தலோகங்கள்போலே அகல்வானும்-புறம்புபோமவனும். அல்லன்-அல்லன். இதடியாக,கீழ்-கீழும். மேல்-மேலும். எழுபிறப்பும்-எழுபிறப்பிலும். எமர்-என்னோடுஸம்பந்தமுடையார். செடி - செடிபோலே. ஆர்-செறிந்த. நோய்களெல்லாம்-அவித்யாகர்மவாஸநாதிகளான ஸமஸ்தவ்யாதிகளையும். துரந்து-கடக்கவோட்டி. விடியா - ஒருகால்முடிந்து வெளிச்சிறப்பதன்றியே. வெம்-நிரதிசயதாபகரமான. நரகத்து-ஸம்ஸாரமாகிறநிரயத்திலே. என்று

ம்-யாவதாத்மபாவி. சேர்தல்-கிட்டுகை. மாநினர்-தவிர்ந்தார்கள். இனி-இப்படி து
லஸம்பந்திபர்யந்தமாக என்னைப்பக்ஷபதித்தபின்பு. எனக்கேல்-எனக்காகில். முடி
யாதது-முடியாதது. என்-உண்டோ.

என்னோடு ஸம்பந்தித்ததாகில் எல்லாக்காரியமுந் தலைக்கட்டுமென்றகருத்து.

ஈடு - ஏழாம்பாட்டு.

என்னளவில் விஷயீகாரம் என்னுடையஸம்பந்தி ஸம்பந்திகளள
வும் சென்றதுகிடீரென்கிறார்,

(முடியாததென்னெனக்கேலினி) எனக்காகிலினி முடியாதது
ண்டோ. எனக்கினி முடியாததுண்டோ - எனக்கினி அநவாப்தமாயிரு
ப்பதொன்றுண்டோ.

நீரிதென்கொண்டு சொல்லுகிறீரென்ன (முழுவித்யாதி) ப்ரள
யாபத்திலே யகப்பட்டபூமி, தன்வயிற்றிலே புகாதபோது படும்பாடடங்
க, தானென்பக்கல் புகாதபோது படுவாரய்வந்து புகுந்தான், எனக்கி
னி முடியாததுண்டோ. (அடியோடும்புகுந்தான்) ஸம்பந்தத்தைப்பா
ர்த்துப்புகுந்தான். (உட்புகுந்தான்) ஒருநீராகக்கலந்தான். தன்பக்கல்
ஜகத்துப்புக்காற்போலன்றியே, உகந்துபுகுந்தான். இவனுக்கும் ஜகத்து
க்கும் செல்லாமையொக்கும், உகப்பேயின்றிஷயத்தில் தன்னேற்றம்.

(அகல்வாவுமல்லனினி) அந்தபூமிக்கு, ப்ரளயங்கழிந்தவாறே
அகலவேணும் ; இவனுக்கதுவுமில்லை. முதலிலேயிவனை ப்ரஸங்கிக்க
வொட்டுகிறிலன். சேதநனைப்போலே பாபத்தாலேயாகன்று ஒருஸங்கு
சுத்தாலே கிட்டுமதில்லையே யிவனுக்கு.

உம்மையவனிப்படி விரும்பிறுகில் ; பனிநிழல்போலே உம்
மைநோக்கிக்கொண்டு விடவமையுமோவென்ன (செடியாரித்யாதி) செ
டி-பாபம். பாபத்தாலே பூர்ணமான துக்கங்கள். நாறுமண்டினநோய்க
ளெல்லாம்துரந்து. விஷயப்ராவண்யத்தாலே வந்தநோய், அயோக்யதா
நு ஸந்தாநத்தாலேவந்தநோய், பகவதநுபவ விச்லேஷத்தாலேவந்த
நோய், இவற்றையெல்லாம் வாஸநையோடேயோட்டி. “ உள்ளநோய்க
ளெல்லாம்துரந்து ” என்கிறவிடத்திலும் சொல்லிற்றில்லையோவிதென்
னில் ; அங்குச்சொல்லிற்று - தம்மளவு ; இங்கு - தம்ஸம்பந்தி ஸம்ப
ந்திகள் விஷயமாயிற்று. இப்படியோட்டிற்றெத்தாலேயென்னில்
(எமர்) வேறொன்றாலன்று, என்னோட்டை ஸம்பந்தமேஹேதுவாக, ஸ
ம்பந்தமெவ்வளவென்னில் (கீழ்மேலெழுபிறப்பும்) கீழேழுபடிகாலுமே
லேழுபடிகாலும் தம்மோடே ஏழுபடிகாலுமாக இருபத்தொருபடிகால்.
(விடியாவெந்நரகத்து) ஒருநாள்வரையிலே கர்மக்ஷயம்பிறந்தவாறேவிடி
யுமிறே யமன்தண்டல். இதுவிடியாவெந்நரகமிறே. “ நரகம் ” என்று

புத்திபிறக்குமதில், தண்மைதோற்றாத நரகமிது. (என்றும்சேர்தல்மாறினரோ) என்றும் கிட்டக்கடவதான தண்மை தவிர்ந்தார்கள். நானும் ப்ரார்த்திக்கவேண்டிற்றில்லை, அவனும் நினைப்பிடவேண்டிற்றில்லை. எத்தாலேயென்னில்; என்பக்கலவன்பண்ணின பக்ஷபாதராஜகுலத்தாலே மாறிக்கொண்டுநின்றார்கள். முடியாததென்னெனக்கேலினி என்றந்வயம்.*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (முடியாததென்னித்யாதி) "எமர்கீழ்மேல்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை (என்னளவிலித்யாதி)

எனக்கேல் - எனக்காகில், "ஏல்" என்றது-சேத் என்றதினர்த்தம். முடியாததென் - ஸாத்யமாகாததேது. ஸாத்யமாகாததுண்டோவென்றபடி. விவரணம் (எனக்கித்யாதி)

நீரிதென்கொண்டென்கிற சங்கைக்கு - அவனென்பக்கல் பண்ணினவ்யாமோஹங்கொண்டு சொல்லுகிறேனென்றுத்தரம். "முழுவேழுலகுமுண்டான்" என்கிறவிது - த்ருஷ்டாந்தார்த்த மித்யபிப்ராயேணாஹ (ப்ரளயாபத்திலேயித்யாதி) "அடியேன்" இதிபதம்-ஹேதுகர்ப்பமித்யபி ப்ராயேணாஹ (ஸம்பந்தத்தையித்யாதி) "உகந்து, வந்து, உள்," இதிபதத்ரயம் த்ருஷ்டாந்தாத்தார்ஷ்டாந்திகஸ்யாதிக்ய பரமித்யபிப்ராயேணாஹ (ஒருநீராகவித்யாதி) (உகப்பேயிவ்விஷயத்தில்தன்னேற்றம்) ஆழ்வார்விஷயத்திலிவனுக்குண்டானவுகப்பே யிவன்றனக்கேற்றம். யத்வா, இவ்விஷயமென்றது - ஈஶ்வரனையாதல்.

உக்தஸமுச்சயபரஶ்சசப்த இத்யபிப்ராயேணபாவம் (அந்தபூமிக்கித்யாதி) அகலாமையின் சரமாவதிமாஹ (முதலிலேயித்யாதி) அகலவொண்ணாமைக்கு ஹேதுவேதென்ன (சேதநனையித்யாதி)

பனைநிழல்போலே - பனைமரத்தின்நிழல் பனையைமாத்ரம் காக்குமாபோலே. செடி - பாபமும், தூறும். முந்தினது (பாபத்தாலேயித்யாதி) த்விதீயம் (தூறுமண்டினவித்யாதி) செடிபோலேசெறிந்த நோய்களென்றபடி. "நோய்கள்" என்கிற பஹுவசநத்துக்கும், "எல்லாம்" என்கிறதுக்கும்பாவம் (விஷயப்ராஸங்கேயேத்யாதி) "தூரந்து" இதிபதஸாமர்த்த்யாதாஹ (வாஸனையோடேயோட்டியிதி) தடஸ்த்தசங்கையை யநுவதித்து பரிஹரிக்கிறார் (உள்ளநோய்களித்யாதி)

"எமர்" என்கிறவிடத்திலே - "ஸப்தாநந்தரஹணவஶமோயாதி ஸம்கேஶயக்ஷு" (அந்தோநந்தக்ரஹணவஶகோயாதிரங்கேஶயத்வத்" இத்யாத்யநுஸந்தேயம். "கீழ்மேலெழுபிறப்பும்" என்றது - நடுவேழுபிறப்புக்கு முபலக்ஷணமித்யாஹ (கீழேழுபடிகாலுமித்யாதி) தம்மோடேயேழுபடி காலுமென்றது - தமக்குமுன்னே மூன்றுபேரும், பின்னேமூன்றுபேரும், தாமுமாக வேழுபடிகாலென்றபடி. இருபத்தொருபடிகால் - இருபத்தொருதலைமுறை.

"விடியா" என்றதுக்குபாவம் (ஒருநாள்வரையிலேயித்யாதி) யமன்தண்டல் - யமதண்டம். இது - ஸம்ஸாரம். வெம்மைக்கர்த்தம் (நரகமென்றித்யா

தி) ஒருநாளும் முடிந்து வெளிச்சிறப்பதன்றியே, நிரதிசயதாபகரமான ஸம்ஸாரமாகிற நிரயத்தில்.

' என்றும் சேர்தல்மாறினரோ - யாவதாத்ம பாவிகிட்டுகைதவிர்ந்தார்களிதி சப்தார்த்த:. "மாறினர்" என்று - தத்கர்த்ருகமாகச் சொன்னதுக்குபாவம் (நானுமித்யாதி) (எத்தாலேயென்னிலிதி) உம்முடையார்க் கும்முடைய ஸம்பந்தத்தாலே ஸம்ஸாரவிச்சேதத்தில் ஹேதுவேதென்று சங்கிதார்ப்பாவ:. பூர்வார்த்தம் ஹ்ருதிநிதாயோத்தரமாஹ (என்பக்கலித்யாதி)

"என்றும்சேர்தல்மாறினர்" இத்யஸ்யாந்வயந்தர்ஸயதி (முடியாததித்யாதி) முழுவேழுலகுமுண்டான் உகந்துவந்தடியே னுட்புகுந்தான், இனி - அகல்வானுமல்லன் ; கீழ்மேலெழு பிறப்பிலுமுண்டான - எமர் - செடியார்நோய்களெல்லாம்துரந்து - விடியாவெந்நரகத்தென்றும் சேர்தல்மாறினர் ; எனக்கேலினி முடியாததென் இத்யந்வய:..*

எட்டாம்பாட்டு.

மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்தடியையடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம்யான்மூழ்கினன்
பாறிப்பாறியசுரர்தம்பல்குழாங்கணீறெழப்பாய்பறவையொன்
றேறிவீற்றிருந்தாயுன்னையென்னுணீக்கேலெந்தாய்.

ஆறாயிரப்படி.

(மாறிமாறி) உன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்கு விரோதியான ஸம்ஸாரத்தில் வர்த்திக்கிறநான், நிர்ஹேதுகமாக வுன்திருவடிகளையே ப்ராப்யமாகப்பெற்று அதிலேயுள்ளந்தேறி, முடிவில்லாத வழகியவின்பவெள்ளத்திலேமுழுகினேன்; ஆஶ்ரிதருடையவபேக்ஷிதங்களைச்செய்யும் ஸ்வபாவனாயிருந்த நீ யினியென்னைக் கைவிடாதொழியவேணுமென்றபேக்ஷிக்கிறார் ....*

பன்னீராயிரப்படி,

அநந்தரம், இப்பேறெனக்கு விச்சேதியாதொழியவேணுமென்கிறார்.

பல்பிறப்பும்-தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராதிகளான நாநாஜந்மங்களிலும். மாறிமாறிப்பிறந்து-ஒருகால் பிறந்ததிலே மீண்டுமீண்டும் பிறந்துபோரச்செய்தே. அடியை-உன்திருவடிகளை. அடைந்து-கிட்டி-சேஷத்வஜ்ஞாநத்தையுடையேனாய், உள்ளந்தேறி - "நீயேயுபாயபூதன்" என்கிறநெஞ்சில் தோற்றத்தையுடையேனாய். உன்னுடையவநுபவத்தாலே ஜநிதமான, ஈறு-முடிவு. இல் - இல்லாத. இன்பம்-ஆநந்தமாகிற. இரு-பெரிய. வெள்ளம்-வெள்ளத்திலே. யான்-அஹமர்த்தபூதனானநான். மூழ்கினன்-அவகாஹித்தேன். அசுரர்தம்-அஸுரர்களுடைய. பல்-பலவகைப்பட்ட. குழாங்கள்-குழாங்களானவை. பாறிப்பாறி-பஹுமுகமாகசிதிலமாய். நீறு-தூளியாய். எழ-கிளரும்படி. பாய் - அவர்களுடைய ஸேநாமத்யத்திலே பாயக்கடவனான. ஒன்று-அத்விதீயனாயுள்ள. பறவை - பெரியதிருவடியின்மேலே.

ஏறி-ஏறி. வீறு-உன்மேன்மைதோன்றும்படி. இருந்தாய்-இருந்த. எந்தாய்-என்னு தனே. உன்னை-ப்ராப்தனுமாய் ஶரண்யனுமாய் போக்யனுமாய் விரோதிநிவர்த்தகனுமானவுன்னை. என்னுள்-உனக்குஸர்வப்ரகாரபாரதந்த்ரனான என்னுள்ளினின்றும். நீக்கேல்-அகற்றுதொழியவேணும்..*

ஈடு-எட்டாம்பாட்டு.

இப்படி கனத்தபேற்றுக்கு நீர்செய்த ஸுக்ருதமென்னென்ன; ஒருஸுக்ருதத்தால்வந்ததல்ல, நான்பிறந்து படைத்ததென்கிறார். அதுவுமொன்றுண்டு, அந்தாதியாகப்பிறந்து போந்தேனென்கிறார்.

(மாறிமாறியித்யாதி) ஸபரிகரமாகவும்மை விஷயீகரிக்க, நீர்செய்ததென்னென்ன; கடலுக்குள்ளேகிடந்ததொரு துரும்பு திரைமேல் திரையாகத்தள்ளவந்து கரையிலேசேருமாபோலே, மாறிமாறிப்பிறந்துவாராநிற்க, திருவடிகளிலேகிட்டிக்கொண்டு நிற்கக்கண்டேனித்தனை. அநுபவித்துமீளுதல், ப்ராயஶ்சித்தம்பண்ணிமீளுதல், செய்பக்காலமில்லையாயிற்று. (அடியையடைந்துள்ளந்தேறி) உள்ளந்தேறி யடியையடைந்தவரல்லர், அடியையடைந்தாயிற்றுள்ளந்தேறிற்று. (உள்ளந்தேறி)நெடுநாள் விஷயவாஸனையாலும் பகவதலாபத்தாலுமுள்ள அந்தஃகரணகாலுஷ்யம்போய் ஹ்ருதயந்தெளிந்து. தெளிந்தவளவேயன்றியே (ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன்) முடிவின்றிக்கேயிருக்கிற பெரிய ஆநந்தஸாகரத்திலே யவகாஹித்தேன். திருவடி, திருவநந்தாழ்வான், இவர்கள் குமிழிநீருண்கிறவிஷயத்திலேயிறே நானவகாஹிக்கப்பெற்றது

ஆனாலும்முடையவிரோதிகள் செய்ததென்னென்ன; அதுக்குக்கடவர்ளாக்கேளிகோளென்கிறார் (பாறியித்யாதி) அஸுரவர்க்கத்தினுடையபலவகைப்பட்ட குழாங்களானவை, பாறிப்பாறி நீறெழுந்துபோம்படியாக ப்ரதிபக்ஷத்தின்மேலே பாயாநின்றுள்ள அத்விதீயமானபறவையை மேற்கொண்டு உன்னுடையவ்யாவ்ருத்திதோற்றவிருந்தவனே. பெரியதிருவடிக்கத்விதீயத்வம்-அவன்கருத்தறிந்து நடக்கையிற்றலைவனுகை. அவன்ப்ரதிபக்ஷநிரஸநத்துக்குப்பண்ணினவ்யாபாரம் பெரியதிருவடிதிருத்தோளிலே பேராதேயிருந்தவித்தனை. (உன்னையித்யாதி) ஸ்வாமியானநீ இனியொருகாலமும் உன்னையென்பக்கல் நின்றும் பிரித்துக்கொண்டு போகாதொழியவேணும். (உன்னையென்னுள்நீக்கேல்) என்னோடேயிப்படிகலந்தவுன்னை, உன்னுடையகலவியால்வந்த ரஸமறிந்த வென்பக்கல்நின்றும் நீக்கநினையாதொழியவேணும். தம்முடையவினிமையாலே அதிசங்கைபண்ணுகிறார். தம்முகப்பவனை யெதிரிட்டபடி. (எந்தாய்) விரோதியைப்போக்கிக் கலக்கைக்கடியான ப்ராப்தியைச்சொல்லுகிறது......*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (மாறிமாறியித்யாதி) "பிறந்து" என்றத்தைப்பற்றவவ தாரிகை (இப்படியித்யாதி) (இப்படிகனத்தபேற்றுக்கு) ஸம்பந்திஸம்பந்திபர் யந்த ஸம்ஸாரவிச்சேதரூபபலத்துக்கு. (ஒருஸூக்ருதத்தாலே யித்யாதிவாக்யத்வ யமும்) ரஸோக்தி. (பிறந்துபடைத்தது) ஜந்மஸித்தமென்றுத்வயி. ஸ்வபாவார்த்தஸ்து - பிறவாநிற்கச்செய்தே பெற்றது. அதாவது-தூர்க்கதியேபற்றாசாக வங்கீ கரித்தானென்றபடி. "மாறிமாறி" என்றதுக்குபாவம் (அதுவுமித்யாதி) நிர்ஹேதுகமென்றபடி. (அதுவுமொன்றுண்டு) "ஸூக்ருதமில்லை" என்னப்போகாதே, அப்படியேயொரு ஸூக்ருதமுமுண்டென்றபடி. அந்தாதியாகப்பிறக்கை ஸூக்ருதமென்றபடி. (அந்தாதியாகப்பிறக்கை) பூர்வதேஹத்தினுடைய வந்தமுத்தரதேஹத்துக்காதியாம்படியாகப் பிறக்கை.

"இப்படிகனத்தபேறு" என்றத்தை "இன்னது" என்று விவரியாநின்றுகொண்டு, தூர்க்கதியேபற்று சாகவங்கீகரித்தானென்று வாஸ்தவமானவர்த்தத்தையருளிச்செய்கிறார் (ஸபரிகரமாகவித்யாதியாலே) "மாறிமாறி" என்றவீப்ஸைக்குபாவம் (அறுபவித்தித்யாதி)

* அடியையடைந்துள்ளந்தேறினமைக்கு - "ஸாதம்ஸமாஸாத்யவிபூதஸத்வா" (ஸாதம்ஸமாஸாத்யவிபூதஸத்வா) என்றத்தையருளிச்செய்வர். "அடியையடைந்துள்ளந்தேறி" என்றத்தால்-மநஃப்ரஸாதமுண்டானபின்பு அடிகளைக்கிட்டு முபாஸகவ்யாவ்ருத்தி (உள்ளந்தேறியித்யாதி) "மாறிமாறி" இத்யாதிக்கு தேவதிர்யகாதிகளான நாநாஜந்மங்களிலொருகாற்பிறந்ததிலே மீண்டுமீண்டு பலபிறப்பும்பிறந்து போரச்செய்தேயுன்திருவடிகளைக்கிட்டி ஹ்ருதயந்தெளிந்து என்றுசப்தார்த்தம். தாத்பர்யம் (நெடுநாளித்யாதி) "இன்பத்திருவெள்ளம்" இத்யத்ர, அத்துகாரஃ - பாதபூரணார்த்தோவ்யயஃ. ஈறிலின்ப விருவெள்ளமென்றபடி. இருமை - பெருமை. "ஈறிலின்பம்" என்று-நஶ்வரமான வைஶ்வர்யவ்யாவ்ருத்தி. "இரு" என்று-அல்பஸூகமானகைவல்யவ்யாவ்ருத்தி. இந்தநிரதிஶயாநந்தத்துக்கடியே தென்கிறசங்கையிலே "பறவையொன்றேறி வீற்றிருந்தாய்" இத்யேதத்பராம்ருஶ்ய நாஹ (திருவடியித்யாதி) விஷயஸ்வபாவமே ஹேதுவென்றபடி. குமிழ்நீருண்கிற-நிமக்நராகிற.

மேலுக்கவதாரிகை (ஆனுலித்யாதி) அதுக்குக்கடவாரென்றது - "பறவை" என்றத்தைப்பற்ற. சப்தார்த்தம் (அசுரவர்க்கத்தினுடையவித்யாதி) பாறிப்பாறி - சிதறிச்சிதறி. நீறெழ - தூளியாய்க்கிளம்பும்படி. "பாய் - ஒருபறவையேறி" இத்யந்வயஃ. தலைவன் - ப்ரதாநன். "பாறிப்பாறி" இத்யாதி-ஈஶ்வரவிசேஷணமாக்கி அர்த்தாந்தரம் (அவன்ப்ரதிபக்ஷேத்யாதி) போராதே-சலியாதே.

"இனியொருகாலமும்" என்கையாலே - இவ்வளவும் ஸம்ஸாரத்தில் வைத்ததுமதிஶங்கா நிமித்தமிதிஸ்புரதி. "ஈறிலின்பத்திருவெள்ளம்யான் மூழ்கினேன்" என்கையாலே - "இந்தபோகம் தமக்குத்தொங்கப் புகுகிறதோ" என்று போக்யதாதிசயாததிசங்கத இத்யபிப்ராயேண பாவாந்தரமாஹ (என்றேயித்யாதி) த்விவாரம் ப்ரதிகோபாதாநம் - பாவத்வயத்யோதகம். விவக்ஷிதமதிசங்காஹேதும் ஸ்பஷ்டயதி (தம்முடையவித்யாதி) இனிமையாலே - ப்ரீதியாலே. கிழும்மேலும் - ஈஶ்வரனுடைய வதிசங்கையாயிருக்க, இங்கே-தாமெப்படி யதிச

ங்கைபண்ணுகிறாரென்ன (தம்முகப்பித்யாதி) இத்தால்-பரஸ்பராநுராகத்தைத் யோதிப்பித்தாராயிற்று. "பாறிப்பாறி" இத்யாதிகளுஞ்ச பராம்ருஶந்தாஹ (விரோதிநையயித்யாதி)

மாறிமாறிதொடங்கி, மூழ்கினன்-அசுரர்தம்பக்கல் குழாங்கள் - பாறிப்பாறி நீறெழப்பாய்கின்ற - ஒன்றான பறவையேறி வீற்றிருந்தாயான-எந்தாய்-உன்னையென்னுள்நீக்கேல் இத்யந்வயঃ..*

ஒன்பதாம்பாட்டு.

எந்தாய்தண்டிருவேங்கடத்துணின்றாயிலங்கைசெற்றாய்மராமரம்
பைந்தாளேழுருவவொருவாளிகோத்தவில்லா [ம்
கொந்தார்தண்ணந்துழாயினாயமுதேயுன்னையென்னுள்ளேகுழைத்தவெ
மைந்தாவானேறேயினியெங்குப்போகின்றதே.

ஆறாயிரப்படி.

(எந்தாய்) திருமலையிலே புகுந்து நின்றருளினபடியையும், உன்னுடைய திருவவதாரங்களையும், உன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும், உன்னுடையவழகையும், ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்தருளும்படியையும், மற்றுமுள்ளபடியை யடங்கவெனக்கு போக்யமாகக்காட்டியருளி, உன்னை யென்னுள்ளே யொன்றாகக்குழைத்தருளின நீயினியெங்கேபோவது ; போவேனென்றால்தான் போகமுடியுமோ வென்கிறார்..............*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், நீயேக்ருஷிபண்ணிக்கலந்து இனியெங்கேறப்போவதென்கிறார்.

எந்தாய் - எனக்குநிருபாதிகஸ்வாமியாய். தண் - ஶ்ரமஹரமான. திருவேங்கடத்துள் - திருமலையிலே. நின்றாய் - எழுந்தருளிநின்றஸுலபனாய். இலங்கை-ஆஶ்ரிதவிரோதிகளுக்கு வாஸஸ்த்தாநமானலங்கையை. செற்றாய் - அழித்தவனாய். மராமரம் - மராமரங்களினுடைய. பை - பருத்த. தாள் - அடி. ஏழு - ஏழும். உருவ - உருவும்படி. ஒருவாளி - ஒருவாளியை. கோத்த - அநாயாஸேநகோர்த்த. வில்லா - வில்லையுடையனாய். கொந்து - கொத்தாய். ஆர் - செறிந்து. தண் - குளிர்ந்த. அம்துழாயினாய் - திருத்துழாயாலேயலங்க்ருதனாய். எம்மமுதே - நித்யபோக்யனாய்க்கொண்டு. உன்னை - ஏவம்விதனானவுன்னை. என்னுள்ளே - என்னுள்ளே. குழைத்த - ஏகத்ரவ்யமாம்படிகலசின. மைந்தா - நித்யயௌவநஸ்வபாவனாய். இந்நிலையாலே, வான் - ஸூரிகளுக்கும். ஏறே - செருக்கனும்படிநின்றவனே. அஸாதாரண ஸம்பந்தத்தையும், ஸௌலப்யத்தையும், விரோதிநிவர்த்தகத்வத்தையுங்காட்டி, மஹாராஜரைப்போலே யென்னையும் விஶ்வஸிப்பித்து, ஒப்பனையழகைக்காட்டியெனக்கு நித்யபோக்யனாய்ப் பிரிக்கவொண்ணாதபடிகலந்து அத்

தாலே இளகிப்பதித்து இத்தாலே நித்யவிபூதிக்கும் மேலானமேன்மையை யுடைய நீ இனி - இனி. இந்தஸம்ஶ்லேஷத்தைவிட்டு எங்கு - எங்கே. போகின்றது - போகிறது.

இனிப்போகாதே யென்றுகருத்து..*

௯-ஒன்பதாம்பாட்டு.

முதலிலேயுன்னை யறியாதிருக்கிறவென்னை, உன்னையுமுன் போக்யதையையுமறிவித்து உன்னாலல்லது செல்லாதபடியாக்கினநீ இனியென்னைவிட்டுப் போகாதொழிய வேணுமென்கிறார்.

(எந்தாய்) ஶ்ரமஹரமான திருமலையிலேவந்துநின்று உன்ஸ்வாமித்வத்தைக் காட்டியென்னை சேஷத்வத்திலே நிறுத்தினவனே. (இலங்கைசெற்றாய்) பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷவிரோதியைப் போக்கினாற்போலே, என்னுடைய சேஷத்வ விரோதியைப் போக்கினவனே. (மராமரமெய்தமாலே) ஆஶ்ரித விஷயத்தில் மருவேந்திக்கொடுத்து காரியம் செய்யும்படி. பரந்தவடிவை யுடைத்தான மராமரங்களேழும் மறுபாடுருவும்படியாக, பண்டேதொளையுள்ள தோன்றிலே யோட்டினாற்போலே அம்பைக்கோத்த வில்வலியையுடையவனே. (கொந்தார் தண்ணந்துழாயினாய்) வைத்தவளையத்தோடேநின்றாயிற்று மராமரமெய்தது. அவதாரத்துக்குச்சேர ஏதேனுமொன்றாலே வளையம்வைக்கிலும், திருத்துழாயல்லது தோற்றாதிவருக்கு. கொந்தார் - தழைத்திருக்கை. (அமுதே) மராமரமெய்கிறபோதிலக்குக்குறித்து நின்றநிலை யிவர்க்கு போக்யமாயிருந்தபடி. (உன்னையித்யாதி) கலக்கிறவிடத்தில் "வநகஜ தூ", "ஏகதத்வம்" என்னலாம்படிகலந்து, இனி "போவேன்" என்றால், போகப்போமோ. போகிலும், கூடப்போமித்தனை. (மைந்தா) என்னோடேகலந்தவித்தாலே நவீக்ருதமான யௌவநத்தை யுடையவனே. (வானேறே) தன்போக்யதையை நித்யஸூரிகளையநுபவிப்பித்து, அத்தாலே வந்த மேன்மைதோற்ற விருக்குமாபோலேயாயிற்றிவரை யநுபவிப்பித்து மேன்மைதோற்றவிருந்தபடி. (இனியெங்குப்போகின்றதே) உன்னாலல்லது செல்லாதபடியான வென்னைவிட்டு, உன்னையொழிய காலக்ஷேபம்பண்ணவல்லார்பக்கல்போகவோ. நித்யஸூரிகளை விடிலன்றோ வென்னைவிடலாவது. "இவர்நம்மைவிடும்செய்வதென்" என்று அவனுக்குண்டானவதிசங்கையைப்பரிஹரியாநிற்க, "நீயென்னைவிட்டுப்போகாதேகொள்" என்கிறவிதுக்குக் கருத்தென்னென்னில்; விலக்ஷணவிஷயம், தானும்காற்கட்டி எதிர்த்தலையையும் காற்கட்டப்பண்ணுமாயிற்று.

(எந்தாய்) நீசேஷியல்லாமற்போகவோ (தண்டிருவேங்கடத்துணின்றாய்) தூரஸ்த்தனாய்ப்போகவோ; (இலங்கைசெற்றாய்) விரோ

திரஸ்கரிஸீலனல்லாமற்போகவோ; (மராமரமித்யாதி) ஆஸ்ரிதவிஷயத்திலே மழுவேந்திக்கொடுத்துக் கார்யஞ்செய்யுமவனல்லாமற்போகவோ; (கொந்தார்தண்ணந்துழாயினாய்) ஆஸ்ரிதரக்ஷணத்துக்கு மாலையிட்டிலையாய்ப்போகவோ; (அமுதே) போக்யபூதனல்லாமற்போகவோ; (உன்னையென்னுள்ளேகுழைத்த) ஒருநீராகக்கலந்திலையாய்ப்போகவோ; (எம்மைந்தா) நவீக்ருத ஸ்பாவனல்லாமற்போகவோ; (வானேறே) மேன்மையனல்லாமற்போகவோ; (இனியெங்குப்போகின்றதே) போகிலும் கூடப்போமித்தனையொழிய, “ஸகதூம்” (ஏகதத்த்வம்) என்னலாம்படிகலந்து தனித்துப்போகலாமோ..................*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு (எந்தாயித்யாதி) “அமுதேயுன்னை யென்னுள்ளேகுழைத்தவெம்மைந்தா, இனியெங்குப்போகின்றதே” என்றபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை (முதலிலேயித்யாதி) “‘உன்னையென்னுள் நீக்கேல்’ என்கிறவிது உக்திமாத்ரமோ, ஹ்ருதயத்திலுமுண்டோவென்றறியவேணும்” என்று ஈஸ்வரனோடிபேர, சொல்லுகிறார் (எந்தாயித்யாதி) என்று வாக்யஸங்கதி. இந்தவாக்யஸங்கதி - ஏதத்தர்ஸகார்த்தநிகமநாவஸரேஸ்பஷ்டம். “திருவேங்கடத்துள்நின்றாய்-எந்தாய்” என்கையாலே (உன்னையுமென்றது)

“திருவேங்கடத்துள் நின்றாய் - எந்தாய்” என்றந்வயமுகேநாஹ ப்ரமஹரமானவித்யாதி) (உன்ஸ்வாமித்வத்தைக்காட்டி) ஸ்வாமியாகையாலேயிறே புனங்காப்பாரைப்போலே திருமலையிலேவந்து நோக்குகிறதென்றுகருத்து.

தாத்பர்யம் (பிராட்டியித்யாதி) சேஷத்வவிரோதியைப் போக்கினவனே யென்றது - “மயர்வறமதிநலமருளினன்) என்றத்தைப்பற்ற. மழு-தப்தமான வயஃபிண்டம். பைந்தாள் - மராம்ரம் - ஏழுருவ என்றந்வயித்தருளிச்செய்கிறார் (பரந்தவித்யாதி) மராமரங்களினுடைய பருத்தவடியேழு முருவும்படியென்று மர்த்தமுண்டு. மறுபாடுருவும்படி - பின்னேயுருவிப்போம்படி. “கோத்த” என்றபதத்துக்கர்த்தம் (பண்டேதொளையுள்ளதித்யாதி) ஸமபிவ்யாஹாரத்துக்குபாவம் (வைத்தவளையத்தோடேயித்யாதி) மராமரம்-ஸாலவ்ருக்ஷம். பெருமாளுக்குத் திருத்துழாயுண்டோவென்ன (அவதாரத்துக்கித்யாதி) கொந்தார்-கொந்தாற்செறிந்து. கொந்து-கொத்து. தழையென்றபடி. “வாளிகோத்தவில்லா” என்றவநந்தரம், “அமுதே” என்றதுக்குபாவம் (மராமரமித்யாதி) இலக்குக்குறித்து-லக்ஷ்யம்பார்த்து.

“உன்னையென்னுள்ளேகுழைத்த” என்றத்தை - “இனியெங்குப்போகின்றதே” என்றத்தோடே கூட்டிதாத்பர்யம் (கலக்கிறவித்யாதி) குழைக்கை - ஏகத்ரவ்ய மென்னலாம்படிகலக்கை. “குழைத்த-எம்மைந்தா” இதிபதஸமபிவ்யாஹார தாத்பர்யம் (என்றோடேயித்யாதி) “குழைத்த-வானேறே” என்றுகூட்டிபாவம் (தன்போக்யதையையித்யாதி)

“உன்னை யென்னுள்ளே குழைத்தவெம்மைந்தா - இனியெங்குப்போகின்றதே” இதிபதஸங்கதிம் ஹ்ருதிநிதாயபாவம் (உன்னாலல்லதித்யாதி) “வானேறே-

இனியெங்குப்போகின்றது" என்றுகூட்டிபாவம் (நித்யஸூரிகளையித்யாதி) தடஸ்த்தஸங்கையய்நுவதித்து பரிஹரிக்கிறார் (இவர்நம்மையித்யாதி) தானும்காற்கட்டி தன்னுடையஸ்நேஹத்தாலே யெதிர்த்தலையையும் போகாதபடிகாற்கட்டப்பண்ணு மென்றபடி. காற்கட்டுகை - அதிஸங்கைபண்ணுகை.

கீழில்விசேஷணங்களையெல்லாம் போகாமைக் குறுப்பாக்குகிறார் (எந்தாயித்யாதி) யத்வா, "எந்து" என்றபதத்தை - முன்னே, தேசபரமாக வ்யாக்யாநம்பண்ணி, ஹேதுபரமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார் (எந்தாயித்யாதி) எங்கு-எத்தாலே. ஆஸ்ரிதரக்ஷணத்துக் கித்யாதிவாக்யம் - "ஒருவாளிகோத்தவில்லா, கொந்தார் தண்ணந்துழாயினாய்," என்கிறஸமபி வ்யாஹாரதாத்பர்யம்.

க்ரமேணாந்வயஃ..*

பத்தாம்பாட்டு.

போகின்றகாலங்கள்போயகாலங்கள்போகுகாலங்கடாய்தந்தையுயி
ராகின்றாயுன்னைநானடைந்தேன்விடுவேனோ
பாகின்றதொல்புகழ்மூவுலகுக்குநாதனேபரமாதண்வேங்கட
மேகின்றாய்தண்டுழாய்விரைநாறுகண்ணியனே.

ஆறாயிரப்படி.

(போகின்ற) ஸர்வாத்மாக்களுக்கும் மாதாசெய்யும்நன்மையும் பிதாசெய்யும்நன்மையும் தான் தனக்குச்செய்யும்நன்மையும் ஸர்வகாலமு மெனக்குச்செய்தருளும் ஸ்வபாவனாய், நிரவதிகநித்யஸித்த கல்யாணகுணவிஸிஷ்டனாய், ஸர்வலோகேஸ்வரனாய், நிரஸ்தஸமாப்யதிகனாய், திருமலையிலேபுகுந்தருளி யெனக்குங்கூட பரமஸுலபனாய், ப்ரமபோக்யனாயிருந்த வுன்னைநானடைந்தேன்; இனிவிடுவேனோவென்று கொண்டுதாமெம்பெருமானோடு கலந்தகலவிக்குத் தம்மாலுமவனாலும் வேறத்வந்தரத்தாலு மொழிவில்லையென்கிறார்.................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், உன்னுபகாரங்களைக்கண்ட நான் உன்னைப்பெற்றுவைத்து விடக்ஷமனோ வென்கிறார்.

போகின்றகாலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள்-வர்த்தமாநமாயும் பூதமாயும் ஆகாமியாயுமுள்ள காலத்திலும். தாய்தந்தையுயிராகின்றாய் - தாயும் தந்தையும் தன்னாத்மாவும்தனக்குப்பண்ணும் பரிவைப்பண்ணாநிற்பானாய். பாகின்ற - இப்படிஸர்வதோமுகமான ரக்ஷணத்தாலேபரக்கிற. தொல் - அநாதிஸித்தமான. புகழ் - குணப்ரதையையுடையனாய்க்கொண்டு. மூவுலகுக்கும் - த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும். நாதனே - நாதனாய். பரமா - இப்பெருமைக்குத்தனக்குமேலில்லாதவனாய். இம்மேன்மையன்றியே, தண் - ஸ்ரமஹரமான. வேங்கடம் - திரு

மலையிலே. மேகின்றாய் - மேவிநிற்கிற ஸௌலப்யத்தையுடையனாய். இப்பரத்வ ஸௌலப்யங்களுக்கும் போக்யதைக்கும் ஸூசகமாய். தண்-குளிர்ந்த. துழாய்- திருத்துழாயையுடைத்தாய். விரை - பரிமளம். நாறு - ப்ரவஹிக்கிற. கண்ணியனே- மாலையையுடையவனே. உன்னை - ஏவம்விதனானவுன்னை. அடைந்தேன் - ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற. நான் - நான். விடுவேனோ - விடக்ஷமனோ......................*

ஈடு - பத்தாம்பாட்டு.

நாம்போகாதொழிகிறோம், நீர் நம்மைவிடாதொழியவேணுமே யென்ன; நீபண்ணின வுபகாரங்களைக் கண்டுவைத்துவிட ஸம்பாவனையுண்டோவென்கிறார். காலத்ரயத்திலும் ஸர்வவிதபந்துவுமான வுன்னைவிட ஸம்பாவனையில்லையென்கிறார்.

(போகின்றவித்யாதி) காலத்ரயத்திலும், பரிவுடையதாய்செய்வதுஞ்செய்து, ஹிதகாமனானதமப்பன்செய்வதும்செய்து, "ஸபித்ராசபரித்யக்தஃ" (ஸபித்ராசபரித்யக்தஃ) என்று-அவர்கள் விடுமளவிலும், தான் தனக்குப்பார்க்கும் ஹிதமும் பார்க்கும்படி ஸர்வப்ரகாரத்தாலும் ப்ராப்தனுமாய், உபகாரகனுமானவுன்னை, உபகாரஸ்ம்ருதியையுடைய நான் கிட்டப்பெற்றுவைத்து, விடஸம்பாவனையுண்டோ. (யாகின்றவித்யாதி) "விதிதஃ" (விதிதஃ) என்கிறபடியே சத்ருகோஷ்டியிலும் ப்ரஸித்தமாம்படி பரம்பியிருப்பதாய் ஸ்வாபாவிகமான கல்யாணகுணங்களை யுடையையாய், த்ரைலோக்யத்துக்குநிர்வாஹகனானவனே. (பரமா) குணங்களுக்கும் ரக்ஷணத்துக்கு முன்னையெண்ணில் பின்னையெண்ணலாவாரில்லாதபடி ஸர்வாதிகனாயிருக்குமவனே. இப்படிஸர்வாதிகனாயிருந்துவைத்து, என்னையடிமைகொள்ளுகைக்காக, ஶ்ரமஹரமான திருமலையிலேவந்து ஸந்நிஹிதனானவனே. உன்னைநானடைந்தேன் விடுவேனோவென்றந்வயம். (தண்டுழாய்விரைநாறுகண்ணியனே) இவருடைய ஆர்த்தியெல்லாந்தீரும்படியாகவந்து விஷயீகரித்துத்தன்னை யநுபவிப்பித்து, "இவர் தன்னைவிடிற்செய்வதென்" என்கிற அதிசங்கையுந்தீர்ந்து, தோளில்விட்டமாலையும் பரிமளிதமாய், பிடித்துமோந்த இலைத்தொடைமாலையுந்தானுமாய்நின்றபடி...*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு (போகின்றவித்யாதி) * போகின்றகாலங்கள்தொடங்கி, "விடுவேனோ" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை (நாமித்யாதி) "தாய்தந்தை" என்கிறவிடத்திலே - உபகாரகத்வமும், பந்துத்வமுந்தோன்றுகிறது; ததுபயாநுகுணமாக வவதாரிகாத்வயமாஹ (நீபண்ணினவுபகாரங்களை யித்யாதிவாக்யத்வயேந)

போகின்ற - வர்த்தமானமாயும், போய-பூதமாயும், போகு-ஆகாமியாயுமுள்ளகாலங்களென்றபடி. சகாரம் - அநுக்தஸமுச்சயமாய், மாத்ராபித்யக்தஃ என்

றபடியாக்கி (அவர்கள்விடுமளவிலுமென்றது) தாய்தந்தைகளுக்கு ப்ராப்தியும் உபகாரகத்வமுமுண்டாகையாலே (ப்ராப்தனுமாயுபகாரகனுமானவுன்னையென்கிறது) "போகின்ற" இத்யாதிக்கு-வர்த்தமாநபூதாகாமியான காலத்ரயத்திலும் தாயுந்தந்தையும் தன்னுத்மாவுமாகாநிற்கிறவனேயென்றுசப்தார்த்தம். (ஸபித்ராசேதி) ஸுந்தரகாண்டே அஷ்டத்ரிம்ஶே, "ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி: | த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:" (ஸபித்ராசபரித்யக்தஸ்ஸுராைஶ்சஸமஹர்ஷிபி: | த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்யதமேவஶரணம்கத:.

தத்ரைவைகத்ரிம்ஶே ராவணம்ப்ரதிஸீதா, "விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: | தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி" (விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல: | தேநமைத்ரீபவதுதேயதிஜீவிதுமிச்சஸி.) பாகின்ற-பரம்பாநிற்கிற. தொன்மை- பழமையாய், அத்தால்பலிதம் (ஸ்வாபாவிகமானவென்று) (பரமா) பரோமாஅஸ்மாத்இதி-பரம:. "பாகின்றதொல்புகழ் மூவுலகுக்கும்நாதனே பரமா" என்றுகூட்டிபாவம் (குணங்களுக்குமித்யாதி)

* போகின்றகாலங்கள் தொடங்கி உயிராகின்றாய்- பாகின்றதொடங்கி வேங்கடமேகின்றாய்-உன்னைநானடைந்தேன் விடுவேனோ வென்றருளிச்செய்தார்; அநந்தரம் ஈஶ்வரன் பரிபூர்ண மநோரதனாய், தோளில்மாலையும் பரிமளிதமாய், இலைத்தொடைமாலையும் மோந்துகொண்டிருக்கு மிருப்பையநுபவிக்கிறார் - "தண்டுழாய்விரைநாறுகண்ணியனேயென்று" என்றுவாக்யயோஜனை. "விரைநாறு" என்றதுக்குபாவம் (இவருடையவித்யாதி) தண்டுழாய் - கண்ணி, விரைநாறு-கண்ணியனேயித்யந்வய:. (பிடித்துமோந்த) பரிமளாதிக்யத்தாலேமோந்த. இலைத்தொடை - பூப்பந்து. விரைநாறுகண்ணி - பரிமளம் ப்ரவஹிக்கிறமாலை. பாகின்ற தொடங்கி, கண்ணியனே-போகின்றகாலங்கள்தொடங்கி, உன்னைநானடைந்தேன் விடுவேனோவித்யந்வயோவா. வேங்கடமேகின்றாய் - திருமலையிலே மேவிநிற்கிறவனே. மேகுகை-பொருந்தி வர்த்திக்கையும், ப்ரகாஶிக்கையும்......................*

பதினொன்றும்பாட்டு.

கண்ணித்தண்ணந்துழாய்முடிக்கமலத்தடம்பெருங்
கண்ணனைப்புகழ்நண்ணித்தென்குருகூர்சடகோபன்மாறன்சொன்ன
எண்ணிற்சோர்விலந்தாதியாயிரத்துள்ளிவையுமோர்பத்திசையொடும்
பண்ணிற்பாடவல்லாரவர்கேசவன்றமரே.

ஆறாயிரப்படி.

(கண்ணி) எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையுள்ளபடியே யநுபவித்து, அநுபவித்தபடியேசொன்ன இத்திருவாய்மொழியை யிசையோடும்பண்ணிலே பாடவல்லார்க்கு, "கேசவன்றமர்" என்னு மிவ்வாகாரமல்லாத வாகாராந்தர மில்லையென்கிறார்.................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவச்சேஷத்வசித்தியை யருளிச்செய்கிறார்.

கண்ணி - மாலாகாரமாய். தண் - குளிர்ந்த. அம்துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான. முடி - திருமுடியையும். கமலம்-கமலம்போலேதர்ஶநீயமாய். தடம் - விசாலமாய். பெரு - நீண்ட. கண்ணனை - திருக்கண்களையுடையவனை. புகழ் - அவனுடைய ஆஶ்ரிதஸம்ஶ்லேஷகாரிதமான குணப்ரதையை. நண்ணி - கிட்டி. தென் - அழகிய. குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகராய். மாறன் - “ மாறன் ” என்கிறகுடிப்பேரையுடைய. சடகோபன் - ஆழ்வார். சொன்ன - அருளிச்செய்த. எண்ணில் - பகவதபிப்ராயத்தை. சோர்வில்-தப்பாத. அந்தாதி-அந்தாதியாயடைவுகுலைக்கவொண்ணாத. ஆயிரத்துள் - ஆயிரத்துள். ஓர் - அத்விதீயமான. இவைபத்தும் - இவைபத்தையும். இசையொடும் - இசையோடேகூட. பண்ணில் - பண்ணிலே. பாடவல்லாரவர் - பாடவல்லாரானவவர்கள். கேசவன்றமர்- ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனோடு அவ்யவஹிதஸம்பந்தயுக்தராவர்கள்.

எண்ணென்று-ஜ்ஞாநமாய், தத்வஜ்ஞாநத்தைத்தப்பாத வாயிரமென்றுமாம். பண்ணென்று - ஸ்வரம். இசையென்று - கீதப்ரகாரம். இது - இரண்டாமடியும்மூன்றாமடியும் அறுசீராய், முதலடியும் ஈற்றடியும் நாற்சீரான ஆசிரியத்துறை.

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லாரானாலுமாகவுமாம், அவர்களுக்கு குலசரணகோத்ராதிகளப்ரயோஜகம், இவ்வாகாரத்தாலே அவர்கள் பகவதீயரென்கிறார்.

(கண்ணியித்யாதி) இப்போதாயிற்று வளையம்செவ்வி பெற்றதும், முடிநற்றரித்ததும், திருக்கண்கள் விகஸிதமாயிற்றதும். (புகழ்நண்ணி) அவன் தன்பக்கல்பண்ணின வ்யாமோஹகுணத்திலே யவகாஹித்து. (தென்குருகூர்ச்சடகோபன்மாறன்) ஒன்றுதிருநாமம், ஒன்று சத்ருவர்க்கத்துக்கு ம்ருத்யுவாயுள்ளவ ரென்கிறது. (எண்ணில்சோர்விலந்தாதி) அவன் தம்பக்கல்பண்ணின வ்யாமோஹாதிசயத்தை யநுஸந்தித்து, அவற்றிலொன்றும்குறையாமே யருளிச்செய்த வாயிரத்திலிப்பத்து. (இசையொடும்பண்ணிற்பாடவல்லார்) இதிலபிநிவேசத்தாலே யிசையோடும் பண்ணோடும்பாடவல்லவர்கள். பண்ணாகிறது-கானம். இசையாகிறது - குருத்வலகுத்வாதிகள் தம்மிலேநெகிழ்ந்து பொருந்துகை. த்வநியிலே-நிறத்திலேயென்றபடி. (அவர்கேசவன்றமரே) அவர்களாரானுமாகவுமாம், குலசரணகோத்ராதிகளப்ரயோஜகம்; “ விண்ணப்பஞ்செய்வார்கள் ” என்னுமாபோலே, இவ்வாகாரத்தாலே அவர்கள் பகவதீயர்.

முதற்பாட்டில்-எம்பெருமான் “இவர்நம்மைவிடிற்செய்வதென்” என்கிறவதி சங்கையைப்போக்கினார்; இரண்டாம்பாட்டில் - அதுபோனபின்பு அவனுக்குப்பிறந்த புதுக்கணிப்பைச்சொன்னார்; மூன்றாம்பாட்டில் - தமக்கவன் பண்ணின ஔதார்யத்தை யநுஸந்தித்து வித்தரானார்; நாலாம்பாட்டில் - அவனுமக்குப்பண்ணின ஔதார்யமேதென்ன, இதரவிஷய வைராக்யமென்றார்; அஞ்சாம்பாட்டில் - இதரவிஷய வைராக்

யபூர்வகமாக ஆத்மாந்ததாஸ்யத்திலே அதிகரித்தநான் இனியொருநாளும் விடேனென்றார்; ஆறாம்பாட்டில் - ஆஶ்ரிதர்க்குதவுவாயானபின்பு எனக்கொருகுறையுண்டோவென்றார்; ஏழாம்பாட்டில் - என்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்குமொருகுறையில்லையென்றார்; எட்டாம்பாட்டில் - இதுக்குத் தாமநுஷ்டித்த வுபாயமின்னதென்றார்; ஒன்பதாம்பாட்டில் - "இவரகவாயறியவேணும்" என்றோரடிபேரநிற்க, இனிப்போகவொண்ணாதென்றார்; பத்தாம்பாட்டில் - நாம்போகாதொழிகிறோம், நீர்தாம்போகா தொழியவேணுமேயென்ன, காலத்ரயத்திலும் ஸர்வவித பந்துவுமானவுன்னை விடஸம்பாவனையில்லையென்றார்; இதில்கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்........ ....*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (கண்ணியித்யாதி) "பண்ணிற்பாடவல்லாரவர்கேசவன்றமர்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (நிகமத்திலித்யாதி) சரணசபதம்-சாகாவாசி. இவ்வாகாரத்தாலே - இத்தையப்யஸிக்கிறவாகாரத்தாலே.

(கண்ணியித்யாதி) மாலாரூபமாய்க் குளிர்ந்து அழகிய திருத்துழாயாலேயலங்க்ருதமான திருமுடியையும், கமலம்போலே தர்ஶநீயமாய் விசாலமாய் நீண்டதிருக்கண்களையுமுடையவனை. "உன்னை நானடைந்தேன்விடுவேனோ" என்றவநந்தரம், "கண்ணித்தண்ணந்துழாய்முடி" என்றதுக்குபாவம் (இப்போதாயிற்றித்யாதி) இப்போது - இருவரதிசங்கையும் தீர்ந்தவநந்தரம், வளையம - மாலை. நற்றரித்ததும் - நனாருகின்றதும்.

புகழாவதென்னென்ன (அவன்தம்பக்கலித்யாதி) நண்ணுகை - கிட்டுகையாய், அவகாஹித்தென்றபடி. தென்குருகூர் - அழகியதிருநகரிக்கு நிர்வாஹகரான. " சடகோபன், மாறன் " என்னவேணுமோ, ஒன்றுசொன்னாலமையாதோவென்ன (ஒன்றுதிருநாமமித்யாதி) " சடகோபன் " என்றது-ரூடி. " மாறன் " என்றது-யோகம்.

(எண்ணிற்சோர்வில்) எண்ணுகை - அநுஸந்திக்கை. அநுஸந்தாநத்திலொன்றுங் குறையாமே. " சடகோபன் மாறன்-எண்ணிற்சோர்வில்சொன்ன-அந்தாதியாயிரத்துள் " என்றந்வயித்தர்த்தம் (அவன்தம்பக்கலித்யாதி) அவற்றில்; வ்யாமோஹாதிசயங்களில். அந்தாதியான (ஆயிரத்தில்) என்றுகூட்டுவது. இவையுமோர்பத்து - அத்விதீயமான விவைபத்தையும்.

*• வைதத்வம்வ்யாவர்த்தயதி (இதிலபிநிவேசத்தாலேயித்யாதி) * பண்ணிசைகள் தானேதென்ன (பண்ணுநிறதித்யாதி) காநம் - த்வந்யாத்மகம். (குருத்வலகுத்வாதிகள்) குருத்வலகுத்வங்களும், ஆதிசப்தத்தாலே - ஸம்யுக்தங்களும், இவைகள் தத்தத்ராகாநு குண்யத்துக்காக (தம்மிலேநெகிழ்ந்துபொருந்துகை) சேருகை - இசையாகிறதென்றபடி. இதுக்கு நிறமென்றும்பேர். உக்தவிவரணம் (த்வநியிலேயித்யாதி) த்வநியென்றது - பண். நிறமென்றது - இசை. " இவ்வாக்யம்-ஸந்திக்தம்" என்றருளிச்செய்வர். "அவர்" இதிஸாமாந்ய நிர்த்தேஶஸ்யபாவம் (அவர்களாரோனுமித்யாதி) (விண்ணப்பஞ்செய்வாரிதி) " இசையொடும்பண்*

ணிற்பர்-வல்லார்" என்று - காநஸஹிதமாக விப்பத்தினநுஸந்தாநமே, அவர்கள் பகவதீயராகைக்கும், தந்முகேந வுத்தேஸ்யராகைக்கும் ப்ரயோஜகமென்றபடி. விண்ணப்பஞ்செய்வார் - அறையர். இவ்வாகாரத்தாலே - பாடவல்லாரொன்கிற வாகாரத்தாலே. இதிலந்வயமுண்டான வாகாரத்தாலேயெனனுதல்.

புதுக்கணிப்பு - நவீநகாந்தி. ஆத்மாந்ததாஸ்யம் - நித்யதாஸ்யம். இன்னது-மாறிமாறிப் பலபிறப்பும்பிறக்கை. இவரகவா யறியவேணுமென்றோரடி பேரநிற்கவென்கிறவிது - இவ்விடத்திலே விசேஷமென்று பூர்வமேவோக்தம். பேரநிற்க-பின்வாங்கிநிற்க.

க்ரமேணாந்வய:...*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(வைகுந்தாமணிவண்ணனே)

ஸ்வாஸ்வாதக்யாபகத்வாத் ஸ்ரிதநியதத்ருசே: நைகபோகப்ரதாநா
த்த்யாகாநர்ஹப்ரகாசாத் ஸ்த்திரபரிசரணஸ்த்தாபநாத் பாபபங்காத் । து:
ஸாதார்த்தஸ்யஸித்தேர் விரஹபயக்ருதேர் துர்விபேதாத்மயோகாந்நித்யா
நேகோபகாராத் ஸ்வவிரஹசகிதம் வைகுண்ட்டம் ஸௌரிராஹாக்ஷம்.

(ஸ்வாஸ்வாதக்யாபகத்வாத) வைகல்தோறு மமுதாயவானேறே - தன்னுடைய நிரதிசயபோக்யதையை க்யாபநம்பண்ணுகையாலும்; ஸ்ரிதநியதத்ருசே:) எங்கும்பக்கநோக்கறியான் - ஆஸ்ரிதஜநத்தைவிட்டு அந்யத்ரகண்வைக்க மாட்டாமையாலும்; (நைகபோகப்ரதாநாத்) நாமருவிநன்கேத்தியித்யாதி - ஆஸ்ரிதர் தன்னைக்கிட்டி ஸ்தோத்ரம்பண்ணி மநஸ்ஸிலே சிந்தித்து நிர்மமராய்வணங்கி ஹ்ருஷ்டராய்க் கூத்தாடும்படி யநேகவிதாநுபவத்தைக்கொடுக்கையாலும்; (த்யாகாநர்ஹப்ரகாசாத்) உன்னையென்னனம்விடுகேன் - தன்னைவிடுகைக்குஸம்பாவனையில்லாதபடி ப்ரகாசிக்கையாலும்; (ஸ்த்திரபரிசரணஸ்த்தாபநாத்) உனதந்தமிலடியையடைந்தேன் - ஆத்மாநததாஸ்யத்தை நிலைநிறுத்துகையாலும்; (பாபபங்காத்) முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான் - விரோதிகளானபாபங்களை ஸவாஸநமாகப்போக்குகையாலும்; (துஸ்ஸாதார்த்தஸ்யஸித்தே:) முடியாததென்னெனக்கேலினி-ஸம்பந்திஸம்பந்திகளுமுத்தீர்ணராம்படி துஸ்ஸாதமான கார்யத்தைஸாதிக்கையாலும்; (விரஹபயக்ருதே:) உன்னையென்னுள் நீக்கேலெந்தாய்-"விட்டுப்பிரியப்போகிறுன" எனகிற வதிசங்கையை விளைக்கையாலும்; (துர்விபேதாத்மயோகாத்) உன்னை யென்னுள்ளேகுழைத்த வெம்மைந்தா - ஆதமாவோடே "ஏகதத்த்வம்" (ஏகதத்த்வம்) என்னலாம்படிகலந்திருக்கையாலும்; (நித்யாநேகோபகாராத்) போகின்றகாலங்களித்யாதி - காலத்ரயத்திலேயும் மாதாபிதாக்கள் பண்ணுமுபகாரங்களையும், தான் தனக்குப்பண்ணிக்கொள்ளுமுபகாரங்களையும் பண்ணுகையாலு மெம்பெருமானை "வைகுந்தாமணிவண்ணனே" என்கிறதசகத்திலே "ஆஸ்ரிதர் நம்மைவிடிற்செய்வதென்" என்றதிசங்கையையுடையனாக வாழ்வாரத்யவஸித்தருளினொன்கிறுர் ....*

திருவாய்மொழிநூற்றந்தாதி.

வைகுந்தன்வந்துகலந்ததற்பின்வாழ்மாறன்
செய்கின்றனைச்சியத்தைச்சிந்தித்து - னைகின்ற
தன்மைதனைக்கண்டுன்னைத்தான்விடேனென்றுரைக்க
வன்மையடைந்தான்கேசவன். (கசு)

(வைகுந்தன்) இதில் - "'அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதம்' என்றநுபவிக்கிறவிவர், 'அயோக்யன்' என்றகலிற் செய்வதென்" என்றீஶ்வரனதிசங்கைபண்ண, இவர்ஸமாதாநம் பண்ணித்தேற்றினபடியைப் பேசுகிறபாசுரத்தை யநுவதித் தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; ஸர்வேஶ்வரனோடே ஸம்ஶ்லேஷிக்கிறவிவர், "அல்லாவியுள்கலந்த" என்றுதம்சிறுமையை யநுஸந்திக்கையாலே, "வளவேழுலகு தலையெடுத்தின்னமுமிவர் நம்மைவிடிற் செய்வதென்" என்றதிசங்கைபண்ணி யவனலமாக்கிற படியைக்கண்டு "இவனுக்குநம்பக்கல் பாரதந்த்ர்யவாத்ஸல்யங்களிருந்தபடியென்" என்றுவிஸ்மிதராய், தாமகலாமைக் குறுப்பான பலவற்றையுஞ்சொல்லி அவனதிசங்கையைத்தீர்த்து அவனைதரிப்பிக்கிற * வைகுந்தாமணிவண்ணனி லர்த்தத்தை "வைகுந்தன்" இத்யாதியாலே யருளிச்செய்கிறானென்கை.

(வைகுந்தன்வந்துகலந்ததற்பின்) நித்யவிபூதியுக்தன் "அந்தாமத்தன்பு செய்தென்னாவிசேரம்மான்" என்னும்படி ஒருநீராகக்கலந்தபின்பு. (வாழ்மாறன்) அத்தாலேலாபத்தைபெற்று ஸம்பந்நரானவாழ்வார். (செய்கின்றனைச்சியத்தைச்சிந்தித்து) இவர் "அல்லாவி" என்றகலநினைக்கிற னைச்யாநுஸந்தாநத்தைக்கண்டு - "இதென்னாய்விளையக்கடவது" என்றீஶ்வரன் விசாரித்து, (னைகின்றதன்மைதனைக்கண்டு) அவன்சிதிலனாகிற ப்ரகாரத்தைதர்ஶித்து. (உன்னைத்தான்விடேனென்றுரைக்க) இப்படியென்விஶ்லேஷத்தி லதிபீருவாயிருக்கிற வுன்னைத்தான்விடேனென்று - "உன்னைநான்பிடித்தேன்கொள்சிக்கெனவே" "உன்னையெங்ஙனம்விடுகேன்" "அந்தமிலடிமையடைந்தேன்விடுவேனோ" "உன்னைநானடைந்தேன்விடுவேனோ" என்றுமீஶ்வரனைக் குறித்தருளிச்செய்ய. (வன்மையடைந்தான்கேசவன்) "விஜ்வர: ப்ரமுமோத ஹ" (விஜ்வர:ப்ரமுமோத ஹ) என்னும்படி * தளக்கற்றமுதமாயெங்கும் பக்கநோக்கறியாதே "என்மரதகமலையே" என்னும்படி ஸ்த்தைர்யத்தைப்ராபித்தான் ப்ரஶஸ்தகேஶனானவன். *

இரண்டாம்பத்தில் - ஆறுந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக-திருவாய்மொழி-கசு—பாட்டு-களசு.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

ஏழாந்திருவாய்மொழி.

கேசவன்றமர் - ப்ரவேஶங்கள்.

ஆருயிரப்படி.

(கேசவன்றமர்) என்பக்கலுள்ள அபிநிவேசத்தாலே யென்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரித்தருளினனென்று ப்ரஸ்துதமான பொருளை விஸ்தரிக்கிறது...*

பன்னீராயிரப்படி,

ஏழாந்திருவாய்மொழியில், ஸ்வஸம்பந்தி பரம்பராபர்யந்தமாக ஈஶ்வரன் பண்ணின பக்ஷபாதத்தாலே தம்மளவிலவனுடைய அபிநிவேசாதிசயத்தைக்கண்டுகந்து; ஸ்வஸாந்தாநிக விஷயத்திலவனுடைய ப்ரஸாதவிசேஷத்தையும், அதுக்கடியான தம்மளவில் பக்ஷபாதத்தையும், தத்கார்யமான வுபகாரத்தையும், அவ்வுபகாரம் தங்குலத்திலுள்ளார்க்கும் ப்ராப்திபர்யந்தமான படியையும், இதடியாக ஈஶ்வரனுக்குப்பிறந்த ஔஜ்வல்யத்தையும், இதுக்கடையஹேதுவான க்ருபாபாரவஶ்யத்தையும், அநுபவிக்கைக் குறுப்பாக ஸத்த்வோத்தரமான சித்தப்ரதாநத்தையும், பொல்லாநெஞ்சைப்போக்கின படியையும், ப்ரேமயுக்தமான நல்லநெஞ்சிலே புகுந்தபடியையும், அந்தநெஞ்சு அவனை விடாதொழியவேணுமென்கிற அபேக்ஷையையும், இன்னின்னபடியாக அவன்தன்னை முழுக்கக்கொடுத்த ஔதார்யத்தையும், இவ்வௌதார்யாதிசயமதிசயிதஜ்ஞாநர்க்குமபரிச்சேத்யமென்னுமிடத்தையுமருளிச்செய்து, ஸ்வவிஷயத்திலாதர மீஶ்வரனுக்குஸம்பந்தித்ரயஸந்தாந ஸம்ரக்ஷணபர்யந்தமானபடியை யவனுடைய ஆஶ்ரிதரக்ஷணார்த்தகுணசேஷ்டித ப்ரகாசகங்களான திருத்வாதசநாமங்களோடேகூட வருளிச்செய்கிறார்........*

ஈடு.

* ஆடியாடியில் "வாடிவாடும்" என்கையாலே - ஒருநீர்ச்சாவியாய் வாடினபடிசொல்லிற்று; அந்தவொரு நீர்ச்சாவியானதுதீர * காரார்கருமுகில் கலந்துவர்ஷித்தபடி சொல்லிற்று - * அந்தாமத்தன்பில்; அப்படிவர்ஷித்தபடியாலே "ஈறிலின்பத்திருவெள்ளம்யான்மூழ்கினன்"

என்று - வெள்ளமிட்டுப் பெருகினபடி சொல்லிற்று * வைகுந்தாமணிவண்ணனில்; " எமர்கீழ்மேலெழுபிறப்பும் மாசதிரிதுபெற்று " என்கையாலே - அவ்வெள்ளமிருகரையும் புரண்டபடிசொல்லுகிறது - * கேசவன்றமரில்.

இவர் * ஆடியாடியில் பட்டவார்த்திதிரவந்து கலந்தபடிசொல்லிற்று - * அந்தாமத்தன்பு; அக்கலவியால் பிறந்தப்ரீதியவன தானபடிசொல்லிற்று - * வைகுந்தாமணிவண்ணன்; அந்தப்ரீதிதான் ஆழ்வாரொருவ ரளவிலுமன்றிக்கே, தம்மோடுபெரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டுப் பெருகினபடியைச் சொல்லுகிறதித் திருவாய்மொழியில். ஸர்வேஶ்வர னாழ்வாரோடேவந்து ஸம்ஶ்லேஷித்து அத்தால்பிறந்த ப்ரீதிதம்மொருவரளவிலுமன்றிக்கே தம்மோடுபரம்பரயா ஸம்பந்தமுடையாரளவும் பெருகினபடியைக்கண்டு, " இது இவனென்பக்கல்பண்ணின பக்ஷபாதாதிசயமிறே " என்று இனியராய், தம்மைவிஷயீகரிக்கைக்கீடான குணசேஷ்டிதாதிகளை யநுஸந்தித்து அவற்றுக்கு வாசகமான திருத்வாதசநாமத்தாலே அவனைப்பேசி யநுபவிக்கிறார். ஸர்வேஶ்வரன் ஒருவனை விஷயீகரித்தால், அதுபின்னை யவனளவிலேநில்லாதிறே. [மரணாந்தாநி வைராணி] (மரணாந்தாநிவைராணி) ருஷிகள் குடியிருப்பையழித்து, மைதிலியைப்பிரித்து, நம்முயிர்நிலையிலே நலிந்தாற்போலே ஸ்ரீஜடாயுமஹாராஜரைநலிந்து, இவையெல்லாம் செய்யமாட்டானேயிவனினி. [நிர்வ்ருத்தம் நः ப்ரயோஜநம்] (நிர்வ்ருத்தம்நःப்ரயோஜநம்) இவன் ஜீவிக்கிறநாளிலே " நாம்செய்யும்நன்மை யிவன்விலக்காதொழிவது காண் " என்றிருந்தோம், அது அந்நாளில் பெற்றிலோம்; நாம்தேடியிருந்தது முந்தறமுன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே. [க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரः] (க்ரியதாமஸ்யஸம்ஸ்காரः) இவன் நாம்செய்யுமநன்மை விலக்காதானவளவு பிறந்தவின்று மிழக்கவேணுமோ, வேண்டுவனசெய்யப்பாரும். [மமாப்யேஷ யதா தவ] (மமாப்யேஷயதாதவ) நீருய்த்திருந்தீராகில், குடற்றொடக் குடையாரிலே யொருவன்செய்யுமித்தனையன்றோ; நாமிவனுக்குவேண்டுவனசெய்ய, நீர்பின்னைக்கடக்க நில்லீரொன்றிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான்பக்கலோரம் ராவணனளவுஞ்சென்றதிறே. "மஹாராஜர்க்குசத்ரு" என்று வாலியைநிரஸித்துவைத்து, மஹாராஜர் கண்ணநீர்பொறுக்கமாட்டாதே [ஸஞ்ஜாதபாஷ்பः] [ஸஞ்ஜாதபாஷ்பः] என்று தாமும் சண்ணநீர்விழவிட்டாரிறே. [தர்மே மநஸ்ச தே பத்ர] [தர்மேமநஸ்சதேபத்ர] ஸ்ரீமாலாகாரர்பக்கல் விஷயீகாரம் அவர் ஸந்தாநத்தளவும் சென்றதிறே. ஸ்ரீகண்டாகர்ணன்பக்கல் பண்ணினவிஷயீகாரம் அவன்தம்பியளவுஞ்சென்று, " நீயவனுக்கு நல்லையாகில் அவன்முன்னாகப்போ " என்றருளிச்செய்தானிறே. எம்பாரித்திருவாய்மொழி யருளிச்செய்யப்

புக்கால், “ ஸ்ரீவைஷ்ணவனேனென்கிறார் ” என்பராம் ; வைஷ்ணவத்வஸித்தியிறே (திருத்வாதசநாமம்) ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையுமிரண்டாயிற்று நெடுமாற்கடிமை ; அதிலெம்பெருமானுடைய நெடுமாற்கடிமையித் திருவாய்மொழி...*

ஜீயர் அரும்பதம்.

சேசவன்றமர்ப்ரவேசோ. ரூபகமாகஸங்கதி (ஆடியாடியிலித்யாதி) ஒருநீர்ச்சாவி - ஒருநீரில்லாதபயிர். காரார்கருமுகில் கலந்துவர்ஷித்தபடி யென்றது- “அல்லாவியுள் கலந்தகாரார் கருமுகில்போல் ” என்றத்தைப்பற்ற. (இருகரையும்) கீழேழ்பிறப்புமொருகரை, மேலேழுபிறப்புமொருகரை.

முக்யஸங்கதிமாஹ (இவராடியாடியிலித்யாதி) உக்த்தார்த்தவிவரணம் (ஸர்வேச்வரனித்யாதி) “ எமர்கீழ்மே லெழுபிறப்பும் ” என்றத்தைப்பற்ற (ஸம்பந்தமுடையாரளவுமென்றது) இனியராய் - ப்ரீதராய். ஆழ்வாரைவிஷயீகரித்தால் ஸம்பந்திஸம்பந்திபர்யந்தம் விஷயீகரிப்பா னென்னென்ன (ஸர்வேச்வரனொருவனையித்யாதி)

பகவத்விஷயீகாரம் ஸம்பந்திஸம்பந்திகளளவுஞ் செல்லுமென்கைக்கு நாலுதாஹரணங்காட்டுகிறார் (மரணாந்தாநீத்யாதி) யுத்தகாண்டே சதுர்த்தச சததமே விபீஷணம்ப்ரதிராமஃ, “ மரணாந்தாநி வைராணி நிவ்ருத்தம் நஃப்ரயோஜநம். க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ ” (மரணாந்தாநிவைராணிநிர்வ்ருத்தம்நஃப்ரயோஜநம் । க்ரியதாமஸ்யஸம்ஸ்காரோமமாப்யேஷயதாதவ.) ராவணவிஷயத்தில் நம்முடையவைரங்கள் ராவணன் மரணாந்தங்களென்றர்த்தமன்று, கிந்து, நம்முடையவிஷயத்தில் ராவணன்பண்ணினவைரங்கள் ராவணன் மரணாந்தங்களென்று வ்யாக்யாநம்பண்ணுகிறார் (ருஷிகளித்யாதி) நாட்டார் சொல்லுகிறபடி யன்றிக்கே, இப்படிவைரங்களை ராவணநிஷ்டமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார் - “ ஸஞ்ஜாதபாஷ்பஃ ” (ஸஞ்சாதபாஷ்பஃ) என்னும்படியான குறிக்யத்தைப்பற்ற. உயிர்நிலை - மர்மஸ்த்தாநம். (இவையெல்லாமென்று) பலவாகச்சொன்னது - “ வைராணி ” (வைராணி) என்கிறபஹுவசநத்தைப் பற்ற. (நிர்வ்ருத்தம்நஃப்ரயோஜநம்) “ ஸீதாவாப்திரூபம் நஃப்ரயோஜநம் நிர்வ்ருத்தம் ” (ஸீதாவாப்திரூபந்நஃப்ரயோஜநம்நிர்வ்ருத்தம்) என்றுசொல்லுவர்கள் ; சக்ரேத்யர்த்தவிசேஷமாஹ (இவன்ஜீவிக்கிறவித்யாதி) இப்படிவ்யாக்யாநம்பண்ணிற்று - “ யதிவா ராவணஸ்ஸ்வயம் ” (யதிவாராவணஸ்வயம்) இத்யாதியைக்கடாக்ஷித்து. நாம்தேடியிருந்தது - அப்ரதிஷேதம். விலக்காதொழிவதுகாண் - விலக்காதொழிவதொன்றே. விலக்காதான் - ப்ரதிஷேதியாதான். ஏஷஃ- ராவணஸ்தவயதா, மமாபிததாபூதஃ என்றபடி. (குடற்றொடக்குடையாரிலேயிதி) “ ராக்ஷஸாநாம்பலாபலம் ” (ராக்ஷஸாநாம்பலாபலம்) என்று - இவனை ப்ராதாவாகச்சொல்லுகையாலே, இவனுடைய ப்ராதாவானபோதே தமக்கும் ப்ரா

தாராவணனென்கை ஸித்தமிறே; அத்தைப்பற்றச் சொல்லுகிறதென்றுகருத்து. இஸ்ஸ்லோகத்தால் பலிதமர்த்தமாஹ (ஸ்ரீவிபீஷணாழ்வானித்யாதி) ஓரம் - பக்ஷபாதம். இந்தவாக்யத்தினடியிலே - இப்படியென்றத்யாஹார்யம். உதாஹரணாந்தரம் (மஹாராஜர்க்கித்யாதி) கிஷ்கிந்தாகாண்டே சதுர்விம்சே, " இத்யேவமார்த்தஸ்ய ரகுப்ரவீரஶ்ஶ்ருத்வா வசோ வாலிஜகந்யஜஸ்ய । ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ" (இத்யேவமார்த்தஸ்ய ரகுப்ரவீரஸ்ஸ்ருத்வாவசோவாலிஜகந்யஜஸ்ய । ஸஞ்ஜாதபாஷ்ப:பரவீரஹந்தாராமோமுஹூர்த்தம்விமநாபபூவ.) (தர்மஇதி) பஞ்சமேம்சே ஏகோநவிம்சே, " தர்மே மநஶ்ச தே பத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி । யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம் தீர்க்கமாயுர்பவிஷ்யதி " (தர்மேமநஸ்சதேபத்ரஸர்வகாலம்பவிஷ்யதி । யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம்தீர்க்கமாயுர்ப்பவிஷ்யதி) (ஸ்ரீமாலாகாரரித்யாதி) " யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம் " (யுஷ்மத்ஸந்ததிஜாதாநாம்) இத்யாத்யுத்தரார்த்தத்தை யுதாஹரிக்கவேண்டியிருக்க, " தர்மே மநஶ்ச தே பத்ர " (தர்மேமநஸ்சதேபத்ர) என்றுதாஹரித்தது - பூர்வார்த்தஸமபிவ்யாஹாரதாத்பர்யத்தாலே. உத்தரார்த்தத்திலாயுஸ்ஸப்தம் - " யாவந்தோ ஹி க்ஷணா நீதா ஹரிஸம்ஸ்ம்ருத்யைவ தேஹிநாம் । தாவந்தோ ஹி க்ஷணாநம் காரியம் " (யாவந்தோஹிக்ஷணாநீதாஹரிஸ்ம்ருத்யைவதேஹிநாம் । தாவந்தோஹி-க்ஷணாநம்கார்யம்) என்றுஸங்கோசிதமான வாயு: பரமென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக. (ஸ்ரீகண்டாகர்ணனித்யாதி) " யோயம் ப்ராதாதவஸ்வர்க்கீ யாவதிந்த்ரோ பவேத்ததா " (யோயம்ப்ராதாதவஸ்வர்க்கீயாவதிந்த்ரோபவேத்ததா) என்றத்தைப்பற்ற. (அவன்முன்னாகப்போவென்று) ஹரிவம்சே ஷட்பஞ்சாசச்சததமே கண்டாகர்ணம்ப்ரதிக்ருஷ்ண:, " அக்ஷய்யஸ்ஸ்வர்க்கவாஸஸ்தே யாவதிந்த்ரோ பவிஷ்யதி । தாவத்ஸ்வர்க்கே பவாநஸ்து ஸநாதநமநாமய: । நஷ்டேஶக்ரே ததஸ்ஸ்வர்க்காத்ஸாயுஜ்யம் மம கச்சது " (அக்ஷய்யஸ்ஸ்வர்க்கவாஸஸ்தேயாவதிந்த்ரோபவிஷ்யதி । தாவத்ஸ்வர்க்கேபவாநஸ்துஸநாதநமநாமய: । நஷ்டேஶக்ரேததஸ்ஸ்வர்க்காத்ஸாயுஜ்யம்மமகச்சது) என்கிறபூர்வஸ்லோகங்களும்விவக்ஷிதம். (அவன்முன்னாகப்போவிதி) பரமபதஸ்ய இதி சேஷ:. அவனைமுன்னிட்டுக்கொண்டு போவென்றபடி.

குணசேஷ்டிதவாசக நாமாந்தரங்களிருக்க, திருத்வாதசநாமத்தாலே யநுபவிக்கிறதுக்குபாவம் (எம்பாரித்யாதி) இத்தால்-உபகாரஸ்ம்ருதியாலே திருத்வாதசநாமத்தைச்சொல்லி யநுபவிக்கையே ப்ரதாநஹேதுவாய், இதுவுமொருநாந்தரீயக ப்ரயோஜநமென்று கண்டுகொள்வது. " ஸ்ரீவைஷ்ணவனென்கிறார் " இதிவக்துர்ஹ்ருதயம்தர்சயதி (வைஷ்ணவத்வசிஹ்நமித்யாதி) வைஷ்ணவத்வசிஹ்நமாகையாலே யவற்றையே யநுஸந்திக்கிறானென்றபடி.

ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் விஷயீகரிக்கைக்குரஸோக்தி (ஆழ்வாருடையவித்யாதி) * நெடுமாற்கடிமை என்கிறது - ததீயபர்யந்த ப்ரேமத்தை. இந்தததீயப்ரேமமாழ்வார்க்கு ஸ்வரூபப்ரயுக்தம்; எம்பெருமானுக்கு வ்யாமோஹப்ரயுக்தம்.

இவருடையஸம்பந்தி ஸம்பந்திபர்யந்தமான பகவத்வ்யாமோஹம் - " செடியார்நோய்களெல்லாம் " இத்யாதியாலே கீழேசொல்லிற்றே யாகிலும், கீழிற்

திருவாய்மொழி-அதிசங்காநிவர்த்தகபரம் : இத்திருவாய்மொழி- ஆழ்வாருடைய ஸம்பந்திஸம்பந்தி பர்யந்தமான பகவத்வ்யாமோஹ ப்ரதிபாதகபரமென்று கண்டுகொள்வது...*

ஏழாந்திருவாய்மொழி.

முதற்பாட்டு.

கேசவன்றமர்கீழ்மேலெமரேழெழுபிறப்பு
மாசதிரிதுபெற்றுநம்முடைவாழ்வுவாய்க்கின்றவா
ஈசனென்கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன்விண்ணோர்
நாயகனெம்பிரானெம்மானாராயணனாலே.

ஆறாயிரப்படி.

ஸர்வேஶ்வரனாய், நிரதிசயஸௌந்தர்யாதி கல்யாணகுணகனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு ஸ்வாமியாயிருந்த நாராயணனாலே, ஏநகேநாபிப்ரகாரேண ஸாக்ஷாத்வாபரம்பர்யாவா என்னோடு ஸம்பந்தமுடையாரெல்லாரும் பகவதேகபோகரானார்கள் ; தத்ஸம்பந்தினாலே பகவதேகபோகத்வலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ நமக்கு விளையும்படியே யிதுவென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், தம்முடைய குலத்திலுள்ளார் பகவதபிமாநாந்தர்க்கதரானபடியை யருளிச்செய்கிறார்.

ஈசன் - ஸர்வஸாதாரணமான ஸ்வாமித்வத்தை யுடையனாய். என்கருமாணிக்கம் - அப்படியே பொதுவன்றியே நீலரத்நம்போன்றவடிவை யெனக்குக்காட்டி. என்செங்கோலக் கண்ணன் - அவ்வடிவுக்கு பரபாகமாம்படி சிவந்தழகிய திருக்கண்களாலே யென்னை யநந்யார்ஹனாக்கி. விண்ணோர்நாயகன் - பரமபதவாஸிகளோபாதி அங்கீகரித்து. எம்பிரான் - என்னை யநுபவிப்பித்து. எம்மான் - எனக்கு நாதபூதனான வுறவடியாக. நாராயணனாலே - நிரதிசயவாத்ஸல்ய யுக்தனான நாராயணனாலே. கீழ்மேலெழெழுபிறப்பும் - கீழ்மேலேழேழுபிறப்பும். கேசவன்தமர் - ஸர்வாதிகனான கேசவன்தமரான. எமர் - எமரானவர்கள். இது - நிர்ஹேதுக பகவதங்கீகாரமாகிறவிந்த. மா - பெரிய. சதிர் - சதிரை. பெற்று - பெற்று. அத்தாலே, நம்முடை - நம்முடைய. வாழ்வு - ஸ்ரீவைஷ்ணவத்வ ஸ்ரீயானது. வாய்க்கின்றவா - வளருகிறபடியே...*

ஈடு - முதற்பாட்டு.

ஸம்பந்தி ஸம்பந்திகள்பக்கலிலு மெம்பெருமானபிநிவிஷ்டனானபடியைக்கண்டு, இதெல்லா மென்பக்கலுண்டான விஷயீகாராதிசயமிறேயென்று ஹ்ருஷ்டராகிறார்.

(கேசவன்தமர்) ப்ரசஸ்தகேசனுன் நிலையிலே தோற்றிருக்குமவர்களென்னுதல்; விரோதி நிரஸநசீலனையிலே தோற்றிருக்குமவர்களென்னுதல்; "தஸ்மாத்கேஶவநாமவாந்" (தஸ்மாத்கேஶவநாமவாந்) என்கிறபடியே, ஸர்வநிர்வாஹகனுன நிலையிலே தோற்றிருக்குமவர்களென்னுதல். 'ஸர்வேஶ்வரனுடையார்" என்றுயிற்று ஆழ்வாரிவர்களை விரும்புகிறது. எமர் என்கிற - ஆழ்வாருடைய ஸம்பந்தங்கொண்டாயிற்று அவனிவர்களை விரும்புகிறது. இத்தால்-ஒரு வைஷ்ணவாபிமானமே வேண்டுவதவன் விஷயீகரிக்கைக்கென்றபடி. (கேசவன்றமர்) அவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். (கீழ்மேலித்யாதி) எமர்கீழ்மேலேழுபிறப்பும் கேசவன்றமரானுர்கள். "ஏகாஹமபிகௌந்தேய பூமிஸ்த்தமுதகம்குரு । குலம்தாரயதேதாத ஸப்தஸப்தசஸப்தச" (ஏகாஹமபிகௌந்தேயபூமிஸ்த்தமுதகம்குரு । குலம்தாரயதேதாத ஸப்தஸப்தசஸப்தச) என்கிறபடியே, "ஸபூர்வாந்ஸபராந்தாத்மாநஞ்ச" (ஸபூர்வாந்ஸபரார்நாத்மாநஞ்ச)

(மாசதிரிதுபெற்று) "விதிசூழ்ந்ததால்" என்கிற - ஆகஸ்மிக பகவத்க்ருபையாதல், "மாதவனென்றதேகொண்டு" என்கிற உக்திமாத்ரத்தையாதல், தாம்பெற்றபேற்றைத்தம்மோடு ஸம்பந்தமுடையாரும் பெறும்படியான பேற்றைப்பெற்றேனென்னுதல். (மாசதிரிதுபெற்று) பெருஞ்சதிரைப்பெற்று. * நடக்கைச்சதுரனைப்பெற்றேனென்றபடி. தந்தலையாலே வந்ததாகிலிறே ஸாவதியாயிருப்பது. (இதுபெற்று) காணக்காண அவன் ப்ரஸாவஹிக்கிறபடி. (நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா) நம்மோடுஸம்பந்தமுடையாரையு மவனிப்படிவிஷயீகரிக்கிறது நம்முடைய ஸம்பத்திறே. (நம்முடைவாழ்வு) ஸ்ரீவைஷ்ணவஸம்பத்து. (வாய்க்கின்றவா) ஊற்றுமாறுதே மேன்மேலனபெருகிவருகிறபடி. ஏழ்படிகாலென்றது தானேரளவில்லை, இன்றுநம்மளவும் வரச்செல்லுகிறதிறே. இப்படிவிஷயீகரிக்கைக்கு ஹேதுவென்னென்னில் (ஈசன்) வகுத்தஸ்வாமியாகையாலே. (என்கருமாணிக்கமென் செங்கோலக்கண்ணன்) கண்ணழகாலே யென்னை யநந்யார்ஹனுக்கி, தன்வடிவழகை யென்னை யநுபவிப்பித்தவன். (விண்ணேர்நாயகனெம்பிரானெம்மான்) நித்யஸூரிகளைத் தோற்பிக்குமாபோலே என்னை வடிவழகைக்காட்டித்தோற்பித்து, என்னை யவ்வடிவழகையநுபவிப்பித்த வுபகாரகன். (நாராயணனுலே) தன்மேன்மையைப்பாராதே உகவாதாரையும் விடமாட்டாதபடி வத்ஸலனுயுள்ளவனுலே. ஸமிதைபாதி ஸாவித்ரிபாதியாகவன்றிக்கே, அவனுடைய நிர்ஹேதுகக்ருபையாலே.

நாராயணனுலே - எமர் - கீழ்மேலேழுபிறப்பும் - கேசவன்

றமரானூர்கள், மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா. நாரா யணனாலே யென்றவிடம் * மாசதிரினுடைய வுபபாதநம்..... ....*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (கேசவன்றமரித்யாதி) "ஸம்ஸ்ருதிந்தாப்ரஸம்ஸாஸு" (ஸ்ம்ஸ்ருதிந்தாப்ரஸம்ஸாஸு) இத்யாதிப்படியே ப்ரஸம்ஸாயாம்மதுப்ப்ரத்யய8; "கேஸாத்வோந்யதரஸ்யாம்" (கேஸாத்வோந்யதரஸ்யாம்) இதிகேசாத்பரம் மதுபோவிகல்பேநவகாராதேஸம்வந்து, கேசவ: என்று கிடக்கிறதென்று ஹ்ருதிதாயாஹ (ப்ராஸஸ்தகேசனுனவித்யாதி) "யஸ்மாத்த்வயைவதுஷ்டாத்மா ஹத8கேஸீஜநார்த்தந। தஸ்மாத்கேஸவநாமாத்வம்லோகேக்யாதிம்கமிஷ்யஸி". (யஸ்மாத்த்வயைவதுஷ்டாத்மாஹத8கேஸீஜநார்த்தந। தஸ்மாத்கேஸவநாமாத்வம்லோகேக்யாதிம்சமிஷ்யஸி) இதிபஞ்சமேம்ஸே ஷோடஸோநார்தவிர்வசநம் ஹ்ருதிநிதாயாஹ (விரோதீத்யாதி) இவ்விடத்திலே, கேசவஸப்தார்த்தமாக, "ஹந்த்யர்த்தாத்வதே: 'அந்யேப்யோபித்ருஸ்யதே' இதிட8, ப்ருஷோதராதித்வாத் கேஸிந்ஸப்தே இகாரஸ்யாகாரநகாரலோபஸ்ச" (ஹந்த்யர்த்தாத்வதே8 'அந்யேப்யோபித்ருஸ்யதே' இதிட8, ப்ருஷோதராதித்வாத் கேஸிந்ஸப்தே இகாரஸ்யாகார8நகாரலோபஸ்ச) என்கிறடீகாஸர்வஸ்வவாக்யத்தை ஸ்மரிப்பது. (தஸ்மாத்கேசவநாமவாநித்) ஹரிவம்ஸே கைலாஸயாத்ராயாமேகஷஷ்டிசததமே க்ருஷ்ணம்ப்ரதிருத்ரஸ்தோத்ரே, "கஇதிப்ரஹ்மணோநாம ஈஸோஹம் ஸர்வதேஹிநாம். ஆவாந்தவாங்கேஸம்பூதௌ தஸ்மாத்கேஸவநாமவாந்" (கஇதிப்ரஹ்மணோநாம ஈஸோஹம் ஸர்வதேஹிநாம். ஆவாந்தவாங் கேஸம்பூதௌ தஸ்மாத்கேசவநாமவாந்.)

"கேசவன்றமர்கீழ்மேலெமர்" இதிபாடக்ரமம், "எமர்-கேசவன்றமரானூர்கள்" இத்யந்வயக்ரமஞ்ச ஹ்ருதிநிதாயாஹ (ஸர்வேஸ்வரனுடையாரித்யாதி) "கீழ்த்திருவாய்மொழியிலே, 'எமர்கீழ்மேலெழுபிறப்பும்' என்று-இவர்ஸம்பந்தங்கொண்டீஸ்வரன் விரும்புகையாலே, அந்யோந்யாஸ்ரயமில்லை" என்றருளிச்செய்வர். பலிதம் (இத்தாலித்யாதி) முந்தினவர்த்தவிவரணம் (அவனுடையவித்யாதி) "கீழ்மேலேழுபிறப்பும்" என்றது-நடுவேழுபிறப்புக்கு முபலக்ஷணம் இதிஹ்ருதிதாய ப்ரமாணத்வயமாஹ (ஏகாஹமபீத்யாதி) யத்வா, ஒருவனபிமாநங்கொண்டெல்லாரு முஜ்ஜீவிக்கக்கூடுமோவென்ன (ஏகாஹமபீத்யாதி) ஆதல். இத்தால்-ஸாமாந்யதர்மத்துக்கிப்படிகண்டால், வைஷ்ணவாபிமாநத்துக்கு கிம்புநர்ந்யாயஸித்தமென்றபடி. மஹாபாரதேதர்மஸூநும் ப்ரதிபீஷ்மோக்தம், "ஏகாஹமபி" (ஏகாஹமபி) இத்யாதி. "தஸபூர்வாந்தஸாபராநாத்மாநஞ்சைகவிம்ஸதிம் பங்க்திஞ்சபுநாதி" (தஸபூர்வாந்தஸாபராநாத்மாநஞ்சைகவிம்ஸதிம் பங்க்திஞ்சபுநாதி) இதிபோதாயநதர்மே. இவ்விடத்தில் - "ஆஸ்போடயந்திபிதர8 ப்ரந்ருத்யந்திபிதாமஹா8। வைஷ்ணவோந8குலேஜாதஸ்ஸநஸ்ஸந்தாரயிஷ்யதி" (ஆஸ்போடயந்திபிதர8ப்ரந்ருத்யந்திபிதாமஹா8। வைஷ்ணவோந8குலேஜாதஸ்ஸநஸ்ஸந்தாரயிஷ்யதி) என்கிறஶ்லோகமநுஸந்தேயம்.

இது - "மாசதிர்பெற்று" இத்யந்வய:. "இது" என்று-வக்ஷ்யமாணக்ருபாதிபராமர்ஶியாதல், கீழுக்தமான "எமர்கீழ்மேலேழுபிறப்பும் - கேசவன்றமரானார்கள்" என்றத்தைப்பராமர்ஶிக்கிறதாதல். (விதிசூழ்ந்ததால்) இத்யாதியாற்சொல்லப்படுகிற வர்த்தத்ரயத்தில், முந்தினவர்த்தத்வயம் - உபாயபரம்; த்ருதீயார்த்தம்-பலபரம். உபாயபரமானமுந்தினவர்த்தத்வயத்தில் "மா" என்றதுக்கர்த்தம் (பெருஞ்சதிரையித்யாதி) இது-நாலாமர்த்தமாதல். இப்போது, அநந்தரார்த்தத்வயமும்-பலபரம். இந்தப்பெரிய சதிரைப்பெற்று இதிசப்தார்த்த:. பலபரமானத்ருதீயார்த்தத்தில் "மா" என்றதுக்கர்த்தம் (தம்தலையாலேயித்யாதி) இந்தத்ருதீயார்த்தத்தில்- "இது" என்றதுக்கர்த்தம் (காணக்காணவித்யாதி) இத்தால்- "கேசவன்தமர்" என்றதின் சரமாவதியைக்காட்டினாராயிற்று.

இவர்கள் கேசவன்தமரானால் தமக்கு வாழ்வானபடி யென்னென்ன (நம்மோடு ஸம்பந்தமித்யாதி) ஸம்பத்தாகச்சொல்லுகிற தெத்தையென்னவருளிச்செய்கிறார் (ஸ்ரீவைஷ்ணவஸம்பத்தென்று) வாழ்வு-ஸம்பத்து. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயென்றபடி. "வாய்க்கின்ற" என்கிறவர்த்தமாநார்த்தம் (ஊற்றுமாறுதேயித்யாதி) வாய்க்கின்றவா-வளர்கிறபடியென் இதிசப்தார்த்த:. ஆனால் "கீழ்மேலேழுபிறப்பும்" என்றத்தோடு விரோதியாதோவென்ன, அதுபலக்ஷணமென்கிறார் (ஏழ்படிகாலித்யாதி) ஓரளவு-ஒருமர்யாதை.

"விண்ணோர்நாயகன் எம்மான்-எம்பிரான்" என்றந்வயித்து, "என்கருமாணிக்கமென் செங்கோலக்கண்ணன் விண்ணோர்நாயகன்" என்றவநந்தரம் "எம்மானெம்பிரான்" என்றதுக்குபாவம் (நித்யஸூரிகளையித்யாதி) வத்ஸலனாயுள்ளவனாலேயென்றது - பஹுவ்ரீஹ்யர்த்தம். ஏகாரத்துக்குபாவம் (ஸமிதையித்யாதி) ஸமிதை பாதிஸாவித்ரிபாதியாவது - உபாகர்மத்தின் மற்றைநாள் ப்ரஹ்மசாரிகளுக்கு ஆயிரம்ஸமிதையிடுதல், இல்லாவிட்டால் ஆயிரம் காயத்ரிஜபம்பண்ணுதல் செய்யாதே, ஐந்நூறுஸமிதையும் ஐந்நூறுகாயத்ரியுமாகப்பண்ணலாகாதென்றபடி.

உபாயோபேயபரநிர்வாஹத்வயத்துக்கும் ஸாதாரணமான யோஜனையையருளிச்செய்கிறார் (நாராயணனாலேயித்யாதி) நாராயணனாலேயென்கிறவிது-தத்விசேஷணங்களான "ஈசன்" இத்யாதிபதங்களுக்குமுபலக்ஷணம். "மாசதிர்" என்றது - உபாயபரமானபக்ஷத்தில், "நாராயணனாலே" என்றது புநருக்தமன்றோவென்ன (நாராயணனாலேயென்றவிடமித்யாதி) மாசதிரினுடைய வுபபாதகமாவது-நாராயணசப்தத்துக்கு-பஹுவ்ரீஹியாலே, வாத்ஸல்யஞ்சொல்லுகையாலே, "மாசதிர்" என்று - க்ருபாதிகளைச்சொன்னபக்ஷத்தில், * மாசதிருக்கு அதுபபாதகமாயிருக்குமென்றபடி. இந்தபக்ஷத்தில், "நாராயணனாலே" என்கிறத்ருதியை-ப்ரதமார்த்தகம். நாராயணனாகிற மாசதிரைப்பெற்றென்றபடி. ஆக, "மாசதிரிது" என்றதின்-உபாயபரமான முந்தினவர்த்தத்தினுடைய வுபபாதகம் - "நாராயணனாலே" என்கிறவிடம்; பலபரமான த்விதீயார்த்தத்தினுடைய வுபபாதகம் "எமர்கீழ்மேலேழுபிறப்பும் கேசவன்றமரானார்கள்" என்கிறவிடம். கீழ்மேலேழுபிறப்பிலுமுண்டானவெமரென்றபடி.

உபாயபரமானபக்ஷத்தில், "ஈசனித்யாரப்ய, நாராயணனாகிற - மாசதிரிதுபெற்று-கீழ்மேலேழுபிறப்பிலுமுண்டான வெமர் - கேசவன்றமரானார்கள்; நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா இத்யந்வய:. பலபரமானபக்ஷத்தில், ஈசன்தொ

டங்கி, நாராயணனாலே-கீழ்மேலேழுபிறப்பிலுமுண்டானவெமர் கேசவன்றமரானார்கள்; மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வு வாய்க்கின்றவா இத்யந்வயம்...*

இரண்டாம்பாட்டு.

நாரணன்முழுவேழுலகுக்குநாதன்வேதமயன்
காரணங்கிரிசைகருமமிவைமுதல்வனெந்தை
சீரணங்கமரர்பிறர்பலருந்தொழுதேத்தநின்று
வாரணத்தைமருப்பொசித்தபிரானென்மாதவனே.

ஆறுயிரப்படி.

(நாரணன்) " ஈசன் " என்று ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை யுபபாதிக்கிறது.

ஸர்வாந்தராத்ம பூதனாய், ஸர்வலோகேஶ்வரனாய், ஸர்வவேதவேத்யனாய், காரணத்துக்கும் க்ரியைக்கும் கார்யத்துக்கும் நிர்வாஹகனாயிருந்துவைத்து, எனக்குபோக்யமாகைக்காக, பெரியபிராட்டியாரும் * அயர்வறு மமரர்களும் தொழுதேத்த, அதினாலே ஸம்வர்த்திதபலனாய்நின்று வாரணத்தை மருப்பொசித்தபிரான் மாதவனாலே எமரேழேழுபிறப்பும் கேசவன்றமராயிற்றென்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், கீழுக்தமான நாராயணசப்தார்த்தத்தை யுபபாதியாநின்றுகொண்டு ஸ்வவிஷயபக்ஷபாதத்தை யருளிச்செய்கிறார்.

நாரணன் - நாராயணசப்தவாச்யனாய். அதினுடையவர்த்தமான, முழுவேழுலகுக்கும் - ஸமஸ்தலோகத்துக்கும். நாதன் - ஸ்வாமியாய். வேதமயன் - அந்தசப்தத்தையே ப்ரதாநமாகப்ரதிபாதிக்கிற வேதப்ரதிபாத்யனாய். காரணம் - க்ரியாஹேது. கிரிசை - க்ரியை. கருமம் - க்ரியாபலமானகார்யம். இவை - இவற்றுக்கு - முதல்வன் - காரணபூதனாய். சீர் - குணோத்தரராய். அணங்கு - திவ்யரான. அமரர் - தேவர்களும். பிறர் - ருஷிகளும்மநுஷ்யாதிகளுமான. பலரும் - எல்லாரும். தொழுது - வணங்கி. ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணும்படியாக. நின்று - நின்று. வாரணத்தை - குவலயாபீடத்தை. மருப்பு - கொம்பை. ஒசித்த - முறித்த. பிரான் - மஹோபகாரகனாய். என் - இப்படிநாரசப்தார்த்தங்கள் தனக்குவிபூதியானபடியை யெனக்குப்ரகாசிப்பித்த. மாதவன் - ஶ்ரிய:பதியானக்ருஷ்ணன். எந்தை - என்னையநந்யார்ஹனாக்கினசேஷி.

சீரணங்கென்று - லக்ஷ்மியாகவுமாம். ....*

ஈடு - இரண்டாம்பாட்டு.

"நாராயணனாலே" என்று நாராயணசப்தம் ப்ரஸ்துதமாயிற்றே; அதுக்கர்த்தமருளிச்செய்வதாக சப்தத்தை யுபாதாநம் பண்ணுகிறார்

(நாரணன்) இதுக்கர்த்தமென்னென்னில்) முழுவேழுலகுக்குநாதன்) ஸர்வஸ்வாமி. இவ்வர்த்தத்தில் ப்ரமாணமென்னென்னில் (வேதமயன்) "நாராயணபரம்ப்ரஹ்ம" (நாராயணபரம்ப்ரஹ்ம) இத்யாதிகளாலே "ஸர்வஸ்வாமி" என்றோதப்படுகிறவன். (காரணங்கிரிசைகருமமிவை முதல்வன்) தன்விபூதியில், காரணமாயும், கார்யமாயும், உதகாஹரணமாகிற பலமாயும், வரக்கடவதான விவற்றுக்கு நியந்தாவாயுள்ளான். க்ரியாஸாதநம், அதடியாகவரும்க்ரியை, தத்ஸாத்யமானகார்யம், இவற்றுக்கு நிர்வாஹகனாயிருக்குமென்றுமாம். (எந்தை) எனக்கு ஜநகனானவன். (சீரணங்கு) ஸ்ரீயான அணங்கு. அணங்கென்று- தெய்வப்பெண்ணென்றபடி. பெரியபிராட்டியார். அன்றியே, சீரணங்கமரரென்று - நித்யஸூரிகளுக்கு விசேஷணமாகவுமாம். சேஷத்வாநுரூபமான ஆத்மகுணங்களை தரியாநிற்பாராய் அப்ராக்ருத ஸ்வபாவரான நித்யஸூரிகள், இவ்வருகுண்டான ஸம்ஸாரிகள், இப்படி, "சிறியார்பெரியார்" என்று வாசியின்றிக்கேயெல்லாரு மெழுந்துவாங்கி ஏத்தும்படியாகநின்று, குவலயாபீடத்தின்கொம்பை அநாயாஸேநமுறித்த வுபகாரகன். "நஸம்யுக்த இதயாஹ:" (நஸம்யுக்தமிதயாஹ:) என்னும்படியாக. (என்மாதவனே) நான்தோற்றதுறை. மாதவனான - நாராயணன் - எந்தை. ஸ்ரீமந்நாராயணனெனக்கு ஸ்வாமியென்கிறார்..........................*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (நாரணனித்யாதி) கீழ்ப்ரஸ்துதமான நாராயணசப்தத்துக் கர்த்தமருளிச்செய்கிறாரென்று பாட்டுக்குஸங்கதி கண்டுகொள்வது.

ஆனாலர்த்தமாத்ரத்தைச்சொல்ல வமையாதோ, சப்தோபாதாநமெதுக்கென்ன (நாராயணனாலேயித்யாதி) நாரணன் - நாராயணசப்தவாச்யம்.

முழுவேழுலகுக்குநாதன - அதினுடையவர்த்தமான, ஸமஸ்தமானவேழுலகுக்கும் ஸ்வாமியானவன். (காரணமாயுமிதி) காரணம் - ம்ருத்பிண்டாதிகள். கார்யம் - கடாதிகள். உதகாஹரணமாவது - அத்தால்வரும் வ்யவஹாரங்கள். இத்தால்-காரணமான பூதபஞ்சகத்தையும், தத்கார்யமான அண்டாதிகளையும், ததந்தர்வர்த்திகளான ஆத்மாக்களுடைய வ்யவஹாரங்களையுஞ் சொல்லுகிறது. கிரிசை- க்ரியை. க்ரியத இதிக்ரியா என்று - கடாதிகார்யத்தைச் சொல்லுகிறது. கருமம் - கர்மம். கார்யவர்க்கத்தினுடைய வ்யாபாரங்களைச் சொல்லுகிறது. (க்ரியாஸாதநமித்யாதி) க்ரியாஸாதநமாவது - ப்ரமணரூப க்ரியாஸாதநமான ம்ருத்பிண்டசக்ரசீவராதிகள். க்ரியை - ப்ரமணரூபக்ரியை. தத்ஸாத்யமானகார்யம் - கடாதிகார்யங்கள். "கருமம்" என்று-க்ரியத இதிகர்மஎன்று, கடாதிகார்யத்தைச்சொல்லுகிறது. இத்தால்-நிமித்தோபாதாந ஸஹகாரிகாரணங்களையும், தத்கார்யமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும், தத்ஸாத்யமான தேவாதிபதார்த்தங்களையுஞ் சொல்லுகிறது: முந்தினவர்த்தத்திலே, சீர் - ஸ்ரீ:. சீரணங்கு - ஸ்ரீயாகிற தெய்வப்பெண். நித்யஸூரிபக்ஷே, சீரென்று - குணவாசி. அணங்கு - (அப்ராக்ருதஸ்வ

பரவர் (பிறர்) ஸம்ஸாரிகளான ப்ரஹ்மாதிகள். பலர் - உபயரும். நமஸ்காரமும் தாஸ்யஸூசகமாகையாலே சொல்லிற்று (எழுத்துவாங்கியென்று) எழுத்துவாங்குகை - சேஷிபேணாமார்பிலே யெழுதிக்கொள்ளுகை. “पद्यमङ्गुलिविच्छेदः उरो विन्यस्तमक्षरम्। तन्नामकरणं चैव दास्यमेतच्चतुष्टयम्” (பத்யமங்குளிவிச்சேத: உரோவிந்யஸ்தமக்ஷரம் । தந்நாமக்ரணஞ்சைவ தாஸ்யமேதச்சதுஷ்டயம்) என்னக்கடவதிறே. அகாரவிவரணமான நாராயணசப்தத்திலே - “अवरक्षणे” (அவரக்ஷணே) என்கிறரக்ஷகத்வமுமர்த்தஸித்தமாகையாலே, “வாரணத்தைமருப்பொசித்தபிரான்” என்று - அநிஷ்டநிவ்ருத்தி சொல்லுகிறது. “ஏத்த” என்றதுக்கு ப்ரமாணம் (நஸமமித்யாதி) இந்தஸ்லோகம் க்ருஷ்ணவிஷயமாகக் காணப்படவில்லை, “स्थलस्थस्य च रामस्य रथस्थस्य च रक्षसः। न समं युद्धमित्याहुर्देवगन्धर्वदानवाः” (ஸ்த்தலஸ்த்தஸ்யசராமஸ்யரதஸ்த்தஸ்யசரக்ஷஸ:। நஸமம்யுத்தமித்யாஹுர்த்தேவகந்தர்வதாநவா:) என்று ராமவிஷயமாகக் காணப்படுகிறது ; க்ருஷ்ணன்விஷயத்திலேயு முண்டென்று கண்டுகொள்வது. என்மாதவன் - என்னை யெழுதிக்கொண்ட ஸ்ரிய:பதி.

அந்வயபூர்வகமாகபாவம் (மாதவனைநாராயணனெந்தையென்று) எந்தை-எனக்குஜநகனென்னுதல், எனக்கு ஸ்வாமியென்னுதல். முழுவேழுலகுக்குமநாதனாய், வேதமயனாய், காரணம்கிரிசை கருமமிவறறுக்கு முதல்வனாய், சீரணங்கமரர்பிறர்பலரும தொழுதேத்தநின்று வாரணததை மருப்பொசித்தபிரானாய், என்மாதவனை-நாரணன்-எந்தை யித்யந்வய:...*

மூன்றாம்பாட்டு.

மாதவனென்றதேகொண்டென்னையினியிப்பாற்பட்டது
யாதவங்களுஞ்சேர்கொடேனென்றென்னுட்புகுந்திருந்து
தீதவங்கெடுக்குமமுதஞ்செந்தாமரைக்கட்குன்றங்
கோதவமிலென்கன்னற்கட்டியெம்மானென்கோவிந்தனே.

ஆறாயிரப்படி.

(மாதவன்) இப்படியெம்பெருமானென்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட விஷயீகரிக்கும்படி யென்னை வைஷ்ணவனாக்குகைக்கு ஹேதுவான என்பக்கலுள்ள சதிராகிறதென்னென்னில்; அதின்னதென்று சொல்லுகிறது.

யத்ருச்சயாபிராட்டி பரிக்ரஹித்தார் சொல்லுவதொருசொல்லைச்சொல்ல, அச்சொல்மாத்ரத்தையேகொண்டு மெய்யேபிராட்டி பரிக்ரஹமாயிருப்பாரைப்பார்த்தருளும் பார்வையாலே யென்னைப்பார்த்தருளி, “இவரையாகாதேதான் நெடுங்காலமெல்லாமிழந்தது” என்று, இழந்தகாலத்தை யநுஸந்தித்துமோஹித்து, பின்னை நெடும்போதுகூடப்ரபு

த்தனாய், போனகாலத்தை யினிச்செய்யலாவதில்லையிறே, இனி யிப்பா லுள்ளகாலமாகிலு மென்னைவிடேன் என்று, நிரதிசயமைஶ்வர்யத்தை யுடையனாய், நிரதிசயபோக்யபூதனாய், ஆஶ்ரிதவாத்ஸல்யனாய், பரமகாருணி கனாயிருந்த எம்பெருமானென்னுள்புகுந்திருந்து, என்பக்கலுள்ள ஸ்வஸம்ஶ்லேஷவிரோதியான ஸ்வரூபப்ரயுக்ததோஷத்தையும் ஹேதுக்ரு தமானதோஷத்தையும்போக்கி, எனக்கு பரமபோக்யனானனென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்பக்ஷபாதமடியாக ஸ்வவிஷயத்தி லுக்திமாத்ரத்தையேபற் றாசாகக்கொண்டுபண்ணின வுபகாரத்தை யருளிச்செய்கிறார்.

என்-எனக்காக. கோவிந்தன்-க்ருஷ்ணனாய்வந்தவதரித்த. எம்மான் - என் னுடையஸ்வாமியானவன். மாதவன்-ஶ்ரீமான். என்றதே-என்று நான்சொன்னவிந் த அஹ்ருதயோக்தியே. கொண்டு-பற்றாசாகக்கொண்டு. என்னை - உக்தியில்வாசிய றியாதவென்னை. இனி-உக்த்யநந்தரமாக. இப்பாற்பட்டது - மேலுள்ளகாலமெல் லாம். அவங்கள்-அவித்யாதிகளானகுறைகள். யாதும்-ஏதேனுமொன்றையும். சேர் கொடேன்-சேர்கொடேன். என்று - என்றுஸங்கல்பித்து. அதுக்கீடாக, என்னுள்- என்னெஞ்சுக்குள்ளே. புகுந்து-புகுந்து. இருந்து-அநந்யபரனாயிருந்து. தீது-புத்தி பூர்வகமானதீமையையும். அவம்-ப்ராமாதிகமான அவத்தையும். கெடுக்கும்-கெடு க்கும்படியான. அமுதம்-நித்யபோக்யபூதனாய். இஸ்ஸம்ஶ்லேஷத்தாலே, செம்-சி வந்த. தாமரை-தாமரைபோலேயிருக்கிற. கண்-திருக்கண்களையும். குன்றம்-ஸுஸ் த்திரமாய்வளர்ந்தவடிவையுமநுபவிப்பித்து. கோது - கோதும். அவம் - அவமும். இல்-இல்லாத. என்கன்னற்கட்டி-கன்னற்கட்டிபோலே யெனக்கினியனானான்.

கன்னற்கட்டி-கருப்புக்கட்டி. அதுக்கு, கோதும், அவமுமாவது-நீரஸமான வஸ்த்வந்தரஸம்ஸர்க்கமும், பாகதோஷமும். ஈஶ்வரனுக்கு, கோதும், அவமுமா வது-உபகாரத்தினுடையஹேது ஸாபேக்ஷத்வமும், ஸ்வப்ரயோஜநார்த்தத்வமும்.*

ஈடு-மூன்றாம்பாட்டு.

கீழே "மாசதிரிதுபெற்று" என்றார்; இந்நன்மைக்கடியென் னென்ன; நினைவின்றிக்கேயிருக்க அந்தঃபுரவாசிகள்சொல்லும் வார்த் தையைச்சொன்னேனென்கிறார்; "ஜாமாதாதயிதஸ்தவேதி பவதீஸம்பந் தத்ருஷ்ட்யாஹரிம்பஶ்யேம" (ஜாமாதாதயிதஸ்தவேதி பவதீஸம்பந் தத்ருஷ்ட்யாஹரிம்பஶ்யேம) என்றாரிறேபட்டர்.

(மாதவனென்றதேகொண்டு) நான் "மாதவன்" என்ற வுக்தி மாத்ரத்தைக்கொண்டு. இத்தையேதிருவுள்ளத்திலே குவாலாகக்கொண் டு. "அல்லாததிருநாமங்களுக்கு மிதுக்கும்வாசியறிவதே" என்றுஇத் தையே குவாலாகக்கொண்டு. (என்னை) அல்லாத திருநாமங்களுக்கு மிதுக்கும் வாசியறியாதவென்னை. (இனி) முன்புகழிந்தகாலம் கழிந்தே விட்டதிறே. மேலத்யல்பகாலமாய்த் தோற்றுகின்றதாயிற்று ஈஶ்வரனு க்கு. "பழுதேபலபகலும்போயின" என்றீஶ்வரனைக் கிட்டினசேதனரி

ருக்கு மிருப்பைத்தா னென்பக்கலிலே யிராநின்றான். “[illegible]” (புத்வாகாலமதீதஞ்சமுமோஹ) என்றிராநின்றானே யிற்று. (இப்பாற்பட்டது) அனைக்குக்கிழக்குப்பட்ட நீரோபாதியிறே போனகாலம், இனிமேலுள்ள காலமாகிலும். (யாதவங்களுஞ்சேர்கொடேனென்று) உன்னை யாதொருதபஸ்ஸிலும் புக்குக்லேசிக்கவிடேனென்று. அம்மிதுணையாக ஆறிழிகையிறே இவனைவிட்டு உபாயாந்தரத்தைப்பற்றுகை. அவங்கள் - நரகஹேதுவான அவித்யாதிகள். புறம்பே, சில ப்ரயோஜநங்களைக்கொண்டு போகவிடுதல், “அபோக்யன்” என்றகலவிடுதல், உபாயாந்தர பரிக்ரஹம்பண்ணவிடுதல் செய்யேனென்று. (என்று) “[illegible]” (ஏதத்வ்ரதம்மம) என்கிறபடியே ஸங்கல்பித்து. இப்படிஸங்கல்பித்து நெடுங்கைநீட்டாக விருக்கையன்றிக்கே, என் ஹ்ருதயத்திலே வந்துபுகுந்து. “புகுந்தாலும் போக்குவரத்துண்டாமாகில், வாலிபோனவழியையடைத்து மஹாராஜர் குறும்புசெய்தாற்போலேயாம்” என்றுஸ்த்தாவர ப்ரதிஷ்டையாகவிருந்து. (புகுந்திருந்து) இவனைவரநிறுத்தவொண்ணாதே யிவர்க்குமாகத்தான் புகுந்திருந்தானத்தனை. புகுந்துசெய்த க்ருஷியேதென்னில் (தீதவங்கெடுக்கும்) தீதாவது - * பொய்ந்நின்ற ஞானத்துக்குமுன்பு புத்திபூர்வகமாகப் பண்ணிப்போந்தபாபம், அவமாவது - ஜ்ஞாநம்பிறந்தபின்பு ப்ராமாதிகமாகப்பண்ணினவை. இரண்டாலுமாக-பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தக கர்மங்களைச்சொல்லுகிறது. அன்றியே, “[illegible]” (கோக்நேசைவஸுராபேசசோரோபக்நவ்ரதேததா । நிஷ்க்ருதிர்விஹிதாஸத்பிஃ க்ருதக்நேநாஸ்திநிஷ்க்ருதிஃ) என்கிறபடியே, நிஷ்க்ருதியுள்ள பாபங்களையும் இல்லாதபாபங்களையும் சொல்லிற்றாகவுமாம். இவற்றைக்கெடுப்பது கஷாயபாநத்தைப் பண்ணுவித்தோவென்னில் (அமுதம்) தன்னுடைய போக்யதையை யநுபவிப்பித்தாயிற்று. (செந்தாமரைக்கண்குன்றம்) ரஸநேந்த்ரியத்துக்கே யன்றியேகண்ணுக்கும் போக்யமாயிருக்கை. (குன்றம்) இத்தலையிற்றீது மவமும்போக்கினாலு யிருக்கையன்றிக்கே, “தனக்குண்டாய்க்கழிந்தது” என்றுதோற்றும்படியாயிற்று வடிவிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யம் ; “[illegible]” (வ்யஸநேஷுமநுஷ்யாணாம்ப்ருஶம்பவதிதுஃகிதஃ) என்றிருக்குமவனிறே. (கோதவமிலென்கன்னல்கட்டி) கோதாவது - த்ரவ்யாந்தர ஸம்ஸர்க்கத்தாலேவருமது. அவமாவது-பாகத்தாலேவருமது. தார்ஷ்டாந்திகத்தில், கோதுமவமுமாகிறது- ஆந்ருஶம்ஸ்யத்துக்காகவாதல், இவனுக்குபகாரமாகவாதல் விஷயீகரிக்கை. தனக்குப் புறம்பாயிருப்பதொரு போக்யவஸ்துவில்லாதபடி தான்போக்யனாயிருக்கும். (எம்மா

ன்) நான் "வேறொன்றுபோக்யம்" என்றிராதபடி யென்னைத்தோற் பித்தவன். (என்கோவிந்தனே) க்ருஷ்ணாவதாரமும் தமக்கென்றிருக்கி ருர்; * ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவிறே.................*

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு. (மாதவனித்யாதி) கீழ்ப்பாட்டு ப்ராஸங்கிகமாகையாலே முதற்பாட்டோடே ஸங்கதி (கீழேயித்யாதி) இது-ஸாத்யபரமானயோஜனையைப் பற்ற. அந்தஃபுரஸம்பந்திகளப்படிசொல்லுவர்களோவென்ன (ஜாமாதேத்யாதி) ஸ்ரீகுணரத்னகோஶே, "ஜாமாதா...[illegible]... ...[illegible]... ...[illegible]..." (மாதர்லக்ஷ்மியதைவமைதிலஜ நஸ்தேநாதவநாதேவயம் த்வததாஸ்யைகரஸாபிமாநஸுபகைர்ப்பாவைரிஹாமுத்ர ச। ஜமாதாதயிதஸ்தவேதிபவதீஸம்பந்ததருஷ்ட்யாஹரிம்பஶ்யேமப்ரதியாம யாமசபரீசாராந்ப்ரஹ்ருஷ்யேமச) அஸ்யார்த்த:- வாரீர்தாயாரே, லக்ஷ்மியே, மைதிலஜநமானது யாதொருபடி யும்முடைய ஸம்பந்தத்தையிட்டுப் பெருமாளை விரும்புகிறது, அந்தமார்க்கத்தாலே அந்நாங்களும்முடைய தாஸ்யமொன்றிலு மே ரஸமாயிருக்கிறவபிமாநத்தாலே யழகியதாயிருக்கிற பாவங்களினாலே இஹ லோக பரலோகங்களிரண்டிலும் "மணவாளப்பிள்ளை" "தேவரீருடையநாயகன்" என்னும், மைதிலஜநம்போலே தேவரீருடைய ஸம்பந்தத்தையிட்டே ஸர்வேஶ்வ ரனை ஸேவிக்கக்கடவோம், கிட்டக்கடவோம், கைங்கர்யங்களைப்பண்ணக்கடவோ ம், அந்தக்கைங்கர்யத்தாலவனுக்குவிளைகிற ப்ரீதியைக்கண்டு அத்தாலேயுகக்கக்கட வோமென்றபடி.

"என்றதே" என்ற ஏகாரத்தினர்த்தம் (நான்மாதவனென்றது) "கொண்டு" என்றதுக்குபாவம் (இத்தையேயித்யாதி) குவாலாக-அதிகமாக. "மாதவன்" என்ற துக்குபாவம் (அல்லாதவித்யாதி)

தாத்பர்யம் (முன்பித்யாதி) "இனி" என்கிறவிது-பகவத்வசநாந்தர்க்கதம். பலிதம் (மேல் அதயல்பேத்யாதி) மேலத்யல்பகாலமாய்த்தோற்றி அதுகிப்பானிவ னன்றோவென்ன (பழுதேயித்யாதி) முதற்றிருவந்தாதி. இப்படியநுபவத்தோடே செல்லுகைக்குறுப்பான கீழ்க்கழிந்தகாலமெல்லாம் வ்யர்த்தமேபோய்விட்டதே யென்றபடி. அவனிப்படியிருந்தவிடமுண்டோவென்ன (புத்ரவாகாலமித்யாதி) கிஷ்கிந்தாகாண்டேத்ரிம்ஶே, "...[illegible]..." (காமவ்ருத்தஞ்சஸுக்ரீவம் நஷ்டாஞ்சஜநகாத்மஜாம்।புத்ரவாகாலமதீதஞ்சமுமோஹபரமாதுர:) "இப்பாற் பட்டது" என்கையாலே-அப்பாற்பட்டதிற் செய்யலாவதில்லையென்று விவக்ஷித்த பாவம் (அணைக்கித்யாதி) இனியிப்பாற்பட்டது-உக்த்யநந்தரமான மேலுள்ளகால மெல்லாமென்றுசப்தார்த்தம். உபாயாந்தரங்களினுடைய ஆபாஸத்வத்தை ஸநித ர்ஶநமாகவருளிச்செய்கிறார் (அம்பிதணையாகவித்யாதி) "அவங்கள்" என்றதுக் கர்த்தம் (நரகஹேதுவானவித்யாதி) "யாது" என்றவிசேஷணத்துக்குபாவம் (புற

ம்பேயித்யாதி) " யாது, அவங்கள் " என்றுபதச்சேதம். ஏதேனுமொருகுறைகளு ம்சேரும்படி விட்டுக்கொடேனென்று சப்தார்த்தம்.

" என்னுள் " என்றதுக்குபாவம் (இப்படியித்யாதி) நெடுங்கைநீட்டாக-அதிதூரமாக. " இருந்து " என்றதுக்குபாவம் (புகுந்தாலுமித்யாதி) வாலிபோனவழியையடைத்து - வாலிபோனபிலத்வாரத்தையடைத்தென்றபடி. குறும்புசெய்கை - துஷ்டதனம்பண்ணுகை. " புகுந்திருந்து " என்றதுக்குபாவம் (இவனைநிறுத்தவித்யாதி)

தீதவம் - பூர்வோத்தராகங்களாதல், நிஷ்க்ருதியுள்ளவையுமதில்லாதவையுமாதல். இரண்டர்த்தத்தையும் க்ரமேணவருளிச்செய்கிறார் (தீதாவது பொய்நின்றவித்யாதியாலும், அன்றியே கோக்நேசேத்யாதியாலும்) கோக்நேசைவேத்யாதிஶ்லோகঃ-கிஷ்கிந்தாகாண்டே சதுஸ்த்ரிம்ஶே ஸுக்ரீவம் ப்ரதிலக்ஷ்மணேநோக்தঃ. நிஷ்க்ருதியில்லாத பாபங்களென்றவிடத்திலே - " ப்ராயஶ்சித்தேந ஸம்யாந்தி மஹாபாதகிநோ நராঃ | ஸம்ஸ்ருணாமத ஹந்தாரோ ந ஶுத்த்வா ரஜநீசர "

(ப்ராயஶ்சித்தேநஸம்யாந்திமஹாபாதகிநோஹி | ஶரணாகதஹந்தாரோநத்வேவரஜநீசர) என்றரகுராக்ஷஸஸம்வாதத்தின் ஶ்லோகமநுஸந்தேயம்.

(ரஸநேந்த்ரியத்துக்கேயிதி) " என்றக்காலண்ணிக்கு மமுதூறுமென்னாவுக்கு " என்றாற்போலே ஸ்துதித்வாராரஸநேந்த்ரியத்துக்கு போக்யமென்றபடி. "குன்றம்" என்றதுக்குபாவம் (இத்தலையிலித்யாதி) அவர்கள் வ்யஸநம் தன்னதாயிருக்குமோவென்ன (வ்யஸநேஷ்வித்யாதி) அயோத்யாகாண்டே த்விதீயே, பூர்வமேவ "துயரறு" இத்யத்ரலிகிதம்.

த்ருஷ்டாந்தத்திலே யிவ்விரண்டுமேதென்ன (கோதாவதித்யாதி) தார்ஷ்டாந்திகத்தில்-இவனிடத்தில். தார்ஷ்டாந்திகத்திலென்ற வாக்யத்தால்பலிதம்-ப்ரணயித்வத்தாலே தன்பேறாகச்செய்யுமவனென்று. ஆந்ருஶம்ஸ்யத்துக்காக-ஆந்ருஶம்ஸ்யத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக. இவனுக்கு-சேதநனுக்கு. "அமுதம், 'கன்னற்கட்டி " என்றபதத்வயத்துக்குபாவம் (தனக்கித்யாதி) இவ்வாக்யம் - "கோதவமில்" என்கிறதுக்குதாத்பர்யாந்தரமாதல். இப்போது, கோதாவது - ஸ்வஸமாநபோக்யவஸ்த்வந்தரஸத்பாவம், அவமாவது ஸ்வாதிகபோக்யவஸ்த்வந்தரஸத்பாவம். கன்னற்கட்டி-வெல்லக்கட்டி.

"என் " என்றதுக்குபாவம் (க்ருஷ்ணாவதாரமுமித்யாதி) அப்படி தமக்காயிருக்குமோவென்ன (ஆட்கொள்ளவித்யாதி) பெரியாழ்வார்திருமொழி. ஸர்வரையுமடிமைகொள்வதாகவந்தாவிர்ப்பவித்த கோபநிர்வாஹகனானவனை யென்றபடி. இத்தால்-ஆஶ்ரிதர்க்காகவவதரிக்கை "தமக்கு" என்னலாயிருக்குமென்றுகருத்து.

அடியேதொடங்கி, என்கோவிந்தன் - எம்மானித்யந்வயঃ ....*

நான்காம் பாட்டு.

கோவிந்தன்குடக்கூத்தன்கோவலனென்றென்றேகுனித்துத்
தேவுந்தன்னையும்பாடியாடத்திருத்தியென்னைக்கொண்டென்
பாவந்தன்னையும்பாறக்கைத்தெமரேழேழ்பிறப்பு
மேவுந்தன்மையமாக்கினான்வல்லனெம்பிரான்விட்டுவே.

ஆறாயிரப்படி.

(கோவிந்தன்) இப்படியென்னுள்ளேபுகுந்திருந்து தன்னுடைய குணசேஷ்டிதங்களையேத்திக் களிக்கும்படியாகவும், தன்னுடையஸர்வேஶ்வரத்வத்தையு மாஶ்ரிதபராதீநத்வமாகிற தன்னுடையஸ்வரூபத்தையும் பாடியாடும்படியாகவு மென்னைத்திருத்தி, இப்படியென்னை விஷயீகரித்து, பின்னையென்பக்கலுள்ள ப்ரதிபந்தகங்களையெல்லாம்போக்கி யவ்வளவில் பர்யவஸியாதே, என்னோடு ஸம்பந்தித்தாரையுங்கூட என்னைப்போலே தன்றிருவடிகளை ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவராக்கினான்; வல்லன் வல்லனெம்பிரான், வல்லனென்னாயன், வல்லனென்னப்பன், வல்லனென்றென்று அவனைப்புகழுகிறார்............ ....*

பன்னீராயிரப்படி,

அநந்தரம், இவ்வுபகாரம் ஸ்வஸம்பந்திகுலபர்யந்தமாம்படிபண்ணின ஸாமர்த்த்யத்தையருளிச்செய்கிறார்.

வல்லன்-நினைத்தது செய்யவல்லசக்திமானாய். விட்டு-ஸமஸ்தபதார்த்தங்களையும் வ்யாபித்து. எம்பிரான் - ஊரைவளைந்தொருவனைப்பிடிக்குமாபோலே யென்னையங்கீகரித்தஸ்வாமியானவன். கோவிந்தன்-ஜாத்யுசிதமானகோஸம்ருத்தியையுடையவன். குடக்கூத்தன் - அந்தஸம்ருத்த்யுசிதமானஹர்ஷவ்யாபாரமாயுள்ளகுடக்கூத்தையுடையவன். கோவலன்-இந்தவைஶ்வர்யசேஷ்டிதங்களுக் கநுரூபமானகோபாலஜந்மத்தையுடையவன். என்றென்றே - என்றென்றிவற்றைத்தனித்தனியேசொல்லி. குனித்து-ப்ரீதியாலேகூத்தாடி. தேவும-இந்தஸௌலப்யத்துக்கடியானபரத்வத்தையும். தன்னையும்-தனக்கஸாதாரணஸ்வபாவமான நீர்மையையும். பாடி-ப்ரீதிக்குப்போக்குவீடாகப்பாடி. ஆட-ஸஞ்சரிக்கும்படி. திருத்தி - இரும்பைப்பொன்னாக்குவாரைப்போலே நித்யஸூரிஸமாநனாம்படிதிருத்தி. என்னை-என்னை. கொண்டு-தன்னுடையவனாகக்கைக்கொண்டு. ஸ்வாங்கீகாரவிரோதியான, என்-என்னுடைய. பாவந்தன்னையும்-பாபங்களையும். பாற-ஓடிப்போம்படி. கைத்து - துரத்தி. எமர்-என்னோடந்வயமுடையார். ஏழெழுபிறப்பும்-ஏழேழுஜந்மமும். மேவும்-தன்னைப்ராபிக்கும். தன்மையம்-தன்மையையுடையோமாம்படி. ஆக்கினான்-பண்ணினான்.

இதொருசக்தியோகமிருந்தபடியென்னென்றுகருத்து. பாற-ஓட ....

ஈடு-நான்காம்பாட்டு.

என்னோடு பரம்பரயாஸம்பந்தமுடையாரையுங்கூட என்னைப்போலேயாக்கினானொருவனுடைய ஸாமர்த்த்யமிருக்கும்படியே! என்று விஸ்மிதராகிறார்.

(கோவிந்தன்) ஸ்ரீவைகுண்டத்திலில்லாததொரு ஸம்பத்திறேயிது. கோஸம்ருத்தியாலுண்டான ஐஶ்வர்யமுள்ளதிங்கேயிறே. (குடக்கூத்தன்) ப்ராஹ்மணர், ஐஶ்வர்யம்விஞ்சினால் யாகங்கள்பண்ணுமாபோ

லே, இடையனைஸ்வர்யம்மிகுத்தால் செருக்குக்குப் போக்குவிடுவதொ ன்றுயிற்று-குடக்கூத்தாவது. " 𑌅𑌵𑌾𑌕𑍍𑌯𑌨𑌾𑌦𑌰𑌃 " (அவாக்யநாதர:) என்றிருக்கக்கடவவஸ்து, தைர்யபங்கம்பிறந்து செருக்குக்குத்தலைச்சாவி வெட்டியாடினபடியிறே. (கோவலன்) இவற்றுக்கடியான பிறப்புடைய வன். பிறந்துபடைத்த ஐஶ்வர்யமிறேயிது. (என்றென்றேகுனித்து) இக் குணங்களைமாறுதே சொல்லாநின்றுகொண்டு, உடம்பிருந்தவிடத்திலி ராதேயாடி. அவனுடைய ஆஶ்ரிதபாரதந்த்ரயத்தையநுஸந்தித்தால் இவ ர்க்குப்பேசாதிருக்கவொண்ணுதிறே. (தேவும்) தேவுமென்கிறது-ஐஶ்வ ர்யத்தை. தன்னையென்கிறது-ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை; அதிறேதானுன தன்மை; [𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑍇𑌥𑌾𑌃] [ஆத்மாநம்நாதிவர்த்தேதா:] என்றுனிறே. " 𑌆𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌂 𑌭𑌰𑌤𑌂 𑌨𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑍇𑌥𑌾𑌃 " (ஆத்மபூதம்பரதம்நாதிவர்த்தேதா: என்கிறுன்) என்று சிலர்சொல்லுவர்கள். பட்டர், "நீரானதன்மையாகிறது-ஆஶ்ரிதபரதந்த்ரராகை. உம்முடையதம்பிசொ ன்னவார்த்தையைமறுத்து நீரானதன்மையையிழவாதேகொள்ளுமென் கிறுன் " என்று. (பாடியாடத்திருத்தி) " என்றென்றேகுனித்து " என் கிறவிடத்துக்கும், "பாடியாட" என்கிறவிடத்துக்கும் வாசியென்னென் னில்; கீழ்-ஸௌலப்யபரம்; இங்கு - ஐஶ்வர்யமும் ஸௌலப்யமுமிரண் டுமுண்டு; விஷயபேதத்தாலேசொல்லவுமாம். அன்றிக்கே, என்றென்று என்கிறவிடம்-அஹ்ருதயமான உக்திமாத்ரமாய், குனிக்கையாவது - உத் யோகத்தளவாய், இங்கு-ஸஹ்ருதயமாகப்பாடுவதாடுவதானபடியாய், எ ன்றென்றேகுனித்து-பாடுவதாடுவதாம்படியென்றதாதல். (திருத்தி) தரி சுகிடந்ததரையைச்செய்காலாம்படி திருத்துவாரைப்போலே, நித்யஸூ ரிகள் யாத்ரையே யாத்ரையாம்படிதிருத்தி, (என்னைக்கொண்டு) " என் னைக்கைக்கொண்டு. ஒருபாயாநுஷ்டாநத்தைப்பண்ணுவித்து என்னில் இப்போதிவர்க்கபஸித்தாந்தமாம்; பகவத்ப்ரஸாதத்தாலே பெற்றுராக ச்சொல்லுமதுக்குஞ்சேராது. ஆனுலென்சொல்லுகிறதென்னில்; சேற்றி லேவிழுந்த மாணிக்கத்தையெடுத்துக்கழுவி விநியோகங்கொள்ளுமா போலே, என்னைஸ்வீகரித்து, என்னுல்போக்கிக்கொள்ளவொண்ணுத பா பங்களையு முருமாய்ந்துபோம்படியோட்டி. (எமரித்யாதி) இதுதானென் னுெருவனளவன்றிக்கே, என்னுேடு ஸம்பந்தமுடையாரேழுபிறப்பும் தன்னைக்கிட்டுகையே ஸ்வபாவமாகவுடையோமாம்படிபண்ணினுன். (எ ம்பிரான் விட்டுவல்லன்) எனக்குபகாரகனுனஸர்வேஶ்வரன், நினைத்தகா ர்யஞ்செய்து தலைக்கட்டவல்லன். ஸர்வசக்திமாட்டாததுண்டோ. வ்யாப் தியும் தமக்காகவென்றிருக்கிறுர்.......................................*

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (கோவிந்தனித்யாதி) "எமரேழேழுபிறப்புமேவுந்தன்மையமாக்கினான் வல்லனெம்பிரான்" என்றதிலே நோக்காகவவதாரிகை (என்றோடித்யாதி)

காவிந்ததீதி - கோவிந்தஃஎன்றபடி. இத்தை நிரூபகமாகச்சொல்லுகையாலே-கோஸம்ருத்தியைஸம்பத்தாகவிவக்ஷித்து, பரத்வமொழியவிது - ஸம்பத்தோவென்ன (ஸ்ரீவைகுண்டத்திலித்யாதி) இது - கோவிந்தத்வம். இதங்கில்லையோவென்ன (கோஸம்ருத்தீதயாதி) கோஸம்ருத்தி குடக்கூத்துக்குஹேதுவென்று ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணாதித்யாதிவாக்யத்வயேந) அப்படியே (அவாக்யநாதரஃ) என்றுகூட்டுவது. தலைச்சாவிவெட்டுகையாவது - எழுச்சியறுக்கை. அதாவது-பயிர்மிடுகிவளர்ந்தவாறே, பதர்த்துப்போகாமைக்கு அதின் வளர்த்தியைக்கொய்யக்கடவதிறே; அப்படியே செருக்குக்குப்போக்குவிட்டாடினபடி. இவற்றுக்கு - கோவிந்தனுகைக்கும், குடக்கூத்தனுகைக்கும். பிறப்புடையவன்-கோபஜந்மத்தையுடையவன். சாடு (பிறந்தித்யாதி) அவதரித்து ஸம்பாதித்தவைஶ்வர்யமென்று ஸ்வபாவார்த்தம். ஜந்மஸித்தம், நத்வாகந்துகமிதித்வநிஃ. இக்குணங்களை - "கோவிந்தன், குடக்கூத்தன், கோவலன்," என்று சொன்னகுணங்களை. வீப்ஸார்த்தம் (மாருதேயித்யாதி) குனித்து-ப்ரீதியாலே கூத்தாடி. மாருதே சொல்லுகைக்கும் குனிக்கைக்குமடியேதென்ன; உக்தபதத்ரயபலிதம் ஹேதுமாஹ (அவனுடையவித்யாதி)

ஐஶ்வர்யத்தை - ஈஶ்வரத்வத்தை. "தன்னை" என்றால் - ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தைச் சொல்லுமோவென்ன (அதிறேயித்யாதி) தானானதன்மை - ஸ்வஸ்வபாவம். அப்படியாஶ்ரித பாரதந்த்ர்யமே தானானதன்மையா யிருக்குமோவென்ன (ஆத்மாநமித்யாதி) அயோத்யாகாண்டே ஏகாதசசததமேராமம்ப்ரதிவசிஷ்டஃ, "ஹாதஸ்வஅகேஸ்வநந்ராவஷோநஸ்ராவவ॥ குதாநநாதிவரோயாஸ்த்யுரவாராகூஃ" (பரதஸ்யவசஃஶ்ருர்வந்யாசமாநஸ்யராகவ। ஆத்மாநந்நாதிவர்த்தேதாஸ்ஸநயதர்மபராக்ரம) (என்றனிறே) வஸிஷ்டனிதிசேஷஃ உபாத்த வசநஸ்யோக்தார்த்தே ப்ரமாணதாம் தர்ஶயதி (ஆத்மபூதமித்யாதி) தம்பி - பரதன். மறுத்து - நிஷேதித்து. நீரானதன்மையை - நீரானஸ்வபாவத்தை. அதாவது - ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை யென்றபடி. தடஸ்தசங்கையை யநுவதித்து பரிஹரிக்கிறார் (என்றென்றேயித்யாதி) கீழ்ஸௌலப்யபரமென்றது - ஸௌலப்யத்தை யநுஸந்தித்ததால் வந்தகூத்தைச்சொல்லுகிற!தென்றபடி. இங்கு- "தேவிம்தன்னையும்" என்றவிடத்திலே. (ஐஶ்வர்யமுமித்யாதி) ஈஶ்வரத்வத்தையும், ஸௌலப்யத்தையு மநுஸந்தித்ததால் வந்தபாடுதலாடுதலைச் சொல்லுகிறதென்றபடி. (என்றென்றேகுனித்துப் பாடுவதாடுவதாம்படி) அஹ்ருதயமாகச் சொல்லி ந்ருத்தோத்யோகம்பண்ணி ஸஹ்ருதயமாகப் பாடுவதாடுவதாம்படி யென்றபடி.

தரிசு - கரம்பு. செய்காலாம்படி - பயிர்நிலமாம்படி. நித்யஸூரிகள் யாத்ரை - பகவதநுபவ கைங்கர்யங்கள்.

(ஒருபாயாநுஷ்டாநத்தைப் பண்ணுவித்து) பாபங்களைப் போக்கினான் (என்னில்) என்றுகூட்டுவது. (அபஸித்தாந்தமாம்) "நோற்றநோன்பிலேன்"

என்றிருக்கும் ப்ரயக்ஷராகையாலே யபஸித்தாந்தமாமென்றபடி. பரிஹாராந்தரம் (பகவத்ப்ரஸாதத்தாலேயித்யாதி) இதுக்கு- " அருளினன் " என்றதிலேநோக்கு, என்னைஸ்வீகரித்து - என்னைத்தன்னுடையவனாகக்கொண்டு. பாபங்களையுமென்றசப்தம்- " என்னைக்கொண்டு " என்றத்தை ஸமுச்சயிக்கிறது. பாறக்கைத்து - ஓடத்துரத்தி. உருமாய்ந்துபோம்படியென்றது - பலிதார்த்தம். உருமாய்ந்து- உருவழிந்து. ஸ்வரூபநாசமென்றபடி.

மேவும்தன்மையமாக்கினான் - (தன்னைக்கிட்டுகையே ஸ்வபாவமாகவுடையோமாம்படி பண்ணினான்) என்றுசப்தார்த்தம். மேவுகை - கிட்டுகை. தன்மை - ஸ்வபாவம்.

" வல்லன் " என்றதுக்குபாவம் (ஸர்வசக்தியித்யாதி) " விட்டு " என்றதுக்கு - ஸர்வேஸ்வரனென்றே ரர்த்தமருளிச்செய்து, வ்யாப்தனானென்றர்த்தாந்தரம் (வ்யாப்தியுமித்யாதி) " விஷ்லு வ்யாப்தௌ " (விஷ்லுவ்யாப்தௌ) இதிஹிதாதுঃ. வல்லன் - சக்தன்.

எம்பிரான்விட்டு - என்னைக்கொண்டென் பாவந்தன்னையும் பாறக்கைத்து - கோவிந்தனென்றுதொடங்கி, இருத்தி - எமரேழெழுபிறப்பும் மேவும்தன்மையமாக்கினான்; வல்லனே இத்யந்வயঃ. ....*

ஐந்தாம்பாட்டு.

விட்டிலங்குசெஞ்சோதித்தாமரைபாதங்கைகள்கண்கள்
விட்டிலங்குகருஞ்சுடர்மலையேதிருவுடம்பு
விட்டிலங்குமதியஞ்சீர்சங்குசக்கரம்பருதி
விட்டிலங்குமுடியம்மான்மதுசூதனன்றனக்கே.

ஆறாயிரப்படி.

(விட்டிலங்கு) இப்படி யென்னை வைஷ்ணவனாக்குகைக்குத் தன்னழகை யுபகரணமாகக்கொண்டென்னுள்ளேபுகுந்தருளினானென்கிறார்.

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸபரிகரமாகத் தம்மையங்கீகரித்தபடியாலே யவனுக்குப்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தையருளிச்செய்கிறார்.

இப்பாட்டில் முதலடியில், விட்டுவென்று - திருநாமமாகப்பிரித்து, " விட்டிலங்குமுடியம்மான் " என்று ஈற்றடியோடே யந்வயித்துக்கிடக்கிறது; அல்லாதபோது, திருநாமம்முதலாயெழுகிறபாட்டுக்களின் மர்யாதைகுலையும். " விட்டு " என்னுமிவ்விடத்திலுகரம் - குற்றியலாகக்கொள்க.

விட்டு-விஷ்ணுவாய். விட்டு-பரந்து. இலங்கு-விளங்குகிற. முடி-அபிஷேகத்தையுடையனாய். அம்மான்-ஸ்வாமியான. மதுசூதனன்றனக்கு - மதுசூதனன்தனக்கு. இலங்கு-இலங்கி. செம்-சிவந்த. சோதி-ஒளியையுடைய. தாமரையே - தாமரைபோன்றன. பாதம்-திருவடிகளும். கைகள்-திருக்கைகளும். கண்கள்-திருக்கண்

களும். விட்டு-விகஸிதமாய். இலங்கு - விளங்காநின்ற. சரு - சீலமான. சுடர்-ப்ரபையையுடைத்தான. மலையே-மலைபோன்றது. திரு-அழகிய. உடம்பு-வடிவு. சீர்-அழகிய. சங்கு-சங்கு. விட்டு-பரம்பி. இலங்கு-விளங்குகிற. மதியமே-சந்த்ரனைப் போன்றது. சக்கரம்-சக்ரம். விட்டிலங்கு-அப்படிப்பட்ட. பருதியே-ஆதித்யனைப் போன்றது.

ஸாமாநாதிகரண்யம்-உபமாநோபமேயபாவத்தாலே.........................*

ரு - ஐந்தாம்பாட்டு.

திருமாலையாண்டானோடே யெம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுகிறநாளில், பாட்டுக்கள்தோறும் சிலவார்த்தைகளையருளிச் செய்து "இதுஅர்த்தமானாலோ" என்றால், "இதுவிஸ்வாமித்ரஸ்ருஷ்டி, ஆளவந்தாரருளிச்செய்யக்கேட்டறியேன்" என்று பணிக்குமாமாண்டான்; ஆண்டான் "இப்பாட்டுக்கு விஸ்வாமித்ரஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ" என்ன, "இப்பாட்டால்-தன்னவயவஸௌந்தர்யத்தாலே யென்னைத் தனக்காக்கினானென்கிறார்" என்றருளிச்செய்தருளினாராம். அதுவுங்கிடக்க, பட்டரருளிச்செய்வதொன்றுண்டு-"ஆழ்வாரையுமாழ்வார்பரிகரத்தையும் விஷயீகரித்து, அத்தாலே திருமேனியிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைச்சொல்லுகிறது" என்று; "[illegible]" (விரோதிதஜடஸ்ஸ்நாதஸ்சித்ரமால்யாநுலேபநः । மஹார்ஹவஸநோராமஸ்தஸ்த்தௌதத்ரஶ்ரியாஜ்வலந்) என்று நின்றாற்போலே.

(விட்டிலங்கித்யாதி) மதகுதிறந்தாற்போலேவிட்டு விளங்காநின்றுள்ள, சிவந்தவொளியையுடைத்தான தாமரைபோலேயாயிற்று தாம்தோற்றுவிழுந்திருவடிகள், தம்மையணைத்தகை, குளிரநோக்கின திருக்கண்கள், இவை. உபமேயத்துக்குபமாநம் நேராகப்போராமையாலே, அதுதன்னையே சிக்ஷித்துச்சொல்லுகிறார். அன்றிக்கே, விட்டுவுக்கு-இலங்குசெஞ்சோதித்தாமரைபாதமென்றந்வயம்.

(விட்டிலங்கித்யாதி) "ஸௌஹயநுஷண்ணகாரண்யம்" (சோபயந்தண்டகாரண்யம்) என்னுமாபோலே யிராநின்றது வடிவழகு. தம்மையணைத்தபோதைக் குளிர்ந்தவடிவிருந்தபடி.

விட்டிலங்குகிற ப்ரகாசத்தையுடைய சந்த்ரனைப்போலேயாயிற்று ஸ்ரீபாஞ்சஜந்யம். (சீர்சங்கு) பகவத்ப்ரத்யாஸத்தியாலேவந்த ஐஸ்வர்யம். [உண்பதுசொல்லிலுலகளந்தான்வாயமுதம் । கண்படைகொள்ளிற்கடல்வண்ணன்கைத்தலத்தே] ப்ரஸாதத்தைச்சூடிக் கைப்புடையிலே கிடப்பாரைப்போலே, அவன்வாயாலே ஊட்டஉண்டு, வடிவைப்பார்த்திருக்கையிலே சாயுமித்தனை. (சீர்சங்கு) "உன்செல்வம் சாலவழகியது" என்னும்படி வாயதுகையதான ஐஸ்வர்யமிறே.

(சக்கரம்பருதி) கண்டதில் மின்னிற்றென்றை யுபமானமாகச் சொல்லுகிறதேயிறே, ஆதித்யனைப்போலேயன்றே திருவாழியாழ்வா னிருப்பது.

(விட்டிலங்குமுடி) இவையித்தனையும் தன்புகராலேமுட்டாக் கிடமாயிற்று திருவபிஷேகம். (அம்மான்மதுசூதநன்றனக்கே) ஸர்வே ஶ்வரனுயிருந்துவைத்து ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனானவனுக்கு.

விட்டுவுக்கு - இலங்கித்யாதி-என்றுமுதலாகவந்வயம்.........*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (விட்டிலங்கித்யாதி) எம்பெருமானார் நிர்வாஹத்திலே, நிஷ்ஸபரிகரமாகத்தம்மை விஷயீகரித்தநெத்தாலேயென்னில்; (இப்பாட்டால்த ன்னவயவஸௌந்தர்யத்தாலே யென்னைத்தனக்காக்கினானென்கிறார்) என்று கூட்டிநிர்வஹிப்பது; எமரேழெழுபிறப்பும் மேலுந்தன்மையமாக்கின குணத்துக்கு த்தோற்று "விட்டிலங்கு" இத்யாதிவிசேஷணங்களை யிட்டேத்துகிறதென்று தி ருமாலையாண்டான் நிர்வாஹமென்று கண்டுகொள்வது. ஒருவனை விஷயீகரித்தத் தாலே யுஜ்ஜ்வலனாயிருந்த விடமுண்டோவென்ன (விபோதிதேத்யாதி) இஸ்ஸ்லோகம் - பரதாழ்வானை விஷயீகரித்த வநந்தரத்திலிருப்பைச்சொல்லுகிறது. யுத்தகாண்டே ஏகத்ரிம்ஶத்துத்தரஶததமே, "பூர்வந்து பரதேஸ்நாதே லக்ஷ்மணே ச மஹாபலே" (பூர்வந்துபரதேஸ்நாதேலக்ஷ்மணே சமஹாபலே) இத்யாத்யநந்தரம், "விபோதிதஜடாஸ்நாதஃ" (விபோதிதஜடாஸ்நாதஃ) இத்யாதி.

விட்டு - விகஸிதமாய். இலங்கு - விளங்காநின்றுள்ள. யத்வா, விட்டு - புறப்பட்டு. "தாமரை" என்றுதே, "விட்டிலங்கு" இத்யாதியாலே விசேஷிப்பானென்னென்ன (உபமேயத்துக்கித்யாதி) நேராக - ஒப்பாக. அதுதன்னை - உபமானந்தன்னை. "அன்றிக்கேவிட்டுவுக்கு" என்கிறவாக்யம் - சிலஸ்ரீகோசங்களிலே யிருக்கிறது, சில ஸ்ரீகோசங்களிலில்லை. இல்லாதபக்ஷத்திலே, அந்வயமருளிச்செய்கிறவிடத்திலே "விட்டுவுக்கு" என்றருளிச்செய்கையாலும், பாட்டுக்கள்தோறும் கீழ்முடிந்த திருநாமங்களை ஆதியாகவருளிச்செய்கிற ப்ரகரணமாகையாலும், "விட்டு" என்றதுக்கு - விஷ்ணுவுக்கு என்றர்த்தாந்தரமுண்டென்று கண்டுகொள்வது. இப்போது, மதுசூதநனை - விட்டுவுக்கென்றந்வயிப்பது. "விட்டு" என்னுமிவ்விடத்தில் உகரம் - குற்றியலாகக்கொள்வது. குற்றியல் - குறுகினசப்தம். அதாவது - உகாரம்லோபித்துக் கிடக்கிறதென்றபடி.

ப்ரகாசாதிசயம் த்ருஷ்டாந்தமுகேநாஹ (சோபயந்நித்யாதி) "ஶோபயந் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா। அத்ருஶ்யத ததா ராமோ பாலசந்த்ர இவோதிதঃ" (ஶோபயந்தண்டகாரண்யம்தீப்தேநஸ்வேநதேஜஸா। அத்ருஶ்யதததாராமோபாலசந்த்ரஇவோதிதঃ) இத்யாரண்யகாண்டேஷட்த்ரிம்ஶே ராவணம்ப்ரதிமாரீசஃ. கருஞ்சுடரென்று - குளிர்ந்த நிறமென்றறிந்தபடியென்னென்ன (தம்மையித்யாதி) கருமைக்கர்த்தம் (குளிர்ந்தவென்கிறது) விகஸிதமாய் விளங்காநிற்கிறநீலமான ப்ரபையையுடைய மலைபோன்றவழகிய வடிவென்று சப்தார்த்தம்.

“மதி, அம், சீர், சங்கு” என்றபதபேதம்பண்ணி, அம் - அழகியசங்கெ ன்று விவக்ஷித்து (ஸ்ரீபாஞ்சஜந்யமென்றது) யத்வா, “மதியம்” என்றுசந் த்ரவாசகமொருசப்தமுண்டு. அப்போது, ஸ்ரீயாஞ்சஜந்யமென்றது - உபசாரோ க்தி. சீர்சங்கு - ஐஶ்வர்யமுடையசங்கு. அழகியசங்கென்னுதல், சங்குக்குச்சீர்மை யேதென்ன (பகவதித்யாதி) ப்ரத்யாஸத்தி தன்னைக்காட்டுகிறார் (உண்பதித்யா தி) நாய்ச்சியார்திருமொழி. நீயுண்ணும்படிசொல்லில், திருவுலகளந்தருளினவனு டையவாகம்ருதமாயிற்றுபுஜிப்பது; கண்ணுறங்கில், கடல்போன்ற வர்ணத்தையு டையவனுடைய கைத்தலத்திலே யாயிற்று சாய்வதித்யர்த்தஃ. எடுத்தபாசுரத்துக் கர்த்தம் (ப்ராஸாதத்தையித்யாதி) சூடி - புஜித்து. கைப்புடை - திருக்கோபுரவா சலிலறை. பாரா-பார்த்துக்கொண்டு. சாயும்-சயிக்கும். இந்த ப்ரத்யாஸத்தியைஶ் வர்யமோவென்ன (உன்செல்வமித்யாதி) நாய்ச்சியார்திருமொழி. உன்னைஶ்வர் யம் மிகவுமழகியதித்யர்த்தஃ. வாயதுகையதான வென்றது - சாடு.

“𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌹𑌾𑌜𑍍𑌵𑌾𑌲𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑌮𑌪𑍍𑌰𑌭” (ஸுதர்சநம ஹாஜ்வாலகோடிஸூர்யஸமப்ரப) என்றிருக்க, “பருதி” என்று - ஸூர்யனை யு பமாநமாகச்சொல்லுகிற தென்னென்ன (கண்டதிலித்யாதி) மின்னிற்றென்றை- ப்ரகாசிப்பதொன்றை. “சக்கரம்” “பருதி” என்கிறஸாமாநாதிகரண்யம் - உ பமாநோபமேய பாவத்தாலே.

முடிவிலே சொல்லுகையாலும், விசேஷணமிட்டுபமாநஞ் சொல்லாமை யாலும், உபமேயமாத்ரத்தைச் சொல்லுகையாலும் பலித்தபாவம் (இவையித்த னையுமித்யாதி)

“விட்டு” என்றுதிருநாமமாக விவக்ஷித்தபக்ஷத்திலே யந்வயங்காட்டுகிறா ர் (விட்டுவுக்கிலங்கித்யாதியென்று முதலாகவந்வயமென்று) “விட்டிலங்கித்யா தி” என்றுபாடமிருந்ததாகில் - முந்தினவர்த்தத்தி லந்வயங்காட்டுகிறபடியாகிற து. விட்டிலங்குமுடியம்மான் மதுசூதநனுதனக்கு - பாதம்கைகள்கண்கள் - வி ட்டிலங்கு செஞ்சோதித்தாமரையே, திருவுடம்பு - விட்டிலங்கு கருஞ்சுடர்மலையே, சீர்சங்கு - விட்டிலங்குமதியமே, சக்கரம் - பருதியேயித்யந்வயஃ. த்விதீயபக்ஷே, விட்டிலங்குமுடியம்மான் மதுசூதநனை - விட்டுவுக்கு - பாதம்கைகள்கண்கள் - இலங்குசெஞ்சோதி யித்யாரப்ய பூர்வவதேவாந்வயஃ...*

ஆறாம்பாட்டு.

மதுசூதனையன்றிமற்றிலேனென்றெத்தாலுங்கருமமின்றித்
துதிசூழ்ந்தபாடல்கள்பாடியாடநின்றூழியூழிதொறு
மெதிர்சூழல்புக்கெனைத்தோர்பிறப்புமெனக்கேயருள்கள்செய்ய
விதிசூழ்ந்ததாலெனக்கேலம்மான்திரிவிக்கிரமனையே.

ஆறாயிரப்படி.

(மதுசூதனை) அநாதிகாலந்தொடங்கி யின்றளவும்வர நான்பிறந்த பிறவிகள்தோறும் என்னைவசீகரிக்கைக்கீடான வடிவுகளைக்கொண்டுக்

து பிறந்தருளி யென்னை வசீகரித்து, மதுசூதனல்ல தெனக்குமற்றொருப் ராப்யமில்லை யென்றத்யவஸித்து தத்வ்யதிரிக்தங்களை யெல்லாம்விட்டு ஸர்வகாலமும்நின்று துதிசூழ்ந்தபாடல்கள் பாடியாடுகையாகிற விஸ்ஸம்ருத்தியை யெனக்கேதந்தருளுகைக்காக, திரிவிக்கிரமனை யெனக்காகவே க்ருபையாகிறவிதி சூழ்ந்ததென்கிறார்.............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், கீழ்ச்சொன்ன வுபகாரத்துக்கும் தத்க்ருதௌஜ்ஜ்வல்யத்துக்கும் ஹேதுவான க்ருபாபாரவஶ்யத்தை யருளிச்செய்கிறார்.

மதுசூதனையன்றி - என்விரோதியைப்போக்கின மதுசூதனையன்றி. மற்று- மற்றுப்ராப்யம். இலேன் - உடையேனல்லேன். என்று - என்று. எத்தாலும் - ஏதேனுமொருபதார்த்தத்தாலும். கருமம் - ஒருகார்யம். இன்றி - அற்று. துதி - ஸ்தோத்ரரூபத்தாலே. சூழ்ந்த - அவன்குணகணங்களைச்சூழ்ந்த. பாடல்கள் - பாடல்களை. நின்று - ப்ரயோஜநார்த்தமன்றியே ஸ்வயம்ப்ரயோஜநமாகநின்று. பாடி- பாடி. ஆட - ஆடும்படி. ஊழியூழிதொறும் - கல்பந்தோறும்கல்பந்தோறும். எனைத்து - அநேகங்களாய். ஓர் - அத்விதீயங்களான. பிறப்பும் - பிறப்புக்கடோறும் - எதிர் - எனக்கபிமுகனுகைக்கீடான. சூழல்புக்கு-சூழ்ச்சியோடேயவதரித்து. எனக்கே - எனக்கேயஸாதாரணமாக. அருள்கள் - ப்ரதமகடாக்ஷந்தொடங்கிபரபக்தி பர்யந்தமானவுபகாரங்களை. செய்ய - பண்ணுகைக்கு. எனக்கு - எனக்குறுப்பான. ஏல் - ஏன்றுகோளையுடையவனாய். அம்மான் - ஸ்வாமியான. திரிவிக்கிரமனை - த்ரிவிக்ரமனை. விதி - தப்பவொண்ணுதவிதியென்னலாம்படியான க்ருபையானது. சூழ்ந்தது - சூழ்ந்துகொண்டது.

ஏலுதல் - கொள்ளுகையாதல் ; தகுதியாகவுமாம்.........................*

ஈடு - ஆரும்பாட்டு.

தன்பக்கல் நான்ப்ரவணனுகைக் கெம்பெருமான் வருந்திற்றெல்லாம் தன்க்ருபையாலே யென்கிறார்.

(மதுசூதனையன்றிமற்றிலேனென்று) விரோதிநிரஸந ஸ்வபாவனானவனை யொழியவேறுசிலரைத்தஞ்சமாக வுடையேனல்லேனென்றுயிற்று இவரிருப்பது. ஸத்த்வந்தலை யெடுத்தபோதொருகா லிவ்வார்த்தை சொல்லுவதுநமக்கு முள்ளதொன்றிறே, இவர்க்குவாசியென்னென்னில் (எத்தாலும்கருமமின்றி) அந்தவுக்திக்குச்சேர்ந்த அநுஷ்டாநமுண்டாயிருக்கும். ப்ராப்யாபாஸங்களிலும் ப்ராபகாபாஸங்களிலும் நெகிழ்ந்து, அவனையொழிந்த எல்லாவற்றாலு மொருப்ரயோஜநமின்றிக்கேயிருப்பர். (துதியித்யாதி) ஸ்தோத்ராத்மகமான பாட்டென்னுதல், ஸ்துத்யகுணங்களை விளாக்கொலை கொள்ளும்படியான பாட்டென்னுதல். கல்பந்தோறும் கல்பந்தோறும் துதிசூழ்ந்தபாட்டல்களைக்கொண்டு பாடுவதாடுவதாம்படி பண்ணினான். (நின்று) "ஷிஉஹ்ஷ" (தேஹமே) என்று ப்ரயோ

ஜநங்களைப்பற்றி யகலுகையன்றிக்கேயிருக்கை. இப்படியவன்பண்ணுகைக்கு ஹேதுவென்னென்ன, சொல்லுகிறார் (விதிசூழ்ந்ததால்) (எதிர்சூழல்புக்கு) ஒருவனைப்பிடிக்க நினைத்தவன் அவன்போம்வரம்புக் கெதிர்வரம்பே வருமாபோலே, இவர்பிறந்த ஜந்மங்கள்தோறும் தானுமெதிரேபிறந்து வந்தானாயிற்று. இவர்கர்மமடியாகப்பிறக்க, அவனநுக்ரஹத்தாலே பிறந்துவந்தவித்தனை. சூழலென்று அவதாரத்தைச் சொல்லக்கடவதிறே ; எனைத்தோர்பிறப்பு மெதிர்சூழலபுக்கு - எனக்கேயருள்கள் செய்யவிதிசூழ்ந்ததா லென்கிறார். விதியென்கிறது-பகவத்க்ருபையை. பகவத்க்ருபையை விதியென்பானென்னென்னில்; அவனுக்குத் தப்பவொண்ணாததாகையாலே. நாம்நினைத்தவைதலைகட்டவொட்டாத கர்மம்போலே, ஈஶ்வரன் நினைத்தகார்யங்களும் க்ருபாபரதந்த்ரனாய்த் தலைக்கட்டமாட்டான் ; [வயாஹ ஶேஷிகாக-ஸ்தஃக்ருவயாவா?வாஷுயக ” (வதார்ஹமபிகாகுத்ஸ்தஃக்ருபயாபர்யபாலயத்) காகுத்ஸ்தஃ-ஸ்தங்களிலும் க்ருபையேவிஞ்சி ரக்ஷித்துக்கொண்டு போரும்குடியிலே பிறந்தவர். வதார்ஹமானகாகத்துக்குவிட்ட அம்புக்குட்படக் கண்ணழிவுபண்ணுமவரிறே. (எனக்கேயித்யாதி) ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து, ஸ்ரீவாமநனாய்வந் தவதரித்து மூன்றடியாலே த்ரைலோக்யத்தையும் திருவடிகளின்கீழே இட்டுக்கொண்டு எல்லாரோடும்பொருந்தின ஸௌலப்யந்தான் பரத்வமென்னும்படி, என்னைவிஷயீகரிக்கைக்கு ஒருவிதிசூழ்ந்தது. அம்மான் திரிவிக்கிரமனையெனக்கே யருள்கள்செய்ய - எனக்கென்னவே ஒருவிதிசூழ்ந்தது..*

ஜீயர் அரும்பதம்.

ஆறும்பாட்டு. (மதுஸூதனையித்யாதி) “ எனைத்தோர்பிறப்பும் - எதிர்சூழல்புக்கு - எனக்கேயருள்கள் செய்யவிதிசூழ்ந்ததால் ” என்றத்தைக்கடாக்ஷித் தவதாரிகை (தன்பக்கலித்யாதி) வருந்திறதெல்லாம் - ப்ரயாஸப்பட்டதெல்லாம்.

தஞ்சமாக - ப்ராப்யப்ராபகமாக. மேலுக்கவதாரிகை (ஸத்வமித்யாதி) தாத்பர்யம் (அந்தவுக்திக்கித்யாதி) சப்தார்த்தம் (ப்ராப்யாபாஸங்களிலுமித்யாதி) ப்ராப்யாபாஸங்கள் - ப்ரயோஜநாந்தரங்கள். ப்ராபகாபாஸங்கள் - உபாயாந்தரங்கள். கருமம் - கார்யம். ப்ரயோஜநமென்றபடி.

. துதிசூழ்ந்தபாடல்கள் - ஸ்துதியாகச்சூழ்ந்திருக்கிற பாடல்களென்று மூந்தினவர்த்தம். சூழுகை - கார்த்ஸ்ந்யேநஸம்பந்தம். ஆகையாலே ஸ்புடதையைச் சொல்லுகிறது. த்விதீயார்த்தத்திலே, ஸ்தூயதஇதி ஸ்துதிஃஎன்று - ஸ்துத்யகுணங்களைச் சொல்லுகிறதென்றபடி. விளாக்கொலை கொள்ளுகை - கபளீகரிக்கை. [illegible] ழியூழிதொறும் - துதிசூழ்ந்தபாடல்கள் - நின்று - பாடியாட என்றந்வயித்தர்த்தம் (கல்பந்தோறுமித்யர்தி) “ நின்று ” என்றதுக்குபாவம் (தேஹிமேஇத்யாதி)

எதிர்சூழல்புக்கு - சேதநனுக்கெதிரே பிறந்துவந்து. சேதநன் கர்மமடியாகப் பிறக்கிறான், அவன்பிறக்கைக் கடியேதென்ன (இவர்கர்மமித்யாதி) ஸ்னேக்

தார்த்தஸ்ய மூலம்தர்மயதி (எனைத்தோர்பிறப்புமித்யாதி) "அநுக்ரஹத்தாலே" என்னுமதுக்கு சப்தங்காணுமேயென்ன (விதியென்கிறதித்யாதி) த்ருஷ்டாந்த கதமுகேந விவரணம் (நாம்நினைத்தவித்யாதி) க்ருபாபரதந்த்ரனாய் நினைத்தகார்யம் தலைக்கட்டமாட்டா னென்னுமதுக்கு ப்ரமாணம் (வதார்ஹமித்யாதி) தங்களிலும் க்ருபையேவிஞ்சியென்றது - தங்களுக்கு ஹாநிவந்தாலும் க்ருபையேவிஞ்சியென்றபடி. ஆனால், காகத்துக்குக் கண்ணழிவுசெய்கின்ற தென்னென்ன (வதார்ஹமானவித்யாதி) இது - ரஸோக்தி. கண்ணழிவு-விளம்பமும், கண்ணையழிக்கையும். அதுவும் க்ருபாகார்யமென்றபடி.

"அம்மான் திரிவிக்கிரமனை எனக்கென்ன - விதிசூழ்ந்தது" என்றந்வயித்தருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனையித்யாதி) "எனக்கு" என்றிரண்டிடத்திலே யிருக்கையாலே, புநருக்திவாராமைக் கந்வயங்காட்டுகிறார் (அம்மானித்யாதி) ஸ்வாமியான திரிவிக்கிரமனை எனக்கே யஸாதாரணமாக ப்ரதமகடாக்ஷந்தொடங்கி பரபக்தி பர்யந்தமான வுபகாரங்களைப்பண்ணுகைக் கஸாதாரணமாகவொரு க்ருபைசூழ்ந்துகொண்டது என்றுசப்தார்த்தம். ✻ விதிசப்தம் - க்ருபாவாசியாகையாலே, "அருள்கள்" என்கிறவிது - க்ருபாகார்யபரம். "ஏல்" என்றது - அவதாரணபரமென்றுகருதி (எனக்கென்னவேயென்கிறார்) "ஏல்" என்றது - ஸந்தோஷாதிசய ஸூசகமவ்யயமாதல்.

மதுசூதனையென்று தொடங்கி, ஊழியூழிதொறும் - நின்று-சூழ்ந்தபாடல்கள் பாடியாட - எனைத்தோர்பிறப்பும் - எதிர்சூழல்புக்கு - எனக்கேயருள்கள் செய்ய - அம்மான்திரிவிக்கிரமனை - எனக்கேல் - விதிசூழ்ந்த தித்யந்வய:. எனைத்து - அநேகங்களாய். ஓர் - அத்விதீயமான. பிறப்பும் - பிறப்புக்கள்தோறு மிதிசப்தார்த்த:. ஏலுதல் - தகுதியாகவுமாம்......................................✻

ஏழாம்பாட்டு.

திரிவிக்கிரமன்செந்தாமரைக்கணெம்மானென்செங்கனிவா
யுருவிற்பொலிந்தவெள்ளைப்பளிங்குநிறத்தனென்றென்றுள்ளிப்
பரவிப்பணிந்துபல்லூழியூழிநின்பாதபங்கயமே
மருவித்தொழுமனமேதந்தாய்வல்லைகாணென்வாமனனே.

ஆறாயிரப்படி.

(திரிவிக்கிரமன்) ஆஶ்சர்ய திவ்யசேஷ்டிதன், ப்ரபுத்தமுக்தாம்புஜசாருலோசநன், அழகியதிருப்பவளத்தையுடையவன், ஸுஸ்மிதன், இவற்றாலேயென்னை யடிமையாக்கினவனென்றென்றுள்ளிப் பரவிப்பணிந்து இப்படியே ஸர்வகாலமுமுன்னுடைய பாதபங்கயமே மருவித்தொழும் மனமேதந்தாய்; வல்லைகாணெம்பிரானே. வல்லைகாண், ஒருவர்க்குஞ்செய்ய முடியாதனவெல்லாஞ்செய்ய வல்லானொருவனல்லையோவென்கிறார்..✻

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸ்வாநுபவத்துக்குறுப்பாக ஸத்வோத்தரமான மநஸ்ஸைத் தந்தானென்கிறார்.

திரிவிக்கிரமன்-த்ரைவிக்ரமாபதாநத்தாலே லோகத்தை யநந்யார்ஹமாக்கினவனாய். அதுபோலே, செம்-சிவந்த. தாமரை - தாமரைபோன்ற. கண் - கண்ணாலே. எம்மான் - “ஜிதழ” (ஜிதம்) என்னும்படி யென்னையடிமைகொண்டஸ்வாமியானவன். செம் - சிவந்த. கனி-கனிபோலேயிருக்கிற. வாய் - திருப்பவளத்தின்; உருவில்-வடிவிலே. பொலிந்த-பரம்பிவளர்ந்துவருகிற. வெள்ளை-வெளுத்த. பளிங்கு-பளிங்குபோலேயிருக்கிற. நிறத்தன்-திருமுத்தின் நிறத்தை. என்-எனக்கநுபவிப்பித்தவன். என்றென்று-என்றென்றுதனித்தனியே. உள்ளி-சேஷ்டிதத்தையுங்கண்ணழகையும் முறுவலழகையும் நெஞ்சாலேயநுபவித்து. பரவி - அதுள்ளடங்காமையாலேயக்ரமமாகப்பரவி. பணிந்து - அந்தப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டு திருவடிகளிலேவிழுந்து. பல் - பலவகைப்பட்ட. ஊழியூழி - கல்பவிபாகத்தையுடைத்தான காலதத்வமுள்ளதனையும். நின் - ப்ராப்தனானவுன்னுடைய. பாதபங்கயமே - போக்யமானதிருவடிகளிலே. மருவி - அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு பொருந்தி. தொழும்- அடிமைசெய்யும். மனமே - மநஸ்ஸையே. தந்தாய் - தந்தாய். என்வாமனனே - என்வாமனனே. வல்லைகாண் - வல்லைகாண்.

மஹாபலியினுடைய நெஞ்சைவஞ்சித் தநுகூலமாக்கினநீ, என்னெஞ்சையுமநுகூலிப்பிக்க சக்தனென்றுகருத்து.....................................*

ஈ௫ - ஏழாம்பாட்டு.

உன்னுடையகுணாநு ஸந்தாநபூர்வகமாக ஸ்துதிப்ரணாமங்களைப் பண்ணிக்கொண்டுன்னை யநுபவிக்குமிதுவே ப்ரயோஜநமாயிருக்கும் மநஸ்ஸையெனக்குத் தந்தாயென்கிறார்.

(திரிவிக்கிரமன்) மூன்றடியாலே ஸகலலோகங்களையும் தன்காற்கீழே யிட்டுக்கொண்டவன். (செந்தாமரைக்கணெம்மான்.) நோக்காலேயென்னைத் தன்காற்கீழே யிட்டுக்கொண்டவன், (என்செங்கனிவாயித்யாதி) இவர் “ஜிதழ” (ஜிதம்) என்றபின்பு, அவன்ஸ்மிதம்பண்ணினபடி. என்னையநந்யார்ஹனாக்குகையாலே சிவந்துகனிந்த திருவதரத்தினுருவிலே - அழகிலே, நிறத்திலே, பொலிந்த - பரபாகத்தாலே ஸம்ருத்தமாய், பரிசுத்தமான ஸ்படிகம்போலேயிருக்கிற திருமுத்துநிரையினுடைய நிறத்தையுடையவன். (என்றென்றுள்ளி) இதரவிஷயங்களினுடைய ஸ்மிதத்திலுண்டானஸ்ம்ருதி, அகவாய்கண்டவாறே விட்டல்லது நிற்கவொண்ணாதா யிருக்குமிறே; இதுமாறாதே யநுஸந்திக்கலாமிறே. (பரவிப்பணிந்து) அக்ரமமாகக்கூப்பிட்டு, நிர்மமனாய்த் திருவடிகளிலே விழுந்து. இப்பேறுதானொருநாளுண்டாய் மற்றைநாள் மறுக்கையன்றிக்கே (பல்லூழியூழி) கல்பந்தோறும் கல்பந்தோறும், பரமபோக்யமான உன்திருவடிகளையே யநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு தொழும்மநஸ்ஸைத்

தந்தாய். விஷயாந்தரங்கள் அஸ்திரமாகையாலும் அபோக்யமாகையாலும் ஒன்றையேபற்றிநிற்க விஷயமில்லையாகையாலே, மநஸ்ஸு— “ சஞ்சலம்ஹி மந: ” (சஞ்சலம்ஹி மந:) என்று சஞ்சலமாயிறே யிருப்பது ; அப்படியன்றியே, நித்யமுமாய் நிரதிசயபோக்யமுமா யிருக்கையாலே மருவித்தொழும் மநஸ்ஸைத்தந்தாயென்றுமாம். பழையநெஞ்சைத் திருத்தினவளவன்றிக்கே. கருவூலத்திலே யொருநெஞ்சைத் தந்தாய். * திவ்யம்ததாமிபோலே. “ பழையநெஞ்சிது ” என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணவொண்ணுதபடி யிராநின்றது.

(என்வாமனனேவல்லைகாண்] கொள்கைக்கும் கொடுக்கைக்கு மூனக்கொன்றேயோபரிகரம். வாமநவேஷத்தைக்காட்டி யென்னெஞ்சைத்திருத்தித்தந்தாய் ; அவ்வடிவழகாலே, மஹாபலி, “ என்னது ” என்றிருந்த பூமியையபஹரித்தாய் ; வல்லைகாணென்று - உகக்கிறார்.......*

ஜீயர் அரும்பதம்·

ஏழாம்பாட்டு. (திரிவிக்கிரமனித்யாதி) “ மருவித்தொழும் மனமேதந்தாய் ” என்றத்தைப்பற்ற (உன்னையநுபவிக்குமிதுவே ப்ரயோஜநமாயிருக்கும் மநஸ்ஸையென்றது)

பாவம் (மூன்றடியாலே யித்யாதி) “ செந்தாமரைக்கண்ணெம்மான் ” என்றபதங்களுக்குபாவம் (நோக்காலேயித்யாதி) “ எம்மான் ” என்றத்தைப்பற்ற (ஜிதமென்றபின்பென்றது) “ ஜிதந்தே புண்டரீகாக்ஷ ” (ஜிதந்தேபுண்டரீகாக்ஷ) என்றது விவக்ஷிதம். “ எம்மான் ” என்றுதொடங்கி சப்தார்த்தம் (என்னையித்யாதி) (அழகிலேநிறத்திலேயிதி) “ உரு ” என்று - அழகாய், அத்தாலே நிறத்தைச் சொல்லுகிறதென்றுகருத்து. திருவதரத்துக்கழகாவது - சிவந்தநிறத்தை யுடைத்தாகையிறே. உருவாலே - அழகாலேபொலிந்த வண்மையையுடைய விதிசப்தார்த்த:. பளிங்கு - ஸ்ப்படிகம். திருமுத்தை “ பளிங்கு ” என்றது - முற்றுவமையாலே.

ஒருவிஷயத்தினுடைய ஸ்மிதமப்படி யநவரதாநுஸந்தாநவிஷயமா யிருக்குமோவென்ன (இதரவிஷயேத்யாதி) அகவாய் - துர்க்கந்தமாம்ஸாதி மயாந்த: ப்ரதேஸம். மாறுதேயென்றது - வீப்ஸையைப்பற்ற.

மறுக்கை - இல்லாதேபோகை. யாவத்காலம் மருவித்தொழுகைக் கிரண்டு ஹேது - அநந்ய ப்ரயோஜநத்வமும். பகவந்நிரதிசயபோக்யத்வமும். ஏதநுபயவித ஹேதுவைப்பற்ற நிர்வாஹத்வயமாஹ (பரமபோக்யமான இத்யாதியாலும், விஷயாந்தரங்களித்யாதியாலும்) “ மருவித்தொழும் மனமேதந்தாய் ” என்றதுக்கர்த்தத்வயம் - விஷயாந்தர ப்ரவணமான மநஸ்ஸைத்திருத்தியுன்னை மருவித்தொழும் மனமேதந்தாய் என்னுதல், கருவூலத்திலேயொரு நெஞ்சைத்தந்தாயென்னுதலென்று. முந்தினவர்த்தத்தை (விஷயாந்தரங்களித்யாதிவாக்யத்தாலே) அருளிச்செய்து, த்விதியார்த்தத்தையருளிச்செய்கிறார் (பழையநெஞ்சையித்யாதி) மருவுகை-அநந்ய ப்ரயோஜநத்வமாதல், அநந்யபரதையாதல். கருவூலம்-திருவாப

ரணுதிகளிட்டுவைக்குமறை. ஸ்ரீபண்டாரமென்றபடி. அதிலுள்ள நெஞ்சுகளிலே யொருநெஞ்சையென்றபடி. புதியதாகவொன்றைக்கொடுத்தவிடமுண்டோவென்ன (திவ்யம்ததாமிபோலேயென்று) கீதாஸ்ஷஷ்டே, "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்" (சஞ்சலம்ஹிமந:க்ருஷ்ணப்ரமாதிபலவத்த்ருடம்) இத்யாதி. ஏகாதஸே, "ந து மாம் ஶக்யஸே த்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா । திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகமைஶ்வரம்" (நதுமாம்ஶக்யஸேத்ரஷ்டுமநேநைவஸ்வசக்ஷுஷா। திவ்யம்ததாமிதேசக்ஷு:பஶ்யமேயோகமைஶ்வரம்.) கருவூலத்திலேயொரு நெஞ்சைத்தருகையாவ தென்னென்ன (பழையநெஞ்சித்யாதி)

விவரணம் (வாமநவேஷத்தையித்யாதி)

திரிவிக்கிரம னித்யாரப்ய, சிறத்தனென்றென்று - பல்லூழியூழி - உள்ளிப்பரவிப்பணிந்து - நின்பாதபங்கயமே மருவித்தொழும் மனமேதந்தாய்; என் வாமனனே - வல்லைகாண் இத்யந்வய:. வல்லைகாண் - நீசக்தனன்றோ வென்றபடி. வல்லை - சக்தனேயென்று ஸம்போதநம்..*

எட்டாம்பாட்டு.

வாமனனென்மரதகவண்ணன்றாமரைக்கண்ணினன்
காமனைப்பயந்தாயென்றென்றுன்கழல்பாடியேபணிந்து
தூமனத்தனனாயப்பிறவித்துழதிநீங்கவென்னைத்
தீமனங்கெடுத்தாயுனக்கென்செய்கேனென்சிரீதரனே.

ஆறாயிரப்படி.

(வாமனன்) நிரதிசய ஸௌந்தர்யஜந்மபூமியாயிருந்த வுன்னுடைய வடிவையுமழகையு மநந்யப்ரயோஜநனாய்க் கொண்டுபாடி, உன்றிருவடிகளைப் பணிந்துகொண்டு ப்ரதிபந்தகங்களைப் போக்கும்படி யென்னுடையமநஸ்ஸை யுன்றிருவடிகளலலது மற்றொன்றறியாதபடி பண்ணினாய்; ஸ்ரீமானே, உனக்கு நானென்னகைம்மாறு செய்வதென்கிறார். ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அநுபவத்துக் குறுப்பல்லாத பொல்லாத நெஞ்சைப்போக்கின வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமுண்டோ வென்கிறார்.

வாமனன் - ஸர்வஸுலபனான வாமநனே. என் - எனக்கநுபாவ்யமான. மரதகவண்ணன் - மரதகம்போன்ற வடிவழகையுடையவனே. போக்தாக்களைக்கண்டுகந்து பூர்ணமாகநோக்கும், தாமரை - தாமரைபோலும். கண்ணினன் - கண்ணையுடையவனே. காமனை - எல்லாருமாசைப்படுமழகை யுடையகாமனுக்கும். பயந்தாய் - உத்பாதகனானவனே. என்றென்று - என்றென்றுசொல்லி. உன்கழல் - உன்றிருவடிகளை. பாடியே - பாடியே. பணிந்து - பணிந்து. தூமனத்தனனாய் - ப்ரயோஜநாந்தரங்களிற்போகாத சுத்தமநஸ்ஸையுடையேனாய். பிறவி - ஜந்மப்ரயுக்

தமான. அழதி - அலமாப்பு. நீங்க - தீரும்படியாக. என்னை - என்னை. தீமனங் கெடுத்தாய். விஷயாந்தரங்களிலே யங்யபரமான தீயமனங்கெட்டுப்போம்படி பண்ணினாய். என் - இப்படியெனக்குபகாரகனான. சிரீதரனே - ஸ்ரீமானே. உனக்கு - பரிபூர்ணனானவுனக்கு. என் - எத்தை. செய்கேன் - செய்கேன்.

ஸ்ரீயஃபதியாகையாலே பூர்ணனானவுனக்குச் செய்யலாவதொரு ப்ரத்யுபகாரமில்லையென்று கருத்து...*

௮ - எட்டாம்பாட்டு.

எம்பெருமான் தந்திறத்திற்பண்ணின வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங்காணாமற்றடு மாறுகிறார்.

(வாமனன்) வடிவழகைச்சொல்லுகிற தென்னுதல், நன்மைகளைத் தருமவனென்னுதல். (என்மரதகவண்ணன்) ஶ்ரமஹரமான வடிவழகை யென்னையநுபவிப்பித்தவன். (தாமரைக்கண்ணினன்) வடிவழகேயன்றிக்கே, அகவாயிற்றண்ணளிக்கு ப்ரகாசகமான திருக்கண்களையுடையவன். (காமனைப்பயந்தாய்) வடிவழகாலே நாட்டைவெருட்டித்திரிகிற காமனுக்குத் பாதகனானவனே. அநுஸந்தாநத்திலே ஒருவைஶத்யம் பிறந்தவாறே முன்னிலைபோலேதோற்றும், அப்படியுஞ்சொல்லிக் கூப்பிடுவர்; அதுக்குமேலே சிலபரிமாற்றங்களை யாசைப்பட்டு அதுகிடையாமையாலே படர்க்கையாகவுஞ் சொல்லிக்கூப்பிடுவர்; இவையிரண்டுக்கு மடிஅபிநிவேசம். (என்றென்றித்யாதி) இத்திருநாமங்களை யிப்படி வாயாலேமாறாதே சொல்லாநிற்கத் திருவடிகளிலேவிழுந்து. (தூமனத்தனனாய்) பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவானநெஞ்சின்றிக்கே, மோக்ஷத்துக்கே ஏகாந்தமான நெஞ்சையுடையனாய். பரிசுத்தாந்தஃகரணனாய். அதின்பலமாய் வருமதிறே ஜந்மம்போமது; பிறவித்துழதியுண்டு - தூர்த்துஃக்கம், அதுநீங்கும்படியாக (என்னைத்தீமனங்கெடுத்தாய்) அம்ருதத்தையும் விஷத்தையு மொக்கவிரும்புவாரைப்போலே, உன்னையுமுகந்து க்ஷுத்ரவிஷயங்களையுமுகக்கும்பொல்லாத நெஞ்சைத்தவிர்த்தாய். நல்லநெஞ்சைத்தந்த வளவன்றிக்கே, பொல்லாத நெஞ்சைக்கெடுப்பதுஞ்செய்தாய்.

ஸ்ரிஷ்ட்யமுபபாதயதி. "வீடு" என்று-விடுகையைச்சொல்லுமொழிய, பகவதநுபவத்தைச்சொல்லுமோவென்ன (முக்திர்மோக்ஷ இத்யாதி) "முக்திர்மோக்ஷோ மஹாநந்த:" (முக்திர்மோக்ஷோமஹாநந்த:) இதிநைகண்டுகா:.

பரப்புமாற-விஸ்தாரமெல்லாம். புனல்-ஜலம். "இடர்" என்றதுக்குமுன்றார்த்தம் - முதலையால்வந்தக்லேஶமாதல், "நாஹம் களேபரஸ்யாஸ்ய பரிஜீர்ணஸ்ய காமயே । கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் ஹரே:" (நாஹம்களேபரஸ்யாஸ்யபரிஜீர்ணஸ்யகாமயே । கரஸ்த்தகமலாந்யேவபாதயோரர்ப்பிதும்ஹரே:) என்று-பூவிற்செவ்வியழியாமே திருவடிகளிலேயிடப்பெறுமையால்வந்த மந:க்லேஶமாதல், "ஆபத்ஸகனுணஸர்வேஶ்வரனை, இன்றுதவாதொழிந்தால், 'நிர்க்ருணன்' என்றுலோகத்தார்சொல்லப்போகிறார்கள்" என்கிறக்லேஶமாதல். முதலர்த்தம் (பரப்புமாறவித்யாதி) த்விதீயார்த்தம் (பூவிலித்யாதி) "பூம்தண்டுழாயென்தனிநாயகன் - பொய்கையானையிடர்கடிந்த" என்றுகூட்டியர்த்தம் (வைத்தவித்யாதி) "ஆனையிடர்கடிந்த, பூம்தண்டுழாய்" என்றுகூட்டிதாத்பர்யம் (திருத்துழாயிலித்யாதி) நநுஸர்வேஶ்வர இத்யர்த்த:. பரிமளம் முன்னேவந்திடரைப்போக்கிற்றென்றபடி. த்ருதீயார்த்தம் (ஆனையிடராவதித்யாதி) "என்" என்றதுக்குபாவம் (ஆனையிடரித்யாதி)

அந்வயமுகேந ப்ரதமயோஜநாமாஹ (அவன்றிருவடிகளித்யாதி) ஸம்பந்தம்-ஸம்பந்தஜ்ஞாநம். "தமேவம் வித்வாந்" (தமேவம்வித்வாந்) "ஸந்தமேநம்" (ஸந்தமேநம்) என்னக்கடவதிறே. த்விதீயயோஜநையைப்பற்ற (தனிநாயகனித்யாதி) உபயவிதநிர்வாஹேபி - உத்தரார்த்தபூர்வகமந்வய:. பூந்தண்ணித்யாரப்ய, நாயகன் புணர்ப்பு-நீந்தும்துயர்தொடங்கி, எவ்வெவையும்நீந்தும்; துயரில்லாவீடுமுதலாமித்யந்வய:. யத்வா, நீந்தும்துயர்ப்பிறவியுட்பட-நீந்தும்துயரான மற்றெவ்வெவையும் இல்லாவீடுமுதலாமித்யந்வய:.... ... ... *

மூன்றாம்பாட்டு.

புணர்க்குமயனுமழிக்குமரனும்
புணர்த்ததன்னுந்தியோடாகத்துமன்னிப்
புணர்த்ததிருவாகித்தன்மார்விற்றன்சேர்
புணர்ப்பன்பெரும்புணர்ப்பெங்கும்புலனே.

ஆறாயிரப்படி.

(புணர்க்கும்) ஜகத்ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கும் தன்னுந்தியையாஶ்ரயமாகக் கொடுத்துவைக்கும்; ஜகத்ஸம்ஹர்த்தாவான ருத்ரனுக்கும் தன்றிருவுடம்பை யாஶ்ரயமாகக்கொடுத்துவைக்கும்; ஸர்வலோகேஶ்வரியான பிராட்டிக்கும் தன்றிருமார்வைக் கொடுத்துவைக்கும்; திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளும்; இப்படியெம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வ சிஹ்நபூதமான திவ்யசேஷ்டிதங்களெங்கும் ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவனுடைய திவ்யமான சேஷ்டிதங்கள் ஸர்வத்ர ப்ரஸித்தமென்கிறார்.

தன் - தன்னை. புணர்த்த - உத்பாதித்த. உந்தியோடு - திருநாபியோடேகூட. ஆகத்து-திருமேனியிலொருபார்ஶ்வத்திலும். மன்னி - நித்யவாஸம்பண்ணி. புணர்க்கும் - லோகஸ்ருஷ்டிபண்ணுகிற. அயனும் - அஜனுமாய். அழிக்கும் - ஸம்ஹரிக்கிற. அரனும் - ஹரனுமாய். இப்படித்தத்தந்தராத்மதையாலேததாத்மகனாய், தன்மார்வில் - தன்மார்விலே. புணர்த்த - நிரூபகமாம்படி சேர்த்துக்கொள்ளப்பட்ட. திருவாகி - திருவுடையனாய். தான் - தானே. சேர் - தனக்குத்தகுதியான. புணர்ப்பன் - ஸ்வாதீநசேஷ்டிதனானவனுடைய. பெரு - அபரிச்சிந்நமான. புணர்ப்பு - திவ்யவ்யாபாரங்களானவை. எங்கும் - எங்கும். புலன் - கண்டநுபவிக்கலாம்படிப்ரஸித்தம்.

"இருவரவர்முதலுந்தானே" என்றத்தைவிவரித்தது......................*

ஈடு - மூன்றாம்பாட்டு.

"இருவரவர்முதலுந்தானே" என்கிறபதத்தை விவரியாநின்றுகொண்டு, ஶ்ரிய꞉பதியானவனுடைய அதிமாநுஷசேஷ்டிதங்களை ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்.

(புணர்க்குமயனும்) இவற்றை ஸ்ருஷ்டிக்கையே தொழிலாயிருக்கிற ப்ரஹ்மாவுமாம். (அழிக்குமரனும்) சுடுதடிபோலே இவற்றையடைய அழித்துக்கொண்டு நிற்கிறருத்ரனும். "𑌤𑌥𑌾𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌪𑌨𑍍𑌥𑌾𑌨𑍌 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾𑌰𑌕𑍌" (ததாதர்ஶிதபந்தாநௌஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ) "𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌤𑌤𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍇" (ஸ்ருஷ்டிம்தத꞉கரிஷ்யாமித்வாமாவிஶ்யப்ரஜாபதே) என்கிறபடியே - அவனந்தராத்மாவாய்நின்று ப்ரவர்த்திப்பிக்க, இவற்றைச்செய்கிறார்கள். (புணர்த்ததன்னுந்தியோடாகத்துமன்னி) புணர்க்குமயனு மழிக்குமரனும். இவைதானிவர்கள் செய்யவல்லராவது அவன்றிருமேனியைப் பற்றியிருந்தபோதாயிற்று, ஸ்தநந்தயப்ரஜை, வாயில்முலைவாங்கினால் தரியாதாப்போலே. இத்தால், ஸாமாநாதிகரண்யத்தாலே - அந்தர்யாமித்வஞ்சொல்லிற்று. புணர்த்ததன்னுந்தியென்கையாலே - காரணத்வஞ்சொல்லிற்று, ஆகத்து மன்னியென்கையாலே - திருமேனியைப்பற்றி லப்தஸ்வரூபரென்னுமிடஞ்சொல்லிற்று.

(புணர்த்ததிருவாகித்தன்மார்வில்) தன்றிருமார்வில் நித்யஸம்ஶ்லிஷ்டையாயிருக்கிற பெரியபிராட்டியாரையுடையனாய். இதுஇப்போதுசொல்லுகிறதென்னென்னில்; ப்ரஹ்மாதிகளுக்கு நிர்வாஹகன் என்றவோபாதி, லக்ஷ்மீஸம்பந்தமும் ஐஶ்வர்யத்துக் குடலாகையாலே. பெரியபிராட்டியாரோட்டைச்சேர்த்தி, நீர்மைக்கும் மேன்மைக்கு முடலா

யிருக்குமிறே. (தான்சேர்புணர்ப்பன்) ஸ்ருஷ்ட்யர்த்தமாக ஏகார்ணவத்திலே சாய்ந்தருளினவ னென்னுதல், தனக்குத்தகுதியான சேஷ்டிதங்களையுடையவ னென்னுதல். (பெரும்புணர்ப்பெங்கும்புலனே) ப்ரஹ்மாதிக ளதிகரித்தகார்யங்களை அவர்கள் வழியாலேநடத்தியும், தானதிகரித்த கார்யங்களைத்தானே நடத்தியும்போருகையாலே, தன்னுடையபெரும்புணர்ப்பு - ஆனைத்தொழில்களெங்கும் காணலாயிருக்கும். ....*

ஜீயர் அரும்பதம்.

மூன்றும்பாட்டு. (புணர்க்குமித்யாதி) “ ஆகத்துமன்னி ” என்கிறபதங்களையும், “ புணர்த்ததிருவாகி ” என்றுதொடங்கி “எங்கும்புலனே” என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (இருவரவரித்யாதி) “ பெரும்புணர்ப்பு ” என்கையாலே (அதிமாநுஷசேஷ்டிதங்களையென்றது)

“ புணர்க்கும் ” என்கிறவர்த்தமாநார்த்தம் (ஸ்ருஷ்டிக்கையே தொழிலாயிருக்கிறவென்றது) “ அயனும் ” என்கிறஸாமாநாதி கரண்யநிபந்தநம் - சரீராத்மபாவமென்றுவிவக்ஷித்து, ப்ரமாணம் (ததாதர்ஶிதேத்யாதி) நாராயணீயேநாம நிர்வசநாத்யாயே, “ [illegible] ” (ஏதௌத்வௌவிபுதஶ்ரேஷ்டௌப்ரஸாதக்ரோதஜௌஸ்ம்ருதௌ) இதிபூர்வார்த்தம். (ஸ்ருஷ்டிம்ததஃகரிஷ்யாமீதி) ஶ்ரீவிஷ்ணுதர்மே, “ [illegible] ” (உத்பாத்யப்ருதிவீம்ஸம்யக்த்ஸாபயித்வாயதாபுரம்) இதிபூர்வார்த்தம்.

(புணர்த்ததன்னுந்தியோடிதி) தன்னையுண்டாக்கின வுந்தியோடேகூடத்திருமேனியி லொருபார்ஶ்வத்தில் நித்யவாஸம்பண்ணி ஸ்ருஷ்டிக்கிற அஜனுமாம், ஸம்ஹரிக்கிற ருத்ரனுமாமென்று சப்தார்த்தம். ஸமபிவ்யாஹாரதாத்பர்யம் (இவைதானித்யாதி) ஸ்தநந்தயேத்யாதிக்குமுன்னே-அல்லாதபோதென்றுகூட்டுவது. இத்தால் - “ புணர்க்குமயனும் ” இத்யாதி ப்ரதமபாதத்தாலே. அந்தர்யாமித்வஞ் சொல்லிற்று - சரீராத்மபாவஞ் சொல்லிற்று.

தன்மார்வில் - “ புணர்த்ததிருவாகி ” என்றநவயித்தர்த்தம் (தன்றிருமார்விலித்யாதி) “ [illegible] ” (விஷ்ணோரேஷாநபாயிநீ) “ அகலகில்லேனிறையும் ” இத்யாதியைப்பற்ற (நித்யஸம்ஶ்லிஷ்டையாயென்றது) புணர்த்த - சேர்த்துக்கொள்ளப்பட்ட. தடஸ்த்தசங்கையை யநுவதித்து பரிஹரிக்கிறார் (இது இப்போதித்யாதி) இது - லக்ஷ்மீஸம்பந்தம். ஈஶ்வரத்வஞ்சொல்லுகிற ப்ரகரணத்திலே யிதுசொல்லுகை யபேக்ஷிதமோ, ஆனபின்பு இதுசொல்லுகிற தென்னென்னிலென்றபடி. லக்ஷ்மீஸம்பந்தம் நீர்மைக்குடலாயன்றோ விருப்பதென்ன (பெரியபிராட்டியாரித்யாதி)

முந்தினவர்த்தத்தில், புணரியை - “ புணர்ப்பு ” என்றதாய், அத்தையுடையவன் - “புணர்ப்பன்” என்றதாய், தான்சேருகிற ஸமுத்ரத்தை யுடையவனென்றபடி. புணரி - ஸமுத்ரம். த்விதீயார்த்தத்தில், தான்சேர் - தனக்குத்தகுதியாகச் சேர்ந்திருக்கிற, புணர்ப்பை-சேஷ்டிதத்தை யுடையவனென்றபடி. பூர்வார்த்தம் பராம்ருஶந்நாஹ (ப்ரஹ்மாதிகளித்யாதி) “ தான்சேர்-புணர்ப்பன் ” என்றதின்

த்விதீயார்த்தத்தைப்பற்ற (தாணதிகரித்தவித்யாதி) ஆனைத்தொழில் - அதிமாநுஷவ்யாபாரம். புலன் - இந்த்ரியம். இங்கு - தத்கோசரத்திலேலக்ஷணை.

புணர்த்ததன்னுந்தியோடு - மன்னி - புணர்க்குமயனும்; ஆகத்துமன்னி - அழிக்குமரனும்; தன்மார்வில் - புணர்த்ததிருவாகி - தான்சேர் புணர்ப்பனுடையபெரும் புணர்ப்பெங்கும் புலனேயித்யந்வய:..*

நான்காம் பாட்டு.

புலனைந்துமேயும்பொறியைந்துநீங்கி
நலமந்தமில்லதோர்நாடுபுகுவீ
ரலமந்துவீயவசுரரைச்செற்றான்
பலமுந்துசீரிற்படிமினோவாதே.

ஆறாயிரப்படி.

(புலன்) ப்ரக்ருதிபந்தவிநிர்முக்தராய்க்கொண்டு நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர், இப்படி ஸர்வேஸ்வரனாயிருந்த எம்பெருமானுடைய நிரதிசயபோக்யமான கல்யாணகுணங்களிலே ஓவாதே படியுங்களென்கிறார் ... ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகமான பரமபத ப்ராப்திக்கு ஏவம்விதனுடைய குணங்களிலே நித்யாவகாஹநம்பண்ணுங்கோளென்கிறார்.

புலன்-புலப்படும்விஷயங்கள். ஐந்து-ஐந்திலும். மேயும்-பொருந்தி. பொறி-பொறிபோலேயிவனையகப்படுத்திக்கொள்ளும். ஐந்து-ஐந்திந்த்ரியங்களின் வசத்தினின்றும். நீங்கி-அகன்று. நலம்-ஆநந்தம். அந்தமில்லது-அளவிறந்திருப்பதாய். ஓர்-அத்விதீயமான. நாடு-தேசத்திலே. புகுவீர்-போய்ப்புகவேண்டியிருப்பீர். அலமந்து - அலமந்து. வீய-நசிக்கும்படி. அசுரரை-அசுரரை. செற்றான்-கொன்றவனுடைய. முந்து-ஆரம்பமேதொடங்கி. பலம்-இனிமையாலே "பலம்" என்னலாம்படியான. சீரில் - குணங்களிலே. ஓவாதே - என்றுமொக்க. படிமின் - அவகாஹியுங்கோள்.

ரஸாயநமான பய:பாநநைரந்தர்யத்தாலே பித்தசாந்தியும் இனிமையும்பிறக்கும்போலே, போக்யகுணங்களிலே நிரந்தராநுபவம்பண்ணவே அநிஷ்டநிவ்ருத்தியுமிஷ்டப்ராப்தியுந் தன்னடையேவருமென்றுகருத்து. புலனும்பொறியுமென்கிற இவையிரண்டும்-விஷயங்களுக்குமிந்த்ரியங்களுக்குங்கலந்துபேராய்வரும்.

ஈடு - நான்காம்பாட்டு.

அவனுடைய ஈஸ்வரத்வத்தில் கண்ணழிவற்றிருந்தது, " இனியிதுக்கவ்வருகில்லை " என்று " நன்மைபெறவேணும் " என்றிருப்பார் அவனைக்கடுக ஆஸ்ரயிக்கப்பாருங்கோளென்கிறார்.

(புலனித்யாதி) புலனைந்தென்கிறது - விஷயங்களையாய், அவற்றிலே ப்ரவணமாகக்கடவ்வான பொறியைந்துண்டு-ஸ்ரோத்ராதிகள்; அவற்றுக்கு வஶ்யராகைதவிர்ந்து. சிலபதார்த்தங்களை வறைநாற்றத்தைக்காட்டிமுடிக்குமாபோலே, சப்தாதிகளிலேமூட்டி நசிப்பிக்கையாலே, இந்த்ரியங்களை - பொறியென்கிறது. இத்தால் - பரிச்சின்நவஸ்துக்ராஹகமான இந்த்ரியவஶ்யராகை தவிர்ந்து. (நலமித்யாதி) நன்மைக்குமுடிவின்றிக்கேயிருக்கிறநாட்டிலே புகவேண்டியிருப்பீர். "ஸ்வவிநாசங்காண்மோக்ஷம்" என்கையன்றிக்கே, ஆப்ததமரான இவர் நன்மைக்கு முடிவில்லாததொரு தேசவிசேஷமுண்டாக வருளிச்செய்துவைத்தாரிறே. (புகுவீர்) இப்பேற்றுக்கு இசைவேயதிகாரமென்கிறார். அதொருநாடுமுண்டாய், "அதுபெறவேணும்" என்னும் நசையுமுண்டானாலும், ப்ரபலவிரோதிகள் கிடக்குமாகில் ப்ரயோஜநமில்லையேயென்னில் (அலமந்து வீயவசுரரைச்செற்றான்) விரோதிபோக்குகை நம்பணியோவென்கிறார். தடுமாறிமுடிந்துபோம்படி அஸுரவர்க்கத்தை யழியச்செய்தான். அவனுடைய (பலமுந்துசீரில்படிமின்) பலம்முற்பட்டிருக்கிற கல்யாணகுணங்களிலே ப்ரவணராகுங்கோள். [ஸுஸுவஂகரு̆ஸேவ்யம்] [ஸுஸுகம்கர்த்துமவ்யயம்] என்னும்படி - ஸ்மர்த்தவ்யவிஷயஸாரஸ்யத்தாலே, ஸாதநதசையேதொடங்கி யினிதாயிருக்குமிறே. (ஓவாதே) "அபர்வணிகடல்நீண்டலாகாது" என்னுமாபோலே ஒருநியதியில்லை யிதுக்கு, மாறாதே யாஶ்ரயிக்கப்பாருங்கோள். தமக்குரஸித்தபடியாலே, இடைவிடாம லநுபவியுங்கோ ளென்கிறாரென்றுமாம். "நானும்சொன்னேன் நமருமுரைமின்" என்னுமாபோலே... ... ... *

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (புலனித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ரமேயம் (அவனுடைய ஈஶ்வரத்வத்தில் கண்ணழிவற்றிருந்ததென்று) கண்ணழிவற்றிருந்தது-அத்ருடமாகைதவிர்ந்து ஸ்ததிரமாயிருந்தது.

புலப்படும்-அறியப்படுமவையாகையாலே (புலனைந்தென்கிறது விஷயங்களையாயென்றது) ஐந்துமேயும்-ஐந்திலும் பொருந்திவர்த்திக்கும். அத்தாலே - (ப்ரவணமாகக்கடவவான) என்றபடி. இந்த்ரியங்களை - "பொறி" என்பானென்னென்ன (சிலபதார்த்தங்களையித்யாதி) சிலபதார்த்தங்களை - எலி, பெருச்சாளிமுதலானவைகளை. வறைநாற்றத்தை-ஹேயகந்தத்தை. பொறி-போன். பொறியைந்து நீங்கி-இந்த்ரியங்களைந்தினின்று மகன்று இதிசப்தார்த்தக. இத்தால் - "புலனைந்து" என்கிறவித்தால். மேலேகடாக்ஷித்து பலிதம் (பரிச்சிந்நேத்யாதி)

வித்தவ்யாக்யாத்ருவாக்யம் (ஸ்வவிநாசங்காணித்யாதி) "ஸுஹ்ருத்விநாஶஸ்தோத்ராக்ஷ ஊதந்யந்வஸதி । ஸுவஸவெஷஸ்ஸளமோக்ஷஶா ஸஸ்தாவஷநூத:" (அஹமர்த்தவிநாஶம்சேந்மோக்ஷ இத்யத்யவஸ்யதி । அபஸ

ர்ப்பேதஸௌமோக்ஷகதாப்ரஸ்த்தாவகந்தத:) இத்யநுஸந்தேயம். "புகுவீர்" என்றதுக்கு பாவம் (இப்பேற்றுக்கித்யாதி)

பாவம் (விரோதீத்யாதி) சப்தார்த்தம் (தடுமாறியித்யாதி) அலமந்து-தடுமாறி. பலம் முற்பட்டிருக்கையாவதென்னென்ன (ஸாஸாகமித்யாதி)

படிமின்-அவகாஹியுங்கோள். இத்தால் பலிதம் (ப்ரவணராகுங்கோளென்றது) ஆஶ்ரயணம் ஸக்ருத்தாயிருக்க, " ஓவாதே " என்பானென்னென்ன (அபர்வணீத்யாதி) " அஶ்வத்தம்ஸிந்துராஜஞ்ச " (அஶ்வத்தம்ஸிந்துராஜஞ்ச) இத்யாத்யநுஸந்தேயம். கீழையும்கூட்டி பாவார்த்தம் (தமக்கித்யாதி) உக்தார்த்தத்துக்குஸம்வாதம் (நானுமித்யாதி) பெரியதிருமொழி. இதரவிஷயங்களினுடையபேரைச்சொல்லிப்போந்தநானும்சொன்னேன், என்னோடு ஸம்பந்தமுடையாருமித்தையேசொல்லிப்போருங்களென்றபடி.

புலனைந்துமேயுந்தொடங்கி, சீரில்-ஓவாதேபடி மினித்யந்வய:. ....*

ஐந்தாம்பாட்டு.

ஓவாத்துயர்ப்பிறவியுட்படமற்றெவ்வெவையு
மூவாத்தனிமுதலாய்மூவுலகுங்காவலோன்
மாவாகியாமையாய்மீனாகிமானிடமாந்
தேவாதிதேவபெருமானென்றீர்த்தனே.

ஆறாயிரப்படி.

(ஓவா) " இணைவனாம் " என்கிறபதத்தைவிவரிக்கிறது.

ஸம்ஸாரசக்ர ப்ரவர்த்தகனாகையாலும், 'ப்ரஹ்மேசாநாதிதேவர்களுக்குக் காரணபூதனாய் * அயர்வறுமமரர்களுக்கு ஸ்வாமியாகையாலும், அசேஷதோஷப்ரத்யநீகனாகையாலும், தேவமநுஷ்யாதி வ்யாபாரங்களைப்பண்ணிக்கொண்டு ஸர்வஜகத்ரக்ஷகனாகையாலும் அவனே ஸர்வேஶ்வரனென்கிறார். ... ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸமஸ்தகாரணபூதனானவன் கார்யபூத ஜகத்ரக்ஷணார்த்தமாகப் பண்ணின அவதாரங்களில் வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார்.

ஓவா-அவிச்சிந்நமான. துயர்-து:கத்தைத்தருவதான. பிறவி-ஜந்மஸம்பந்தரூபமானஸ்ருஷ்டி. உட்பட-அகப்பட. மற்று - மற்றுஸ்த்திதிஸம்ஹாராதிகளான. எவ்வெவையும்-எல்லாவ்யாபாரங்களுக்கும். மூவா-மூத்துச்சோம்பிவிடாத. தனிமுதலாய்-ஸஹாயாந்தரநிரபேக்ஷகாரணபூதனாய்க்கொண்டு. மூவுலகும் - ஸ்ருஜ்யமானலோகத்தினுடைய. காவலோன்-ரக்ஷணத்தையுடையனாய். தேவ-ப்ரஹ்மாதிதேவதைகளுக்கும். ஆதிதேவர்-அவ்வருகாம்படி ஆதிதேவர்களான அயர்வறுமமரர்களுக்கு. பெருமான்-அதிபதியாய். என்-எனக்கு. தீர்த்தன் - அவகாஹிக்குந்துறை

யாம்படி ஸாலயனானவன். அந்தஜகத்ரக்ஷணார்த்தமாக, மாவாகி-வேதப்ரவர்த்தகனான ஹயக்ரீவனாய். ஆமையாய்மீனாகி - புராணப்ரவர்த்தக கூர்மமத்ஸ்யரூபியாய். மானிடமாம்-கீதோபநிஷதாசார்யனுமான மநுஷ்யனுமாம்.

" இணைவனாமெப்பொருட்கும் " என்கிறபதத்தை விவரிக்கிறது..........*

ஈ டு - ஐந்தாம்பாட்டு.

கீழே " இணைவனாமெப்பொருட்கும் " என்றார்; அத்தையுபபாதிக்கிறார்.

(ஓவாத்துயர்ப்பிறவியுட்பட) கீழே " நீந்துந்துயர்ப்பிறவி " என்றார், இதிலே-ஒருகால் விட்டுப்பிடிக்குமதுவு மில்லையென்கிறார். உச்சிவீடும் விடாததுயரை விளைக்கக்கடவதான ஜந்மந்தொடக்கமாக மற்றுமுண்டான ஐந்துக்கும்; அவற்றையுடைத்தான பதார்த்தங்களுக்கும். மூவாவென்கிறஇத்தை-கீழேகூட்டுதல்; மூவா-தனிமுதலென்று மேலேகூட்டுதல். ப்ரவாஹரூபத்தாலே நித்யமாய்ப்போருகிற இதுக்குத்தனிமுதலென்னுதல், முசியாத அத்விதீயகாரணமாயென்னுதல். தான், " தன்பக்கலிலே வழிபடவேணும் " என்று நினைத்து உபகரணங்களைக்கொடுத்துவிட, கொடுத்த உபகரணங்களைக்கொண்டு வழிகெடநடவாநின்றால் " இப்போதிங்ஙனேபோயிற்றதாகில், க்ரமத்திலே நம்பக்கலிலே ருசியைப்பிறப்பித்து மீட்டுக்கொள்ளுகிறோம் " என்று அநுமதிதாநத்தைப்பண்ணி உதாஸீநனாயிருக்கும்; இப்படி தன்னினைவைத்தப்பிப்போரச்செய்தேயும், கர்ஷகனாயிருக்குமவன் " ஒருகால்பதர்த்ததிறே " என்று சோம்பிக்கைவாங்காதே மேலேமேலே கோலுமாபோலே, " ஒருகாலல்லாவொருகாலாகிலுமாகிறது " என்று ஸ்ருஷ்டியாநிற்கும். " சோம்பாதிப்பல்லுருவையெல்லாம் படர்வித்தவித்தா " என்னக்கடவதிறே. இப்படியிவன் ஸ்ருஷ்டித்து ரக்ஷிப்பதெவ்வளவென்னில் (மூவுலகுங்காவலோன்) ஸ்ருஷ்டிக்குக்கர்மீபவிக்கு மெல்லையளவும். கீழும், மேலும், நடுவுமென்னுதல்; க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகமென்னுதல். (காவலோன்) சாஸ்த்ரப்ரதாநாதிகளாலே ரக்ஷிக்கை. இப்படிரக்ஷிப்பது தன்மேன்மை குலையாதே நின்றோவென்னில் (மாவாகியித்யாதி) அகர்மவஶ்யனானவன் கர்மவஶ்யரோடொக்கப்பிறந்தாயிற்று. (மாவாகி) ஹயக்ரீவமூர்த்தியாயவதரித்தபடி. (ஆமையாய்மீனாகி) வித்யாப்ரகாஶகமான அவதாரங்கள். (மானிடமாய்) ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள். அநுஷ்டேயார்த்த ப்ரகாஶகமான அவதாரங்கள்; " 𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌾𑌂𑌚𑌲𑍋𑌕𑌸𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑌾𑌚𑌸𑌃 " (மர்யாதாநாஞ்சலோகஸ்யகர்த்தாகாரயிதாசஸ:) என்றும், " 𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 " (யத்யதாசரதிஶ்ரேஷ்ட:) என்றுசொல்லுகிறபடியே. இப்படி தாழவிட்டவதரிக்கிறவன்றானாரென்னில் (தேவாதிதேவபெருமான்) மநுஷ்யகந்தம்பொறாத தேவர்கள் கந்தம்பொறாத

நித்யஸூரிகளுக் கவ்வருகானவன். (என்றீர்த்தனே) நல்லபோக்யஜாதமிருக்க, நிஷித்தத்ரவ்யங்களைவிரும்புவாரைப்போலே, தானும் தன்னுடையகுணங்களுமிருக்க, சப்தாதிவிஷயங்களைவிரும்பிப்போந்தவென்னை, அவற்றைவிட்டுத்தன்னையே விரும்பும்படியான சுத்தியைப்பிறப்பித்த சுத்தியையுடையவன். அன்றிக்கே, நாணிழிந்தாடும் துறையென்னுதல் ... *

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (ஓவாவித்யாதி) "மாவாகியாமையாய்மீனுமானிடமாம்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை (கீழேயித்யாதி)

புநருக்தியைப்பரிஹரிக்கிறார் (கீழேநீந்துமித்யாதி) "நீந்தும்துயர்ப்பிறவி" என்கிறவிது - "யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி" (யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி) இத்யாதிவந்மத்யே துஃகரஹிதகாலமாயிருக்குமென்று தத்வ்யாவ்ருத்யர்த்தம் புநரிஹாபிதாநமென்று கருத்து. ஓவா - அவிச்சிந்நமான. ஐந்துக்கும் - "அஸ்தி, பரிணமதே, விவர்த்ததே, அபக்ஷீயதே, விநஶ்யதி," (அஸ்தி, பரிணமதே, விவர்த்ததே, அபக்ஷீயதே, விநஶ்யதி,) என்கிற ஐந்துவிகாரங்களுக்கும். விகாரங்களைச்சொன்னது - விகாராஶ்ரயவஸ்துக்களுக்கு முபலக்ஷணமென்கிறார் (அவற்றையித்யாதி)

உக்தயோஜநாத்வயத்துக்கு மடைவேயர்த்தம் (ப்ரவாஹேத்யாதி) அதாவது - ஓவாத்துயரை விளைக்கக்கடவதாய், மூவா - ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கிற-பிறவியுட்பட மற்றெவ்வெவற்றுக்கும் தனிமுதலென்று முந்தினயோஜநையிலர்த்தம்; இந்தயோஜநையில், மூவுதல்-நசித்தலாய், அதில்லாதது - "மூவா" என்றாய், நித்யதையைச்சொல்லுகிறது. த்விதீயயோஜநையில், "மூவா" என்னு-முசியாமையைச்சொல்லுகிறது. இதுக்கு-ஜந்மாதிவிகாரத்துக்கும், ஜந்மாதிவிகாரத்தையுடைய பதார்த்தஸமூஹத்துக்குமென்றபடி. முசியாத - சோம்பாத. முசியாமையையுபபாதிக்கிறார் (தான்தன்பக்கலிலேயித்யாதி) உபகரணங்கள்-களேபராதிகள். பதர்த்ததிறே-பதராய்ப்போயிற்றிறே. நிஷ்பலமாயிற்றிறேயென்றபடி. கோலுகை-உத்யோகிக்கை. உக்தார்த்தேப்ரமாணம் (சோம்பாணித்யாதி) பெரியதிருவந்தாதி. சோம்பிக்கைவாங்காதே யிந்தப்பலவகைப்பட்ட வஸ்துக்களையெல்லாம் விஸ்த்ருதமாக்கினகாரணபூதனேயென்று பாசுரார்த்தம்.

எல்லைக்குபபாதகம் (கீழுமித்யாதி) "மூவுலகும்" என்றது - ஸ்ருஜ்யங்களுக்கெல்லாமுபலக்ஷணம். கீழென்றது - பூமிக்குக்கீழான ஏழுலோகத்தை. மேலென்றது - பூமிக்குமேலான ஆறுலோகத்தை. நடுவும்-நடுவானபூமியுமென்றபடி. "பூர்புவஸ்ஸுவ:" (பூர்ப்புவஸ்ஸுவஃ) என்கிறமூன்றுலோகமும்-க்ருதகம். "ஜநஸ்தபஸ்ஸத்யம்" (ஜநஸ்தபஸ்ஸத்யம்) என்கிறமூன்றும் - அக்ருதகம். மஹர்லோகம்-க்ருதகாக்ருதகம். காவலோன் - ரக்ஷகன். ரக்ஷகத்வம்கதமித்யத்ராஹ (சாஸ்த்ரேத்யாதி) மேலே "மாவாகி" இத்யாதி-வித்யாவதாரங்களைச்சொல்லுகையாலே (சாஸ்த்ரப்ரதாநாதிகளாலே ரக்ஷிக்கையென்கிறார்) ஆதிசப்தேந - அநுஷ்டேயார்த்த ப்ரகாஶநாதிருச்யதே.

தாத்பர்யம் (அகர்மவஶ்யஜ்ஞாநவித்யாதி) இந்தஅவதாரங்கள் ரக்ஷகமான படியெப்படியென்ன (வித்யாப்ரகாசகமித்யாதி) ஹயக்ரீவாவதாரோவேதப்ரவர்த்தகோபூத்; கூர்மாவதாரோபுராணப்ரவர்த்தகோபூத்; மத்ஸ்யாவதாரோமநுகைடபநிரஸநபூர்வகம் ப்ரஹ்மணேவேதப்ரதாநம், மந்வாதிநாம்தர்மசாஸ்த்ரோபதேசஞ்சாகரோதித்யர்த்தஃ. அநுஷ்டேயார்த்த ப்ரகாசகத்வம் - அநுஷ்டாத்ருத்வம். அதுண்டோவென்ன (மர்யாதாநாமித்யாதி) இதம்ஸுந்தரகாண்டே ஸீதாம்ப்ரதிஹநுமத்வாக்யம். “𑌰𑌾𑌮𑍋𑌽𑌭𑌿𑌰𑌾𑌮𑍋 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾” (ராமோபிராமோலோகேஸ்மிந் சாதுர்வர்ண்யஸ்யரக்ஷிதா) இதிபூர்வார்த்தம். கீதாஸுத்ருதீயே, “𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃 । 𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇” (யத்யதாசரதிஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோஜநஃ । ஸயத்ப்ரமாணம்குருதேலோகஸ்ததநுவர்த்ததே.

தேவாதிதேவபெருமான்-தேவர்களுக்குமாதிதேவரான நித்யஸூரிகளுக்கு ஸ்வாமி. தீர்த்தமாவது-ஸ்வதஶ்ஶுத்தமாய் இதரவிஷயங்களையும் சுத்தமாக்குமதாகையாலே (சுத்தியைப்பிறப்பித்த சுத்தியையுடையவனென்றது.

மாவாகியித்யாரப்ய, தீர்த்தன்-ஓவாத்துயர்ப்பிறவியுட்படமற்றெவ்வெவைக்கும் தனிமுதலாய், மூவுலகும் காவலோனித்யந்வயஃ ... ... *

ஆறம்பாட்டு.

தீர்த்தனுலகளந்தசேவடிமேற்பூந்தாமஞ்
சேர்த்தியவையேசிவன்முடிமேற்றான்கண்டு
பார்த்தன்றெளிந்தொழிந்தபைந்துழாயான்பெருமை
பேர்த்துமொருவராற்பேசக்கிடந்ததே.

ஆறாயிரப்படி.

(தீர்த்தன்) யாவனொருவனுடைய பாதோதகத்தை சிரஸாவஹிக்கையாலே ருத்ரன்பரிசுத்தனானான், யாவனொருவன் திருவடிகளிலே சாத்தினபூந்தாமம் ருத்ரன்றலையிலே காணப்பட்டது, அங்ஙனேயிருந்தபைந்துழாயான் பெருமை ஸுப்ரஸித்தமன்றோ, சொல்லவேணுமோ வென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இவ்வவதாரதசையிலுண்டானபரத்வம் அதிப்ரசித்தமென்கிறார்.

தீர்த்தன் - பாவநபூதனானக்ருஷ்ணனுடைய. பூர்வாவதாரத்திலே, உலகு-லோகத்ரயத்தையும். அளந்த - அளந்துகொண்ட. சே - செவ்வையையுடைய. அடிமேல் - திருவடிகளிலே. பூ-அழகிய. தாமம் - மாலைகளை. சேர்த்தி - ஸமர்ப்பித்து. அவையே - அவற்றையே. சிவன் - சிவனுடைய. முடிமேல் - ஜடாமகுடத்திலே. தான் - தானே. கண்டு - கண்டு. பார்த்தன் - அர்ஜுநன்.

அறுகிட்ட. அந்த, பை-பசுத்த. துழாயான் - திருத்துழாயையுடையவனுடைய. பெருமை - ப்ராதாந்யமானது. பேர்த்தும் - இப்பார்த்தனையொழிய. ஒருவரால்-வேறொருவராலும். பேச - உபபாதித்துச்சொல்லவேண்டும்படி. கிடந்ததே - தெளியாதுகிடந்த அம்ஸமுண்டோ.

ஸுப்ரஸித்தமன்றோ வென்றாகருத்து.................................*

---

௬ - ஆறும்பாட்டு.

நீர்சொல்லுகிறவனுக்கு இந்தவுத்கர்ஷமெல்லாமுண்டோவென்ன; முன்பே அர்ஜுநன் நிருபித்து நிர்ணயித்த அர்த்தம் நாயின்றாயும்படி குறைபட்டிருந்ததோ வென்கிறார்.

(தீர்த்தன்) "பாதோதகேந ஸிவஸ்ஸ்வஸிரோத்ருதேந" (பாதோதகேநஸைஸிவஸ்ஸ்வஸிரோத்ருதேந) என்றும், "பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதாரணாத்" (பாவநார்த்தம்ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதாரணாத்) என்றுஞ்சொல்லுகிறபடியே, தன்திருவடிகளோட்டை ஸ்பர்ஸத்தாலே அசுத்தனையும் சுத்தனாக்கவல்ல சுத்தியையுடையவன். இதெப்போதுதான் செய்ததென்னுமபேக்ஷையிலே (உலகளந்தசேவடி) என்று அத்தைஸ்மரிப்பிக்கிறார். [நுறைகொண்டு] தன்னுடைய ஆஸ்ரயத்தைத் தூய்மையிட்டுக்கொண்டு. [நான்முகன்குண்டிகைநீர்பெய்து] அருகேநின்ற சர்மகத்வம் இவன்நினைத்தவாறேஜலமாய் இவன்குண்டிகையிலே ப்ரவேசித்தது. [மறைகொண்டமந்திரத்தால் வாழ்த்தி] ஸ்ரீபுருஷஸூக்தாதிகளைக்கொண்டு ஸ்துதித்து. [கறைகொண்டகண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான்] "யுக்தாயுக்த நிரூபணம்பண்ணவறியாதே இவனித்தியிலே கைவளராநின்றான்; அதுபோகவேணும்" என்று இவன் ஜடையிலேயேறும்படி அவன்திருவடிகளை விளக்கினான், ஸ்ரீபாததீர்த்தங்கொண்டு துஷ்புத்ரர்கள்தலையிலே தெளிக்குமாபோலே. இவ்விடந்தன்னில் க்ருஷ்ணவ்ருத்தாந்தமாயிற்று சொல்லுகிறது, ஸ்ரீவாமநாவதாரமென்னென்னில்; க்ருஷ்ணாவதாரத்துக்கும் வாமநாவதாரத்துக்கும், வரையாதே யெல்லாரோடும் பொருந்துமதுண்டாகையாலே சொல்லுகிறார். (பூந்தாமம்சேர்த்தி) அர்ஜுநனுக்கொரு தேவதைபக்கலிலே ஒரு அஸ்த்ரம்பெறவேண்டுவதாய் அவனதுக்குத்யுக்தனசமயத்திலே, இவன்ப்ரமத்தைதயாற்றுகைக்காக, "புஷ்பங்களைநங்காலிலேயிட்டுஜீவி" என்றருளிச்செய்ய, அவனும்திருவடிகளிலேயிட, அந்ததேவதை ராத்ரியிலேஸ்வப்நத்திலே அந்தபுஷ்பங்களைத் தன்றலையிலே தரித்துக்கொண்டுவந்து அஸ்த்ரப்ரதாநம்பண்ணிற்றாகச் சொல்லக்கடவதிறே; அத்தையருளிச்செய்கிறார், பூமாலையென்னுதல், அழகியமாலையென்னுதல். (அவையே) அவற்றோடு ஸஜாதீயங்களன்றிக்கே. (சிவன்

முடிமேல்தான்கண்டு) பாடேபார்ஶ்வத்திலே யன்றிக்கே அவன்றலைமேலே கண்டானாயிற்று. (தான்கண்டு) ஆப்தர்சொல்லக் கேட்கையன்றிக்கே, ஶ்ருதிஸ்ம்ருதிகளாலாதலன்றிக்கே, தானேகண்டானாயிற்று. ப்ரத்யபிஜ்ஞார்ஹமாம்படி ப்ரத்யக்ஷித்து. (பார்த்தனித்யாதி) அவன்ஸாரதியாய்த் தாழநிற்கச்செய்தேயும் அவனுடைய ஈஶ்வரத்வத்தில் கலங்காதே "ஸது பார்த்தோ மஹாமநா:" (ஸதுபார்த்தோமஹாமநா:) என்கிறபடியே பேரளவுடையஅர்ஜுநன் நிரூபித்துநிர்ணயித்து, "நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே" (நம:புரஸ்தாதுதப்ருஷ்டதஸ்தே) என்றநுவர்த்தித்த (பைந்துழாயான்பெருமை) ஸர்வாதிகத்வத்யோதகமானதிருத்துழாய்மாலையையுடைய ஸர்வேஶ்வரனுடையபரத்வம், இன்றுசில அறிவுகேடர், செல்லவிட்டு வரவிட்டாராயுமளவாயிருந்ததோ..............*

ஜீயர் அரும்பதம்.

ஆரும்பாட்டு. (நீர்த்தனித்யாதி) "பார்த்தன்தெளிந்தொழிந்த" இத்யாத்யுத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை (நீர்சொல்லுகிறவித்யாதி)

"நீர்த்தன்" என்றதுக்கு - அசுத்தரையும் சுத்தராக்கவல்ல பாவநத்வத்தையுடையவனென்றர்த்தமாக விவக்ஷித்தத்தை ஸப்ரமாணமாக வருளிச்செய்கிறார் (பாதோதகேநேத்யாதி) ஶ்லோகத்தே. "வேதாபஹார" (வேதாபஹார) இத்யாதி. ஈஶ்வரஸம்ஹிதாயாம்ப்ரஹ்மா, "த்ரவீபூதஸ்ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே। க்ருஹீத்வா தர்மபாநீயம் பாதநாதஸ்ய ஸுஷ்டயே। க்ஷாலிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம்। ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹர:। பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதாரணாத்" (த்ரவீபூதஸ்ததாதர்மோ ஹரிபக்த்யாமஹாமுநே। க்ருஹீத்வாதர்மபாநீயம் பாதநாதஸ்யஸுஷ்டயே। க்ஷாளிதம்பரயாபக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ச்சிதம்। ததம்புபதிதம்த்ருஷ்ட்வாததாரஶிரஸாஹர:। பாவநார்த்தம்ஜடாமத்யேயோக்யோஸ்மீத்யவதாரணாத்) இது - அசுத்தரையும் சுத்தராக்கினவிது. திருவுலகளந்தருளினபோது அசுத்தரும் சுத்தரானார்களோவென்ன (குறைகொண்டித்யாதி) "த்ரவீபூதஸ்ததா தர்ம:" (த்ரவீபூதஸ்ததாதர்ம:) இத்யாதிப்ரமாணத்தை ஹ்ருதிகரித்துக்கொண்டு (அருகேநின்றவித்யாதி) குண்டிகை - கமண்டலு. "கறைகொண்டகண்டத்தான்" என்று விசேஷிக்கிறதுக்குத்தாத்பர்யம் (யுக்தாயுக்தேத்யாதி) ஆங்கு - அண்டத்தான்சேவடியை - நான்முகன் - குறைகொண்டு - குண்டிகைநீர்பெய்து என்றுதொடங்கி, கழுவினானித்யந்வய:. கறை-விஷம். அநீஶ்வாதந்த்ர்யம். "சென்னிமேலேற" என்றதுக்குபாவம் (ஸ்ரீபாததீர்த்தமித்யாதி) தெளிக்கை-ப்ரோக்ஷிக்கை. தடஸ்த்தசங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் (இவ்விடத்தனிலித்யாதி) "பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை" என்றதைப்பற்ற (க்ருஷ்ணவ்ருத்தாந்தமென்றது) க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லுகிறவிடத்திலே, "உலகளந்தசேவடிமேல்" என்று - வாமநாவதார

வ்ருத்தாந்தகதநத்துக்குத் தாத்பர்யமென்னென்று சங்கார்த்தம். வரையாதே-மர்யாதையிடாதே. (சொல்லுகிருர்) ஏகாவதாரத்வேநவக்தித்யர்த்த8.

ஒருதேவதைபக்கலிலே - ருத்ரன்பக்கலிலே. ஒரஸ்த்ரம். பாசுபதாஸ்த்ரம். அதுக்கு - பாசுபதாஸ்த்ரலாபார்த்தமான ருத்ரஸமாராதநத்துக்கென்றபடி. ஜீவி-புஜி, உஜ்ஜீவநம்வா. இது - இருபத்துநாலாயிரத்திலே வ்யக்தம். " புஷ்பங்களைக் ருஷ்ணன் திருவடிகளிலேயிட்டு ஜீவித்தத்தை மஹாபாரதத்திற்சொல்லுகிறவளவன்றிக்கே, அபிமந்யுவதத்தின் மத்யாஹ்நத்திலே ஸம்ஸப்தகரோடே யுத்தம்பண்ணி அர்ஜுநனிளைத்தபோது, 'லிங்கபூஜைபண்ணிபுஜிக்கவேணும்' என்றர்ஜுநன் சொல்ல, அப்போது, 'தன்காலிலேபுஷ்பங்களையிட்டுபுஜி' என்றுசொன்னவிதுவுமிவர்க்கிவ்விடத்திலே விவக்ஷிதம்" என்றுபிள்ளையருளிச்செய்வர். "பூந்தாமம்" என்று-ஜாத்யேகவசநம்; "அவையே" இத்யநுவாதாத். ஏவகாரம் - அந்யயோகவ்யவச்சேதபரமென்கிருர் (அவற்றேறுடித்யாதி) "முடி" என்கிறத்தாலே-அவயவாந்தரோஷநேதிய்யாவர்த்யதே; "முடிமேல்" இத்யநேந-ப்ரிஷ்பார்ஸ்வேஷேநேதிவ்யாவர்த்யத இதிஹ்ருதிதாயாஹ (பாடேயித்யாதி) இவ்விடத்திலே - "[illegible] ।। [illegible]" (பார்ததோவி ஜேதாமஹூஸைஞ்சநஸ்யபாதாரவிந்தார்ப்பிதசித்ரபுஷ்பம் । ததர்ஸகங்காதரமௌளி மதயேபபூவவிரஸ்க்ருதநிஸ்சயார்த்த8) என்றப்ஸ்லோகமநுஸந்தேயம். "தான்" என்றதுக்குபாவம் (ஆப்தரித்யாதி) "கண்டு" என்றதுக்கர்த்தம் (ப்ரத்யபிஜ்ஞார்ஹமித்யாதி)

பேரளவு - மஹாஜ்ஞாநம். நிரூபித்து - "[illegible]" (இதமித்தம்) என்று நிரூபணம்பண்ணி. "[illegible]" (நம8புரஸ்தாத்) இத்யாதிஸ்லோகம் பீஷ்மபர்வத்திலேயாகிலும், இவ்விடத்திலே யநுவர்த்தநமாத்ரத்துக்கு ப்ரமாணமாகலாம். (செல்லவிட்டு-வரவிட்டு) மஹாமதிகளையுடைத்தானவக்காலம் செல்லவிட்டு, அறிவுகேடரையுடைத்தானவிக்காலம் வரவிட்டென்றபடி. வரவிட்டு-வந்தபின்பு. அறிவுகேடர் - (ஆராயுமளவாயிருந்ததோ) என்றந்வயிப்பது. "[illegible]" (ஸதுபார்த்தோமஹாமநா8) இத்யாதிவாக்யம்-இதாபாஷ்யே. "[illegible]" (நம8புரஸ்தாத்) இத்யாதிஸ்லோகோஇதாஸ்லேகாதஸே. "[illegible]" (நமோநமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வ8) இத்யாதி. சேர்த்தி - ஸமர்ப்பித்தது. அவையே - ஸமர்ப்பித்தவற்றையே. தெளிந்தொழிந்த-நிரூபித்துநிஸ்சயித்த. பைந்துழாயான்-பசுந்திருத்துழாயையுடையவனுடைய. பேர்தனுமொருவரால் - பார்த்தனையொழியவேறுமொருவராலே. பேசக்கிடந்ததே-சொல்லவேண்டும்படியிருந்ததோ.

க்ரமேணநவட8..*

ஏழாம்பாட்டு.

கிடந்திருந்துநின்றளந்துகேழலாய்க்கீழ்புக்
கிடந்திடுந்தன்னுள்கரக்குமுமிழும்

தடம்பெருந்தோளாரத்தழுவும்பாரென்னு
மடந்தையைமால்செய்கின்றமாலார்காண்பாரே.

ஆறுயிரப்படி.

(கிடந்து) எம்பெருமான்றனக்கிந்த ஜகத்தானது இஷ்டஸர்வ சேஷ்டாவிஷயமாயிருக்கையாலே அவனுக்கேசேஷமென்கிறார்.........*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ரக்ஷ்யமான ஜகத்தைப்பற்றத் தன்வாத்ஸல்யத்தாலேயநேக வ்யாபாரங்களைப் பண்ணுமென்கிறார்.

ரக்ஷணார்த்தமாக, கிடந்து - "ப்ரதிபிம்பே ஸாகரஸ்ய" (ப்ரதிபிம்பேமஹோததேம்) என்று, கடற்கரையிலே வழிமேவல்டிக்கிடந்தும். இருந்து - "உபஜாநாஸீநம்" (உடஜேராமமாஸீநம்) என்றுசித்ரகூடத்திலேயிருந்தும். அளந்து - த்ரிவிக்ரமனாயநங்யார்ஹமாம்படியளந்தும். கேழலாய் - வராஹரூபியாய். கீழ் - ப்ரளயஜலத்துக்குக்கீழ. புக்கு - புக்கு. இடந்திடும் - அண்டகடாஹத்தினின்று மொட்டுவிடுத்தெடுத்தும். மறைப்ரளயத்திலேவடதளசாயியாய், தன்னுள் - வயிற்றுக்குள்ளே. கரக்கும் - தெரியாதபடிகரந்தும். உமிழும் - வெளிநாடுகாணும்படியுமிழ்ந்தும். தடம் - இடமுடைத்தான. பெரு - பெரிய. தோள் - திருத்தோள்கள். ஆர - நிரம்பும்படி. தழுவும் - அஸாதாரணவிக்ரஹத்தோடேதழுவியும். இப்படி, பாரென்னும்-பூமியென்றுசொல்லப்படுகிற. மடந்தையை - மடந்தையை. மால் - ஸர்வாதிகனான ஈஶ்வரன். செய்கின்ற - பண்ணுகிற. மால் - வ்யாமோஹத்தை. காண்பார் - அறியவல்லார். ஆர் - ஆர்.

அதிசயிதஜ்ஞாநர்க்கு மறியவொண்ணாதென்று கருத்து.......................*

ஈடு - ஏழாம்பாட்டு.

ஒருவனநுவர்த்தநங்கொண்டு நிஶ்சயிக்கவேணுமோ; அவனுடைய இஷ்டஸர்வசேஷ்டாவிஷயமாயன்றோ இஜ்ஜகத்திருக்கிறது, இதுவே போராதோபரத்வஹேதுவென்கிறார்.

(கிடந்து) திருப்பாற்கடலிலே கிடந்தபடியாதல்; "ப்ரதிபிம்பே" (ப்ரதிபிம்பே) என்னும்படியாகக் கடற்கரையிலேசாய்ந்தபடியாதல். [ஸாஹஸ்ரபுஜகஸ்ஸாகரம்] [பாஹஸ்ம்புஜகபோகாபம்] திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தாற்போலேயாயிற்று திருக்கையைமடித்துச் சாய்ந்திருக்கும்படி. [அபிஸந்தந:] [அரிஸூதந:] கிடந்த கிடையிலே லங்கைகுடிவாங்கவேண்டும்படியிருக்கை. [ப்ரதிபிம்பே ஸாகரஸ்ய] [ப்ரதிபிம்யேமஹோததே:] ஒருகடலோடேயொருகடல் ஸ்பர்த்தித்துச்சாய்ந்தாற்போலேயிருக்கை. (இருந்து) பரமபதத்திலேயிருந்தபடியாதல்; "உபஜாநாஸீநம்" (உடஜேராமமாஸீநம்) என்று ருஷிகளாஶ்ரமங்களிலேயிருந்தும் (நின்று) திருமலையிலேநின்றபடி.

யாதல்; ராவணவதஸமநந்தரத்திலே கையும் வில்லுமாய் லங்காத்வாரத்திலே நின்றநிலையாதல்; வாலியைக்கொன்று நின்றநிலையாதல். “ [illegible] ” (அவஷ்டப்யசதிஷ்டந்தம்தர்மஜ்ஞோ ஜிதம் ராமம் ராமாநுஜஞ்சைவ பர்த்துஸ்சைவாநுஜம் ஸஹ) என்கிறபடியே. அவர்களுடையஸ்த்ரீகள் பக்கலிலே கேட்கு மித்தனையிறே யிவனுடையபரத்வம்; “ [illegible] ” (தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:) என்னுதல், “ [illegible] ” (த்வமப்ரமேயஸ்ச) என்னுதல் சொல்லாநிற்பர்களிறே. (அளந்து) தன்னதான பூமியை மஹாபலிபோல்வாரிருந்திக்கொள்ள, அத்தை யெல்லைநடந்துமீட்டுக்கொண்டு. (கேழலாய்க்கீழ்புக்கிடந்திடும்) நீருக்கும்சேற்றுக்கும் இருயாத வராஹவேஷத்தைப் பரிக்ரஹித்து, ப்ரளயஜலத்துக்குள்ளே முழுகி அண்டபித்தியிலே சேர்ந்த பூமியைப்பிரித்தெடுக்கும்.

(தன்னுள்கரக்கும்) “ ரக்ஷிக்க ” என்றொருபேரை யிட்டுக்கொண்டு கொம்பிலும் குளம்பிலும்கொள்ளாதே வயிற்றிலேவைத்து ரக்ஷித்தபடி. “ மேலொருகாலம் ப்ரளயம்வரும் ” என்றேலக்கோலி ப்ரளயம் வந்தாலும் “ இங்குண்டோ ” என்று இதைத்துக்காட்டலாம்படி முன்புத்தையதொன்றும் தெளியாதபடி வைக்கும்.

(உமிழும்) “ இவையென்பட்டன ” என்றுபார்க்கைக்காகப் பின்னை வெளிநாடுகாண உமிழும்.

(தடம்பெருந்தோளாரத்தழுவும்) மிகப்பணைத்த திருத்தோள்களாலே, ஆரும்படியாகத் தழுவும். (பாரென்னுமடந்தையை) ஸ்ரீபூமிப்பிராட்டியை. பூமியை ப்ரகாரமாக வுடையளாகையாலே தத்வாசகசப்தத்தாலே சொல்லுகிறது. தன்விபூதியினுடைய ரக்ஷணமொரு தலையாலே அவன்படும்பாட்டை யநுஸந்தித்து ஹ்ருஷ்டையாய் அநுக்கமாகியான ஸ்ரீபூமிப் பிராட்டியணைக்கும், அந்தாலே தானும் ஹ்ருஷ்டனுயணையாநிற்கும்.

(மால்) ஸர்வாதிகனான சர்வேஶ்வரன். (செய்கின்றமால்) அவனேற்றுகிறபிச்சை. (ஆர்காண்பாரோ) ஒருவராலே “ இவ்வளவு ” என்றுபச்சேதிக்கலா யிருந்ததோ..................................*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (கிடந்தித்யாதி) ஒருவனநுவர்த்தகனென்றது - க்ருஷ்ணன் திருவடிகளிலே சாத்தினபுஷ்பங்களைத் தன்தலையிலேதரித்து ருத்ரனநுவர்த்தகனாதல், அர்ஜுநனநுவர்த்தகனாதல்.

(ப்ரதிபிம்பஇதி) யுத்தகாண்டே, “ [illegible] ”

யே மஹோததே꞉ । பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந꞉." (ததஸ்ஸாகரவேலாயாம் தர்ப்பாநாஸ்தீர்ய ராகவ꞉ । அஞ்சலிம் ப்ராங்முக꞉ க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோததே꞉ । பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந꞉.) ப்ரஸ்துதஶ்லோகார்த்தமாஹ (திருவநந்தாழ்வானித்யாதி) மடித்து-உபதாநமாகப்பண்ணி. "அரிஸூதநஸ்ய ப்ரதிஶிஶ்யே" (அரிஸூதநஸ்ஸன் - ப்ரதிஶிஶ்யே) இதித்காலவிஶேஷணம் ஹ்ருதி நிதாயாஹ (கிடந்தகிடையிலேயித்யாதி) ராமம் க்ருபாஸமுத்ரத்வேந விவக்ஷந்நாஹ (ஒருகடலித்யாதி) ஒருகடல் 'சாய்ந்தாற்போலே' யென்றவிடத்திலே - "இவனும் * கருணைக்கடலிறே" என்றருளிச்செய்வர்.

அயோத்யாகாண்டே சித்ரகூடே, "நிரீக்ஷ்ய ஸ முஹூர்த்தம் து ததர்ஶ பரதோ குரும் । உடஜே ராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம்." (நிரீக்ஷ்ய ஸ முஹூர்த்தம் து ததர்ஶ பரதோ குரும் । உடஜே ராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம்)

லங்காத்வாரத்திலே நின்றநிலையென்றவிடத்திலே - "கோதண்டகோடிவிநிவேஶிதபாஹுதண்டமாகண்டலாத்யமரபாதிதபுஷ்பவர்ஷம் । ஆயோதநக்ஷிதிரஜ꞉பரிதூஸராங்கமவ்யாத் ஸ்திதம் ரகுபதேரவஸந்நஶத்ரோ꞉" (கோதண்டகோடிவிநிவேஶிதபாஹுதண்டமாகண்டலாத்யமரபாதிதபுஷ்பவர்ஷம்। ஆயோதநக்ஷிதிரஜ꞉பரிதூஸராங்கமவ்யாத்ஸ்திதம் ரகுபதேரவஸந்நஶத்ரோ꞉) என்றதநுஸந்தேயம். என்கிறபடியே - (வாலியைக்கொன்றுநின்றநிலையாதல்) இத்யந்வய꞉. கிஷ்கிந்தாகாண்டே ஏகோநவிம்ஶே, "அவஷ்டப்ய ச" (அவஷ்டப்ய ச) இத்யாதி. பரத்வப்ரதிபாதந ப்ரகரணத்திலே ராமாவதாரத்தைத் தாந்தந்சொன்னது- "ராமனே ஸர்வஸ்மாத்பரன்" என்கைக்காகவன்றோ; அப்படி-ராமனே ஸர்வஸ்மாத்பர னென்னுமிடத்தில் ப்ரமாணமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (அவர்களுடையஸ்த்ரீகளித்யாதி) கேட்கைக்கவர்களப்படி சொன்னார்களோவென்ன (தமஸ꞉பரம இத்யாதி) இதம்-மண்டோதரீவாக்யம். (த்வமப்ரமேயச்சேத்யாதி) தாராவாக்யம். "த்வமப்ரமேயஶ்ச துராஸதஶ்ச ஜிதேந்த்ரிய ஶ்சோத்தமதார்மிகஶ்ச । அக்ஷய்யகீர்த்திஶ்ச விசக்ஷணஶ்ச க்ஷிதிக்ஷமாவான் க்ஷதஜோபமாக்ஷ꞉" (த்வமப்ரமேயஶ்ச துராஸதஶ்ச ஜிதேந்த்ரியஶ்சோத்தமதார்மிகஶ்ச । அக்ஷய்யகீர்த்திஶ்ச விசக்ஷணஶ்ச க்ஷிதிக்ஷமாவான் க்ஷதஜோபமாக்ஷ꞉)

இருஞ்சிக்கொள்ள - பறித்துக்கொள்ள.

இடந்திடும் - ஒட்டுவிடுவித்தெடுக்கும்.

"சிலம்பினிடைச்சிறுபரல்போல் பெரியமேரு" இத்யாதிகஞ்ச ஹ்ருதி நிதாய, பூர்வாபதாநா அத்தராபதாநஸ்யாதிக்யம் தர்ஶயதி (ரக்ஷிக்கவென்றித்யாதி) "நஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே, அபி து நிந்திதாதிதரத் ப்ரஶம்ஸிதும்" (நஹிநிந்தாநிந்த்யம்நிந்திதும்ப்ரவர்த்ததே, அபிதுநிந்திதாதிதரத்ப்ரஶம்ஸிதும்) இதிந்யாயோத்ர த்ரஷ்டவ்ய꞉. கரக்கை - தெரியாதபடி யொளிக்கையாதல், ஏகீகரணமாதல். ஏதத்த்ருதி நிதாயாஹ (மேலொருகாலமித்யாதி) ஏலக்கோலி - ஏற்கவேவிசாரித்து. இளைத்துக்காட்டலாம்படி - குழைத்துக்காட்டலாம்படி.

இவையென்பட்டனவென்று பார்க்கைக்காக என்றவிடத்திலே - "ஸர்ப்பே க்ருத்வா கோப்த்ருமநந்தம் ஜகதந்த꞉" (ஸர்ப்பேக்ருத்வாகோப்த்ருமநந்தம்ஜகதந்த꞉) இத்யாதி ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஶ்லோகமநுஸந்தேயம்.

"நடம், பெரும்" என்ற த்விருக்தி ஸித்தமானவர்த்தம் (மிகப்பணைத்த வென்றது) ஆரும்படியாக - பூர்ணமாம்படியாக. பார்தானேயவளென்ன (பூமியையித்யாதி) யெல்லாவற்றையும் கடாக்ஷித்து, தழுவுகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (தன்விபூதிமித்யாதி)

மால் - ஸ்வாமியும், வ்யாமோஹமும். மால்செய்கின்றமால் - ஸர்வேஶ்வரன் பண்ணுகிறவ்யாமோஹத்தை.

இடந்திருந்தித்யாரப்ய, உமிழும்; பாரென்னும் மடந்தையை - தடம்பெரும் தோளாரத்தழுவும்; மால்செய்கின்ற மாலார்காண்பாரே யித்யந்வயம்........*

எட்டாம்பாட்டு.

காண்பாராரெம்மீசன்கண்ணனையென்காணுமா
றூண்பேசிலெல்லாவுலகுமோர்துற்றாற்றா
சேண்பாலவீடோவுயிரோமற்றெப்பொருட்கு
மேண்பாலுஞ்சோரான்பரந்துளனாமெங்குமே.

ஆறாயிரப்படி.

(காண்பாரார்) ஸர்வஜகந்நிகரணநியமநஸமர்த்தனான எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வ மொருவர்க்கறிகைக்குப் பூமியோவென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவனெனக்குப்ரகாசிப்பித்த அதிசயிதாகாரங்கள் அளவுபோதாதென்கிறார்.

எம் - எனக்கு. ஈசன் - ஸ்வாமியாய். கண்ணனை - ஸுலபனான க்ருஷ்ணனை. காண்பார் - அறியவல்லார். ஆர் - ஆர். அவன்படியிருவாறால், காணுமாறு - அறியும்படி. என் - எங்ஙனே. அவனுக்கு, ஊண் - ஊண். பேசில் - சொல்லப்பார்க்கில். "[illegible]" (அத்தாசராசரக்ரஹணாத்) என்கிறபடியே, எல்லாவுலகும் - சராசராத்மகமான சகலலோகமும். ஓர்துற்று - ஒருபிடிக்கும். ஆற்றா - போராது. வீடோ - அவனுக்கிருப்பிடமான வீடானது. சேண்பால - "[illegible]" (விஶ்வதஃப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு) என்கிறபடியே ஸர்வலோகத்துக்குமவ்வருகான பரமபதப்ரதேசத்தது. அவனோ - அவனோ. மற்று - தன்னையொழிந்த. எப்பொருட்கும் - சகலபதார்த்தங்களுக்கும். உயிர் - அந்தராத்மா. ஏண்பாலும் - ஒருரேகாமாத்ரமும். சோரான் - சோரவிடாதவனாய்க்கொண்டு. எங்கும் - எல்லாப்ரதேசத்திலும். பரந்து - பரந்து. உளனாம் - நில்லாநிற்கும்.

ஸர்வஜகத்க்ராஸசீலனாய், பரமபத நிலயனாய், ஸர்வபதார்த்தங்களிலும் அந்தர்ப்பஹிஶ்ச வ்யாப்தனானவனை யெங்ஙனேபரிச்சேதித்தறிவதென்று கருத்து.

ஏண் என்று - வரையாய், ரேகையைக்காட்டுகிறது. ஓ என்கிற அசைகள் - வியப்பைக்காட்டுகிறது..*

ஈடு - எட்டாம்பாட்டு.

அவனுடைய அத்புதகர்மங்களைத் தனித்தனியும் திரளவும் பரிச்சேதிக்கப் போகாதெத்தனையேனு மளவுடையார்க்கு மென்கிறார்.

(காண்பாராரெம்மீசன்கண்ணனை) ஸர்வேஶ்வரனா யிருந்துவைத்து க்ருஷ்ணனாய்வந்தவதரித்து எனக்குக்கையாளானவனை, அவன்தானே காட்டநான்கண்டாற்போலே காண்பார்க்குக் காணலாமித்தனைபோக்கி, ஸ்வயத்நந்தாலே சிலர்க்குக்காணப்புக்கால் காணப்போமோ.

அதுகிடக்க, காண்பார் சிலருண்டாயிற்று (என்காணுமாறு) எவ்வளவைத்தான் காண்பது. அளவுடையார் சிலர் காணவிழிந்தார்களென்று, விஷயத்தைப் பரிச்சேதிக்கப்போகாதே. ஏன்றான் பரிச்சேதிக்கப் போகாதொழிகிறதென்னில் ; இதுவன்றோ அவனுடைய அபதாநமிருக்கிறபடி. அவனுடைய ஒன்றொருவொரு செயலைச்சொல்லப்பார்க்கில், ஸர்வலோகங்களு மோரவதாநத்துக்குப்போராது, இவ்வபதாநத்தை யுடையவனை யொருவராலே பரிச்சேதிக்கலா யிருக்கிறதோ.

“ அவனுடையசெயல் பரிச்சேதிக்கவொண்ணாது ” என்கைக்கு, ஸ்வரூபமோதான் பரிச்சேதிக்கலா யிருக்கிறதென்கிறார் (சேண்பாலவீடோ) உயர்த்தியே ஸ்வபாவமாக வுடைத்தான பரமபதமென்ன, முக்தாத்ம ஸ்வரூபமென்ன, மற்றுமுண்டான தேவாதிகளென்ன, இவற்றை யுடைத்தான (எண்பாலும்சோரான்) எண்ணப்பட்ட ப்ரதேசங்களென்னுதல், எட்டுத்திக்கும் வ்யாபித்துவிடாதே நிற்குமென்னுதல். (பரந்துளனாமெங்குமே) இப்படி வ்யாபிக்குமிடத்தில் ஒருகுறையுண்டாம்படி யிருக்கையன்றிக்கே, குறையற வ்யாபித்திருக்கும். ஆனபின்பு “ வ்யாபகவஸ்துவை வ்யாப்யத்திலே யொன்றுபரிச்சேதித்துக்காண்கை” என்றொருபொருளுண்டோ........ ....*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (காண்பாராரித்யாதி) “ ஊண்பேசி லெல்லாவுலகுமோர்துற்றாற்றா ” என்கையாலே (தனித்தனியுமென்றது) “ ஆர் ” என்றதிலேநோக்காக (எத்தனையேனுமென்றது) இந்தவவதாரிகார்த்தம் - இத்திருவாய்மொழியினர்த்தநிகமநாவஸரத்திலே யருளிச்செய்கிறார், அங்கேகண்டுகொள்வது.

“ ஈசன் - எங்கண்ணனை - காண்பாரார் ” இத்யந்வய:. இத்தால் பலித்த தாத்பர்யம் (அவன்தானேயித்யாதி)

காண்பார் சிலருண்டாயிற்றென்றது - உண்டானாலோவென்றபடி. என்காணுமாறு - காணும் ப்ரகாரமென். ஜ்ஞாநாதிகர்க்குக் காணத்தட்டென்னென்ன (அளவுடையாரித்யாதி)

அபதாநம் - வ்யாபாரம். அவதாநம் - பிடி. இத்தால் தாத்பர்யம் (இவ்வபதாநத்தையித்யாதி)

ஸ்வரூபமோதானென்றது - "ஏண்பாலுஞ்சோரான்" என்றத்தைப்பற்ற. சேண் - உயர்த்தி. பால் - ஸ்வபாவம். முக்தாத்மஸ்வரூபமென்றது - நித்யர்க்குமு பலக்ஷணம். ஏண்பாலும்" என்றநிர்க்கத்தைக்குறைத்து; "எண்பாலும்" என் றுஹ்ரஸ்வமாக்கி, எட்டுத்திக்கிலுமென்றபடி. "ஏண்பாலுஞ்சோரான்" என்றுவை த்து, "எங்கும்-பரந்து" என்கிறதென்னென்ன (இப்படியித்யாதி) (வ்யாபிக்கு மிடத்தில்) பலதூணுக்கோருத்திரம்போலன்றிக்கே, ஜாதி வ்யக்திதோறும் பரிஸ மாப்ய வர்த்திக்குமாபோலே வர்த்திக்கையைச் சொல்லுகிறதிங் கென்றபடி.

ஈசன் - எங்கண்ணனை - காண்பாரார்; என்காணுமாறு; ஊண்பேசி லெல் லா வுலகுமோர் துற்றாற்ற; சேண்பாலவீடென்ன, உயிரென்ன, மற்றுமுண்டான எவ்வகைப்பட்ட பொருளென்ன, அப்பொருள்களையுடைய ஏண்பாலென்ன, இவையெங்கும் - பரந்து - சோராதேக்கொண்டு - உளனாயித்யந்வய8. "எப்பொ ருட்கும்" என்றஷஷ்டி - ப்ரதமார்த்தகம். எப்பொருளுமென்றபடி............*

ஒன்பதாம்பாட்டு.

எங்குமுளன்கண்ணனென்றமகனைக்காய்ந்து
இங்கில்லையாலென்றிரணியன்றூண்புடைப்ப
அங்கப்பொழுதேயவன்வீயத்தோன்றியவென்
சிங்கப்பிரான்பெருமையாராயுஞ்சீர்மைத்தே.

ஆறாயிரப்படி.

(எங்கும்) ஆஸ்ரிதார்த்தமாகத்தன்னுடைய ஸர்வாந்தராத்மத்வத் தை ப்ரத்யக்ஷமாக்கியருளின எம்பெருமானுடைய ஸர்வேஸ்வரத்வம ஹிமை யொருவர்க்காராயநிலமோ, ஆனபின்பிங்ஙனேயிருந்த இவனையா ஸ்ரயியுங்களென்கிறார்... ... ...*

பன்னீராயிரப்படி.

அநந்தாம், அவனுடைய ஆஸ்ரித வாத்ஸல்யாதிசயம் அபரிச்சேத்யமெ ன்கிறார்.

"ஸ்வ-ஹஸ்ரூபா-ரஹீதக:" (ஸர்வம்வ்யாப்ய-ஸ்திதஸ) என்கிறபடி யே, கண்ணன்-ஸர்வஸ்ர்வாஹகனான ஸர்வேஸ்வரன். எங்கும்-ஸர்வத்ர. உளன்-ஸந் நிஹிதன். என்ற-என்ற. மகனை-புத்ரனை. காய்ந்து-கோபித்து. இங்கு-இவ்விடத்தில். இல்லை-இல்லை. என்று-என்று. தூண்-தானறுகிப்பிட்டதூணை. இரணியன் - ஹிரண்ய ன். புடைப்ப-தட்ட. அங்கு-அத்தூணிலே. அப்பொழுதே - அக்காலந்தன்னிலே. அ வன்-ஹிரண்யன். வீய-நசிக்கும்படி. தோன்றிய-தோற்றின. என் - என்னுடைய. சிங்கம்-நரஸிம்ஹரூபியான. பிரான்-மஹோபகாரகனுடைய. பெருமை - ஆஸ்ரிதப க்ஷபாதமாஹாத்ம்யம். ஆராயும் - வெருந்தால் பரிச்சேதித்தாராயும். சீர்மைத்தே- தன்மைத்தோ... ... ... *

௯ டு : ஒன்பதாம் பாட்டு.

நீர்சொன்ன தருபபங்கமாயிருந்ததீ !, "ஒருவஸ்துவே யநேகபதார்த்தங்களிலே குறைவற வ்யாபித்திருக்கும்" என்றுவிதுகூடுமோவென்ன; கெடுவீர்காள், அவன் ஸர்வகதத்வத்தை யிசையாதவிரணியன்பட்டது படாதேயிடிகோளென்கிறார்.

(எங்குமுளன்கண்ணன்) இதுவாயிற்றவன்சொன்னதப்பு, ஸர்வேஶ்வரன் ஸர்வகதனென்றான். "மயா ததமிதம் ஸர்வம்" (மயாததமிதம்ஸர்வம்) "ந ததஸ்தி விநா யத் ஸ்யாந் மயா" (நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயா) என்று அவன்தான் சொன்னவார்த்தையாயிற்றிவன் தான்சொல்லிற்று. (என்றமகனைக்காய்ந்து) இவ்வர்த்தத்தை சத்ருவேசொல்லிலும் கேட்டபோதே காலிலேவிழவேண்டும் வார்த்தைசொல்லிற்று, ப்ரமாணவிருத்தமான அர்த்தத்தைச் சொல்லிலும் கொண்டாடவேண்டும்படியாயிற்று ஸம்பந்தம், பருவத்தாலுங்கொண்டாடவேணும்; [பள்ளியிலோதிவந்த] பள்ளியோதும் பருவத்திலுள்ளவையடையக் கொண்டாட்டமாயிருக்கும். அதுக்குமேலே [தன்சிறுவன்] தன்வயிற்றிற்பிறந்தவன்வார்த்தை மிகவும் ப்ரியமாயிருக்கும். [வாயிலோராயிரநாமம்] அதுக்குமேலே திருநாமத்தைச்சொல்லிற்று. [ஒள்ளியவாகிப்போத] இவையொன்றுமில்லையாகிலும் சொன்னபோதை யினிமைதான்கொண்டாடவேணும். [ஆங்கவனுக்கொன்றுமோர்பொறுப்பிலனாகி] அஸஹ்யாபசாரமிறே. [பிள்ளையைச்சீறி] திருநாமஞ்சொன்னதுவே ஹேதுவாக "புத்ரனன்று" என்றுவிட்டானவன்; திருநாமஞ்சொன்னவர்களோடே தமக்கெல்லாவுறவுமுண்டாக நினைந்திருக்கையாலே யிவர் [பிள்ளை] என்கிறார். (மகனைக்காய்ந்து) வயிற்றிலேபிறந்தவனாயிருக்கச்செய்தேயும் திருநாமஞ்சொல்லப் பொறுக்கமாட்டாமே சீறினானாயிற்று. (இங்கில்லையால்) எங்குமுளனாகில் நீசொல்லுகிறவனிங்கில்லையாயிரானோ என்று தூணையடித்துக்காட்டினான். [அளந்திட்டதூணையவன்தட்ட] "முன்பேநரஸிம்ஹத்தைவைத்துநட்டதூண்" என்னவொண்ணாதே; தானே தனக்குப்பொருந்தப்பார்த்து நறுக்கிநட்டதூணாகையாலே. [அவன்தட்ட] வேறேசிலர் தட்டினார்களாகில், "கையிலேயடக்கிகொண்டுவந்து தூணிலேபாய்ச்சினார்கள்" என்னவுமாமிறே; தானேயாயிற்று தட்டினானும். (அங்கப்பொழுதே) அந்தூணிலே, அடித்தவிடத்திலே, அவனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே. (அவன்வீயத்தோன்றிய) தன்தோற்றரவிலே அவன்பிணமாம்படி தோற்றின, அதிர்த்துக்கொண்டு புறப்பட்டபோதை அட்டஹாஸமும், நாமடிக்கொண்டவுதடும், நெற்றியதுகண்ணும், உச்சியதுபுருவமுமாய்க்கொண்டு தோற்றினபோது பொசுக்கின பன்றிப்பாலே யுருகினானாயிற்று பொன்னனாகையாலே. (என்சிங்கப்பிரான்பெருமை)

ஆஸ்ரிதவர்க்கத்துக்காக நரஸிம்ஹமாயுபகரித்தவனுடைய பரத்வம், இன்று சிலராலாராயும்படியிருந்ததோ... ... ...*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (எங்குமுளனித்யாதி) வ்யாப்தியைச்சொன்னவனந்தரம், ஹிரண்யநிரஸநம்பண்ணின நரஸிம்ஹன் வைபவமபரிச்சிந்நம்" என்றுசொல்லுகிறவருடைய பாவத்தை ஸங்காபரிஹாரமுகேந தர்ஸிப்பிக்கிறார் (நீர்சொன்னதித்யாதி)

" தப்பு " என்றத்தைவிஸதீகரிக்கிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி) கண்ணன்-நிர்வாஹகன். ஸர்வகதனென்றுனென்றவிடத்திலே - " [illegible] " (ஊர்வ்யாமஸ்த்யுதகேஷுசாஸ்த்யுபேதாவஸ்த்யஸ்திசோஷ்ணத்யுதௌ வஹ்நௌதிக்ஷுவிதிக்ஷுவாயுநபஸோஸ்திர்யக்ஷ்வதிர்யக்ஷுச। அஸ்த்யந்தர்ப்பஹிரஸ்தி ஸத்யஸதிவாஸாரேஷ்வஸாரேஷுவாஸர்வத்ராஸ்தி ஸதாஸ்திகிம்பஹுநா கிராத் வய்யஸ்திமய்யஸ்திச) இதிப்ரஹ்லாதோக்தஸ்லோகோநுஸந்தேயஃ. "இதுவாய்த்தவன்சொன்னதப்பு" என்று வ்யங்க்யமாகச்சொல்லாநின்றது; அந்தப்பென்றேவென்ன; ஈஸ்வரன் தானுதரித்துச்சொன்ன ஸர்வகதத்வத்தை யிவன்சொன்னது தப்போவென்கிறார் (மயாததமித்யாதி) கீதாஸ்லோகமே, " [illegible] " (மயாததமிதம்ஸர்வம்ஜகதவ்யக்தமூர்த்திநா। மத்ஸ்தாநிஸர்வபூதாநிநசாஹம்தேஷ்வவஸ்திதஃ) தத்ரைவதஸமே, " [illegible] " (யச்சாபிஸர்வபூதாநாம் பீஜம்ததஹமர்ஜுந। நததஸ்திவிநாயத்ஸ்யாந்மயாபூதம்சராசரம்.")

"என்ற" என்றதுக்குபாவம் (இவ்வர்த்தத்தையித்யாதி) "மகன்" என்றதுக்குபாவம் (ப்ரமாணேத்யாதி) "மகன்" என்றது-பருவத்துக்குமுபலக்ஷணமாக்கிபாவம் (பருவத்தாலுமித்யாதி) வார்த்தையின்சீர்மையும், ஸம்பந்தமும்,பருவமுமொன்றொன்றே கொண்டாடவேண்டியிருக்க, இவன்சிக்ஷக்காரணமாகச்சிறுனென்றதாயிற்று. பருவத்தாற்கொண்டாடவேண்டும்படி அப்படி சிறுபிள்ளையாயிருக்குமோவென்ன(பள்ளியிலோதியித்யாதி)பெரியதிருமொழி. இப்பாட்டுக்கர்த்தம் (பள்ளியிலோதும் பருவத்திலித்யாதி)அந்யபுத்ரதவேபீதிபாவஃ. பள்ளி-வித்யாசாலை. ஒள்ளியவாகிப்போத-அழகியதாகச்சொல்ல - இத்தனையுமுண்டாறல் பொருமைக் கடியென்னென்ன (அஸஹ்யாபசாரமித்யாதி) இதம்-வித்தவ்யாக்யாத்ருவாக்யம். அந்யோத்கர்ஷமஸஹ்யமாகிற அபசாரமென்றபடி. ஸர்வேஸ்வரனைக்காணவில்லை, கேட்கவில்லை, தனக்குத்தானொரு அநிஷ்டம்செய்யவில்லையாயிருக்கச்செய்தே,பக

வத்ப்ரஸ்தாவமாணுலு மஸஹமாநனாயிருக்கையாலே யஸஹ்யாபசாரமென்றுகருத்து. ப்ரஹ்லாதனையென்றே, "பிள்ளை" என்றதுக்குக்கருத்தென்னென்ன (திருநாமமித்யாதி) "சிறி" என்கையாலே (அன்றென்றுவிட்டானென்றது) பிள்ளையென்றது - "மாதாபிதா" இத்யாதிப்படியே ஸர்வவிதபந்துத்வத்துக்குமுபலக்ஷணம். இவர்-திருமங்கையாழ்வார். "மகனைக்காய்ந்து" என்றதுக்கு ஸப்தார்த்தம் (வயிற்றிலேயித்யாதி)

அப்படி தூணைநரட்டினுனேவென்ன (அளந்திட்டவித்யாதி) பெரியாழ்வார்திருமொழி. இதுக்கர்த்தம் (முன்பேயித்யாதி) பொருந்த-பொருத்தம் பொருந்தும்படியாக. பாய்ச்சினார்கள்-ப்ரவேசிப்பித்தார்கள்.

"வீய" என்றதுக்கு-விநாஸஸ்யாவதாரஸமாநகாலீநத்வம் விவக்ஷிதமித்யபிப்ராயேணாஹ (தன்தோற்றரவிலேயித்யாதி) பூர்வவாக்யோக்தமர்த்தமுபபாதயதி (அதிர்த்துக்கொண்டித்யாதி) அதிர்த்துக்கொண்டு-சப்தித்துக்கொண்டு. (பொன்னுகையாலேயிதி) ரஸோக்தி.

"என்" என்றதுக்குபாவம் (ஆஸ்ரிதவர்க்கேத்யாதி) ஆராயும்சீர்மைத்தே-ஆராயும்படியான ஸ்வபாவத்தையுடைத்தோ. சீர்மை-அதிசயமாதல்... ... ...*

பத்தாம்பாட்டு.

சீர்மைகொள்வீடுசுவர்க்கநரகீறு
ஈர்மைகொடேவர்நடுவாமற்றெப்பொருட்கும்
வேர்முதலாய்வித்தாய்ப்பரந்துதனிநின்ற
கார்முகில்போல்வண்ணனென்கண்ணனைநான்கண்டேனே.

ஆறாயிரப்படி.

(சீர்மை) ஸ்வர்க்காபவர்க்காத்யசேஷபுருஷார்த்தங்களுக்கும், நரகாத்யபுருஷார்த்தங்களுக்கும், இவற்றுக்கு போக்தாக்களான தேவாதிஸ்த்தாவராந்தமான சகலாத்மவர்க்கத்துக்கும் தாரகனாய், காரணபூதனாய், நியந்தாவாய், ஸ்வேதரஸமஸ்தவிஸஜாதீய ப்ராக்ருதமஹாவிபூதியையுடையனாய்நின்ற எம்பெருமானை நான்காணப்பெற்றேனென்றுகொண்டு ஸ்வலாபத்தைப்பேசிமுடிக்கிறார். ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்படி ஸர்வப்ரகாரோபகாரகனாய் மோக்ஷப்ரதனானவனை நானநுபவிக்கப்பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார்.

சீர்மைகொள் - புண்யபாபகாரிதமாகையன்றிக்கே பகவத்க்ருபைகஸாத்யமான சீர்மையையுடைய. வீடு-மோக்ஷமும். சுவர்க்கநரகு-புண்யபாப பலரூபமா

ள ஸ்வர்க்கநரகங்களும். ஈறு-மேலெல்லையாக. ஈர்மைகொள்-பலப்ரதத்வநிபந்தநமான வீரப்பாட்டையுடைய. தேவர்-தேவர்கள். நடுவா - சாதநபலங்களுக்குநடுவாகவும். மற்று-ப்ரதமபாவியான. எப்பொருட்கும் - சாதநாதிசமஸ்தபதார்த்தங்களுக்கும். வேர்-ஸஹகாரியுமாய். முதலாய்-நிமித்தமுமாய். வித்தாய்-உபாதாநமுமாய்க்கொண்டு. பரந்து-ஸர்வத்ரவ்யாப்தனாய்வைத்து. தனி-வ்யாப்யபதார்த்தங்களில் வ்யாவ்ருத்தனாய். நின்ற-நிற்பானாய். கார் - கார்காலத்திலே. முகில்போல்-மேகம்போன்ற. வண்ணன்-வடிவையுடையனாய்க்கொண்டு. என் - எனக்குஸுலபனான. கண்ணனை-க்ருஷ்ணனை. நான் - நான். கண்டேனே - அநுபவிக்கப்பெற்றேனென்றுகொண்டு ஸ்வலாபத்துக்கு ஹ்ருஷ்டராகிறார்.

ஈர்மைகொள்தேவொன்று-உபயபாவநாநிஷ்டனொன்றுமாம்... ... .*

---

௧௦ - பத்தாம்பாட்டு.

"இவர்களைவிடீர், நாம் முந்துறமுன்னமிவர்களைப்போலேயாகாதே யவனை யநுபவிக்கப்பெற்றோமிறே" என்று ஸ்வலாபாநுஸந்தாநத்தாலே ஹ்ருஷ்டராகிறார்.

(சீர்மைகொளித்யாதி) ஸர்வப்ரகாரத்தாலும் நன்றானபரமபதம், பரிமிதஸுகமானஸ்வர்க்கம், நிக்ருஷ்டதுஃகமேயானநரகம், இவைமுடிவாக, ஈரப்பாடுடையரானதேவர்கள் நடுவாக, மற்றுமுண்டானதிர்யகாதிகளுக்கும் (வேர்முதலாய்வித்தாய்) த்ரிவிதகாரணமுந்தானேயாய். (பரந்து) [தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் ததநுப்ரவிஸ்ய ஸச்சத்யச்சாபவத்] [தத்ஸ்ருஷ்ட்வாததேவாநுபராவிஸந்ததநுப்ரவிஸ்யஸச்சத்யச்சாபவத்] என்கிறபடியே-முந்துறஇவற்றையடையவுண்டாக்கி, பின்னையிவற்றினுடைய வஸ்துத்வநாமபாக்த்வங்களுக்காக அநுப்ரவேசித்து, இப்படி ஜகதாகாரனாய்நின்று, (தனிநின்றவித்யாதி) இப்படி ஜகச்சரீரனாய்நின்றவளவேயன்றிக்கே, தன்னுடைய வ்யாவ்ருத்திதோற்றும்படி ஸ்ரீவைகுண்டத்திலே வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற அழகியதிருமேனியையுடையனாயிருந்துவைத்து க்ருஷ்ணனாய்வந்தவதரித்து எனக்குக் கையாளானவனை நான்முந்துற முன்னம்கண்டநுபவிக்கப்பெற்றேனென்கிறார்..*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (சீர்மைகொளித்யாதி) ஸம்ஸாரிகளுக்குமுபதேசித்தவிடத்திலவர்கள் திருந்தாமையாலே (இவர்களைவிடவொன்கிறார்) "கண்ணனை நான்கண்டேனே" என்றத்தைப்பற்ற (நாம்முந்துறமுன்னமித்யாதி)

"சீர்மை" என்று - அதிசயமாய், இன்னத்தாலென்று விசேஷியாமையாலே (ஸர்வப்ரகாரத்தாலும் நன்றானவென்கிறது) ஈர்மை - (ஈரப்பாடு) பலப்ரதத்வநிபந்தநமான மாஹாத்ம்யம். "ஈறு, நடுவா" என்று - பலங்களையும், பலப்ரதாதாக்களையும், முடிவும், நடுவுமாகச்சொல்லுகையாலே - "மற்றெப்பொருட்கு

ம்" என்றகர்மகர்த்தாக்கள் ப்ரதமாவதியென்றபடி. மநுஷ்யாதிகள் ப்ரதமம், கர்மத்தையநுஷ்டிக்க, அநந்தரம் தேவாதிகள்பலப்ரதாநம்பண்ண, அநந்தரம் ததநுபவமாகையாலே-முதல், நடு, ஈறு என்கிறது. வேர்-ஸஹகாரிகாரணம். முதல்-நிமித்தகாரணம். வித்து-உபாதாநகாரணம். பரந்து - வ்யாபித்து. "ததேவாநுப்ராவிஶத்-தத்ஸ்ருஷ்ட்வா" (ததேவாநுப்ராவிஶத்-தத்ஸ்ருஷ்ட்வா) என்றந்வயம்; 'ததநுப்ரவிஶ்யதி-அநுவாதः. ஸச்சத்யச்சாபவத்-சத்தும் அசத்துமான சேதநாசேதநங்களிரண்டும் தானானென்றபடி.

தனிநின்ற-வ்யாவ்ருத்திதோற்றும்படிநின்ற. நித்யவிபூதியில் த்ரிவிதகாரணத்வமாவது - நித்யேச்சாதிவிசிஷ்டவேஷேண நிமித்தத்வம், அப்ராக்ருதசித்சித்விசிஷ்டவேஷேண உபாதாநத்வம், ஜ்ஞாநஶக்த்யாதி விசிஷ்டவேஷேண ஸஹகாரித்வமென்றபடி. லீலாவிபூதியில் ஸங்கல்பவிசிஷ்டவேஷேண நிமித்தத்வம், ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டவேஷேண உபாதாநத்வம், ஜ்ஞாநஶக்த்யாதி விசிஷ்டவேஷேணஸஹகாரிவத்மென்றபடி.

க்ரமேணாந்வயः ... ... *

பதிற்றும்பாட்டு.

கண்டலங்கள்செய்யகருமேனியம்மானை
வண்டலம்புஞ்சோலைவழுதிவளநாடன்
பண்டலையிற்சொன்னதமிழாயிரத்திப்பத்தும்வல்லார்
விண்டலையில்வீற்றிருந்தாள்வரெம்மாவீடே.

ஆறுயிரப்படி.

(கண்டலங்கள்) இத்திருவாய்மொழியை வல்லாரிட்டவழக்காம் திருநாடென்கிறார்... ... ... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக ஸ்வாராஜ்யநிர்வாஹகத்வத்தை யருளிச்செய்கிறார்.

கண்-கண்ணில். தலங்கள்-பரப்பெங்கும். செய்ய-சிவந்து. கரு-அதுக்குப ரபாகமாய் ஶ்யாமளமான. மேனி-திருமேனியையுடைய. அம்மானை-ஸர்வஸ்வாமியை. வண்டு-வண்டுகள். அலம்பும்-மதுவெள்ளத்திலேயலைகிற. சோலை-சோலைகளையுடைய. வழுதிவளநாடன் - திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வார். பண்டலையில்-பண்டான்தாளமாம்படியதின்மேலே. சொன்ன-அருளிச்செய்த. தமிழாயிரத்து-ஆயிரந்திருவாய்மொழியில். இப்பத்தும்-இப்பத்தும். வல்லார்-வல்லார். விண்டலையில்-பரமாகாசத்தின்மேலே. வீற்றிருந்து-"ஸ்வராட்பவதி" (ஸ்வராட்பவதி) என்கிறபடியே வ்யாவ்ருத்தமாகவிருந்து. எ-ஸர்வப்ரகாரவிசிஷ்டமாய். மா-நிரதிசயபோக்யமான. வீடு-மோக்ஷாநந்தத்தை. ஆள்வர்-ஸ்வாதீநமாக அநுபவிப்பார்கள்.

என்றேடென்னநுபந்திகளோடு வாசியற எங்களுக்குத் தருவதாகவிருக்கிற பெரியவீடென்றுமாம்.

இது-கலிவிருத்தம்... ... ... *

ஈ௫ - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்கள் இத்திருவாய்மொழியிற்சொன்ன முக்தப்ராப்யபோகத்தைப் பெறுவரொன்கிறார்.

(கண்டலங்கள்) "பூதலங்கள்" என்னுமாபோலே திருக்கண்களின் பரப்பைப்பற்றச்சொல்லுகிறது. பரந்து சிவந்திருந்துள்ள திருக்கண்களையும், அவற்றுக்குப் பரபாகமாம்படி கறுத்ததிருமேனியையுமுடைய ஸர்வேஶ்வரனைக்கவிபாடிற்று. (வண்டித்யாதி) வெள்ளத்திலேயலைவாரைப்போலே தேன்வெள்ளத்திலே வண்டுகளலையாநின்றுள்ள சோலையையுடைய திருவழுதிவளநாட்டையுடைய ஆழ்வாரருளிச்செய்தது. தலையானபண்ணிலேசொன்ன தமிழாயிற்று இப்ப்ரபந்தந்தான். அன்றியே, பண்ணின்மேலேசொன்னவென்னுதல். ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இப்பத்தையுமப்யஸிக்கவல்லார்கள் "நாகஸ்ய ப்ருஷ்டே" (நாகஸ்ய: ப்ருஷ்ட்டே) என்கிறபடியே, பரமபதத்திலே தங்கள் வ்யாவ்ருத்திதோற்றவிருந்து, எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷமானது தங்களுக்கு விதேயமாம்படி பெறுவர். (விண்டலை) தலையானவிண்ணிலேயென்னுதல், விண்ணின்மேலேயென்னுதல். அங்குள்ளார் தங்களாஜ்ஞாநுவர்த்தநம்பண்ணும்படியாகப்பெறுவர். ஆத்மலாபத்தளவுமன்றிக்கே, பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷத்தை யாளப்பெறுவர். (வீற்றிருந்து) ஸாம்ஸாரிகமான ஸங்கோசமெல்லாந்தீரும்படி வீறுபட்டிருந்து. (ஆள்வரொம்மாவீடே) "தன்பால்மனம்வைக்கத்திருத்தி வீடுதிருத்துவான்" என்று-எனக்குமென்பரிகரத்துக்கும் தருவானாகச்சமைத்து நிற்கிற பரமபதத்தை யாளப்பெறுவர்.

முதற்பாட்டில்-இத்திருவாய்மொழியில் பரக்கச்சொல்லுகிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்யாநின்றுகொண்டு, "ஸம்ஸாரமாகிற இக்கடலைக்கடக்கவேணும்" என்றிருப்பார்க்குக் கடத்திக்கொடுக்குமென்றார்; இரண்டாம்பாட்டில்-அவன்வேணுமோ, அவனோட்டை ஸம்பந்தமேகடத்துமென்றார்; மூன்றாம்பாட்டில்-அவனுடைய அதிமாநுஷசேஷ்டிதங்கள் ப்ரத்யக்ஷிக்கலாமென்றார்; நாலாம்பாட்டில் - "* அந்தமில்பேரின்பத்தைப்பெறவேணும்" என்றிருப்பார் அவனை யாஶ்ரயியுங்கோளென்றார்; அஞ்சாம்பாட்டில்-கீழ் "இணைவனுமெப்பொருட்கும்" என்றதைவிவரித்தார்; ஆறாம்பாட்டில்-இவ்வுத்கர்ஷமெல்லா மவனுக்குண்டோவென்ன, நாமாராயவேண்டாதபடி அர்ஜுநன் பண்டேதெரிந்

தறுதியிட்டானென்றார்; ஏழாம்பாட்டில் - ஒருவனருவர்த்தங்கொண்டறியவேணுமோ, அவனுக்கிஷ்டஸர்வசேஷ்டாவிஷயமாயன்றோ ஜகத்திருக்கிறதென்றார்; எட்டாம்பாட்டில்-வ்யாப்திதொடக்கமான அவனுடைய அபதாநங்களொருவரால் பரிச்சேதிக்கமுடியாதென்றார்; ஒன்பதாம் பாட்டில-அவனுடையவ்யாப்தியை யிசையாதார் ஹிரண்யன்பட்டதுபடுவரென்றார்; பத்தாம்பாட்டில்-ஏவம்பூதனானவனை நான்கண்டநுபவிக்கப்பெற்றேனென்றார்; நிகமத்தில்-இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித்தலைக்கட்டினார்... ... ... *

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (கண்டலங்களித்யாதி) "விண்டலையில்வீற்றிருந்தாள்வரெம்மாவீடு" என்றதைக்கடாக்ஷித்தவதாரிகை (நிகமத்திலித்யாதி)

"கண்" என்றாற்போராதோ "கண்டலம்" என்றதெதுக்காகவென்ன; பூதலவ்யபதேசவைக்லிஸ்தாரத்தைப்பற்றவென்கிறார் (பூதலங்களித்யாதி) பரங்களித்யாதியாலே-ப்ராதிபாத்யவைலக்ஷண்யமும், வெள்ளத்திலேயித்யாதியாலே- வக்த்ருவைலக்ஷண்யமும், தலையான பண்ணிலேசொன்ன தமிழித்யாதியாலே-ப்ரபந்தவைலக்ஷண்யமு மருளிச்செய்கிறாரென்று கண்டுகொள்வது.

அலம்புகை-அலைகை.

தலையானபண்ணிலே-ப்ரலாக்யமானபண்ணிலே. த்விதீயார்த்தத்துக்கு. "தலை" என்று-மேலாய், பண்ணிலேயென்றபடி. இப்பத்தும் வல்லார்-இப்பத்தையப்யஸிக்கவல்லார்.

"ஆள்வர், எம்மாவீடாள்வர், வீற்றிருந்தாள்வர்," இதிபதாநிக்ரமேணபராம்ருஶ்ய ப்ரதிபதம்பாவமாஹ (அங்குள்ளாரித்யாதிவாக்யத்ரயேண) "எம்மாவீடு" என்றதுக்கு - "எவ்வகையாலும் விலக்ஷணமானமோக்ஷம்" என்றதுதவிர, அர்த்தாந்தரம் (தன்பாலித்யாதி) இந்தப்பக்ஷத்திலே, எம்மனா-எங்களுக்கென்றாய், எனக்குமென் பரிகரத்துக்குமென்றபடி.

எட்டாம்பாட்டர்த்தத்தின் நிகமநத்திலே (வ்யாப்திதொடக்கமான அவனுடைய அபதாநங்களொருவரால் பரிச்சேதிக்கமுடியாதென்றார்) என்றிருக்கிறது; எட்டாம்பாட்டினுடைய அவதாரிகையும், "அவனுடையஆத்புதகர்மங்களைத்தனித்தனியும் திரளவும் பரிச்சேதிக்கப்போகாதெத்தனையேனு மளவுடையார்க்குமென்கிறார்" என்றிருக்கிறது; அந்தப்பாட்டினுத்தரார்த்தாவதாரிகையோவென்றால், "அவனுடையசெயல் பரிச்சேதிக்கவொண்ணாதென்கைக்கு ஸ்வரூபமோதான் பரிச்சேதிக்கலாயிருக்கிறதென்கிறார்" என்றிருக்கிறது; தஸ்மாத், ஜகந்நிகரணத்விபுத்வாச்சபரிச்சேத்ரு மஶக்யனென்கிற இவ்வளவுமாத்ரத்திலே பாட்டுக்குத்தாத்பர்யமென்கிறதன்று; அகிலஜகந்நியமநாவதரணஸம்ரிதபராதிநத்வாதிலே ஜகந்நிகரணகில ஜகத்வ்யாபநதத்ப்ரயுக்தவ்யாபாரங்களிலேயும் தாதபர்யமென்று கண்டுகொள்வது.

க்ரமேணாந்வயஃ. ... ...*

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளீ.

(அணைவதரவணைமேல்)

ப்ராப்யாகாரோபபத்த்யா ஜநிபரிஹரணாத் விஶ்வஸ்ருஷ்ட்யாதிஶ
க்தே: நிஸ்ஸீமாநந்ததேஶாந்வயத இஹ ரக்ஷார்த்ததாவதாராத்। ஸ்வாப்ர
க்யாதாநுபாவாத் விவிதவிஹரணாத் வ்யாப்திவைசித்ர்யவத்த்வாத் பக்தைர்த்ராக்த்ருஶ்
யபாவாதகிலபலக்ருதேஸ் ஸம்ஸ்ருதிச்சேதக:. (உ0)

(ப்ராப்யாகாரோபபத்த்யா) அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் - திருவநந்தாழ்வான்மேலே பெரியபிராட்டியாரோடேகூட எழுந்தருளியிருக்கையாலும்; (ஜநிபரிஹரணாத்) பிறவியித்யாதி - கடக்கவரிதான ஸம்ஸாரத்தையுண்டாக்கும் ஜந்மந்தொடக்கமாக மற்றுமுண்டான அபக்ஷயவிநாஶாதிகளையும் கடத்துகையாலும்; (விஶ்வஸ்ருஷ்ட்யாதிஶக்தே:) புணர்க்குமயனுமழிக்குமரனும் - ப்ரஹ்மருத்ரர்களுக்கந்தராத்மாவாய் நின்று ஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப்பண்ணுகையாலும்; (நிஸ்ஸீமாநந்ததேஶாந்வயத:) நலமந்தமில்லதோர்நாடு - நிரவதிகாநந்தத்தையுடைத்தான பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கையாலும்; (ரக்ஷார்த்ததாவதாராத்) மாவாகியாமையாய் மீனாகிமானிடமாம் - லோகரக்ஷணார்த்தமாக ஹயக்ரீவ கூர்ம மத்ஸ்ய ராமக்ருஷ்ணதிருபேண அவதரிக்கையாலும்; (ஸ்வாப்ரக்யாதாநுபாவாத்) தீர்த்தனுலகளந்தவித்யாதி - அர்ஜுநன் தன் திருவடிகளிலேயிட்ட திருமாலையைச் சிவனுடைய சிரஸ்ஸிலேகண்டு, " இவனேஸர்வாதிகன் " என்று தெளிந்தறுதியிடும்படியான ப்ரபாவத்தையுடைத்தாகையாலும்; (விவிதவிஹரணாத்) கிடந்திருந்துநின்றளந்து கேழலாய்க்கீழ்புக்கிடந்திடும் - திருப்பாற்கடலிலேகிடந்தும் பரமபதத்திலிருந்தும் திருமலையிலேநின்றும், அதவா, "ஶ்ருதிஶிரஸி விதீப்தே" (பரமபதஸோபாநம்) என்றும், " உடஜராஜிதம் " (உடஜராமமாஸீநம்) என்றும், " ஸவ்யேந ஸவ்யேதரம் " (அவஷ்டப்யசதிஷ்டந்தம்) என்றும் சொல்லுகிறபடியே கடற்கரையிலேசாய்ந்தும் பர்ணசாலையிலேயிருந்தும் வாலிவதாநந்தரம்நின்றும், அதவா, மணற்குன்றிலே ஸ்ரீகோபிமார்மடியிலேசாய்ந்தும் வத்ஸமத்யத்திலேகோபகுமாரர்களோடேயிருந்தும் கோவர்த்தநோத்தரணம்பண்ணிநின்றும், த்ரிவிக்ரமனாய் பூமியையளந்தும், வராஹமாயுத்தரித்தும் இப்படி பஹுவிதவிஹாரங்களைப்பண்ணுகையாலும்; (வ்யாப்திவைசித்ர்யவத்த்வாத்) ஏண்பாலும்சோரான் பரந்துளனுமெங்குமே - ஒருகுறைவின்றிக்கே எட்டுத்திக்கிலும் வ்யாபித்துநிற்கையாலும்; (பக்தைர்த்ராக்த்ருஶ்யபாவாத்) இரணியன்தூண்புடைப்பவங்கப்பொழுதேயவன் வீயத்தோன்றிய-ஆஶ்ரிதர் நினைத்தவிடத்திலே அப்பொழுதே ஆவிர்ப்பவித்துக் காணப்படுமவனாகையாலும்; (அகிலபலக்ருதே:) சீர்மைகொள் வீடுசுவர்க்கமித்யாதி - மோக்ஷஸ்வர்க்காதி ஸகலபுருஷார்த்தங்களுக்கும் காரணமாகையாலும் எம்பெருமானொருவனுமே மோக்ஷஸாதகப்ரதனென்று " அணைவதரவணைமேல் " என்கிறதசகத்திலே ஆழ்வாரருளிச்செய்தாரென்கிறார்... ... ... (உ0)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அணைந்தவர்கடம்முடனேயாயனருட்காளாம்
குணந்தனையேகொண்டுலகைக்கூட்ட - இணங்கிமிக
மாசிலுபதேசம்செய்மாறன்மலரடியே
வீசுபுகழெம்மாவீடு. (கஅ)

(அணைந்தவர்கள்தம்முடனே) இதில்-மோக்ஷப்ரதத்வத்தையுபதேசித்த பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிருர். எங்ஙனேயென்னில்; இப்படி ஈஶ்வரன் ஸபரிகரமாக விஷயீகரித்து விடுகிறமாத்ரமன்றிக்கே முக்தப்ராப்யமான போகத்தைத்தமக்கும் தம்பரிகரத்துக்கும் தருவனுகப்பாரிக்கிறபடியைக்கண்டு, எல்லார்க்கும் தம்மோடேயொரு ஸம்பந்தம் சித்திக்கும்படி ஸம்ஸாரிகளுக் கவனுடைய மோக்ஷ ப்ரதத்வத்தையுபதேசிக்க, அவர்களத்தைக்காற்கடைக்கொள்ள, ஸ்வலாபத்தைப்பேசி த்ருப்தராகிற * அணைவதரவணையிலர்த்தத்தை "அணைந்தவர்கள்தம்முடனே" என்றருளிச்செய்கிருரென்கை.

(அணைந்தவர்கள்தம்முடனே) * அணைவதரவணையிற்படியே ஸ்ரீபூமிநீளாநாயகனுய் அநந்தபோகபர்யங்கத்திலே யெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனைக்கிட்டி யடிமைசெய்கிற அநந்தப்ரமுகரான ஸூரிஸங்கங்களோடேகூட்டவென்னுதல்; அன்றிக்கே, "கேசவன்தமர்" என்னும்படி கீழே அந்தரங்கரானவர்களோடே கூட்டவென்னுதல். தம்முடனேயென்கிறது - ஆழ்வார் தம்முடனேயென்னவுமாம், (தம்முடனே-அணைந்தவர்கள்) "எமர்" என்று தாமபிமாநிக்கும்படியாகத்தம்மோடே யந்வயமுண்டாம்படியானவர்களென்னுதல். (ஆயனருட்காளாம் குணந்தனையேகொண்டு) "எப்பொருட்கும்-இணைவனும்" என்று ஆஶ்ரிதஸுலபனு யவதரித்த க்ருஷ்ணனுடைய க்ருபைக்கு விஷயமாம்படியாக. மேலும் "என்கண்ணனைநான்கண்டேனே" என்ருரிறே. ஏவம்விதனுனவனுடைய மோக்ஷப்ரதத்வமாகிற குணமொன்றையுமேகொண்டென்னுதல். அன்றிக்கே, "குணங்களையே கொண்டு" என்று பாடமானபோது - "வீடுமுதலாம்" என்கிற மோக்ஷப்ரதத்வாதி குணங்களையே யுபாயாந்தரநிரபேக்ஷமாகத் திருத்துகைக்குப் பரிகரமாகக் கொண்டென்னுதல். அவ்வவதாரத்திலேயிறே இடைச்சி, இடையன், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருந்து, வேண்டடிசிலிட்டவர்கட்கெல்லாம் மோக்ஷம்கொடுத்தது. "இணைவனுமெப்பொருட்கும்வீடுமுதலாம்" என்று - அவதாரஸாமாந்யமாய், வேடன், வேடச்சி, பக்ஷி, குரங்கு, சராசரங்களுக்கும் மோக்ஷம் கொடுத்தமை யுண்டாயிருக்கவும், "ஆயனருட்கு" என்றத்தைப்பற்ற - க்ருஷ்ணுவதாரத்திலே யூன்றிச்சொல்லிற்று. "மஹுமொகாநநதகோநு" (கச்சலோகாநுத்தமாந்) என்றிறே பெருமாள் பெரிய வுடையாருக்கு ப்ரஸாதித்தது. இப்படி அவதாரத்திலே மோக்ஷப்ரதத்வாதி குணங்களைக்கொண்டுதிருத்தி. (உலகைக் கூட்டவிணங்கிமிக) நித்யஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடேகூட்டமிகவுமிணங்கி-மிகவும்பொருந்தி. அவர்கள்துர்க்கதியை ஸஹிக்கமாட்டாமல் அவர்களோடேயிணக்குப்பார்வைபோலே ஸஜாதீயராயிணங்கி. ஆயனருட்காளாம் குணங்களையேகொ

ண்டுலகை-அணைந்தவர்கள் தம்முடனே-கூட்ட-மிகவிணங்கியென்றந்வயம். (மிக-இணங்கி மாசிலுபதேசம்செய்மாறன்) க்யாதிலாபபூஜாதிதோஷரஹிதமாயிருக்கும் சுத்தோபதேசத்தை மிகவுமடுத்தடுத்துப்பண்ணும் பரிசுத்தஜ்ஞாநரான ஆழ்வார். "இணைவனுமெப்பொருட்கும் வீடுமுதலாம்" என்றும், "பிறவிக்கடல்நீந்துவார்க்கு-புணைவன்" என்றும், "புலனைந்துமேயும்பொறியைந்துநீங்கி நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர் - பலமுந்துசீரில் படிமினோவாதே" என்றுமிறே யுபதேசித்தருளிற்று. (மாசிலுபதேசம்செய்மாறன்மலரடியே) ஏவம்விதோபதேஷ்டாவான ஆழ்வாருடைய புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளே. (வீசுபுகழெம்மாவீடு) "பரமேய்யோமம்" என்று விக்க்யாதமான யஶஸ்ஸையுடைய ஸர்வப்ரகாரவிலக்ஷணமோக்ஷம். ஆழ்வார்க்கு * செம்மாபாதயிறேயெம்மாவீடு, இவர்க்குமாறன் மலரடியாயிற்று; விபூதிஸ்ஸர்வம்-ஸ்ரீமத்ததங்க்ரியுகளமிறே.......... (௧௮)

இரண்டாம்பத்தில் - எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக-திருவாய்மொழி-௧௮—பாட்டு-௨00,

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

ஒன்பதாந்திருவாய்மொழி.

எம்மாவீடு - ப்ரவேஶங்கள்.

ஆறாயிரப்படி.

(எம்மாவீடு) "நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்" என்றப்ராப்யப்ரஸங்கத்தாலே, ஸ்வாபிமதமான புருஷார்த்தத்தை நிஷ்கர்ஷித்து அத்தைப்ரார்த்திக்கிறார்........ ....*

பன்னீராயிரப்படி.

ஒன்பதாம்திருவாய்மொழியில், ஈஶ்வரனுடைய மோக்ஷப்ரதத்வத்தை அநுபவித்தவர், அந்தமோக்ஷப்ரகாரங்களெல்லாவற்றுக்கும் தாத்பர்யபூமியாவது-பகவத்பாரதந்த்ர்யமேயென்று நிஷ்கர்ஷித்து; அவன்திருவடிகளோட்டை ஸம்பந்தமே உத்தேஶ்யமென்னுமிடத்தையும், தத்விஷயஜ்ஞாநத்தி லபேக்ஷையையும், ஜ்ஞாநாநுரூபமான ஸ்துத்யநுபவத்தில் ப்ரார்த்தனையையும், அநுபாவ்யம் ததேகபாரதந்த்ர்ய மென்னுமிடத்தையும், அதினுடைய அவிஸ்மரணம் ஆநந்தஜநகமென்னுமிடத்தையும், அந்தஸ்ம்ருதிகாரிதமான பாஹ்யாநுபவாபேக்ஷையையும், நிரந்தரமான ஆந்தராநுபவமத்ருப்திகரமென்னுமிடத்தையும, அல்பகாலாநுபவத்திலு மதிசயிதாபி நிவேசத்தையும், அநுபாவ்யவிஷயத்தோடுண்டான அப்ருதக்ஸித்திஸம்பந்தத்தையும், அந்தஸம்பந்தத்தைக் குலையாமையிலுண்டான அபேக்ஷையையுமருளிச்செய்து, மோக்ஷப்ரதனான ஈஶ்வரன் ஸந்நிதியிலே மோக்ஷதாத்பர்யத்தை நிஷ்கர்ஷித்தபேக்ஷித் தருளுகிறார்...*

ஈடு.

கீழ்த்திருவாய்மொழியிலே "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்றிவர்தாமு மருளிச்செய்து, ஸர்வேஶ்வரனும் இவர்க்கும் இவர்பரிகரத்துக்கும் மோக்ஷங்கொடுப்பானாகப்பாரிக்க, அத்தைக்கண்டு; தேவரீரெனக்குமோக்ஷம் தந்தருளப்பார்த்ததாகில் இங்ஙனேதரப்பார்ப்பது; அதாகிறது "உனக்குமோக்ஷங்கொள்" என்று எனக்காகத்தருகையன்றிக்கே, "நமக்காகக்கொள்" என்றுதேவர்க்கே யாம்படியாகத் தரவேணுமென்று தாம் நினைத்திருந்தபடியை அவன்திருமுன்பேப்ரார்த்திக்கிறார். ஆனலிது

தான்பின்னை இத்தனைநாள் நிஷ்கர்ஷியாதொழிவா னென்னென்னில்; அவன் மேன்மேலன குணாநுபவத்தைப் பண்ணுவிக்கையாலே அதுக்குக் காலம்போந்த தித்தனையல்லது, இது நிஷ்கர்ஷிக்க அவஸரம்பெற்றிலர். ஆனாலுமிப்போதும் குணாநுபவமேயன்றோ பண்ணுகிறதென்னில்; அதப்படியே; அவன்தம்பக்கலிலே மேன்மேலனபண்ணுகிற விருப்பத்தைக் கண்டு;“இவனுக்கிந்தவ்யாமோஹம் முடிய அநுவர்த்திப்ப தொன்றாயிருந்தது, நாமிவனை மீட்டாகிலும் நம்முடையப்ராப்யத்தை நிஷ்கர்ஷிப்போம்” என்றுபார்த்து, “நீயிங்ஙனேநில்” என்று அவனைநிறுத்திவைத்து ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுகிறார். எம்பாரித்திருவாய்மொழி யருளிச்செய்யப்புக்கால், இருந்தவர்களை “யார்” என்றுகேட்டுக் கதவுகளையுமடைப்பித்து, குஹ்யமாகவா மருளிச்செய்வது. ப்ராப்யமாகி யிப்படியன்றோ இருப்பது, இவர்நிஷ்கர்ஷிக்க வேண்டுகிறதென்னென்னில் ; ஸர்வேஸ்வரனிவ்வாத்மாவுக்கே சேஷியாய் இவனும்சேஷபூதனாய், அவனுடையவுபாயபாவமும் நித்யமாயிருக்கச்செய்தேயன்றோ இவனுக்கின்று ஸ்வீகாரம் வேண்டுகிறது ; அப்படியே, அவன்ஸ்வதந்த்ரனாகையாலே நினைத்தபோது நினைத்தபடிகொள்வா னொருவனாகையாலே, ப்ராப்திஸமயத்தி லநுபவமிருக்கும்படியையும் நிஷ்கர்ஷித்துப் பெறவேணுமிறே. உத்தரார்த்தத்திலு மிவ்வர்த்தத்தைச் சொல்லாநின்றதிறே. த்வயந்தன்னில் நிஷ்கர்ஷிக்க வேண்டுகிறதென்னென்னில்; பூர்வார்த்தத்தாற் சொன்னஸாதநம் ஸர்வபல ப்ரதமாகையாலே, ப்ரயோஜநாந்தரபரராய் சரணம்புகுவார்க்குமவற்றைக்கொடுத்து விடுவானொருவனிறே ஸர்வேஸ்வரன். இதுதன்னி லேறுகிறதென்னென்னில ; “முக்தனாய் நிரதிசயசுகாநுபவத்தைப் பண்ணவுமாம், ஆத்மப்ராப்தியைப் பெறவுமாம், ஆத்மவிநாசமேயாகவுமாம் ,நரகாநுபவம்பண்ணவுமாம், இவற்றிலெனக்கொரு நிர்ப்பந்தமில்லை; உனக்காய்வருமன்று இவையித்தனையும் வரவுமாம், எனக்காய்வருமன்று இவையித்தனையும்வேண்டா; ஆனபின்பு நீ நவருக்குறுப்பாமதுவே யெனக்குவடிவாம்படி பண்ணியருளவேணும்” என்றுஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார். இப்படிப்பட்ட பரிமாற்றந்தான்லோகத்தில் பரிமாறுவதொன்றல்ல ; இவ்வாழ்வார் பக்கலிலேகாணுதல்; ராமாயணபுருஷர்களில் ஸ்ரீபரதாழ்வான், இளையபெருமாள், இவர்கள்பக்கலிலேகாணுதல் செய்யுமித்தனை. கைகேயி “ராஜ்ஞ” என்றசொல் பொறுக்கமாட்டாமே திரளிலேவந்து கூப்பிட்டானிறே[விலலாபஸபாமத்யே] (விலலாபஸபாமத்யே) ஒருதிரளாகவிருந்து என்னுடையசேஷத்வத்தை அபஹரிப்பதே. “தஸ்யபிர்முஷிதேநேவயுக்தமாக்ரந்திதும்ப்ருஸம்” (தஸ்யுபிர்முஷிதேநேவயுக்தமாக்ரந்திதும்ப்ருஸம்) என்னும்படி. இழந்த வஸ்துவுக்குத்தக்கபடியா யிருக்குமிறேகூப்பீடும். “ஜஹௌ ரஷ” (ஜஹௌ ஹரஷ) ஸந்த்யாவந்தநத்துக்குப் பிற்பாடனாசிஷ்ட கர்ஹைப்பண்ணுவா

ளைப்போலே கர்ஹித்தான். [𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂] (புரோஹிதம்) அழகியதாக விக்குடிக்குமுன்னோடி ஹிதம்பார்த்தாய். [𑌸𑌭𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌜𑌗𑌰𑍍𑌹𑍇] (ஸபாமத்யேபுரோஹிதம்ஜகர்ஹே) "𑌨𑌿𑌯𑌮𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌂 𑌰𑌹𑌸𑌿 𑌬𑍋𑌧𑌯𑍇𑌤𑍍" (நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்) என்கிற நிலையும்பார்த்திலன், [𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚𑌾𑌹𑌰𑌂 𑌚 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯] (ராஜ்யஞ்சாஹரஞ்சராமஸ்ய) ஒருவனுக்கிரண்டு வஸ்துசேஷமானல் ஒன்றையொன்று நிர்வஹிக்குமோ ; ஆனல், ராஜ்யந்தானென்னையாண்டாலோ. "𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿" (தர்மம்வக்துமிஹார்ஹஸி) "பெருமாள் காடேறப்போனர்;சக்ரவர்த்திதுஞ்சினர்; நாடு அராஜகமாய்க் கிடக்கவொண்ணுது; நின்றரில் ப்ரதாநர்தலையிலே முடியைவைக்கவேணும்" என்றுபார்த்தாயித்தனைபோக்கி இதுக்குவிஷயபூதனனவென்னைப் பார்த்துவார்த்தைசொல்லிற்றில்லை. "𑌕𑌥𑌂 𑌦𑌶𑌰𑌥𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌪𑌹𑌾𑌰𑌕𑌃" (கதம்தஸரதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரக:) அவர் பொகட்டுப்போன ராஜ்யத்தை அபஹரித்து, அவரைப்பிரிந்த வநந்தரத்திலே முடிந்தவன்வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனேநான். இளையபெருமாள், "நில்" என்ன, [𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵] (குருஷ்வ) என்றரிறே - அந்வயத்தாலே தரிக்கக்கடவவஸ்துவை வ்யதிரேகித்து நிற்கச்சொல்லுகையாவது அழிக்கையிறே. குருஎன்றதே, [𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵] (குருஷ்வ) என்றரிறே - ஆருடையப்ரயோஜநத்துக் கார்தானிருக்கிறர்; உம்முடைய இழவுக்குநீர்பதறுநிருக்கிறதென். [𑌅𑌨𑍁𑌚𑌰𑌂] (அநுசரம்) பண்ணும்ப்ரகாரத்தை விதிக்கிறர். நீர்தாம் "நில்" என்றருளிச்செய்தது, நான், நிற்கச்சொல்லுகைக்கு யோக்யனும்படி யிருக்கையிறே; உம்முடையசாயையை "நில்" என்றுசொல்லிற்றிலீரோ, சாயையோபாதி உம்மைப்பின் செல்வேனுகவேணும். "நீரும்நிழலும் வாய்த்திருப்பதொரு ப்ரதேசத்தைப்பார்த்துப் பர்ணசாலையைச்சமையும்"என்ன; "நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தைவைத்தபோதே பெருமாள்நம்மைக்கைவிட்டார்" என்றுவேறுபட்டார் [𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌰𑌾𑌮𑍇𑌣] (ஏவமுக்தஸ்துராமேண) "'இதுக்குமுன்பெல்லாம் நம்குறையாலேயிழந்தோம்' என்றிருந்தோம் ; இவர்தாமே நம்ஸ்வரூபமழியக்காரியம்பார்த்தார், இனி,'நம்ஸ்வரூபம்' என்றென்றுண்டோ" என்றுவேறுபட்டார். [𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃] (லக்ஷ்மண:) பாரதந்த்ர்யத்தை நிரூபகமாகவுடையவர். [𑌸𑌂𑌯𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃] (ஸம்யதாஞ்சலி:) நாம்நம் ஸ்வரூபத்தையழித்துக்கொண்டவன்று நோக்குகையன்றிக்கே, சேஷிதானேயழித்தவன்றும் ஸ்வரூபத்தைத் தரவற்றயிற்றஞ்சலி. ஸர்வாபிமத சாதநமாயிற்று. [𑌸𑍀𑌤𑌾𑌸𑌮𑌕𑍍𑌷𑌂] (ஸீதாஸமக்ஷம்) பண்ணினஅஞ்சலிக்கு அந்யபரதைபாவிக்க வொண்ணுதவள் ஸந்நிதியிலே [𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌂] (காகுத்ஸ்த்தம்) பிராட்டிஸந்நிதியும் மிகையாம்படியான குடியிற்பிறப்பையுடையவரை. [𑌇𑌦𑌂 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍] (இதம்வசநமப்ரவீத்) "'இவ்வார்த்தையைச் சொல்லுவானே" என்றுகொண்டாடு

கிறார் ருஷி. [பரவாநஸ்மி] (பரவாநஸ்மி) உம்முடைய அஸ்மிதை போலல்லகாணும் என்னுடைய அஸ்மிதை. இப்படிக்கொத்த பாரதந்த்ர்யத்தை யாயிற்றிவராசைப் படுகிறது. “ இதுதானொருவரபேக்ஷிக்கு மதுவுமல்ல, அபேக்ஷிப்பாரில்லாமையாலே நாம்கொடுத்துப்போரு மதுவுமல்ல; அவ்வழி புல்லெழுந்துபோயிற்றுக்காணும் ” என்று அவனநாதரித்திருக்க; புருஷனர்த்திக்க வருமதிறே - புருஷார்த்தமாவது; “ இப்பேறித்தனையும் நான்பெற்றேனாகவேணும் ” என்று இவரபேக்ஷிக்க, அவனும் தலைதுலுக்கப்பெற்றாராய்த் தலைக்கட்டுகிறார்.........................*

ஜீயர் அரும்பதம்.

எம்மாவீடு ப்ரவேஶ, கீழே - அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ ” என்று (இவர்தாமும்) அபேக்ஷித்து (கீழ்த்திருவாய்மொழியிலே நலமந்தமில்லதோர்நாடுபுகுவீரென்று) பிறர்க்கும் (அருளிச்செய்து) அந்தாலே “ இவர்க்குமோக்ஷத்திலே யபேக்ஷையாயிருந்தது ” என்று பார்த்து என்றுசிலகூட்டி (ஸர்வேஶ்வரனும்) என்று தொடங்கி வுபந்யஸித்தருளுவர். “ எம்மாவீட்டுத்திறமும்செப்பம் ” என்று - மோக்ஷப்ரதிஷேதாத் “ ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத: ” (ப்ரஸக்தஸ்யஹிப்ரதிஷேத:) இதிந்யாயேந ப்ரஸங்கம்ஸம்பாதயந் ஸங்க்ரஹஸங்கதிமாஹ (கீழ்த்திருவாய்மொழியிலே யித்யாரப்ய, திருமுன்பே ப்ரார்த்திக்கிறாரித்யந்தேந) மோக்ஷம்கொடுப்பானாகப் பாரிக்கவென்றது - “ செப்பம் ” என்று நிஷேதிக்கையாலே - பாரித்தமையுமர்த்தஸித்தமென்று விவக்ஷித்து. (இவர்க்கு மிவர்பரிகரத்துக்கும்) என்றிங்கேயருளிச்செய்கையாலே - “ எம்மாவீடு ” என்றவிடத்திலே, “ எம் ” என்று, அதுக்கு-வ்யாக்யாநத்தில் வக்ஷ்யமாணார்த்தம்தவிர, இதுவுமோரர்த்தமென்று கண்டுகொள்வது. அதாகிறதித்யாதிக்கு- “ தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே ” இத்யத்ர ஹ்ருதயம். தாம் நினைத்திருந்தது - “ தொழுதெழு ” என்கிறவிடத்திலே. திருமுன்பே ப்ரார்த்திக்கிறாரென்றது - “ அம்மாவடியேன் வேண்டுவதீதே ” என்றத்தைப்பற்ற.

இத்ஸங்க்ரஹேண ஸங்கதியருளிச்செய்து, உக்தத்தை விஸ்தரிக்கிறார் (ஆனாலிதுதானித்யாதி) யத்வா, ஸங்கத்யந்தரமாதல். அதாவது-ஸர்வேஶ்வரனிவர்பக்கல் வ்யாமோஹத்தாலே யிவர்க்குமிவர் பரிகரத்துக்கும் மோக்ஷம்கொடுக்கப்பாரிக்க, “நீதரப்பார்த்தாலிங்ஙனேதரவேணும்” என்றுப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாரென்று முந்தினஸங்கதி; ஸர்வேஶ்வரன் தன்வ்யாமோஹத்தாலே மேன்மேலனாகுணாநுபவம்பண்ணுவியாநிற்க, “ நீயிங்ஙனே நில் ” என்று அவனை நிறுத்தித்தாமே ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுகிறாரென்று த்விதீயஸங்கதி. இந்தத்விதீயஸங்கதியை விவக்ஷித்து, அதிலேயாக்ஷேபஸமாதாநங்களைப்பண்ணுகிறார் (ஆனாலிதுதானித்யாதி) அவன் மோக்ஷம்கொடுக்கவர, நிஷ்கர்ஷிக்கிறார் என்று முந்தினஸங்கதி; தாமே நிஷ்கர்ஷிக்கிறாரென் றிரண்டாம்ஸங்கதி. இந்தவாக்யம் ஸங்கத்யந்தரமென்று கொள்ளாதபோது, “ அவன் மோக்ஷம்தரப்பார்க்கத் தாம்ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து ப்ரார்த்திக்கிறார் ” என்றதின்மேலே (ஆனால்) இத்யாதிஶங்காவாக்யத்துக்குதயமில்லையிறே. ஏகஸங்கதியான பக்ஷத்திலே யருளிச்செய்யு

ம்படி - (அவனைநிறுத்தி) அதாவது-குணாநுபவத்தை ஸாதிப்பித்து ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணவொருப்பட்டவளவிலே யவனும் பரீக்ஷையாகிற அவகாசம்பெற்று,தாம் நினைத்திருந்த ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாரென்று கண்டுகொள்வது. ப்ரதமஸங்கதிக்குநோக்கு-முதற்பாட்டிலே. த்விதீயஸங்கதிக்குநோக்கு-" எனக்கேயாட்செய் " என்கிறபாட்டிலே. ஆனால்-முன்பு மிப்படிப்பட்டவிசாரமுண்டானால். * எம்மாவீடுபர்யந்தம் நிஷ்கர்ஷியாமைக்கடியேதென்று சங்கைக்கர்த்தம். இப்போதும்-இத்திருவாய்மொழியிலும். இதாநீமபீதிவா. (குணாநுபவமேயன்றோபண்ணுகிறதென்னிலித்தி) " ஈஶ்வரனிப்போது ஸ்வகுணங்களை யநுபவிப்பிக்கவில்லை, அத்தாலே யிவருமவன்குணங்களை யநுபவிக்கவில்லை " என்னில், கீழ்த்திருவாய்மொழிகளோடே விரோதிக்குமென்றுகருத்து. (நீயிங்ஙனே நில்லென்றவனை நிறுத்திவைத்து) தன் குணங்களை யநுபவிப்பிக்கிற ஈஶ்வரனை நிஷேதித்து,தாமும்பகவத்குணாநுபவத்தினின்றும் நிவ்ருத்தராயென்றபடி. நில் என்று அவனைநிறுத்தியென்றது - " தனக்கேயாக " என்று முகம்மாறவைத்ததைப்பற்ற.

இது குஹ்யதமமென்கைக்குஸம்வாதம் (எம்பாரித்யாதி)

ப்ராப்யமாகில் இத்யாதிக்குத்தாத்பர்யம்-நமஃபதோக்தாத்யந்த பாரதந்த்ர்யாநுகுணமாக சந்தநகுஸுமாதிகளைப்போலே யவனே தன்பேறாக விநியோகம்கொள்வதாயன்றோ விருப்பது, இப்போதிவர் நிஷ்கர்ஷிக்கவேண்டின அம்ஶமேதென்று. சேஷியாய்-நிருபாதிகசேஷியாய். சேஷபூதனாய் - ஸஹஜதாஸபூதனாய். உபாயபாவமும் நித்யமாயென்றது -" உபாயோபெயபாவெ தத்வஹிதவதத ஜநாத்மனா " (உபாயோபேயத்வேததிஹதவதத்வந்நதுகுணௌ) என்றத்தைப்பற்ற. (ஸ்வீகாரம்வேண்டுகிறது) ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தமாகஸ்வீகாரம் வேண்டுகிறதென்றபடி. நினைத்தபடிகொள்வானென்றது - ஐஶ்வர்யாதிகளையாதல், ஸ்வார்த்தகைங்கர்யத்தையாதல் கொடுத்துவிநியோகம் கொள்வானொருவனுகையாலே யென்றபடி "ஏற்கவே நிஷ்கர்ஷித்துப்பெறவேணும்" என்றால், மேலே (முக்தனாய்) இத்யாதியிற்சொல்லுகிறத்தோடு விரோதியாதோவென்று கேட்க, "அவைகளெல்லாம்-அதிசயோக்தி, ப்ராப்யத்திலேநோக்கு " என்றருளிச்செய்வர்.

ப்ராப்யஸ்வரூபமென்னுமதில் ப்ரமாணமேதென்ன (உத்தரார்த்தத்திலித்யாதி) " நமஸ்ஸாலேயுனக்கேநாமாட்செய்வோமென்னும்படி யாகவேணும்" என்று ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுநின்றதிறேயென்கை. (த்வயந்தன்னில்) முமுக்ஷுவினுடைய ஸாதநவிசேஷத்தைச்சொல்லுகிற த்வயத்திலென்றபடி.

" கீழ்த்திருவாய்மொழியில் " இத்யாதிவாக்யத்தால்சொன்ன வர்த்தத்தை விவரிக்கிறார் (இதுதன்னிலித்யாதி) இத்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கிற ப்ராப்யமேதென்னிலென்றபடி. "சிறப்பில்வீடு" என்கிறபாட்டைப்பற்ற (முக்தனுயித்யாதி) " சிறப்பில்வீடு " என்றுவிசேஷிக்கையாலே - கேவலம்வீடுமுண்டென்று விவக்ஷித்து (ஆத்மப்ராப்தியைப்பெறவுமாமென்றது) " எய்தற்க " என்றதுக்கு பலிதார்த்தத்தைக்கடாக்ஷித்து (ஆத்மவிநாசமேயாகவுமாமென்றது) ஆத்மவிநாசம்-ஸம்ஸாரம்.

ஏவமநுஷ்ட்டிதவந்தஸ்ஸந்திகிமித்யத்ராஹ (இப்படிப்பட்டவித்யாதி) பகவதத்யந்தபாரதந்த்ர்யாநுகுணமான கைங்கர்யகரணமென்றபடி. லோகத்தில்பரி

மாறுவதொன்றல்லவென்றவிடத்திலே - “ 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌖𑌿𑌲𑌦𑍁𑌃𑌖𑍋𑌽𑌹𑌮𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑌨𑍍𑌦𑌭𑌾𑌕𑍍𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 | 𑌭𑌵𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑍀 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ” (நிரஸ்தாகிலது:கோஹமநந்தாநந்தபாக்ஸ்வராட் | பவேயமிதிமோக்ஷார்த்தீ ஶ்ரவணாதௌ ப்ரவர்த்ததே) என்றஹமர்த்தாத்மத்வஸமர்த்தநபாஷ்யத்தில் வசநமநுஸந்தேயம்.

இப்பாரதந்த்ர்யத்துக்கு அநுஷ்டாநம்காட்டுகிறார் (கைகேயீத்யாதி) அயோத்யாகாண்டே பரதம்ப்ரதிகைகேயீ. “ 𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌕𑌿𑌂 𑌶𑍇𑌷𑍇 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰 𑌮𑌹𑌾𑌯𑌶𑌃 ” (உத்திஷ்டோத்திஷ்டகிம்ஶேஷேராஜபுத்ரமஹாயஶ:) இத்யாதிபூர்வமேவலிகிதம் மூன்றும்ஸ்ரீயபதியிலே. இதுக்குப்ரமாணம் (விலலாபேத்யாதி) இந்தஶ்லோகம் - சக்ரவர்த்தியின் சாஸ்த்ரார்த்தஸமநந்தரத்திலே “பரதாழ்வான் ராஜாவாகவேணும்” என்று மனமுரசறைய, அது அஸஹ்யமாய்ச்சொன்னதாயிருக்க, கைகேயி சொற்பொறுக்கமாட்டாமே கூப்பிட்டானென்றது - அவள்சொன்னவார்த்தையும் நெஞ்சிலேபட்டுக் கிடக்கையாலேயென்று கண்டுகொள்வது. “ 𑌸𑌭𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 - 𑌵𑌿𑌲𑌲𑌾𑌪, 𑌸𑌭𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 - 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌜𑌗𑌰𑍍𑌹𑍇 ” (ஸபாமத்யே - விலலாப, ஸபாமத்யே - புரோஹிதம்ஜகர்ஹே) என்றிரண்டிடத்திலும் கூட்டுவது. ஸபாமத்யேவிலாபிதாற்றாமையாலே (ஒருதிரளாகவித்யாதி) விசேஷணமிலலாப இந்யுபஸர்க்கார்த்தம் ஞ்ருதிதாயதத்ரோபபத்திமப்யாஹ (தஸ்யபிரித்யாதி) “ 𑌭𑍃𑌶𑌂 ” (ப்ருஶம்) என்றது இங்கும்வேண்டுவது. “ 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌤𑍍𑌯𑌾𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍇 ” (ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தேமுஹூர்த்தேத்யாகவர்ஜிதே) இதிபூர்வார்த்தம். (இழந்தவஸ்துவென்றது) பெருமாளையாதல், பாரதந்த்ர்யத்தையாதல். சிஷ்டர்களை - “ சிஷ்டர்க்கிதுதகாதுகாண் ” என்கிறவர்களை. “ சிஷ்டரிப்படியைக்கண்டாலும் கேட்டாலும் ஸஹியார்கள்காண் ” என்றவர்களையென்றுமாம். புரோஹிதம்பஸ்பதீதி - புரோஹிதஶ்ஶிஷ்யத்வபத்திம்ஹ்ருதிதாயாஹ (அழகியதாகவித்யாதி) (என்கிறநிலையும்பார்த்திலன்) புரோஹிதம்பஸ்பதீத்யேவம் ருபமானகுருத்வஹேது கதிகையாலேயென்றுகருத்து. இவ்விடத்திலே - “ 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌚 𑌪𑍁𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌕𑌿𑌮𑌨𑌨𑍍𑌤𑍇 𑌸𑌨𑌾𑌤𑌨𑌿 | 𑌸𑌾𑌧𑍁 𑌬𑍋𑌃 𑌕𑌿𑌮𑌨𑌨𑍍𑌤𑍇 𑌸𑌾𑌧𑍁 𑌬𑍋𑌰𑍍𑌗𑍁𑌰𑍋 𑌵𑍋 𑌮𑌮 ” (ப்ரஸஹ்யசபுர:ப்ராஹகிமநந்தேஸநாதநி | ஸாதுபோ:கிமநந்தேஸாதுபோர்க்குராவோமம) என்றப்ரஹ்லாதவசநம் கண்டுகொள்வது. ஆபஸ்தம்பதர்மே, “ 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌨𑌿𑌯𑌮𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌂 𑌰𑌹𑌸𑌿 𑌬𑍋𑌧𑌯𑍇𑌤𑍍 ” (ப்ரமாதாதாசார்யஸ்யபுத்திபூர்வம்வாநியமாதிக்ரமம் ரஹஸிபோதயேத்) “ என்னையித்துணைகர்ஹிக்கைக்குஹேதுவென் ” என்று அவனுக்குக்கருத்தாகச்சொல்லுகிறார் (ராஜ்யஞ்சேத்யாதி) அயோத்யாகாண்டே புரோஹிதம்ப்ரதிபரத:, “ 𑌸𑌬𑌾𑌷𑍍𑌪𑌕𑌲𑌯𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌕𑌲𑌹𑌂𑌸𑌸𑍍𑌵𑌰𑍋 𑌯𑍁𑌵𑌾 | 𑌵𑌿𑌲𑌲𑌾𑌪 𑌸𑌭𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌜𑌗𑌰𑍍𑌹𑍇 𑌚 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 ” (ஸபாஷ்பகலயாவாசாகலஹம்ஸஸ்வரோயுவா | விலலாபஸபாமத்யேஜகர்ஹேசபுரோஹிதம்) இத்யாதி “ 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚𑌾𑌹𑌂 𑌚 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 | 𑌕𑌥𑌂 𑌦𑌶𑌰𑌥𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌪𑌹𑌾𑌰𑌕𑌃 ” (ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்யதர்மம்வக்துமிஹார்ஹஸி | கதம்தஶரதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரக:) “ 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 ” (ராமஸ்ய) என்றதஷஷ்டி

யை - ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தத்திலேயாக்கியர்த்தம் (ஒருவனுக்கித்யாதி) ஆனால்-நிர்வஹிக்குமாகில். வைபரீத்யம்கிந்நஸ்யாதித்யாஹ (ராஜ்யந்தானென்னையித்யாதி) "இஹ" என்றதுக்குபாவம் (பெருமாளித்யாதி) இஹ-அஸ்மத்விஷயே. கிழ்-ஸ்வரூபத்தோடேசேராதென்றார், இனி-குடிப்பிறப்புக்கும் சேராதென்கிறார் (கதம்ஸம்ரதாதித்யாதி) "ராஜ்யாபஹாரகஶ்சேத் - கதம் ஸம்ரதாஜ்ஞாதோ பவேத்" (ராஜ்யாபஹாரகஸ்சேத்-கதம்ஸம்ரதாஜ்ஞாதோபவேத்) இதயங்வயமுகேந (அவர்பொகட்டுப்போனவித்யாதி)

இப்பரிமாற்ற மிளையபெருமாள்பக்கலிலும் காணலாமென்கிறார் (இளையபெருமாளித்யாதி) நில்லென்ன - இளையபெருமாள்-குருஷ்வ என்றாரிறே யென்றந்வயிப்பது. பெருமாள் "நீர்நில்லும்" என்றுசொன்னவளவிலே, இளையபெருமாள் "குருஷ்வ மாமநுசரம்" (குருஷ்வமாமநுசரம்) என்றுசொன்னாரிறே யென்றபடி. அயோத்யாகாண்டே ராமம்ப்ரதிலக்ஷ்மண:, "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே। க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே" (குருஷ்வமாமநுசரம்வைதர்ம்யம்நேஹவித்யதே। க்ருதார்த்தோஹம்பவிஷ்யாமிதவசார்த்த:ப்ரகல்பதே) "நில்" என்கை-அழிக்கப்பார்க்கையென்று விவக்ஷித்து, "நில்" என்றால்-அழிக்கையாமோவென்ன (அங்வயத்தாலேயித்யாதி) "ஜலாந்மத்ஸ்யாவிவ" (ஜலாந்மத்ஸ்யாவிவ) என்றதிலேநோக்கு. அன்றிக்கே, "வைதர்ம்யம் நேஹ வித்யதே" (வைதர்ம்யம்நேஹவித்யதே) என்றதைக்கடாக்ஷித்துபாவமாதல், "வைதர்ம்யம்" (வைதர்ம்யம்) இதிவாக்யம்-"த்ருஷ்ட" (திஷ்டட) இத்யுக்தே "குருஷ்வ" (குருஷ்வ) இதிவக்துமர்ஹது பரம். அஸ்மிந்ஶ்லோகேஸ்வார்த்த தாராஹிதயக்ருத்ஸமுச்சயே இத்யத்ராஹ (குருவென்றுதேயித்யாதி) "ஸ்வரிதஞித: கர்த்ரபிப்ராயே க்ரியாபலே" (ஸ்வரிதஞித:கர்த்ரபிப்ராயேச்ரியாபலே) ஸ்வரிதேதோஞிதஶ்சயேதாதவ:தேப்ய:பரஸ்யலகாரஸ்யஸ்த்தாநே ஆத்மநேபதம்பவதிகர்த்தாரஞ்சேத் க்ரியாபலமபிப்ரைதீதிஸம்பந்தஸூத்ரப்ரக்ரியயா, இங்கு "டுக்ருஞ் கரணே" (டுக்ருஞ்கரணே) என்று ஙகாரேந்தானதாதுவாய், அதின்மேலே ஆத்மநேபதம்வருகையாலே-இவரால்வரும்பேறு பெருமாளதென்று சொல்லுகிறதென்றபடி. என்றாலென்ன (ஆருடையவித்யாதி) தாத்பர்யம் (உம்முடையவித்யாதி) பதருது - த்வரியாது. "அநுசரம்" (அநுசரம்) என்றதுக்குபாவம் (சீர்தாமித்யாதி) "மாம்" என்றதுக்குபாவமாதல். நிற்கச்சொல்லுகைக்கு யோக்யராகாமையை த்ருஷ்டாந்தமுகத்தாலே காட்டுகிறார் (உம்முடையசாயையையித்யாதி)

இந்தபாரதந்த்ர்யத்தை ஸ்த்தலாந்தரத்திலும் காட்டுகிறார் நீரும் நிழலுமித்யாதி என்னுடைய வஸ்திதை யென்னுமாவாக (நீரும்நிழலு மித்யாதிவாக்யம் - "ஏவமுக்தஸ்து ராமேண" (ஏவமுக்தஸ்துராமேண) இத்யாதிஶ்லோகத்துக் கவதாரிகை. இதுக்கு - "ஜலராமண்யகம் யத்ர ஸ்த்தலராமண்யகம் ததா। தாத்ருஶோ த்ருஶ்யதாம் தேஶ: ஸந்நிக்ருஷ்டஜலாஶய:" (ஜலராமண்யகம்யத்ரஸ்த்தலராமண்யகம்ததா।தாத்ருஶோத்ருஶ்யதாம்தேஶஸ்ஸந்நிக்ருஷ்டஜலாஶய:) என்றதிலேநோக்கு. ஏவமுக்தஸ்துராமேணேத்யாதி: - பஞ்சவடீப்ரவேஶாநந்தரஶ்லோக:; "ஜலராமண்யகம்" (ஜலராமண்யகம்) இத்யாதிஶ்லோ

கந்தக்குமேலில் ச்லோகமிது. "[illegible]" (ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ்ஸம்யதாஞ்ஜலி: । ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநமப்ரவீத் । பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே । ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம்வத) அபய்யார்த்தம் (இதற்குமுன்பித்யாதி) கைங்கர்யாலாபதசாயாம் சக்திசேத்யாச, "[illegible]" (சுருக்ஷவமாமநுசரம்) இதிஸ்வயம்விதாய மநுஜ ஸ்த்திபிஸ் சாக்ரவிகஷிதா. "[illegible]" (சிற்றம்லக்ஷ்மண லக்ஷணம்) இதி, மநப்ப்ரத்யயாந்தத்வஞ்ச ஹ்ருதிநிதாயாஹ (பாரதந்த்ர்யத்தையித்யாதி) வேறுபட்டபின்பஞ்சலியண்ணுவா னென்னென்ன (தாம்நம்ஸ்வரூபத்தையித்யாதி) பலிதம் (ஸர்வாபிமதேத்யாதி) நாமழித்தநேரடு, அவனழிந்ததோடுவாசியற எல்லாவபிமதங்களுமென்றபடி. புருஷகாரத்வம் ஹ்ருதிநிதாயாஹ (பண்ணினவஞ்சலிக்கித்யாதி) "[illegible]" (ஹ்யர்த்தி நகார்யவஶாதபேதாநருத்தஸ்த்வம் ஸ்வமுகாதப்ரயாதி) இத்யாதுகம்ஹ்ருதிநிதாயாஹ (பிராட்டிஸந்நிதியுமித்யாதி) "இதம்"என்றநிலேநோக்காகபாவம்(இவ்வார்த்தையையித்யாதி) (உம்முடையவஸ்மிதைபோலல்லகாணுமிதி) உம்முடையவஸ்மிதை "[illegible]" (ஸ்வதந்த்ரோஸ்மி) என்றிறேயிருப்பதென்றபடி.

அஸம்ப்ரஸக்தாநுப்ரஸக்த்யேதி ப்ரக்ருதமநுஸரதி (இப்படிக்கொத்தவித்யாதி) "ஒல்லை" "ஒல்லை" "ஈதே" "ஈதே" இத்யாத்யஸக்ருதயிதாநம், "விடலில்சக்கரத்தண்ணலேமேவல்விடலில் வண்குருகூர்ச்சடகோபன்சொல்,, இத்யாதிஷுசபராம்ருஷ். ப்ரமேயஸேஷமாஹ (இதுதானித்யாதி) அநாதரஹேதுவே தென்ன (புருஷனர்த்திகஙித்யாதி) இப்பேறித்தனையும் - ஸ்வார்த்தநாகநாஹித மானபேறித்தனையும். "விடலில்சக்கரத்தண்ணலே" என்றதைப்பற்ற (அவனும்தலைதுலுக்கப்பெற்றாரயென்றது) ....*

ஒன்பதாந் திருவாய்மொழி.

முதற்பாட்டு.

: எம்மாவீட்டுத்திறமும்செப்பமின்
செம்மாபாதபற்புத்தலைசேர்த்தொல்லைக்
கைம்மாதுன்பங்கடிந்தபிரானே
யம்மாவடியேன்வேண்டுவதீதே.

ஆறாயிரப்படி.

எத்தனையேனும் முக்த்ருஷ்டபுருஷார்த்தமான ஸ்ரீவைகுண்டத் திலுமெனக்கபேக்ஷையில்லை, மற்றெதிலே யபேக்ஷயுள்ளதென்னில்; உன்னுடைய அழகியதிருவடி மலர்களையென் தலையிலேவைத் தருளவே

னும் ; அதுசெய்தருளுமிடத்து ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குச் செய்தருளி னைப்போலேவந்து செய்தருளப்பற்றாது, செய்துகொண்டு நிற்கவேணும்; ஈதேஅடியேன் வேண்டுவதென்கிறார்......................................*

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், ஸர்வப்ரகார விசிஷ்டமான மோக்ஷத்திலும்திருவடிகளோட்டை ஸம்பந்தமே யுத்தேஸ்யமென் றபேக்ஷிக்கிறார்.

எ - எவ்வகைப்பட்ட. மா - உத்க்ருஷ்டமான. வீட்டுத்திறமும் - மோக்ஷப்ரகாரமும். செபபம் - சொல்லோம். நின் - உன்னுடைய. செ - சிவந்த. மா - உத்தேஸ்யமான. பாதபற்பு - திருவடித்தாமரைகளை. தலை - தலையிலே. ஒல்லை - கடுக. சேர்த்து-சேர்க்கவேணும். கை - துதிக்கைமுழுக்கும்படியமுந்தின. மா - ஆனையினுடைய. துன்பம் - துக்கத்தை. கடிந்த - போக்கின. பிரானே - மஹோபகாரகனாய். அம்மா - இவ்வபதாநத்தைக்காட்டி யென்னையடிமைகொண்டஸ்வாமியே. அடியேன் - உனக்கடியேனானநான். வேண்டுவது - என்ஸ்வருபத்துக்குத்தகுதியான பலமாகவேண்டியிருப்பது. ஈதே - இதுவே.

புருஷனர்த்திதத்தன்ரே - புருஷார்த்தமென்றுகருத்து. ஒல்லை - சடக்கென. கைம்மா - ஆனை. ஒல்லை - கைம்மாவென்று கூட்டவுமாம். செப்பம் - சேப்போம். அன்றியே, செப்பமென்று - செவ்விதாமென்றாய், மோக்ஷப்ரகாரமெல்லாம் செவ்விதாகையாவது-திருவடிகளிலே சேர்த்தியென்றாகவுமாம்....................*

ஈடு-முதற்பாட்டு.

எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷத்திலுமெனக்கபேக்ஷையில்லை, உன்திருவடிகளை யென்றலையிலே வைக்கவேணுமென்கிறார்.

“ ஆழ்வீர்மோக்ஷத்தைக்கொள்ளும் ” என்றானீஸ்வரன், “ வேண்டா ” என்றார்; “ மாவீடுகிடீர் - விலக்ஷணமான மோக்ஷங்கிடீர் ” என்றான், “ அதுவும்வேண்டா ” என்றார்; “ எம்மாவீடுகிடீர் - ‘ஐஸ்வர்யம், ஆத்மலாபம்’ என்றிருக்கவேண்டா, பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷம் ” என்றான், அதுவுமெனக்கு வேண்டாவென்கிறார். எவ்வகையாலும் நன்றானமோக்ஷத் திடையாட்டமும். (செப்பம்) செப்போம். சொல்லோம். நீப்ரஸங்கிக்கவும் கடவையல்லை, நான்ப்ரதிஷேதிக்கவும் கடவனல்லேன். (எம்மாவீட்டுத்திறமும்செப்பம்) ஒருதமிழன்! “ எம்மாவீட்டுவிகல்பமும் செவ்வியவாம்” என்றான். அந்தப்பக்ஷத்திலே, வீட்டுவிகல்பமாவது - சாலோக்யசாரூப்ய சாமீப்யசாயுஜ்ய மென்கிறவை. செவ்வியவாகையாவது - சாலோக்யாதிக ளெல்லாம் இம்மோக்ஷத்திலேயுண்டாகை.

ஆனாலுமக்கு வேண்டுவதென்னென்னில். (நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து) இதெனக்குவேண்டுவது. செ என்று - சிவப்பாய், மா வென்று - கறுப்பாய்; உன்னுடைய, அகவாய்சிவந்து புறவாய்ஸ்யாமமா

ய் ; விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றங்களுக்குத் தாமரையை ஒருபோலிசொல்லலாம்படி யிருக்கிற திருவடிகளைக் கொண்டுவந்து என்றலையிலே வைக்கவேணும். அன்றிக்கே, செம்மையால் நினைக்கிறது - செவ்வையாய் ஆஶ்ரிதர்க்கு வருந்தவேண்டாதபடியான ஆர்ஜவத்தையுடைத்தாய்; மாவென்று - மறைத்தையாய், பரமபூஜ்யமான திருவடிகளென்னவுமாம். சேர்த்துஎன்றது-சேர்க்கவேணுமென்றபடி. கொக்குவாயும் படுகண்ணியும்போலே, உன் திருவடிகளும் என்றலையும் சேரவேணும். சேர்த்துஎன்று - ஸ்யப்பாகையன்றிக்கே, விதியாய், சேர்த்தருளவேணுமென்கை. [யாவந்ந சரணௌ ப்ராது: பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ । ஶிரஸா தாரயிஷ்யாமி ந மே ஶாந்திர் பவிஷ்யதி] (யாவந்நசரணௌப்ராது:பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ । ஶிரஸாதாரயிஷ்யாமி நமேஶாந்திர்ப்பவிஷ்யதி) பிள்ளாய், உன்னுள்வெதுப் பாறுவதெப்போதென்றார்கள்; பெருமாளும்தமக்குவகுத்தமுடிசூடி, நானுமெனக்குவகுத்தமுடிசூடினஅன்றென்றானிறே. (நின்செம்மாபாதபற் புத்தலைசேர்த்து) மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப்போலே, இவரும் *ஈறிலின்பத் திருவெள்ளத்திலே முழுகிப்பூச்சூட விருக்கிறார்காணும். “அப்படியேசெய்கிறோம்” என்றான்; அக்ரமம் பற்றாது (ஒல்லை) செய்துகொடுநின்று, “செய்கிறோம்” என்னவேணும்.

இப்படி த்வரிக்கவேண்டு மிடமுண்டோவென்ன (கைம்மாதுன்பங்கடிந்தபிரானே) நீ த்வரித்துவந்து விழும்படியறியாயோ. [பரமாபதமாபந்ந:] (பரமாபதமாபந்ந:) ஸர்வேஶ்வரன் தன்னைப்பெறாதே வந்து விழும்படியான ஆபத்தாயிற்று. [மநஸா சிந்தயந்] (மநஸாசிந்தயந்) கூப்பிடோவிற்று. (கைம்மாதுன்பம்) ஆனையும் தன்னளவிலேயிறே நோவுபடுவது. துதிக்கை முழுத்தின ஆபத்திறே. அப்படி யுமக்காபத்துண்டோவென்ன ; அங்குமுதலையொன்று, எனக்குமுதலையைந்து; அங்கு ஆயிரம்தேவ ஸம்வத்ஸரம், இங்கநாதிகாலம்; அங்கொருசிறுகுழி, இங்கு பிறவியென்னும் பெருங்கடல்; அதுக்குஶரீரநாசம், எனக்கு ஆத்மநாசம் ; ஆனையின் காலையாயிற்று முதலைபற்றிற்று, இங்கு என்னுடைய நெஞ்சையாயிற்று அருவித்தின்றிடுகிறது; ஆனால் அதுக்குமிதுக்குமுள்ளவாசிபாராய். (பிரானே) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய துஃக்கத்தைப்போக்கினவிதுவும், “தமக்குபரிகரித்தது” என்றிருக்கிறார். அதுக் குதவினமையுண்டு, உமக்கென்னென்ன (அம்மா) அதுக்குமெனக்குமொவ்வாதோ தேவரோட்டை சம்பந்தம், நீஸ்வாமியன்றோ. நீராரென்ன (அடியேன்) நான்சேஷபூதன் இருவருடைய ஸ்வரூபத்தையும்பற்றி “தவிரவொண்ணாது” என்றபேக்ஷிக்கிறீரோவென்ன (வேண்டுவது) ராகப்ராப்தம். இதுவாகில்வேண்டுவது, இதுசெய்கிறோம்; இதுவுமின்னு

மெதுவும் வேணுமென்றான் (ஈதே) " நின்செம்மாபாதபற்புத்தலைசே ர்த்து " என்றவிதுவே யென்கிறார்..................................*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (எம்மாவீடித்யாதி) * எம்மாவீடுதொடங்கி, "தலைசேர்த்து" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை (எவ்வகையாலுமித்யாதி)

" செப்பம் " என்றப்ராப்தோக்ஷதத்துக்கு ப்ரஸக்தியைக் காட்டாநின்றுகொண்டு, " வீடு, மாவீடு, எம்மாவீடு, " என்றுவிவக்ஷித்து க்ரமேணதாத்பர்யம் (அற்றவீரித்யாதி) வீடென்று - ஐஶ்வர்யம் ; மாவீடென்று - கைவல்யம் ; எம்மாவீடென்று - பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷம். " முக்திர்மோக்ஷோமஹாநந்தஃ " (முக்திர்மோக்ஷோமஹாநந்தஃ) என்று - முக்திசப்தத்தாலே ஆநந்தத்தைச் சொல்லுகையாலே, ஐஶ்வர்யமு மாநந்தாவஹமாகையாலே, " வீடு " என்று - கௌணமாகவைஶ்வர்யத்தைச் சொல்லுகிறது. கைவல்யத்துக்கு ஐஶ்வர்யாபேக்ஷயா மஹத்வமுண்டாகையாலே - " மாவீடு " என்றுகைவல்யத்தைச் சொல்லுகிறதென்றபடி. சப்தார்த்தம் (எவ்வகையாலுமித்யாதி) இடையாட்டம் - ப்ரஸங்கம், " செப்பம் " இத்யஸ்ய சரமாவதிமாஹ (நீப்ரஸங்கிக்கவுமித்யாதி) யத்வா, " செப்பம் " என்றது - த்விவசநமாக விவக்ஷித்தர்த்தமாதல்.

பக்ஷாந்தரத்துக்காக ப்ரதீகோபாதாநம் (எம்மாவீடித்யாதி) வீட்டுவிகல்பம் - வீட்டினுடைய பேதங்கள். திறம் - ஸமூஹம். விகல்பமென்றபடி. செப்பம் - (செவ்வியவாம்) இம்மோக்ஷத்திலே- * பாதபற்புத்தலை சேர்க்கையிலே, தமிழன் நிர்வாஹத்துக்கு - மாவீட்டினுடைய வெல்லாமானபேதமும் செவ்வியவாமென்கை. இவ்விடத்திலே - " லோகேஷு விஷ்ணோர்நிவஸந்தி கேசித் ஸமீபமிச்சந்தி சகேசிதந்யே । அந்யே து ரூபம் ஸத்ருஶம் பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸது மோக்ஷ உக்தஃ " (லோகேஷுவிஷ்ணோர்நிவஸந்திகேசித்ஸமீபமிச்சந்திசகேசிதந்யே । அந்யேதுரூபம்ஸத்ருஶம்பஜந்தே ஸாயுஜ்யமந்யே ஸதுமோக்ஷஉக்தஃ) என்றதநுஸந்தேயம்.

ஆகிலும், ப்ரகரண ஸ்வாரஸ்யமுள்ளது முந்தினவர்த்தத்திலே யாகையாலே யத்தையவலம்பித்து மேலில்பதத்துக்கவதாரிகை (ஆனாலுமக்கித்யாதி) பற்பு - பத்மம். மாவென்று - கறுப்பும், மஹத்தையும். அகவாய் - உள்ளங்கால். கூட்டுஎன்றதே, " சேர்த்து " என்றுசொன்னதுக்குபாவம் (கொக்குவாயுமித்யாதி) கொக்குவாயும் படிகண்ணியுமாவது - ஆபரணவிசேஷங்களில் பரஸ்பரபந்தகமான அவயவவிசேஷங்கள். கொக்கினுடையவாயும், குளச்சானகண்ணியுமாதல். " ஸந்தேஶ " (ஸ்யபந்தம்) இதிப்ரமம்வாரயதி (சேர்த்தென்றித்யாதி) " நடத்து, செலுத்து, " என்றாற்போலே யென்றபடி. அப்படிப்ரார்த்தித்த பேருண்டோவென்ன (யாவந்நசரணாவித்யாதி) அயம்ஶ்லோகஃ அயோத்யாகாண்டே சித்ரகூடபரிஸரே ஶத்ருக்நம் ப்ரதிபரதேநோக்தஃ. இஶ்லோகதாத்பர்யம் (பிள்ளையித்யாதி) இந்தஶ்லோகம் - ஸ்ரீஶத்ருக்நாழ்வானோடே சொன்னதாகிலும், ஸ்ரீகௌஸல்யையார் முதலானோரோடும்சொல்ல யோக்யதையுண்டென்று கருத்து. பார்த்திவவ்யஞ்ஜநங்களாவன - சத்ரசாமராதிகளாதல், * த்வஜாரவிந்தாங்குசாதி ரேகைகளா

தல். பார்த்திவவ்யஞ்ஜநம் - ராஜசிஹ்நம். "பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ" (பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ) என்கிறவிசேஷண ஸித்தார்த்தம் (பெருமாளும்தமக்கு வகுத்ததிரித்யாதி) அபிஷேகாபாவே பார்த்திவவ்யஞ்ஜநாந்விதத்வமில்லையிறே யென்றுகருத்து. "ஶிரஸா தாரயிஷ்யாமி" (சிரஸாதாரயிஷ்யாமி) என்றதின்பாவம் (நாறுமெனக்கித்யாதி) "பற்புத்தலைசேர்த்து" என்றபதஸாமர்த்த்யத்துக்குபாவம் (மயிர்கழுவியித்யாதி) அக்ரமம் - அந்தக்ரமம். ஒல்லை - சீக்ரமாக.

(இப்படித்வரிக்கவேண்டுமிதி) ஏவம்த்வரிதும் தவாவகாஶோஸ்திகிம் - ஆலம்பநமஸ்திகிமித்யர்த்த:. பாய்மா - குதிரை. கைம்மா - ஆனை. கைம்மாவுக்குத்துன்பமுண்டோவென்ன: ப்ரமாணம் (பரமாபதமித்யாதி) ஸ்ரீவிஷ்ணுதர்மேஅஷ்டஷஷ்டிதமே, "பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம் । ஸ து நாகவர: ஶ்ரீமாந் நாராயணபராயண:" (பரமாபதமாபந்நோமநஸாசிந்தயத்தரிம் । ஸதுநாகவரஸ்ஸ்ரீமாந்நாராயணபராயண:) பரமாசஸாஆபச்ச - பரமாபத்; தாம்பரமாபதம். ஆபத்தினுடைய பாரம்யத்தை கார்யமுகேநதர்ஶிப்பிக்கிறார் (ஸர்வேஶ்வரனித்யாதி) ஆக்ரோஶங்கள:, மநஸாசிந்தயத் இத்யுக்த்வா பலிதமாஹ (கூப்பிட்டாவித்ரிதி) ஒழிற்று - முடிந்தது. "கைம்மா" என்று - ஆனைக்கேரூடியாய், தாத்பர்யம் (ஆனையுமித்யாதி) அவயவார்த்தவிவக்ஷயா தாத்பர்யாந்தரம் (நதிக்கையித்யாதி) இவ்வபதாநத்தைச் சொன்னவிவர்க்கு இத்தனையும் விவக்ஷிதமென்கிறார் (அப்படியுமக்கித்யாதி) ஐந்து - பஞ்சேந்த்ரியங்கள். அருவித்தின்றிடுகை - அத்யந்தம்பாதிக்கை. "பிரானே" என்கைக்கு - தமக்குச்செய்த வுபகாரமேதென்ன (ஸ்ரீகஜேந்த்ரேத்யாதி)

"அம்மாவடியேன்" இத்யத்ரவ்யாக்யாந ப்ரக்ரியயாகிஞ்சித் பௌநருக்த்யம்ஸப்புரதிசேத், (நீரான்ன) இதிசங்காயா:, உத்தரஸ்யசாயமர்த்த: - மதீயம்ஸ்வாமித்வம் ஸர்வவிஷயகம்பவதி, நகோப்யேவம்ப்ரார்த்தயதே; ஏவம்ப்ரார்த்தயமாநஸ்த்வம்க இதிசங்கார்த்த:. த்வத்ப்ரஸாத லப்தஸ்வரூபயா தாத்ம்யஜ்ஞாநவாநஹ மித்யுத்தரஸ்யார்த்த.

(தவிரவொண்ணுதென்றிதி) நிர்ப்பந்தரூபதயேதியாவத். "நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து" என்கையாலே-சேஷத்வமேபுருஷார்த்தமென்றும், ஸ்வரூபத்தைப்பற்ற விக்ரஹமே யுத்தேஶ்யமென்றும் தோற்றுகிறது. வேண்டுவது - வேண்டியிருப்பது. அபேக்ஷிப்பதென்றபடி. புருஷனர்த்தித்ததன்றே - புருஷார்த்தமென்றுகருத்து.

எம்மாவீடுதொடங்கி, தலை - ஒல்லை - சேர்த்து; கைம்மாதுன்பம் கடிந்தபிரானே! அம்மாவடியேன் வேண்டுவதீதே யித்யந்வய:..........................*

இரண்டாம்பாட்டு.

ஈதேயானுன்னைக்கொள்வதெஞ்ஞான்றுமென்
மைதோய்சோதிமணிவண்ணவெந்தா
யெய்தாநின்கழல்யானெய்தஞானக்
கைதாகாலக்கழிவுசெய்யேலே.

ஆறுயிரப்படி.

(ஈதே) எற்றைக்குமிதுவே நானுன்பக்கல் கொள்ளும்ப்ராப்யம். பக்தியோகத்தாலல்லது சித்திக்குமோவென்னில் ; அந்தபக்தியோகந் தன்னையும்நீயே ஈண்டெனத் தந்தருளவேணுமென்கிறார்..................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இந்தசம்பந்த விஷயமான ஜ்ஞாநத்தைத்தந்தருள வேணுமென்கிறார்.

என் - எனக்கிந்தருசிஜநகமான. மை - கருமை. தோய் - செறிந்த. சோதி - ஒளியையுடைத்தான. மணி - மாணிக்கம்போன்ற. வண்ணம் - வடிவழகையுடைய. எந்தாய் - என்ஸ்வாமியே. உன்னை - உன்னை. யான் - நான். என்ஞான்றும் - எக்காலத்திலும். கொள்வது - கொள்ளும்ப்ரயோஜநம். ஈதே - இதுவே. ஏதென்னில் ; எய்தா - பெறுதற்கரிய. நின் - உன். கழல் - திருவடிகளை. யான் - நான். எய்த - பெறுதற்கீடான. ஞானக்கை - தெளிவாகிறஜ்ஞாநக்கையை. தா-தரவேணும். காலக்கழிவு - காலவிளம்பம். செய்யேல் - பண்ணாதேகொள்.

ஞாநத்தை - கையென்றது, தமக்காலம்பநமாகையாலே...........*

ஈடு - இரண்டாம்பாட்டு.

முதற்பாட்டில் - காயிகமானபேற்றை யபேக்ஷித்தார் ; இதிலே - மாநஸமானபேற்றை யபேக்ஷிக்கிறார்.

கீழிற்பாட்டிலே "ஈதே" என்னச்செய்தேயும், "ஓரர்த்தத்தை யேபலகால் கேட்டவாறே மற்றொன்றிறே தடுமாறிச்செல்லவுங்கூடுமே, இதிலேநிலைநின்றமை யறியவேணும்" என்று, இதுவும் இன்னுமெதுவும் வேணும்என்றான் (ஈதேயென்கிறார்) "நீரிதிலேநிலைநின்றீர்" என்னுமிடம் நாமறியும்படியென்னென்ன (யானுன்னைக்கொள்வது) இருவருடையவும் தர்மியேயிதில் ப்ரமாணம். ஸ்வாமியானவுன்பக்கல் சேஷபூதனான நான்கொள்ளுமதிதுவே. நம்முடைய ஸ்வாமித்வமும் உம்முடைய சேஷத்வமும் கிடக்கச்செய்தேயன்றோ நெடுநாளிழந்துபோந்தது, ஆனபின்பு நமக்கதிசங்கை வர்த்தியாநின்றதுகாணும் ; இதெத்தனைகுளிக்குநிற்குமென்ன (என்ஞான்றும்) யாவதாத்மபாவி இதுவேயெனக்குவார்த்தை. "இதிலேநிலைநிற்கும்படி உம்மை இத்துஸ்ஸிக்ஷைபண்ணுவித்தாரார்" என்றானீஸ்வரன் ; இப்படியார் கற்பித்தார், மற்றுமுண்டோ தேவர்வடிவழகிறே (என்மைதோயித்யாதி) மைதோய்ந்திருந்துள்ள தேஜஸ்ஸையுடைத்தான மணியினுடைய நிறம்போன்ற திருநிறத்தைக் காட்டி யென்னையநந்யார்ஹனாக்கி உன்சேஷித்வத்தை யறிவித்தவனே. அழகிது, உமக்குச்செய்யவேண்டுவது தானென்னென்ன (எய்தாநின் கழல்யானெய்த) ஸ்வயத்நத்தாலொருவர்க்கும் ப்ராபிக்கவொண்ணாதி

ருவடிகளை "உன்னாலேபேறு" என்றிருக்கிறநான் ப்ராபிக்கும்படி பண்ணு. அதுநீர் *மயர்வற மதிநலம்பெற்றவன்றே பெற்றிலீரோவென்ன (ஞானக்கைதா) இதுநினைத்திருக்கு மளவுபோராது, அதுநான் "பெற்றேன்" என்றுதெளியும்படி பண்ணவேணும். அமிழ்ந்தினார்க்குக் கைகொடுத்தாப்போலே யிருக்கையாலே ஜ்ஞாநரூபம் - "ஞானமானகையைத்தா" என்கிறார். இங்கே, எம்பார்க்கு ஆண்டானருளிச்செய்த வார்த்தையைஸ்மரிப்பது. அதாவது - "ஒருகிணற்றிலே விழுந்தவனுக்கிரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே; அப்படியேயாகிறது.என்று. (ஞானக்கைதா) அங்ஙனன்றிக்கே, அதுபின்னை பரபக்தி பரஜ்ஞாநபரமபக்திகளை யுடையார் பெறும்பேறன்றோவென்ன (ஞானக்கைதா) அவற்றையும் தேவரேபிறப்பித்து, தேவர்திருவடிகளைப்பெறவேணுமென்னவுமாம்.

அப்படிசெய்கிறோமென்ன (காலக்கழிவுசெய்யேலே) "ஒல்லை" என்றதுதானேயன்றோ எனக்கெப்போதும்வார்த்தை.....................*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (ஈதேயித்யாதி) முதற்பாட்டில் காயிகமான வித்யாதிக்கு - "தலைசேர்த்து," "ஞானக்கைதா" என்கிறபதங்களிலேநோக்கு.

"ஈதே" என்கிறபுநருக்திக்குபாவம் (கீழிற்பாட்டிலேயித்யாதி) இவ்விடத்திலே - ப்ரஸித்தமான நசிகேதன்கதையை யநுஸந்திப்பது. அதாவது - வரப்ரதாநார்த்தம் அதிகாரிசோதநத்துக்காக "ஶ்ருதிஶ்சாபேக்ஷிதஃ" (அந்யத்திமபேக்ஷிதம்) இதிஅஸக்ருத்ப்ரச்சயமாஃ; நசிகேதாச்ச "இதமேவாபேக்ஷிதம், ஶ்ருதிஶ்சாபேக்ஷிதம்ந" (இதமேவாபேக்ஷிதம், அந்யத்திமப்யபேக்ஷிதம்ந) இத்யுவாசேதிநசிகேதஃகதா. "ஈதே" என்று - கீழ்ச்சொன்ன "நின் செம்மாபாதபற் புத்தலைசேர்த்து" என்றத்தைப்பற்றவாதல், வக்ஷ்யமாணமான "ஞானக்கைதா" என்றத்தைப்பற்றவாதல்.

(இருவருடையவும் தர்மியேயென்றது) சேஷசேஷித்வ ரூபமேயிதில் ப்ரமாணமென்றபடி. பூர்வவாக்யவிவரணம் (ஸ்வாமியானவித்யாதி) இவ்வாக்யம் - "அம்மாவடியேன்" என்றத்தைப்பற்ற. இது - "பாதபற்புத்தலைசேர்த்து" என்கிறவிது. (எத்தனைகுளிக்குநிற்கும்) எத்தனைஸ்நாநத்துக்குநிற்கும். அங்கராகாதிகளின்வாசனை நாலுமூன்றுஸ்நாநத்துக்கும் போகாது. தத்வத் எவ்வளவுபர்யந்தமிருக்குமென்றபடி. யாவதாத்மபாவி - நித்யமாக.

இதிலே - இந்தப்ராப்யத்திலே. இதிலே யித்யாதி சங்கோத்தரங்கள் - உத்தரவாக்யாவதாரிகை. மைதோய்ந்திருந்துள்ள - கருமைசெறிந்திருந்துள்ள. கருமைசெறிந்த வொளியையுடைய மாணிக்கம்போன்ற வடிவையுடையவனே இதிசப்தார்த்தஃ.

எய்தா - பெறுதற்கரிய. (அதுநீரிதி) *மயர்வறமதிநலம் பெற்றபோதே திருவடிகளை ப்ராபிக்கைசித்தமன்றோ, ஆகையாலே பெற்றிலீரோவென்னவென்ற

படி. (தெளியும்படிபண்ணவேணுமென்றது) மானஸஸாக்ஷாத்காரம்போராது, ப்ரத்யக்ஷமாம்படி பண்ணவேணுமென்றபடி. அது - திருவடிகளைப்ராபிக்கை.

ஞானம்தாஎன்னுதே, "ஞானக்கைதா" என்றதுக்கடியேதென்ன (அமிழ்ந்தினார்க்கித்யாதி) ஜ்ஞாநலாபம் - (அமிழ்ந்தினார்க்குக் கைகொடுத்தாப்போலே) இத்யந்வயம். ஞானத்தைக்கையாகச் சொன்னதிலே ஐதிஹ்யம் (எம்பார்க்கித்யாதி) எம்பார், ஆண்டான் ஸ்ரீபாதத்திலவனை யறியாமல் பகவத்ஸம்பந்தம்பண்ணி, அவரறிந்தபின்பு பயப்பட, அப்போதாண்டா னருளிச்செய்த வார்த்தையென்றபடி. "ஞானக்கைதா" என்றதுக்கிரண்டுபொருள். முந்தினது (நான்பெற்றேன் என்று தெளியும்படி பண்ணவேணுமென்றது) இரண்டாமர்த்தம் - பரமபக்த்யாதிகளையும் ததநந்தரபாவியான சாக்ஷுஷஸாக்ஷாத்காரத்தையும் தரவேணுமென்று. இந்தவிரண்டாமர்த்தத்தை யருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கேயித்யாதி) முந்தினவர்த்தத்தில், "ஞானம்" என்கிறது - ப்ரத்யக்ஷரூபஜ்ஞாநம். த்விதீயார்த்தத்தில் - பக்திரூபஜ்ஞாநம். அர்த்தத்வயத்திலும் ஸங்கதிபேதமொழிய அர்த்தபேதமில்லை. காலக்கழிவு செய்யேலே - காலவிளம்பம் பண்ணாதேகொள்.

"கீழ்ப்பாட்டிலே ஈதே என்னச்செய்தேயும்" இத்யாதிபதஸங்கதி வாக்யத்துக்குச்சேர, "என்மைதோய்சோதி மணிவண்ணவெந்தாய் - எஞ்ஞான்றும்-யானுன்னைக்கொள்வது - ஈதே" என்றிவ்வளவும் கீழ்ப்பாட்டுக்கு சேஷமாய், "எய்தாநின்கழல்" என்றுதொடங்கி-இப்பாட்டுக்குசேஷமாதல்; அன்றிக்கே, "என்மைதோய்சோதி" என்றுதொடங்கி, எஞ்ஞான்றும்-யானுன்னைக்கொள்வது ஈதே; "எய்தாநின்கழல்" என்றுதொடங்கி-இப்பாட்டுக்கு சேஷமாகவந்வயமாதல். இதுவேமுக்யம்..*

மூன்றாம்பாட்டு.

செய்யேற்றீவினையென்றருள்செய்யுமென்
கையார்சக்கரக்கண்ணபிரானே
யையார்கண்டமடைக்கிலுநின்கழ
லெய்யாதேத்தவருள்செய்யெனக்கே.

ஆறாயிரப்படி.

(செய்யேல்) உன்கையுந்திருவாழியுமாயிருக்கிற அழகைக்காட்டி வ்யதிரிக்தவிஷயத்தில் ப்ராவண்யத்தைத்தவிர்த்து உன்திருவடிகளிலென்னை ப்ரவணனாக்கினவனே, உத்க்ராந்திதசையிலுங்கூட வுன்திருவடிகளை நானினையாதேத்தும்படி பிரானே க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அவ்வறிவுக்கீடாக ஆபத்தசையிலுமுன்னை ஸ்தோத்ரம்பண்ணும்படிபண்ணி யருள்வேணுமென்கிறார்.

தீவினை - அக்ருத்யகரணாதிகளானதீவினைகளை. செய்யேல்-செய்யாதேகொள். என்று - என்று. என்-என்பக்கலிலே, அருள் - க்ருபாகார்யமானநியமநத்தை. செய்யும்-பண்ணுகைக்குறுப்பாய். கை-திருக்கையோடு. ஆர்-பொருந்தின. சக்கரம்-திருவாழியையுடையனாய். கண்ணன் - க்ருஷ்ணனானஸௌலப்யத்தாலே. பிரானே-உபகரித்தவனே. ஐ-ஐயாலே. ஆர்-நிறைந்த. கண்டம்-கண்டமானது. அடைக்கிலும்-உக்திஸாமர்த்த்யமில்லாதபடி நிர்விவரமாகிலும். நின்-விரோதிநிவர்த்தகனாய் ஸுலபனாய் ப்ராப்தனானவுன். கழல்-திருவடிகளை. எய்யாது - இளைப்பற்று. ஏத்த-ஏத்தும்படி. எனக்கே-எனக்கேயஸாதாரணமாக. அருள்செய்-க்ருபைபண்ணியருளவேணும்.

ஐ-ம்லேஷ்மா..*

ஈடு-மூன்றாம்பாட்டு.

இதில்-வாசிகமானபேற்றையபேக்ஷிக்கிறார்.

(செய்யேலித்யாதி) "கையும்திருவாழியும் பொருந்தியிருக்கிற இருப்புக்கண்டாயே, நம்பவ்யதைகண்டாயே; நம்மை யநுபவிக்கையழகியதோ, க்ஷுத்ரவிஷயங்களிலே ப்ரவணனா யநர்த்தப்படுகையழகியதோ" என்று கையிற்றிருவாழியையும் பவ்யதையையும்காட்டியாயிற்றிவருடையவிஷயப்ராவண்யத்தைத்தவிர்த்தது; சாஸ்த்ரப்ரதாநாதிகளாலன்று. (ஐயாரித்யாதி) "து:கநிவ்ருத்திவேணும்" என்கிறேனல்லேன்; "ஊஹ்தாவலி" (துர்க்கதாவபி) என்கிறபடியே, ஏதேனு முத்க்ரமணஸமயத்திலுமுன்திருவடிகளை நானிளையாதே யேத்தும்படிபண்ணி யருளவேணும். செறிந்தம்லேஷ்மாவானது கண்டத்தையடைக்கிலு முன்னுடைய நிரதிசயபோக்யமானதிருவடிகளை நான்மாறாதேயேத்தவல்லேனாம்படி பண்ணியருளவேணும். உத்க்ரமணதசை பார்த்திருப்பர்காணும் கோழைப்பையலார்வந்து மிடறுபிடிக்க. நீர்சொல்லுகிறவது ஒருஸுக்ருதபலமன்றோவென்ன (அருள்செய்) " இவன்பெற்றிடுவான் " என்றிரங்கியருளவேணும். இதுபின்னை ஸர்வர்க்கும் ப்ரயோஜநமாகாதோவென்ன (எனக்கே) எனக்கொருவனுக்கும் செய்தருளவேணும்.....................*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (செய்யேலித்யாதி) வாசிகமானபேற்றையென்றது - "ஏத்தவருள்செய்" என்றத்தைப்பற்ற.

பூர்வார்த்தத்துக்குத்தாத்பர்யம் (கையும்திருவாழியுமித்யாதி) "என்கையார்சக்கரக்கண்ணபிரானாய்க்கொண்டு-தீவினை-செய்யேல்-என்றருள்செய்யும்" என்றந்வயம். " கையார் " என்றத்தைப்பற்ற (பொருந்தியிருக்கிறவிருப்பென்றது) பவ்யதையென்றது - "கண்ணபிரான்" என்றத்தைப்பற்ற. " தீவினை " என்கிறதுக்கர்த்தம் (விஷயப்ராவண்யத்தையென்றது) இதுக்குவ்யாவர்த்த்யம் (சாஸ்த்ரேத்யாதி)

“ஐயார்” இத்யாதிக்குபாவம் (துர்கதிவ்ருத்தித்யாதி) ‘ 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌾𑌵𑌭𑌿𑌜𑌾𑌤𑌾𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑌤𑍋 𑌮𑍇 𑌮𑌨𑍋𑌰𑌥𑌃 । 𑌯𑌦𑌿 𑌨𑌾𑌶𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤 𑌤𑌾𑌵𑌤𑌾𑌸𑍍𑌮𑌿 𑌕𑍃𑌤𑍀 𑌸𑌦𑌾 ” (துர்க்கதாவபிஜாதாயாம்த்வத்கதோமேமநோரத8 - யதிநாஶம்நவிந்தேத தாவதாஸ்மிக்ருதீஸதா) இதிஜிதந்தாயாம். ஏதத்பூர்வஶ்லோகம் [விஜ்ஞாநமித்யாதி] யதிதம்விஜ்ஞாநம்ப்ராப்தம்- யாதொருஇந்தஸ்வருபஜ்ஞாநம்ப்ராப்தமாயிற்று. யதிதம்ஸ்த்தாநமார்ஜிதம்-யாதொருஇந்தஅத்யவஸாயமானது ஆர்ஜிக்கப்பட்டது. தஸ்யபரிக்ஷய8-அதினுடையபரிக்ஷயமானது, ஜந்மாந்தரேபிமாபூத். ஸ்த்தாநமென்று-ஸ்த்திதியாய், அதாவது-நிலைநிற்கையாய், “ நாடொறுமேகசிந்தையனாய் ” என்கிறபடியே அத்யவஸாயத்தைச்சொல்லுகிறது. “ஐ” என்று-ஶ்லேஷ்மம். ஆர்தல்-மிகுதி. “ ஆர்ந்த-ஐ” என்றந்வயித்து முந்தினவர்த்தம். (செறிந்தஶ்லேஷ்மாவானதித்யாதி) “ எய்யாது ” இளையாது. அத்தாலே - (மாருதே) என்றபடி. யத்வா, “ஐயார்” என்று-நிந்தாயாம்பஹுவசநமாய், சேதநஸமாதியாக வர்த்தாந்தரம் (உத்க்ரமணேத்யாதி) இது-ரஸோக்தி. கோழை-ஶ்லேஷ்மம். க்ஷுத்ரனிதித்வநி8. கோழையென்று-க்ஷுத்ரனுக்கும்பேர்.

(ஸுக்ருதபலமன்றோவென்றது) “ 𑌨𑌾𑌧𑌨𑍍𑌯𑌃 𑌕𑍇𑌶𑌵𑌂 𑌸𑍌𑌤𑌿 𑌨𑌾𑌧𑌨𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌚𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 । 𑌨𑌮𑌤𑍍𑌯𑌧𑌨𑍍𑌯𑍋 𑌨 𑌹𑌰𑌿𑌂 𑌨𑌾𑌧𑌨𑍍𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌮𑌾𑌧𑌵𑌮𑍍 ” (நாதந்ய8கேஶவம்ஸௌதிநாதந்யோர்ச்சயதிப்ரபும் । நமத்யதந்யோநஹரிம் நாதந்யோவேத்திமாதவம்) என்றத்தைப்பற்ற. பெற்றிடுவான்-அடையக்கடவன். (ஸர்வர்க்கும் ப்ரயோஜநமாகாதோ) எல்லார்க்கும்செய்யவேண்டிவாராதோவென்றபடி. எனக்கொருவனுக்கும்-உன்ஸந்நிதியிலே ப்ரார்த்தியாநிற்கிற வெனக்கொருவனுக்கு மென்றபடி..*

நான்காம்பாட்டு.

எனக்கேயாட்செய்யெக்காலத்துமென்றென்
மனக்கேவந்திடைவீடின்றிமன்னித்
தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே
யெனக்கேகண்ணனையான்கொள்சிறப்பே.

ஆறுயிரப்படி.

(எனக்கே) தம்மையடிமைசெய்வித்துக்கொள்ளும்படியை யெம்பெருமானைக்கற்பிக்கிறார்.

ஸர்வகாலமு மெனக்கேயடிமைசெய் என்று திருவாயாலேயருளிச்செய்தருளி, ஒருக்ஷணமாத்ரமொழியாமே யென்னெஞ்சிலேபுகுந்திருந்தருளி, தாம்சாத்தியருளும்சாத்து, சந்தநம், திருமாலை, திருப்பரிவட்டங்கள்போலே யென்னைத்தனக்கே சேஷமாகக்கொள்ளுமிதுவேயெனக்கேகண்ணனையான்கொள் சிறப்பென்கிறார்..............................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், காயிகமாயும், மாநஸமாயும், வாசிகமாயுமுள்ள பகவச்சேஷத்வத்தை - கீழ்மூன்றுபாட்டிலு மநுஸந்தித்து, இதில் ப்ரதாநமான ததேகபாரதந்த்ர்யத்தை ப்ரயோஜநதயா நிஷ்கர்ஷிக்கிறார்.

எக்காலத்தும் - எல்லாக்காலத்திலும். எனக்கே - எனக்கே. ஆள் - அடிமை. செய் - செய். என்று - என்றருளிச்செய்து. அவ்வளவினில்லாதே, என் - என். மனக்கே - மநஸ்ஸுக்கே. வந்து - வந்து. இடைவீடு - விச்சேதம். இன்றி - இல்லாதபடி. மன்னி-நிரந்தரவாசம்பண்ணி. தனக்கே - பிறர்க்குமன்றியே, எனக்குமன்றியே, எனக்கும்தனக்குங் கூடவுமன்றியே, தனக்கே. ஆக - பரதந்த்ரனும்படி. என்னை - என்னை. கொள்ளும் - அங்கீகரிக்கும். ஈதே - இதுவே. எனக்கே - எனக்கநுரூபமாக. கண்ணனை - க்ருஷ்ணனை. யான் - நான். கொள் - அபேக்ஷிக்கும். சிறப்பு - ப்ரயோஜநம்.

சிறப்பு - ப்ரயோஜநம்..*

ஈடு - நான்காம்பாட்டு.

இத்திருவாய்மொழியிலிவர் நிஷ்கர்ஷித்த ப்ராப்யமாவது - ஸ்ரக்சந்தநாதிகளோபாதி தனக்கேயாக வெனைக்கொளுமீதே யென்றிறே; இவ்விடத்திலே எம்பாரருளிச்செய்யும்படி - "ஸர்வேஶ்வரன் த்ரிவிதசேதநரையும் ஸ்வரூபாநுரூபமாக வடிமைகொள்ளாநின்றான்; நாமுமிப்படி பெறுவோமேயென்று." முக்தரும்நித்யரும், தாங்களுமாநந்தித்து அவனையு மாநந்திப்பிப்பர்கள்; பத்தர், தாங்களாநந்தியாதே அவனையாநந்திப்பிப்பர்கள்; * இன்புறுமிவ்விளையாட்டுடையானிறே. "*மயர்வறமதிநல மருளப்பெற்றவர், 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே' என்றுப்ரார்த்திப்பானேன் 'திருவுள்ளமானபடிசெய்கிறார்' என்றிராதே" என்றுபிள்ளை திருநறையூரரையர் எம்பாரைக்கேட்க, "அதுகேளீர்; முன்புபிரிந்தன்று, பின்புபிரிவுக்கு ப்ரஸங்கமுண்டாயன்று, இரண்டுமின்றியிருக்கத் திருமார்விலே யிருக்கச்செய்தே, அகலகில்லேன், அகலகில்லேன்' என்னப்பண்ணுகிறது விஷயஸ்வபாவமிறே; அப்படியே ப்ராப்யருசி ப்ரார்த்திக்கப்பண்ணுகிறது" என்றருளிச்செய்தார்,

* எம்மாவீட்டிலெம்மாவீடாய், வைஷ்ணவ ஸர்வஸ்வமுமாய், உபநிஷத்குஹ்யமுமாய், சர்வேஶ்வரன்பக்கலிலே அபேக்ஷித்துப் பெறுமதாய், இவ்வாத்மாவுக்குவகுத்ததுமான பாரதந்த்ர்யத்தை அவன்பக்கலிலேயபேக்ஷிக்கிறார்.

முதலிலே "ஆட்செய்" என்னவேணும்; ஆட்செய்யென்று - ஸ்வாதந்த்ர்யத்தை வ்யாவர்த்திக்கிறது. அதில் "எனக்காட்செய்" என்னவேணும்; எனக்காட்செய் என்று - அப்ராப்தவிஷயங்களை வ்யா

வர்த்திக்கிறது. எனக்கேயாட்செய் என்று - தனக்குமெனக்கும் பொ
துவான நிலையைத்தவிர்த்து, “எனக்கேயாட்செய்” என்னவேணும்.
இதுதான் * ஒழிவில்கால மெல்லாமுடனாய் மன்னிநிற்கவேணும்;
“க்ரியதாமிதிமாம்வத” (க்ரியதாமிதிமாம்வத) என்கிறபடியே, “இ
ன்னத்தைச்செய்” என்றேவிக்கொள்ளவேணும்; இப்படி யொருவார்
த்தை யருளிச்செய்து நெடுங்கைநீட்டாக விருக்கவொண்ணாது, என்
னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுரவேணும்; புகுந்தாலும் போக்கு
வரத்துண்டாகவொண்ணாது, ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாக எழுந்தரு
ளி யிருக்கவேணும். இருந்துகொள்ளும் கார்யமென்னென்னால் (த
னக்கேயாக வெனைக்கொள்ளுமீதே) ஸ்ரக்சந்தநாதிகளோபாதியாகக்
கொள்ளவேணும். அதுகூடுமெவனுக்கும் பூசுமவனுக்கு முழுப்பாய் மிகு
திகழித்துப் பொகடுமித்தனையிறே. ஒருமிதுநமாய்ப் பரிமாறுநின்றால் பி
றக்குமினிமையு மிரண்டுதலைக்கு மொத்திருக்குமிறே, அங்ஙனென்னு
டைய ப்ரீதிக்குநானந்வயித்தவனாக வொண்ணாது. “நின்” என்றும்,
“அம்மா” என்றும் - முன்னிலையாக சம்போதித்துக்கொண்டு போரா
நிற்கச்செய்தே, இங்குபடர்க்கையாகச் சொல்லுவானென் னென்னில்;
“ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுகிறஸமயத்திலே திருமுகத்தைப்பார்க்கில் வ்
யவஸாயங்குலையும்” என்று, கவிழ்ந்திருந்து கையோலைசெய்து கொடு
க்கிறார். (எனக்கேகண்ணனை) “தனக்கேயாக” என்றபின்புத்தை, எ
னக்கேயிறே. புருஷார்த்தமாகைக்காகச் சொல்லுகிறார். ஒருசேதநனிறே
யபேக்ஷிப்பான். நீரபேக்ஷிக்கிறவிதுசெய்வோமாகப்பார்த்தால் எல்லார்க்
கும் செய்யவேணுங்காணுமென்ன (யான்கொள்) ஸ்வரூபஜ்ஞாநத்தை
நீபிறப்பிக்க, அத்தாலே ஸ்வரூபஜ்ஞாநமுடைய நானொருவனும்பெறும்ப
டி பண்ணவேணும். உமக்குமெப்போதும் நம்மாற்செய்யப்போகாதென்
ன (சிறப்பே) பலகால்வேண்டா, ஒருகாலமையும்; அதுதன்னிலும்,
திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு ஒருவரறியாதபடி சிறப்பாகச்செய்
யவு மமையும். சிறப்பாகிறது-ஏற்றம். அதாவது - புருஷார்த்தம். ஸ்வ
ரூபாநுரூபமான புருஷார்த்தத்தைக்கொண்டருளவேணுமென்றபடி. சி
றப்பாவது - முக்தியும், ஸம்பத்தும், நன்றியும். இவற்றில், நானுன்பக்க
ல் கொள்ளும்மோக்ஷம் உனக்கேயாகவெனைக் கொள்ளுமதுவே. உன்பக்
கல் நான்கொள்ளும் ஸம்பத்தென்னவுமாம். நன்றியென்னவுமாம்......*

ஜீயர் அரும்பதம்.

நாலாம்பாட்டு. (எனக்கேயித்யாதி) இத்திருவாய்மொழிக்கு நிதாநமிப்பா
ட்டென்னுமிடந்தோன்ற வருளிச்செய்கிறார் (இத்திருவாய்மொழியிலித்யாதி)
(எனைக்கொள்ளுமீதேயென்றிறே) அத்தையிப்பாட்டிலே யருளிச்செய்கிறானென்
னுகூட்டுவது. சேதநரானவிவர், “ஸ்ரக்சந்தநாத்யசேதநங்களோபாதி விநியோக

ம்கொள்ளவேணும்" என்று உல்லோகமாக ப்ரார்த்திக்கக்கூடுமோவென்ன (இவ்விடத்திலேயித்யாதி) யத்வா, இவர்ப்ரார்த்திக்கைக்கவன் ஸ்ரக்சந்தநாதிகளோபாதியடிமைகொண்டவிடமுண்டோவென்ன (இவ்விடத்திலேயித்யாதி) என்னுதல். இவ்விடத்திலே-இப்படிகண்டவிடமுண்டோவென்கிற சங்காஸ்பதமானவிவ்விடத்திலே. ஸ்வரூபாநுரூபமாக - " தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே " இத்யேவம்ப்ரகாரேண. அயமர்த்தஃ - இவ்விடத்திலே, ஸர்வேஶ்வரன் த்ரிவிதசேதநரையும் ஸ்வபோக்த்ருத்வமின்றியிலே தனக்கேயுறுப்பாம்படி ஸ்வரூபாநுரூபமாகவடிமைகொள்ளாநின்முனன்றே; நாமுமப்படியே ஸ்வரூபாநுரூபமானபேறு பெறுவோமேயென்றருளிச்செய்கிறுரென் றெம்பாரருளிச்செய்யும்படியிதி. த்ரிவிதசேதநரு மத்தலைக்குறுப்பாம்படியை யுபபாதிக்கிருர் (முக்தருமித்யாதி) அதாவது-முக்தரும்நித்யரும், " அஹமந்நம் " (அஹமந்நம்) என்று அவனையாநந்திப்பித்து, அவனுகந்தவழியாலே " அஹமந்நாதஃ " (அகமந்நாதஃ) என்று தாங்களுமாநந்திப்பர்கள்; பத்தர், " அஜ்ஞோஜந்துரநீஶோயம் " (அஜ்ஞோஜந்துரநீஶோயம்) இத்யாதிப்படியே தாங்களாநந்தியாதே அவனுக்குலீலாவிஷயமாய்க்கொண்டு அவனை யாநந்திப்பிப்பர்களென்றபடி. பத்தர்க்குஸ்வதஃ ஆநந்தமில்லையாகில், பகவதாஶ்ரயணமெதுக்காகவென்னில்; " தாங்களுமறிந்துபாரதந்த்ரயாநுகுணமாகஅடிமைசெய்கைக்காகவேணும் " என்றருளிச்செய்வர். அப்படிபத்தசேதநாவனுக்காநந்தாவஹராயிருப்பரோவென்ன (இன்புறுமித்யாதி) (மயர்வறமதிநலமருளப்பெற்றவர்) மயர்வறமதிநலம்பெறுகையாலே * நமஃபதோக்தாசித்வத்பாரதந்த்ர்யஜ்ஞாநமுடையவரென்றபடி. ப்ரவேஶத்திலே- " ஸ்வதந்த்ரனுகையாலே பலாந்தரங்களைக்கொடாமைக்காக ப்ரார்த்திக்கவேணும் " என்றருளிச்செய்து, இங்கே " ப்ராப்யருசியாலே ப்ரார்த்திக்கிருர் " என்கையாலே-ப்ரார்த்தனைக்கிதுவுமொரு ஹேதுவென்று கண்டுகொள்வது.

இத்திருவாய்மொழிக்கு நிதாநமானபாட்டாகையாலே ஏதத்ப்ரதிபாத்யார்த்தவைபவத்தை யருளிச்செய்கிருர் (எம்மாவீட்டிலித்யாதி) ஆயிரத்திலும்வைத்துக்கொண்டு ப்ராப்யநிஷ்கர்ஷபரமான எம்மாவீடு பத்துப்பாட்டும் ஸாரமாயிருக்கும், அதிலுமிது நிதாநமானபாட்டாகையாலே யதிஸாரதமமாயிருக்குமென்றபடி. வைஷ்ணவாதிகாரிக்கவஶ்யாபேக்ஷிதமிந்தப்பாட்டினர்த்தாநுஸந்தாநமிதிதர்ஶயதி (வைஷ்ணவஸர்வஸ்வமுமாயிதி) ஏதஸ்யார்த்தஸ்யமூலப்ரமாணம்மித்யபேக்ஷாயாமாஹ (உபநிஷத்குஹ்யமுமாயிதி) கரவல்ல்யுபநிஷத்ஸித்தமானத்வயத்தில் நமஃபதமிங்குவிவக்ஷிதம். "ச்சாயாவாஸத்வமநுகச்சேத்" (சாயாவாஸத்வமநுகச்சேத்) என்றுமுண்டிறே. ஸ்வரூபாநுரூபபுருஷார்த்தத்வம்தர்ஶயதி (ஸர்வேஶ்வரன்பக்கலிலேயித்யாதி) ஏதேந விசேஷணத்வயேந ச-ராகப்ராப்தத்வம், ஸ்வரூபப்ராப்தத்வம்சோச்யதே.

" ஆட்செய், எனக்காட்செய், எனக்கேயாட்செய், " என்று மூன்றுவகையாக பதத்தைப்பிரித்து, மூன்றுக்கும் வ்யாவர்த்த்யமருளிச்செய்கிருர் (முதலிலேயென்றுதொடங்கி அஞ்சுவாக்யத்தாலே) " எக்காலத்தும் " என்றதுக்குபாவம் (இதநாநித்யாதி) " என்று " என்றதுக்குபாவம் (க்ரியதாமித்யாதி)

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி) நெடுங்கைநீட்டாக - அதிதூரமாக. மனக்கே - மனஸ்ஸிலே. " இடைவீடு " என்றதுக்குபாவம் (புகுந்தாலுமித்யாதி) " மன்னி " என்றதுக்குபாவம் (ஸ்த்தாவரோத்யாதி)

“ தனக்கே ” என்ற ஏவகாரார்த்தம் (ஸ்ரக்சந்தநேத்யாதி) அதுபரார்த்தமாயிருக்குமோவென்ன (அதுகூடுமவனுக்குமித்யாதி) சேஷவஸ்துவுக்கு ஸ்வார்த்ததா ப்ரஸக்தியுண்டோவென்ன (ஒருமிதுநமாயித்யாதி) முன்னிலையாய் - அபரோக்ஷத்வேந. “ தனக்கே ” என்றுபடர்க்கையாகவென்றபடி. படர்க்கையாக - பரோக்ஷமாக. திருமுகத்தைப்பார்க்கில் வ்யவஸாயம் குலைகையாவது - நோக்கும்ஸ்மிதமும் சுழியாறுபடுத்தி ஸ்வரூபத்தை மறக்கும்படியாயிருக்கை. கையோலைசெய்து - நிஷ்கர்ஷித்து.

“ தனக்கேயாக ” என்றவநந்தரம், “ எனக்கே ” என்று - ஸ்வார்த்ததை தோற்றச்சொல்லுகை வ்யாஹதமன்றோவென்ன ; கீழ்நிஷ்கர்ஷித்ததுக் கநுகுணமாக இதுக்கர்த்தம் சொல்லிக்கொள்வதென்கிறார் (தனக்கேயாகவித்யாதி) இப்படியாகிலும் சொல்லவேணுமோவென்ன (புருஷார்த்தேத்யாதி) புருஷார்த்தமானால் “ எனக்கு ” என்னவேணுமோவென்ன (ஒருசேதநனித்யாதி) ஆக, “ எனக்கே ” என்றது-உனக்கேயுறுப்பான வெனக்கென்றபடி. (ஸ்வரூபஜ்ஞாநமித்யாதி) அல்லாதார்க்கு ஏதாத்ருஶஜ்ஞாநமில்லாமையாலே யதிப்ரஸங்கசங்கையில்லையென்றபடி. ஒருகாலவிசேஷத்திலேயேற்றமாகச்செய்யுமதிறே-சிறப்பு;அத்தைப்பற்ற (பலகாலித்யாதி) (பலகால்வேண்டாவித்யாரப்ய, அதாவது புருஷார்த்தமித்யந்தம்) சிறப்பு-மோக்ஷ இத்யஸ்மிந்நர்த்தேசலதி. “கண்ணனை, யான்” என்ற ஏகவசநங்களுக்குபாவம் (அதுதன்னிலுமித்யாதி) புருஷார்த்தமென்றதும், முக்தியென்றதும் - ஏகார்த்தம். ப்ரகரணாநுகுணமானதாத்பர்யம் (ஸ்வரூபாநுரூபமானவித்யாதி) இவற்றில்-இம்மூன்றிலும் வைத்துக்கொண்டு. ஆக, “சிறப்பு” என்றதுக்குமூன்றர்த்தம். எல்லாவற்றுக்கும் பலிதார்த்தமொன்று. நன்றி - நன்மை.

எனக்கேகண்ணனையான்கொள் சிறப்பு-எனக்கேயாட்செய் என்றுதொடங்கி, எனைக்கொள்ளுமீதே யித்யந்வய:. மனக்கேயென்றது - மனத்தேயென்றபடி. இப்படியருளிச்செய்தது, நாலடியும் சேருகைக்காக................................*

ஐந்தாம்பாட்டு

சிறப்பில்வீடுசுவர்க்கநரக
மிறப்பிலெய்துகவெய்தற்கயானும்
பிறப்பில்பல்பிறவிப்பெருமானை
மறப்பொன்றின்றியென்றுமகிழ்வேனே.

ஆறாயிரப்படி.

(சிறப்பில்) தேஹமே ஆத்மாவாகலாம், தேஹாதிரிக்தமாய் நித்யசித்தஜ்ஞாநகுணமான அஹமர்த்தமே ஆத்மாவாகலாம், அதிலோராதரமில்லை; கர்மநிபந்தநமான ஜந்மரஹிதனாய்வைத்து ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாக தேவமநுஷ்யாதிரூபேண வந்துபிறந்தருளும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானுடைய சர்வதிவ்யாவதாரங்களையும் சர்வதிவ்யசேஷ்டிதங்களையும் சர்வகல்யாணகுணங்களையும் மறவாதே என்றுமநுபவிக்கப்பெறவேணுமென்கிறார்.......................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இப்பாரதந்த்ர்யப்ரகாசகரான ஈச்வரனை மறவாதொழிகையாகிற வகுப்பைப்பெறவேணுமென்கிறார்.

இறப்பில்-இச்சரீரத்தைவிட்டவளவிலே. சிறப்பில்-ஆநந்தமாகிறசன்மையிலேயான. வீடு-மோக்ஷம். சுவர்க்கம் - சுகாபாசமானஸ்வர்க்கம். நரகம் - துக்கைகதாநமானநரகமாகிறவிவற்றை. எய்துக-தேஹாத்மாபாநுக்கொண்டுபோய்க்கிட்டவுமாம். எய்தற்க - தேஹம்தானென்று மிவற்றைக்கிட்டாதேமுடிந்துவிடவுமாம். பிறப்பு-தனக்குப்பிறவிக்குறைது. இல்-இன்றியேயிருக்கச்செய்தே. பல்-பஹுதராவாக. பிறவி-பிறக்கக்கடவனை. பெருமானை-ஸர்வேச்வரனை. ஒன்று-இவ்வவதாரத்தாலே யாச்ரிதரை நித்யபரதந்த்ராக்கினகுணசேஷ்டிதங்களொன்றையும். மறப்பின்றி-மறவாதே. என்றும்-என்றும். மகிழ்வேன்-அவிஸ்மரணத்தால்வந்த ஆநந்தத்தையுடையேனாகவேணும்.

கீழ்ப்பாட்டுமிப்பாட்டும் - முன்னிலையன்றியே ஸ்வகதாநுசந்தாநமாயிருக்கிறது..*

ஈடு - ஐந்தாம்பாட்டு.

கீழ் - மநோவாக்காயங்கள் மூன்றுமுண்டான பேற்றையாசைப்பட்டு, இவைமூன்றுமுண்டான அநுபவத்தினுடைய ப்ரீதியிலே யந்தர்ப்பூதனாமிதுக்குமேற்பட வெனக்காயிருக்குமாகாரத்தைத்தவிர்க்கவேணுமென்கிறார்; “ இதுநான்சம்ஸாரிகள்பக்கல் பரிமாறுவதொன்றல்ல, இவர்தாம் தம்மையாராகநினைத்து இந்தப்பேற்றை யபேக்ஷிக்கிறார் என்றாராய்ந்துபார்ப்போம்”என்று, நீராராய்ந்தான் நம்மையிப்படி யபேக்ஷிக்கிறதென்ன; “ தேஹமே ஆத்மா ” என்பார்; “கேவலதேஹத்துக்கு இந்த்ரியமொழிய அநுபவமில்லாமையாலே இந்த்ரியங்களேகாண் ஆத்மா ” என்பார்; அந்த இந்த்ரியங்களும் மநஸ்ஸஹகாரமில்லாதபோது பதார்த்தக்ரஹணம் பண்ணமாட்டாமையாலே மநஸ்ஸேகாண் ஆத்மா என்பார்; ‘‘ அம்மநஸ்ஸுந்தனக்கும் ப்ராணங்கள் ஸஹகரிக்கவேண்டுகையாலே ப்ராணங்காண் ஆத்மா ” என்பார் ; ‘‘ இவையெல்லாமுண்டானாலும் அத்யவசாயம்வேணுமே, அதுக்குக்கருவியான புத்திதத்வமேகாண் ஆத்மா ” என்பார் ; ‘‘ இவையித்தனைக்கு மவ்வருகாய் ஜ்ஞாநகுணகமாய் ஜ்ஞாநஸ்வரூபமாயிருப்பதொன்றாத்மா ” என்பாராகாநிற்பார்கள்; அதிலெனக்கொருநிர்ப்பந்தமில்லை, ஏதேனுமாகவுண்டானவஸ்துதேவர்க்குறுப்பாமிதுவேவேண்டுவதென்கிறார், ‘‘ வபுராதிஷுயோபிகோபிவா ” (வபுராதிஷுயோபிகோபிவா) என்றாற்போலே.

(சிறப்பில்வீடு) நித்யஸம்ஸாரியாய்ப்போந்தவன் நித்யஸூரிகளுடைய அநுபவத்தைப் பெற்றநுபவிக்கக்கடவதாகச் சொல்லுகிறமோக்ஷம், பரிமிதசுகத்தை யுடைத்தானஸ்வர்க்கம், நிஷ்க்ருஷ்டதுக்கமே யா

ணரகம்; இவற்றை சரீரவியோகசமயத்தில் ப்ராபிக்க, ப்ராபியாதொழிக. இதுக்குக்கருத்தென்னென்னில்; தேஹாதிரிக்தனாயிருப்பானொரு ஆத்மாவுண்டாகவுமாம், தேஹமேயாத்மாவாகவுமாம், இதில்நிர்ப்பந்தமில்லையென்கை. தேஹாதிரிக்தமா யிருப்பதொரு வஸ்துவுண்டாகிலிறே ஸ்வர்க்காத்யநுபவங்களுள்ளது, கேவலதேஹம் இங்கேசேதந்தமாகக்காணுகின்றோமிறே. (யானும்) சசப்தத்தாலே - நானிப்பேறித்தனையும் பெறுவதுகாணென்கிறார். ஸ்வரூபநிர்ணயத்தில் நிர்ப்பந்தமின்றிக்கே, " நானேனுமாகவமையும் " என்றிருக்கிறநானும். (பிறப்பில்பல் பிறவிப்பெருமானை) பிறக்கைக்குஹேதுவான கர்மமின்றிக்கே யிருக்கச்செய்தே, கர்மவஶ்யரும் பிறவாதஜன்மங்களிலே பிறக்கவல்ல சர்வாதிகனை. " அஜாயமாநோ பஹுதா விஜாயதே " (அஜாயமாநோபஹுதாவிஜாயதே) (மறப்பொன்றின்றி) அவதாரங்களிலும் சேஷ்டிதங்களிலுமொருமறப்பின்றிக்கே. (மறப்பொன்றின்றி) இத்தலையிலுள்ளதெல்லாம் மறக்கலாம், அத்தலையிலுள்ளதொன்றும் நழுவவொண்ணாது, (என்றும்மகிழ்வேனே) மகிழ்ச்சியென்றும், அநுபவமென்றும்-பர்யாயம். அநுபவிப்பேனென்கிறார். ஆக, இத்தாலே - ஸ்வரூபமும் வெளியிடுகிறார். பெருமானென்கையாலே-தம்முடைய சேஷத்வமும், மறப்பொன்றின்றி என்கையாலே - ஜ்ஞாத்ருத்வமும், என்றுமென்கையாலே - நித்யத்வமும், மகிழ்வு என்கையாலே - போக்த்ருத்வமும்..*

ஜீயர் அரும்பதம்.

அஞ்சாம்பாட்டு. (சிறப்பிலித்யாதி) பூர்வார்த்தத்தைப்பற்ற விஸ்தரேண அவதாரிகை (கீழ்மனோவாக்காயங்களித்யாதி) முதற்பாட்டிலே " பாதபற்புத்தலைசேர்த்து " என்கையாலே - காயிகம் ; இரண்டாம்பாட்டில் " ஞானக்கைதா " என்கையாலே - மாநஸிகம் ; மூன்றும்பாட்டில் " ஏத்தவருள்செய் " என்கையாலே - வாசிகம். க்ரமமவிவக்ஷிதம். " தன்க்கேயாக " என்கையாலே (எனக்காயிருக்குமித்யாதி) இப்படி "ஸ்வர்க்காதிகளைக்கிட்டினோம், கிட்டாதிருப்போம்" என்கைக்குப்ரஸங்கம் ஸம்ஸாதிக்கிறார் (இதுதானித்யாதி) நீராராய்த்தான் நம்மையிப்படி யபேக்ஷிக்கிறதென்றது - " ஆத்மாபிமாநாநுகுணம் புருஷார்த்தவ்யவஸ்த்தயா । பகவத்பாரதந்த்ர்யாதி ப்ரபுத்தஸ்ய ஸுகாயதே " (ஆத்மாபிமாநாநுகுணம்புருஷார்த்தவ்யவஸ்த்தயா । பகவத்பாரதந்த்ர்யாதி ப்ரபுத்தஸ்ய ஸுகாயதே) என்று - ஆத்மாபிமாநாநுரூபமாயன்றோ புருஷார்த்தவ்யவஸ்த்தை யிருப்பதென்றத்தைப்பற்ற. " நீராராய்த்தான் " என்றதுக்குபாவம் - நித்யஸூரிகளிலே யொருவராகநினைத்தோவென்று; நித்யஸூரிகளிலே யொருவனாகவுமாம், சம்ஸாரிசேதநரிலே யொருவனாகவுமா மென்றத்தைச்சொல்லுகிறது (தேஹமேயாத்மாஇத்யாதியாலே) அதுக்குக்கருவியான புத்திதத்வமாத்மாவென்றது - அத்

யவசாயத்துக்குக் காரணமான ஜ்ஞாநமாத்மாவென்றபடி. புத்திதத்வம் - மஹத்தத்வமென்னவுமாம். இதுக்குஸம்வாதம் (வபுராதிஷ்வித்யாதி)

சிறப்பில்வீடு - சிறப்பிலேயானவீடு. அதாவது - சிறப்பையுடைய வீடென்றபடி. சிறப்பு - அதிசயம். வீட்டுக்கதிசயமாவதேதென்ன (நித்யசம்ஸாரியாயித்யாதி) இறப்பு - சரீரவியோகம். " எய்தாக, எய்தற்க " என்றால் - தேஹாதிரிக்தாத்மாவுண்டாகவுமாம், இல்லையாகவுமா மென்கிறவர்த்தத்தைக் காட்டும்படியென்னென்ன ; அதுக்குபபத்தியைக் காட்டுகிறார் (தேஹாதிரிக்தனாயித்யாதி) அதாவது - தேஹாதிரிக்தமா யிருப்பதொருவஸ்துவன்றோ சரீரவியோகத்திலே புண்யபாபபலமான மோக்ஷஸ்வர்க்கநரகங்களை ப்ராபிக்கிறது ; "கேவலதேஹமே ஆத்மா" என்றிருந்தால், அதுதக்ஷமாகாதிறேயிறே, ஸ்வர்க்காதிகளை ப்ராபிக்கக்கூடாதே; ஆகையாலே, "எய்தாக" என்கையாலே - தேஹாதிரிக்தனான ஆத்மாவைச்சொல்லிற்று. " எய்தற்க " என்கையாலே - தேஹமே ஆத்மா என்றதைச் சொல்லிற்றென்றபடி.

சசப்தத்துக்கிரண்டுபாவம். அதாவது - இப்படிப்பட்ட பலத்துக்கயோக்யனான நானுமென்னுதல் ; யத்வா, ஸ்வரூபநிர்ணயத்தில் நிர்ப்பந்தமின்றிக்கேயிருக்கிற நானுமென்னுதல். இவ்வர்த்தத்வயத்தையும் க்ரமேணவருளிச்செய்கிறார் (சசப்தத்தாலே இத்யாதிவாக்யத்வயத்தாலே) முந்தினதுக்கு - நைச்யத்திலே நோக்கு. த்விதியத்துக்கு - பாரதந்த்ர்யத்திலேநோக்கு.

பிறப்பில் - பிறக்கைக்கு ஹேதுவின்றிக்கே யிருக்கச்செய்தே. " பல் " என்றதுக்குபாவம் (கர்மவஶ்யருமித்யாதி) உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் (அஜாயமாந இத்யாதி)

மறப்பொன்றின்றி - ஒருமறப்புமின்றிக்கே யிதிசப்தார்த்தம் ஸ்ருதிஸித்தாய விஸ்ம்ருதிபேதஸ்ய விஷயபேதாநிதத்வாதாஹ (அவதாரங்களிலுமித்யாதி) " ஒன்றின்றி " என்றதுக்குபாவம் (இந்தலீலியிந்பாதி) இந்தலீலையிலுள்ள தெல்லாமென்றது - தேஹாபிமாந ஸ்வாதந்த்ர்யாபிமாந ப்ரப்ருதய:. " மறப்பொன்றின்றி " என்றதுக்கு ப்ரதிகோடித்வேந, அநுபவருபேண நினைப்பேன் என்னாதே, "மகிழ்வேன் " என்பானென்னென்ன (மகிழ்ச்சியென்றுமித்யாதி)

உக்தவிசேஷணங்களாலே ஜீவஸ்வரூபயாதாத்ம்யம் சித்தமாயிற்றென்கிறார் (ஆகவித்யாதி) உக்தார்த்தோபபாதகம் (பெருமானித்யாதி) " பெருமான் " என்று - அவனுடையசேஷித்வம் சொன்னபோதே, தத்ப்ரதிகோடித்வேந சேஷத்வமுமென்றபடி. இத்தனையும் - த்ருதியாக்ஷரசித்தமிறே யென்றபடி.

க்ரமேணாந்வய:...

ஆறும்பாட்டு.

மகிழ்கொடெய்வமுலோகமலோக
மகிழ்கொள்சோதிமலர்ந்தவம்மானே
மகிழ்கொள்சிந்தைசொற்செய்கைகொண்டென்று
மகிழ்வுற்றுன்னைவணங்கவாராயே.

ஆறாயிரப்படி.

(மகிழ்கொள்) பரமகாருண்யத்தாலே யிஜ்ஜகத்தையெல்லாம் படைத்தருளினவனே, என்னுடைய சர்வகரணங்களாலும் சர்வகாலமும் த்வதநுபவைகஸ்வபாவனாய்க்கொண்டுன்னை யநுபவிக்கும்படி வந்தருளவேணுமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இந்த அந்தராநுபவமடியாக பாஹ்யாநுபவத்தை யபேக்ஷிக்கிறார்.

மகிழ்கொள்-ஸுகப்ரசுரமான. தெய்வம் - தேவதாவர்க்கம். உலோகம்-ஜ்ஞாநப்ரகாஶயுக்தமானமநுஷ்யவர்க்கம். அலோகம்-ப்ரகாஶரஹிதமான திர்யக்ஸ்த்தாவரங்கள். மகிழ்-தேஜஸ்விதையால்வந்தவுகப்பை. கொள்-உடைத்தான. சோதி-ஜ்யோதிஃபதார்த்தங்களாய்க்கொண்டு. மலர்ந்த - “ வஹுஸ்யாம் ” (பஹுஸ்யாம்) என்கிறகணக்கிலே விஸ்த்ருதனான. அம்மானே-ஸ்வாமியானவனே. மகிழ்கொள்- உன்பக்கலாபிமுக்யத்தாலே ப்ரீதியுக்தமான. சிந்தை-நினைவையும். சொல்-உக்தியையும். செய்கை-க்ரியையையும். கொண்டு-கொண்டு. என்றும்-சர்வகாலமும். மகிழ்வுற்று-ஆநந்தநிர்ப்பரனாய்க்கொண்டு. நான், உன்னை - இக்கரணத்ரயவ்யாபாரத்தையுண்டாக்கித்தந்தவுன்னை. வணங்க - அநுபவிக்கும்படி. வாராய்-எழுந்தருளிவரவேணும்.

உலோகமலோகமென்று - சேதநாசேதநங்களாகவுமாம் ....

ஈ௫ - ஆறாம்பாட்டு.

தேவாதிபதார்த்தங்களை யுண்டாக்கினாற்போலே, என்னையுமுன்னையநுபவிப்பேனும்படியாகப்பண்ணவேணுமென்கிறாராதல். அன்றியே, தேவாதிபதார்த்தங்களுக்கு ஒரோஸ்வபாவம் நியதமாம்படி பண்ணினாற்போலே, எனக்குன்னை யநுபவிக்குமது நியதஸ்வபாவமாம்படிபண்ணியருளவேணுமென்கிறாராதல்.

(மகிழ்கொள்தெய்வம்) போக்யபோகோபகரண போகஸ்த்தாநங்களாலே மநுஷ்யரிற்காட்டி லாநந்தப்ரசுரராயிருந்துள்ள தேவர்கள். (உலோகம்) லோக்யதஇதி-லோகஃஎன்கிறபடியே, சக்ஷுராதிகரணங்களுக்கு விஷயமான அசித்து. (அலோகம்) இவற்றை க்ரஹிக்கும்சாதநங்களால் க்ரஹிக்கப்படாதேசாஸ்த்ரைக ஸமதிகம்யமானசித்வஸ்து. (மகிழ்கொள்சோதி) தாஹகமான தேஜஃபதார்த்தம். சந்த்ரசூர்யர்களென்னவுமாம். இவற்றையுண்டாக்கின சர்வேஶ்வரனே. “ வஹுஸ்யாம் ” (பஹுஸ்யாம்) என்கிறபடியே தன்விகாசமாகையாலே (மலர்ந்தவென்கிறார்) சிதசித்விஶிஷ்டப்ரஹ்மமேகாரணமுமாய் கார்யமுமாகக்கடவதிறே. நீர்சொன்னவையெல்லாம் செய்தமையுண்டு, உமக்கிப்போது செய்ய

வேண்டுவெறுதானென்னென்ன. (மகிழ்கொளித்யாதி) என்னுடையஹ்ரு தயமுன்னை யநுபவித்து மகிழ்ச்சியையுடைத்தாம்படி பண்ணவேணும், என்னுடையவாக்வ்யவஹாரமு மப்படியேயாகப்பண்ணவேணும், என்னுடைய வ்யாபாரமும் ப்ரீதிபுரஸ்ஸரமாகப்பண்ணும் கைங்கர்யமாகவேணும், நானும்தனியே யநுபவித்து ப்ரீதியையுடையேனும்படிபண்ணவேணும், என்றுமிப்படி நானுன்னை யநுபவிக்கும்படி வரவேணும் ... *

ஜீயர் அரும்பதம்.

ஆறாம்பாட்டு. (மகிழ்கொளித்யாதி) மூர்த்தினவவதாரிகை - "மலர்ந்த" என்றதைப்பற்ற. இரண்டாவது - "மகிழ்கொள்" என்றவிசேஷணத்தைப்பற்ற. ஒரோஸ்வபாவமென்றது - ஆநந்திக்வேந்த்ரியகோசரத்வதநகோசரத்வங்கள்.

அல்லாதார்க்கும் மகிழ்ச்சியுண்டாயிருக்க, இவர்களை "மகிழ்ச்சியையுடையவர்கள்" என்பானென்னென்ன (போக்யேத்யாதி) மகிழ்கொள் - ஆநந்தத்தையுடைய. அச்சிக்கு மகிழ்ச்சியாவது - தாஹகத்வம். தாஹகத்வஸ்யாக்நோரநந்தரேஹத்வாதிதிபாவ:. சந்த்ரஸூர்யர்களுக்கு மகிழ்ச்சி - ப்ரகாசகத்வம். "மலர்ந்த" என்றதுக்குபாவம் (பஹுஸ்யாமித்யாதி) ப்ரஹ்மவிகாஸாவஸ்தஜகந்நித்யத்ராஹ (சிதசித்விசிஷ்டேத்யாதி) சிதசித்விசிஷ்டயதேந-ப்ரஹ்மஸ்வருபவிகார:ஸிந்தஸ்யாதிதிஸங்காசபரிஹ்ருதா.

"மகிழ்கொள் - சிந்தை, மகிழ்கொள் - சொல், மகிழ்கொள் - செய்கை" என்றபடி. முடியானேயிற்கரணங்களையுடையராகையாலே "இவையெல்லாம்மகிழ்ச்சியுடைத்தாம்படிபண்ணவேணும்" என்னக்குறையில்லை. இத்தால் தாத்பர்யம்- ப்ரீதிபூர்வகமாக நான் நினைக்கைக்காகவும் சொல்லுகைக்காகவும் செய்கைக்காகவுமென்றபடி.

முதல்மூன்றுபாட்டிலேயும் - கரணத்ரயங்களாலு மபேக்ஷித்தபேற்றை, "மகிழ்கொள்" என்று ப்ரீதிபூர்வகமாக வேணுமென்றுமதுவும், தாமுமநுபவித்து மகிழவேணுமென்றுமதுவு மிப்பாட்டுக்குவிசேஷம். மேற்பாட்டி லிப்பாட்டுக்குவிசேஷம் - கரணத்ரயங்களோடே தாமுமநுபவிக்கை.

மகிழ்கொள்தெய்வமித்யாப்ய, சோதியாய்க்கொண்டுமலர்ந்தவம்மானே, மகிழ்கொள்சிந்தைசொற்செய்கைகொண்டு என்றும் நானும் மகிழ்வுற்று உன்னைவணங்கவாராய் இத்யந்வய: ....*

ஏழாம்பாட்டு.

வாராயுன்திருப்பாதமலர்க்கீழ்
பேராதேயான்வந்தடையும்படி
தாராதாயுன்னையென்னுள்வைப்பிலென்று
மாராதாயெனக்கென்றுமெக்காலே.

ஆறாயிரப்படி.

(வாராய்) உன்னுடைய நிரவதிகபோக்யதையை யெனக்குக்காட்டிவைத்துன்னை புஜிக்கத்தாராதிருக்கிறநீ, சர்வகாலமு முன்திருப்பாத மலர்க்கீழ் பேராதேயான் வந்தடையும்படி, பிரானே வாராயென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆந்தராநுபவ மாத்ரமாமையாலே ஸவிஷாதமாக பாஹ்யாநுபவாபேக்ஷை பண்ணுகிறார்.

உன்னை - நித்யாநுபாவ்யனானவுன்னை. என்னுள் - என்னெஞ்சுக்குள்ளே. என்றும் - நிரந்தரமாக. வைப்பில் - வைக்குமிடத்தில். எனக்காராதாய் - "அமையும்" என்னும்படியெனக்கத்ருப்திகரனாய். என்றும் - எல்லாநாளிலும். எக்கால் - எல்லாப்போதிலும். உன் - ப்ராப்தனானவுன்னுடைய. திரு - ஶ்லாக்யமாய். மலர் - போக்யமான. பாதம் - திருவடிகளிலே. கீழ் - பாதந்த்ரனாய்க்கொண்டு. பேராதே - விஶ்லேஷரஹிதனும்படி. யான் - நான். வந்து - வந்து. அடையும்படி - கிட்டுகைக்கு. தாராதாய் - அவகாசந்தாராதவனே. உன்திருப்பாதமலர்க்கீழ்பேராதேயான் வந்தடையும்படி - நானப்படிகிட்டும்படி. வாராய் - வந்தருளவேணும்.*

ஈடு - ஏழாம்பாட்டு.

தம்முடைய அபிநிவேசத்தாலே, எல்லாக்காலமுமென்னையடிமைகொள்ள வரவேணுமென்கிறார்.

உன்னுடையநிரதிசயபோக்யமான திருவடிகளின்கீழே புநராவ்ருத்தியில்லாதபேற்றை நான்பெறும்படியுன்னை யெனக்குத்தாராதேயிருக்கிறவனே. வாராத இன்னாப்பாலே, தாராதாய் என்று - இத்தையவனுக்கு நிரூபகமாகச் சொல்லுகிறார். அந்யபரோக்தியிலே - ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார். தானினையாவிட்டால் நெஞ்சிலே ப்ரகாசிக்கிறவத்தைத் தவிர்க்கவுமாமிறே. அகவாய் பெரியதிருநாளாய்ச் செல்லாநின்றது. நிரதிசயபோக்யனானவுன்னை பாஹ்யசம்ஶ்லேஷம் பண்ணுதபோது தரிக்கமாட்டாத என்னுடையஹ்ருதயத்திலே யுன்னைக்கொண்டு புகுந்துவைக்குமிடத்தில், ஒருநாளுமமையாதபடி யிருக்கிறவனே. (எனக்கென்றுமெக்காலே) எனக்கெல்லாக்காலத்திலு மெல்லாவவஸ்த்தையிலும், வாராய் - வரவேணும். உன்திருப்பாத மலர்க்கீழ்பேராதேயான் வந்தடையும்படி - தாராதாயென்னுதல், வாராயென்னுதல்,....... ....*

ஜீயர் அரும்பதம்.

ஏழாம்பாட்டு. (வாராயித்யாதி) "நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து" என்றுவைத்து, இப்போது "வாராய்" என்கிறதென்னென்ன (தம்முடையவித்

யாதி) அபிநிவேசத்தாலேயென்றது - பாஹ்யஸம்ஶ்லேஷத்தை யபேக்ஷித்தென்றபடி.

சப்தார்த்தம் (உன்னுடையவித்யாதி) புநராவ்ருத்தியில்லாத வென்றது - "ந ச புநராவர்த்ததே" (அநாவ்ருத்திஶ்ஶப்தாத்) இத்யாதிஸூத்ரத்தைப்பற்ற. "தாராதாய" என்று நிரூபகமாகச் சொல்லும்படியென்னென்ன (வாராதவித்யாதி) இன்னுப்பு - வெறுப்பு. (அர்யபரோக்தியிலேயிதி) தாராதேயிருக்கிறவனே யென்றதாராமைக்கு கர்மத்வேந "உன்திருப்பாதமலர்" என்கையாலே, அதாநாபிதாந பரோக்தியிலே - "உன்திருப்பாத மலர்க்கீழ்ப்போகாதே யான்வந்தடையும்படி" என்றுப்ராப்ய நிஷ்கர்ஷம்பண்ணுகிறு னென்றபடி.

"உன்னையென்னுள்வைப்பிலென்று மாராதாய்" என்றதுக்குத்தாத்பர்யம் (தரனையாவிட்டாலித்யாதி) சப்தார்த்தம் (நிரதிசயேத்யாதி) "வைப்பில்" (வைக்குமிடத்தில்) அமையாதபடி - த்ருப்தனுகாதபடி.

தாராதாயென்னுதல் வாராயென்னுதல் என்றதுக்கர்த்தம் - "யான்வந்தடையும்படி" என்றதுக்கு - "தாராதாய்" என்றத்தோடே யந்வயமாதல், "வாராய்" என்றத்தோடே யந்வயமாதலென்று. முந்தினபக்ஷத்துக்கு - உன்திருப்பாதமலர்க் கீழித்யாரப்ய, எக்காலும் வாராயித்யந்வயஃ. த்விதியபக்ஷத்துக்கு - உன்னைத்தாராதாய், உன்னையென்னுள் வைப்பிலித்யாரப்ய, எக்காலுமுன் திருப்பாதமலர்க்கீழ்ப் போகாதேயான் வந்தடையும்படி வாராயென்றந்வயம். இப்பக்ஷத்தில் "உன்னை" என்றத்தை - "தாராதாய்" என்றதிலும்கூட்டுவது.........................*

எட்டாம்பாட்டு.

எக்காலத்தெந்தையாயென்னுண்மன்னின்மற்
றெக்காலத்திலும்யாதொன்றும்வேண்டேன்
மிக்கார்வேதவிமலர்விழுங்குமென்
னக்காரக்கனியேயுன்னையானே.

ஆறாயிரப்படி.

(எக்காலத்து) எக்காலமுமென்னை யெல்லாவடிமையுஞ் செய்வித்துக் கொண்டென்னுள்ளே மன்னிலுன்னைப்பின்னை யொருகாலமுமொன்று மபேக்ஷிக்கிறிலேன் என்றுகொண்டெம் பெருமானையபேக்ஷித்து, பின்னையுமெம்பெருமானுக் கடிமைசெய்கையிலுள்ள ஸ்ப்ருஹையாலே, எம்பெருமானையுள்ளபடி கண்டநுபவிக்கிற மஹாத்மாக்களாரோவென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அத்யல்பகாலாநுபவம்பெறினுமதொழிய வேறொன்றும்வேண்டா என்கிற அத்யபிநிவேசத்தை யருளிச்செய்கிறார்.

மிக்கார் - அதிசயிதஸ்வபாவராய். வேதம் - வைதிகாக்ரேஸரரான. விமலர் - நிர்மலரானவர்கள். விழுங்கும் - தங்களாதராதிசயத்தாலே கபளீகரித்தநுபவிக்குங்கணக்கிலே. என் - எனக்கு. அக்காரம் - அக்காரந்தோய்ந்த. கனியே - கனிபோலேபோக்யபூதனானவனே. எக்காலத்து - ஏதேனுமல்பகாலத்திலேயாகிலும். எந்தையாய் - எனக்குஸ்வாமியானவாகாரந்தோன்றும்படி. என்னுள் - என்னெஞ்சிலே. மன்னில் - ப்ரகாசிப்பித்துநிற்கப்பெறில். மற்று - இதொழிய. எக்காலத்திலும் - எல்லாக்காலத்திலும். யாது - ஏதேனும். ஒன்றும் - ஒன்றையும். உன்னை - உன்னை. யான் - நான், வேண்டேன் - அபேக்ஷியேன்..................................*

---

௬ - எட்டாம்பாட்டு.

அத்யல்பகாலமாகிலும் சேஷியாய் என்னோடே சம்ஶ்லேஷிக்கப்பெறில், பின்னையொருகாலமு மிதுவும்வேண்டாவென்று, தமக்கு அடிமைசெய்கையிலுண்டான விடாயின்மிகுதியை யருளிச்செய்கிறார்.

(எக்காலமித்யாதி) இதுக்கு ஆளவந்தா ரருளிச்செய்யும்படி - “ இனிக்கூறிடவொண்ணாதபடி சிறுகூறான அத்யல்பகாலத்திலும், நீஸ்வாமியான முறைதப்பாதபடி என்ஹ்ருதயத்திலேவந்து புகுரப்பெறில், மற்றெக்காலத்திலும் - இதொழிந்த எல்லாக்காலத்திலும், யாதொன்றும்வேண்டேன், பின்னையிதுதானும்வேண்டேன். ஜ்வரஸந்நிபதிதர். ‘ ஒருகால் நாக்குநனைக்க ’ என்னுமாபோலே. ‘ க்ஷணகால மநுபவிக்கவமையும்’ என்னும்படியான விஷயமுண் டோவென்ன (மிக்காரித்யாதி) பகவதநுபவத்தில் மிக்காராய், ‘யத்ருஷய꞉ ப்ரதமஜா யே புராணா꞉’ (யத்ருஷய꞉ப்ரதமஜாயேபுராணா꞉) என்கிறபடியே வேதத்திலே விமலராக ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள நித்யஸூரிகளநுபவியாநின்றுள்ள அக்காரம்போலவும் கனிபோலவுமுண்டான வுன்னுடைய போக்யதாதிசயத்தை எனக்குப்ரகாசிப்பித்தவனே. அக்காரம்-வ்ருக்ஷமாய், அதுகோட்புக்குப் பழுத்தபழம்போலே நிரதிசயபோக்யனானவனே. அக்காரக்கனி என்கிறவிது - அவர்களுக்கு சர்வவிதபோக்யங்களும்தானே யென்னுமிடத்துக்குபலக்ஷணம். (உன்னையானே) இப்படி நிரதிசயபோக்யனானவுன்னை, உன்சுவடறிந்தநான், எக்காலத்தெந்தையாயென்னுள் மன்னில் மற்றெக்காலத்திலும் யாதொன்றும்வேண்டேன்.” இத்தையெம்பெருமானார் கேட்டருளி, “ இதுபொருளழகியது ; இவ்வாழ்வாருடையப்ரக்ருதிக்குச்சேராது, பெறிலும் பெறுதொழியிலும் சிறுகக்கோலமாட்டார் ; இங்ஙனேயாகவேணும்” என்றருளிச்செய்வர்.

(எக்காலத்தித்யாதி) எல்லாக்காலத்திலுமெனக்கு சேஷியானநீ நான்சேஷமானமுறை தப்பாமேவந்து என்ஹ்ருதயத்திலே புகுரப்பெறில், எக்காலத்திலும் - இக்காலமெல்லாவற்றிலும், (மற்று-யாதொன்றும்-வேண்டேன்) பின்னையிதொழிந்த மற்றொன்றையும் நான்வேண்டேன்.*

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (எக்காலத்தெந்தையாய்) ஆளவந்தார்நிர்வாஹத்திலே யவதாரிகை (அத்யல்பகாலமித்யாதி)

கூறிட - பாகிக்க. திருகுருன - தாழ்மாத்ரமான. ஸ்வாமியான முறையென்றது - "எந்தையாய்" என்றதுக்கு அர்த்தம். இதொழிந்த - இவ்வத்யல்பகாலமொழிந்த. "யாதொன்றும்" என்றதுக்குபாவம் (பின்னையிருந்தாலுமித்யாதி) பின்னையிருந்தாலும்வேண்டேன் - பின்னையிப்படிப்பட்ட அத்யல்பக்ஷணகாலாநுபவமும்வேண்டேன். அப்படியொருகா லநுபவிப்பித்தால் பின்னையத்தியாபோமோவென்ன (ஜ்வரேத்யாதி)

(யத்ருதையஇத்யாதி) ஸநத்குமாரர்முதலானோர் பகவதநுபவாதிக்யம் சொல்லப்படுகிறது. புராணம் - புராதநனான. பகவதநுபவே நித்யாபூர்வாதி. ஏதேந - விமலத்வம்வித்தம். அக்காரம் - சர்க்கரைக்கட்டி. அக்காரத்தினுடைய கனியென்று அர்த்தாந்தரம். (அக்காரம்பருதுமாயித்யாதி) கோட்புக்கு - நுதருமாக. முந்தினவர்த்தத்திலே யருளிச்செய்தார் (அக்காரக்கனியே யென்கிறவித்யாதி)

திருக்கோளுகை - அல்பமாக புஜிப்பிக்கை. ஆளவந்தார் நிர்வாஹத்திலே, "எக்காலத்து" என்றது - அத்யல்பகாலத்திலுமென்றபடி. எம்பெருமானார் நிர்வாஹத்திலே, "எக்காலத்து" என்றது - எல்லாக்காலத்திலுமென்றபடி. (மற்று-யாதொன்றும்வேண்டேன்) பகவத்வ்யதிரிக்த புருஷார்த்தங்களொன்றும் வேண்டேன்.

ஆளவந்தார்நிர்வாஹத்திலே, மிக்காரிவேத விமலர்விழுங்கும் என்னக்காரக் கனியே - எக்காலத்தெந்தையா யென்னுள்மன்னில் மற்றெக்காலத்திலும் - யான் - உன்னை - யாதொன்றும் வேண்டேனித்யந்வயம். எம்பெருமானார் நிர்வாஹத்திலே, மிக்காரிவேத மித்யாரப்ய, கனியே - எக்காலத்தெந்தையாயென்னுள் மன்னில் - எக்காலத்திலும் - யான் - உன்னை - மற்று - யாதொன்றும் வேண்டேனித்யந்வயம்?..

ஒன்பதாம்பாட்டு.

யானேயென்னையறியகிலாதே
யானேயென்றனதேயென்றிருந்தேன்
யானேநீயென்னுடைமையுநீயே
வானேயேத்துமெம்வானவரேறே.

ஆறாயிரப்படி.

(யானே) நானுமென்னுடைமையுமுனக்கேயடிமையாயிருக்கச்செய்தே, இதுக்குமுன்புபோன காலமெல்லாம் "உனக்கடிமை" என்னுமிடத்தை யறியாதே, நானென்றுமென்னுடையதென்றுமுண்டான

ஸ்வாதந்த்ர்யாபிமாநத்தாலே நஷ்டனேனென்று தம்முடைய இழவை யநுசந்தித்து அத்யந்தமவஸந்நராய், ஸ்வபாவதஏவாஸ்க்கவிதஜ்ஞாநரா யொருக்ஷணமாத்ரமு மெம்பெருமானை யிழவாதே திருநாட்டிலேயிருந் தநுபவிக்கிறவர்க ளாரோவென்கிறார்.......................................*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஸம்பந்தம ப்ருதர்ஸித்தமாயிருக்க அநாத்யஜ்ஞாநத்தாலே அஹங்காரமமகாரதூஷிதனு யிழந்தேனென்கிறார்.

யானே - நான்றானே. என்னை - என்விஷயத்திலே. அறிய - யாதாத்ம்யஜ்ஞாநம். கிலாதே - இல்லாமையாலே. யானே - நான் ஸ்வதந்த்ரனேயாகவும். என் தனதே - என்னையொழிந்தவையென்னுடைமையாகவும். என்று - அஹங்காரமமகாரங்களைப்பண்ணி. இருந்தேன் - முடிந்துபோகாதே ஆத்மநித்யத்வமுமநர்த்தஸாஹ மாம்படியிருந்தேன். வானே - இவ்வறிவுகேடின்றியிலே யாதாத்ம்யஜ்ஞாநம் நடையாடும்பரமபதமாக. ஏத்தும்-உன்னுடையசம்பந்தத்தையேத்தும்படி. அவ்வானவர் - அங்குள்ளார்க்கு. ஏறே-சேஷியானசெருக்குத்தோன்றவிருக்குமவனே. அர்த்தஸ்த்திதியுணர்ந்தால், யான் - நான். நீயே - நீயேயென்னலாம்படி அப்ருதக்ஸித்தப்ரகாரபூதனாயிருப்பன். என்னுடைமையும் - என்னுடைமையானவையும். நீயே- உனக்கப்படி ப்ரகாரமாய்க்கொண்டு நீயேயென்னலாம்படியாயிருக்கும்...*

ஈடு - ஒன்பதாம்பாட்டு.

“ மிக்கார்வேதவிமலர் விழுங்கும் ” என்றுநித்யசூரிகள் நித்யாநுபவம் பண்ணுகிறபடியை யநுசந்தித்தார் ; அவர்களோடொத்த ப்ராப்திதமக்குண்டாயிருக்க, இழந்திருக்கிறபடியையு மநுசந்தித்து அநர்த்தப்பட்டேனென்கிறார்.

(யானே) என்னிழவுபகவத்க்ருதமல்ல, அவன் * எதிர்சூழல்புக்குத் திரியாநிற்க, நானேகிடீர் விநாசத்தைச் சூழ்த்துக்கொண்டேனென்கிறார். (என்னையறியகிலாதே) ராஜபுத்ரன் வேடன்கையிலேயகப்பட்டுத் தன்னைவேடனாக ப்ரதிபத்திபண்ணுமாபோலே, சர்வேஸ்வரனுக்கு ப்ரகாரபூதனான என்னையறியாதே. (யானேயென்றனதேயென்றிருந்தேன்) “ அவனும் அவனுடைமையும் ” என்றிருக்கைதவிர்ந்து, நானுமென்னுடைமையுமென்று வகுத்துக்கொண்டுபோந்தேன். (இருந்தேன்) இப்படிநெடுநாள் போருகிறவிடத்தில் ஒருநாளநுதாபம் பிறக்கவுமாமிறே, அதின்றிக்கே க்ருதக்ருத்யனாய் நிர்ப்பரனாயிருந்தேன்; [தீவினையேன் வாளாவிருந்தேன்] என்னுமாபோலே - “ அஹம்ஸர்வம்கரிஷ்யாமி ” (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்கைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க, ஒருகார்யமில்லாதாரைப்போலே கையொழிந்திருந்தேன்; “ முடிந்தேன் ” எ

ன்றும்போலே யிருக்கிறதிறே; ஒருநாளையிறவேபோந்திருக்க, அநாதிகாலமிறந்துபோந்தேன்.

அங்ஙனன்றோ அர்த்ததத்வமென்ன (யானேநீ) "அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" (அஹம்மநுரபவம்ஸூர்யஶ்ச) என்னுமிப்பர்களாயிற்று முக்தர், "மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம்" (மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்) என்னுமிப்பர் ஸம்ஸாரத்தில் தெளிவுடையார்; "அஹம் ப்ரஹ்மாஸ்மி" (அஹம்ப்ரஹ்மாஸ்மி) "நான்ராஜபுத்ரன்" என்னுமாபோலே, "நான் ப்ரஹ்மம்" என்னலாம்படியிறே ஸம்பந்தமிருக்கும்படி. "ஸவாஸுதேவ:" (ஸவாஸுதேவ:) என்றது வாஸுதேவ சரீரமென்றபடியிறே. (என்னுடைமையும்நீயே) "யஸ்யைதே தஸ்ய தத்தநம்" (யஸ்யைதேதஸ்யதத்தநம்) என்னுமாபோலே. இதெல்லாம் கண்டு சொல்லும் வார்த்தையென்ன; நித்யஸூரிகளுடைய இப்படியன்றோ வென்னோடு அநுபவிப்பது. "ஜக்ஷத் க்ரீடந்" (ஜக்ஷத்க்ரீடந்) என்கிறபடியே (வானேயேத்துமென்கிறது) (எல்லாரையுமன்றோ) அவர்கள் தங்கள் சேஷத்வாநுரூபமாக அடிமைசெய்யாநிற்க, இவனும் தன் சேஷித்வத்தால் வந்தவுத்கர்ஷத்தோடிருக்குமிறே. அன்று - எனக்குமவர்களோடொத்த ப்ராப்தியுண்டாயிருக்க, இழந்தொழிந்தேனென்கிறார்..........................

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (யானேயென்னையித்யாதி) ப்ராப்யவிஷயத்தைப் பண்ணுகிறவிடத்தில் "அஹங்காரமமகாரங்கள்" (செட்டுப்போனேன்) என்றருளிச்செய்கைக்கு ப்ரஸங்கமேதென்ன (மிக்கார்வேதவிமலரித்யாதி) ப்ராப்தி - மோக்ஷத்வம்.

அவதாரணார்த்தம் (என்னிறவித்யாதி) (பகவத்க்ருதமல்லவித்தி) "ஏதாவதேவாஸ்திதிகலஸ்ய" (மத்பரமேயாஸ்ரமிஸ்மாஸீத்) "ஸங்கேமத்பாக்ட ஸம்க்ஷயாஸ" (ஸங்கேமத்பாக்டஸம்க்ஷயாத்) இத்யாதிவத். குழ்ந்து - ஸம்பாதித்து.

"யானேயென்றனதே" என்கிற ஏவகாரார்த்தம் (அவனுடைமையித்யாதி) வகுத்த - விபஜித்த. "இருந்தேன்" என்றதுக்கு வாஸனை (இப்படியித்யாதி) உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம் (நினைவேயெனித்யாதி) பெரியதிருவந்தாதி. ஸங்கர்மத்தைப்பண்ணின நான்வ்யர்த்தமேயிருந்து விட்டேனென்றுபாஸரார்த்தம். "வாளாவிருந்தேன்" என்றதுக்குபாவம் (அஹம்ஸர்வமித்யாதி) "ஒழிந்தேன்" இத்யஸ்யபாவம் (முடிந்தேனித்யாதி) "இறந்தநாள்களெல்லாம்" இத்யஸ்யபாவமாஹ (ஒருநாளையித்யாதி) அத்ர "யந்முஹூர்த்தம்" (யந்முஹூர்த்தம்) இத்யாத்யநுஸந்தேயம்.

“யானே நீ” என்கிறஸாமாநாதிகரண்யம் - சரீராத்மபாவ நிபந்தநமென்று திருவுள்ளம்பற்றி, இப்படியைக்யமாகச் சொன்னபேருண்டோவென்ன (அஹம்மநுரபவமித்யாதி) ப்ருஹதாரண்யகே சதுர்த்தேப்ராஹ்மணே, “தத்தைதத் பஶ்யந் ருஷிர் வாமதேவ: ப்ரதிபேதேஹம் மநுரபவம் ஸூர்யஶ்சேதி ததிதமப்யேதர்ஹி ய ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி” (தத்தைதத் பஶ்யந்ருஷிர்வாமதேவ:ப்ரதிபேதே அஹம்மநுரபவம்ஸூர்யஶ்சேதிததிதமப்யேதர்ஹிய ஏவம்வேதாஹம்ப்ரஹ்மாஸ்மீதி) ஏதத் - ப்ரஹ்ம, பஶ்யந்-வாமதேவ:-ருஷி:- அஹம்மநுரபவம்ஸூர்யஶ்சாபவம்-இதிப்ரதிபேதே. ப்ரதமேம்ஶே ஏகோநவிம்ஶே ப்ரஹ்லாதஸ்தோத்ரம், “யத்ர ஸர்வம் யத: ஸர்வம் ய: ஸர்வம் ஸர்வதஶ்ச ய: | ஸர்வகத்வாதநந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்த்தித: | மத்த: ஸர்வமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே | அஹமேவாவ்யயோநந்த:” (யத்ரஸர்வம்யதஸ்ஸர்வம்யஸ்ஸர்வம்ஸர்வதஶ்சய: | ஸர்வகத்வாதநந்தஸ்யஸஏவாஹமவஸ்த்தித: | மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்மயிஸர்வம்ஸநாதநே | அஹமேவாவ்யயோநந்த:) இத்யாதி. ஏவம்ப்ரயோக்தும் ஹேதுமாஹ (அஹம்ப்ரஹ்மாஸ்மீத்யாதி) ஸம்பந்தம்-ப்ரகாரப்ரகாரிபாவ:, கார்யகாரணபாவஶ்ச. “ஸவாஸுதேவ:” (ஸவாஸுதேவ:) இதி-ஐக்யமேவஹ்யபிஹிதம் இத்யத்ராஹ (ஸவாஸுதேவஇத்யாதி) த்விதீயம்ஶே த்வாதஶே, “ஜ்ஞாநம் விஶுத்தம் விமலம் விஶோகமஶேஷலோபாதிநிரஸ்தஸங்கம் | ஏகம் ஸதைகம் பரம: பரேஶஸ்ஸ வாஸுதேவோ ந யதோந்யதஸ்தி” (ஜ்ஞாநம்விஶுத்தம்விமலம்விஶோகமஶேஷலோபாதிநிரஸ்தஸங்கம் | ஏகம்ஸதைகம்பரம:பரேஶஸ்ஸவாஸுதேவோநயதோந்யதஸ்தி)

(யஸ்யைதஇத்யாதி) மஹாபாரதே உத்யோகபர்வணி த்ருதராஷ்ட்ரம்ப்ரதிவிதுர:, “த்ரய ஏவாதநா ராஜந் பார்யா தாஸஸ்ததா ஸுத: | யத்தே ஸமதிகச்சந்தி யஸ்யைதே தஸ்ய தத்தநம்” (த்ரயஏவாதநாராஜந்பார்யாதாஸஸ்ததாஸுத: | யத்தேஸமதிகச்சந்தியஸ்யைதேதஸ்யதத்தநம்)

“வானேயேத்தும்” என்கிறதுக்கு - ஒருநாடாகவேத்துகிற இத்யமர்த்தம் ஸூசிதாயாஹ (நித்யஸூரிகளித்யாதி) “ஏத்தும்” என்கிற பதஸாமர்த்த்யத்தாலே, “வான்” என்கிறவிது - நித்யஸூரிகளைச்சொல்லுகிறதென்றபடி. “எம்” என்றது - ஏற்றுக்கு விசேஷணம்.

வானேயேத்துமெம் வானவரேறே-யானேயென்னை யிர்யாரப்யாந்வய:...॥

பத்தாம்பாட்டு.

ஏறேலேழும்வென்றேர்கொளிலங்கையை
நீறேசெய்தநெடுஞ்சுடர்ச்சோதி
தேறேலென்னையுன்பொன்னடிசேர்த்தொல்லை
வேறேபோகவெஞ்ஞான்றும்விடலே.

ஆறாயிரப்படி.

(ஏறேல்) இந்தப்ராப்யத்தைப்பெறுகைக்கு ப்ரதிபந்தகங்களுளவேயென்னில்; அவற்றையெல்லாம், நப்பின்னைப்பிராட்டிக்கும், அசோகவநிகையில் பிராட்டிக்கும் உன்னோடு சம்ஶ்லேஷிக்கைக்கு ப்ரதிபந்தகங்களை நீயேபோக்கினாற்போலே போக்கியருளி, உன்திருவடிகளிலேயென்னை யிண்டெனச்சேர்த்தருளி, உன்திருவடிகளில் நிழலும் அடிதாறும்போலே பின்னையொருகாலமும் முன்னைப்பிரியாததொருபடிபண்ணியருளவேணும்; இப்படியிக்ஷணமே செய்தருளாவிடில் ஒன்றும் தரியேனென்கிறார்..*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அந்தசம்பந்தங்குலையாதபடி யென்னைக் கைவிடாதொழியவேணுமென்கிறார்.

ஏல்-ஏன்றுகொண்ட. ஏறு-ஏறு. ஏழும்-ஏழையும். வென்று - வென்று. ஏர்-அழகை. கொள்-உடைத்தான. இலங்கையை-லங்கையை. நீறேசெய்த-பஸ்மஸாத்கரித்ததாலே. நெடும்-மிக்க. சுடர்-தேஜஸ்ஸையுடையனான. சோதி-உஜ்ஜ்வலனின்றேனே. என்னை- என்னை. தேறேல் - "எனக்குநல்லையுமல்லவன்" என்று விஶ்வஸியாதே. உன்-உன்னுடைய. பொன்-உஜ்ஜ்வலமான. அடி-திருவடிகளிலே. ஒல்லை-சடக்கென. சேர்த்து-சேர்த்து. வேறேபோக - விஷயாந்தரங்களை நினைத்து வேறுபோகும்படி. எஞ்ஞான்றும்-எல்லாக்காலத்திலும். விடல்-விடாதொழியவேணும்.

விநிவிர்மிதமான இந்த அந்வயத்தைப்பாலகம்பண்ணி, விடாதொழியவேணுமென்று கருத்து..*

௰ - பத்தாம்பாட்டு.

"யானேயென்றனதேயென்றிருந்தேன்" என்று நிரூபிக்கும்படிபண்ணினையாகில் உமக்குச்செய்யவேண்டுவதொன்றுண்டோ, நீரிங்ஙனேகிடந்துபடுகிறதெதுக்காகவென்ன; இதுக்காகவென்கிறார்.

(ஏறேலேழும்வென்று) ஏழுரிலேழையும்வென்று. நப்பின்னைப்பிராட்டியோட்டை சம்ஶ்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான ருஷபங்களேழையும்வென்று. (ஏர்கொளிலங்கையை) தர்ஶநீயமாய்க்கட்டுடைத்தானலங்கையை. "அஹோவீர்யமஹோதைர்யம்" (அஹோவீர்யமஹோதைர்யம்) என்று திருவடிமதிக்கும்படியானலங்கையை. [வஹுவைஷியஸ்ஸஹஸ்ரஸோ] [பஹுவபுத்திஸ்துஹரீஶ்வரஸ்ய] ராவணனும் ஸ்த்ரீகளுமாயிருக்கிற இருப்பைக்கண்டவாறே, தானுமொரு சமுதாயத்துக்குக்கடவனாகையாலே இங்ஙனேயிருப்பதொரு புத்திபிறந்தது. [யதீத்ருஶீத்யாதி] [யதீத்ருஶீத்யாதி] பையல், தானும் ஸ்த்ரீகளுமாயிருக்கிற இருப்பைப் பெருமாளும்பிராட்டியுமாயிருக்க சம்பவித்தானாகில்,

இந்த ஐஶ்வர்யம் குலையாதிருக்கலாயிற்றுக்கிடீர். [ஜாயமாநாக்ஷய, ராஜஹம்ஸஜாதரூபேஷு க்ஷிதிஷு] [இமாயதாராக்ஷஸராஜபார்யா ஸுஜாதமஸ்யேதி ஹிஸா து புத்ரே:] " சத்ருக்களுக்கும் நன்மைவேணும்" என்றிருக்கும்புத்தியையுடையவனுக்கு. (நீறுசெய்த) பிராட்டியருளிச்செய்தபடியே பஸ்மசேஷமாம்படிபண்ணின. (நெடுஞ்சுடர்ச்சோதி) ராவணனைப்பரிகரத்தோடேகொன்று, கையும்வில்லுமான வீரஶ்ரீயோடேநின்றநிலை. அவ்விரோதிகளைப்போக்கினாற்போலே யென்னுடைய விரோதிகளையும் போக்கவேணுமென்கிறார். (தேறேலென்னை) நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்தில் ப்ரதிபந்தகம்போக்கவமையும், ஶ்ரீஜநகராஜன்திருமகளளவில் அவளைப்பிரித்தராவணனை முடிக்கவமையும், அவர்களை யுனக்காக்கவேண்டா; பண்டேயுனக்காயிருக்கையாலே; அப்படியே " இவன்விரோதிகளைப்போக்கி நமக்காக்கினோமாகில் இனியென் " என்றிருக்கவொண்ணாதே ! என்னளவில். தேறேனென்று பாடமானபோது-தெளியேனென்னுதல், தரியேனென்னுதல்

ஆனாற்செய்யவேண்டுவதென்னென்ன. (உன்பொன்னடிசேர்த்தொல்லை) " நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து " என்றுதொடங்கின அர்த்தத்தைத்தலைக்கட்டுகிறார் (உன்பொன்னடி) கல்லுக்கும் சைதந்யங்கொடுக்க வல்ல அடியன்றோ. சேர்த்து- சேர்த்தருளவேணும் ஒல்லை - நானிசைந்தபோதே சடக்கெனத்திருவடிகளில் நித்யயோகையோபாதிசேர்த்தருளவேணும்.

அவ்வளவும்போராது. " இவனுக்கெல்லாவுத்கர்ஷமும் பண்ணிக்கொடுத்தோம், ஆகிலினியென் " என்னவொண்ணாது. நீயெல்லாவுயர்த்திகளும் பண்ணித்தந்தாலும் நானெல்லாத்தாழ்வுகளும்பண்ணிக்கொள்வேன், என்னையென்கையில் காட்டித்தாராதொழியவேணும்....... ..*

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (ஏறேலித்யாதி) (யானேயித்யாதி) பூர்வவ்ருத்தத்தையநுஸந்தித்தநுதபிக்கும்படி பண்ணின இதுக்குமேற்பட வொருபேறுமக்குச்செய்யத்தக்க தென்னென்றபடி. (நீரிங்ஙனேயிதி) " உன்திருப்பாதமலர்க்கீழ் போராதேயான் வந்தடையும்படிதாராதாய் " என்றுநீரிங்ஙனே படுகிறதெதுக்காகவென்றபடி. இதுக்காகவென்றது - " உன்பொன்னடிசேர்த்தொல்லை " என்றத்தைப்பற்ற.

" ஏல் " என்றது - பாதபூரணார்த்தமவ்யயம். ஏறுகிலென்றது - வார்த்தைப்பாடாய், ஏறேனையுமென்றபடி.

" ஏர் " என்று - தர்ஶநீயத்துக்கும், கட்டுடைமைக்கும்பேர். இரண்டர்த்தத்தையும் ஸமுச்சித்யாஹ (தர்ஶநீயமாயித்யாதி) கட்டுடைமையாவது - ரக்ஷாவத்வம். ரக்ஷாவத்வந்நாம - ராவணபாலிதத்வம். உக்தார்த்தேப்ரமாணத்வயம் (அ

, ஹோவீர்யமித்யாதி) ஸுந்தரகாண்டே ஏகோநபஞ்சாஶே ராவணம்ப்ரதி ஹநூமத்விசாரம், “ [illegible] ” (அஹோ வீர்யமஹோதைர்யமஹோஸத்த்வமஹோத்யுதி: । அஹோ ராக்ஷஸராஜஸ்ய ஸர்வலக்ஷணயுக்ததா) தத்ரைவ வசமே, “ [illegible] ” (யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேஶ்வர: । ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா) ... (ஸ்வாருபத்தே:) என்றதுக்கர்த்தம் (சந்த்ருக்களுமித்யாதி) “ [illegible] ” (ஶம்ஶாஸத்ருஶீபவேத்) என்றதைப்பற்ற (பிராட்டியருளிச்செய்தபடியென்றது) நெடும்சடர்ச்சோதி - மிக்கபுகரையுடைய வடிவையுடையவனே. இத்தால்பலித்தவர்த்தம் (ராவணனையித்யாதி)

பூர்வார்த்தத்துக்குபாவம் (அவ்விரோதிகளையித்யாதி)

தேறேலென்னை-என்னைத்தெளியேல். என்னை “எனக்குநன்மையறிவேன்” என்றுவிஶ்வஸியாதேயென்றபடி. “ ஏறேலேழும் ” இத்யாதியையும்கூட்டிக்கொண்டு, “ என்னை ” என்றதுக்குபாவம் (கப்பின்னையித்யாதி) அவர்கள் விரோதியைப்போக்கினாற்போலே யென்னுடைய அஹங்கார மமகாராதிவிரோதிகளையும்போக்கினாய், அவ்வளவாலென்னை விஶ்வஸியாதேயுன் திருவடிகளையும் அடைவிப்பிக்கவேணுமென்றபடி. (இனியென்னென்றிருக்கவொண்ணாதென்னளவில்) ப்ராப்தியர்யந்தமாகப்பண்ணித்தரவேணுமென்றபடி. (தெளியேன்) நீயிவ்வளவும் பண்ணினவித்தாலே விஶ்வஸியேனென்றபடி. தேறேன் - (தரியேன்) என்றபோது, “பயிர்தேறிற்று” என்றால் - “ பயிர்தரித்தது ” என்றத்தையருளிச்செய்வர்.

பொன்னடியென்றது-பரிசுத்தமானவடியென்றாய், அந்தாலே - (கல்லுக்கும்சைதந்யம் கொடுக்கவல்லவடியன்றோ வென்று) இவ்விடத்திலே - “ [illegible] ” (யத்பாதாம்புஜபராகபவித்ரகோத்பாஷாணமேணீத்ருஶம்) என்றத்தையும், “ [illegible] ” (ராமஸ்யபாதரஜஸாப்ரக்ருதிம்ப்ரபேதே) என்றத்தையும் கண்டுகொள்வது. பாளி: - ஸமூஹ:.

அவ்வளவும்போராது - உன்பொன்னடிசேர்த்தமாத்ரம் போராது. விவரணம். (இவனுக்கித்யாதி) “ வேறேபோகவெஞ்ஞான்றும்விடல் ” என்றதுக்குபாவம் (நீயெல்லாவித்யாதி) விஷயாந்தரங்களைநினைத்து வேறுபோகாதபடி யெக்காலத்திலும் விடாதொழியவேணுமென்று சப்தார்த்தம். உயர்த்தி-உத்கர்ஷம். தாழ்வுகள் - விஷயாந்தரங்களைவிரும்புகை முதலானவை. என்கையில் காட்டித்தருகையாவது - “ உபாயாந்தரங்களை யநுஷ்டித்துவாரும் ” என்கை.

ஏறேலேழு மித்யாரப்ய, சோதி - என்னை - தேறேல்; உன்பொன்னடி-ஒல்லை-சேர்த்து, வேறேபோக வெஞ்ஞான்றும் விடலித்யந்வய:......................*

பதினொன்றாம்பாட்டு.

விடலில்சக்கரத்தண்ணலைமேவல்
விடலில்வண்குருகூர்ச்சடகோபன்சொற்
கெடலிலாயிரத்துள்ளிவைபத்தும்
கெடலில்வீடுசெய்யுங்கிளர்வார்க்கே.

ஆறாயிரப்படி.

(விடலில்) இப்படி ஆழ்வாரபேக்ஷிக்க, அபேக்ஷித்தபடியே திருமலையிலே புகுந்தருளி, ஆழ்வாரோடே, திருவாழியாழ்வானோடு சம்ஶ்லேஷித்தாற்போலே ஒருகாலும்பிரியாதபடி சம்ஶ்லேஷித்த எம்பெருமானைச்சொன்ன இத்திருவாய்மொழிவல்லார் ஆழ்வார் பெற்றபேறுபெறுவரொன்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழி மோக்ஷாநந்தப்ரதம் என்றுபலத்தையருளிச்செய்கிறார்.

விடம் - விடுதல். இல் - இல்லாத. சக்கரத்து - திருவாழியையுடைய. அண்ணல்-ஸ்வாமியை. அப்படியே, மேவல் - மேவி. விடலில் - விடக்ஷமமல்லாத. வண் - மஹோதாரரான. குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார். சொல் - அருளிச்செய்ததாய். இதிலந்வயித்தார்க்கு, கெடல் - அநர்த்தம். இல் - வாராதபடியான. ஆயிரத்துள் - ஆயிரத்துள். இவைபத்தும் - இவைபத்தும். கிளர்வார்க்கு - சாதரமாகச்சொல்லவல்லவர்களுக்கு. இதுதானே, கெடலில் - அவித்யாத்யநர்த்தகந்தரஹிதமான. வீடு - மோக்ஷாநந்தத்தை. செய்யும் - பண்ணிக்கொடுக்கும்.

கிளர்தல் - சொல்லுதல். கிளர்த்தியாய், உத்யோகமாகவுமாம்.

இது - கலிவிருத்தம்...*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யசிக்கவல்லார் இதிற்சொன்னப்ராப்யத்தைப் பெறுவரொன்கிறார்.

"'நாம்விடுகிறோம்' என்றதிசங்கைபண்ணுகிறதென், 'நாமொருவரையும் விடோங்காணும்'" என்று கையிற்றிருவாழியைக்காட்டினான். (விடலில்சக்கரத்தண்ணலை) ஒருகாலும் விடாததிருவாழியைக்கையிலேயுடைய சர்வேஶ்வரனைக்கவிபாடிற்று. (மேவல்விடலிலித்யாதி) அவன்ஸ்வபாவத்தாலேகிட்டி அவனைப்பிரிவிற்றரியாதபடி பரமோதாரரான ஆழ்வாரருளிச்செய்தார். வண்மையாவது-இவ்வநுபவத்துக்குப்பாசுரமிட்டுபகரித்த வுபகாரம். (கெடலிலாயிரம்) இவ்வாத்மாவுக்கநர்த்தகந்த

ம்வாராதபடி ஹிதத்தையாராய்ந்தருளிச்செய்தநிறுதான். அவற்றிலிப்பத்தும்-கிளர்வார்க்கு - கெடலில்வீடுசெய்யும்: "வரில்பொகடேன், கெடில்தேடேன்" என்றிருக்கையன்றிக்கே ப்ரந்ததாநராயிருப்பார்க்கு, அநர்த்தகந்தரஹிதமாய், அஹங்கார மமகாரங்களை யுடைத்தன்றிக்கே "தனக்கேயாகவேணும்" என்று இவர்ப்ரார்த்தித்தபடியே இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூபமானபேற்றைப் பண்ணித்தரும்.

முதற்பாட்டில் - காயிகமானபேற்றை யபேக்ஷித்தார்; இரண்டாம்பாட்டில் - மாநஸமானபேற்றையபேக்ஷித்தார்; மூன்றாம்பாட்டில்-வாசிகமானபேற்றையபேக்ஷித்தார்; நாலாம்பாட்டில் - ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தைநிஷ்கர்ஷித்தார்; அஞ்சாம்பாட்டில் - நீராராயிப்பேற்றையபேக்ஷித்திரொன்ன, நானாராயிடுக, உன்னையநுபவித்து மகிழும்படிபண்ணியருளவேணுமென்றார்; ஆறாம்பாட்டில் - த்ரிவிதகரணங்களாலுமுன்னைப்ரீதிபுரஸ்ஸரமாக அநுபவிக்கும்படிபண்ணியருளவேணுமென்றார்; ஏழாம்பாட்டில் - அப்படிசடக்கெனச் செய்யாமையாலே மின்னுதானுர்; எட்டாம்பாட்டில் - ஸ்வரூபாநுரூபமாக க்ஷணகாலமென்றேடேயநுபவிக்கப்பெறில், பின்புள்ளகாலமெல்லாம் வேண்டேனென்றார்; ஒன்பதாம்பாட்டில்-உன்னையநுபவிக்க இட்டுப்பிறந்துவைத்து, அதுகிடையாதபடி நானேயநர்த்தத்தைச் சூழ்த்துக்கொண்டேனென்றார்; பத்தாம்பாட்டில் - எனக்கொருநாளும் "ஜ்ஞாநவிசேஷத்தைப் பண்ணித்தந்தோமிறே" என்று என்னையென் கையிற்காட்டித்தாராதொழியவேணுமென்றார்: இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்................*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (விடலிலித்யாதி) "கிளர்வார்க்கு - கெடலில்வீடுசெய்யும்" என்றத்தைப்பற்ற வவதாரிகை. இதிற்சொன்ன ப்ராப்யமாவது - ஸ்வார்த்ததாகந்தரஹிதமானபேறென்றபடி.

"வேறேபோகவெஞ்ஞான்றும்விடல்" என்றவநந்தரம், "விடலில்சக்கரத்தண்ணல்" என்றுப்ரயோகிக்கிறவருடைய ஹார்த்தபாவம் (நாம்விடுகிறோமித்யாதி) அதாவது - திருவாழியை விடிலன்றோ உம்மைவிடலாவதென்றபடி.

அவன்ஸ்வபாவத்தாலே - விடலில் சக்காத்தண்ணலானவவன் ஸ்வபாவத்தாலே. மேவல் - மேவியென்றாய், கிட்டியென்றபடி. "(பிரியிற்றரியாதபடியென்கையாலே) 'விடலில்' என்றதுக்கு - விட்டாலுளராக மாட்டாதவரென்று தோற்றுகிறது" என்றழகப்பங்கார் நிர்வாஹம். விடலில் - "விடக்ஷமரல்லாத" என்றுரையிலர்த்தம். ஸ்வார்த்ததை யநர்த்தமாகையாலே (அநர்த்தகந்தம் வாராதபடியென்றது)

கிளர்வார்க்கு - ப்ரத்ததாநரா யப்யஸிப்பார்க்கு. கிளருகை - ப்ரத்ததாநராய்ச்சொல்லுகை. "கிளர்வார்க்கு" என்றதுக்கும், "கெடலில்வீடு" என்றதுக்கும் தாத்பர்யம் (வரிற்பொகடேனித்யாதி) கிளர்தல் - சொல்லுதலும், உத்யோகித்தலும்.

ஆராயிடுக - ஆராஞலுமாயிடுக. இட்டுப்பிறந்துவைத்து - யோக்யனுயிருந்துவைத்து.

க்ரமேணுந்வய: ....*

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(எம்மாவீட்டுத்திறமும்)

ப்ரத்தேயஸ்வாங்க்ரியோகம் ஶுபமதிகரதாம் ஸ்தோத்ரஸாமர்த்யதானம்
ஸ்வார்த்தீகாரோபகாரம் ஸ்ம்ருதிரஸஜனதாம் ப்ராப்யஸம்ப்ரீதிவஶ்யம்
ப்ராப்தௌ காலாக்ஷமத்வம் ப்ரதயரஸஜநதாம் ஸ்வாத்மதானம்
வைமுக்யவாரயந்தம் ப்ரபதயரஸணம் வர்ணயாமாஸ ஶடாரி:· (௨௧)

(ப்ரத்தேயஸ்வாங்க்ரியோகம்) நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து - ப்ரார்த்தநீயமான தன்திருவடிகள் ஸம்பந்தத்தை யுடையனுமாய்; (ஶுபமதிகரதாம்) நின்கழல் யானெய்தஞானக்கைதா - தன்திருவடிகளை ப்ராபிக்கும்படிக்கான ஜ்ஞாநமாகிற கையைக்கொடுக்குமவனுமாய்; (ஸ்தோத்ரஸாமர்த்யதானம்) நின்கழலெய்யாதேத்தவருள்செய் - தன்திருவடிகளையே ஸர்வகாலத்திலும் ஏத்துகைக்கு ஸாமர்த்யத்தையுண்டாக்குமவனுமாய்; (ஸ்வார்த்தீகாரோபகாரம்) தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே - ஸ்வார்த்தமாகவே யுபகரிக்குமவனுமாய்; (ஸ்ம்ருதிரஸஜநதாம்) மறப்பொன்றின்றியென்றும் - ஸ்வவிஷயஸ்ம்ருதியாலே அத்யந்தவிஷயாதரத்தை ஜநிப்பிக்குமவனுமாய்; (ப்ரீதிவஶ்யம்) என்னுமகிழ்வுற்றுன்னைவணங்க-ஸ்வவிஷயத்திலே ப்ரீதியையுடையபேர்களுக்கு வஶம்வதனுமாய்; (ப்ராப்தௌகாலாக்ஷமத்வப்ரதம்) வாராயுன்திருப்பாதமலர்க்கீழ் பேராதேயான் வந்தடையும்படி - ஸ்வப்ராப்தியிலே காலக்ஷேபக்ஷமனாகாதபடி பண்ணுமவனுமாய்; (அம்ருதரஸத்யாகம்) வேதவிமலர் விழுங்குமென்னக்காரக்கனியே - அம்ருதம்போலே அத்யந்தம்போக்யமாக ப்ரகாசிக்குமவனுமாய்; (ஆத்மார்ப்பணம்) யானேநீ யென்னுடைமையும்நீயேவானேயேத்தும் - "நானுமென்னுடைமையுமுன்னது" என்றுசூரிகளாலு மேத்தப்படுகையாலே யாத்மாத்மீய ஸமர்ப்பணயோக்யனுமாய்; (வைமுக்யாத்வாரயந்தம்) என்னையுன் பொன்னடிசேர்த்தொல்லை வேறேபோக வெஞ்ஞான்றும்விடலே - ஆஶ்ரிதரைத்தன் திருவடிகளில்நின்றும் விமுகராய்ப்போகாதபடி பண்ணுமவனுமாயிருக்கிற வெம்பெருமானை, "எம்மாவீடு" என்கிறதசகத்திலே கைங்கர்யோத்தேஶ்ய பூதனாக ஆழ்வாரருளிச்செய்தாரென்கிறார்..... ... ... (௨௧)

திருவாய்மொழிநூற்றந்தாதி.

எம்மாவீடும்வேண்டாவென்றன்குன்றளிணையே
அம்மாவமையுமெனவாய்ந்துரைத்த - நம்முடைய
வாழ்முதலாமாறன்மலர்த்தாளிணைசூடிக்
கீழ்மையற்றுநெஞ்சேகிளர். (௧௯)

(எம்மாவீடும்) இதில் - ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணினபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; பிராட்டி "அவன்மோக்ஷப்ரதன்" என்னுமதத்தை யுபதேசிக்கிறவளவில், முதல், நடு, இறுதி, இவர்மோக்ஷத்தை ஸ்லாகித்துக்கொண்டு பேசுகையாலே, "இவர்க்குமோக்ஷத்திலே யபேக்ஷையாயிருந்தது" என்றீஸ்வரனதைக் கொடுக்கப்புக, தமக்குகப்பாகத் தரும்மோக்ஷமு மஹங்காரகர்ப்பமாகையாலே "அபுருஷார்த்தம்" என்றுமத்தைக்கழித்து; "பரமபதஸ்த்தனாய் ஸாதிக்கவுமாம், ஸம்ஸாரஸ்த்தனாய் துக்கிக்கவுமாம், எனக்கதிலொரு நிர்ப்பந்தமில்லை, தேவர்க்குறுப்பாமதுவே யெனக்குவடிவாம்படி பண்ணியருளவேணும்" என்றுஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிற * எம்மாவீட்டிலர்த்தத்தை "எம்மாவீடும்வேண்டா" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

(எம்மாவீடும்வேண்டாவென்றனக்குன்றாளிணையே யம்மாவமையுமெனவாய்ந்துரைத்த) எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷமும்வேண்டா, சேஷபூதனானவெனக்கு "யாவச்சரணௌ - ஹிராஸாதாராவிஷ்யாமி" என்னும்படி சேஷியானதேவருடைய அங்க்ரியுகளமே யமையுமென்று உபாயோபேயமாக முக்தியையாராய்ந்து தலைசேரநிஷ்கர்ஷித் தருளிச்செய்த. வாய்ந்தென்று - இவ்வர்த்தத்திலே பொருந்தியென்றுமாம். இது - * எம்மாவீட்டையடியேதொடங்கி அடியொத்தினபடி; "நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து" என்றுதொடங்கி, "உன்பொன்னடிசேர்த்து" என்றிதேதலைக்கட்டித்தாயிருப்பது. "தாளிணையே" என்கையாலே - "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றதனைஞ்சிதம்; திருமுடியைத்திருவடிகளுக்குப் பாதபீடமாக்குகிற அத்யந்தபாரதந்த்ர்யமிறே. (நம்முடைய வாழ்முதலாமாறன்) நம்முடையஸ்வரூபாநுரூபமான ஸம்பத்துக்கடியாமாழ்வார். ஆழ்வாருடையவாழ்வுக்கடி "தனியேன்வாழ்முதலே" என்கிறவீஸ்வரனாயிருக்கும், இவருடையவாழ்வுக்கடி ஆழ்வாராயிருக்கும். (மலர்த்தாளிணைசூடி) "கோலமாமென்சென்னிக் கமலமன்னகுரைகழலே" "பாதபற்புத்தலைசேர்த்து" என்கிறபடியே செவ்விப்பூச்சூடுவாரைப்போலே பூப்போன்றவடியிணையைச்சூடி. (கீழ்மையற்றுநெஞ்சேகிளர்) நிக்ருஷ்டதையாகிற தாழ்ச்சியற்று ஆழ்வார்ஸேவையாலே ஸத்தைபெற்று மநஸ்ஸேமயங்காமல் மேன்மேலனக்கிளர்ந்துபோரு..(௧௯)

இரண்டாம்பத்தில் - ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக-திருவாய்மொழி-௧௯—பாட்டு-௨௧௧.

ஸ்ரீ

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து.

பத்தாந்திருவாய்மொழி.

கிளரொளி - ப்ரவேசங்கள்.

ஆறாயிரப்படி.

(கிளரொளி) இப்படி தம்மோடுகலந்தருளின எம்பெருமான் நின்றருளின திருமலையை யநுபவிக்கிறார்... ... ... *

பன்னீராயிரப்படி.

பத்தாந்திருவாய்மொழியில், கீழ்-புருஷார்த்ததயா நிர்ணீதமான அத்யந்த பாரதந்த்ர்யயுக்தமாயிருந்துள்ள கைங்கர்யத்தை யிவரபேக்ஷித்தபடியே, காலவிளம்பம்பிறவாதபடி யிங்கேகொடுத்தருளுகைக்காகத் தெற்குத்திருமலையிலே யெழுந்தருளிநிற்கிறபடியை ப்ரகாசிப்பிக்கக்கண்டத்யந்த ஹ்ருஷ்டராய்; அழகருடைய ஔஜ்ஜ்வல்யத்தையும், ஆபிரூப்யத்தையும், ஔதார்யத்தையும், ரக்ஷகத்வத்தையும், ரக்ஷோபகரணவத்தையையும், ஆச்ரிதவ்யாமோஹத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், ஆச்ரிதாநுகூலதையையும், விரோதிநிரஸநசீலதையையும், ஜ்ஞாநப்ரதத்வத்தையுமநுஸந்தித்து, "ஏவம்விதனான ப்ராப்யபூதன்றானும் விரும்பும்படியான திருமலையே பரமப்ராப்யம்" என்று நிஷ்கர்ஷித்து, முதலிட்டைந்துபாட்டாலே-திருவுள்ளத்தையும், மேலிட்டைந்துபாட்டாலே - லௌகிகனாயுங்குறித்து அவன் போக்யதையை யுபதேசித்துமுடித்தருளுகிறார்..........*

ஈடு.

"கீழ் * எம்மாவீட்டிலே நிஷ்கர்ஷித்தப்ராப்யம் பெறுகைக்குத் திருமலையை யாச்ரயிக்கிறார்" என்று ஆளவந்தாரருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி. எம்பெருமானார், "அங்ஙனல்ல, இவர்பாட்டுத்தோறும் 'ஒல்லை' 'ஒல்லை' என்றும், 'காலக்கழிவுசெய்யேல்' என்றும்-த்வரிக்கப்புக்கவாறே, 'நமக்குமறிவித்து நாமுமிவர்காரியஞ்செய்யக்கடவதாக வறுதியிட்டால், 'சரீரசமநந்தரம்பெறுதப்பாது' என்றறுதியிட்டிருக்கலாயிருக்க, இவரிப்படித்வரிக்கிறது இச்சரீரத்தோடே நாமடிமைகொள்ளவேணுமென்றுபோலேயிருந்தது; இனியிவர்க்கு நாம்நினைத்தபடி பரிமாறுகைக்கேகாந்தமானதேசமேதோ, என்று * ஞாலத்தூ

டே நடந்துழக்கிப்பார்த்து வரச்செய்தே 'இவ்விடம்சாலவேகாந்தஸ்தலமாயிருந்தது,' என்று திருமலையிலே ஸந்நிதிபண்ணியருளி, 'நாமுமக்குமுகந்தருகைக்காகவந்துநின்றோம், நீரிங்கேவந்துநினைத்தவகைகளெல்லாம்பரிமாறி யநுபவியும்,' என்று தெற்குத்திருமலையிலே நிற்கிறநிலையைக்காட்டிக்கொடுக்க, இவ்வருமத்தையநுசந்தித்து; பகவான் ப்ராப்யனானால் அவன்வர்த்திக்கும்தேசமும் ப்ராப்யமாகக்கடவதிறே; அத்தாலே, திருமலையோடு, அத்தோடு சேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம்வழியோடு, 'போகக்கடவோம்' என்னுந்துணியும் துணிவோடுவாசியற ப்ராப்யாந்தர்க்கதமாயநுபவித்து இனியராகிறார்" என்று*

ஜீயர் அரும்பதம்.

கிளரொளிப்ரவேசே, "சார்வதுசதிர்" "அடைவதுதிறம்" இத்யாதியைப் பற்ற ப்ராபகபரமாக ஆளவந்தார் நிர்வாஹம்.

"எழுவதுபயன்" இத்யாதியைப்பற்ற ப்ராப்யபரமாக எம்பெருமானார் நிர்வாஹம். நமக்குமறிவித்தென்றது - "நமக்கேயாக" இத்யாதியைப்பற்ற. "விடலில்சக்கரத்தண்ணலை" என்றதைப்பற்ற (நாமுமிவர்காரியம் செய்யக்கடவதாக வறுதியிட்டாரென்றது) சாலவேகாந்தஸ்தலமென்றவிடத்திலே - "ஆயிரமாறுகளும்" இத்யாத்யநுஸந்தேயம்.

*பாட்டுக்களின் ப்ரமேயம் (பகவானித்யாதி) அயன்மலை-அசல்மலை, அதாவது-தத்ஸம்பந்தமே நிரூபகமாகச்சேர்ந்திருக்கிற மலையென்றபடி. புறமலை - தத்ஸமீபஸ்த்திதமானமலை. இனியராகிறாரென்றதுக்கு - இனியராய் பரோபதேசம்பண்ணுகிறாரென்று கூட்டிக்கொள்வது... ... ... **

பத்தாந்திருவாய்மொழி

முதற்பாட்டு.

கிளரொளியிளமைகெடுவதன்முன்னம்
வளரொளிமாயோன்மருவியகோயில்
வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை
தளர்விலராகிற்சார்வதுசதிரே.

ஆறாயிரப்படி.

யாதொன்றிலே நின்றருளுகையாலே அங்குத்தைச்சோலைபோல எம்பெருமானுடைய திருவுடம்பு அதிசீதளமாய் அதிவர்த்திஷ்ணுவான ஔஜ்ஜ்வல்ய யௌவநாதிகல்யாணகுணங்களையுடைத்தாயிற்று, அங்ஙனேயிருந்த திருமாலிருஞ்சோலையை, உங்களுக்குக்கரணபாடவமுள்ளபோதே உங்களுடைய க்லேசமெல்லாம் தீரும்படிசென்று புகியுங்கள்; இது பரமப்ராப்யமென்கிறார்... ... ... *

பன்னீராயிரப்படி.

முதற்பாட்டில், நிரதிசயௌஜ்ஜ்வல்ய விசிஷ்டனான சர்வேஸ்வரன் விரும்பின திருமலையே ப்ராப்யமென்கிறார்.

கிளர்-கிளர்ந்துவருகிற. ஒளி-ஜ்ஞாநௌஜ்ஜ்வல்யத்து யோக்யதையுண்டான. இளமை-யௌவநாரம்பரூபமானவிளமை. கெடுவதன்முன்னம்-விஷயாந்தரகதமாய்க்கெடுவதற்குமுன்னே. வளர்-ஆபரிதார்த்தமாக விங்கேயெழுந்தருளினபின்பு வளர்ந்துவருகிற. ஒளி-சீலசௌலப்யாதிகுணௌஜ்ஜ்வல்யத்தையுடைய. மாயோன்-ஆஸ்சர்யரூபமானசர்வேஸ்வரன். மருவிய-பொருந்திவர்த்திக்கிற. கோயில்-திவ்யஸ்தாநமாய். வளர்-வளராநிற்கச்செய்தே. இளம் - இளமையையுடைத்தான. பொழில்-பொழில்களாலே. சூழ்-சூழப்பட்டு. மாலிருஞ்சோலை-அதாலே "மாலிருஞ்சோலை" என்றுதிருநாமமானதிருமலையை. தளர்வு-ப்ரயோஜநாந்தரசம்பந்தமாகிறதளர்த்தி. இலராகி-அற்று. சார்வதே - ப்ராபிக்குமதுவே. சதிர்-சதிர்.

"இதொழிய ப்ரயோஜநாந்தரமுண்டு" என்றிருக்கை - இளமையென்றாகருத்து. சேதநர் * பால்யத்திலே விவேகாத்மாக்களாய்க்கொண்டுநந்ய ப்ரயோஜநராய்ப்பற்று மிது சதிரீறேயென்று தந்திருவுள்ளத்தைக்குறித் துரைத்தாராயிருக்கிறது... ... ... *

ஈடு-முதற்பாட்டு.

திருமலையை ப்ராபிக்கையே இவ்வாத்மாவுக்கு நிரதிசயபுருஷார்த்தமென்கிறார்.

(கிளரொளியிளமையித்யாதி) "திருமலையையாஸ்ரயியுங்கோள்" என்றார்; "செய்கிறோம்" என்றாறியிருந்தார்கள்; கெடுவீர்காள் எத்தை விஸ்வஸித்துத்தான் நீங்களாறியிருக்கிறது; * வயோஸ்யாஹ்யதிவர்த்ததேயன்றோ, *வாள்களாகிநாள்கள்செல்லவன்றோ நீங்களாறியிருக்கிறது-கழிந்தபருவத்தையுங்களாலேதான் மீட்கப்போமோ. (கிளரொளியிளமையென்றது) மாநஸஸ்ரத்தையாய், பிறந்த இஸ்ஸ்ரத்தையிதில் நின்று மாறி விஷயாந்தரத்திலே பிறப்பதற்குமுன்னே. ஒருவனுக்கொருவிஷயத்திலே ஒருகால் ஸ்ரத்தைபிறக்கும்; அவன்றனக்கே யவ்விஷயத்திலே அஸ்ரத்தைபிறக்கக்கடவதாயிருக்கும்; ஆக, பிறந்தருசிமாறுவதற்குமுன்னே என்னுதல். அங்ஙனன்றிக்கே, "𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂" (ப்ராப்யம்) என்னும் ப்ரதிபத்திபிறந்தாலும், "கரணபாடவமில்லையே" என்றுகைவாங்கவேண்டாதபடி, கரணபாடவமுள்ளபோதே யென்னுதல்; "𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌕𑍍𑌰𑍀𑌡𑌨𑌕𑌾𑌸𑌕𑍍𑌤𑌾𑌃" (பால்யேக்ரீடநகாஸக்தா:) என்று, "𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑌤𑍇𑌤" (தஸ்மாத்பால்யேவிவேகாத்மாயதேத) என்றுநின்றதிறே. (வளரொளி) ஸ்வத:வ்ருத்திக்ஷயாதிகளில்லாதவனுக்குவிகாரத்தைப்பிறப்பிக்கவற்றாயிற்று தேசஸ்வபாவம். நாட்செல்ல நாட்செல்லவளராநின்றுள்ள புகரையுடையனாய், ஆஸ்சர்யசக்தியுக்தனான சர்வே

ஸ்வரன், அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரசாதியாதே நித்யவாசம்பண்ணுகிறதேசம். (வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை) அடிமைசெய்கிறவர்கள் * இளவொளியிளமையையுடையவர்கள், அடிமைகொள்ளுகிறவன் * வளவொளிமாயோன், அடிமைசெய்கிறதேசம் வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை; ஆக, இப்படி யடிமைசெய்யுமவனும், அடிமைகொள்ளுமவனும், அடிமைசெய்யும்தேசமுமொத்த பருவமாயாயிற்றிருப்பது. வளரவளர இளகிப்பதிந்துச்செல்லாநிற்குமாயிற்று சோலை. (தளர்விலராகில்) "யந்நஹந்ந்த்ருஶ்யதேக்ஷணாவாபி" (யந்முஹூர்த்தம்க்ஷணம்வாபி) இத்யாதி. சர்வப்ரகாரத்தாலும் வருமநர்த்தமாகிறது - திருமலையைக்கிட்டாமை யென்றிருக்கிறார். "திருமலைப்ராப்யம்" என்னும்புத்திபிறந்து லபிக்கைக்கு விரோதியாய்வரு மநர்த்தபாதிகளன்றியே ஒழியவேண்டில். (சார்வதுசதிரே) திருமலையைக்கிட்டுமிதுவே இவ்வாத்மாவுக்குச்சதிர்; அல்லாதவையெல்லாமிளிம்பு. "கன்றுக்கிலக்கானவிஷயங்களைவிட்டுவேறே சிலவற்றைப்பெறுகைக்கு யத்நியாநின்றீர்களாகில்" என்று நீங்கள் நினைத்திருக்குமதுவேயிளிம்பு; இதுவேசதிர்... ... ...*

ஜீயர் அரும்பதம்.

முதற்பாட்டு. (இளவொளியித்யாதி) "சார்வதுசதிர்" என்றத்தைப்பற்ற அவதாரிகை (திருமலையையித்யாதி)

ஆளவந்தார்நிர்வாஹத்திலே "முன்னம்" என்றதுக்கவதாரிகாகதநமுகேந "இளமை" என்று-பருவமாகவர்த்தமருளிச்செய்கிறார் (திருமலையையாஶ்ரயியுங்கோளித்யாதி) "இளமைகெடுவதன்முன்னம்" என்னும்போது- அவர்களாகியிருந்தார்களென்னுமது ஸித்தமாகையாலே யத்தைக்காட்டுகிறார் (ஆகியிருந்தார்களென்று) இளமை-பால்யம். இதுகெடுக்குமென்றதுக்கு ப்ரமாணத்வயம் (வயோஸ்யாஇத்யாதி) யுத்தகாண்டேபஞ்சமே, "நஜீவிஷ்யாமிதீர்க்கம் ... ... திவா । வயோஸ்யா ... ... திவர்த்ததே" (நமேது:கம்ப்ரியாதூரேநமேது:கம்ஹ்ருதேதிவா । ஏததேவாநுசோசாமிவயோஸ்யாஹ்யதிவர்த்ததே) (வாள்களாகியித்யாதி) திருச்சந்தவிருத்தம்· வ்யர்த்தமாகநாள்கள்செல்லவென்னுதல், ஆயுஸ்ஸைச்சேதிக்கிறவாள்களாகியென்னுதல். வாள் - ஆயுதம். ப்ரமாணத்வயத்துக்கும் பாவம் (கழிந்தபருவத்தையித்யாதி) இதஞ்சப்ரமாணத்வயம்- காருபாடவதசாகயாத பூர்வமித்யஸ்யநிர்த்தஇதித்ரஷ்டவ்யம். "ஒளிகொள்விளக்கு" "ஞானச்சுடர்விளக்கு" என்கிறபடியே, "ஒளி" என்று-ஜ்ஞாநமாய், ததவஸ்த்தாவிசேஷமான விச்சையைச்சொல்லி, "இளமை" என்றது - தநுபக்ரமாவஸ்த்தையான ஸங்கத்தைச்சொல்லி, அதுதானிச்சாருபஜ்ஞாந ப்ரஸ்ருதித்வாரமான மநோஜந்யமாகையாலே மாநஸஸ்ரத்தையென்கிறார் (இளவொளியிளமையென்றதித்யாதி) பிறந்தஸ்ரத்தை-மநஸ்ஸூதமாகப்பிறந்தவிஸ்ரத்தை. இதினின்றும் - பகவத்விஷயத்தில் நின்றும். அப்படிஸ்ரத்தைபிறந்தால் திரும்பிப்போமோவென்ன (ஒருவனுக்கித்யாதி) யத்வா, மாநஸஸ்ரத்தையென்றவர்த்தத்திலே யெம்பெருமானார் நிர்வாஹத்துக்குச்சேரயா

வம் (ஒருவனுக்கித்யாதி) எம்பெருமானார் நிர்வாஹத்துக்குச்சேர பருவமென்ற பக்ஷத்திலு மர்த்தாந்தரம் (அங்ஙனன்றிக்கேயித்யாதி) ஜௌராங்கின்றவொளியை யுடைய விளமையென்றபடி. ஆஸ்ரயணாநுபவயோரநுரூபகரணபாடவாபகமாத் பூர்வமித்யாவத். "கிளர்ந்துவருகிற ஜ்ஞாநௌஜ்ஜ்வல்யத்துக்கு யோக்யதையுண்டான யௌவநாரம்பரூபமான விளமைவிஷயாந்தரகதமாய்க் கெடுவதற்கு முன்னே" என்றுரையிலர்த்தம். " இளமைகெடுவதற்குமுன்னம் " என்றிறேசொல்லிற்று, பால்யத்திலே மோக்ஷார்த்தப்ரவ்ருத்தியுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (பால்யேக்ரீடநகாஸக்தா இத்யாதி) ப்ரதமேம்ஹே ஸப்ததஶேபாலாங்ப்ரதிப்ராஹ்லாதஃ, "பால்யே க்ரீடநகாஸக்தா யௌவநே விஷயோந்முகாஃ । அஜ்ஞா நயந்த்யஶக்த்யா ச வார்த்தகம் ஸமுபஸ்திதம் । தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ஶ்ரேயஸே ஸதா " (பால்யேக்ரீடநகாஸக்தாயௌவநேவிஷயோந்முகாஃ । அஜ்ஞாநயந்த்யஶக்த்யாசவார்த்தகம்ஸமுபஸ்த்திதம் । தஸ்மாத்பால்யேவிவேகாத்மாயதேதஶ்ரேயஸேஸதா) அதாவது - " தஸ்மாத் பால்யே " (தஸ்மாத்பால்யே) என்கிறவிடத்திலே - க்ரீடாஹேதுவானசைசவமுமன்றிக்கே, விஷயப்ராவண்யஹேதுவான யௌவநமுமன்றிக்கே, ஆஸ்ரயணோபயுக்தமான பால்யயௌவநஸந்திவக்ஷிதமானாற்போலே, "கிளரொளியிளமை" என்றவிடத்திலும்-பால்யயௌவநஸந்தியைச்சொல்லுகிறதென்று கருத்து.

" வளரொளி " இத்யாரப்ய, " கோயில் " என்னுமளவுக்கும் சப்தார்த்தம் (நாட்செல்லவித்யாதி) ஸ்வதோவ்ருத்திக்ஷயேத்யாதிவாக்யம்-தாத்பர்யார்த்தம். வர்த்தமாநார்த்தம் (நாட்செல்லநாட்செல்லவிதி) (தீர்த்தம்ப்ரஸாதியாதே) தீர்த்தத்துக்கநந்தரம் திருநாள்படிஸமாப்தியாமாபோலே யாகாதே.

பதச்சேர்த்தியாலே பரமபதஸாம்யமருளிச்செய்கிறார் (அடிமைசெய்கிறவர்களித்யாதி) " வளர் " என்றுவைத்து, " இளமை " என்றதுக்கர்த்தம் (வளரவளரவித்யாதி) இளகிப்பதித்துச்செல்லாநிற்கும்-பால்யமேவ்ருத்தியடையாநிற்கும்.

" தளர்விரலராகிற்சார்வதுசதிர் " என்கையாலே - சாராதபோது தளர்வுண்டென்றுவிவக்ஷித்து, அதுக்குப்ரமாணம் (யந்முஹூர்த்தமித்யாதி) " யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே । ஸா ஹாநிஸ்தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ்ஸா ச விக்ரியா " (யந்முஹூர்த்தம்க்ஷணம்வாபிவாஸுதேவோநசிந்த்யதே।ஸாஹாநிஸ்தந்மஹச்சித்ரம்ஸாப்ராந்திஸ்ஸாசவிக்ரியா) இத்தால்-திருமலையைக்கிட்டாமையே தளர்வென்றபடி. ஆளவந்தார், எம்பெருமானார், இருவருடைய நிர்வாஹாநுகுணமாக க்ரமேணார்த்தத்வயம் (ஸர்வப்ரகாரத்தாலு மித்யாதிவாக்யத்வயேந) தளர்விலராகில் - தளர்வில்லாதவர்களாகவேண்டில். து:கபாகிகளன்றிக்கே யொழியவேண்டிலென்று முந்தினவர்த்தம்; தளர்வு - து:கம். அநர்த்தபாகிகளன்றிக்கே யொழியவேண்டிலென்று த்விதீயார்த்தம். இந்தபக்ஷத்திலே, " தளர்வு " என்று - து:கஹேதுவான பாபத்தைச்சொல்லுகிறது. திருமலையைச்சாராமை யாகிறது:கபாகிகளன்றிக்கே யொழியவேண்டிலென்று முந்தினபக்ஷத்திலே சப்தார்த்தம் ; திருமலையைக்கிட்டுகைக்கு விரோதியானபாபபாகிகளன்றிக்கே யொழியவேண்டிலென்று த்விதீயபக்ஷத்திலே சப்தார்த்தம். சதிர்-சாதுர்யம். " சார்வதே-சதிர் " என்றந்வயித்து, அவதாரணத்துக்கர்த்தம் (அல்லாதவையித்யாதி) இளிம்பு-தைந்யம். விவரணம் (கண்ணுக்கித்யாதி) இப்பாட்டில் ப்

ராபகபரமாயும் ப்ராப்யபரமாயுமிருக்குள்ள வாக்யங்களை யுபய நிர்வாஹாநுகுண மாகக்கண்டுகொள்வது. கோயிலான - மாலிருஞ்சோலையென்று, "கோயில்" என்றது-மாலிருஞ்சோலைக்குவிசேஷணம். சோலை-சோலையை.

க்ரமேணுந்வயம்... ... ... *

இரண்டாம்பாட்டு.

சதிரிளமடவார்தாழ்ச்சியைமதியா
ததிர்குரல்சங்கத்தழகர்தங்கோயில்
மதிதவழ்குடுமிமாலிருஞ்சோலைப்
பதியதுவேத்தியெழுவதுபயனே.

ஆறுயிரப்படி.

(சதிரிளமடவார்) ப்ராக்ருதவிஷயங்களில் ப்ராவண்யத்தை விட்டு, ப்ரதிகூல ஹ்ருதயபேதகமான த்வநியை யுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யேந்துகையாலே நிரவதிகமான அழகையுடையனாய், அத்தாலே "அழகர்" என்னுந்திருநாமத்தையுடையனான எம்பெருமானுக்குக்கோயிலாய்; பரிபூர்ண சந்த்ரமண்டலத்தாலேயலங்க்ருதமான சிகரங்களையுடைத்தான திருமாலிருஞ்சோலைப் பதியையேத்தியெழுங்கள்; அதுவேபரமப்ரயோஜநமென்கிறார்.................. ....*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், அழகருடைய திருமலையோடு சேர்ந்ததிருப்பதியை யேத்துமதேப்ரயோஜநமென்கிறார்.

சதிர் - அர்த்தாநுருபமாகவும் ஸ்வதோஷந்தூக்கிடாகவுமொதுக்கி யுடம்பு கொடுக்குஞ் சதிரையுடையராய். இளம் - இளமையாலேமதிமயக்கி, செல்லாமைதோன்றவிருக்கும். மடவார் - ஸ்த்ரீகளுடைய. தாழ்ச்சியை - தாழ்ச்சிதோற்றவிருக்குமுக்திசேஷ்டிதாதிகளை. மதியாது - ப்ரீதிபண்ணாதே. அதிர்குரல் - ஸம்ஶ்லேஷஜநிதப்ரீதியாலேமுழங்குகிற. சங்கத்து - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையராகையாலே நிரதிசயஸௌந்தர்யத்தையுடைய. அழகர் - அழகருக்கு. தங்கோயில் - அஸாதாரணஸ்த்தாநமாய். மதி - சந்த்ரனானவன். தவழ் - தவழும்படியோங்கின. குடுமி - சிகரசிகைகளையுடைத்தான. மாலிருஞ்சோலை - திருமலையில். பதி - திருப்பதியாகிற. அது - ப்ரஸித்தஸ்த்தலத்தை. ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி. எழுவதே- உச்ச்ரிதராகையே. பயன் - ப்ரயோஜநம்.

இதுவும் - நெஞ்சுநோக்கியுரைத்தல்.................................*

ஈடு - இரண்டாம்பாட்டு.

திருமலையோடுசேர்ந்த ஸ்ரீபதியைக்கிட்டுகையே பரமப்ரயோஜநமென்கிறார். அன்றிக்கே, திருமலைதன்னையே சொல்லுகிறதாதல். அன்றிக்கே, திருப்பதியையாதல்.

(சதிரிளமடவார்தாழ்ச்சியைமதியாது) சதிரிளமடவார் விஷயமாகநீங்கள் பண்ணும்தாழ்ச்சியை ஒன்றாகபுத்திபண்ணாதே யென்னுதல். சதிரிளமடவார் தாங்கள்பண்ணும் தாழ்ச்சியைமதியாதே யென்னுதல். மதித்தால் ப்ரயோஜநமில்லாமையேயன்று, மேல்நரகம், இங்குசிஷ்டகர்ஹை; " ஹநாநாஓ " (பக்நாநாம்) என்று பரார்த்தமாய், விநியோக போக்யமாயிருக்கும் விஷயமன்றோ. சதிரையுடையராயிருப்பர்கள் - பிறரையகப்படுத்திக் கொள்ளுகைக்கீடானவிரகை யுடையராயிருப்பர்கள். செத்துக்காட்டவுங் கூடவல்லராயிருக்கை. சதிரையும் பருவத்திலிளமையையுங் காட்டியாயிற்றகப்படுத்துவது. பின்பு " இளமொழியிளமை " என்றதே, அப்பருவங்கண்டவிடத்தே யிருந்துக்கொள்ளும் முகலைகளாயிற்றுவிஷயங்கள். (அதிர்குரலித்யாதி) திருக்கையின் ஸ்பர்சத்தாலே யெப்போது மொக்குமுழங்காநின்றுள்ள ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத்திருக்கையிலேயுடையராய் அச்சேர்த்தியழகாலே அதுதன்னையேதமக்குத் திருநாமமாகவுடையவர், " அப்பிதரக்ஷணத்துக்குப் பாங்கானநிலம் " என்றுதிருவுள்ளத்தாலேவிரும்பி, " என்னது " என்றுதரித்து வர்த்திக்கிறசோலையில். (மதிதவழ்குடுமி) குற்பெண்டுகள் சுரமேறுமாபோலே, சந்த்ரன் தவழ்ந்தேறுகின்றுள்ள சிகரத்தையுடைய திருமலை. மாலிருஞ்சோலையாகிற - பதியென்னுதல், மாலிருஞ்சோலையில் - பதியென்று - திருப்பதியைச்சொல்லுதல். (பதியதுவேத்தியெழுவதுபயனே) ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திவிசேஷத்தைப்பண்ணி யுஜ்ஜீவிக்குமிதுவே இவ்வாத்மாவுக்கு ப்ரயோஜநம்; அல்லாதவைநிஷ்ப்ரயோஜநம். ப்ரயோஜநமென்றது-ப்ராப்யமென்றபடி...*

ஜீயர் அரும்பதம்.

இரண்டாம்பாட்டு. (சதிரித்யாதி) " மாலிருஞ்சோலைசேர்ந்தபதி " என்றவிவக்ஷித்து - முந்தினவவதாரிகை. ஸ்ரீபதியை - திருப்பதியை. " மாலிருஞ்சோலையாகிற-பதி " என்று (திருமலைதன்னையேசொல்லுகிறதாதல்) (திருப்பதியையாதல்) என்று சிலஸ்ரீகோசங்களிலிருக்கதாகில் - முந்தினவர்த்தவிவரணமென்றுகண்டுகொள்வது.

" சதிரிளம் " இத்யாதியினர்த்தத்வயத்துக்கும், " பணிமின்திருவருள் " " பாண்டேன்வண்டறையும் " இத்யாதியையிசைப்பது. தாழ்ச்சி - இழிதொழில். மதியாதே-என்றதே. மேல்நரகமென்றவிடத்திலே - " [illegible]

•யதே" (ஹ்ருதிஸ்தாந்தஸம்காஸ்வாதநப்ரகாரமக்ருதாத்மநாம் । அநேகவர்ஷஸஹஸ்ரம்கர்மஜாயதே) "ஸம்பாவ்யஏவஸஹஸாஸ்யவிநாசஹேது:" (சம்பாவ்யஸம்பவஹேதுஸ்ஸம்பந்தஸ்ஸத்) இத்யாத்யநுஸந்தேயம். நரகாவஹத்யாதி மாத்ரமன்றிக்கே நற்கட்டைவரக்கடவத்தை (யத்நாநயித்யாதி) ஜிதந்தாயாம், "நதேரூபம்நசாகாரோநாயுதாநிநசாஸ்பதம் । ததாபிபுருஷாகாரோபக்தாநாம்த்வம்ப்ரகாசஸே" (நதேரூபம்நசாகாரோநாயுதாநிநசாஸ்பதம் । ததாபிபுருஷாகாரோபக்தாநாம்த்வம்ப்ரகாசஸே) ஆக, ப்ரயோஜநக்ருத்யங்களைக்காவஹ [illegible] கட்க்வாபோக்யத்வாதிதோஷேண தக்கடமென்றபடி. பக்தாநாமித்யாதிவாக்யம் - த்விதியார்த்தாநுஸம். த்விதியார்த்தாநுஷணமாஹ (அகிலையுடையாரித்யாதி) பிறையைகப்பறித்துக் கொள்ளுகைக்காகவென்றபடி. சாதுர்யத்தையுடைய சாமர்த்யத்தைக் காட்டுகிறார் (செக்குக்காட்டவுமித்யாதி) விப்லேஷப்ரஸங்காநாமித்யாதி. ஜாமைக்குபாயம் (கிழுமினெராளியித்யாதி)

அதிர்குரல்சங்கத்து - அதிராநின்றுள்ள த்வநியையுடைய சங்கத்தையுடை யவென்றபடி. அதுதன்னையே தமக்குத்திருநாமமாக - "சங்கத்தறுகர்" என்றே திருநாமம். "தங்கோயில்" என்றுபக்குபாவம் (ஸம்பிரகாஷணேத்யாதி)

"அதிர்குரல்" "மதிதவழ்" என்கிறவிடத்திலே - "ஸஸ்யஸ்யாபிஹ்வணாதுஸ் ஸிக்த:" (ஸஸ்யகரிங்கருட்யபுஜகம்) இத்யாதிப்லோக மநுஸந்தேயம். குற்மெ ன்றுகள் - கர்ப்பிணிஸ்த்ரீகள். சாம்-டீம்.

பதி-ஸ்தாநம். "பதி" என்றதினத்தால் (ஸ்வஸ்யாநுரூபமானவித்யா தி) வ்ருத்தி-வாசியனை யாம். "எழுவதே-பயன்" என்றதுகூட்டி, ப்ரகாரத்துக் கர்த்தம் (அல்லாதவையித்யாதி)

க்ருதேமஹோஹவைச. ... ...

ஏழாம் பாட்டு.

பயனல்லசெய்துபயனில்லைநெஞ்சே
புயல்மழைவண்ணர்புரிந்துறைகோயில்
மயல்மிகுபொழில்சூழ்மாலிருஞ்சோலை
அயன்மலையடைவதுகருமமே.

ஆறாயிரப்படி.

(பயனல்ல) ப்ரயோஜநசூந்யமாயிருந்த செயல்களைச்செய்து ஒருப்ரயோஜநமில்லை நெஞ்சே, ஆதலால் அவற்றைத்தவிர்ந்து ஆஸ்ரித ர்க்காத்மதாநம்பண்ணிக்கொண்டு நிற்கிறகோயிலாய், தன்னுடையபோக் யதையாலே ப்ரவிஷ்டரை புகமிடப்பியாநின்ற பொழில்களையுடைத்தான மாலிருஞ்சோலையினுடைய அயன்மலையடைவது; அதுவேநமக்கு பரம ஹிதமென்கிறார். ... ...

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பரமோதாரன் வர்த்திக்கிற திருமலையோடு சேர்ந்த அயன்மலையைப்ராபிக்கையே கார்யமென்கிறார்.

நெஞ்சே-நெஞ்சே. பயனல்ல-ப்ரயோஜநசூந்யமானவற்றை. செய்து-செய்து. பயன்-ப்ரயோஜநம். இல்லை-இல்லை. புயல்-தூறலுந்துளியுமான. மழை-காளமேகம்போலே. வண்ணர்-ஜலஸ்த்தலவிபாகமறவர்ஷிக்கும் ஸ்வபாவத்தையுடையவர். புரிந்து-அபிமுகனாய்க்கொண்டு. உறை-நித்யவாஸம்பண்ணுகிற. கோயில்-வாஸஸ்தாநமாய். மயல்மிகு - கண்டார்நெஞ்சுகலங்கும்படிதர்ஶநீயமான. பொழில்-பொழில். சூழ்-சூழ்ந்த. மாலிருஞ்சோலை-திருமலையினுடைய. அயல்-அருகின. மலை-மலையை. அடைவதுவே-அடைகையாகிறவதுவே. கருமம் - கர்த்தவ்யம் - ஸ்வரூபப்ராப்தம்... ... ... *

ஈடு - மூன்றாம்பாட்டு.

உத்தேஶ்யத்துக் கிதெல்லாம்வேணுமோ, திருமலையோடுசேர்ந்த அயன்மலையையடையவமையுமென்கிறார்.

(பயனல்லவித்யாதி) பயனல்லவாகநினைத்திருக்கிறது - பரமபதத்திலிருப்பையும், அல்லாத அவதாரங்களையும். அன்றியே (பயனித்யாதி) ப்ரயோஜநசூந்யமானவற்றைச்செய்து ஒருப்ரயோஜநமில்லை. செயலும் பலமுமிரண்டும் ப்ரயோஜநமாயிற்றுதாம்பற்றினவிஷயம், “ஸ-ஸ-வெஞகரு-ஹ” (ஸுஸுகம்கர்த்தும்) என்னக்கடவதிறே; ஸாதநதசையிலும் து:கரூபமாய், பலவேளையிலும் து:கமிஶ்ரமாயிருக்கிற ஸ்வர்க்கதத்ஸாதநங்களையாயிற்றிவர் நினைத்திருக்கிறது. (நெஞ்சே) விஷயாந்தரத்துக்கு மிவ்விஷயத்துக்குமுண்டானநெடுவாசியுனக்கநுபூதமிறே. (நெஞ்சே) பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிறே நெஞ்சுதானிருப்பது. இவ்வளவிலு மிவ்விஷயத்தை யகலுகைக்குக்காரியம்பார்த்தாய் நீயிறே.

(புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில்) பயனானவிஷயந்தானிருக்கிறபடி. வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற வடிவழகையுடையவர் அவ்வடிவழகை சர்வஸ்வதாநம்பண்ணிவர்த்திக்கிறகோயில். வர்ஷுகமானமேகம்போலே ஜலஸ்த்தலவிபாகமின்றிக்கே சர்வஸ்வதாநம்பண்ணிவர்த்திக்கிறதேசமென்றுமாம். இத்தால்-தமக்குப்ராப்யப்ராபகங்களொருவனேயாயிருக்கிறபடி. (மயல்மிகுபொழில்சூழ்) சோலைச்செறிவாலே புக்கார்க்கிருண்டிருக்குமென்னுதல்; அன்றியே, போக்யதாப்ரகர்ஷத்தாலே நெஞ்சையிருளப்பண்ணுமென்னுதல். (மாலிருஞ்சோலையயன்மலை) திருமலையோட்டைஸம்பந்தத்தையே தனக்குப்பேராகவுடைத்தானமலை. “கஶஹ்ரா)ஹ்ராதா:” (அகஸ்த்யப்ராதா) என்னுமாபோலே. (அடைவது கருமமே) அதொன்றுமேகர்த்தவ்யம், அல்லாதவையடைய அகர்த்தவ்யமென்கிறார்... ... ...*

ஜீயர் அரும்பதம்.

மூன்றாம்பாட்டு. (பயனல்லவித்யாதி) உத்தேஶ்யத்துக்கு-தாம்நிஷ்கர்ஷித்தப்ராப்யத்துக்கு. அயன்மலை-அசல்மலை.

(பயனல்லாதவாகவிதி) பரமபதத்திலிருப்பையும் அவதாரங்களையும் ஆஶ்ரயித்தொரு ப்ரயோஜநமில்லை, இரண்டும் தேசகாலவிப்ரகர்ஷங்களால் துர்லபமாகையாலே; ஆகையாலே பகவந்நித்யஸந்நிதிமத்தேஶ ஸமாஶ்ரயணம் ப்ரயோஜநவதிதிபாவ:. ப்ரயோஜநஶூந்யமானவற்றை-காம்யகர்மங்களான ஸ்வர்க்காதிசாதநங்களை. முந்தினவர்த்தத்திலே, செய்து-ப்ராப்யப்ராபகமாக வாஶ்ரயித்து. த்விதீயார்த்தத்தில், ஸ்வர்க்காதிதத்ஸாதநங்களிலே யத்நயித்தென்றபடி. அவ்விஷயமப்படியிருக்குமோவென்ன (ஸுஸுகமித்யாதி) த்விதீயார்த்தவிவரணம் (சாதநதசையிலுமித்யாதி) "நெஞ்சே" என்றதுக்குபாவம் (விஷயாந்தரேத்யாதி) பாவாந்தரமாவது (பந்தமோக்ஷங்களித்யாதி)

"வண்ணர்" என்கிறவிடத்தில், வண்ணசப்தத்துக்கு- வர்ணவாசகத்வேநவும், ஸ்வபாவவாசகத்வேநவுமர்த்தபேதம். அர்த்தத்வயத்திலும், புரிதல்-கொடுத்தல். வர்ணஶப்தம்-ஸௌந்தர்யம்; த்விதீயார்த்தத்தில், மழைபோன்ற ஸ்வபாவத்தையுடையராகையாலே புரிகிறுவென்றபடி. இத்தால் - அர்த்தத்வயத்தாலுமென்னுதல், "புயல்மழைவண்ணர், புரிந்து" என்றத்தாலென்னுதல். புயல்மழைவண்ணர் என்று - ப்ராப்யம். புரிந்தென்று - ப்ராபகம்.

செறிவு-நைபிட்யம். மயல்மிகுபொழில்-ப்ராந்தியை மிகப்பண்ணுகிறபொழில். மயல் - ப்ராந்தி. "மயல்மிகு" என்றவிடத்திலே, "ப்ரவிஷ்டா நகநாகாஸ்ய ஜூஹ:" (ப்ரவிஷ்டாநகமாதயக்பி:) என்றகத்யவாக்யமும், "திமிரநிஹ ப்ரஸூத தாரு ஷண்டமயம் ப்ரமதம்" (திமிரநிபப்ரஸூததருஷண்டமயம்ப்ரமதம்) இத்யாதியுமநுஸந்தேயம்.

தத்ஸம்பந்தத்தையேபேராகவுடைத்தானமைக்கு த்ருஷ்டாந்தம் (அகஸ்த்யேத்யாதி) "அதுவே-கருமம்" என்ற ஏவகாரார்த்தம் (அதொன்றுமேயித்யாதி) புயல்-வர்ஷுகமான. மழை-மேகம். உறைகை-நித்யவாஸம்பண்ணுகை.

க்ரமேணாந்வய:... ... ... *

நான்காம்பாட்டு.

கருமவன்பாசங்கழித்துழன்றுய்யவே
பெருமலையெடுத்தான்பீடுறைகோயில்
வருமழைதவழுமாலிருஞ்சோலைத்
திருமலையதுவேயடைவதுதிறமே.

ஆறாயிரப்படி.

(கருமம்) நிரஸ்தப்ரதிபந்தகராய்க்கொண்டு தன்திருவடிகளிலே நாமடிமைசெய்து ஜீவிக்கைக்காகவே பரமகாருணிகனான தான் வந்து

றைநின்ற சமஸ்தசந்தாபநாசகமான திருமலையையடைகையே அடிமை செய்கைக்குபாயமென்கிறார்... ... ... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ரக்ஷகனானவன் வர்த்திக்கிற பெரியபொழில்சூழ்ந்த திருமலையை யாஸ்ரயிக்குமதுவே செய்யக்கடவபடி யென்கிறார்.

கருமம் - பந்தகமானகர்மங்களாகிற. வன் - கழற்றவரிய. பாசம் - பாசங்களை. கழித்து - கழற்றி. உழன்று - அடிமைசெய்து வ்யாபரித்து. உய்யவே - சேதநருஜ்ஜீவிக்கைக்காகவே. ஆர்த்தமானகோபகோபீஜனங்களுடைய ஆர்த்திதீரும்படி. பெரு - பெரிய. மலை - மலையை. எடுத்தான் - எடுத்துரக்ஷித்தவன். பீடு - தன்னுடையரக்ஷணைஸ்வர்யம். உறை - விளங்கும்படி நித்யவாஸம்பண்ணுகிற. கோயில் - ஸ்தானமாய். வரு - வர்ஷோந்முகமாய்வருகிற. மழை - மேகங்கள். தவழும் - தவழும்படி. மால் - மிகவுமுயர்ந்து. இரும் - பரந்த. சோலை - சோலையையுடைத்தான. திருமலையதுவே - திருமலைதன்னையே. அடைவதே - அடைவதே. திறம் - செய்யும்படி.

மால் - உயர்த்தி. இருமை - பரப்பு. மாலிருஞ்சோலைத் திருமலையென்கையாலே - திருமலையிற்சோலையினுடைய ப்ராப்யதை தோற்றுகிறது..................*

ஈடு - நான்காம் பாட்டு.

கர்மபந்தத்தைப்போக்கி ஆஸ்ரிதரானவர்களடிமைசெய்து வாழுகைக்கிடாம்படி சர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருமலையை யாஸ்ரயிக்கையே ஸத்ருஸமென்கிறார்.

(கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே) "இதுநம்மாற்செய்து தலைக்கட்டப்போமோ திருமலையை யாஸ்ரயிக்குமதொழிய" என்று இங்ஙனே ஆழ்வானொருருவிலே பணித்தானும்; அங்ஙனும் நிர்வஹிக்கக் கடவது.

அன்றிக்கே, "கருமவன்பாசம் கழிக்கைக்காகவும், உழன்றுய்கைக்காகவும்," என்றிங்ஙனே எம்பெருமானருளிச்செய்யும்படி. முராசுரன் அநேகமாயிரம் பாசங்களாலே தன்னைமறையவரிந்து கொண்டிருந்தாற்போலேயிறே அவித்யாதிகளாலே * தன்னைமறைய வரிந்துகொண்டிருக்கும்படி. கர்மமாகிற வலியபாசங்களைக் கழிக்கைக்காகவும். தன்பக்கல் கைங்கர்யத்தைப்பண்ணியுஜ்ஜீவிக்கைக்காகவும். "பரித்ராணாய ஸாதூநாம்" (பரித்ராணாய ஸாதூநாம்) என்கிறபடியே - விரோதிகளைப்போக்கியுஜ்ஜீவிப்பிக்கையிறே யவதாரங்களுக்குப்ரயோஜநம். (பெருமலையெடுத்தான்) அரியனசெய்து மாஸ்ரிதரக்ஷணம் பண்ணுமவன்; "கோகோபீஜநஸங்குலம்| அதீவார்த்தம்" (கோகோபீஜநஸங்குலம்| அதீவார்த்தம்) என்று-இடையருமிடைச்சிகளும்நோவுபட, திருமலையை

யெடுத்து நோக்கினவன், அந்த ஐஶ்வர்யத்தோடே வந்து நித்யவாசம்பண்ணுகிறகோயில். (பெருமலை) பஞ்சலக்ஷங்குடியும் கிறகிலேயொதுங்கலாம்படியிறே மலையின்பரப்பு. பீடு - பெருமை. அதாவது - ஐஶ்வர்யம். ஆபத்ஸகன்வாருகள். ஒருமலையை ஆதேயமாகக்கொண்டு ரக்ஷித்தவன் ஒருமலையை ஆதாரமாகக்கொண்டு ரக்ஷிக்கிறவிடம். பசுக்களுக்கும் இடையருக்கும் ரக்ஷகனுகையால்வந்த ஐஶ்வர்யந்தோற்ற வர்த்திக்கிறகோயில். (வருமழைதவழுமாலிருஞ்சோலை) “ வப்ரோபகண்டலக்நா: ஸேவ்யாகி நாவாரியா நக்ஷத்ர: । ஸேவ்ய ஸ்ருங்கஸ்ய ஸந்த்யாப்ரமிவ பாநோ விரூபி விரூப நக்ஷத்ர யாதி ” (வருமழைதவழ்மலையிலாகிப்ராம்பலாகினோவாரிதராநந்தா: । மஹத்வாஸ்ருங்கே ஸஞ்சாரமதிதாராணும் விப்ரம்ப விப்ரம்பப்ரயாந்தி) என்கிறபடியே, குறிப்பெண்டுகள் சுமேருமாபோலே யாயிற்றுமேகங்கள் சஞ்சரிப்பது. உள்க்கிரண்டாயிற்றுமழை - நின்றவிடத்திலேநின்று வர்ஷிப்பதொருமேகமும், போவது வருவதாயிருப்பதொருமேகமும் ; “ புயல்மழைவண்ணர் ” என்கிறதிறே. மாலிருஞ்சோலையாகிற திருமலையை யாஶ்ரயிக்குமிதுவே, திறம் - செய்திறம். செய்யவடுப்பதிதுவே. மாலிருஞ்சோலையையுடைத்தானதிருமலையையென்னுதல். மாவென்று - பெருமை. இருமையென்றும் - பெருமை. என்று - ஐக்கத்திலே, ஒன்றுபரப்பிலே.............................. ....

ஜீயர் அரும்பதம்.

நான்காம்பாட்டு. (கருமமித்யாதி) எம்பெருமானார் நிர்வாஹத்தைப்பற்ற (கர்மபந்தக்ஷயமித்யாதி)

ஆழ்வான் நிர்வாஹத்திலே, உய்யவோ-உஜ்ஜீவிக்கப்போமோ என்று, ஏகாரம்-பிரிநிலையேகாரம். வ்யதிரேகார்த்தமென்றபடி.

எம்பெருமானார் நிர்வாஹத்திலே, ஏகாரம் - தேற்றத்திலே. தேற்றம்-நிஶ்சயம். உழலை - ஸஞ்சாரமாய், “ தேநதேநகதா ஸ்ருதி ” (தேநதேநக ஹ்ருதச்ஸ்ருதி) என்று - கைங்கர்யத்தை நினைக்கிறதென்றபடி. “ வன் ” என்றதுக்கு பாவம் (ப்ராஸாதஸ்திரமித்யாதி) வரித்துக்கொண்டு - பற்றிக்கொண்டு. (அஸீத்யாதி) அதிசப்தோ-கர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தாதய உச்யந்தே. சப்தார்த்தம் (கர்மமாகிறவித்யாதி)

திருமலையில் ஸந்நிதிக்கிறவோர் ப்ரயோஜநமென்ன (பரித்ராணாயேத்யாதி) அவதாரங்களுக்கென்றதிலே - அர்ச்சாவதாரமும் விவக்ஷிதம். “ பெருமலையெடுத்தான் ” என்றதுக்குத் தாத்பர்யம் (அரியனசெய்துமித்யாதி) கோவர்த்தநோத்தரணேநைகதநபூர்வகமாக வர்த்தம் (கோகோபீத்யாதி) பஞ்சமேம்ஶ ஏகாதஶே, “ ததஸ்தத்கோகுலம் ஸர்வம் கோகோபீஜநஸங்குலம் । ஶுஷ்ய காதிரியப்ரஜா ” (ததஸ்தத்கோகுலம்ஸர்வம் கோகோபீஜநஸங்

குலம் । அதிவார்த்தம்ஹரிர்த்ருஷ்ட்வாமைத்ரேயாசிந்தயத்ததா) இத்யாரப்ய, “ [illegible] । [illegible] ” (இதிக்ருத்வாமதிம்க்ருஷ்ணோ கோவர்த்தநமஹீதரம் । உத்பாட்யைககரேணைவதாரயாமாஸலீலயா ” யத்வா, கோகோபீத்யாதிவாக்யம் - “ பீடுடைறகோயில் ” என்றதுக்குபாவமாதல். அந்த ஐஶ்வர்யத்தோடே - அந்தப்பெருமையோடே. பீடாவது - ஆபத்ஸகத்வாதிகளால் வந்தபெருமை. பெருமைக்கவதியைக்காட்டுகிறார் (பஞ்சலக்ஷத்யாதி) ஐஶ்வர்யமாவதேதென்ன (ஆபத்ஸகத்வாதிகளென்று) “ பெருமலை ” என்றத்தைக்கடாக்ஷித்து, “ உறைகோயில் ” என்றதுக்குபாவம் (ஒருமலையையித்யாதி) “ அதாவதைஶ்வர்யம் ” இத்யாதியின்விவரணம் (பசுக்களுக்குமித்யாதி)

மழை-மேகம். “ தவழும் ” என்றதுக்குபாவம் (ஸமுத்ரஹ்ருதஇத்யாதி) கிஷ்கிந்தாகாண்டே லக்ஷ்மணம்ப்ரதிராமேணுக்தோயம்ஶ்லோக꞉. சூற்பெண்டுகள்-கர்ப்பிணிஸ்த்ரீகள். சுரம் - மலை. “ மழை ” என்னுதே, “ வருமழை ” என்று விசேஷித்ததுக்குபாவம் (ஊர்க்கித்யாதி) இவனும் மழையோவென்ன (புயலித்யாதி)

விவரணம் (செய்யவடிப்பதிதுவேயென்று) “ திருமாலிருஞ்சோலை ” என்றுரூடியான திருநாமத்தையுடையமலையென்று முந்தினவர்த்தம். யோகார்த்தமவலம்ப்ய த்விதீயோநிர்வாஹ꞉. ஒக்கம் - உயர்த்தி. பரப்பு - விஸ்தாரம். திறம்-செய்யும்படி.

கருமவன் பாசமித்யாரப்ய, திருமலை -அடைவததுவே திறமித்யந்வய꞉...*

ஐந்தாம்பாட்டு.

திறமுடைவலத்தாற்றீவினைபெருக்கா
தறமுயலாழிப்படையவன்கோயில்
மறுவில்வண்சுனைசூழ்மாலிருஞ்சோலைப்
புறமலைசாரப்போவதுகிறியே.

ஆறாயிரப்படி.

(திறமுடை) விரகாலும்பலத்தாலும் தீவினைபெருக்காதே, ஆஶ்ரிதரக்ஷணைகஸ்வபாவனை திருவாழியை திவ்யாயுதமாக வுடையனானவன் நின்றருளுகிற, நிர்மலமாய் ஸர்வபோக்யமாயிருந்தசுனைகளையுடைத்தான மாலிருஞ்சோலைமலையினுடைய புறமலைசாரப்போவது பரமப்ராப்யமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ரக்ஷணோத்யுக்தமான திருவாழியையுடையவன் வர்த்திக்கிற திருமலையின் புறமலையைக்கிட்டப்போவது நல்விரகென்கிறார்.

திருமுடை - நாகாகிருதமான. வலத்தால் - பலங்களாலே. அத்யந்தகாருணி களான, தீ - கொடிய. வினை - பாபங்களை. பெருக்காது - வர்த்திப்பியாதே. அறம் - ஆஸ்ரிதரக்ஷணமாகிற தர்மத்திலே. முயல் - உத்யோகத்தையுடைய. ஆழி - திருவாழியை. படையவன் - ஆயுதமாகவுடையவனுடைய. கோயில் - வாஸஸ்தாநமாய். மறு - சைவலைத்ருமங்களாகிற களங்கம். இல் - இல்லாத. வண் - விட்டுஞர் க்ஷேத்ரவர்த்திகளாகிற பக்ஷியமான. சுனை - சுனைகளாலே. சூழ் - சூழப்பட்ட. மாலிருஞ்சோலை - திருமலையின். புறமலை - புறமலை. சார - கிட்ட. போவது - போகிற வது. கிறி - நல்விரகு.

கிட்டுகிறுவும் கிட்டப்புகவர்த்திக் குமரகுல் ஸ்ரீகெவ்குவருகு. கொப்பாட்டனவும் - பதிகேத்தை கெக்கேட்டுக்காட்டிப, பேல் - கிறவைக்குறிக் வயிரேசிக் கிருா..

---

௪௫ - ஐந்தாம் பாட்டு.

திருமலைக்குப்புறப்பான மலையைப்பாசித்தைகயே கல்வீரவென்கிறார்.

(திருமுடைவலத்தால்) திறம் - சமூஹம். வலம் - பலம். இரண்டபலத்தாலே ப்ரயோஜநாந்தர ப்ராவண்யமாகிற மஹாபாபத்தைத் கூடிரூரியாதே. (அறமுயலிப்பாதி) "பரித்ராணாய ஸாதூநாம்" (ஸகலமானஸ்பசநிதைக்கு) என்கிறபடியே - ஸர்வேஸ்வரனுமாஸ்ரிதரக்ஷணத்திலே முயலாநின்றுள்ள திருவாழியை ஆயுதமாகவுடையவன் வந்துவர்த்திக்கிறதேசம். ஸர்வேஸ்வரன் கிடைக்கவிட்டுவிட, ஆஸ்ரிதரக்ஷணத்திலே வாராணையவியைதமித்து வந்துநின்றுகிலிகிற. (மறுவில்லித்யாதி) "பக்ஷிவிறலபநீராவுத்தநக்ஷத்ரதெராயார" (ரமலிபாப்ரலபநாம்பு ஸமநந்யமநோயத) என்கிறபடியே, மறுவற்ற ஆழ்வார் திருவுள்ளம் போலே தெளிவையுடைத்தாய், ஸம்பாமாய் ஊற்றுமாறுத சுனைகளாலே சூழப்பட்ட மாலிருஞ்சோலைப் புறமலைசாரப்போமிதுவே பாவந்ப்ராப்யமுத்தி வேண்டியிருப்பார்க்கு வருந்தமுலவிக்கலாம் நல்விரகு......ஃ

ஜீயர் அரும்பதம்.

ஐந்தாம்பாட்டு. (திறமியாதி) ஸமஷ்டியாதுவ்ருத்தமான்ரிதக்ரபாகதிக்கணாதினை. (திருமலைக்கியாதி)

பலிசம் (நிரணடலித்யாதி)

ஆழ - வியவுமென்றுதல்; அறம் - தர்மமாதல். அர்த்தத்வயத்தகம்பேரணுறை (லக்ஷ்மணஸ்யேத்யாதி) ஸுந்தரகாண்டே ஷோடஷஸர்காம்பம்மாருதிக, "ராஜைவஜ்வலஸாயஜ்ஞாஸுநுணைவலஜ்வமேதக: । நாஸ்தஜ்" ஆழ்வாருபை-லதலுஜ்ஜெகை ஜெவீஹஜெஜவஜ்ஜுஜாஹஜ்ஜை" (ராமஸ்யம்பவலாயஜ்ஞாஸ்மைமனஸ்யசமமேசநா தேயர்த்தமத்தப்புத்தேதேகிகங்கேஷுஸ்தரகமே) "மேதக" (நிமகீ) என்றுவி சேஷிக்கையாலே - பெருமாளைப்பற்றவுமாஸ்ரிதரக்ஷணத்தில் மிகுந்திருப்பவென்ற

படி. முயலுகை-உத்யோகிக்கையும், உத்ஸாஹிக்கையும். அப்படியாஸ்ரிதரக்ஷணத்தில் ஸர்வேஸ்வரனிற்காட்டிலும் முயன்றவிடமுண்டோவென்ன (ஸர்வேஸ்வரனி த்யாதி) வாராணஸியை தஹித்துவந்து நின்றுனிறேயென்றவிடத்திலே- "அக்ஷுத்ஸக்த மதிரநாசு நிராதரேண வாராணஸீ ஹரபுரீ பவதா விதக்தா" (அக்ஷுஷ்ஸக்தமதிநாசநிராதரேணவாராணஸீஹரபுரீபவதாவிதக்தா) என்றது அநுஸந்தேயம். பஞ்சமேப்யே சதுஸ்த்ரிம்ஸே, "ததாஹநத்தஸ்ய சக்ரம் ஸகலாமேவ தாம் புரீம்" (ததாஹநத்தஸ்சக்ரம்ஸகலாமேவதாம்புரீம்) என்றது வாராணஸீதஹநத்தில் ப்ரமாணமாக வநுஸந்தேயம்.

மறுவில்-சைவலகர்த்தமாதிகளாகிறகளங்கமின்றியிருக்கிற. (ரமணீயமித்) பாலகாண்டேத்விதீயே பாத்வாஜம்ப்ரதிவால்மீகிঃ, "அகர்த்தமமிதம் தீர்த்தம் பரத்வாஜ நிஸாமய" (அசர்த்தமமிதம்தீர்த்தம் பரத்வாஜநிஸாமய) இதிபூர்வார்த்தம். இத்தால் பலிதம் (ஆழ்வார்திருவுள்ளமித்யாதி) வண்மை-அழகும், ஔதார்யமும். இவ்விரண்டையு மருளிச்செய்கிறார் (தர்ஸநீயமாயூற்றுமாருதவென்று)

சாரப்போவது-கிட்டப்போகிறவது இதிசப்தார்த்தঃ. கட்டமேதிலும் கிட்ட ப்ரவர்த்திக்குமது நல்விரசென்று கருத்து. கிறி-விரகு.

க்ரமேணார்த்தঃ... ... ...

ஆறாம்பாட்டு.

கிறியெனநினைமின்கீழ்மைசெய்யாதே
உறியமர்வெண்ணெயுண்டவன்கோயில்
மறியொடுபிணைசேர்மாலிருஞ்சோலை
நெறிபடவதுவேநினைவதுநலமே.

ஆறாயிரப்படி.

(கிறியென) இத்தையேபரமப்ராப்யமென்று நினையுங்கள், வேறொன்றை ப்ராப்யமென்றுநினையாதே; உறியமர்வெண்ணெயுண்டவன் அச்சுவட்டிலியாமேபுகுந்து நின்றருளுகிற சர்வபோக்யமானதிருமலையை அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு நினைக்குமதுவேப்ராப்யமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஸ்ரிதஸ்பாமுக்தன்வர்த்திக்கிற திருமலைக்குப்போகிறவழியை யுட்படநினைக்குமதுவே நன்மையென்கிறார்.

கீழ்மை-விஷயாந்தரங்களைநோக்கிப்போகநினைக்கும் நீசதையை. செய்யாதே-பண்ணாதே. இந்த, கிறி-நல்விரகு. என-என்று. நினைமின் - நினையுங்கோள். ஏதென்னில், உறி - உறியிலே. அமர் - பொருந்தச்சேமித்துவைத்த. வெண்ணெய்-வெண்ணெயை. உண்டவன்-அமுதுசெய்தக்ருஷ்ணனுடைய. கோயில்-கோயிலாய். மறியொடு-தன்னுடையகன்றுகளோடேகூட. பிணை-மான்பேடைகள். சேர்-சேரு

கிற. மாலிருஞ்சோலை-திருமலையினுடைய. நெறி-வழியிலே. பட-உட்படவேணுமென்கிற. அதுவே-அத்தையே. நினைவது-நினைக்கை. நலம்-புருஷார்த்தம்.

மறி-குட்டி. பிணை-மான்பேடை... ... ... *

ஈடு - அரும்பாட்டு.

திருமலைக்குப்போம் மார்க்கசிந்தை பண்ணுமதுவே இவ்வாத்மாவுக்கு நல்லதென்கிறார்.

(கிறியெனநினைமின்) இது நல்விரகென்று புத்தி பண்ணுங்கோள். (கீழ்மைசெய்யாதே) நான்சொல்லுகிறவிதொழிய, தண்ணிதானவற்றைச்செய்யகில்லாதே. அதாவது-ப்ரயோஜநாந்தரப்ராவண்யம்.

(உறியமர்ந்யாதி) உறிகளிலேசேமித்துக் கள்ளக்கயிறுருவிவைத்த வெண்ணெயை "தெய்வங்கொண்டதோ" என்னலாம்படி களவுகண்டமுதுசெய்தவன் வந்து வர்த்திக்கிறதேசம். இத்தால-அநுகூலஸ்பர்ஸமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரிக்கமாட்டாதவனென்கை. (மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை) குட்டியுந்தாயும் பிரியாதேவர்த்திக்கிறதேசம். ரக்ஷ்யரக்ஷகங்கள் தம்மில்பிரியாதே வர்த்திக்குந்தேசமென்கை. (நெறியித்யாதி) நெஞ்சிலேயடிபடும்படியாகத் திருமலையையநுஸந்திக்குமதுவே நன்மையாவதென்னுதல்; அன்றிக்கே, நெறிபடுகைக்கு நினைக்குமதுவே-மார்க்கசிந்தைபண்ணுமதுவே யிவ்வாத்மாவுக்கு நன்மையாவதென்னுதல். (அதுவேநினைவதுநலம்) அத்தைநினைக்குமதுவேவிலக்ஷணம்; அதொழிந்தவையெல்லாம் பொல்லாததென்கை... ... ... *

ஜீயர் அரும்பதம்.

அரும்பாட்டு. (கிறியெனவித்யாதி) நாலாம்பாட்டைப்பற்ற-அவதாரிகை.

இது-நான்சொல்லுகிறவிது-ப்ரயோஜநாந்தரப்ராவண்யம் - விஷயாந்தரப்ராவண்யம். முன்பே "சதிரிளமடவார்தாழ்ச்சி" என்றதே. கீழ்மை-நீசவ்ருத்தி.

களவுகண்டமுதுசெய்கிறதுக்கு ப்ரயோஜநம் (இத்தாலித்யாதி)

மறி-குட்டி. பிணை-மான். "மறியொடுபிணைசேர்" என்றதத்தால் பலிதம் வ்யாபதேசமாறு (ரக்ஷ்யரக்ஷகங்களித்யாதி)

நெறிபட-ப்ராஹதமாக. விசதமாகவென்று முந்தினவர்த்தம். த்விதீயார்த்தத்திலே, நெறிபடுகைக்கு- மார்க்கத்திலே வர்த்திக்கைக்கு என்றர்த்தம். அதுவே-அத்தையே. திருமலைக்குப்போம்வழியையே நினைவதுநலம். ஏவகாரவ்யவச்சேத்யம் (அதொழிந்தவையித்யாதி) "மாலிருஞ்சோலைநெறிபட" இத்யாதிக்கு -"திருமலையினுடையவழியிலே யுட்படவேணுமென்கிறவத்தையே நினைக்கைபுருஷார்த்தம்" என்னுரையிலர்த்தம்.

கீழ்மைசெய்யாதே-கிறியெனநினைமின்; உறியமரித்யாரப்ய, க்ரமேணுவ்வயஃ.

ஏழாம்பாட்டு.

நலமெனநினைமினரகழுந்தாதே
நிலமுனமிடந்தானிடுறைகோயில்
மலமறுமதிசேர்மாலிருஞ்சோலை
வலமுறையெய்திமருவுதல்வலமே.

ஆறாயிரப்படி.

(நலம்) இதுவேப்ராப்யமென்று நினையுங்கள், வேறொன்றைப் ப்ராப்யமாகநினையாதே; நிலமுனமிடந்தான் என்னைநிறுத்தனக்குக் கோயிலாகக்கொண்ட, பரமபுருஷ நிர்மலஜ்ஞாநஜநகமான திருமலையை யநந்யப்ரயோஜநராய்க்கொண்டு வலம்செய்துமருவுங்கள்; இதுவேபரமப்ராப்யமென்கிறார்...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ப்ரளயாபத்ஸகன் வர்த்திக்கிறதிருமலையிலாநுகூல்யமே ப்ராப்யமென்கிறார்.

பதிவுட்டராய், நரகு - ஸம்ஸாரநிரயத்தில். அழுந்தாதே - அழுந்தாதே. இத்தை, நலம் - பரமப்ரயோஜநம். என - என்று. நினைமின் - புத்திபண்ணுங்கோள். முனம் - ப்ரளயங்கொண்டமுற்காலத்திலே. நிலம் - பூமியை. இடந்தான் - வராஹவேஷத்தைக்கொண்டு இடந்தெடுத்தவன். இறை - நித்யவாசம்பண்ணுகிற. கோயில் - கோயிலாய். மலமறு - நிரஸ்தநிகிலதோஷனாகையாலே களங்கரஹிதனான. மதி - சந்த்ரன். சேர் - பொருந்துகிற. மாலிருஞ்சோலை - திருமலையை. முறை - சேஷசேஷிபாவமாகிற முறைப்பாட்டாலுள்ள. வலம் - ஆநுகூல்யத்தை. எய்தி - பெற்று. மருவுதலே - பொருந்துகையே. வலம் - பலாத்காரம்.....................*

ஈடு - ஏழாம்பாட்டு.

திருமலையைச்சென்று கிட்டிநிரந்தரவாஸம்பண்ணுகையே யிவ்வாத்மாவுக்கு வெற்றியென்கிறார்.

(நலமெனநினைமின்) நான்சொல்லுகிறவர்த்தத்தை நன்மையென்று புத்திபண்ணுங்கோள். விலக்ஷணமான புருஷார்த்தமென்று புத்திபண்ணுங்கோள், (நரகழுந்தாதே) நரகத்தநுபவிக்கிறவர்களுக்கு வ்யவஸ்திதமாயிறேயிருப்பது, [யஸ்த்வயாஸஹஸஸ்வர்க:] (யஸ்த்வயாஸஹஸஸ்வர்க:) "காட்டிலேபோமதுநரகம், படைவீட்டிலே யிருக்குமது சுகம்" என்றுமிற்று பெருமாளருளிச்செய்தது; அந்நனல்ல, சுகதுக்கங்கள் வ்யக்திதோறும் வ்யவஸ்திதமாய்க் காணுமிருப்பது; யாதொன்றும்மோடே பொருந்துகிறது, அது சுகமாகிறது, உம்மையொழியப்படை விட்டிலிருக்குமிருப்பு துக்கமாகிறது. [இதிஜாநந்] (இதிஜாநந்)

தந்தாமுக்கில்லாதவை, பிறர்பக்கலிலே கற்றறியவேணுங்காணும். [வராஹோஸி] (பராம்ப்ரீதும்) உம்மைப்போலே இருக்கவல்லார்க்காணு மென்னுடைய ப்ரீதியிருப்பது. நம்மினுடைக்கு ப்ரீதிபரையாகச்சொன்னாய், அதுக்கு நம்மைச் சொல்லுகிறதென்னென்ன. [மஹாராஜோபாஸஹ] (கச்சாமமயாஸஹ) "ஸுருதமைஷிஷ்யாமி" (அக்ரதஸ்தேகமிஷ்யாமி) என்று - நான்புறப்பட்டபடியே, என்னைமுன்னேபோகவிட்டுப் பின்னேவரப்பாரும். "நவஸீதாத்வயாவிநா" (கசாவிநாத்வயாவிநா) என்றிறே இளையபெருமாள். (நரகமுந்தாதே) பிரிவால்வரும் க்லேசாநுபவம்பண்ணுதே.

(நிலமித்யாதி) வராஹகல்பத்தி னுதியிலே மஹாவராஹமாய், அண்டபித்தியிலே சேர்ந்ததுமாய்த்தரையை ஒட்டுவிடுவித்தெடுத்துக் கொண்டேறின திருப்பாதங்களையுடையவன், அவதாரங்கள்போலேநிற்கும் ப்ரசாதியாதே நித்யவாசம்பண்ணுகிறதேசம், (மலமறு) சந்த்ரபதத்துக் கவ்வருகேவளர்ந்து நிற்கையாலே, அவன்போம்போது சிரங்களிலே தேய்ப்புண்டு சாணையிலேயிட்டாற்போலே களங்கமறுகிற்குமென்னுதல்; அன்றிக்கே, "திருமலையாழ்வார் தாம் ந்நாலப்பத்தையுண்டாக்குவர்" என்றுபிள்ளான்வார்த்தை. (வலமுறையெய்தி) காலயவநஜராசந்தாதிகளைப்போலேயன்றிக்கே, அநுகூலமான முறையிலேயிட்டு, மருவுதல்வலமென்னுதல், வரமென்னுதல் - பலவத்தரமென்னுதல், ச்ரேஷ்டமென்னுதல்.................................*

ஜீயர் அரும்பதம்.

அராம்பாட்டு. (நலமெனவித்யாதி) "மாலிருஞ்சோலை-மருவுதல்வலம்" என்றதைப்பற்ற (திருமலையையித்யாதி)

நன்மையாவதிதென்ன; விவரிக்கிறார் (விலக்ஷணமானவித்யாதி) "மருவுதல்" என்றபதத்துக்குச்சேர, "நரகு" என்கிறது - விஶ்லேஷவ்யஸநத்தை யென்னுமிவக்கிற்க, "நரகு" என்றால் - விஶ்லேஷவ்யஸநத்தைச் சொல்லுமோவென்ன (நரகங்களுமித்யாதி) நரகு - நரகம். இவர்களுக்கு - ஆழ்வார்களுக்கு. இதுக்குஸம்வாதம் (யஸ்த்வயேத்யாதி) அயோத்யாகாண்டே ராமம்ப்ரதிஸீதா, "யஸ்த்வயாஸஹஸஸ்வர்க்கோநிரயோயஸ்த்வயாவிநா। இதிஜாநந்பராம்ப்ரீதிம்கச்சராமமயாஸஹ। யதித்வம்ப்ரஸ்த்திதோதுர்க்கம்வநமத்யைவராகவ। அக்ரதஸ்தேகமிஷ்யாமிம்ருத்நந்திகுஶகண்டகாந்" (யஸ்த்வயாஸஹஸஸ்வர்க்கோநிரயோயஸ்த்வயாவிநா। இதிஜாநந்பராம்ப்ரீதிம்கச்சராமமயாஸஹ। யதித்வம்ப்ரஸ்த்திதோதுர்க்கம்வநமத்யைவராகவ। அக்ரதஸ்தேகமிஷ்யாமிம்ருத்நந்திகுஶகண்டகாந்) ஶ்லோகவ்யாக்யாநார்த்தம் பூர்வவ்ருத்தமநுவததி (காட்டிலேயித்யாதி) "த்வயா ஸஹ-யோவாஸ:, ஸ்வர்க்க:; த்வயாவிநா-யோவாஸ:, ஸ நிரய:-து:க-

ஐவராம்ஶ்ச திஷ்டஜாநுயோஸ்ஸஹ-மஹா " (த்வயாஸஹ-யோவாஸ:, ஸஸ்வர்க்க:; த்வயாவிநா-யோவாஸ:, ஸநிரய:-இதி-மமபராம்ப்ரீதிம்-ஜாநந்-மயாஸஹ-கச்ச) இத்யந்வயம் ஹ்ருதிநிதாயார்த்தமாஹ (யாதொன்றித்யாதி) (பிறர்பக்கலிலேயிதி) மதுபதேசாதிதியாவத். " பராம் " என்றதுக்குபாவம் (உம்மைப்போலேயித்யாதி) " ஐயாஸஹ " (மயாஸஹ) என்றதுக்கு - " ஸஹயாஸ்யதே வ்யாஜே " (ஸஹயுக்தேப்ரதாநே) என்கிறக்ரமமன்றிக்கே, லோகவ்யவஹாராநுகுணமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார் (அக்ரதஇத்யாதி) பிராட்டிமார்க்கன்றேவிஶ்லேஷம் நரகமாய்த்தோற்றுவது, புருஷரானவிவர்க்கப்படி தோற்றுமோவென்ன; இளையபெருமாளைப்போலே யிவர்க்கும்கூடும் இத்யபிப்ராயேணாஹ (நசஸீதேத்யாதி) " நரகமுந்தாதே " என்றதுக்குவ்யாக்யாநம் (பிரிவாலித்யாதி)

" முனம் - நிலமிடந்தான் " என்றந்வயித்தர்த்தம் (வராஹேத்யாதி) அத்தாத்பர்யம் (நிருபாதிகஸௌஹார்த்தமுடையவனென்று)

மலமறும்படி - மதிசென்று முந்தினவர்த்தம். மலமற்றஜ்ஞாநம் சேரும்படி யிருக்கிறமாலிரும் சோலையென்று த்விதீயார்த்தம். நெய்ப்புண்டு - உளாயுண்டு.

வலமுறையெய்தி - ப்ரதக்ஷிணம் செய்கையாகிற முறையாலேகிட்டியென்று சப்தார்த்தம். " வலமுறையெய்தி " என்றுவிசேஷிந்ததுக்குபாவம் (காலயவநேத்யாதி) அர்த்தத்வயத்தையு மடைவேவிவரிக்கிறார் (பலவத்தரமித்யாதி)

எட்டாம்பாட்டு.

வலஞ்செய்துவைகல்வலங்கழியாதே
வலஞ்செய்யுமாயமாயவன்கோயில்
வலஞ்செய்யும்வானோர்மாலிருஞ்சோலை
வலஞ்செய்துநாளுமருவுதல்வழக்கே.

ஆறாயிரப்படி.

(வலம்செய்து) ஹேயவிஷயங்களிலே விநியோகிக்கருமந்தபலத்தைப்போக்காதே, ஆஶ்சர்யபூதனாய் ஆஶ்ரிதசுலபனாயிருந்த எம்பெருமானும் *அயர்வறுமமரர்களும் வலம்செய்துகொண்டநுபவிக்கிற திருமாலிருஞ்சோலைமலையைவலம்செய்து நாளும்மருவுகைவழக்காவதென்கிறார்.*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், ஆஶ்ரிதாநுகூலனான க்ருஷ்ணன்வர்த்திக்கிற திருமலையிலே நிரந்தராநுகூல வ்ருத்தியே ஸ்வரூபப்ராப்தமென்கிறார்,

கரணங்களுக்கு, வலம்-பலத்தை. செய்து-உண்டாக்கி. வைகல்-நிரந்தரமாக. வலம் - அந்தபலத்தை. கழியாதே - இதரவிஷயமாக்கிக்கெடாதே. வலம் - ஆஶ்ரிதர்க்குபவ்யதையாகிற ஆநுகூல்யத்தை. செய்யும் - பண்ணும். ஆயன் - க்ருஷ்ணனான. மாயவன் - ஆஶ்சர்யபூதனுடைய. கோயில் - கோயிலான. வானோர்-ப

ரமபதவாசிகள். வலம் - அநுகூலவ்ருத்தி. செய்யும் - பண்ணும். மாலிருஞ்சோலை - திருமலையைக்குறித்து. வலம் - ப்ரதக்ஷிணாத்யநுகூலவ்ருத்தியை. செய்து - பண்ணி. நாளும் - நிரந்தரம். மருவுதல் - ஸம்ஶ்லேஷம்பண்ணுகை. வழக்கு - ந்யாயம்..*

---

௮ - எட்டாம்பாட்டு.

திருமலையைநிரந்தரமாக வலஞ்செய்கையே வழக்கென்கிறார்.

(வலஞ்செய்தித்யாதி) சர்வேஶ்வரன் தன்னையாஶ்ரயிக்கைக்குறுப்பாகத்தந்த மநுஷ்யசரீரத்தைக்கொண்டு பலத்தையுண்டாக்கி, பின்னையவனையாஶ்ரயிக்கையன்றிக்கே இதரவிஷயப்ராவண்யத்தைக் கூடலாக்கியனர்த்தப்படாதே. (வலஞ்செய்யும்) திருச்சித்ரகூடபரிசரத்திலே பிராட்டியையுங்கூடக் கைப்பிடித்துக்கொண்டு உலாவினாற்போலே, பிராட்டிகையைப்பிடித்துக்கொண்டு அழகர் அநாத்தோடே சஞ்சரிக்கிறதேசம். "யதூத்ராவேஜாதா:" (யதூத்மதாபலதா:) என்கிறபடியே - தன்னையுங்கொடுத்து, தன்னையநுபவிக்கைக்கீடான சக்தியையுங்கொடுக்கு மாஶ்சர்யபூதனானக்ருஷ்ணன் வர்த்திக்கிறதேசம். (வலம்செய்யும்வானோர்மாலிருஞ்சோலை) கீழ் "விண்ணோர்வெற்பன்" என்றார், இங்கே (வானோர்மாலிருஞ்சோலை) என்கிறார்; இதுக்குநினைவென் உகந்தருளினதேசமெல்லாங் கிடக்கவென்னில்; ப்ரஜைக்குத்தாயினுடைய அவயவமெல்லாங்கிடக்க முலைக்கண்ணிலேயிறே வாய்வைக்கலாவது, அப்படியேயிங்கு "தென்னனுயர்பொருப்பும்தெய்வவடமலையும்" என்கிற முலையாகையாலே அவர்களுக்கேயாயிருக்கிறது. (வானோர்மாலிருஞ்சோலை) பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது லக்ஷ்மணபரதர்கள் பின்தொடர்ந்தாற்போலே, சர்வேஶ்வரனிங்கேபோருகையாலே நித்யசூரிகளும்போந்து வலஞ்செய்யாநிற்பர்கள். (வலஞ்செய்து) நாமுமிவர்களோடேகூட அங்கேயநுகூலவ்ருத்திகளைப்பண்ணி. "பிள்ளைதிருநறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்கப் பின்னேசேவித்துக்கொண்டுபோனேன்; அல்லாதார் கடுங்குதிரைபோலே வாராநிற்க, இவர்கள், திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும்கண்டாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வந்தார்கள் என்று நஞ்சீயரருளிச்செய்வர். (நாளும்மருவுதல்வழக்கே) நித்யசூரிகளுடைய யாத்ரையே தனக்குயாத்ரையானால் பின்னைமறுவலிடாதிறே. இதுவேவழக்கு.

ஜீயர் அரும்பதம்.

எட்டாம்பாட்டு. (வலம்செய்தித்யாதி) நாலாம்பாதத்தைக் கடாக்ஷித்த அவதாரிகை. வழக்கு - ந்யாயம்.

“ विचित्रा देहसम्पत्तिरीश्वराय निवेदितुम् ” (விசித்ராதேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும்) என்றத்தைப்பற்ற (தன்னையாஸ்ரயிக்கைக்கு உபகாரகமென்றது) பலத்தையுண்டாக்கி - அந்நபாநாதிகளாலே யுண்டாக்கியென்றபடி. உடலாக்கி - அந்தபலத்தையுடலாக்கி. பலத்தையுடலாக்கி - நிரந்தரமாக வந்தபலத்தை யிதரவிஷயமாக்கிக் கொடாதேயென்றுசப்தார்த்தம்.

“ வலஞ்செய்யுமாயமாயவன் ” என்றதுக்கு - மாவென்று-பிராட்டியாய், அவளையுடையவன் - மாயவனாய், “ மாயவனை-ஆயன்-வலம்செய்கிற-கோயில் ” என்றுவிவக்ஷித்துபாவம் (திருச்சித்ரகூடேத்யாதி) “ வலம்செய்யும்-மாயவனை - ஆயன்வர்த்திக்கிற-கோயில் ” என்றர்த்தாந்தரம் (யஜுர்மதாஜேத்யாதி) இந்தபக்ஷத்தில், வலமென்று-பலமாய், செய்கை-கொடுக்கையாய், பலத்தைக்கொடுக்குமென்றபடி. மாயயன் - (ஆஸ்சர்யபூதன்)

“ सदृशादृष्टचिन्ताद्याः स्मृतिबीजस्य बोधकाः ” (ஸத்ருஶாத்ருஷ்டசிந்தாத்யாஸ்ம்ருதிபீஜஸ்யபோதகா:) இதிந்யாயேந. “ வானோர்மாலிருஞ்சோலை” இத்யஸ்யஸத்ருஶம் ப்ரயோகாந்தரம்விவக்ஷித்ய, ப்ரயோகத்வயஸ்ய ச ஹேதுமாஹ (ஷூரித்யாதிநா) நித்யஸூரிகளிங்கே வருகைக்கு மநுகூலவ்ருத்தி பண்ணுகைக்கும் ஹேதுமாஹ (பெருமாளித்யாதி) (தென்னவித்யாதி) பெரியதிருமடல். உயர்ந்ததெற்குத் திருமலையும், மேன்மையிலேற்றத்தையுடைய வடக்குத் திருமலையுமென்றுசொல்லப்படுகிறவை யிரண்டும்முலையாகவென்று பாசுரார்த்தம்.

வலம்செய்கை உபாயகோடியிலன்வயியாதோவென்ன ; அந்வயியாதென்கைக்கைதிறபம் (பின்னையித்யாதி) (அல்லாதாரித்யாதி) அல்லாதார் - ஸாதநத்வேந ப்ரதிபத்தி பண்ணுகிறபேர். கன்றாலே பழுவாளைப்போலே யென்கையாலே - ப்ராப்யத்வம் ஸுஸ்பஷ்டம். “ நாளும்மருவுதல், ” என்கிறவிதுகூடுமோ, கதாசித் ப்ரயோஜநாந்தர ப்ராவண்யத்தாலே ஸாதநத்வபுத்தி பிறவாதோவென்ன (நித்யஸூரிகளுடையவித்யாதி) நித்யஸூரிகளைப்போலே கைங்கர்யைகதாரக போஷகபோக்யராகையால், ப்ரயோஜநாந்தர ப்ராவண்யத்துக்கும் தந்மூலஸாதநத்வபுத்திக்கும் ப்ரஸங்கமில்லையென்றபடி. மறுவவிடாத - திருப்பாடு. “ மருவுதலே வழக்கு ” என்றதுவிவக்ஷிதார்த்தம் (இதுவே வழக்கென்று) இதமேவப்ராப்தமித்யர்த்த:. நாளும்மருவுதல் - நிரந்தரஸம்ச்லேஷம்பண்ணுகை.

வைகல் - வலம்செய்து - வலம்சுழியாதே, மாயவனை - ஆயன்-வலம்செய்யும்-கோயிலாய், அதுவே, வானோர் - வலம்செய்யுமதான - மாலிருஞ்சோலையை நீங்களும்வலம்செய்து-நாளும்மருவுதலே-வழக்கித்யந்வய:........................*

ஒன்பதாம்பாட்டு.

வழக்கெனநினைமின்வல்வினைமூழ்கா
தழக்கொடியட்டானமர்பெருங்கோயில்
மழக்களிற்றினஞ்சேர்மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதேதுணிவதுசூதே.

ஆறாயிரப்படி.

(வழக்கென) வேறொன்றையுக்தமென்று பாராதே யிதுவேயுக்தமென்று பார்த்து, ஆஸ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனாயிருந்தவனுடைய அபிமதமான திவ்யஸ்த்தானமாய், ஸர்வாத்மபோக்யமாயிருந்த திருமலையைத் தொழுவோமென்றுண்டான ஸங்கல்போத்யோகமாத்ரத்தைப்பண்ணுகை யவனுக்கடிமைசெய்கைக்கு நல்லுபாயமென்கிறார்... ...*

பன்னீராயிரப்படி.

அநந்தரம், பூதநாநிரஸநம்பண்ணினவன் வர்த்திக்கிற திருமலையைத்தொழுவேனென்கிற நினைவிற் றுணிவுவெற்றிக்கடியென்கிறார்.

வல்-கடக்கவரிதாம்படிப்ரபலமான. வினை-பாபங்களிலே. முற்காது-முற்காதே. வழக்கு - இதுஸ்வரூபாநுரூபம். என-என்று. நினைமின் - நினையுங்கோள். அழன்-பேயானை. கொடி-பெண்ணை. அட்டான்-நிரஸித்தவன். அமர்-பொருந்திவர்த்திக்கும். பெரு - அஸங்குசிதமான. கோயில்-கோயிலாய். மழ - கன்றுகளான. களிற்றினம்-ஆனைத்திரள். சேர்-சேருகிற. மாலிருஞ்சோலை - திருமலையை. தொழ-தொழவேணுமென்கிற. கருதுவதே-நினைவிலே. துணிவதே - துணிகையே. சூது-ஸம்ஸாரத்தைவெல்லுகைக்குஹேது.

*அழன்-பேய். கொடி-பெண்... ... ... **

---

௯ - ஒன்பதாம்பாட்டு.

"திருமலையைத்தொழுவோம்" என்றத்யவஸித்து நினைக்கையமையும் விஜயஹேதுவென்கிறார்.

(வழக்கெனநினைமின்) நான்சொல்லுகிற இதுவே முறையென்று புத்திபண்ணுங்கோள். (வல்வினைமுற்காது) உங்களால் போக்கிக்கொள்ளவொண்ணாத மஹாபாபங்களைப் பரிஹரிக்கவேண்டியிருந்திர்களாகில். அழனென்று-பேய்க்குப்பேர்; கொடியென்று-பெண்ணுக்குப்பேர்; பேய்ப்பெண்ணென்றபடி. அழனென்று-பிணமாய், அத்தால் - பேயென்றபடி. பூதனையைமுடித்தவன் "இங்ஙனொத்தவிரோதிகள் வந்தபோதாக நம்மை கெடுங்கைநீட்டாக்கிவைக்கவொண்ணாது" என்று நித்யவாஸம்பண்ணுகையாலே ப்ராப்யமானகோயில். (மழவித்யாதி) அங்குண்டான திர்யக்குகளும் அழகரோடேயினமாயாயிற்றிருப்பது. இளவானைக்கன்றுகள் இனமினமாகச்சேராநின்றுள்ள திருமலையை. லக்ஷணோபேதமாயிருப்பதொரு ஆனைநின்றவிடத்தே ஆயிரமானைவந்து சேராநிற்கும்; அங்குநிற்கிறதும் * சோலைமழகளிறிறே, * தென்னானையிறே. திருமலையைத்தொழவேணும் என்னும் மநோரதத்திலே துணிவதே இவ்வாத்மாவுக்கு விஜயஹேது... ... ...*

ஜீயர் அரும்பதம்.

ஒன்பதாம்பாட்டு. (வழக்கெனவித்யாதி) சதுர்த்தபாதத்தைக்கடாக்ஷிக்கு-அவதாரிகை. "சூது" என்றபதத்தைப்பற்ற (விஜயஹேதுவென்றது)

முறையென்று - ப்ராப்தமென்று. மூழ்காது-மூழ்காதேயிருக்கவேண்டில்.

"அழன்" என்று-பேயைச்சொல்லும்படி யென்னென்ன (அழனென்றுபிணமாயித்யாதி) நெடுங்கைநீட்டாக்கி-அதிதூரமாக்கி. "பெரு" என்றதினர்த்தம் (ஸ்லாக்யமானவென்றது)

"மழ" என்றவிசேஷணத்துக்குபாவம் (அங்குண்டானவித்யாதி) ஒரினம்-ஒருபருவம். இனம்-பருவம். "இனம்" என்று - ஸமூஹமாக விவக்ஷித்தர்த்தாந்தரம் (இளவானையித்யாதி) மழ - இளமை. இனத்துக்குஹேதுவேதென்ன (லக்ஷணேத்யாதி) லக்ஷணோபேதமான ஆனையங்கிருக்கிறதோவென்ன (அங்குநிற்கிறதுமித்யாதி) ப்ரமாணாந்தரம் (தென்னானையிறேயென்று) திருநெடுந்தாண்டகம்.

சூது-விஜயஹேது. தொழக்கருதுவது - தொழவேணுமென்கிற நினைவிலே. துணிவதுவே-துணிகையே.

வல்வினைமூழ்காதித்யாரப்ய, தொழக்கருதுவதே துணிவதுசூது; இத்தை வழக்கெனநினைமினித்யந்வய: 8... ... ... *

பத்தாம்பாட்டு.

சூதென்றுகளவுஞ்சூதுஞ்செய்யாதே
வேதமுன்விரித்தான்விரும்பியகோயில்
மாதுறுமயில்சேர்மாலிருஞ்சோலைப்
போதவிழ்மலையேபுகுவதுபொருளே.

ஆறாயிரப்படி.

(சூதென்று) புருஷார்த்தமான செயலைச்செய்கிறோமென்றுகொண்டு சௌர்யக்ருத்ரிமங்களைச்செய்யாதே, "சர்வவேதங்களுக்கும் தானே ப்ரதிபாத்யன்" என்னுமிடத்தை ஸ்ரீகீதையாலே யருளிச்செய்தருளின அந்தமஹாகுணத்தையுடைய எம்பெருமான் றனக்குங்கூட ஸ்ப்ருஹணீயமான திருமலையிலே போய்ப்புகுவதுவே பரமபுருஷார்த்தமென்கிறார்.. *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், வைதிகஜ்ஞாந ப்ரவர்த்தகன் வர்த்திக்கிற திருமலையிலேப்ரவேசிக்கிறவிது புருஷார்த்தமென் றுபக்ரமித்த வுபதேசத்தை நிகமித்தருளுகிறார்.

சூது - ஸாஹஸமானவர்த்தநம். என்று - என்றுநினைத்து. களவும் - களவுகாணுதல். சூதும் - பார்த்திருக்க அபஹரித்தல். செய்யாதே - செய்யாதே. முன் - முற்காலத்திலே. கீதோபநிஷதாதிமுகத்தாலே, வேதம் - வேதார்த்தத்தை.

விரித்தான் - விவரித்தவன். விரும்பிய-விரும்பிவர்த்திக்கிற. கோயில்-கோயிலாய். மாது-மாதிமை. உறு-உடைத்தான. மயில் - மயில்கள். சேர்-சேர்ந்துவர்த்திக்கிற. மால்-ஓங்கி. இரு-பரந்த. சோலை-சோலைகளில். போது-பூவானது. அவிழ்-மலருகிற. மலை - திருமலையிலே. புகுவதே - சென்றுபுகுவதே. பொருள் - புருஷார்த்தம்.

மாதிமை - மென்மை. மாதுறுவென்று - பேடையோடேசேர்ந்தவென்றுமாம்............*

ஈடு - பத்தாம்பாட்டு.

பலபடியாலும் திருமலையே பரமப்ராப்யமென்று உபக்ரமித்தபடியே உபஸம்ஹரிக்கிறார்.

(சூதென்று) நமக்குநல்லவாய்ப்பாயிருந்ததென்று சூதும்களவும்செய்யாதே, சாஸ்த்ரங்களிவற்றை நிஷேதிக்கையாலே அவற்றையுஞ்சொல்லவுமாம். அன்றிக்கே,களவாவது-“சோரேணாத்மாபஹாரிணா” (சோரேணாத்மாபஹாரிணா) என்கிற ஆத்மாபஹாரமாய், சூதாவது - சாத்விகனாய் ப்ராமாணிகனாயிருப்பானொருவன் “ ஸர்வேஸ்வரன்ரக்ஷகன் ” என்றுவிஸ்வஸித்திருந்தால், “ காண்கிறதேயன்றோ நுக்கவ்வருகே ஈஸ்வரனாவதென், ஆத்மாவாவதென் ” என்றுகாணக்காண அபஹரிக்கை. (வேதமித்யாதி) இவையொருவர்க்கு வாராதபடிவேதார்த்தத்தை விஸதீகரித்த கீதாபதேஷ்டாசார்யன் வர்த்திக்கிறகோயில்.(மாதுறுமயில்) மாதென்று - மார்த்தவத்தைச் சொல்லுகிறதாய், சுகுமாரமாய் தர்சநீயமான மயிலென்றுதல் : பேடையையுற்ற மயிலென்றுதல். அங்குள்ள ஸத்வங்களெல்லாம் மிதுநமேயாய் வர்த்திக்குமென்கை. (போதவிழ்மலையே) கொடியும்தண்டும்சருகும் இடையிடையிலே பூவுமாயிருக்கையன்றிக்கே, திருமலைதன்னை முட்டாக்கிடப் பூத்துக்கிடக்குமித்தனை. திருமலையைக்கிட்டுமதுவே இவ்வாத்மாவுக்கு ப்ரயோஜநமாய்த் தலைக்கட்டுவது, அல்லாதவையெல்லாம் வ்யர்த்தவ்ருத்திகளென்கிறார்................

ஜீயர் அரும்பதம்.

பத்தாம்பாட்டு. (சூதென்றித்யாதி) “ சதிர் ” என்றும் - “ பொருள் என்றுமுபக்ரமோப ஸம்ஹாரங்களிலே-ப்ராப்யவாசகங்களாகக் கருதியவதாரிகை (பலபடியாலுமித்யாதி)

சூதென்று - ஸுகரமான வர்த்தஸாதகமென்று நினைத்து. நல்லவாய்ப்பு-நல்லவாதாயம். சூதும்களவும் - சதுரங்காதிகளும், பரத்ரவ்யாபஹாரமுமென்றபடி

வ்யுத்க்ரமமாக வ்யாக்யாநம்பண்ணிற்று - “ சூதனாய்க்கள்வனாகி ” என்றதைப பற்ற. நிஷேதிக்கையாலே பென்றவிடத்திலே - “ அநாஹிதாக்நிதாஸ்தைந்யம் குணாநாஞ்சாநபக்ரியா । அஸச்சாஸ்த்ராதிகமநம் கௌஶீல்யம் வ்யஸநக்ரியா” (அநாஹிதாக்நிதாஸ்தைர்யம் குணாநாஞ்சாநபக்ரியா । அஸச்சாஸ்த்ராதிகமநம் கௌஶீல்யம்வ்யஸநக்ரியா) என்றமநுவசநமநுஸந்தேயம். கௌஶீல்யம்-குத்ஸிதஶீலதா. வ்யஸநக்ரியா - த்யூதாதி:. ஸ்தைந்யம் - ஸ்தேநத்வம். “ ஹவேத்ரு கிங்கிணீத்விஜ: ” (பவேதத்ரிகிணீத்விஜ:) இத்யாதௌஹ்ருதயம். அத்ரிகிணீ-த்யூதாதிவ்யாபாரரஹித:. அவற்றையென்றது - களவும்சூதும். களவாவது - காணாதேயபஹரிக்கை. சூதாவது - கண்முன்னேயபஹரிக்கை. “ யோந்யதாஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே । கிம்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா ” (யோந்யதாஸந்தமாத்மாநமந்யதாப்ரதிபத்யதே । கிம்தேநநக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா) இத்யுத்யோகபர்வணி த்ருதராஷ்ட்ரம்ப்ரதி ஸநத்ஸுஜாத:.

இவை - த்யூதசௌர்யங்கள்.

மாது - ஸௌகுமார்யமும், ஸௌந்தர்யமும், ஸ்த்ரீயும். ஸௌகுமார்ய ஸௌந்தர்யங்களைத்தந்தோனாறு (மாதென்றித்யாதி) பேடையென்றவர்த்தத்தை ப்பற்ற (அங்குள்ளவித்யாதி)

“ போதே - அவிழ்மலே ” என்றந்வயித்து, ஏவகாரார்த்தம் (கொடியுமித்யாதி) போது - புஷ்பம். அவிழ்கை - மலருகை. “ புகுவதுவே-பொருள் ” என்றந்வயித்து. ஏவகாரவ்யாவர்த்த்யம் (அல்லாதவையித்யாதி)

க்ரமேணாந்வய:...*

பதினொன்றும்பாட்டு.

பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல்
மருளில்வண்குருகூர்வண்சடகோபன்
தெருள்கொள்ளச்சொன்னவோராயிரத்துளிப்பத்
தருளுடையவன்றாளணைவிக்குமுடித்தே.

ஆறுயிரப்படி.

(பொருளென்று) சம்ஸாரிகளான ஆத்மாக்களினுடைய ஸம்ருத்தியேநமக்கு ப்ரயோஜநமென்றுபார்த்து, தத்ஸம்ருத்த்யர்த்தமான ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணியருளினவன் குணங்களில் ஓரஜ்ஞாந கந்தமின்றியே யிருந்தவண் குருகூர்ச்சடகோபன், எல்லாருக்குமெம்பெருமானை ப்ரத்யக்ஷித்தாற்போலே யறியலாம்படி சொன்ன இப்பத்து அழகர் திருவடிகளிலேசேர்வித்து முடிக்குமென்கிறார். ... ... *

பன்னீராயிரப்படி.

அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்ப்ராப்தியை யருளிச் செய்கிறார்.

பொருள் - ஆஶ்ரிதாபிமுக்யம்ப்ரயோஜநம், என்று - என்று - இ - இந்த. உலகம் - லோகத்தை. படைத்தவன் - ஸ்ருஷ்டித்தவனுடைய. புகழ்மேல் - தயா க்ஷமௌதார்யாதி குணப்ரதைதவிஷயமாக, மருளில் - அஜ்ஞாநகந்தரஹிதராய். வண் - விலக்ஷணமான. குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகராய். வண் - மஹோதாரரான. சடகோபன் - ஆழ்வார். தெருள் - தத்த்வஜ்ஞாநமானது. கொள்ள - சேதநரைஸ்வீகரிக்கும்படி, சொன்ன - அருளிச்செய்த. ஓர் - அத்விதீயமான. ஆயிரத்துள் - ஆயிரத்துள். இப்பத்து - இப்பத்தும். முடித்து - ஸம்ஸாரத்தைநசிப்பித்து அருளுடையவன் - க்ருபாபரிபூர்ணரான அழகருடைய. தாள் - திருவடிகளை. அணைவிக்கும் - அடைவிக்கும்.

முடித்தென்று - கர்த்தவ்யங்களைத் தலைக்கட்டியென்றுமாம்.

இது - கலிவிருத்தம்.... ... ...*

ஈடு - பதினொன்றாம்பாட்டு.

நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றாரை, இத்திருவாய்மொழிதானே ஜந்மத்தைப்போக்கி அழகர்திருவடிகளிலே சேர்த்துவிடுமென்கிறார்.

(பொருளித்யாதி) ப்ரயோஜநப்படுமென்றிந்த லோகங்களையுண்டாக்கினவனுடைய கல்யாணகுணவிஷயமாக அஜ்ஞாநகந்தமில்லாத ஆழ்வாரருளிச் செய்ததிதுதான். இவற்றையுண்டாக்கி கரணகளேபரங்களைக் கொடுத்துவிட்டால், கொடுத்த உபகரணங்களைக்கொண்டு சப்தாதி விஷயங்களிலே ப்ரவணராய்க்கை கழியப்புக்கால், “நம்மினைவுதப்பிற்றிறே” என்றுநெகிழ்ந்து கைவாங்குகையன்றிக்கே, “ஒருநாளல்லாவொருநாளாகிலும் ப்ரயோஜநப்படாதோ” என்றுபலகாலு முண்டாக்காநிற்கும்; *மயர்வறமதிநல மருளப்பெற்றவராகையாலே அவனுடைய குணவிஷயமாக மருளில்லாதவ ராயிற்றிவ்வாழ்வார். ப்ரபந்தமோவென்னில் (தெருள்கொள்ளச்சொன்னவோராயிரம்) மருளுண்டாய்க் கழியவேண்டிற்றிவர்க்கு, இவருடைய ப்ரபந்தமப்யஸித்தார்க்குமுதலிலேயஜ்ஞாநந்தானில்லை. கேட்டார்க்குத் தெளிவைப்பிறப்பிக்கும்படி யாயிற்றருளிச் செய்தது. தம்முடைய ஜ்ஞாநத்துக்கடியீஶ்வரன், இவர்களுக்குத் தாமடியாகவந்தது. ப்ரபந்தந்தான் செய்வதென்னென்னில் (அருளுடையித்யா

தி) அருளையிட்டாயிற்று வஸ்துவைநிரூபிப்பது. அருளையுடையவன் திருவடிகளிலே சேர்த்துவிடும். அதுசெய்யுமிடத்தில் (முடிக்கே) ஸம்ஸாரசம்பந்தத்தை வாசனையோடேபோக்கித் திருவடிகளிலேசேர்த்துவிடும். ஒருஜ்ஞாநலாபத்தைப்பண்ணித்தந்து விடுமளவன்றிக்கே, அர்த்தக்ரியாகாரியாயிருக்கும்.

முதற்பாட்டில்-கடுகத்திருமலையாழ்வாரை யாஶ்ரயியுங்கோளென்றார்; இரண்டாம்பாட்டில் - திருமலையோடு சம்பந்தித்தஸ்ரீபதியை ஆஶ்ரயிக்கச்சொன்னார்; மூன்றாம்பாட்டில்-அத்தோடுசேர்ந்த அயன்மலையமையுமென்றார்; நாலாம்பாட்டில் - "திரிதந்தாகிலும்" என்கிறபடியே, திரியவும்திருமலையை யாஶ்ரயிக்கச்சொன்னார்; அஞ்சாம்பாட்டில் - அத்தோடுசேர்ந்த புறமலையை யாஶ்ரயியுங்கோளென்றார்; ஆறாம்பாட்டில் - திருமலைக்குப்போம் மார்க்கசிந்தைபண்ண வமையுமென்றார்; ஏழாம்பாட்டில் - அவ்வழியோடு சேர்ந்ததிருமலையை யாஶ்ரயிக்கச்சொன்னார்; எட்டாம்பாட்டில் - நித்யஸூரிகளுக்குங்கூட ப்ராப்யமாகையாலே திருமலையே பரமப்ராப்யமென்றார்; ஒன்பதாம்பாட்டில் - "திருமலையைத் தொழக்கடவோம்" என்கிற துணிவே வேண்டுவதென்றார்; பத்தாம்பாட்டில் - எல்லாப்படியாலும் திருமலையாழ்வாரை யாஶ்ரயிக்கையே புருஷார்த்தமென்று தலைக்கட்டினார்; நிகமத்தில்-இதுகற்றார்க்குப் பலமருளிச்செய்தார்..*

முதற்றிருவாய்மொழியாலே - "மணியைவானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்று - விலக்ஷணவிஷயமாகையாலே, பிரிந்தார் கண்ணுங்குழலையிடப்பண்ணுமென்றார்; இரண்டாந்திருவாய்மொழியாலே - அவ்வோபாதிகூடினாலும் மறப்பிக்குமென்றார்; மூன்றாந்திருவாய்மொழியாலே - கூடினவிஷயந்தான் நிரதிசயஸுகரூபமென்றார்; நாலாந்திருவாய்மொழியாலே - அவ்விஷயத்துக்கு தேசிகரோடு அநுபவிக்கப்பெறாமையாலே மோஹங்கதரானார்; அஞ்சாந்திருவாய்மொழியாலே - தாமாசைப்பட்டபடியே வந்துகலந்தபடிசொன்னார்; ஆறாந்திருவாய்மொழியாலே - தம்மிழவுக்கு மவனதிசங்கைபண்ணுமென்றார்; ஏழாந்திருவாய்மொழியாலே - தம்முடையசம்பந்தி சம்பந்திகளையும் விஷயீகரித்தபடிசொன்னார்; எட்டாந்திருவாய்மொழியாலே - அவனுடையமோக்ஷப்ரதத்வத்தை யருளிச்செய்தார்; ஒன்பதாந்திருவாய்மொழியாலே - ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணினார்; பத்தாந்திருவாய்மொழியாலே - நிஷ்கர்

ஷித்த ப்ராப்யத்தை லபிக்கைக்குத் திருமலையாழ்வாரை யாஶ்ரயிக்கச் சொன்னார் ....*

ஜீயர் அரும்பதம்.

நிகமம் (பொருளித்யாதி) "முடிந்தே-அருளுடையவன்றா ளணைவிக்கும்" என்றதைக்கடாக்ஷிக்கவதாரிகை (இத்திருவாய்மொழியித்யாதி) "முடிந்தே" என்றதிலேநோக்காக (ஜந்மத்தைப்போக்கியென்றது)

சப்தார்த்தம் (ப்ரயோஜநேத்யாதி) பொருளென்று - பொருளையுடையதாமென்று, உக்தார்த்தவிவரணம் (இவற்றையுண்டாக்கியித்யாதி)

(அஜ்ஞாநகந்தமில்லாத) என்றவாக்யத்தை ஸஹேதுகமாக விவரிக்கிறார் (மயர்வறவித்யாதி)

எதிர்சூழ்புழியாமையாலே (அஜ்ஞாநகந்தமில்லையென்றது) சப்தார்த்தம் (கேட்டார்க்கித்யாதி) இந்தநெடுவாசிக்கடியேதென்ன (தம்முடையவித்யாதி) பந்தமோக்ஷஸாதாரண ஸ்வதந்த்ரேஶ்வரஹேதுகமாகையாலும் உஜ்ஜீவநைகஹேதுபூதமான தம்முடையக்ருபாமூலமாகையாலுமென்றகருத்து.

(அருளைப்பிட்டாயித்துவஸ்துவைநிருபிப்பது) "அருளுடையபெருமான்" என்று - அழகருக்குத்திருநாமமிதிபாவ:. "முடிந்தே" என்றதுக்குபாவம் (ஸம்ஸாரஸம்பந்தத்தைசயித்யாதி) அவதாரணார்த்தம் (ஒருஜ்ஞாநலாபமித்யாதி) (அர்த்தக்ரியாகாரியாயிருக்கும்) ப்ரார்த்தநீயபல ப்ராதம்யவந்நியர்த்த:. வண்குருகூர் - விலக்ஷணமானதிருநகரி. வண்சடகோபன் - உதாரரான ஆழ்வார். தெருள்கொள்ளச்சொன்ன - சேதநர், தெருளை - ஜ்ஞாநத்தை, கொள்ளும்படி யருளிச்செய்த.

தசசஸங்க்ரஹம் (முதற்பாட்டிலித்யாதி)
பத்தின்நிகமநம் (முதற்றிருவாய்மொழியாலேயித்யாதி)
முடிந்தே - அருளுடையவன்றா ளணைவிக்குமித்யந்வய:......................*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.

(ஒளரொளியிளமை.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] உஉ

(திப்தாஸ்சர்யஸ்வபாவம்) வளரொளிமாயோன் - நிரவதிகதேஜஸ்ஸை யுடையனுமாய், ஆஸ்சர்யசக்தி யுக்தனுமாய்; (முகரிதஜலஜம்) அதிர்குரல்சங்கத்தழகர் - முழங்காநிற்கிற திருச்சங்கையுடையனுமாய்; (வர்ஷாகாம்போதவர்ணம்) புயல்மழைவண்ணர் - நீலமேகஸ்யாமளனுமாய்; (சைலச்சத்ராபிருப்தாஸ்ரிதம்) பெருமலையெடுத்தான் - *கோவர்த்தநமென்னும் கொற்றக்குடையாலே கோகோபஜாதிகளை ரக்ஷித்தவனுமாய்; (அதிவிலஸத்ஹேதிம்) அறமுயலாழிப்படையவன் - ஆஸ்ரிதவிரோதிநிரஸநத்திலே யத்யந்தம் முயலாநிற்கிற திருவாழியை யுடையனுமாய்; (ஆபீதகவ்யம்) உறியமர்வெண்ணெயுண்டவன் - உறியிலே யமைந்திருக்கிற வெண்ணெயையுண்டவனுமாய்; (ஸம்ரம்போத்க்ஷிப்தபூமிம்) நிலமுனமிடந்தான் - வராஹரூபத்தைக்கொண்டு பூமியையுத்தரித்தவனுமாய்; (ப்ரணமதநுகுணம்) வலம்செய்யு மாயமாயவன் - ஆஸ்ரிதர்க்கு ப்ரதக்ஷிணப்ரணாமாதிகளிலே சக்தியைக்கொடுத்து, அவர்களுக்கநுரூபனுமாய்; (பூதநாசேதநாந்தம்) அழக்கொடியட்டான் - பூதனையை முடித்தவனுமாய்; (பூர்வாசார்யம்ஸ்ருதீநாம்) வேதமுன்விரித்தான் - வேதங்களுக்கெல்லாம் முந்தினப்ரவர்த்தகனுமாயிருக்கிற எம்பெருமானை "கிளரொளியிளமை" என்கிறதசகத்திலே அதிஸமீபவர்த்தியாய் அதிமநோஹரமான திருமாலிருஞ்சோலை மலையிலேகண்டு ஆழ்வாரநுபவித் தருளினரொன்கிறார். (௨௨)

[illegible] (௨௩)

இப்படித்விதீயசதகத்தில் பத்துதசகங்களாலும் ப்ரதிபாதிதங்களான அர்த்தங்களை ஸங்க்ரஹித்துக் காட்டியருளுகிறார்.

க்ஷணமாத்ரமும் துஸ்ஸஹமாம்படியான தன்விரஹத்தை யுடைத்தாகையாலும், மநுஷ்யஸஜாதீயனாய் யவதரிக்கச்செய்தே பரனாயிருக்கையாலும், ஸமஸ்தமதுர பதார்த்தங்களுடைய ரஸத்வத்தையுடைத்தான போக்யதையை யுடையனாகையாலும், ஆஸ்ரிதருடைய வ்யஸநத்தை ஹரிக்கு மவனாகையாலும், ஆஸ்ரிதரோடே ஸம்ஶ்லேஷித்து அத்தாலேயத்யந்த ப்ரீதனாகையாலும், "ஆஸ்ரிதர்தன்னைவிடிற் செய்வதென்" என்றுமிகவும் பீதனாகையாலும், ஆஸ்ரிதருடைய ஸம்பந்திஸம்பந்திகளையும் ரக்ஷிக்குமவனாகையாலும், மோக்ஷப்ரதனாகையாலும், கைங்கர்யோத்தேஶ்யனாகையாலும், தர்ஶநியமான தெற்குத்திருமலையிலே நின்றருளுகையாலு மெம்பெருமா னத்யந்தபோக்யனென்று த்விதீயசதகத்திலே யாழ்வாரருளிச்செய்தாரொன்கிறார்.... ... ...(௨௩)

திருவாய்மொழிநூற்றந்தாதி.

இளரொளிசேர்கிழுறைத்தபேறுகிடைக்க
வளரொளிமால்சோலைமலைக்கே - தளர்வறவே
நெஞ்சைவைத்துச்சேருமெனுநீடுபுகழ்மாறன்றாள்
முன்செலுத்துவோமெம்முடி. (௨௰)

(இளரொளிசேர்) இதில் - "சர்வப்ரகாரத்தாலும் திருமலையையாஸ்ரயிக்கையே புருஷார்த்தஸாதநம்" என்று பரோபதேசம்பண்ணுகிற பாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். அன்றிக்கே, ஸ்வயம்புருஷார்த்தமாக அநுபவிக்கிற ப்ரகாரத்தை யநுவதித்தருளிச்செய்கிறாரென்றாகவுமாம். எங்ஙனேயென்னில்; * எம்மாவீட்டில் ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிற வளவில் "ஒல்லை" "ஒல்லை" என்றிவர்த்வரிக்கப்புக்கவாறே, இவர் த்வரைக்கநுகுணமாக இங்கே யிவ்வுடம்போடேகிட்டியடிமைசெய்யலாம்படி தெற்குத்திருமலையில் தான்நிற்கிறபடியை யிவர்க்குக்காட்டிக்கொடுக்க, அத்தையநுசந்தித்து, அவனிவுமவனுகந்து வர்த்திக்கிறதேசமே ப்ராப்யமென்று நினைத்து, திருமலையாழ்வாரைப் பெரிய ஆதரத்தோடே யநுபவித்து ப்ரீதராய், சம்சாரிகளையு மங்கே ஆஸ்ரயிக்கும்படி பரோபதேசம்பண்ணுகிற * இளரொளியிளமையிலர்த்தத்தை "இளரொளிசேர்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(இளரொளிசேர்கிழுறைத்தபேறுகிடைக்க) அதிசயமான ஔஜ்ஜ்வல்யத்தையுடைத்தாய் கீழுக்தமான * எம்மாவீட்டில் ப்ராப்யமானது லபிக்கைக்காக. (வளரொளிமால்சோலைமலைக்கே) "பயிலுஞ்சுடரொளிமூர்த்தியை" என்னும்படி நாள்செல்ல நாள்செல்ல வளர்ந்து வாராநின்றுள்ள வொளியையுடைய சர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருமாலிருஞ்சோலைமலைக்கே. (தளர்வறவே நெஞ்சைவைத்துச்சேருமெனும்) பகவத்ஸமாஸ்ரயணராஹித்யமாகிற அநர்த்தமின்றிக்கே யவன்வர்த்திக்கிற திருமலையிலே மநஸ்ஸைவைத்தாஸ்ரயியுங்கோளென்றருளிச்செய்யும். தளர்வு - மநோதௌர்பல்யம். அறவே-அதின்றிக்கேயென்றபடி. கீழ்ப்ராப்யமான * பாதபற்புக்கு, * தென்னாறுயர்பொருப்பை ப்ராபகமாக விதித்தபடி. இது * வன்றுட்டிமயமாகையாலே ஆஸ்ரயிக்கைக்கடியுடைத்து. "சமன்கொள்வீடுதருந்தடங்குன்றமே" இப்படி (நெஞ்சைவைத்துச்சேருமெனும்) நெஞ்சைவைத்துச்சேருமென்கிறதுக்குமூலம் - "இளரொளியிளமை" என்கிறபாட்டு. "மாநஸஸ்ரத்தைமாறுவதற்குமுன்னே" என்றிறே அதுக்கர்த்தமருளிச்செய்தது. "உய்த்துணர்வென்னுமொளிகொள்விளக்கு" என்னக்கடவதிறே. சேருமென்றது - "இளரொளியிளமைகெடுவதன்முன்னம்" என்கிறமுதற்பாட்டு ப்ரதாநமாய், "போதவிழ்மலையேபுகுவதுபொருளே" என்னுமளவுமருளிச்செய்தவை. அதாவது - "சார்வதுசதிரே, சத்தியெழுவதுபயனே, அயன்மலையடைவததுகருமமே, திருமலையதுவே யடைவதுதிறமே, நெறிபடவதுவே நினைவதுநலமே," "[illegible]" (ப்ரதக்ஷிணஞ்சகுர்வாணஸ்சித்ரகூடம்மஹாகிரிம்) என். "வலம்செய்துநாளும்மருவுதல்வழக்கே" "தொழக்கருதுவதேதுணிவதுசூதே" "போதவிழ்மலையேபுகுவதுபொருளே" என்று-திருமலையோடு, அத்தோடுசேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம்வழியோடு, "போகட்டோம்" என்று துணிந்ததுணிவோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாய் ஸ்வா.

பவகர்ப்பபரோபதேசமுகேந அநுபவித்தினியராகிற ப்ரகாரமு மிவர்க்கிப்பாட்டிலே விவக்ஷிதம். "அந்தர்க்கதகுணோபாஸநத்தை மதித்துப்பெருக்கி மூழ்கி யமுந்திக் கீழ்மைவலம் சூதுசெய்திளமைகெடாமல் செய்யும் க்ஷேத்ரவாஸஸங்கீர்த்தநாஞ்சலி ப்ரதக்ஷிணகதிசிந்தநாத்யங்கயுக்தமாக்குகிருரிரண்டாம்பத்தில்" என்றிறே நாயனுருபாயபரமாகவருளிச்செய்தது; ஆகையால், திருமலையை ப்ராப்யதயாவும் ப்ராபகதயாவு மாஶ்ரயிக்கும்படி யருளிச்செய்யக்குறையில்லையிறே. (நெஞ்சை வைத்துச்சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்) இப்படிபராநர்த்தம்கண்டுபரோபதேசம்பண்ணுகையாலே நெடுகிப்போருமதாய், அத்தாலே நித்யமான யஶஸ்ஸையுடைய ஆழ்வார்திருவடிகளில். (முன்செலுத்துவோமெம்முடி) அவர்திருவடிகளின்முன்பே நம்முடையதலை சேரும்படிநடத்துவோம். "ஸ்ரீமத்தத் அங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா" (ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா) என்னக்கடவதிறே. இனி அவரடியறியவேயிறேவேண்டுவது. அன்றிக்கே, ஆழ்வார்திருவடிகள் நம்சென்னியிலே சேருவதற்குமுன்னமே, நாம் முற்பாடராய் முடியைச்செலுத்துவோமென்றுகவுமாம்... ... ... *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

இரண்டாம்பத்தில் பத்தாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஆக - திருவாய்மொழி - ௨0 - பாட்டு - ௨௨௨.